இறக்கை: 11 இறகு: 1

காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

காக்கை கரவா கரைந்துண்ணும்

ஜனவரி 2022
விலை ₹40

கவிதை

ரூபன் சிவராஜா
svrooban@gmail.com

மவுனங்களைச் சாட்சிக்கிருத்தி

நிரவியிருக்கிறது
பெரும்பழி

செங்குத்தாய் விழுந்து
குருதி தோய்ந்து கிடக்கிறது
கனவின் எச்சம்

அயலிலும் தொலைவிலும்
மவுனங்களைச் சாட்சிக்கிருத்தி
திசைகளெங்கும் பலவான்கள்
துணையென
போர்ப் பிரகடனம் செய்தவர்கள்...

உடல்களுக்கு மேல்
ஏறிநின்று
வெற்றிகளை ஊதி முடித்தனர்
புதிதுபுதிதாய்
கொலைக்களங்கள் திறக்கப்பட்டன
மனிதமே தலைகுனிய
கொத்துக்கொத்தாய் கொன்றனர்

எஞ்சியவர்களை
'மனிதாபிமான'க் கூண்டடைத்தனர்

மீதிப்பேரை
காணாமல் ஆக்கினர்
நிரந்தரமாய்

உயிர்களை விதைத்த
உரிமை நிலம்
பிரளயம் பிளந்து கிடக்கிறது

இன்னமும்
நம்பிக்கைத் துளிகளை
உறிஞ்சியபடிதான் இருக்கிறது
மனப்பாலை

சருகாய்

பெய்யா மழையைச் சபித்து
தரிசாய்க் கிடக்கிறது நிலம்

நல்ல பல வீணைகள்
புழுதி அப்பிக்கிடக்கின்றன

உரிமைவாழ்வின் சாத்தியங்களும்
விழலுக்கு இறைத்த நீரென
தசாப்தங்கள் கடந்துகொண்டிருக்கின்றன

தொடரும் ஆட்சியில்
பிணங்களைத் தின்றுகொண்டிருக்கின்றன
சாத்திரங்கள்

கூடிப் பிதற்றலின்றி
வேறெதையும் பிடுங்கவில்லை
பொழுதுபோக்க அரசியலில் குதித்தவர்கள்

சருகாய் மிதிபடுகிறது
சந்ததிகளின் வாழ்வு

அரசியல் பிழைத்தோர்க்கு
அறம் இங்கொன்றுமில்லை

பெருஞ்சுழலில் அந்தரிக்கிறது
மரித்தவர் கனவு

காக்கைச் சிறகினிலே
காக்கை கரவா கரைந்துண்ணும்

இறக்கை: 11 இறகு: 1

திருவள்ளுவராண்டு 2053

தை
ஜனவரி 2022

ஆசிரியர்
வி. முத்தையா
9841457503

பொறுப்பாசிரியர்
க. சந்திரசேகரன்
9715146652

ஆசிரியர் குழு
இரா. எட்வின்
முகிலன்
அமரந்த்தா
கசன்

தொடக்க கால நெறியாளர்கள்
கி. பி. அரவிந்தன்
வீர. சந்தானம்

நெறியாளர்கள்
டிராட்ஸ்கி மருது
க. பஞ்சாங்கம்
கே. எம். வேணுகோபால்

புலம்பெயர் நாடுகளுக்கான
தொடர்புக்கு:

கனடா:
வி. மகேந்திரன்
V. Mahenthiran
Mahenthiran_v@hotmail. com

ஐரோப்பா:
க. முகுந்தன்
K. Mukunthan
kmukunthan@gmail. com

காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், கட்டுரையாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.

சிறகுக்குள்ளே...

வாழ்த்துச் செய்தி
பேராசிரியர் க. பஞ்சாங்கம் 005

ஆசிரியர் உரை 006

பொங்கல்: கூட்டு உழைப்பைக் கோரும் வேளாண்மைப் பண்பாடு
இரா.மோகன்ராஜன் 008

பொங்கல் திருநாளும் நன்றியறிதல் பற்றிய எண்ண அலைகளும்
பேராசிரியர் க.பஞ்சாங்கம் 015

ஏறு தழுவல்!
தமிழினத்தின் வீரம்செறிந்த கலாச்சாரம்
பேராசிரியர் சு.இராமசுப்பிரமணியன் 019

பொங்கல் விழா நினைவும் நிஜமும்
தஞ்சாவூர்க் கவிராயர் 025

கீழடி, சிவகளை, ஆதிச்சநல்லூர்
ஆய்வு முடிவுகளும் சனாதன ஒவ்வாமையும்
அப்பணசாமி 027

நீரும் தொல்தமிழரும்
பேராசிரியர் ஞா.குருசாமி 031

கூற்றமே ஆகும் கொற்றம்
நாஞ்சில்நாடன் 034

தமிழ் ஆண்டும் தமிழர் ஆண்டும்
நெல்லை சு.முத்து 036

நதிமை
யாழன் ஆதி 045

இலங்கைத் தமிழர் வரலாறு
பேராசிரியர் மௌனகுரு 046

குஞ்சரம்
க. முகுந்தன் 052

மாரியம்மன் வளர்த்த தமிழ்
பேராசிரியர் அப்பாசாமி முருகையன் 056

தமிழை நாம் காத்தால் தமிழ் நம்மைக் காக்கும்!
செந்தலை ந. கவுதமன் 068

நார்வே இலக்கிய வழித்தடம்
என்.சரவணன் 070

அபி என்றொரு...
ஜே. ஜெகத்ரட்சகன் 077

காக்கைச் சிறகினிலே

ஒவ்வொரு மாதமும் 1ஆம் தேதி
உங்கள் கைகளில்

ஒவ்வொரு மாதமும்
29 அல்லது 30ஆம் தேதியில்
'காக்கைச் சிறகினிலே'
அஞ்சல் செய்யப்படுகிறது.
5ஆம் தேதிக்குள்
இதழ் கிடைக்கப்பெறாதவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய
செல்பேசி எண்: **98414 57503**

உறுப்பினர் கட்டணம்

தனி இதழ் விலை............................ரூ. 40
ஆண்டுக் கட்டணம்.........................ரூ. 400
இரண்டு ஆண்டுக் கட்டணம்.......ரூ. 750
ஐந்தாண்டுக் கட்டணம்..................ரூ. 2000
மாணவர் சந்தா ....ரூ. 300
(மாணவர்கள், கல்வி நிறுவனத் தலைவர் அல்லது துறைத் தலைவர் சான்றிதழோடு விண்ணப்பிக்க வேண்டும்)

பணவிடை (மணியார்டர்) மூலமும் சந்தா செலுத்தலாம். காசோலைகள், வங்கி வரைவோலைகள் அனைத்தும்

KAAKKAI,
A/c No. **60111010005660**
CANARA BANK,
TRIPLICANE, CHENNAI - 5.
IFSC: **CNRB0016011**

என்ற பெயருக்கு, சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

வெளிநாட்டு உறுப்பினர் கட்டணம்

ஆண்டுக் கட்டணம்.........................**$ 40**

உறுப்பினர் கட்டணத்தை

KAAKKAI,
A/C NO. **60111010005660**
CANARA BANK,
TRIPLICANE, CHENNAI - 5.
என்ற பெயருக்கு, சென்னையில் மாற்றத்தக்க வகையில் அனுப்ப வேண்டும்.

தொடர்பு முகவரி:

காக்கை, 288, டாக்டர் நடேசன் சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005.
செல்பேசி: 98414 57503,
தொலைபேசி : 04428471890

மின்னஞ்சல்:
kaakkaicirakinile@gmail.com

முகநூல்:
www.facebook.com/kaakkai.cirakinile

சிறகுக்குள்ளே...

மாநாடு: திரைக்கதைக் கலையின் விசித்திரம்
மணி செந்தில்..080

மாற்றம் நம்மிடமிருந்து தொடங்கட்டும்
பேராசிரியர் க. பழனித்துரை..083

மதுரைக்காஞ்சி: நகர்மயமாதலின் பனுவல்
முனைவர் ம.திருமலை..087

நோபல் விருதும்
'வீக்கிலீக்ஸ் அசாஞ்' கையளிப்பு சமிக்ஞையும்
ரூபன் சிவராஜா..093

கலைஞரும் நானும்
டிராட்ஸ்கி மருது..098

துருப்பிடித்த வாழ்வுக்குப் போராடும் உயிர்கள்
வசந்ததீபன்..100

சி.பி.ராமசாமி அய்யரும் சிம்சனின் ஜீப்பும்
பேராசிரியர் அ. கா. பெருமாள்..102

அமணமாகிய சமணம்
தராசு ஷ்யாம்..106

பெண்நலம் காக்கும் சித்த மருத்துவங்கள்
முனைவர். சித்தமருத்துவர். அருள்அமுதன்..110

மௌனம்
கார்த்திகா கணேசர்..116

கடவுள்களும் பிரார்த்தனைகளும்
அகதி முகாம்களுக்கு உகந்ததல்ல
கோசின்ரா..118

தமிழும் மலையாளமும்
வேடிக்கையான மொழிக் களங்கள்
பேராசிரியர் கி.நாச்சிமுத்து..122

கல்வியும் தகுதியும்
நிகழ் அய்க்கண்..128

கலைஞர்களும் 'குடி'யும்
குடிசார்ந்த எண்ணங்களும் விழுமியங்களும்
நா. மம்மது..132

சிந்தனைச் சிற்பி 2022
பேராசிரியர் வி.அ.இளவழகன்..134

ஓர் உள்ளூர் வணிகவழி
பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்..138

கல்விப் புலத்தைச் சீரழிக்கும் கயமைகள்
டாக்டர் புதேரி தானப்பன்..140

வடக்குக்கு ஒரு பாதை
கௌரி பரா..142

க. பஞ்சாங்கம்

காக்கையின் சாதனை தொடர வாழ்த்துகிறேன்

தோழர் வைகறைவாணன் அவர்களால் எனக்கு அறிமுகமான ”காக்கைச் சிறகினிலே” இதழ் - இன்று பத்து ஆண்டுகள் முடித்துப் பதினோராவது ஆண்டில் காலெடுத்து வைக்கிறது; மகிழ்ச்சியாகவும் பிரமிப்பாகவும் இருக்கிறது; வாழ்த்துகிறேன். முதலில் ஆசிரியர் வி.முத்தையா அவர்களுக்கும் பொறுப்பாசிரியர் க.சந்திரசேரன் அவர்களுக்கும் என் அன்பையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்; மேலும் ‘காக்கை’யின் வான்வெளிப் பறத்தலுக்குத் துணைநிற்கும் ஆசிரியர் குழுவினர்க்கும் தொடக்கக்காலம் மற்றும் இன்றைய நெறியாளர்களுக்கும், வெளிநாட்டில் துணைநிற்கும் தோழர்களுக்கும் என் தலைதாழ்ந்த வணக்கங்களும் பாராட்டுகளும்.

நான் ஓய்வு பெற்று பத்தாண்டுகள் முடிந்துவிட்டன; இந்த அருமையான ஓய்வுக் காலத்தைக் காக்கையோடு கழித்திருக்கிறேன் என்று எண்ணிப் பார்க்கும்போது மனதிற்குள் பரவசம் ஏற்படுகிறது; தொடர்ந்து காக்கைக்குப் பங்களிப்பு செய்திருக்கிறேன் என்றால் அந்தப் பெருமை அனைத்தும் ஆசிரியர் முத்தையா அவர்களுக்கே சேரும். ஒரு நாளைக்கு இத்தனைப் பக்கங்கள் எழுதியே தீர்வது என்று பேனாவைக் கையிலேயே பிடித்துக்கொண்டு வாழ்பவன் அல்லன் நான்; ‘வார்த்தைகள் வரிசைகட்டி வரவேண்டும்’ என்று காத்துக் கிடந்து எப்போதாவது எழுத உட்கார்பவனைப் பிடித்து வைத்து எழுத வைத்தவர் தோழர் முத்தையாதான். ஒவ்வொரு மாதமும் பத்தாவது நாள் தாண்டிவிட்டால் போதும், என்ன, உங்களிடமிருந்து ஒன்றும் இன்னும் வரவில்லையே, ஏதாவது எழுதி அனுப்புங்கள்; நீங்கள் எதை எழுதினாலும் சிறப்பாகத்தான் இருக்கும்” என்றெல்லாம் தூண்டிலை வீசிப் பிடித்துவிடுவார்; ஏறத்தாழக் காக்கையில் வெளிவந்த அத்தனை எழுத்தும் இப்படியான தூண்டிலில் சிக்கிப் பிறந்தவைதான்; குறிப்பாக முதுபெரும் எழுத்தாளர் மா. அரங்கநாதன் சிறுகதைகளைக் குறித்துத் தொடர் எழுதிய அந்த ஒன்றரை ஆண்டு முழுவதும் தூண்டிலில் சிக்கிய மீனாக அரங்கநாதனின் படைப்பு வெளியில் துடித்துக் கிடந்தேன் என்றே சொல்ல வேண்டும்; இந்த அரிய கணத்தில் நன்றியோடு காக்கையை நினைத்து மகிழ்கிறேன்.

விளம்பரங்களுக்குப் பக்கங்களைப் பலிகொடுக்காமலும் இடதுசாரிப் பார்வையில் ஒரு சிறிதும் சமரசம் இல்லாமல் உறுதியாக நின்றுகொண்டும் பெரிய அளவில் பொருளாதாரப் பின்புலம் இல்லாவிட்டாலும்கூடத் தொடர்ந்து, கொரோனா காலத்திலும் விடாமல் மின்னிதழாக வெளிவந்தும் வந்த காக்கை, தமிழிதழியல் வரலாற்றில் பெரும் சாதனை செய்துகொண்டிருக்கிறது; இந்தச் சாதனை தொடர வாழ்த்துகிறேன். வணங்குகிறேன். நன்றி.

புதுச்சேரி,

16/12/2021

தோழமையுடன்,

க. பஞ்சாங்கம்

11ஆவது ஆண்டில் காக்கை!

அனைவருக்கும் இனிய புத்தாண்டு - தைப்பொங்கல் - தமிழர் திருநாள் - தமிழ்மரபுத் திங்கள் வாழ்த்துகள்!

இது காக்கையின் 124ஆவது இதழ். 11ஆவது ஆண்டில் அடியெடுத்துவைக்கும் சிறப்பு இதழ். 2011 அக்டோபரில் தொடங்கியது காக்கையின் பயணம். இது 2012 சனவரியில் பதிவுபெற்றதாகி 'காக்கை கரவா கரைந்துண்ணும்' எனவாகிய அழைப்போடு காலந்தவறாமல் மாதந்தோறும் தொடர்கிறது; தொடர்ச்சியாய் ஒரு பதிமம் கடந்து இரண்டாவது பதிமத்தினுள் அடியெடுத்து வைக்கிறது.

முதலில், இந்தத் தொடர் வெளியீட்டைச் சாத்தியப்படுத்திய வாசகர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளர்கள், பல்துறைக் கலைஞர்கள், சந்தாதாரர்கள், சமூகக் கரிசனையாளர்கள், நண்பர்கள், தோழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். கடந்த பத்தாண்டுக் காலத்தில் எழுத்தாளர்களாய், படைப்பாளர்களாய், உரையாளர்களாய், திறனாய்வாளர்களாய், ஓவியர்களாய், நிழற்படக் கலைஞர்களாய், வாசிப்பாளர்களாய், சமூகக்கரிசனையாளர்களாய், உலகம் முழுவதுமிருந்தும் காக்கைக்குக் கிடைத்துள்ள நட்பும் தோழமையும் நிலத்தைப் போல பரந்தது; விரிந்தது. வானத்தைப்போல உயர்ந்தது; உன்னதமானது.

தேடு - வாசி - விவாதி என அவாவுறும் வாசர்களின் விருப்பைப் படைக்கும் காக்கைக்கு ஓய்வறியாப் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளர்கள், திறனாய்வாளர்கள், துறைசார் வல்லுநர்கள், சமூகக் கரிசனைச் செயற்பாட்டாளர்கள் எனக் காக்கையின் உள்ளடக்கச் சிறப்புக்கு ஊக்கமளிக்கும் ஒவ்வொருவரையும் இந்த வாய்ப்பில் நெஞ்சில் நிறுத்துகிறோம். இந்தப் பேராளர்கள் ஒவ்வொருவர் குறித்த பெருமையையும் தகைமையையும் பின்னொரு நேர்வில் காக்கையில் விரிவாகப் பதிவு செய்யவிருக்கிறோம்.

இந்தப் பத்தாண்டுப் பயணத்தில் எங்களின் திட்டமிடலும் கனவுகளும் அதிகமானவை. ஆனால் எங்களின் செயல்வேகம் போதுமானதாக இருக்கவில்லை.. இதற்கு மிக முக்கியக் காரணி பொருளாதாரம்தான்.

காக்கை, வாசகர்களை நம்பியே வெளிவருகிறது. சந்தாக் கட்டணம், அதன் மீது பேரன்பு கொண்ட நண்பர்கள், தோழர்கள் வழங்கும் உதவிகளைத் தாண்டி காக்கைக்கு எந்த வருவாயும் இல்லை. பத்து ஆண்டுகளாகியும் அரசின் நூலக ஆணை இன்னும் கிடைக்கப் பெறவில்லை. நூலக ஆணையைப் பெறுவதற்கான முயற்சியைத் தொடர்ந்துகொண்டே இருக்கிறோம். ஆனாலும் நூலக வாசகர்களுக்குப் பரவலாக காக்கை அறிமுகமாகவேண்டும் என்பதற்காக, அனைத்து மாவட்ட மத்திய நூலகங்களுக்கும் இதழைத் தொடர்ந்து அனுப்பிக்கொண்டே இருக்கிறோம்.

பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கிடையிலும் காக்கை ஒவ்வொரு மாதமும் தவறாமல் உங்கள் கைகளில் தவழ்வதற்குக் காரணம் காக்கைக் குழும நட்புறவுதான். காக்கையை வழிநடத்துகிற மதிப்புக்குரிய நெறியாளர்கள், ஆசிரியர் குழுத் தோழர்கள் மற்றும் நண்பர்களின் கூட்டுச் செயல்பாடும் அவர்தம் செயல்பாட்டு நேர்மையும் அயராத ஒத்துழைப்பும்தான் காக்கையை நிலைநிறுத்திக்கொள்ள எமக்குக் கிடைத்த பெறுமானம்.

எதையும் எப்பொழுதும் பணத்தாலேயே அளவீடு செய்கின்ற உலகத்தில் காக்கையில் எழுதிக்கொண்டிருக்கிற படைப்பாளிகளுக்கு காக்கையின் சார்பில் அவர்தம் படைப்புகளுக்காக இதுவரை எந்தவொரு தொகையும் வழங்கியதில்லை. அவர்கள் எதிர்பார்த்ததும் இல்லை. இத்தகைய அரிய பிணைப்பு எங்களுக்குக் கிடைத்தது பெருமையிலும் பெருமை. ஆனாலும் காலவளர்ச்சியில் ஒவ்வொரு படைப்பாளியையும் மதிப்பளிக்கும் தார்மீகக் கடமையைக் காக்கை கொண்டிருக்கிறது..

இந்தப் பதிம காலகட்டத்தில், 16 சிறப்பிதழ்கள், ஐந்து நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன, 3 அரங்க நிகழ்வுகள், 7 ஆண்டுகளாகத் தொடரும் கிபி அரவிந்தன் நினைவு இலக்கியப் பரிசுப் போட்டி, இரண்டு ஆண்டுகளாக முன்னெடுக்கப்படும் கே எம் லீலா அம்மையார் நினைவு தகைசார் ஆளுமை விருது என்பவை காக்கையின் சிறப்பு ஊக்கப் பணிகளாக அமைந்துள்ளன.

இந்தப் பத்தாண்டுப் பயணத்தில் எட்டு கௌரவப் பட்டயங்களைக் காக்கை பெற்றிருக்கிறது. கரிசல் இலக்கிய முன்னத்தி ஏர் கி.ரா விருது, மகாகவி ஈரோடு தமிழன்பன் விருது, உயிர்மையின் சுஜாதா விருது, தமிழ்நாடு ஊடகவியலாளர் சங்க ஊடகச் சிற்பி விருது, எஸ்.ஆர்.எம் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராயம் வழங்கிய சுதேசமித்திரன் விருது, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும் நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனமும் இணைந்து வழங்கிய சிலம்புச் செல்வர் ம பொ சி தமிழியல் ஆளுமை விருது. உள்ளிட்ட எட்டு விருதுகளைக் காக்கை பெற்றிருக்கிறது. விருதுகளை வழங்கி எமது செயற்பாடுகளை ஊக்குவித்த பெருந்தகையாளர்களுக்கு நன்றியைப் பதிவு செய்கிறோம்.

காக்கைப் பதிப்பகம் ஊடாக 12 நூல்கள் இந்த ஆண்டின் புதிய வெளியீடுகளாக வெளிவரத் தயாராகியுள்ளன. விரைவில் அந்த நூல்கள் வெளிவரும். மொழிகளின் உரையாடல் இனிவரும்

காலங்களில் இணையவலைத் தொடர்பாடலாகவே அமையும். எண்மியக் கணினித் தொழில்நுட்பம் (Digital technology) மற்றும் செயற்கை நுண்ணறிவு இயந்திரங்களுடன் இணைந்து மனித சமூகம் பயணிக்கவுள்ளது. இதற்கமைவாக காக்கையை இணையதளப் பரப்பில் பயன்பாட்டுக்குக் கொண்டுவரும் பணிகளும், மின்னிதழ் ஒன்றை வெளியிடுவதும், சிறுசிறு வெளியீடுகளைத் தொடர்ந்து வெளியிடுவதுமான திட்டங்களும் விரைவில் நடைமுறைக்கு வரவிருக்கின்றன.

கடந்த பத்தாண்டுக்காலத்தில் நாட்டில் முளைத்துக் கிளைவிட்ட சிற்சில செயல்பாடுகளை மக்களுக்கு அவைதந்த துயரங்களை அவ்வளவு எளிதில் யாரும் கடந்துபோய்விட முடியாது என்பதையும் இங்குப் பதிவுசெய்யப்படவேண்டிய தேவை இருக்கிறது.

உலகம் முழுவதையும் முடக்கிப்போட்ட கொரோனா பெருந்தொற்றால் உலகில் இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்த கொடுந்துயரம்.

தனிநாடு உரிமை கோரி, ஆயுதம் ஏந்திய ஈழத்து இளைஞர்கள் சொல்லொணா வதைகளை அனுபவித்தும் இலட்சக்கணக்கான உயிர்களைப் பலிகொடுத்தும் சர்வதேசச் சூழ்ச்சிகளால் விடுதலைப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதற்குப் பிறகு தந்தை ஒருபக்கம், தாய் ஒருபக்கம், உடன்பிறந்தார் ஒருபக்கம், பிள்ளைகள் ஒருபக்கம் எனச் சிதறடிக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் உலகம் முழுவதும் ஏதிலிகளாய்ப் புலம்பெயர்ந்து வாழும் தீராத்துயரம் இந்த ஆண்டுகளிலேயும் தொடர்கிறது.

நாட்டின் தொண்ணூறு விழுக்காட்டினரின் வாழ்வாதாரமாகவும் இந்தியப் பொருளாதாரத்தின் ஊற்றுக்கண்ணாகவும் இருக்கிற விவசாயத்தைச் சீரழிக்கக் கொண்டுவரப்பட்ட புதிய விவசாயக் கொள்கைகளைத் திரண்டெழுந்து தில்லியை எதிர்த்து முற்றுகையிட்ட இலட்சக்கணக்கான விவசாயிகள் 350 நாட்களுக்குமேல் தொடர்போராட்டம் நடத்தியதும் அதில் நூற்றுக்கணக்கான உயிர்களைக் களப்பலி கொடுத்ததும் விவசாய நாடு என்கிற இந்த இந்தியாவில்தான்.

குடும்ப அட்டையையும் வாக்காளர் அடையாள அட்டையையும் ஆதார் அட்டையோடு இணைத்து, ஆதார் அட்டையை வங்கிக் கணக்கோடு இணைத்து, வங்கிக் கணக்கை வருமானவரியோடு இணைத்து வருமானவரியைக் குடிமக்களின் வாழ்வியல் அளவீட்டில் இணைத்து நாட்டின் தனிமனித விவரங்கள் அனைத்தையும் உலகத்துக்குத் திறந்துகாட்டியது இந்த ஆண்டுகளிலேதான்.

சிறு, குறு தொழில்களும் வணிகங்களும் வளர்ச்சியடையச் செய்வதற்கென்று கொண்டுவரப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரியால், இருந்ததையும் இழந்து வாழ வழிவகை தெரியாத அவலத்துக்குத் தொழில்கள் தள்ளப்பட்டிருக்கின்றன. அதனால் பல நிறுவனங்கள் அழிந்தது மட்டுமன்றி அதில் தொழில்செய்த தொழிலாளர்களும் ஆதரவற்றுநிற்கிறார்கள்.

பணமதிப்பிழப்பு என்கிற நவீன மோசடித் திட்டத்தால் சேமிப்புப் பழக்கத்தை வாழ்வியலின் பண்பாடாகக் கொண்டிருக்கிற இந்தியாவின் நடுத்தர மக்களும் ஏழை எளிய மக்களும் இருப்பதையெல்லாம் இழந்து ஒரேநாளில் வீதிக்கு வந்தது கடந்த சில ஆண்டுகளிலேதான்.

கடந்த பத்தாண்டுகளுக்குள் தலையெடுத்த சாதியவாதமும் மதவாதமும் இப்பொழுது தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கின்றன. அவை கொஞ்சம் கொஞ்சமாய் மனிதர்களைச் சாதியாய், மதமாய்ப் பிரித்துக் கூறுபோட்டுக் கொண்டிருக்கின்றன.

கல்வி, வேலை உள்ளிட்ட வாய்ப்புகளில் சமூக நீதியை வழங்கியதன் மூலமும் அவற்றைத் தொடர்ச்சியாகச் செயல்படுத்தியதன் மூலமும் நாட்டிலேயே மாபெரும் சமூகவளர்ச்சியை நோக்கி வளர்ந்துகொண்டிருந்த தமிழகத்தைச் சீரழிக்கத் துடித்த மதவாத சக்திகளின் சதிச்செயல் ஜனநாயகத்தால் முறியடிக்கப்பட்ட வரலாறும் இங்கே நடந்தேறி இருக்கிறது.

தமிழே எழுதப்படிக்கத் தெரியாமல், தமிழ்நாட்டிலேயே பிறந்துவளராமல், இந்தியாவின் எந்த மாநிலத்தைச் சேர்ந்த எவரொருவரும் தமிழ்நாட்டு அரசின் வேலைவாய்ப்புகளிலும் கல்வியிலும் ஊடுருவி தமிழ்நாட்டு இளைஞர்களின் வாய்ப்புகளைத் தட்டிப்பறித்த சூதும், கபடும் இந்த பத்து ஆண்டுகளுக்குள்தான் அரங்கேறி இருக்கிறது.

புலம்பெயர்ந்து நீட்சியுறும் தமிழர்களின் சீரிய வாழ்வியலில் ஈர்ப்புற்று தமிழ்ப் பண்பாட்டுப் பெருமைக்கு மதிப்பளிக்கும் வகையில் கனடா, இங்கிலாந்து, நாடுகளின் அரசுகள் ஜனவரி மாதத்தைத் ‘தமிழ் மரபுத் திங்களாக’ப் பிரகடனப்படுத்தித் தமிழர் திருநாளை உலகறியச் செய்திருக்கிறது. ஆனால் தமிழைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் தெரியாத புதிய தலைமுறையொன்று தாய் மண்ணிலேயே இந்தப் பத்தாண்டுகளில்தான் வளர்ந்து வந்துகொண்டுமிருக்கிறது.

இன்னும் குறிப்பிட்டு எழுதவும் பேசவும் விவாதிக்கவும் எவ்வளவோ அவலங்களும் துயரங்களும் இருக்கின்றன... பேசுவோம்! தொடர்ந்து உரையாடுவோம். ஒத்த கருத்துள்ள தோழர்களே, வாருங்கள். காக்கையின் பயணத்துக்குத் தோள்கொடுங்கள்.

தோழமை வாழ்த்துகளுடன்

ஆசிரியர் வி. முத்தையா,

பொறுப்பாசிரியர் க. சந்திரசேகரன்

கட்டுரை

இரா.மோகன்ராஜன்
mohanrajan.r@gmail.com

பொங்கல் கூட்டு உழைப்பைக் கோரும் வேளாண்மைப் பண்பாடு

ஒரு பெரும் உழுகுடியில் பிறந்ததை, வாழ்ந்ததை, வாழ்வதை பொருள் நிறைந்த ஒன்றாக இருத்தலின் முழு நிறைவை உணர்ந்த தருணங்களாகப் பொங்கல் விழாவை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.

தோழமை, நட்பு, அன்பு, சகோதரத்துவம், சுற்றம், சூழல் என உறவு சார் பெருமதிப்பைப் பொங்கல் விழாவே உணர்த்திற்று.

ஏன் பேசுகிறோம், ஏன் கூடுகிறோம், ஏன் கொண்டாடுகிறோம் என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டபோதுதான் பொங்கல் என்பது விழா மட்டுமன்று என்று விளங்கிற்று. அது ஒரு கூட்டுப் பண்பாடு. கூட்டுச் செயல், கூட்டு வாழ்வு. கூட்டு உழைப்பை கோரும் வேளாண் பண்பாட்டில் உழுகுடிகள் அப்பா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி என்று ஒரு கூரையின் கீழ் வாழ்ந்ததில் வியப்பில்லை.

கூட்டுழைப்பு, கூட்டுறவு என்பது வீடுகளுடனும் நின்றுவிடவில்லை. ஆடு, மாடுகள், வேளாண் தோழமைகளான பிற உழைக்கும் உழுகுடிகள் என அதன் உறவுகளும், தொடர்புகளும் மிக நீண்டவை. கொண்டாட்டம் முதல் துயரங்கள் வரை ஒன்றாகப் பகிர்ந்து கொள்ளப்பட்ட ஓர் வாழ்வு அது.

பழைய புகைப்படத் தொகுப்பின் நினைவுகள் போல அலைவுறும் காட்சிகள் அவ்வளவையும் வார்த்தைகளில் சொல்லிவிட முடியுமா என்று தெரியவில்லை.

தைத் திங்கள் இளவேனில் தொடக்கமாக இருக்கிறது. உலகெங்கும் இளவேனிலைக் கொண்டாடும் சமூகங்களும், கவிஞர்களும் இருந்து வருகிறார்கள். தமிழன் இளவேனிலை வரவேற்கும் விதமாக முதலில் கடந்து விட்ட ஆண்டில் சேகரமாகியுள்ள தேவையற்ற கசடுகளை, அழுக்குகளை நீக்கவும், எரித்தழிக்கவும் விரும்புகிறான். அதுவே போகிப் பண்டிகை ஆகிற்று.

தேவையற்றதாகக் கருதும் பொருட்களை தீயிலிடும்போதே அப்பொருள் தொடர்பான தேவையற்ற நினைவுகளும் அகன்றுவிடுவதை அத்தீயினை உற்று நோக்கியவாறிருக்கும் உள்ளங்கள் அறியும்.

உள்ளக்கசடு, இல்லக்கசடு ஆகிய இரு

கசடுகளையும் நீக்கி, நீங்க இளவேனிலை புத்தம் புதிய இல்லத்துடனும், உள்ளத்துடனும் மகிழ்வு பொங்க வரவேற்கும் தமிழன் இல்லங்கள் சுண்ணம் அடித்து அழகூட்டி, வாசல் தோறும் கோலமிட்டுக் கோடையின் உதயக் காலத்தைக் குதூகலத்துடன் தொடங்குகிறான்.

கடல் மெல்லுடலிகளின் மேல் ஓடான மட்டியை முதல் நாள் வாயகன்ற ஓர் மண் தொட்டியில் ஊறவைப்பார்கள் அது நீரில் குமிழ் விட்டு ஊறத் தொடங்குவதைச் சிறுவர்களாக வேடிக்கைப் பார்ப்பதுண்டு. பதநீரின் சேர்மானமாக இந்த சுண்ணம் இருப்பதால் தொட்டி ஊறல் வாசனைப் பதநீரை நினைவுப் படுத்துவதாக இருக்கும். மறுநாள் இந்தப் புளித்தச் சுண்ணத்தைத் தாழைக் குத்தின் தண்டுகளைக் கொண்டு வந்து நசுக்கி அதில் பிரஸ், ‘தடவி’யைச் செய்து சுவற்றில் சுண்ணமடிப்பார்கள். வெள்ளை அடிப்பது அல்லது சுண்ணம் அடிப்பது என்று அதற்குப் பெயர்.

விழா என்றால் பொங்கலிட்டுப் படைப்பது மட்டுமல்ல. இப்படி ஒவ்வொன்றிற்கும் ஆயத்தமாவது கூட சிறார்களுக்கு விழாதான். மாட்டுக் கொம்பை உருக்கி எடுக்கப்படும் ஒருவிதப் பசையை அச் சுண்ணத்துடன் கலந்து அடிப்பார்கள் அந்தப் பசை மண், சுவற்றுடன் நன்கு ஒட்டிக் கொள்வதாக இருக்கும். வண்ணத்திற்கு என சில பொடிகளைச் சேர்ப்பார்கள். பொதுவாக அது காவி அல்லது கருநீலத்தில் இருக்கும். வீட்டு மாடங்களுக்கு காவியும், நிலை, சன்னல்களுக்கு கரு நீலத்தில் கட்டம் கட்டியும் அழகூட்டுவார்கள். வேலை முடியும் போது கொண்டாட்டம் தொடங்கிவிட்டது என்று பொருள்.

ஈராயிரம் அல்லது அதற்கு முந்தய ஆண்டுகால அறமும், அறம்சார் வாழ்வுமே வேளாண் பண்பாட்டின் சாரமாகும். கூடி உழைத்தல், பகிர்தல், உண்ணுதல், வாழ்தல் எனும், ஆதிப் பொது சமூகத்தின் பண்பட்ட வடிவமே தமிழனின் வாழ்வு. தமிழனின் பொங்கல் திருநாள்.

மனிதன் ஓரிடமாகத் தங்கி வேளாண்மையில் ஈடுபடத் தொடங்கிய நாள் தொடங்கி இன்றுவரை உழவும், உழுசார் முறைமையையும் எந்த இனம் கைவிட்டதோ இல்லையோ தமிழன் கைவிடவில்லை. வயலும், வயல்சார்ந்த பண்பாட்டின் முகிழ்த்த வடிவமே கொண்டாட்டமே பொங்கல் திருநாள்.

தை முதல்நாள். தமிழர் திருநாள். உழவர் திருநாள், அறுவடைத் திருநாள் என்பதும் அதுதான். தையில் பொங்கலிட்டு வசந்தத்தை வரவேற்கும் நாள். தைப்பிறந்தால் வழி பிறக்கும் என்பது ஆண்டு பிறப்பின் நம்பிக்கை. வசந்த காலத்தின் மீதான நம்பிக்கை. வெற்று நம்பிக்கை அல்ல. உழைப்பின் மீதான நம்பிக்கை, அது வாழ்வின் மீதான நம்பிக்கையாக மாறுகிறது. அறுவடை பொருளாதார வழியில் ஓர் நம்பிக்கையை அளிக்கிறது. உறுதிப்பாட்டை வழங்குகிறது.

உழைப்பில் விளை பொருட்கள் முற்றம் வருகின்றன. இல்லம் நிறைகிறது. நெல்மணிகளை எறும்புகள், பூச்சிகள் உண்டு வீணடித்துவிடாமலிருக்க அவ்வரிசிகளைக் கொண்டு கோடுகள் இட்டனர். அவற்றை உண்ட எறும்புகள் சணல் மூட்டை அல்லது மணல், வைக்கோல் குதிர்களில் இருக்கும் நெல்மணிகளை தீண்டுவதில்லை. பின்னாட்களில் அந்த மாக்கோடுகள் தமிழனின் கலைப்பார்வையால் கோலங்களாகின்றன.

இன்றைக்கு மாக்கல்லிலும், வேதி வண்ணங்களிலும் கோலங்கள் முற்றத்தில் தீயாய் எரிகின்றன. போதாததற்கு அரிசி குவளைகளைச் சுற்றி எறும்புகள் நெருங்காதிருக்க பூச்சிக் கொல்லிச் சாக்கட்டிகளால் கோடுகள் வரைகின்றனர். நமது உழைப்பில் வரும் நெல் மணிகளை எறும்புகள் கூட தின்றுவிடக்கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருக்கிறோம். நமது தாத்தா, பாட்டி, நமது முன்னோர்களின் வேளாண் வாழ்வு நம்மிடம் இல்லை. வேளாண் அறம் பிறகு எங்கிருந்து வரக்கூடும்.?

ஈராயிரம் அல்லது அதற்கு முந்தய ஆண்டுகால அறமும், அறம்சார் வாழ்வுமே வேளாண் பண்பாட்டின் சாரமாகும். கூடி உழைத்தல், பகிர்தல், உண்ணுதல், வாழ்தல் எனும், ஆதிப் பொது சமூகத்தின் பண்பட்ட வடிவமே தமிழனின் வாழ்வு. தமிழனின் பொங்கல் திருநாள்.

அப்பாலான உலகையோ, அப்பாலான உயிர்களையோ, அப்பாலான வாழ்வையோ பொங்கல் அல்லது தமிழனின் பண்பட்ட விழாக்கள், பண்பாட்டு விழாக்கள் பேசுவதில்லை. கொண்டாடுவதில்லை. அவை நிலத்தில் காலூன்றி உறுதிபட நின்று இவ்வுலகின் மெய்மைகளைப் பேசுவன. அறிவின், அறிவியலின் வழிப்பட்ட வாழ்வினைப் பறைசாற்றுபவை.

வேறுலகு, எழுபிறப்பு, என்றெல்லாம் கதைப்பதில்லை. ஒன்றே பிறப்பு, ஒன்றே வாழ்வு ஒன்றே இப்புவி அதற்குள் உழை, அன்பு செலுத்து, கொண்டாடு, நன்றி சொல், வாழ்ந்துவிட்டுப்போ என்கிறது தமிழன் வாழ்வு, தமிழன் அறம், தமிழன் பண்டிகை.

உழைப்புக்கு நன்றி செலுத்துதல், அந்த உழைப்புக்கு காரணமான சகல உயிருக்கும் நன்றி செலுத்துதல், ஈ முதல் எறும்பு, எருது ஈராக அந் நன்றி உரித்தாகிறது. உழைப்பில் விளைந்த பொருட்கள் ஞாயிறுக்கு படையிலிடப்படுகிறது. அந்தப் படையிலும் நன்றி செலுத்தலிலும் இடைத்தரகர் எவரொருவருக்கும் இடமிருப்பதில்லை.

விளை நிலத்தில் தொடங்கிய அந்த வழிபாடும், கொண்டாட்டமும் மெல்ல தமிழனின் முற்றத்திற்கு நகர்ந்திருக்கிறது. முற்றம் ஒரு முக்கியமான குறியீடு. முற்றம் என்பது பொது இடம், இல்லம் என்பது தனி இடம். முற்றம் தொடங்கி இவ்வுலகு விரிந்து செல்கிறது.

உழவைத் தொழில் என்று சொல்லவே முடியவில்லை. தாய் தனது குழந்தையைப் பெற்றெடுப்பதை தொழில் என்று சொல்ல இயலாததது போன்றது அது. ஏரில் தொடங்கி, ஏரில் முடியும் வாழ்வொன்றிருந்தது. ஞாயிறு தினந்தோறும் கிழக்கு வயலில் உதித்து மேற்கு வயலில் அமிழ்ந்தக் காலம் இருந்தது.

நாளெல்லாம் உழுகுடி தொழிலாளிகள், எருதுகள், நாரைகள், நத்தைகள், மண்புழுக்கள், நாற்று நடும் சேற்று நிலம், பச்சைப் பயிர்.. முதுகு குனிந்துக் களையெடுக்கும் பெண்களின் நாட்டார் பாடல்கள் என இயற்கை எழிலும், இசையும் வியர்வையும், கேலி கிண்டல் என உழு தொழிலை ஓர் உறவு முறையிலான குடும்பமாக வயல்வெளிகள் உருவாக்கித் தந்திருந்தன. தருகின்றன.

உணவு உண்ணுதலை வேலை அல்லது தொழில் என்று சொல்வதில்லை. அன்றாடம் வயலில் நிற்பது என்பது இல்லத்தில் இருப்பதும் வேறு வேறல்ல. முன்காலத்தில் வேட்டையாடுதலை தொழில் என்று சொன்னதில்லை. பகிர்ந்துண்ணும் உணவை கொண்டு வருதலாகவே இருந்தது. அப்படித்தான் வேளாண்மை என்பதும். பயிரிட்டு, பகிர்ந்து, உண்ணுதலின் ஆகப்பெரியப் பண்பாட்டு நாகரீகம் தமிழனிடம் இருந்து வருகிறது. தமிழனுக்கும் உழவுக்குமான உறவு காலம் காலமானது. உழவே தலையென்றதும், ‘சுழன்றும் ஏர் பின்னது உலகு’ என்றதும் உழுகுடி வாழ்வு, வரப்பும் வயலும் சார்ந்து இருந்ததே காரணமாகும்.

தமிழனையும் நன்றியையும் பிரித்தறிய முடியாது. நன்றியின் ஆகப்பெரிய வடிவமே பொங்கல். யாருக்கு நன்றி? மண்ணுயிர் தோன்றவும், வாழவும் காரணமான ஞாயிறுக்கே அந்த நன்றி! சகல உயிர்களின் சார்பிலான நன்றியை அதை உணர்ந்த, அறிந்த மனிதன், தமிழன்தாமே நன்றி சொல்ல முடியும்.? ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும் என்று அதானல்தாம் இளங்கோவடிகள் முதல் நமது இலக்கியங்கள் விழாக்கள் வரை ஞாயிறைப் போற்றுகின்றன.

போற்றுதல், நன்றி தெரிவித்தல் ஓர் பண்பு செயல். பண்பாடு. ஞாயிறைப் போற்றுதல் அப்படியானது. ஞாயிறைப் போற்றுதல், நன்றி தெரிவித்தல் என்பது ஞாயிறை மட்டும் போற்றுதல், நன்றி தெரிவித்தல் அல்ல. ஞாயிறு உயிர்ப்பிக்கும் யாதொரு உயிருக்கும் நன்றி தெரிவித்தல், போற்றுதல். பொருள் நிறைந்த நன்றி. பொருள் நிறைந்த போற்றுச் செயல். ஓர் பண்பட்ட அறிவுச் சமூகமே இப்படி செய்ய முடியும். செய்யும்.

பொங்கல் 3 நாள் விழா. நினைத்துப்பாருங்கள் தீபாவளி 3 நாள் கொண்டாட்டம் என்றால் எளிய மக்களால் தாக்குப் பிடிக்க முடியுமா?! தீபாவளி நாளில் அடகுக் கடைகளில் போய் கேட்டுப் பார்த்தால் தெரியும் அது கொண்டாட்ட நாளா? கண்ணீர் நாளா என்பது. பண்டிகைகள் ஏழை மக்களை பலி வாங்கும் வேட்டை நாய்கள் என்று கார்ல்மார்க்ஸ் விமர்சிப்பது அப்படியானப்

பொதுவாக பெரும் பொங்கல் என்பது ஐந்திணை வகுத்த தமிழரின் மருத நிலத்துப் பண்பாடாக, திருவிழாவாக இருந்தது. இன்னும் சொல்லப்போனால் இது அரிசித் திருநாள். அறுவடைத் திருநாள்தாம். தமிழர் ஓர்மையும், கூட்டுப் பண்பாடும், உழைப்பும் ஐந்திணை மக்கள் பொங்கலைக் கொண்டாடுவதில் எந்த தடையுமிருக்கவில்லை. ஏறு தழுவுதல் என்பது முல்லை நிலப் பண்பாடுதாம். அதை மருத நிலம் ஏற்றது. நெல் அறுவடை மருத நிலப்பண்பாடுதாம் அதை குறிஞ்சி ஏற்றது. திணைகள் பாலையாகத் திரிவது இயல்பு. அவ்வாறே இணைவதும் இயல்பு அதைப் பண்பாடுகள் செய்தன. பொங்கல் ஐந்திணைகளின் பொதுப்பண்பாடாக இப்படித்தான் மாறின.

பண்டிகைகளைத்தாம். எளிய மக்களை காவு, வாங்கும் அழிவு மற்றும், விரோத எண்ணங்களைக் கொண்டாடும் நாள் போலன்றி இன்னும் சொல்லப்போனால் ஆடம்பரத்திற்கும் எதிர் நிலையில் நின்று எளிமையை ஏற்கும், எளிமையைக் கொண்டாடும் ஓர் பண்டிகை அது பொங்கல் மட்டுமே. ஏனெனில் இயற்கை எளிமையானது. அதன் பெயரிலான அல்லது இயற்கை முழுமையாகப் பங்கேற்கும் பண்டிகையும் அப்படித்தான் இருக்க முடியும்.

மதங்களால் இன்னும் நெருங்கிச் சொந்தம் கொண்டாட முடியாத ஓர் பண்பாட்டு விழாவாகப் பொங்கலை மட்டுமே சொல்ல முடியும். பொங்கலை உள்வாங்கிச் செரிப்பதில் மதங்களுக்கு ஒவ்வாமைகள் இருப்பதே பொங்கலின் தனித்தன்மை. மதங்களுக்கு மட்டுமல்லப் பெரு நிறுவனங்களாலும் அவற்றை ஏற்க முடியவில்லை. மதங்கள் பேசும் 'அவ்வுலகின்' தடயங்கள் பொங்கலில் இருக்கவில்லை. பெருநிறுவனங்களின் பெருங்களியாட்ட அடையாளங்கள் கிடையாது இன்னும் சொல்லப்போனால் பொங்கல் இயற்கையுடன் இணைந்தும் கலந்தும், உறவாடியும், கைகோர்த்தும் கொண்டடும் ஆதித் தமிழனின், ஆதி மனிதனின் கொண்டாட்டத்தைஇயற்கையைச் சுரண்டும், சூறையாடும் ஒருவருக்குப் பொங்கல் கசப்பானதகவே இருக்கக்கூடும்.

இன்னும் சொல்லப்போனால் மதவாதம், பெருமுதலாளியவாதம் இவற்றுக்கு எதிரான இவ்வுலகின் மிக மிக எளிய ஓர் நடவடிக்கை என்றால் அது தமிழனின் பொங்கல் பண்பாடுதான், இந்தப் பண்பாட்டுப் பொங்கல்தாம். இயற்கையின் பெயரிலான இயற்கையின் சார்பிலான ஓர் அழுத்தமான எதிர்குரல் எனலாம்.

இயற்கையை வெற்றி கொள்வதாக மனிதனை மனிதன் போரிட்டு வெல்லும் நாளாக அல்லாமல் இயற்கையுடன் இணைந்து அவற்றிற்கு நன்றி சொல்லும், செலுத்தும் ஓர் பண்டிகை பொங்கல். மனிதன் இயற்கையை மதிக்கும், கற்கும், ஓர் அறப்பண்பாட்டு செயற்பாடு பொங்கல் என்பதை இப்படியும் சொல்ல முடியும்.

அறுவடை ஆகாத வயல் ஒன்றிலிருந்து பிடி நெல் அறுத்தெடுத்து வருவோம். அதை 'குதிர் நெல்' என்பார்கள். (குதிர்ந்த, முதிர்ந்த- பெண் பூப்பெய்துவதைக் கூட குதிர்தல் என்றே குறிப்பர் பின்னர் அதுகுத்த வைத்தல் உட்கார்ந்துவிட்டாள் என்று சமூக பொருளாதார பெண்ணடிமை மேட்டிமைச் சமூகச் சொற்கள் மேலெழுந்தன.) அவற்றை பொங்கல் தினத்தன்று கோடு திறக்கும்போது (முற்றத்தில் அடுப்பு வைப்பதற்கு மண் அகழ்வதை 'வெட்டுதல்' என்று சொல்வதில்லை) அந்த நெல்லை உரலில் இட்டுச் சிறிதுக் குத்தி உமி, தவுடு நீக்கிப் பொங்கல் அரிசியில் சேர்ப்பதுடன் மீதியை அடுப்பிற்காக எடுக்கப்படும் மண்ணில் செய்யப்படும் மேடை அருகே நட்டு வைப்பார்கள்.

பொதுவாக மண்ணில் செய்யப்படும் அந்த



விளை நிலத்தில் தொடங்கிய அந்த வழிபாடும், கொண்டாட்டமும் மெல்ல தமிழனின் முற்றத்திற்கு நகர்ந்திருக்கிறது. முற்றம் ஒரு முக்கியமான குறியீடு. முற்றம் என்பது பொது இடம், இல்லம் என்பது தனி இடம். முற்றம் தொடங்கி இவ்வுலகு விரிந்து செல்கிறது.

மேடையின் இரு பக்கங்களிலும் பொங்கல் படையலிடும் போது குத்து விளக்கேற்றப்படும். அந்த சிறிய மண்மேடை அழகாக நீர் மற்றும் சாணம் இட்டு மெழுகப்படும். அதன் மீது மாக்கோலமிடுவார்கள்.

இரு பக்கங்களிலும் செங்கரும்பு நிறுத்தப்படும். மேலும் தூசு துரும்புகள் பானைச் சோற்றில் விழாமல் இருக்கவும், காற்றினால் விறகடுப்பின் நெருப்பு அலைபாயாமல் சீராக எரியவும் கரும்பை நாலாபுறமும் நிறுத்தி தென்னம் ஓலையால் தடுப்பு கட்டுவர். பச்சை இலையுடன் இருக்கும் செங்கரும்பு முற்றத்தை மேலும் அழகூட்டும்.

அடுப்பெரிப்பதற்கு சிறார்கள் பெரியவர்களுக்கு உதவியாக இருப்பார்கள். பனை வடலிகள், பன்னாடைகள், அதன் காய்ந்தப் பூக்கள், தென்னை ஓலைச் சருகுகள் இப்படியானவையே அடுப்பெரிக்கப் பயன்படுத்துவார்கள்.

பொங்கல் சந்தை கூடும் நாளில் பொங்கல்

மாட்டுப் பொங்கலுக்கு மறுநாள் உழைத்த மாடுகளுக்கு ஓய்வும், மனிதர்களின் புலன்களுக்கு காட்சி விருந்துமாக இருக்கும். காணும் பொங்கல் என்பது காட்சிக்கு இன்பத்திற்காக மட்டுமானதல்ல. ஐம்புலன் விருந்து என்றே இதைச் சொல்லலாம்.

பானைகளை வாங்குவதே ஒரு அழகு. தட்டுப்பார்த்தும், நீர் ஊற்றிப் பார்த்தும் கசிதல், போலி ஓடு இருக்கிறதா என்றெல்லாம் கேட்டும், பார்த்தும் வாங்குவார்கள். குயவர்கள்தம் பேச்சுத் திறமையால் மண் எடுத்து இடம் தொடங்கி ஊர் பெயர் வரைச் சொல்லி விற்பார்கள். எங்கள் பக்கத்து கிராமமான ஆலங்காடே பானைகளுக்குப் பெயர் போன ஊராகும்.

இப்போது பானைத் தொழில் வெகுவாக நசிந்து போய்விட்ட நிலையில் பானை செய்து விற்றவர்கள் அலங்கார பொம்மைகள், திருட்டி பொம்மைகள், நீர் குடுவைகள் என்று நவீன மோஸ்தர்களுக்கு மண்ணை குலைத்துக் கொண்டிருக்கிறார்கள். புதுப்பானையில் புத்தரிசையை இட்டு அதில் முந்திரி, திராட்சை, ஏலம், பனை வெல்லம் அல்லது அச்சு வெல்லம் இடித்துப் போடுவார்கள். சிலர் மோட்டு வெல்லம் மோதக வெல்லம் போடுவார்கள் இவை தேங்காய்களின் கொட்டாங்கச்சியை அச்சாகக் கொண்டு செய்யப்படும் பெரும் வெல்லமாகும்.

புதுப் பானையின் கழுத்தில் இஞ்சி, மஞ்சள் கொத்துகளை சுற்றிக் கட்டுவார்கள் இது புதுப்பானைக்கு மேலும் அழகு சேர்ப்பதுடன், தீயில் கொஞ்சம் வெந்து பச்சரிசி வெல்லம் இவற்றுடன் சேர்த்து இனம் புரியாத நறுமணத்தைக் கொண்டுவரும். இதை ஒருவாறு பொங்கல் வாசனை என்றுகூட பெயரிட்டுச் சொல்லாம். பொங்கலுக்கு வாசனை உண்டென்றால் அது இதுதான். மஞ்சள், இஞ்சி கொத்துகள் முற்றத்தில் அரிசி பொங்குவதால் ஏற்படும் கிருமி தொற்றிலிருந்து உணவைப் பாதுகாக்கிறது. புதுப்பானையின் மண்வாசனை அரசியில் ஏறி பொங்கலில் அது சுவைக் கூட்டுகிறது.

இந்தப் பொங்கலுக்கு பருப்புக் குழம்பு வைப்பார்கள். அந்தப் பருப்பு நெல்வயலின் ஊடாக வரப்புகளில் பயிரிடப்படுவதாக இருக்கும் பெரும்பாலும். அந்தக் குழம்பில் அந்தத் திங்கள்களுக்கேயுரியத் தரைக்கு அடியில் விளையும் கிழங்கு வகைகளை சேர்ப்பார்கள். கருனை, சேனை, சேம்பு, பனங்கிழங்கு, சக்கரைவள்ளிக் கிழங்கு (சீனிக் கிழங்கு) கொட்டிக் கிழங்கு என்றவாறு அவை இருக்கும். பொதுவாக இம்மாதிரியானக் கிழங்குகளை மேட்டுக்குடி உயர்சாதியினர் சமைத்து உண்ணுவதில்லை. ஆனால் இக்கிழங்குகள் தாம் மருதநிலத்தின் மிக முக்கியமான கிழங்கு வகைகள்.

மேலும் பரங்கி, கத்தரி, புடலை, பீர்க்கன், அவரை, சுரை, என நாட்டுக்காய்கள் சேர்த்து அவியல் செய்வர். பல வகையானக் காய்களும், கிழங்குகளும் சேர்த்து செய்யப்பட்ட அக் குழம்பினைக் கோட்டுக் கறி என்பர். பலக்கூட்டுக் கறிக் குழம்பென்பர் உழுகுடியில். அதை பொதுவாக பெரும் பொங்கல் என்பது ஐந்திணை வகுத்த தமிழரின் மருத நிலத்துப் பண்பாடாக, திருவிழாவாக இருந்தது. இன்னும் சொல்லப்போனால் இது அரிசித் திருநாள். அறுவடைத் திருநாள்தாம். தமிழர் ஓர்மையும், கூட்டுப் பண்பாடும், உழைப்பும் ஐந்திணை மக்கள் பொங்கலைக் கொண்டாடுவதில் எந்த தடையுமிருக்கவில்லை. ஏறு தழுவுதல் என்பது முல்லை நிலப் பண்பாடுதாம். அதை மருத நிலம் ஏற்றது. நெல் அறுவடை மருத நிலப்பண்பாடுதாம் அதை குறிஞ்சி ஏற்றது. திணைகள் பாலையாகத் திரிவது இயல்பு. அவ்வாறே இணைவதும் இயல்பு அதைப் பண்பாடுகள் செய்தன. பொங்கல் ஐந்திணைகளின் பொதுப்பண்பாடாக இப்படித்தான் மாறின.

பெரும்பாலும் மருதத்திணையின் பண்பாடே பொதுப்பண்பாடக மாறியதற்கு அரிசி பொருளாதாரம் அதன் உபரி போன்ற பல அரசியல், பொருளாதார சமூகக் காரணங்கள் உண்டு. எனினும் அவ்வம் நிலத்திற்கேற்றவாறு பொங்கலை அவ்வம் நிலத்து மக்கள் கொண்டாடவே செய்தனர். நெய்தல், மற்றும் குறிஞ்சி மக்களின் பொங்கல் பண்பாடு குறித்து பேசப்பட வேண்டும்.

ஏறு தழுவுதல் முல்லை நிலத்திற்குரியது. காடுகளில் இருந்த மாடுகளை பாலுக்காகவும், உழு நிலங்களுக்காகவும் பிடித்து வந்தபோது அவற்றைப் போல செய்யும் ஒன்றாக ஏறு தழுவுதல் இருந்தது. அதே சமயம் மாடுகளும், பிற விலங்குகளும் மருத நிலத்தைத் தழுவத் தொடங்கின. பிற திணைகளின் பண்பாடுகளும், பயிர்களும், விலங்குகளும், மனிதர்களும் மருத நிலம் நோக்கி வந்தனர். பொங்கலில் திசை, திணைப் பண்பாடுகள் தமிழனை ஓர்மையில் கலந்தது.

மருத நிலத்தில் பெரும்பாலும் பொங்கலில் இடும் அரிசியை புழுங்கல் என்பார்கள். புழுங்கல் என்றாலே பொங்குதல் என்று பொருள்படும். இது பிற்பாடு அவித்துப் பின் பயன்படுத்தும் நெல்லைக் குறிக்கும் சொல்லாகிற்று. தமிழரின் மரபு நெல்விதைகள் 2,500 வகைகள் வரை தற்போது அடையாளம்காணப்பட்டுள்ளது. ஆங்கிலேயர்களும், அதற்குப் பிந்தய வேளாண் ஆய்வாளர்களும் அவற்றைக் கண்டறிந்துள்ளனர்.

தமிழர் நிலத்தில் தொடர்ந்து அந்நியர் படையெடுப்பின் காரணமாக பண்பாட்டுக் கலப்பு நேர்ந்தாலும், அவனது நெல்விதைகளில் கலப்பு நேர்ந்தாலும், பொங்கல் திருநாள் போல அப்படிக் கலப்பு நேராத இயற்கையான நெல் மணிகள் இருக்கவே செய்கின்றன.

இவற்றில் பொங்கலுக்குத் தமிழர்கள் கவுனி என்ற நெல் வகையையே பெரும்பாலும்

பயன்படுத்துவார்கள். கவுனியில் யானைகவுனி இருக்கிறது. ஒவ்வொரு மரபரிசிக்கும் ஒவ்வொரு மருத்துவக் குணங்களை சித்தமருத்துவர்கள் பட்டியலிடுவார்கள்.

ஒட்டு ரகங்கள் வந்த பிறகே சக்கரை சார்ந்தப் பெருட்கள் அரசியில் மிகுதியாகித் தனியாகப் பொங்கலில் சர்க்கரை சேர்க்க வேண்டாத வகையில் தமிழனின் உடலில் இனிப்பு நீர் கூடிவிட்டது.

மாட்டுப் பொங்கலுக்கு மறுநாள் உழைத்த மாடுகளுக்கு ஓய்வும், மனிதர்களின் புலன்களுக்கு காட்சி விருந்துமாக இருக்கும். காணும் பொங்கல் என்பது காட்சிக்கு இன்பத்திற்காக மட்டுமானதல்ல. ஐம்புலன் விருந்து என்றே இதைச் சொல்லலாம்.

காணுதல் என்பது உறவுகள், நட்புகள், பொது இடங்கள் என்று நாடிச் சென்று காணுதல். உசாவுதல், கலத்தல். பேணிக்கொள்ளல். நலம் விசாரித்து வரும் ஆண்டு குறித்து நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்ளுதல் என்று அதை மேலும் விரித்துக் கொள்ளலாம்.

சமூக உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ளுதல், புதிய உறவுகள், புத்திடங்கள், தேடிச் செல்லுதல் அளாவுதல், வயலில் களைத்துச் சோர்ந்த உடலை புதுப்பித்துக் கொள்ளுதல் என காணும் பொங்கலை உடல், உள புத்துணர்வு பொங்கல் என்று அழைக்கலாம்.

சங்க காலங்களில் பொங்கல் என்பது நீராடுவதை முதன்மைப்படுத்தி இருந்தது. மருத நிலத்தைப் பொருத்த வரை அது நெல் உற்பத்திச் சார்ந்தாக இருந்தது எனினும் தமிழர் பண்பாடு நீர் சார் பண்பாடு என்பதால் திருநாட்கள் நீரையும், நீராடுதலையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது. தனது உடல், உள நலனை அறிவியல் வழியில் புதுப்பித்துக் கொள்ளும் திருநாளாக மூன்று நாள் பொங்கலைத் தமிழன் கண்டடைந்திருக்கிறான் என்பதை காணும் பொங்கல் சிறப்பாக உறுதிப்படுத்துகிறது.

பொங்கலுக்குச் சரியாக எங்கள் வீட்டு மாடுகள் அடுத்தடுத்துக் கன்றுகள் ஈன்றுவிடும். அடுத்தப்பொங்கலுக்கு அது இன்னும் பெருக வேண்டும் என்று வேண்டிக் கொள்வார்கள். மாடுகள் பெருகுவது என்பது செல்வம் பெருகுவதாகும். எருதுகள் உழவுப் பணிக்காகவும், பசுங்கன்றுகள் பாலுக்காகவும் வளர்க்கப்படும். பசுக்களைப் பெண்களும், எருதுகளை ஆண்களும் பொதுவாகப் பராமரிப்பதுண்டு.

பாலைக் காசுக்கு விற்கும் காலம் இருக்கவில்லை. வீட்டுத் தேவைகளுக்கே அவை போதுமானதாக இருந்துவிடும். மாடுகளைப் பராமரிப்பது அலுப்பூட்டக்கூடிய வேலையல்ல. அதே சமயம் மாட்டுப் பொங்கலன்று அவற்றை விசேடமாகக் கவனிப்பது இன்னும் சுவையானது. அவற்றை எவ்வளவு சேட்டை செய்தாலும் அன்றைக்கு மறந்தும் கூட அடித்துவிட மாட்டார்கள். புது வைக்கோல் போரிலிருந்து அவற்றிற்கு தீனி வேண்டும் மட்டும் கிடைக்கும். புது வைக்கோலை மாடுகள் அவ்வளவு எளிதில் தின்று தீர்த்துவிடாது. பழைய வைக்கோலை மாடுகள் எளிதில் தின்றுவிடும். புது வைக்கோல் தின்ற மாடுகள் கழிச்சல் எடுக்கும் அதனால் சிறிது காலத்திற்கு இரண்டு வைக்கோலையும் கலந்து போடுவார்கள் மாட்டுப் பொங்கலில் விதிவிலக்கு. புது வைக்கோல், இலைதழைகளாலான மாலைகள் என்று அவற்றிற்கு ஏக மரியாதை கிடைக்கும்.

மாடுகளின் கொம்புகளுக்கு வண்ணம் தீட்டுவதற்கு மிகவும் பொறுமைத் தேவைப்படும் எல்லா மாடுகளும் தமது கொம்புகளில் வண்ணம் தீட்ட விட்டுவிவதில்லை. அடம்பிடிக்கும் மாடுகளை அதன் போக்கில் சென்று வண்ணம் தீட்டியாக வேண்டும். மாடுகளுக்கான மாலைகள் பொங்கலுக்கு பத்து நாள் முன்பே தயார் செய்ய வேண்டியிருக்கும். நெல் வயல் ஓரங்களில் வளர்ந்திருக்கும் நெட்டிச் செடிகளைக் கொண்டு வந்து காயவைத்து அவற்றின் தோலைச் சீவி சிறு சிறு துண்டுகளாக வெட்ட வேண்டும். பிறகு அவற்றை அழகான வடிவங்களில் கத்தரித்து வண்ணங்கள் கரைக்கப்பட்ட நீரில் முக்கியெடுத்து வெயிலில் காய வைக்க வேண்டும். பிறகு அவற்றின் நடுவே துளையிட்டு சணல் கயிற்றில் மாலையாகக் கோர்க்க வேண்டும். இவை சந்தைகளில் விலைக்கு உழவு சார்ந்த குடியினர் விற்பனைக்கு கொண்டு வந்தாலும் கூட வீட்டில் நாமே செய்வது இன்னும் அலாதியானதாகும்.

கிராமங்களில் பொதுவான ஓர் இடத்தில் வைத்து மாட்டுப் பொங்கலைக் கொண்டாடுவார்கள். பொங்கலிடுவார்கள். நெல்லி, மாவிலை, சிறுபீளை, பூலாம் இலை, இவற்றை தென்னம் பாலை அல்லது பனைநார்களில் கோர்த்து அவற்றை மாடுகளின்

கழுத்தில் கட்டுவார்கள். கட்டும்போதே அவற்றைத் தின்னத் தொடங்கிவிடும். சிறு கன்றுகள் அவற்றை அலங்காரமாவே கருதி ஏற்கும் சில மாடுகளின் கண்களில் பெருமிதம் மின்னுவதைக் காணலாம்.

சிறு மேளங்கள் முழங்கி மாடுகளைச் சுற்றி வந்து கண்னேறு கழிப்பார்கள். அதுபோது அவை திண்டித்திமிறி கவணைகளை உடைத்து செல்ல முயலும். கன்றுகள் மிரட்சியுடன் துள்ளி தாயின் அரவணைப்பிற்குள் போகும். வீடு மற்றும் தெருச் சிறார்கள் வெகு குதூகலத்துடன் மேளமடிப்பார்கள். அப்படியான பணிகள் இரவு வரை நீடிக்கும். அடுத்தடுத்த வீடுகளுக்குச் சென்று மேளமடிப்பார்கள்.

பெரும் பொங்கலுக்குத் திறக்கப்பட்டிருக்கும் அதே கோட்டில் மாட்டுப் பொங்கல் இடுவார்கள். படையலுக்குப் பிறகு அவை மாடுகளுக்கு ஊட்டப்படும். வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் மாட்டின் முன் சென்று ஊட்டிவிடுவார்கள். அதனிடம் நன்றி என்று சொல்லி அவற்றை வலம் வருவார்கள். சொர சொரப்பான அவற்றின் நாக்கு உள்ளங்களைகளில் படும்போது சிறார்களுக்கு உணர்வெழுச்சியாக இருக்கும்.

எல்லாம் முடிந்து வீட்டு உறுப்பினர்கள் சிறார் முதல் பெரியவர் வரையிலாகக் கடந்த காலங்களில் மாடுகளை அடித்தும், திட்டியும், துன்புறுத்தியுமிருந்தால் அதற்காக இப்பொழுது மன்னிப்புக் கேட்டு அவற்றின் காலில் விழுவார்கள். தமிழனின் ஆகப்பெரிய பண்பாடு என்று இதைச் சொல்ல முடியும். யாருக்கும் வணங்கா அவன் சிரம், முடி, பல்லுயிர் பொருட்டு மண்தொட்டு வணங்கும்.

எங்கள் டெல்டாப் பகுதிகளில் சிற்சில இடங்களில் மட்டுமே பொங்கல் திருநாட்களின் போது மாடுபிடி நடக்கும். சில கிராமங்களில் மாட்டு வண்டிப் போட்டி இருக்கும். எங்கள் ஊர்களைச் சுற்றி அவ்வாறன போட்டிகள் இருப்பதில்லை. ஆனால் ஊரக விளையாட்டுப் போட்டிகள் தற்போது மேலெழுந்து கொண்டுள்ளன. அவை தமிழர் விளையாட்டுக்களை மீட்டெடுக்க முயல்கின்றன. தற்போது அவற்றின் இடத்தைத் துடுப்பாட்டம் (கிரிக்கெட்) பிடித்துக் கொண்டுவிட்டது.

பம்பரம், கோலி, போன்ற சிறார்களின் பொங்கல் கால விளையாட்டுக்கள்; சிறுமிகள் விளையாடும் கயிறுதாண்டுதல், ஊஞ்சல் என்பன சிறு கைபேசிப் பெட்டிக்குள் அடக்கம் செய்யப்பட்டுவிட்டன.

சிறுவனாக இருந்த பொழுது ஒரு குங்குமம் பொங்கல் மலரில் காசிஆனந்தனின் கவிதை ஒன்று வந்தது, மாட்டுப் பொங்கலின் போதெல்லாம் தவறாது நினைவுக்கு வருவதுண்டு அது இதுதான்.

மறத்தமிழர் வீரப்போர் விளையாட்டான
மஞ்சுவிரட் டென்பதுதான் சல்லிக்கட்டாம்.!
குருத்துப்போல் கொம்புமுனை சீவிக் கொண்டு
குருதி நிறம் பூசியுள முரட்டுக்காளை
வெறுத்தவிழிக் கனல்வீச, வாலுயர்த்தி
வேங்கையெனப் பாய்ந்தாலும் –தமிழ்க்களையர்
மறித்தெழுந்து முதுகேறிக் கொண்டைப்பற்றி
மண்டியிடச் செய்ததெல்லாம் மாட்சிக்காட்சி!
கோலமிகு காட்சியதைக் காண்பதற்குக்
கூடுபவர் பலருண்டு! அவருக்குள்ளும்
காளையினைத் துணிவுடனே பிடித்தடக்கும்
காளைக்கே ஏங்கியொரு கன்னி நிற்பாள்!
ஆளவல்ல ஆணழகன் வெற்றி காண்பான்.!
ஆரணங்கோ கண்ணடியால் அவனைச் சாய்ப்பாள்!
மாலையிடும் காளையுடன் மங்கை கொஞ்சும்
மாஞ்சோலை பூஞ்சோலை மணமும்வீசும்!

என்றவாறு அந்தக் கவிதைத் தொடங்கிச் செல்லும்.

ஈழத்தில் இனவழிப்பு நடந்துக் கொண்டிருந்த 1984-85 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு பொங்கலுக்கு அதே குங்குமம் இதழில் காசிஆனந்தன் இப்படி ஒரு கவிதை எழுதினார்,

நெல்வயல் எங்கும் நெருப்பு!
நிரைப்பச் சிங்களவன்
கொல்ல நின்றழியும் பசுக்கள்!
கொடுமையோ! கொடுமை அம்மா!
இல்லையே அரிசி! கலத்தில்
இடப் பசும்பாலும் இல்லை.!
நில்லடா தமிழா! குமரி
நிலத்தைப் பார்! நிறுத்து பொங்கல்!

உன்னரும் பண்டை நிலமாம்
உயர்தமிழ் ஈழமண்ணில்
கன்னியர் பொங்கும் விழிநீர்
காளையர் வீர மார்பின்
முன்புறம் பொங்கும் குருதி
முற்றும் நீ அறிந்த பின்னும்
என்னடா பொங்கல்? தமிழா?
ஏதுக்கு? நிறுத்து பொங்கல்!
பண்டை நாள் பொஞ்சோற்றுதியன்
பாரதப் போர் மறவர்
உண்டச் சோறளித்தான்! தமிழன்
உயர் வேந்தன் அவன் குலத்தோர்
மண்டபத்தூரில் அகதி
மனைதனில் உணவிழந்து
திண்டாடும் இந்நாள் அட! ஓர்
திருநாளா நிறுத்து பொங்கல்!

என்று தொடரும் உணர்ச்சிக் கவிஞர் எழுதிய அந்த கவிதை அன்றையக் காலங்களில் மிகுந்த உணர்வெழுச்சியை மட்டுமல்ல பகிர முடியாதத் துயரினைக் கொண்டு தந்தது. இன்று நினைக்கின்ற போதும் ஈழத்தமிழரின் அவல வாழ்வும், பொங்கல் கொண்டாட்டம் குறித்தும் மனச் சான்றின் ஒரு மூலையில் துயரம் படியும்.

உலகமயம், பெரு முதலாளியம், தனிமனித நுகர்வுப் போக்குகள், சாதியம், குழுவாதம் பெருமதவாதப் பின்னணி அடுத்தடுத்து வந்து பயங்காட்டும் பெருந்தொற்றுக்கள் இவற்றிடையே நவீன வாழ்வில் தமிழனின் உலகு தழுவியப் பார்வையின் பெரு வீச்சில் பொங்கல் எப்படி பொங்குகிறது நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கிறது பாருங்கள்.

கட்டுரையாளர்: எழுத்தாளர்

கட்டுரை

க.பஞ்சாங்கம்
drpanju49@yahoo.co.in

பொங்கல் திருநாளும் நன்றியறிதல் பற்றிய எண்ண அலைகளும் —

I

ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கும் முற்பட்டது பத்துப்பாட்டு, எட்டுத்தொகை எனப்படும் சங்க இலக்கியங்கள்; அவை பெரிதும் சிக்கலான மனமெனும் மாயப் பொருளைக் கொண்டிருக்கும் மனிதர்கள் கூடிவாழும் சமூகத்தில், காலத்தின் தேவைக்கு ஏற்பச் சில கருத்தாக்கங்களை வடிவமைத்துத் தந்துள்ளன. காதல், வீரம், மானம், நட்பு, விருந்தோம்பல், கொடுத்துண்ணல் எனப் பலவற்றைப் படைத்துத் தந்துள்ளன; அவற்றுள் ஒன்றுதான் “செந்நன்றி அறிதல்” என்கிற கருத்தாக்கம் ஆகும்; அதாவது கூடிவாழ நேர்ந்த ஒரு சமூகத்தில் ஒருவர் செய்த நன்மையை - உதவியை - உடனே மறந்துவிடாமல், அவர் செய்த உதவி தினையளவாக இருந்தாலும் அதன் பயன் கருதிப் பனையளவாகக் கொண்டு அவருக்கு என்றென்றும் கடன்பட்டவராகத் தன்னைக் கருதி அவரோடு நட்புடன் வாழ்தல் என்பதுதான் செய்நன்றியறிதல் என்பதன் கருத்தாக்கம். அதாவது ஒருவரையொருவர் என்றென்றும் நட்புடன், அன்புடன் கூடி வாழ்வதற்கான ஒரு கருத்தாக்கம் இது. இந்தக் கருத்தைத் தன் புனைவுமொழி கொண்டு, மனித மனத்தில் ஓர் உணர்வாக மாற்றிவிடும்போது சமூகத்தில் ஒட்டுமொத்தமாகச் சண்டை, சச்சரவு, பொறாமை, தீமை என எதுவும் இல்லாமல் அமைதியான ஒரு வாழ்க்கை அமைய வாய்ப்பு ஏற்படும் என்பது இக் கருத்தாக்கத்தின் நோக்கம்.

மனித உறவில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய மகத்தான கருத்தாக்கமாக இது கருதப்பட்டுள்ளது; அது மட்டுமல்ல இப்படியான மற்ற அறக்கருத்தாக்கங்கள் பலவற்றிற்கும் இதுதான் தாயாக இருந்து வளர்த்தெடுக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்தது என்றும் கருதியுள்ளனர்; அதனால்தான் புறநானூற்றுப் புலவர் ஆலத்தூர் கிழார், கீழ்க்காணுமாறு கடுமையாக எச்சரிக்கை விடுத்து செய்நன்றியறிதலை வலியுறுத்துகிறார்:

> “உயிர் உற்பத்திக்குப் பால்தரும் பசுவின் முலையை அறுத்துக் கொடுமை செய்த அறம் அறவே அற்ற மனிதர்களுக்கும், மணம் முடித்து வயிற்றில் கருவளர்க்கும் பெண்களின் கருவைச் சிதைப்பவர்களுக்கும், மூத்து முதிர்ந்த சான்றோர்களை மதிக்காமல் அவர்களுக்குக் கொடுமை செய்பவர்களுக்கும் கூட மன்னிப்புக் கிடைத்துத் தப்பிப் பிழைக்க வழி கிடைக்கும்; ஆனால் நிலமே புரண்டு பெயர்ந்தாலும் ஒருவர் செய்த நன்மையை மறந்துவிடக்கூடாது என்பதைக் கடைப்பிடிக்காத மனிதர்கள் எக்காலத்திலும் தப்பிப் பிழைக்க முடியாது என்று அறநூல் பாடுகிறது”
>
> (புறநானூறு:34)

என்கிறார் புலவர். இவ்வாறு அறங்களுக்கெல்லாம் தலையாய அறமாகச் செய்நன்றியறிதல் வலியுறுத்தப்படுகிறது; தொடர்ந்து வந்த திருவள்ளுவரும் “செய்நன்றியறிதல்” என்று ஓர் அதிகாரம் அமைத்துப் பத்துக் குறளில் பத்து வகையான கோணத்தில் இந்தக் கருத்தாக்கத்தை வலியுறுத்துகிறார்.

ஒருவர்க்கு எந்த உதவியும் நாம் செய்யாதிருக்கும்போதே அவர் தானே முன்வந்து செய்த உதவிக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது என்கிறார்; இவ்வாறு ஓர் உதவியை எப்படி நாம் உயர்ந்த தளத்தில் வைத்துக் கொண்டாட வேண்டும் என அறிவுறுத்துகிறார்; இப்படிப் பல கோணங்களில் ‘நன்றியறிதல்’ என்கிற கருத்தாக்கத்தை வலியுறுத்திக்கொண்டு போகிற திருவள்ளுவர் மனிதர்களின் பாடுகளை - உளவியலை - அறிந்தவர் என்பதால், “சரி! ஒரு நன்மை செய்தவர், காலப்போக்கில் பகைமை கொண்டு தீமை செய்தால், அப்பொழுது அந்த நன்றியறிதல் என்னாவது?” என்ற கேள்விக்கும் பதில் சொல்லுகிறார்:

“நம்மைக் கொன்றுபோடும் அளவிற்கு அவர் துன்பம் செய்தாலும் அவர் செய்த ஒரு நன்மையை நினைத்துப் பார்த்த கணத்தில் அவர் செய்த துன்பம் எல்லாம் காணாமல் போய்விடும்; பழைய நட்பு கூடிவிடும்” என்கிறார்; அந்த அளவிற்கு நன்றியறிதல் என்பது ஆழமானது; ஏழு பிறப்பும் தொடர்ந்து வருவது என்றெல்லாம் நன்றியறிதலை வலியுறுத்துகிறார்.

இவ்வாறு ஒருவர் செய்த நன்மையை மறவாமல் போற்ற வேண்டுமென்கிற தமிழ்மரபு, நன்மை செய்பவர்கள் எத்தகைய உயர்ந்த மனப்பான்மையோடு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது. ஓர் உதவி செய்துவிட்டால் பதிலுக்கு உதவி பெற்றவரும் தனக்கு ஓர் உதவி செய்யவேண்டும் என்று எதிர்பார்க்காத உன்னத மனத்தொடு நன்மை செய்ய வேண்டும்; அப்படி எதிர்பார்த்துச் செய்தால் அது நன்மை ஆகாது; அறமாகாது; அது அறத்தை ஒன்றைக்கொடுத்து ஒன்றை வாங்கும் வணிகம் போன்றதாகிவிடும் என்றும் எச்சரிக்கிறது; இப்படி எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் நன்மை செய்வது பிறகு எதற்கு என்று கேட்டால், சான்றோர்கள் சென்ற வழியில் நானும் செல்கிறேன் என்கிற உயர் உணர்வை, மேன்மைமிகு பண்பாட்டை அடைவதற்காகத்தான் என்கிறார் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார். (புறநானூறு, 134) வள்ளுவரும் வறியார்க்கொன்று கொடுப்பதுதான் உண்மையான கொடை; மற்றவையெல்லாம் ஏதோ ஒன்றை எதிர்பார்த்துச் செய்யப்படும் தன்மை கொண்டவை என்றும் நன்மை செய்பவர்களுக்கும் நல்ல வழியைக் காட்டுகிறார்.

இவ்வாறு நன்மை செய்வதும் பெற்றவர் அதை நன்றியோடு போற்றுவதுமென்கிற இந்த உறவு, மனித வாழ்க்கையைச் செழிப்படையச் செய்யும் என்ற சரியான பார்வையில் இந்தக் கருத்தாக்கத்தைத் தமிழிலக்கியங்கள் தொடர்ந்து வலியுறுத்தி, மனிதர்களின் “ஒரு மனஉணர்வாகவே” உருவாக்கிவிட்டது; இத்தகைய ஒரு மன உணர்வின் வெளிப்பாடுதான் நம்முடைய தமிழர் திருநாள் எனப்படும் பொங்கல் திருநாள்; நன்றியுணர்வின் வெளிப்பாட்டிற்காகவே ஆண்டுக்கொருமுறை ஒரு திருநாளை உருவாக்கிப் பல்வேறு வகைவகையான சடங்கு மொழிகள் மூலம் கொண்டாடி வருகிறது தமிழ் மரபு; இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச் செல்லும் சூரியனுக்கு நன்றி; உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து வழங்கும் உழவர்களுக்கு நன்றி; அந்த உழவர்களுக்கு உறுதுணையாக நின்று உழைக்கும் மாடுகளுக்கு நன்றி; இவ்வாறு உலகம்

முழுவதும் பரவிக் கிடக்கும் தமிழ்மக்கள் அனைவரும் இந்தப் பொங்கல் திருநாள் மூலம் தங்களின் நன்றி உணர்வைப் புதுப்பித்துக் கொள்கிறார்கள்; பெருக்கிக்கொள்கிறார்கள்; மனித இருப்பிற்கு ஆதாரமாக நின்று இயக்கும் இந்த நன்றியுணர்விற்கென்று ஒரு திருவிழாவைக் கண்டடைந்த தமிழர்களின் வாழ்வியல் நெறியை எவ்வளவு பாராட்டினாலும் தகுமென்று கையெடுத்து வணங்கத் தோன்றுகிறது.

II

இலக்கியங்கள் தங்கள் புனைவு மொழிகளாலும் நீதிநெறி எழுத்துக்களாலும் நன்றியுணர்வைக் கட்டமைத்து அதையும் அழகானதொரு சடங்காக்கி ஆண்டுக்கொருமுறை விழா எடுத்துப் பெரிய அளவில் இந்த நன்றியுணர்வின் அருமையைக் கொண்டாடி மகிழ்ந்தாலும் நடைமுறையில் இது என்னவாக இருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டியதிருக்கிறது.

இருப்பவர் x இல்லாதவர் என்று வாழ்கிற ஒரு வர்க்கச் சமூகத்தில், ஆள்பவர் x ஆளப்படுபவர் என்று அதிகாரம் ஆட்சி செலுத்தும் ஒரு சமூகத்தில், மேல் சாதி x கீழ்ச்சாதி என்று கோபுர வரிசையில் செங்குத்தாக மனிதர்களைப் பிரித்துப் போட்டிருக்கும் ஒரு சாதியச் சமூகத்தில், ஆணாதிக்கம் கொண்ட பாலின வேறுபாடுகள் மலிந்த ஒரு சமூகத்தில், இந்த நன்றியுணர்தல் என்கிற உணர்வு எவ்வாறு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று தேடினால் பெரிதும் ஏமாற்றமே மிஞ்சுகிறது; இருப்பவர்களுக்கும் ஆள்பவர்களுக்கும்; மேல்சாதிக்காரர்களுக்கும் அனுகூலமாகத்தான் இந்த நன்றியுணர்வு பயன்பட்டுக் கொண்டிருக்கிறது; மானுட சமூகத்தின் மேன்மை கருதி வடிவமைக்கப்படும் எந்தவொரு கருத்தாக்கத்தின் கதியும் இப்படித்தான் போய்முடிகிறது; பெருவாரி மக்களான பெறுபவர்களிடம் இருக்கிற நன்றியுணர்வு, இருப்பவர்களிடமும் ஆள்பவர்களிடமும் மேல்சாதிக்காரர்களிடமும் இருப்பதில்லை; இப்படித்தங்கள் நன்றியுணர்வு அறவே இல்லாமல் பார்த்துக் கொள்வதனால்தான் அவர்கள் இருப்பவர்களாகவும் ஆள்பவர்களாகவும் மேல்சாதிக்காரர்களாகவும் தொடர்கிறார்கள் என்பதுதான் உண்மை.

இருப்பவர் x இல்லாதவர் என்று வாழ்கிற ஒரு வர்க்கச் சமூகத்தில், ஆள்பவர் x ஆளப்படுபவர் என்று அதிகாரம் ஆட்சி செலுத்தும் ஒரு சமூகத்தில், மேல் சாதி x கீழ்ச்சாதி என்று கோபுர வரிசையில் செங்குத்தாக மனிதர்களைப் பிரித்துப் போட்டிருக்கும் ஒரு சாதியச் சமூகத்தில், ஆணாதிக்கம் கொண்ட பாலின வேறுபாடுகள் மலிந்த ஒரு சமூகத்தில், இந்த நன்றியுணர்தல் என்கிற உணர்வு எவ்வாறு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று தேடினால் பெரிதும் ஏமாற்றமே மிஞ்சுகிறது; இருப்பவர்களுக்கும் ஆள்பவர்களுக்கும்; மேல்சாதிக்காரர்களுக்கும் அனுகூலமாகத்தான் இந்த நன்றியுணர்வு பயன்பட்டுக் கொண்டிருக்கிறது; மானுட சமூகத்தின் மேன்மை கருதி வடிவமைக்கப்படும் எந்தவொரு கருத்தாக்கத்தின் கதியும் இப்படித்தான் போய்முடிகிறது; பெருவாரி மக்களான பெறுபவர்களிடம் இருக்கிற நன்றியுணர்வு, இருப்பவர்களிடமும் ஆள்பவர்களிடமும் மேல்சாதிக்காரர்களிடமும் இருப்பதில்லை; இப்படித்தங்கள் நன்றியுணர்வு அறவே இல்லாமல் பார்த்துக் கொள்வதனால்தான் அவர்கள் இருப்பவர்களாகவும் ஆள்பவர்களாகவும் மேல்சாதிக்காரர்களாகவும் தொடர்கிறார்கள் என்பதுதான் உண்மை.

இந்த இடத்தில் ஒரு சந்தேகம் எழுகிறது; இத்தகைய கருத்தாக்கங்களைக் கூடிவாழ நேர்ந்த சமூகம் தன் அனுபவத்தில் கற்ற பாடத்தில் இருந்து கட்டமைத்துக் கொள்ளுகிறதா? அல்லது சமூகத்தில் உருவாகிவிட்ட ஆதிக்க, அதிகார சக்திகள் தங்களை நிலைநிறுத்திக் கொள்ளப் பயன்படும் இப்படியான கருத்தாக்கங்களை வடிவமைத்துச் சமூகத்தின் பொதுவெளியில் பரப்பி விடுகிறதா? அல்லது இரண்டும்தானா? என்று சந்தேகம் எழுகிறது; இப்பொழுது “ஆன்முலை அறுத்த” என்ற ஆலத்தூர் கிழார் பாடலின் முழுப் பொருளையும் பார்த்தால் நமக்கொரு உண்மை புலனாகிறது; சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்ற அதிகாரத் தலைமையில் இந்த மன்னனைப் புகழ்ந்துபாடும்போது ஆலத்தூர் கிழார் மேற்கண்டவாறு, நன்றியறிதல் குறித்து அறம் சொல்லுகிறது என்கிறார்; அதனால் மன்னனே! உன் செல்வம் அனைத்தையும் உனக்காகவும் உன் குடும்பத்திற்காகவும் மறைத்து வைத்துக்கொள்ளாமல் உன்னைத் தேடிவரும் பாணர்களுக்கு இனிமையாகப் பேசியதோடு வெண்சோறு வழங்கிச் செல்வம் முழுவதையும் செலவழித்தவன் நீ; இப்படிப்பட்ட உன்னிடம் நான் அடைக்கலம்; பல கதிர்களை உடைய சூரியனைப் போன்றவனே! இத்தகைய பெருமைமிக்க உன்னுடைய தாளினை நான் பாடவில்லை என்றால், நன்றியறிதலை அறியாதவனாகிவிடுவேன். எனவே இமயத்தின் சிகரத்தில் முழங்கித் திரண்ட கருமேகம் பொழிந்த நுண்ணிய மழைத்துளிகளைவிட அதிகமான ஆண்டுகள் நீ வாழ்கவே! என்று புலவர் பாடும்போதே நன்றியறிதலை சமூக உறவுக்கு உரம்தரக்கூடிய ஒரு கருத்தாக்கத்தை - அன்றைக்கே அதிகாரம், தனக்கானதாக வடிவமைத்துக்கொண்டது என்பது தெளிவாகத் தெரிந்துவிடுகிறது; ஏற்றத்தாழ்வு உருவாகிவிட்ட ஒரு சமூகத்தில் நன்றியறிதலின் விதி இப்படித்தான் இயங்கமுடியும்; உதவி பெறுபவனை

நிரந்தர அடிமையாக வைத்துக்கொள்ளப் பயன்படும் நுட்பமான ஒரு தந்திரமாகத்தான் நன்றியறிதல்' நடைமுறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

III

தனிமனிதர் என்ற அளவில் இந்த நன்றியறிதலைக் கொண்டு செலுத்துவதென்பது பல்வேறு வகையில் பெரும்பாடாக இருக்கிறது; ஒருவருக்கு நன்மை செய்த கணத்தில் இருந்தே, பதிலுக்கு அவரும் நன்மை செய்வார் என்ற எதிர்பார்ப்பைக்கூடக் கடந்துவிட்டாலும் அவர் நமக்குக் கடன்பட்டவராக நடந்துகொள்ள வேண்டுமென்று மனம் எதிர்பார்க்கத் தொடங்கிவிடுகிறது; மேலும் கடன்பட்டவராக நடக்காவிட்டாலும் பரவாயில்லை நல்லது செய்த நமக்கே எதிரானவராக ஆகிவிடக்கூடாது என எதிர்பார்க்கிறது; அப்படி எதிரானவராக ஆகிவிட்டால் மனம் கிடந்து எறும்புக்கூட்டத்திடம் சிக்கிய சின்னப் புழுவாய்;j துடிக்கத் தொடங்கிவிடுகிறது; 'நன்றியறிதல்' என்கிற கருத்தாக்கத்தின் பக்கவிளைவு இவ்வளவு பயங்கரமாக இருக்கிறது. கல்லூரி ஆசிரியராகச் சேர்ந்த புதிதில் நான் வகுப்பெடுக்கும் முறையில் ஆர்வமுற்று என்னிடம் நெருங்கிப் பழகத் தொடங்கிய ஒரு கிராமத்து ஏழை மாணவர்க்குப் பலவகையில் நன்மை செய்யக்கூடிய சூழல் உருவானது; ஒரு கட்டத்தில் என் பெயரைப் 'பஞ்சு' என்று தனது வலது கையில் 'பச்சை குத்திக் கொண்டார்'; அந்த மாணவரிடம் எதையும் எதிர்பார்க்கவில்லை என்றாலும், நீண்டநாள் கழித்து வழக்கமாக அணியும் முழுக்கைச் சட்டையை மடித்துக் காட்டி', என் நன்றியறிதலைப் பார்த்தீர்களா?' என்ற முறையில் அவர் ஒரு பார்வை பார்த்தபோது மனம் மகிழத்தான் செய்தது. நன்றியறிதல் எளிமையாக ஒருவருக்குள் அடிமை மனநிலையை விதைத்துவிடுகிறது.

இப்படியாக இருந்த ஆசிரியர் - மாணவர் உறவு ஒரு கட்டத்தில், காரணமெது என்று என்னால் ஊகிக்க முடியாத ஏதோஒரு காரணத்தால் (இப்பொழுது அது பொறாமையாகஇருக்கலாமென்று எண்ணிக்கொள்கிறேன்.) எனக்கு எதிரானவராகிவிட்ட ஒருவரின் நுட்பமான சூழ்ச்சிக்குப் பலியாகி அந்த மாணவரும் எனக்கு எதிராகத்திசை திரும்பிவிட்டார்; அந்தக் காலங்களில் என் மனம்பட்டபாடு பாரதியார் சொல்வதுபோல தாளம்படுமோ, தறிபடுமோ யார் படுவார் என்கிற கதைதான். இப்படி ஒவ்வொருவரும் இந்த நன்றியறிதல் என்கிற கருத்தாக்கத்தால் கலங்கிப்போன நிகழ்வுகளை ஏராளம் காட்ட முடியும்தானே.

இப்படியொரு பக்கம் என்றால், மற்றொரு பக்கம் நன்மை செய்தவர்க்கு நாம் சரியாக நன்றிக்கடன்பட்டு செயல்படவில்லையே என்கிற குற்ற உணர்வுகளும் நமக்குள் கூடி வந்து கும்மாளம் அடிப்பதையும் அவதானிக்க முடிகிறது; வயதான இந்தக் காலத்தில் இந்த உணர்வு கூடுதலாக வந்து அவஸ்தைப்படுத்துகிறது; இளங்கலை படித்து முடித்த கையோடு முதுகலை படிக்க இடம் கிடைக்காமல் தெருவில் அலமந்து நின்ற தந்தையை இளமையிலேயே இழந்த இந்தக் கிராமத்தானை "நான் சேர்க்கிறேன்" என்று முன் வந்து சென்னை மாநிலக் கல்லூரியில் அப்பொழுது துறைத் தலைவராக இருந்த பேரா.மெ.சுந்தரத்திடம் சேர்த்தவர் பேராசிரியர் தமிழண்ணல்; எவ்வளவு பெரிய உதவி; ஆனால் முதுகலை முடித்து வேலை கிடைத்துத் திருமணம் முடித்து குழந்தைகளை வளர்த்து, மார்க்சியம் கற்று வளரவளர, தமிழண்ணலிடமிருந்து வெகுதூரம் விலகிவந்துவிட்டேன்; பழகுதலே இல்லாமல் போயிற்று. இது குற்ற உணர்வாய் எனக்குள் கிடந்து குடைந்துகொண்டே இருந்தது; ஒருநாள் மதுரையிலிருந்து நண்பரொருவர் அவர் மறைந்த செய்தியைத் தெரிவித்தார்; மறுநாள் மாலையில்தான் எடுக்கிறார்கள் என்பதையும் அறிந்துகொண்டு இரவோடு இரவாக வண்டிபிடித்துக் காலையில் போய்ச்சேர்ந்து மாலை வாங்கிச் சார்த்தி வணங்கிவிட்டு வந்தேன். ஆனாலும் குற்றஉணர்வு அழிந்தபாடில்லை; அது இறுதிவரை இருந்தே தீரும்போலும்.

இந்த நன்றியறிதல் உணர்வின் லீலைகளில் சொல்லமுடியாத மற்றொன்று ஒரேயொரு நன்மை - அதுவும் உயிரான நன்மை ஒன்றைச் செய்துவிட்டு நம்மிடம் இருந்து ஓராயிரம் நன்மைகளை வாழ்நாள் முழுக்க எதிர்பார்க்கும் பாவனைகளை வெளிப்படுத்திக்கொண்டே இருப்பவர்கள்; எவ்வளவு செய்தாலும் இப்படிப்பட்டவர்களைத் திருப்திப்படுத்தவே முடியாது; அதே நேரத்தில் நட்பும் அறுந்துவிடாமல் கொண்டு செலுத்துவது என்பது பெரும் போராட்டமாகவே அமைந்துவிடுகிறது. இப்படி மனிதர்கள் வடிவமைத்த நன்றியறிதல் என்கிற இந்தக் கருத்தாக்கம் நம்மைப்படுத்தும் பாட்டையும் அதேநேரத்தில் அதனால் விளைந்த பல்வேறு நன்மைகளையும் சொல்லிக்கொண்டே போகலாம்.

மனிதர்கள் தங்களைச் சுற்றிக் கிடக்கும் இயற்கைப் பொருள்களால் வாழ்கிறார்கள் என்பதிலும் அதிகமாகத் தங்களைச் சுற்றிப் புனையப்பட்டுள்ள இத்தகைய கருத்தாக்கங்களின் வலைப்பின்னலுக்குள் சிக்கி வாழ்கிறார்கள் என்பதை 'நன்றியறிதல்' என்கிற இந்த ஒன்றினைக் குறித்து இங்கே நடந்துள்ள விசாரணைமூலம் அறிய முடிந்தது என்றே நம்புகிறேன்; அதேநேரத்தில் குற்றவாளிகளின் கொள்கலமாக விளங்கும் ஒரு சமத்துவமற்ற சமூகத்தில் வடிவமைக்கப்பட்ட எந்தவொரு கருத்தாக்கமும் ஆதிக்க சக்திகளுக்கான கருவியாகிப்போகும் என்பதையும் புரிந்துகொள்ள முடிந்தது.

குறிப்பு:

1. தமிழர்களின் இந்தத் தைப்பொங்கல், நன்றியறிதலை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது என்ற ஒரு புள்ளியைப் பிடித்துக்கொண்டு ஓடிய எண்ண ஓட்டங்களின் வெளிப்பாடுதான் இந்தக் கட்டுரை.
2. கட்டுரை எழுதி அனுப்புங்கள் என்று தூண்டிக்கொண்டே இருந்த தோழர் வி.முத்தையா அவர்களுக்கு இந்தக் கட்டுரை.

கட்டுரையாளர்: தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு),
எழுத்தாளர், திறனாய்வாளர்

கட்டுரை

சு.இராமசுப்பிரமணியன்
srsthovalai@gmail.com

ஏறு தழுவல்!

தமிழினத்தின் வீரம்செறிந்த கலாச்சாரம்

மொழி என்பது, சிலர் நினைப்பதுபோல், வெறும் தகவல் தொடர்பிற்கான கருவிமட்டுமே அல்ல. அது ஓர் இனக்குழுவிற்கானக் கலாச்சாரம், பண்பாட்டின் வேர். மொழியைக் காப்பதும், இனத்தைக் காப்பதும், அவைசார்ந்த கலாச்சாரம், பண்பாட்டைப் பேணிக் காப்பதும், மொழிவெறியோ அல்லது இனவெறியோ ஆகாது. தனது கலாச்சாரம், பண்பாட்டை இழக்கும் எந்த இனமும், சுயமிழந்து அழிந்துபோகும்.

ஐந்து ஆண்டுகள் முடிந்துவிட்டன.என்றாலும்,சல்லிக்கட்டுத்தடையை உடைத்த, 2017-மெரினாப்போராட்டம் பசுமையாக நம் நினைவுகளில் நிறைந்திருக்கிறது.

இந்தியதேசிய விடுதலைக்குப் பின்பான தமிழ்நாட்டின் வரலாற்றில், , 1965-இல் நடந்த மொழிப்போருக்குப் பிறகான காலகட்டத்தில், சாதிகடந்து, மதம்கடந்து, தன்னெழுச்சியாக, 2017-ஜனவரியில் இளைஞர்கள், சென்னை மெரினா கடற்கரையில் தமிழ்இனமாகக்கூடி, அதனை மாபெரும் போராட்டக்களமாக மாற்றியதை உலகமே பார்த்து வியந்தது. அதன் தாக்கம் புலம்பெயர் தமிழர்கள் வாழும் வெளிநாடுகளுக்கும் நீண்டது.

அது, சல்லிக்கட்டுத்தடையை உடைத்த வீரம்செறிந்த போராட்டம். ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் குடும்பம்குடும்பமாக மெரினாவில் கூடி, அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக நடத்திய அமைதிவழிப் போராட்டம். குறிப்பிட்ட தலைமை ஏதுமின்றி நடைபெற்றப் போராட்டம். தலைமையற்ற போராட்டங்கள் வெற்றிபெறாது, குழப்பத்திலேயே முடியும் என்றும் சில அரசியல் தலைவர்கள் பேசினர்.. ஆனாலும், அதுவே அதன் வெற்றிக்குக் காரணமாகவும் அமைந்தது.

அமைதிவழிப் போராட்டங்கள் சுமுகமாக வெற்றிபெறக்கூடாது என்பதில் கவனம்கொண்ட அரசும் அதிகார வர்க்கமும், போராட்டத்தின் இறுதி நாட்களில், போராட்ட களத்திலிருந்த இளைஞர்களை ஓடஓட விரட்டி அடித்துத் துவைத்தது. காவல்துறையினரால் போராட்டக்காரர்கள் கடலுக்குள் விரட்டப்பட்டபோது, கட்டுமரங்களில் உணவும், தண்ணீரும் கொண்டுவந்து கொடுத்தவர்கள் இதயத்தில் ஈரம்கொண்ட மீனவர்கள். ‘ஒதுங்குவதற்கு’ இடமின்றி தவித்தப்பெண்களுக்கு, தங்கள் இல்லங்களில் இடம்கொடுத்து மனிதம் என்றால் என்ன என்று உணர்த்தினர் மீனவப்பெண்கள். இப்படி, போராட்டக்காரர்களுக்கு உறுதுணையாக

இருந்ததால், மீனவமக்களையும் தாக்கி, அவர்களது உடைமைகளையும் தீயிட்டுக்கொளுத்தி, அதிகாரவர்க்கம் தனது வெறியை தீர்த்துக்கொண்டதன் பிறகே போராட்டம் முடிவுக்கு வந்தது. அது அன்றைய ஆட்சியாளர்களுக்கு, வரலாற்றில் நீங்காத கரையாகப் படிந்தது..

ஏதோ ஓரிரு இடங்களில் நடைபெறும் சல்லிக்கட்டுக்கு ஆதரவாக ஏன் தமிழகம் முழுவதிலிருந்தும் இளைஞர்கள்வந்து மெரினாவில் ஒன்றுகூடினார்கள் என்னும் கேள்வி இயல்பாகவே எழும். சல்லிக்கட்டு என்பது, வெறும் விளையாட்டு அல்ல. போட்டி அல்ல, பொழுதுபோக்கும் அல்ல. அது, பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்துவரும், உலகின் மூத்த இனங்களில் ஓர் இனமானத் தமிழ் இனத்தின் கலாச்சாரமும், பண்பாடும் ஆகும்..

சல்லிக்கட்டுக்கு எதிரான தடை என்பது, அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் 'அந்நியர்கள்' தமிழ்க்கலாச்சாரத்தின் மீது வலிந்து நிகழ்த்திய பண்பாட்டுப் படையெடுப்பாகும். தமிழ்க்கலாச்சாரத்தின்மீது ஏவப்பட்டத் தடையை உடைப்பதுதான், மெரினாவில் கூடிய இளைஞர்களின் உண்மையான நோக்கமாகும்.

இன்று நாம் 'சல்லிக்கட்டு' என்று பெயரிட்டு அழைக்கும் மாடுபிடி நிகழ்வு, அன்றைய நாளில் 'ஏறு தழுவல்' எனப்பட்டிருக்கிறது. அதற்கான சான்றுகள், கல்வெட்டுகளாக, சிற்பங்களாக ,சங்க இலக்கியங்களில் பாடல்களாக, தொன்மங்களாக, செவிவழிச்செய்திகளாக நமக்குக் கிடைக்கின்றன.

பழந்தமிழ் இலக்கியங்களில் ஏறுதழுவல்

சங்க இலக்கியங்களில், அகஇலக்கியமும், தொகைநூலுமானக் கலித்தொகையில் முல்லைக்கலிப் பாடல்களில் ஏறுதழுவல் பற்றிய செய்திகள் மிகச்சிறப்பாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அன்றைய தமிழ்நிலப்பரப்பை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்துவகைத் திணைகளாகப் பிரித்து, மக்களின் வாழ்வுமுறைகளை விவரிப்பதாக, சங்க இலக்கியங்கள் அமைந்திருக்கின்றன. கால்நடைகள் ஐந்து நிலங்களிலும் வளர்க்கப்பட்டாலும், அதிக எண்ணிக்கையிலான ஆடு மாடுகளை வளர்ப்பதற்கு ஏற்ற மேய்ச்சல்நிலமாக, காடும், காடுசார்ந்த நிலப்பகுதியான முல்லைநிலமும் இருந்திருக்கிறது. ஏறுதழுவல் என்னும் வீரவிளையாட்டு, முல்லைநிலம்சார்ந்து முதன்மைபெற்று, கலாச்சாரமும் ஆகியது இயல்பான ஒன்றுதான்.

கலித்தொகையில், முல்லைத்திணையில் வரும் முதல் ஏழு பாடல்கள் அன்றைய ஏறுதழுவலை மிகத்தெளிவாகவும், சிறப்பாகவும் விவரிக்கின்றன. அவற்றை வாசிக்கும்போது, ஏறுதழுவலை ஏன் கலாச்சாரம் என்று சொல்கிறோம் என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது.

சங்ககாலத்தமிழகத்தில், ஒருவருக்குச் சொந்தமான ஆநிறைகளின் எண்ணிக்கை அவரது செல்வச்செழுமையின் குறியீடாகக் கருதப்பட்டிருக்கிறது. அதன்பொருட்டு, மற்றவர்களின் ஆநிறைகளைக் கவர்தலும், அதன்காரணமான பொருதலும் நிகழ்ந்திருக்கிறது.

ஆநிறைகளைக் கவர்ந்துசெல்வதற்காக நிகழ்ந்த போர்கள், 'வெட்சிப்போர்கள்' ஆநிறைகளைக் கவர்ந்துசெல்வதற்காகப் போரிடுபவர்கள் 'வெட்சி மறவர்கள்' ஆநிறைகளின் சொந்தக்காரர்களான ஆயர்கள், அவற்றைக் கவர்ந்துசெல்பவர்களிடம் இருந்து காப்பதற்காக, அல்லது கவர்ந்து செல்லப்பட்ட ஆநிறைகளை மீட்பதற்காக நிகழ்த்தியப் போர்கள் 'கரந்தைப்போர்கள்'.

புறத்திணைகள்பற்றிய பழம்பாடல் ஒன்றும் இதனை வெளிப்படுத்துகிறது.

"வெட்சி நிரை கவர்தல், மீட்டல் கரந்தையாம்.
வட்கார் மேல் செல்வது வஞ்சி, உட்காது
எதிர் ஊன்றல் காஞ்சி, எயில் காத்தல் நொச்சி,
அது வளைத்தல் ஆகும் உழிஞை. அதிரப்
பொருவது தும்பையாம், போர்க்களத்து மிக்கோர்
செரு வென்றது வாகையாம்."

ஆயர்கள், ஆநிறைகளுக்குச் சொந்தக்காரர்கள். அவர்களது ஆநிறைகளைக் காப்பதற்காகப் போரிட்டவர்கள், 'வன்னி மறவர்கள்' எப்போதும் அவர்களைச் சார்ந்திருப்பதைத் தவிர்ப்பதற்காக, ஆயர் குடியினர் தங்களது ஆயர்குலத்து இளைஞர்களுக்கும் போர்ப்பயிற்சி கொடுத்திருக்கிறார்கள். அதன் ஒரு பகுதியே ஏறுதழுவல் என்பது சில தமிழ் அறிஞர்களின் பார்வையாக உள்ளது.

கன்னிப்பெண்கள் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுள் ஒருத்தி, இரவில்மின்னும் விண்மீன்களுக்கு இடையே ஒளிரும் முழுநிலவுபோன்ற அழகுடையவளாக மிளிர்கின்றாள். அவளை நோக்கும் தலைவன், தனது பாங்கனிடம், " எனது உயிரைப்பிடுங்கித் தன்உடலுக்குள் செருகிக்கொண்ட இவள் யாரடா?: என்று வினவுகிறான். அந்தக்கேள்விக்குப் பதில்சொல்லும் பாங்கன் இப்படி உரைக்கிறான்.

"ஓஓ! இவள், 'பொரு புகல் நல் ஏறு கொள்பவர் அல்லால்
திரு மா மெய் தீண்டலர்' என்று கருமமா
எல்லாரும் கேட்ப, அறைந்து அறைந்து, எப்பொழுதும்
சொல்லால் தரப்பட்டவள்."
(முல்லைக்கலி, பாடல்-2; வரிகள் 9 -12)

ஏதோ ஓர் ஏறு அல்ல, சினந்து சீறும் நல் ஏறைத் தழுவும் வீரனை அல்லாது வேறு ஒருவனது மெய்யைத் தீண்டமாட்டேன் என்று பலரும் அறியச் சூளுரைத்திருக்கும் தலைவி என்று சொல்கிறான் பாங்கன்.

அதனைக் கேட்டத் தலைவன், தான் அதற்கு உடன்படுவதாக அந்தப்பெண்ணின் பெற்றோருக்குச் சொல்லி அனுப்புகிறான். ஏறுதழுவல் நிகழ்கிறது. ஏறுதழுவலில், நல்ஏற்றைத்தழுவி,, அதனைவென்று தான் விரும்பியப் பெண்ணை மணமும் புரிகிறான், தலைவன்.

ஏறுதழுவலுக்காக, ஏறுகள் தொழுவத்திற்குள் அடைக்கப்படுகின்றன.கட்டுடலும்,வீரமும்கொண்ட இளைஞர்கள் ஏறுதழுவலில் கலந்துகொள்ள வருகின்றனர். அப்படி ஏறுதழுவ வரும் வீரர்கள், கொன்றை, காயா, வெட்சி, பிடவம், தளவு (முல்லை), குல்லை, குருந்தம், கோடல், பாங்கர், என்று பலவகையான மலர்களால் தொடுக்கப்பட்டக் கண்ணிகளை அணிந்து வருகின்றனர். (முல்லைக்கலி பாடல் 3 ; வரிகள் 1-4). இது இன்று நம் விளையாட்டுவீரர்கள் அணியும் சீருடைபோல, அடையாளப்படுத்தலாக இருந்திருக்குமோ என்னும் ஐயத்தை எழுப்புகிறது.

முல்லைக்கலி பாடல்கள்வழியே, ஏறுதழுவும் காட்சிகளை நம் மனக்கண்ணால் பார்க்கமுடிகிறது. பரண்கட்டி, ஏறுதழுவலில் இளைஞர்களின் வீரத்தைக் கண்டுகளிக்கும் இளம் மங்கையர்களின் ஆரவாரத்தையும், அவர்களிடையே நிகழும் உரையாடலையும், கேட்கமுடிகிறது..

"முல்லைக்
கோட்டம் காழ் கோட்டின் எடுத்துக் கொண்டு, ஆட்டிய
ஏழை இரும் புகர் பொங்க, அப் பூ வந்து என்
கூழியுழ் வீழ்ந்தன்று மன்"
(முல்லைக்கலி, பாடல் 7; வரிகள்,7 -10)

ஏறுதழுவும் கட்டிளங்காளை. ஒருவனது குடுமியை, ஏறு குத்தியதில், வீரனது குடுமியில் முடிந்திருந்த முல்லைக்கண்ணி பறந்துவந்து ஏறுதழுவல் பார்த்துக்கொண்டிருந்த தலைவியின் கூந்தலில் வந்து விழுகிறது. அந்த தெய்வமே வந்து, தனக்கான ஆண்மகனை அடையாளம் காட்டிவிட்டதாக எண்ணிய தலைவி மகிழ்ந்திருக்கிறாள். அந்தக்கணமே அவன்மீது காதல்கொள்கிறாள். ஆனாலும், தாய் என்ன சொல்வாளோ என்னும் அச்சமும் கூடவே வருகிறது. அதனைத்தொடர்ந்து, தலைவிக்கும், தோழிக்கும் இடையில் நடைபெறும் உரையாடல் சுவை மிகுந்தது.

தலைவி: கொலையேறு குத்தியதால், அவனது குடுமியில் முடிந்திருந்த முல்லைக்கண்ணி என் கூந்தலில் வந்து வீழ்ந்தது. அதனை நான் எனது கூந்தலில் விருப்புடன் முடிந்துகொண்டேன். வீட்டுக்குச்சென்றதும் அதனைப்பார்க்கும் தாய் கேட்டால் நான் என்னடி சொல்வது?

தோழி: அந்தப் பூ, உன் காதலின் அடையாளம்தானே?

தலைவி: 'என்ன பூ முடிப்பதென்றுகூட தெரிந்துகொள்ளாத அளவிற்கு, அறியாச்சிறுமியா இவள்? எவனோ ஒருவன் தொடுத்த கண்ணியை முடித்தாளோ 'என்று தாய் கடிந்துகொண்டால் என்னடி சொல்வது?

தோழி: உன் பிரச்சினைக்கு அப்போதே தீர்வு கிட்டிவிடும்.

தலைவி : அது எப்படி என்று சொல்லேண்டி.

தோழி: அவன் ஓர் ஆயர் மகன். நீ ஓர் ஆயர் மகள். அவன் உன்னை விரும்புகிறான். நீயும் அவனை விரும்புகிறாய். இதில் தாய் மறுத்துச்சொல்ல என்ன இருக்கிறது?

தலைவி: உன்னைப்போலவே என் தாயும் எண்ணினால்தானே அப்படி நிகழும்.

(இதற்கிடையில், இந்தச்செய்தி தலைவியின் வீட்டிற்கும் தெரிந்துவிடுகிறது.)

தோழி: 'ஏறு குத்தி வீசிய பூ உன் கூந்தலில் வந்து விழுந்தது தெய்வச்செயல் என்று கருதி, உனது தந்தையும் தமையன்மார்களும் உன்னை உன் காதலனுக்கே மணம் செய்துகொடுக்க முடிவுசெய்துவிட்டனராம்' என்று தோழி உரைப்பதோடு அந்த உரையாடல் முடிவுக்கு வருகிறது. மாத்திரமல்ல, ஏறுதழுவல் எப்படிக் கலாச்சாரம் ஆகிறது என்பதையும் உணர்த்துகிறது. (முல்லைக்கலி, பாடல் 7, வரிகள் 11 -34)

ஏறுதழுவலை, பரண்மீது நின்று தலைவியும் தோழிகளும் காண்கின்றனர். ஒவ்வொரு காட்சியாகத் தோழி, தலைவிக்கு உரைப்பதாகப் பாடல்கள் காட்சிப்படுத்துகின்றன.

ஒரு வீரனை, ஏறு ஒன்று வயிற்றில் குத்தியதில் அவனது குடல் அந்தக் காளையின் கொம்புகளில்

சுற்றிக்கொண்டது. அந்த நிலையிலும், அஞ்சாது அதன் முன்சென்று, நின்று குடலை எடுத்துத் தன் வயிற்றிற்குள் வைக்கும் காட்சியைத்தோழி, தலைவிக்குக் காட்டுகிறாள். சிவந்த நூற்கழியை ஒருவன் தனது இரண்டு கைகளாலும் பிடித்துக்கொள்ள, வேறு ஒருவன், அந்நூலை மூன்றாகத் திரித்து, நூற்பவனைப்போல அக்காட்சி இருந்ததாக ஒரு உவமையும் சொல்லப்படுகிறது. பஞ்சிலிருந்து நூல் நூற்று, அந்த நூலைக் கயிறாகத் திரித்துப் பயன்படுத்திய வரலாறும் புரிகிறது.

"கோட்டோடு சுற்றிக் குடர் வலந்த ஏற்றின் முன்,
ஆடி நின்று, அக்குடர் வாங்குவான் பீடு காண்,
செந்நூற் கழி ஒருவன் கைப் பற்ற, அந் நூலை,
முந் நூலாகக் கொள்வான் போன்ம்."

(முல்லைக்கலி. பாடல்-3; வரிகள், 28-31)

ஏறுதழுவல் நிகழும் புலத்தில், எருதுகளால் குத்தித் தோண்டி எடுக்கப்பட்ட வீரர்களின் குடல்களைப் பருந்துகள் கவர்ந்துசெல்கின்றன. உயரத்தில் பறக்கும் பருந்துகளின் வாயிலிருந்து தவறிக் கீழே விழும் குடல்கள், ஆல் மற்றும் கடம்ப மரங்களின்மீது விழுந்துகிடக்கின்றன. அந்தக்காட்சி, அம்மரங்களின் அடியில் உறைந்திருக்கும் தெய்வங்களுக்கு சார்த்தப்பட்டு, பின் அவற்றை எடுத்து மரங்களின்மீது வீசப்பட்ட மலர்மாலைகள்போல இருந்திருக்கிறது.

"ஏறு தம், சோலம் செய் மருப்பினால் தோண்டிய வரிக் குடர்
ஞாலம் கொண்டு எழூஉம் பருந்தின் வாய் வழீஇ
ஆலும் கடம்பும் அணிமார் விலங்கிட்ட
மாலை போல் தூங்கும் சினை."

(முல்லைக்கலி, பாடல்: 6; வரிகள், 26 – 29)

வீரர்கள். எப்படியெல்லாம் காளைகளை அடக்கினர் என்பதைப் பின்வரும் வரிகள் காட்சிப்படுத்துகின்றன.

"ஆர்பு, உடன் பாய்ந்தார், அகத்து
மருப்பில் கொண்டும், மார்பு உறத் தழீ
எருத்திடை அடங்கியும், இமில் இறப் புல்லியும்,
தோள் இடைப் புகுதந்தும், துதைந்து பாடு ஏற்றும்,
நிரைபு மேற் சென்றாரை நீர் மருப்பு உறச் சாடி,
கொள இடம் கொள விடா நிறுத்தன, ஏறு.."

(முல்லைக்கலி: பாடல்-5; வரிகள்; 29-34)

பல்வேறுவிதத் தோற்றத்தில் இருந்த ஏறுகள் பரந்துவிரிந்த நிலப்பரப்பைக்கொண்ட தொழுவத்தில் சுற்றிவந்தன. தொழுவத்தில் சுற்றிவந்த ஏறுகளைத் தழுவ வீரர்களும் பாய்ந்து சென்றனர். வீரர்களில் சிலர் ஏற்றின் கொம்பைப்பற்றி மார்புடன் தழுவிக்கொண்டனர். சிலர், ஏறுகளின் கழுத்துகளில் இறுகப்பற்றிக்கிடந்தனர். ஒருசிலர், காளைகளின் திமில்கள் முறியும்படி, அவற்றை இறுகப்பற்றியிருந்தனர். எருத்தின் தலையைத் தங்களது தோள்களுக்குள் புகவிட்டு, அவற்றின் கழுத்தை இறுகப்பற்றினர். கொம்புகளால் தங்களது உடல்மேல் ஏற்படும் புண்களைப்பற்றிக் கவலைகொள்ளாமல், வீரர்கள் பல்வேறு விதமாக ஏறுதழுவினர்.

சில ஏறுகள் வீரர்களால் வருத்தமடைந்தாலும், வேறுசில ஏறுகள் வீரர்களை வருத்தமுறச்செய்தன. ஒரு செவலைக்காளை, முதலில் வந்தவனைக் குத்திக் கொன்றுவிட்டு, அடுத்து வருவது யார் என்று சவால் விடுவதுபோல் பார்க்கிறது.

"ஏறு
கொள்வாரைக் கொள்வாரைக் கோட்டுவாய்ச் சாக்குத்தி
கொள்வாப் பெறாஅக் குரூஉச் செகில் காணிகா"

(முல்லைக்கலி, பாடல் 5, வரிகள் 34,35,36)

செங்காரி என்னும் காளை, தன்னைத் தழுவ வந்தவனைக் குத்திக்கொன்று, அவனது உடலைத் தனது கொம்புகளில் தூக்கிச் சுறன்றாடுகின்றது.

"பாடு ஏற்றவரைப் படக் குத்தி, செங் காரிக்
கோடு எழுந்து ஆடும் கண் மணி காணிகா"

(முல்லைக்கலி: பாடல்-5, வரிகள்:39,40)

ஏறுதழுவலில், பல இளைஞர்கள் படுகாயமடைவதோடு, சிலர் உயிர் துறப்பதும் ஒருபுறம் நிகழ்ந்தாலும், சில வீர இளைஞர்கள் தங்களது உடல் வலிமையாலும், மன வலிமையாலும், ஏறுதழுவும் முறை அறிந்தும், சில ஏறுகளை உடல் வருத்துகின்றனர். அதனைக் காணப்பொறாத எருதுகளின் சொந்தக்காரர்கள் வருந்துவதோடு, அந்த இளைஞர்கள் மீது பகையும் கொள்கின்றனர்.

"எருத்தொடு இமிலிடைத் தோன்றினன்; தோன்றி
வருந்தினான் மன்ற, அவ் ஏறு
ஏறு எவ்வம் காணா எழுந்தார் – எவன்கொலோ
ஏறு உடை நல்லார் – பகை?

(முல்லைக்கலி, பாடல்-2; வரிகள் 26-29)

கொல்ஏறு தழுவல்:

கள்வர்களிடமிருந்து, ஆநிறைகளைக் காப்பதற்காக, ஆயர்கள் சில ஏறுகளுக்கும் பயிற்சி கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பயிற்சிபெற்ற ஏறுகள் புலியைக்கூடக் கொல்லும் ஆற்றல்மிகுந்தவையாக இருந்திருக்கின்றன. அவை 'கொல்ஏறுகள்' என்று அழைக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்டக் கொல்ஏறுகளைத்தழுவும் வீரர்களையேப் பெண்கள் விரும்பி மணமும் முடித்திருக்கின்றனர்.

"கொல் ஏற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும்
புல்லாளே, ஆய மகள்"

(முல்லைக்கலி பாடல் 3; வரிகள் 63,64)

பயிற்சிபெற்றக் கொல் ஏற்றின் கொம்பைக்கண்டு அஞ்சுவானை, ஆயர் மகள் இப்பிறவியில் மட்டுமல்ல, அடுத்துவரும் பிறவியிலும் மணம்முடிக்க மாட்டாள்.

"அஞ்சார் கொலை ஏறு கொள்பவர் அல்லதை
நெஞ்சிலார் தோய்த்தற்கு அரிய- உயிர்துறந்து
நைவாரா ஆய மகள் தோள்
வளியர் அறியா உயிர், காவல்கொண்டு
நளிவாய் ஆய மகள் தோள்.
விலை வேண்டார், எம் இனத்து ஆயர் மகளிர்–
கொலை ஏற்றுக் கோட்டிடை, தாம் வீழ்வார் மார்பின்
முலையிடைப் போல புகின்"

(முல்லைக்கலி பாடல் 3; வரிகள், 65 – 72)

இப்பாடல் வரிகளில் மூன்று செய்திகள் உள்ளன.

ஒன்று, காற்றுபோல உயிர் பிரிந்துவிடும் என்னும் வாழ்வியல் உண்மையை அறியாமல், கொல்ஏறு தழுவ அஞ்சுபவர்களை ஆயர்மகள் தோள்கள், காமம் மிகுந்தாலும் தழுவமாட்டார்கள் என்பது.

இரண்டு, கொல்ஏற்றின் கொம்புகளுக்கு இடையில், காதலியர் முலையிடைப் புகுவதுபோலப் புகுந்துசெல்லும் ஆடவரையே, ஆயர்மக்கள் தங்களது மகளுக்கேற்ற மணமகனாகக் கொள்வார்கள்.

மூன்று, ஆண்கள்தான் பொருள்கொடுத்துப் பெண்ணை மணம்பேசி முடித்திருக்கின்றனர் என்பதை, கொல்ஏற்றைத்தழுவியவனுக்குப் பெண்ணை மணமுடித்துக்கொடுக்க ஆயர்கள், ‘முலை விலை வேண்டமாட்டார்கள்’ என்னும் செய்தி உணர்த்துகிறது.

ஏறு தழுவலின்போது, கொல்ஏறு ஒன்று தனது கொம்புகளால் வீரன் ஒருவனின் உடலைக் குத்திக் கிழித்துவிடுகிறது. அதனைப் பார்க்கும் அவனது காதலி, தனது காதலன் உடலிலுள்ள புண்களின்மீது முலைகளால் முயங்கிமுயங்கி, ஒற்றிஒற்றிப் பொதிந்து, அவனுக்கு ஆறுதலை அளிக்கலாம் என்று தனது தோழியிடம் கூறுகிறாள்.

“அன்புறு காதலர் கை பிணைந்து, ஆச்சியர்
இன்புற்று அயர்வர், தழூஉ
முயங்கிப் பொதிவேம், முயங்கிப் பொதிவேம்
முலை வேதின் ஒற்றி, முயங்கிப் பொதிவோம்
கொலை ஏறு சாடிய புண்ணை – எம் கேளே”
(முல்லைக்கலி பாடல் 6; வரிகள், 32-36)

ஏறுதழுவலில் ஆற்றலும், ஆர்வமும் உடைய ஒருவன், ஏறுதழுவும் முறையறியாது, ஓர் ஏற்றைத் தழுவச் செல்கையில் அந்த ஏறு தூக்கி வீசியதில் கீழே வீழ்ந்துவிடுகிறான். எப்படி எழவேண்டும் என்பதும் அவனுக்குத் தெரியவில்லை. விழுந்துகிடக்கும் வீரனைக் கிட்டநின்று பார்க்கும் அந்த ஏறு அவனை மீண்டும் கொம்புகளால் குத்தாமல் விட்டுச்செல்கிறது. அந்த செயல், போர்க்களத்தில் வாள் எல்லையில் அகப்பட்ட வாளற்றவீரனை, அவன் தனக்குச் சமானவன் அல்ல என்று கொல்லாமல் விட்டுச்செல்லும் போர்மறவனின் செயலை ஒத்ததாகத் தோழி தலைவிக்குச் சொல்கிறாள். போர்க்களத்தில் கையறுநிலையில் இருப்பவனைத் தாக்கக்கூடாது என்னும் தமிழர்களின் போர்அறம், தமிழ்நாட்டு மாட்டுக்கும்கூடத் தெரிந்திருக்கிறது !

“தாள் எழு துணி பிணி இசை தவிர்பு இன்றித் தலைச் சென்று
தோள் வலி துணி பிணி , துறந்து இறந்து எய்தி, மெய் சாய்ந்து,
கோள் வழுக்கித் தன் முன்னர் வீழ்ந்தான் மேல் செல்லாது,
மீளும் புகர் ஏற்றுத் தோற்றம் காண்- மண்டு அமருள்
வாள் அகப்பட்டானை, ஒவ்வான் எனப் பெயரும்
மீளி மறவனும் போன்ம்”
(முல்லைக்கலி பாடல் 4; வரிகள்: 45 – 50)

“முரட்டுத்தனத்தை, வீரம் என்று மரியாதையாகச் சொல்வார்கள்” என்பார் புதுமைப்பித்தன். அதுபோல, ஏறுதழுவலில் வெறும் உடல் வலிமை முரட்டுத்தனமாக இருக்குமே தவிர வீரமாக மாறாது என்பதையே இக்காட்சி எடுத்துரைப்பதாகக் கருதலாம்.

பொதுப்புத்தியில் உறைந்திருக்கும், உடல்வலிமையுள்ள எவரும் ஏறுதழுவலாம், காளையை அடக்கலாம் என்னும் கருத்தையும் இந்தப்பாடல் மறுதலிக்கிறது. உடல் வலிமையும், மனவலிமையும் மட்டுமே ஏறுதழுவலுக்குப் போதுமானவை அல்ல. சிறந்த ஏறுதழுவும் வீரர்களுக்கு, ஏறுகளைப்பற்றிய நுணுக்கங்களும் தெரிந்திருக்கவேண்டும். ஏறுகளோடு, தங்களது வாழ்வைப் பிணைத்துக்கொண்டவர்களுக்கு மட்டுமே அது வசப்படும்..

ஏறுதழுவல் முடிவில் தொழுவத்தைத் திறந்து,

மாடுகள் மேய்ச்சலுக்கு அனுப்பப்படுகின்றன. இளம் மங்கையர், அவரவர் காதலர்களுடன், அடர்மலர்சோலைக்குள் புகுந்து, கரம்கோர்த்து, மெய்யணைத்து, இன்புற்று குரவை ஆடுகின்றனர்.

தலைவி:

“தோழிஇஇ! – ஒருக்கு நாம் ஆடும் குரவையுள், நம்மை
அருக்கினான் போல் நோக்கி, அல்லல் நோய் செய்தல்,
குரூஉக் கண் கொலை ஏறு கொண்டேன், யான் என்னும்
தருக்கு அன்றோ – ஆயர் மகன்?”

தோழி:

“நேரிழாய் ! கோள் அரிதாக நிறுத்தக் கொலை ஏற்றுக்
காரி கதன் அஞ்சான் பாய்ந்த பொதுவற்கே
ஆர்வுற்று, எமர், கொடை நேர்ந்தார்– அலர் எடுத்த
ஊராரை உச்சி மிதித்து……..”

(முல்லைக்கலி பாடல் 4- வரிகள் 69 – 76)

“நாம் அனைவரும் ஒருங்கிணைந்து குரவை ஆடும்பொழுதில், ஆயர் மகன் ஒருவன் நம்மை வருத்தினாற்போல் பார்த்தான் அல்லவா? அவனது அந்த செயலுக்கு, கொல் ஏறு தழுவியதால் வந்த செருக்குத்தானே காரணம்? அவனைத் தழுவாமல் ஓயமாட்டேன்” என்கிறாள் தலைவி.

கொலை ஏறான காரியைத்தழுவி வென்ற பொதுவனுக்கேத் தலைவியை மணம் முடிப்பதாக, அவரது பெற்றோர் முடிவெடுத்துவிட்டதாகத் தோழி மறுமொழி சொல்கிறாள். அந்தச்செயல், தலைவியின்மீது அலர்தூற்றிய ஊரார் உச்சியில் மிதித்தது போன்றது என்று மேலும் சொல்கிறாள் தோழி.

இதற்கு முன்பு நடந்த ஏறுதழுவல்களில், பல இளைஞர்கள் கொல்லப்பட்டிருப்பதை அறிந்திருந்தும், மீண்டும்மீண்டும் ஏறுதழுவுங்கள் என்று இளைஞர்களை ஊக்கப்படுத்தும் ஆயர்கள் மிகவும் அறியாமை உடையவர்களே என்று சொல்லப்படும் நீதி, ஏறுதழுவல் பற்றிய வேறொரு பார்வையையும் முன்வைக்கின்றது.

மடவரே, நல் ஆயர் மக்கள் – நெருநை
ஆடல் ஏற்றெருத்து இறுத்தார்க் கண்டும், மற்று இன்றும்
உடல் ஏறு கோள் சாற்றுவார்”

(முல்லைக்கலி, பாடல்-2; வரிகள் 30-32)

ஏறுதழுவல், இன்று:

அன்று, ஏறு தழுவலுக்கு மட்டுமல்ல, அங்கு நிகழ்வதைக் காண்பதற்கும் நெஞ்சில் உரம்வேண்டும். காரணம், அது இருநாட்டு வீரர்களுக்கு இடையே நிகழும் போர்க்களம்போலவே இருந்திருக்கிறது.

“ஆங்க, ஏறும் பொதுவரும் மாறுற்று, மாறா
இரு பெரு வேந்தரும் இகலிக் கண்ணுற்ற
பொரு களம் போலும் , தொழூஉ.. “

(முல்லைக்கலி பாடல் 5; வரிகள் 47 – 49)

தொழுவில் நிகழ்ந்த ஏறுதழுவல், பாண்டவர்க்கும், நூற்றுவர்க்கும்இடையேநிகழ்ந்தகுருச்சேத்திரம்போல் இருந்ததாக மற்றொரு பாடல் கூறுகிறது.

“பரிபு மேல் சென்ற நூற்றுவர் மடங்க,
வரி புனை வல்வில் அய்வர் அட்ட
பொரு களம் போலும், தொழூஉ”

(முல்லைக்கலி பாடல்-4; வரிகள் 57-59)

ஆனால், இன்றைய சல்லிக்கட்டில், மாடுகளும் அதிகம் வருத்தமுறுவதில்லை, ஏறுதழுவும் வீரர்களும் குருதிசிந்துவதில்லை, உயிர்ப்பலியாவதும் இல்லை. அதற்கேற்றாற்போல், பல சட்டதிட்டங்களும் வடிவமைத்து, செயல்படுத்தப்படுகின்றன. என்றாலும், இன்றும்கூட ஏறுதழுவல் ஓர் வீரச்செயலாகவே நீடிக்கிறது என்பதையும் மறுப்பதற்கில்லை. காரணம், விருப்பம் உள்ள எவரும் ஏறுதழுவலில் ஈடுபட்டுவிட இயலாது என்பதுதான்.

சல்லிக்கட்டில், மாடுகள் வதைக்கப்படுகின்றன என்பதை முன்வைத்து, பீட்டா அமைப்பினர் உச்சநீதிமன்றத்தில் வழக்குத்தொடர்ந்து, சல்லிக்கட்டுக்குத் தடையும் வாங்கினர் என்பதை நாம் அறிவோம். ஆனாலும், அதில் உள்நோக்கம் இருந்தது என்பதும் உண்மை.

காட்டுவிலங்கான யானையைப் பிடித்துவந்து கோயில்களில், இரும்புச்சங்கிலிகளால் கால்களைப்பிணைத்து வருத்துவதுபற்றி பீட்டா அமைப்பினர் கவலைப்படுவதில்லை. வளர்ச்சி என்னும் பேரில் பெருமுதலாளிகள் காட்டை அழித்துத் தொழிற்கூடங்கள், உல்லாசவிடுதிகள் கட்டுவதாலும், ஆன்மிகம் என்னும் போர்வையில் போலிச்சாமியார்கள் வனத்தை ஆக்கிரமித்துக் கட்டிடங்கள் கட்டுவதாலும், கார்பொரேட்டுகள் கல்லூரிகள் கட்டுவதாலும் நீர்நிலைகள் அழிக்கப்படுகின்றன,, யானைகளின் வழித்தடங்கள் மறிக்கப்படுகின்றன. அதனால் துன்புறும் யானைகள் வழிமாறி ஊருக்குள் புகுந்துவிடுவதுபற்றியும் அந்த அமைப்பினர் பேசுவதில்லை என்பதிலிருந்தும் நாம் அவர்களது உள்நோக்கத்தைப் புரிந்துகொள்ளமுடியும்.

மொழி என்பது, சிலர் நினைப்பதுபோல், வெறும் தகவல் தொடர்பிற்கான கருவிமட்டுமே அல்ல. அது ஓர் இனக்குழுவிற்கானக் கலாச்சாரம், பண்பாட்டின் வேர். மொழியைக் காப்பதும், இனத்தைக் காப்பதும், அவைசார்ந்த கலாச்சாரம், பண்பாட்டைப் பேணிக் காப்பதும், மொழிவெறியோ அல்லது இனவெறியோ ஆகாது. தனது கலாச்சாரம், பண்பாட்டை இழக்கும் எந்த இனமும், சுயமிழந்து அழிந்துபோகும்.

செத்த மொழிக்கு உயிரூட்ட சிலர் முயற்சிப்பதையும், பலர் பல செய்தமொழிகளைப் பேணிப் பாதுகாப்பதையும் கண்ட இன்றைய தமிழ் இளைஞர்கள் இயல்மொழியாம் தமிழ்மொழிக்குச் சொந்தக்காரர்களானத் தமிழ் இனத்திற்கு நம்பிக்கையூட்டியதாகவே அவர்கள் நடத்திய 2017, ஜனவரி மெரினாப் போராட்டம். வெளிப்பட்டது. வீரம்செறிந்த அந்தப்போராட்டத்தை நினைவுகூர்வதும், போராட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிசொல்வதும் நம் கடமையும் ஆகும்.

கட்டுரையாளர்: இயற்பியல் பேராசிரியர் (பணிநிறைவு)

தஞ்சாவூர்க் கவிராயர்

பொங்கல் விழா நினைவும் நிஜமும்

வீட்டு முற்றத்தில் பொங்கல் பானைகளை போட்டி போட்டுக் கொண்டு எரிப்போம். பொங்கல் பொங்கி வரும்போது பொங்கலோ பொங்கல் என்று கூவுவோம். பறை தட்டுவோம். வீட்டில் பிறந்த பெண்ணுக்கு சீர்வரிசை கொடுக்கும் பழக்கமும் நகர்ப்புறங்களில் இல்லை. வண்டி கட்டிக் கொண்டு வாழைத்தாரும், கரும்புக் கட்டும் பரிசுப் பணமும் தந்துவிடும் பழக்கம் அற்புதமானது. இப்பழக்கம் மணி ஆர்டரில் சீர் அனுப்பும் பழக்கமாக மங்கிவிட்டது.



மாநகரங்களில் திருவிழாக்கள் வருகின்றன, போகின்றன அவை வந்து சென்றதற்கான சுவடுகளைக் காணமுடிவதில்லை. பொங்கலும் அதற்கு விலக்கல்ல. தமிழர் பண்பாட்டின் அடையாளமாகத் திகழும் பொங்கல் திருவிழாவுக்கு சென்னையில் முக்கியத்துவம் தரப்படுவதில்லை. மாநகர வாழ்வும் வளர்ச்சியும் கிராமங்களைச் சார்ந்து நிற்பினும் உழவுத் தொழிலையும், உழவுப் பண்பாட்டின் விழுமியங்களையும் முதன்மைப்படுத்தும் பொங்கல் திருவிழாவுக்கு சென்னையில் சிறப்பில்லை. இது ஒருவகையான பண்பாட்டு வீழ்ச்சி. மாநகரங்களின் ஆக்டோபஸ் விரல்கள் கிராமங்களையும் தீண்டிவரும் நிலையில் பொங்கல்தரும் உற்சாகம் கிராமங்களிலும் மங்கிவருகிறது.

துள்ளாத மனமும் துள்ளும்:

பொங்கல் என்று சொன்ன மாத்திரத்தில் என் மனம் மகிழ்ச்சியில் துள்ளுகிறது. இது கடந்தகால நினைவுகளில் எழுகின்ற மகிழ்ச்சி. இத்தனைக்கும் தஞ்சை மாவட்டச் சிற்றூரிலிருந்து சென்னைக்குப் புலம் பெயர்ந்து ஏறத்தாழ முப்பது வருடங்கள் ஆகிவிட்டன. மானுட வாழ்வின் கணிசமான காலகட்டத்தை மாநகரில் கழித்திருக்கிறேன். கிராமத்தில் வாழ்ந்தபோது கிடைத்த நினைவுகளை அசைபோடுவதில் ஏற்படும் கிளர்ச்சிக்கு ஈடு இணைகிடையாது.

பொங்கல் வந்துவிட்டதற்கு அடையாளமாக போகிப் பண்டிகையை சென்னைவாசிகள் கொண்டாடுகிற கொடுமையைச் சொல்லவேண்டும். எங்கே பார்த்தாலும் பிளாஸ்டிக் குப்பைகளையும், டயர்களையும் எரித்து புகை மண்டலத்தை உருவாக்கி மூச்சுத் திணறவைக்கும் மாநகரவாசிகள் மீது ஒரு கையாலாகாத கோபம்தான் வருகிறது. பழையன கழித்து புதியன புதுக்கும் மனப் பக்குவம் மறைந்து எரித்தலை முன் நிறுத்தி வாழ்தலைச் சிதைக்கும் வக்கிரப் போக்கு வந்துவிட்டது.

கிராமங்களில் பழங்குப்பைகள், செத்தைச் சருகுகள், பழம்பாய்கள் ஆகியவற்றை எரித்து நம்மைவிட்டு அழுக்கும் குப்பையும் அகன்று விட்டதான உணர்வுடன் எழுகின்ற புகை மூட்டத்தில் பழமைக் குளிர் விலகி புதுமைக் கதிர் துலங்கும் வெம்மையின் கதகதப்பாக விளங்கும் போகிப் பண்டிகை.

குக்கரில் அடங்கும் பொங்கல்:

மாநகரப் பொங்கல் குக்கரில் அடங்கிவிட்டது. குக்கர் சத்தத்துடன் பொங்கலோ பொங்கல் என்று குரல் எழுப்பும் குடும்பங்களும் உண்டு. அவர்களைப் பார்க்க பாவமாக இருக்கும். உழவனின் உழைப்பைப் பறைசாற்றும் சாதனைத் திருவிழாவை வெறும் சடங்காக மாற்றிவிட்டோம். நகரத்துக் கடைகளில் கரும்புக் கட்டுகள் வந்து இறங்குகின்றன. வாழைப் பழங்களும் விற்கப்படுகின்றன. இஞ்சி, மஞ்சள்கொத்து விற்பனையும் அமோகம்தான். குக்கரின் இடுப்பிலே மஞ்சள் கொத்து பார்க்கவே சகிக்கவில்லை.

கதிரவனுக்கு நன்றி:

விளை நிலங்கள் வீடுகட்டும் நிலங்களாக விற்கப்படாத காலத்தில் வாழ்ந்த தலைமுறையினரின் கடைசிக் கண்ணிகள் கழன்று விழுகின்றன. அறுவடை செய்த நெற்பயிற் கட்டுகளை களத்து மேட்டில் குவித்து போரடிக்கும்போது எழுகின்ற வைக்கோல் வாசனை அலாதியானது. அன்று நெற்கதிர்களைத் தூக்கி போரடித்த கைகளை வயல் வஞ்சித்து விட்டது. அன்று கதிரவனுக்கு நன்றி தெரிவிக்க கூப்பிய கரங்கள் பிழைப்புக்காக நகர்ப்புறத்தில் காரையும் மண்ணும் சுமக்கின்றன. காடுவெட்டி நிலம் திருத்தி கழனியில் பணிபுரிந்த உழவர்களை காலம் கட்டிட வேலைச் சித்தாள்களாக மாற்றிவிட்டது.

சூரியனும் சிட்டுக்குருவிகளும்:

சிறு பிராயத்தில் தஞ்சை கிராமம் ஒன்றில் உழவர் பெருங்குடி மக்கள் கூட்டத்தோடு வாழ்கின்ற பேறு எனக்குக் கிடைத்தது. பொங்கல் சமயத்தில் அவர்கள் வீட்டை பூச் செண்டுகளால் அலங்கரிப்பதில்லை. அறுவடை செய்த பொற்கதிர்களின் கரங்களாய் மின்னும் தானியக் கொத்தினை செண்டுபோல் வீட்டு வாசலில் கட்டித் தொங்கவிடுவார்கள். அந்த தானியத்தைக் கொத்தவரும் சிட்டுக்குருவிகள் வீட்டுத் தாழ்வாரத்தில் பறக்கும் எங்கள் வீட்டுக்குப் பின்னால் கண்ணுக்கெட்டிய தூரம் அறுவடை செய்த வயல்கள் பரந்து கிடக்கும். இச்சமயத்தில்தான் பூம் பூம் மாட்டுக்காரர்களும், குறி சொல்பவர்களும் வருவார்கள். அறுவடை செய்த வயல்களில் ஆட்டுக்கிடை போட கீதாரிகள் வருவார்கள். இவர்களின் வருகை பொங்கலை முன்னறிவிப்பதாக இருக்கும்.

அறுவடைத் திருவிழா:

கிரேக்க இதிகாசங்களில் ஞாயிறு வழிபாடு இருந்திருக்கிறது. வேதங்களும், உபநிடதங்களும் சூரியனைப் போற்றி வழிபடுகின்றன. தமிழ்நாட்டு உழவர் ஞாயிற்றின் மக்கள். சிலப்பதிகாரம் ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் என்று மங்கல வாழ்த்தோடு தொடங்குகிறது.

சிற்றூர்ப் பொங்கல் சித்திரங்கள்:

சிற்றூர்ப் பொங்கல் சித்திரங்கள் இன்றளவும் மனதில் நினைவின் வண்ணம் மாறாது உள்ளன. கிராமத்திலுள்ள வீடுகளுக்கெல்லாம் ஒட்டடை அடித்து வெள்ளை பூசுவது கோலாகலமாக நடக்கும். ஏணியில் ஏறி தென்னைமட்டைத் தூரிகையோடு அப்பா மேலே நிற்க கீழிருந்தபடி மகனோ மகளோ சுண்ணாம்பு வாளியை உயர்த்துவார்கள். பாய்களை நனைத்து காயப்போடும் வேலை நடக்கும். திண்ணைச் சுவற்றில் தரையிலிருந்து ஓரடி உயரத்துக்கு காவிப்பட்டைகள் தீட்டுவோம்.

குடிசை வீடுகளின் கூரைகளின் மீது ஏறிப் பூசணிக் கொடிகளில் பூசணிப்பூ பூத்துக்குலுங்கும். அவற்றின் ஊடாக பச்சைக்காய்களும் தென்படும். தெருவில் போடப்படும் கோலங்களின் நடுவே பிடித்து வைக்கப்படும் சாணத்தின்மீது அழகாக பூத்துநிற்கும். பூசணி பூத்துவிட்டால் பொங்கல் பூத்துவிட்டது என்று பொருள். சாணியோடு பூசணிப்பூவை எறிந்துவிட மாட்டார்கள். அப்படியே எடுத்து வறட்டிதட்டி காயவைத்து பொங்கல் அடுப்பில் போடுவார்கள். அடுப்பிலே பற்றிய நெருப்பில் பூசணி மறுபடி மலரும். சூரியனை வரவேற்கும் சுடராக மாறும்.

வீட்டு முற்றத்தில் பொங்கல் பானைகளை போட்டி போட்டுக் கொண்டு எரிப்போம். பொங்கல் பொங்கி வரும்போது பொங்கலோ பொங்கல் என்று கூவுவோம். பறை தட்டுவோம். வீட்டில் பிறந்த பெண்ணுக்கு சீர்வரிசை கொடுக்கும் பழக்கமும் நகர்ப்புறங்களில் இல்லை. வண்டி கட்டிக் கொண்டு வாழைத்தாரும், கரும்புக் கட்டும் பரிசுப் பணமும் தந்துவிடும் பழக்கம் அற்புதமானது. இப்பழக்கம் மணி ஆர்டரில் சீர் அனுப்பும் பழக்கமாக மங்கிவிட்டது.

தோட்டத்தில் விளைந்த காய்கறிகளும் கூடத்து வாழைப்பழத்தாரும் சேர்ந்து ஒரு வாசனை கமழும். வாழைத்தாரிலிருந்து வாழைப்பழங்களைப் பறித்துக் தின்போம். ஒவ்வோர் நாள் கனிதலுக்கும் ஏற்ப அதில் ஒரு சுவை ஏறி இருக்கும். அரும்பைக் கடித்து துப்பிய வெள்ளைச் சக்கைகள் குவிந்து கிடக்கும்.

கொம்பிலே கலை வண்ணம் கண்டார்:

மாட்டுப் பொங்கலின்போது மாடுகளின் கொம்புகளுக்கும் வண்ணம் தீட்டுவார்கள். வண்டியில் பூட்டிய மாட்டுவண்டிகளின் பந்தயம் நடக்கும். பொங்கலன்று தெருவில் சைக்கிளில் வந்து தபால்காரர் நிற்பார். நாங்கள் ஓவென்று கத்திக்கொண்டு ஓடிப்போய் அவர் முன்னால் நிற்போம். அப்பாவுக்கு நிறைய பொங்கல் வாழ்த்துக்கள் வரும். வண்ண வண்ண வாழ்த்து அட்டைகள். பொங்கல் வாழ்த்துக்களை பெறுகிற முகங்களில் எத்தனை பெருமிதம் எத்தனை மகிழ்ச்சி. இப்போதெல்லாம் பொங்கல் வாழ்த்துக்கள் குறுஞ்செய்திகளால் மின்னி மறைகின்றன.

கிராம சேவகர் பாட்டு:

வெள்ளைக் கதர் சட்டையும் வேட்டியுமாக கிராம சேவகர் வருவார். நாமக்கல் கவிஞர் பாடிய உழவர் திருநாள் பாட்டினை அவர் பாட நாங்கள் கோரசாகப் பாடுவோம்.

'உணவுப் பொருள்கள் இல்லாமல்
உயிரோடிருப்பது செல்லாது
உழவுத் தொழிலே உணவுதரும்
உடையும் அதனால் அணிய வரும்
தங்கமும் வெள்ளியும் இருந்தாலும்
தானியம் ஒன்றே விருந்தாகும்'

என்ற நினைவில் நிற்கும் பொங்கல் வரிகளை இன்று நினைத்துப் பார்த்தால் பெருமூச்சுதான் வருகிறது.

கட்டுரையாளர்: எழுத்தாளர்

11 ஆம் ஆண்டில் காக்கை

தொல்லியல்

அப்பணசாமி
jeon08@gmail.com

கீழடி, சிவகளை, ஆதிச்சநல்லூர் ஆய்வு முடிவுகளும் சனாதன ஒவ்வாமையும்

உலகம் முழுவதும் பண்பாட்டுப் பொருளாதார அரசியல் என்பது இன, மொழி, சமூகப்படிநிலை சார்ந்த வெறுப்பு மற்றும் ஒவ்வாமையில் திளைப்பதைப் போலவே தொல்குடி திராவிடப் பண்பாட்டை ஏற்கத் தயங்கும் இந்திய மேட்டிமைச் சமூகம் அல்லது சனாதனம் வரலாற்றின் புதைகுழிக்குள் திராவிடப் பண்பாட்டினை ஆழ்த்திவிடத் துடிக்கிறது. கீழடி அகழ்வாய்வு முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து அண்மைக்காலமாக இந்தப் பண்பாட்டு ஒவ்வாமை அறுவருக்கத்தக்க வகையில் அதிகரித்திருப்பதே இக் கட்டுரைக்கான அடித்தளம். ஒரு விரிவான கட்டுரைக்கான சுருக்கமாக கீழ்க்காணும் கருத்துகளை முன் வைக்கிறேன்.

நான் வரலாற்றியல் மாணவனோ, மானுடவியல் மாணவனோ கிடையாதுதான். அடிப்படையில் இலக்கியவாதியாகத் தொடங்கியவன். எனது இப் பயணத்தைத் துணைக்கண்ட சமூக, பண்பாட்டு அரசியல்கள் தொடர்ந்து தடுத்து, மடை மாற்றியதால் எமது வரலாற்றையும் பண்பாட்டு செல்நெறிகளையும் கற்க வேண்டிய கால நிர்ப்பந்தம் காரணமாகவே வரலாறு வாசிப்பில் ஈடுபட்டவன்.

இந்த வாசிப்பின் விரிவாக்கம் திராவிடப் பண்பாட்டின் அத்துகளையும் வேர்களையும் நோக்கி விரிந்தது. மொழியாகவும் பண்பாடாகவும் வாழ்வியலாகவும் தமிழ் ஈராயிரம் ஆண்டுகளைத் தொடர்ந்து உயிர்த்திருப்பதன் தனித்தன்மையால்தான் திராவிடப் பண்பாடு தொடர்கிறது எனும் புரிதலை அடைய இத் தொடர் வாசிப்பு தேவையாகியது. இத்தகைய நெடுங்கணக்கைக் கொண்ட திராவிடப் பண்பாட்டின் உயிர்ப்பு என்பது மனித குலம் முழுவதுமே மெச்சத் தக்க வரலாற்று உண்மை என்பது விரைவில் நிரூபணமாகலாம்.

இந்த வரலாறு பல நூற்றாண்டுகளாக சனாதன சக்திகளால் மறைக்கப்பட்டு வந்தது. ஆனால், வரலாறு என்பது எப்போதும் மூடிய அறையாகவே இருப்பதில்லை. பொய்களாலும் அதிகாரத்தாலும் வரலாற்றை எக்காலமும் மூடி மறைத்துக்

கொண்டே இருக்க முடியாது.

19 ஆம் நூற்றாண்டில் சங்க இலக்கியங்கள் மீட்கப்படும் முயற்சிகள் தொடங்கிய பின்னர்தன் தமிழ் மொழியின் தொன்மையை தமிழர்களே அறியத் தொடங்கினர் என்பது வரலாற்றின் நகை முரண் ஆகும். மாங்குளம் கல்வெட்டுகூட அதன் காலத்தை கி.மு 3ஆம் நூற்றாண்டு என்று மெல்லிய குரலில்தான் கூறியது. தொடர்ந்து சோழர்கால கல்வெட்டுகளும் பாண்டியர் செப்பேடுகளும் சங்க காலத்தைச் சேர்ந்த மன்னர்களின் பெயர்களை வெளிப்படுத்தியபோது தமிழர்கள் முதன்முறையாக தற்பெருமை கொண்டனர். ஆதிச்சநல்லூரும் கொடுமணலும் கி.மு 800 - 1000 காலகட்டத்திலேயே தமிழ்நிலத்தில் மக்கள் வாழ்ந்ததை அறிவித்தபோது தமிழ்பேசும் நல்லுலகம் தலை நிமிர்ந்தது. இன்னும் ஏராளமான பண்டைய வெளிநாட்டவர் குறிப்புகள் கிரேக்க, ரோம ஆவணங்கள் சங்க கால வணிகர் சமுதாயம் குறித்த சித்திரங்களை வழங்கின. இதனைத் தொடர்ந்து தமிழ் சமூகம் தமது தொன்மை குறித்து உரத்துப்பேசத் தொடங்கியது. குமரிக்கண்டம், லெமுரியா போன்ற கற்பனையும் உண்மையும் கலந்த ஊகங்கள் உருவாகி அறிவியல் அடித்தளங்களை எதிர்நோக்கின.

தமிழன் தமது தொன்மை குறித்து பொதுவெளியில் மேலும் உரத்துக் கூறத் தொடங்கினான். அப்போதெல்லாம் இதெல்லாம் வெறும் தற்பெருமைதானோ என்று சற்று அச்சம் கொள்ளும் வகையில் சனாதன சக்திகளின் எதிர்க்குரல்கள் பலமாக எழுந்தன.

நவீன அறிவியல் துறைகளின் ஊடுருவல் தொல்லியலிலும் வரலாற்று ஆய்வியலிலும் நிகழ்ந்ததைத் தொடர்ந்து திராவிடப் பண்பாடு பண்டைய இந்திய நிலப்பரப்பு முழுவதும் வியாபித்திருந்திருப்பதற்கான சான்றுகள் கிடைக்கத் தொடங்கின. சிந்துவெளி முதல் தமிழகம் வரை தொடரும் பண்பாட்டுக் கூறுகளும் சிந்துவெளி பண்பாட்டுக்கும் சுமேரிய - மொசபடோமிய பண்பாடுகளுக்கும் இடையிலான ஒப்புமைகளும் இதன் உலகளாவிய முக்கியத்துவத்தை வெளிப்படையாக உணர்த்தின. புதைக்கப்பட்ட வரலாற்று விழுமியங்களில் இருந்து கிளைத்தெழும் இவ் உண்மைகள் சனாதன ஆதிக்க சக்திகளுக்குள் பண்பாட்டு வெறுப்பாக, ஒவ்வாமையாகத் திரள்வதில் வியப்பில்லை. அதுவும் மூவாயிரம் ஆண்டுகளாக பண்பாட்டு ஆதிக்கம் செலுத்திவரும் சனாதன ஆதிக்க சக்தி வெறுப்பரசியலைக் கக்குவதிலும் வியப்பில்லை.

அச்சூழலில் கற்கருவிகள் காலத்திலேயே இந்த நிலத்தில் மனிதன் வாழ்ந்ததற்கான தொல்லியல் அடையாளங்கள் மீட்கப்பட்ட போதும் எதிர்க்குரலில் நகைப்பொலி கூடியதே தவிர விரிவான தொல்லியல் ஆய்வுகளின் தேவை உணரப்படவில்லை. இத்தனைக்கும் பண்டைய வாழ்வியலுக்கான வாய்ப்புகள் தமிழ் நிலத்தில் காணப்படுவதைத் தொல்லியல் ஆய்வாளர்கள் அவ்வப்போது வலியுறுத்தியே வந்துள்ளனர்.

கீழடி அகழ்வாய்வின் முடிவுகள் தமிழ் மொழியின் தொன்மை 2600 ஆண்டுகளுக்கு முந்தியது என்று கட்டியம் கூறி இருக்கிறது. நான்காம் அகழ்வாய்வில் வெளிக்கொணரப்பட்ட ஒரு கரிப்பொருள் இத் தொன்மையைத் தாங்கி உலகுக்கு அறிவித்துள்ளது. இப் பொருள் பொதிந்திருந்த அதே மண்ணில் எடுக்கப்பட்ட பல பானை ஓடுகளில் தமிழி எழுத்துகள் காணப்பட்டதால் இதே கால கட்டத்தில் தமிழர்கள் மத்தியில் எழுத்தறிவு பரவலாகப் பரவியிருந்ததைத் தொல்லியலாளர்கள்



ஆய்வுப்பூர்வமாக நிறுவி உள்ளனர். இப்படி ஒரே ஒரு பொருளை மட்டும் ஆய்வு செய்துவிட்டு ஒரு மொழி, சமூகத்தின் தொன்மையை உறுதிசெய்வது சரியா என்று சனாதனத்தின் எதிர்ப்புக்குரல்கள் எழும்பின. ஆனால், இப் பகுதியில் விரிவாக அகழாய்வுகள் மேற்கொண்டால் இத் தொன்மை உறுதிப்படத்தான் செய்யும் என்றும் தமிழ் மொழியின் தொன்மை மேலும் பின்னோக்கிப் பயணிக்கும் வாய்ப்புகளும் உள்ளன என்றும் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இதை மெய்ப்படுத்தும் வகையில் தொடர்ந்து கீழடியில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளும், தற்போது ஆதிச்ச நல்லூர், சிவகளை போன்ற பொருநை ஆற்றங்கரையில் நடக்கும் ஆய்வுகளும் கொற்கை அகழ்வாய்வில் வெளிக்கொணரப்படும் தொல்லியல் எச்சங்களும் கீழடி நான்காவது கட்ட அகழ்வாய்வு அறிக்கையை மேலும், மேலும் உறுதிப்படுத்துகிறது. தமிழ், தமிழன் வாழ்க்கையின்

தொன்மையில் புதிய காட்சிகளை அவிழ்க்கின்றன.

சிவகளையில் காணப்பட்ட உமி நீக்கிய நெல்மணிகள் காலம் கி.மு 1150 என கரிமப்பகுப்பாய்வு கூறுகிறது. அதாவது, பொ.ஆ.மு 1200 காலகட்டத்திலேயே பொருநை ஆற்றங்கரையில் மனிதன் வாழ்ந்ததற்கான சான்றைப் பறை சாற்றின. ஆதிச்சநல்லூர், சிவகளையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட வெண்கல நுண்கலைப் பொருள்கள், இரும்புக்கால நுண் கருவிகள், ஈமத்தாழிகள் இங்கு 3200 ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் வாழ்ந்ததைக் குறிக்கிறது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அடுத்தகட்ட அகழ்வாய்வுகளை அழகன்குளம், கொற்கை, பூம்புகார் போன்ற வரலாற்றுத் தொடக்க கால இடங்களிலும் பட்டரைப்புதூர் போன்ற கற்கால தொல்லிடங்களிலும் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் பண்டைய தமிழ் நிலமான தமிழ்நாடு, புதுவை, கேரளம், கர்னாடகம், ஆந்திரம், தெலுங்கானா ஆகிய மாநிலங்களின் பண்டைய கால தொல் இடங்களிலும் அகலாய்வுகள் விரிவான அளவில் மேற்கொள்ளவேண்டும் என்ற வலியுறுத்தல்கள் எழுந்த வண்ணம் உள்ளன.

சிந்துவெளிப் பண்பாடு திராவிடப் பண்பாடு என்ற கருத்தியலும் சிந்துவெளி எழுத்துகளின் மூதாதை திராவிட மொழி என்ற கருத்தியலும் இதுவரை அறிவியல் பூர்வமாக நிராகரிக்கப்படவில்லை. மேலும், சமசுகிருதத்தின் மூல மொழி அவெஸ்தெ மொழி என ஒப்பீடு மூலம் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது.

இது தமிழ்ச்சமூகம் மத்தியில் முதல் முறையாக நம்பிக்கையை உருவாக்கியுள்ளது. சங்க இலக்கியங்களின் காலம் கி.மு 800 - 1000 வரை முன்னேறும் வாய்ப்புகள் இருப்பதாகவும் கற்கால தொல்லியல் இடங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளும்போது தொன்மையின் தொடர்ச்சி நிறுவப்படலாம் என்றும் ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர். தமிழ்நிலத்தின் ஆதி மனிதர்களுடன், சிந்து வெளியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களின் மரபணுக்கள் எப்போது கலந்தன என்ற புதிர்கள் கூட விடுபடலாம் என்பது பேராசை அல்ல.

இப்படியாக தமிழனின் சிந்தனைகள் சிறகு விரித்துப் பறந்து கொண்டிருக்கும் இதேகாலத்தில் சனாதனக் குரல்களில் சற்று கலக்கம் ஏற்பட்டிருப்பது இயல்பே. குறிப்பாக மரபணு அறிவியலாளர்கள் அண்மையில் வெளியிட்டுள்ள ஆய்வு முடிவுகளும் 30ஆண்டுகள் கடுமையான ஆய்வுழைப்புக்குப் பின்னர் ஆய்வாளர் ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப அண்மையில் வெளியிட்டுள்ள 'ஜர்னி ஆஃப் எ சிவிலைசேஷன்' நூலும், சற்று முன்பாக டோனி ஜோசப் வெளியிட்டுள்ள 'ஏர்லி இந்தியன்ஸ்' நூலும் அவர்களைத் திகைப்படையச் செய்துள்ளது.

சிந்துவெளி மக்களில் ஒரு பிரிவினர் ஆரியர் படையெடுப்பு காரணமாக தெற்கு, கிழக்கு நோக்கி இடம் பெயர்ந்திருக்கலாம் என்பதை பல்வேறு சான்றுகளுடன் இந்த புத்தகங்களும் ஆய்வுகளும் உறுதிப்படுத்த முயல்கின்றன. அதேபோல சிந்துவெளி எழுத்துகள் தமிழின் முன்னோடி, மூதாதை மொழியாக இருக்கலாம் என்பதையும் பல கோனங்களில் ஆய்வு செய்கின்றன. இது போன்ற ஆய்வுகளின் தொடர்ச்சி சனாதனங்களுக்குக் கவலை அளிக்கலாம்.

அதனால்தான் எப்படி இருந்தாலும் தமிழ்மொழி சமஸ்கிருதத்தில் இருந்துதான் பிறந்தது என்ற பழைய பாட்டை மீண்டும் பாடத் தொடங்கியுள்ளார்கள். பழைய கள், புதிய மொந்தை! நவீன புராணிகம்!

தமிழ் மொழியின் தோற்றம் குறித்த எந்த ஆய்வும் சிந்துவெளி எழுத்துகளுக்கும் தமிழுக்கும் தொடர்பு இருப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆனால் இன்னமும் சிந்துவெளி எழுத்துகள் வாசிக்க இயலாமல் இருப்பது குறித்தும் கவனம் செலுத்தாமல் தொடங்கப்பட இயலாது. மேலும் இவை குறித்த அண்மைக்கால ஆய்வுகள் குறித்தும் அறிந்து கொள்வது அவசியமாகிறது. ஆனால், இத்தகைய அறிவியல் அடிப்படை கொண்ட பிரச்சனைகள் சனாதனவாதிகளின் கவனம் பெற்றதாகத் தெரியவில்லை. புராணிக நம்பிக்கை சார்ந்த வாதங்களையே முன் வைக்கிறார்கள்.

அதேநேரத்தில் சமசுகிருத மொழியின் மூலம் அவெஸ்தெ மொழி என்பது பல்வேறு இலக்கியச் சான்றுகள் மற்றும் தொல்லியல் சான்றுகளுடன் நிரூபணமாகியுள்ளது. அத்துடன் சமசுகிருதம் இந்தியாவில் தோன்றியிருப்பதற்கான வாய்ப்புகள் அறவே இல்லை என்பதும் பல்வேறு அறிவியல் ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், அதை அப்படியே விட்டுவிட்டு இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழ் சமஸ்கிருதம் ஆகிய இரண்டு மொழிகள்தான் மூல மொழிகள் என்பது போல தமிழுக்கும் சமஸ்கிருதத்துக்கும் முடிச்சுப் போட முயல்கிறார்கள்.

காலனிய மொழியில் சொல்வதானால் இந்தியவியல் குறித்த உரையாடலின் அடித்தளம் மூன்று கருத்தியல்கள் ஆகும். ஒன்று. கொல்கொத்தா ஆசியாடிக் சங்க தலைவர் வில்லியம் ஜோன்ஸ் 225 ஆண்டுகளுக்கு முன் பிரகடனம் செய்த இந்திய மூதாதையர் வம்சம் இதுவரை நம்பப்பட்டு வந்ததைப்போல் ஆரியர்கள் அல்ல; அவர்கள் திராவிடர்களாக இருக்கலாம் என்பதாகும். இரண்டாவது கால்டுவெல் அவர்கள் திராவிடப் பண்பாடு குறித்து பிரகடனம் செய்த ஒப்பியல்

ஆய்வு ஆகும், அடுத்ததாக மார்ஷல் அவர்கள் சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகமாக இருக்கலாம் என்று ஊகித்து அறிவித்தது ஆகும். இந்த மூன்று கருத்தியல்களையும் ஏற்காமல் அல்லது மறுக்காமல் இந்தியத் துணைக்கண்ட மானுடவியல், வரலாற்றியல் குறித்த உரையாடலைத் தொடங்க இயலாது. மேலும், தென்னிந்திய மொழிகளின் (திராவிட மொழிக் குடும்பம்) தாய் மொழி தமிழ் என்பதையும் சமஸ்கிருதம் உள்ளிட்ட பண்டைய வட மொழிகளின் வேர்ச்சொற்களுக்கும் தமிழ் வேர்ச் சொற்களுக்குமான பாரதூர வேற்றுமை குறித்தும் எல்லிஸ் அவர்கள் மிகவும் ஆய்வுப்பூர்வமாக 200 ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளார். கால்டுவெல் செல்வாக்கைக் குறைப்பதற்காக எல்லிஸ் அவர்களின் இந்த ஆய்வுகளை பரப்புரை செய்தவர்களே இந்த சனாதனக் கூட்டம்தான்.

இன்னும் விரிவாகக் கூற வேண்டுமானால் சிந்துவெளிப் பண்பாடு திராவிடப் பண்பாடு என்ற கருத்தியலும் சிந்துவெளி எழுத்துகள் மூதாதை திராவிட மொழி என்ற கருத்தியலும் இதுவரை அறிவியல் பூர்வமாக நிராகரிக்கப்படவில்லை. மேலும், சமசுகிருதத்தின் மூல மொழி அவெஸ்தெ மொழி என ஒப்பீடு மூலம் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது.

ஆனால், நவீன சனாதனிகள் தமிழி குறிகளையும் சமசுகிருத மொழியையும் ஒப்பீடு செய்ய முயல்கிறார்கள். சற்றும் பொருந்தாத முறையில் ஊகங்களை உருவாக்குகிறார்கள். ஆனால், சமசுகிருத்ததின் மூல மொழியையும் சமசுகிருதச் சொற்களின் மூலம் அவெஸ்த மொழியின் வேர்ச் சொற்களுடன் ஒப்புமை காணப்படுவதையும் காண மறுக்கிறார்கள். ஏற்கனவே, தமிழ் மொழி வேர்ச் சொற்கள் சமசுகிருதத்தில் இல்லை என்பதை எல்லீஸ் ஏற்கனவே ஆய்வுப்பூர்வமாக நிறுவி உள்ளார். இருப்பினும் தமிழ் ஒவ்வாமையாளர்கள் இதைக்காண மறுக்கிறார்கள்.

இவர்கள் தமிழி - சமசுகிருத மொழிகளை ஒப்பீடு செய்வது சாத்தியமென்றால் தமிழ் - சமசுகிருதம் - அவெஸ்தெ மொழிகள் ஒப்பீடும் சாத்தியம்தானே! ஏன் இந்த சனாதனிகள் இதில் ஈடுபட மறுக்கிறார்கள்.

எந்த மொழியும் கொடுக்கல் வாங்கல் இல்லாமல் வளர முடியாது. இது தமிழுக்கு மட்டுமல்ல சமசுகிருதத்துக்கும் பொருந்தும். அதற்குப் பல காரணங்கள் இருக்க முடியும். பண்பாட்டுத் தொடர்புகள், வணிகத் தொடர்புகள், இடப்பெயர்வுகள் போன்றவற்றைக் கூறலாம். படையெடுப்புகள் பெரும்பாலும் மொழியை அழிக்கவே முயலும். அப்போது சில கொடுக்கல் வாங்கல்கள் தொடக்க நிலையாக இருக்கலாம். சில நேரங்களில் திருதராஷ்டிர ஆலிங்கனமும் மொழி அழிப்பில் பயன் அளிக்கலாம். தமிழ் சமசுகிருத உறவில் கொடுக்கல் வாங்கல்கள் பரிமாறிக்கொள்வதற்கான வாய்ப்புகள் இருந்திருக்கலாம். அதுவும் சமசுகிருதம் மட்டுமல்ல பாலி,பிராகிருதம் ஆகிய மூன்று வட மொழிகளுடனும் தமிழுக்கு உறவு இருந்திருக்க முடியும்.

இங்கு இதற்கான காலத்தை எவ்வாறு கணிப்பது என்பதும் எது முதலில் இலக்கணம் கண்டது என்பதும் ஆகும். ஒப்பீட்டளவில் பார்த்தால் தமிழ் இலக்கியங்கள் ஓரளவு கால வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. சமசுகிருத இலக்கணம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டு என்று கூறப்படுகிறது. ஆனால் அசோகர் கால பிராமிதான் முதல் வட மொழி எழுத்துச் சான்று. அதற்கு முன்பாக எழுத்துப் பூர்வமாக வட மொழி இலக்கியங்கள் சாத்தியமில்லை. வேதங்கள் வாய்மொழியாக கூறப்பட்டு பின்னர் பொ.ஆ.மு 1 - பொ.ஆ. 4 ஆம் நுற்றாண்டு வாக்கில் தொகுக்கப்பட்டிருக்கலாம். அதன் பின்னரே மகாபாரதம் போன்றவையும் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று வரலாற்றாளர்கள் கூறுகிறார்கள். தொல்காப்பியரின் காலம் இன்னமும் சரியாக வரையறைப்படுத்தப் படவில்லை. தற்போது பொ.ஆ.மு 3 - பொ.ஆ. 4 ஆம் நூற்றாண்டுவரை கணிக்கப்படுகிறது. ஆனால் அண்மைய அகழ்வாய்வு முடிவுகள் மறு உறுதி செய்யப்படுமானால் தொல்காப்பியத்தின் காலம் இன்னும் பின்னோக்கி பொ.ஆ.மு. 6ஆம் நூற்றாண்டுவரைகூட செல்லலாம்.

ஆனால், இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் சனாதனிகள் வட மொழி இலக்கணங்களை தமிழ் மொழி இலக்கண நூல்களுடன் ஒப்பீடு செய்கிறார்கள்.

மேலும், தமிழ் மொழியில் எழுத்துகள் உறுதியாக ஒலிக்கப்படுவது போல சமசுகிருதத்தில் இல்லை என்று மொழியியலாளர்கள் கூறுகின்றனர். பல எழுத்துகளுக்கு உறுதியான ஒலியன் இல்லாததால் ஏற்படும் குழப்பம் குறித்து பல ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். மேலும், தமிழ்மொழி என்பது இலக்கணம். இலக்கியங்கள், உரைகள் என சீரான தன்மை கொண்டது. ஆனால், சமசுகிருதம் என்பது பேச்சு மொழியாக இருந்து பாலி, பிராகிருத மொழிகளுடன் கலந்து பின் திருத்தம் பெற்ற மொழி என்பது அனைவரும் அறிந்ததே. இவ்வாறு சமசுகிருத மொழி திருத்தமும் சீர்மையும் செவ்வியல் தன்மையும் பெற பல நூற்றாண்டுகள் காத்திருந்திருக்கலாம். அது பொ.ஆ.மு 2ஆம் நூற்றாண்டு முதல் பொ. ஆ. 4ஆம் நூற்றாண்டுவரை என கணிக்கப்படுகிறது. எப்படி இருந்தாலும் சமசுகிருத மொழியின் செவ்வியல் உச்சம் பொ.ஆ 4ஆம் நூற்றாண்டு என்பது அனைவரும் ஏற்கக்கூடியது.

இந் நிலையில் குறைந்தது 200 ஆண்டுகள் இடைவெளி கொண்ட இரண்டு மொழிகளை சமமாக ஒப்பிடுவதும், குறைந்தது 200 ஆண்டுகள் பிந்தைய மொழியில் இருந்து 200 ஆண்டுகள் மூத்த மொழி பிறந்தது என நிறுவ முயல்வதும் பித்தலாட்டம் என்பது தவிர ஒன்றுமில்லை.

காரணம், அண்மைக்காலமாக தமிழின் தொன்மை அறிவியல் ஆய்வின் அடிப்படையில் நிறுவப்பட்டு வருவதால் கையறு நிலையை சனாதன சகதிகள் அடைந்துள்ளதே ஆகும்.

கட்டுரையாளர்: நாடகவியலாளர், பத்திரிகையாளர்

கட்டுரை

ஞா.குருசாமி
jeyaseelanphd@yahoo.in

நீரும் தொல்தமிழரும்

வறட்சி நிலமாகக் கருதப்படும் பாலை நிலத்தில் கூட ஆயர்கள் தம் கைக்கோலாலேயே தோண்டி நீர்நிலைகளை உண்டாக்கி இருக்கின்றனர். சூரியனைக் காண இயலாத மழைக்காலங்களிலும், மேகம் நிறைந்த இரவுப் பொழுதுகளிலும், சிறிய கலத்தின் அடியில் நுண்ணிய துளையை உண்டாக்கி அதில் நீரை நிரப்பி, அத்துளை வழியாக நீர்ஒழுகும் போது கலத்தில் நாழிகைக்கு ஒன்றாக வரையப்பட்ட கோடுகளை எண்ணி நேரத்தை அறிந்திருக்கின்றனர்.

சங்கப் படைப்புகள் இயற்கைப் புனைவு மிக்கவை. நீர் பற்றிய புனைவுகள் அதிகமாகவே நிகழ்ந்துள்ளன. அதில் பெரும்பகுதி வளமைக் குறியீடாகவே காட்டப்பட்டு இருக்கிறது. சங்கச் சமூகத்தில் தேவை நிறைவாக்கம் உழவுத் தொழிலைச் சார்ந்து இருந்ததினால், பொருளாதாரக் கூறுகளுள் மிக முக்கியமான ஒன்றாக நீர் கருதப்பட்டு இருந்திருக்கிறது. இதன் எச்சமே வள்ளுவரை 'சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்'(1031), 'நீரின்றி அமையா துலகு' (20) எனப் பேசவைத்திருக்கிறது. அரசு நிர்வாகத்தில், மக்களின் புழக்கத்தில் நீரின் தேவை, பயன்படுத்தும் முறை, தேக்கிவைக்கும் நுட்பம் ஆகியன தனிநிலையாகவும் உவமையாக்கப் பொருண்மையிலும்சங்கஇலக்கியத்தில் அமைந்திருக்கின்றன.

மன்னனின் நிர்வாகச் செயல் திறங்களுள் நீர் மேலாண்மையும் ஒன்றாக இருந்திருக்கிறது. ஆற்று நீரை வயல்களுக்கு நேரடியாகப் பாசனம் செய்ய உதவியிருக்கிறான். (பொய்கை வாயிற் புனல்பொரு புதவின் - பதிற்.27:9). நீர்ப்பிடிப்பு இல்லாத, ஆற்றுப்படுகை இல்லாத இடங்களில் நீர்நிலைகளை உண்டாக்குதல் மன்னனுக்குக் கடமையாக இருந்திருக்கிறது. நீரையும், நிலத்தையும் பேணியோர் உடம்பையும், உயிரையும் படைத்தவராகக் கருதப்பட்டு இருந்திருக்கின்றனர் (நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு, உடம்பும் உயிரும் படைத்திசினோரே - புறம், 18.20.23).நீர்நிலைகளை அமைத்தவர்கள்

நிலைத்த புகழைப் பெறுவர் என்ற கருத்தாக்கம் நிலவியிருக்கிறது. திருமாவளவன் சோழ மண்டலத்தில் காடுகளை அழித்து வாழிடங்களாக மாற்றிக் குளங்களைத் தூர்வாரியிருக்கிறான். குளங்கள் குன்றுகளைப் போன்று உயரமான கரைகளை உடையதாக இருந்திருக்கிறது (குன்று கண்டன்ன கோட்ட யாவையும், அகம். 42:7). குளக்கரையில் மரங்களை வளர்த்து கரைகளை வலுவுள்ளதாக்கி இருக்கின்றனர். குளங்களின் ஓரங்களில் அழகுக்காகத் தாமரைச்செடி வளர்த்திருக்கின்றனர். (குளன்அணி தாமரைப் பாசரும், கலி 22:15).

கபிலர், பாரியால் அமைக்கப்பட்ட குளங்கள் அவன் இல்லாமையினால் பாழ்பட்டுப் போகும் என வருந்துமிடத்து குளங்கள் மன்னனால் பாதுகாக்கப்பட்டு இருந்திருப்பது தெரிகிறது. நீர் நிலைகளைப் பாதுகாக்க காவலன் இருந்திருக்கிறான். (எறிதிரைத் திவலை-தூஉம் சிறுகோட்டுப் பெருங்குளம் காவலன் (அகம். 252:12-13).இவனை பறையடித்து பணி செய்ய அழைத்திருக்கிறார்கள் (பறைஅறையப் போந்தது வையப் புனல் வையை - 10:7).பாறைகளையும், சிறுமலைகளையும் இணைத்துப் பிறைவடிவில் குளங்களுக்குக் கரையமைத்து இருக்கின்றனர். புதுவெள்ளம் மடைகளை உடைத்துக்கொண்டு செல்லுமானால் அதைஉழவர்களைக்கொண்டு அடைத்திருக்கின்றனர் (போர்த்து எறிந்த பறையால் புனல் செறுக்குநரும் (பதிற். 22:28) வேகமாக வரும் வெள்ளத்தைத் தடுப்பதற்காக 'பதப்பர்'என்னும் மணல் கோட்டையை அமைத்து அது கரையாமல் இருக்க வைக்கோல்புரிகொண்டு மூடியிருக்கின்றனர் (வெண்தலைச் செம்புனல் பரந்து வாய்மிதக்கும், பலசூழ் பதப்பர் பரிய - பதிற். 30:17-18). கரும்புக்கழி கொண்டும் கரையமைத்து இருக்கின்றனர் (வான்பூங் கரும்பின் ஓங்கு மணற் சிறுசிறை - குறுந். 149).

அரணைச் சுற்றி அகழி அமைத்து நீரால் அமைந்த காவலையும் மன்னன் தனக்கென அமைத்துக் கொண்டிருக்கிறான். (நிலவரை இறந்து குண்டுகண் அகழி - புறம். 21-2).நீரால் கட்டமைக்கப்பட்ட அகழி மிகுந்த ஆழத்தை உடையதாக இருந்திருக்கிறது (குண்டு கிடங்கின், மதுரை-64).அகழி அரசனின் அங்கங்களுள் ஒன்றாகிய அரணின் ஒரு பகுதியாக இருந்திருக்கிறது. அகழியின் நீர்ப்பிடிப்புப் பகுதி கற்களை இட்டு இடித்துச் செய்ததாக இருக்கிறது (கல் இடித்து இயற்றிய இட்டுவாய்க் கிடங்கின் - மதுரைக். 730).பள்ளத்தில் நிரப்பப்பட்ட நீர் விரைவில் வற்றிவிடக்கூடாது என்பதற்காக இத்தொழில் நுட்பத்தை மேற்கொண்டிருக்கின்றனர் எனலாம். ஆழமான நீர்நிலை என்னும் அடையாளப்படுத்துதல் முதலை பற்றிய பின்னணி வருணனையிலும் அமைந்திருக்கின்றன. அகழியின் ஆழம், பெருமை சுட்டவே முதலை இருப்பதான புனைவு நிகழ்ந்திருக்கிறது. போர்ச்சமூகச் சூழலில் நீர் நிலைகளை உடைத்தலும், நீரை யானை கொண்டு கலக்குதலும் வெற்றியின் உச்சமாகக் கருதப்பட்டு இருக்கிறது. (புறம்.15:10).

சோழ நாட்டில் 'மதுகை'என்ற ஊரில் இருந்த குறுநில மன்னன் எழினி, ஆறு அமைத்ததற்காக 'வாட்டாறு' என்னும் அடையைப் பெற்று 'வட்டாற்று எழினியாதன்'என்றே குறிக்கப்பட்டு இருக்கிறான் (புறம். 396).வரலாற்று நோக்கில் ஏறக்குறைய சங்ககாலத்தை ஒட்டிய பல்லவர்களுக்கு நீர்ப்பாசன வசதி அமைத்ததில் முக்கியப்பங்கு உண்டு. அவர்கள் காலத்து ஏரிகளே தடாகங்கள் என்ற பெயரில் அழைக்கப்பட்டன. மதகுகள் பல கட்டப்பட்டன. தடாகம், ஏரி, கிணறு, வாய்க்கால், மதகு ஆகியவற்றை மேற்பார்வை இட்டு வேண்டிய திருத்தங்களை 'வாரியப் பெருமக்கள்'என்போர் செய்து வந்தனர். நீர்ப்பாசன வசதிக்காக ஊர் வருமானத்தில் ஒரு பகுதி செலவிடப்பட்டது. (கு.சேதுராமன், தமிழ்நாட்டு சமுதாய பண்பாட்டுக் கலை வரலாறு).

நீர் குறித்த புனைவுகளில்ஒருவிதமான கருத்துவெளியைக் காணமுடிகிறது. நீர் x மீன், நீர் x வலிமை, நீர் x நெல், நீர் x உப்பு, நீர் x இனிமை, நீர் x விளையாட்டு, நீர் x வழிபாடு, நீர் x எல்லை, நீரின்மை x வறட்சி என்பதாக அவை அமைந்திருக்கின்றன.

நீர்நிலை உடைந்தால் மண்ணால் அடைக்கப்படாமல் மீன்களாலேயே அடைகின்ற அளவுக்கு வளம் நிறைந்ததாக இருந்திருக்கிறது. மக்களின் உணவுத் தேவையை 'நீர் x விவசாயம்' மட்டுமே பூர்த்தி செய்யாமல் 'நீர் x மீன்' அமைவும் பூர்த்தி செய்திருக்கிறது. (தண் புனல் பரந்த பூசல் மண் மறுத்து, மீனின் செறுக்கும் - புறம் 7:11-12). வாளை மீன்கள் நெல்லையுடைய நீண்ட வீடுகளின் புறத்தே நிறுத்தப்பட்ட நெல் கூறுகளிடத்து புரளும் படியான செழுமைக்கு நீர் வளமே காரணமாக அமைந்திருக்கிறது. (நெடுநீர்ப் பொய்கை பிறழிய வாளை, நெல்லுடை நெடுநகர்க் கூட்டு முதல் புரளும் புறம்.287:8-9).

நீர் அளவுக்கு அதிகமாகி தன் போக்கில் சென்றால் அழிவு நேரும் என்பதை வலியுறுத்தி 'அழிவு நேராமல் ஆக்க சக்தியாக நீரைப் பயன்படுத்த வேண்டும்' என்னும் குறிப்புப்பொருளை ஐயூர் முடவனார் முன்வைக்கிறார் (நீர்மிகின் சிறையும் இல்லை - புறம் 51:1).நீரின் 'தன்போக்குவேகம்... கட்டுப்படுத்த முடியாத தன்மையில் இருந்த பொருண்மை மன்னனின் சினத்திற்கு உவமையாக்கப்பட்டு இருக்கிறது. புலவர்களின் நுவல் பொருளிலும் நீர் முக்கிய இடம் பெற்றிருப்பதை அவதானிக்க முடிகிறது. நீர் மக்களுக்கு எளிதாய்க் கிடைத்திருக்கிறது. (நெல்லும் நீரும் எல்லாருக்கும் எளிய என - புறம். 58).உழவர்கள் வேளாண்மை செய்யப்பயன்பட்ட நீர் 'உழா உழவர்' (நற். 331:1) எனச் சுட்டப்படும் பரதவர் உப்புக் காய்ச்சவும் (கடல் நீர்) பயன்பட்டிருக்கிறது (கானல் கழி உப்பு முகந்து கல்நாடு மடுக்கும் - புறம் 60:6-7).

மன்னனின் இனிய குணத்தைச் சுட்ட நீரின் 'இனிமை'குறிக்கப்பட்டு இருக்கிறது. (நீரினும் இனிய சாயல் - புறம் 105).நீர் நிலைகள் வற்றிப்போனால் அது பயனில்லாத காலமாகக் கருதப்பட்டு இருக்கிறது (விளைவயல், பள்ளம் வாடிய பயனில் காலை - புறம் 388 :1-2).கோடை காலத்தில் மழையளவு குறையும்

என்ற சிந்தனை, ஆண்டு முழுவதும் பயன்படும் வகையில் மழைநீரைத் தேக்கி வைக்க வேண்டும் என்ற கருத்தாக்கத்தைப் புலவர்கள் மன்னனிடம் எடுத்துரைக்கக் காரணமாக அமைந்திருக்கிறது (நிலன் நெளி மருங்கில் நீர்நிலை பெருகத் தட்டோர் அம்ம இவண் தட்டோரே - புறம் (18; 28 -9).

தொல் தமிழர் நீரில் தெப்பம் விட்டு விளையாடி இருக்கின்றனர். தெப்பம் கொறுக்கந்தட்டையால் செய்யப்பட்டு இருந்திருக்கிறது. (கொழுங்கோல் வேழத்துப் புணைதுணை, அகம். 186:8).புதுப்புனல் வரவின் போது புனலாடல் அதிகம் நடந்திருக்கிறது. புதுப்புனலில் மக்கள் நீராடி மகிழ்ந்ததை பரிபாடலும் அகநானூற்றிலும் காணமுடிகிறது (அந்திப் பராஅய புதுப்புனல் - அகம்.266:2).குருதி போன்ற அரக்கு நிறமுடைய நீரைத் துருத்தியில் நிரப்பி பீச்சி அடித்து விளையாண்டு இருக்கின்றனர் (நெய்த்தோர் நிற அரக்கின் நீரெக்கி - பரி. 10:12).சிவிறி, துருத்தி, எக்கி

என்னும் கருவிகள் நீர் பீச்சி அடிக்கும் விளையாட்டுக் கருவிகளாக இருந்திருக்கின்றன.

நீர்த்தாகம் தணிக்க நெல்லிக்காய் உண்டு இருக்கின்றனர். (சுரந் தலைப்பிட்ட நெல்லி அம் பசுங்காய் -குறுந். 209).நீரற்ற காலத்தில் கல்லூற்றில் நீர் உருவாகி இருக்கிறது (கல் ஊற்று ஈண்டல கயின் அறவாங்கி. நற்.186).கற்கள் அல்லது பாறை நிலங்களில் தோண்டப்படும் நீர்நிலை கிணறு எனப்பட்டு இருக்கிறது (கணிச்சியில் குழித்த கூவல் நண்ணி - நற்.240).ஆறலைக் கள்வர்களும் பாலை வழிச் செல்வோரும் உகாய் மரத்தின் பட்டையை மென்று தின்று தாகம் தணித்திருக்கின்றனர் (நீர்நசை வேட்கையின் நார்மென்று தணியும் (குறு. 274). பனிக்காலத்தில் குடிப்பதற்குச் சுடுநீரைப் பயன்படுத்தி இருக்கின்றனர். சுடுநீர் வைத்துக் கொள்வதற்கான பாத்திரம் திறந்து மூடும் அமைப்பில் இருந்திருக்கிறது. இப்பாத்திரம் சேமச்செப்பு எனக் குறிக்கப்பட்டு இருக்கிறது. (அற்சீர வெய்ய வெப்பத் தண்ணீர் சேமச் செப்பில் குறு.277).ஊருக்கு புதிதாக வருகிறவர்கள் குடிநீர் இருக்கும் இடத்தை உள்ளூர்வாசிகளிடம் கேட்டு அறிந்திருக்கின்றனர் (திரைபொரு முந்நீர்க் கரைநணிச் செலினும், அறியுநர்க் காணின் வேட்கை நீக்கும். புறம்.154).

நாடோடி வாழ்க்கை வாழ்ந்த கலைஞர்களாக கூத்தர், பாணர், ஆகியோர் நீர் நிலைகளுக்குப் பக்கத்திலேயே தங்கி இருக்கின்றனர். ஓரிடத்தில் நிலைத்த வாழ்வை மேற்கொள்ளாத இவர்கள், தங்கி ஓய்வெடுக்கவும் சமைக்கவும், ஏனைய பயன்பாட்டுக்கும் நீர்சார் இருத்தல் தேவையாக இருந்திருக்கிறது (அரியல் ஆர்கையர், இனிது கூடு இயவர், துறை நணி' (பதிற். 27 : 4-5). செம்மண் நிலத்தில் இருந்து குடிநீருக்குப் பெறப்பட்ட நீர், சிவந்த நிறத்தில் கலங்கல் நீராக இருந்தமையால், அதைத் தெளிவிக்க நீர்ப்பாத்திரத்தினுள் கடுக்காயை இட்டு வைத்திருக்கின்றனர் (முன்றில் இருந்த முதுவாய்ச் சாடி யாம் கடு உண்டென வந்து மாசு இன்று - புறம்.319 : 3-4).மந்தி, நீரை முகம் பார்க்கும் கண்ணாடியாக பயன்படுத்தியதான குறிப்பு மனிதப் பயன்பாட்டிலும் அது இருந்திருக்க வேண்டும் என்னும் கருத்தை முன்வைக்கிறது (குண்டுநீர் நெடுஞ்சுனை நோக்கிக் கவிழ்ந்து (நற்.151).

துணி வெளுப்பதற்கு உவர் நிலத்தில் தோண்டப்பட்ட கிணற்று நீரைப் பயன்படுத்தி இருக்கின்றனர். உவர்நிலை நீர் சலவைக்கு ஏற்றது என்ற உண்மை தொல்தமிழரிடம் இருந்திருக்கிறது. (களர்ப்படு கூவல் தோண்டி நாளும், புலைத்தி கழீஇய தூவெள் அறுவை. புறம். 311).துறைகள் ஆழமான பகுதியிலேயே கட்டப்பட்டு இருந்திருக்கின்றன (குண்டு நீர்ப் பணித்துறை - மதுரைக். 585-586) இது மழை பொய்த்த கோடை காலங்களிலும் நீர் பயன்பாட்டுக்கு வேண்டும் என்பதான திட்டமிடலாகஇருப்பதை உணரமுடிகிறது. துறைநீர் குடிக்க (நற்.83) குளிக்க (நற்.96) ஆடை வெளுக்க, முதலிய பயன்பாட்டுக்கு உரியதாக இருந்திருக்கிறது. ஒவ்வொரு பயன்பாட்டுக்கும் தனித்தனித் துறை இருந்திருக்க வேண்டும். கயம்என்னும் நீர்நிலையும் குளிப்பதற்கானதாக இருந்திருக்கிறது (கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும், குறுந். 9).

பொய்கை என்னும் நீர்நிலை இயற்கையாக அமைந்த மருதநிலம்சார் நீர்நிலை. பொய்கை சங்க இலக்கியத்தில் பரத்தையின் குறியீடாகவே புனையப்பட்டு இருக்கிறது. இதனால் பொய்கை பொது நுகர்வுக்கு உரியதாக இருந்ததை அவதானிக்க முடிகிறது. பொய்கையில் முதலை இருப்பதான பதிவு அது ஆழமான நீர்நிலை என்பதை உணர்த்துகிறது.

கடல்சார் மக்கள் குடிநீருக்காக உறைக்கிணறுகளை

கவிதை

நாஞ்சில்நாடன்

கூற்றமே ஆகும் கொற்றம்

மாபழுக்கக் கல்லுண்டு
வாழைக்கும் விலக்கில்லை
ஆப்பிளுக்கு மெழுகேற்றம்
முந்திரி நீராடும் விடமதனில்
கலிங்கம் சிறக்கச் சிவப்பூசி
புழுவரா திருக்க ஊட்டத்தில் வேதிமங்கள்
எச்சில் சுரக்கப் பண்டத்தில் நச்சுப்பு
மழலையர் கிழவர் சீக்காளி பருகுவர்
கலப்படப் புனிதப்பால்!
காமதேனுப் பசு ஜெஸ்ஸில்
குறிஞ்சி மலைத்தேனில்
வாகைச் செக்கெண்ணெயில்
தூளாக தாம் வாங்கும்
மஞ்சளில் மல்லியில் மிளகில்
என்னென்ன சேர்ப்பாரோ
படமாடக் கோயில் பாமனறிவானோ?
கலப்பவர் பகையரசா, வேற்றரசா?
இந்திய இணையாண்மை
ஏற்றமிகு குடிமக்கள்
நளின கமல பங்கய விருதவர்
பாதம் பணிந்தேத்தும்!
அவரவர் சமயத் தலைவர் தாள் வணங்கித்
தன்னூன் பெருக்குதற்கு
சகமாந்தர் ஊனுண்பார்!
நடுவணது எய்த இருதலையும் எய்தும்!
நாட்டரசு தாம் கொண்டு
சுடுகாட்டரசு தமக்களிப்பார்
களவறிந்த கள்வரே நம்
காய சித்தி செய்கின்றார்!



அமைத்து இருக்கின்றனர் (உறைக்கிணறு, புறஞ்சேரி - பட்டினப். 76) மண்ணால் வளைந்த 'உறை'என்னும் விளிம்புகளை, தோண்டிய கிணற்றில் சுவராகப் பொருத்தி உப்புநீரை குடிநீராக்கி இருக்கின்றனர். 'சுடப்பட்ட மண் விளிம்பு உப்புநீரை நன்னீராக மாற்றும்' என்னும் தொல்தமிழரின் விஞ்ஞான அறிவு வியக்கத்தக்கதாகும். குடிநீர் பிடித்து வைக்கும் பாத்திரம் 'கன்னல்'எனப்பட்டிருக்கிறது (தொகுவாய்க் கன்னல் - நெடுநல். 65).

வறட்சி நிலமாகக் கருதப்படும் பாலை நிலத்தில் கூட ஆயர்கள் தம் கைக்கோலாலேயே தோண்டி நீர்நிலைகளை உண்டாக்கி இருக்கின்றனர். சூரியனைக் காண இயலாத மழைக்காலங்களிலும், மேகம் நிறைந்த இரவுப் பொழுதுகளிலும், சிறிய கலத்தின் அடியில் நுண்ணிய துளையை உண்டாக்கி அதில் நீரை நிரப்பி, அத்துளை வழியாக நீர்ஒழுகும் போது கலத்தில் நாழிகைக்கு ஒன்றாக வரையப்பட்ட கோடுகளை எண்ணி நேரத்தை அறிந்திருக்கின்றனர்.

கார் காலத்தின் தொடக்கத்தில் பெய்யும் மழை 'புதுப்பெயல்' எனவும் முடிவில் பெய்யும் மழை 'சில்பெயல்' எனவும், இடைப்பட்ட காலத்தில் தொடர்ந்து பெய்யும் மழை 'பழமழை' எனவும் குறிக்கப்பட்டு இருந்திருக்கிறது. எள் பயிரிடுவதற்குத் தொடர்ந்து பெய்யும் 'பழமழை' ஏற்றதல்ல. அதற்குச் சிறிதளவு மழையே போதுமானது என்ற சிந்தனையாக்கம் இருந்திருக்கிறது (பழமழை பொழிந்தெனப் பதன் அழிந்து உருகிய, சிதட்டுக்காய் எண்ணின் சில்பெயற் கடை நாள் - குறுந். 261). மழைப்பொழிவை மக்கள் கொண்டாடி இருக்கின்றனர். (தொய்யல் மாமழை தொடங்கலின் அவர் நாட்டுப் பூசல் ஆயம் புகன்று இழி அருவி, குறுந். 367).வெள்ளி என்னும் கோள் மழைக்குரிய கோளாகவும், அது வடக்கே சிறிது சாய்ந்திருந்தால் மழை பெய்யும் எனவும் (வறிது வடக்கு, இறைஞ்சிய சீர்சால் வெள்ளி, பதிற். 24: 24).தெற்கில் சாய்ந்திருந்தால் மழை பெய்யாது எனவும் (வயங்கு வெண்மீன் திசை திரிந்து தெற்கேகினும் பட்டினப். 1) நம்பியிருக்கின்றனர்.

நெல் அறுத்தபின் ஈரநிலம் வீணாகிவிடக் கூடாதென வேறுபயிரை வேளாண்மை செய்திருக்கின்றனர் (அரிகால் மாறிய அம்கண் அகால்வயல், மறுகால் உழுத ஈரச் செறுவின், வித்தொடு சென்ற வட்டி நற். 210).நீரில் முத்தும் விளைந்திருக்கிறது (நீர், முத்துப்படு பரப்பின் கொற்கை முன்துறை, நற்.23).

கரும்பு நீர்சார் பயிர், கரும்பு பயிரிட அதிகமான நீர் வேண்டும். பாய்ச்சுகின்ற நீர் முழுமையாக நிலத்துக்குள் சென்று கரும்புக்குப் பயன்பட வேண்டும் என்ற கருத்தாக்கத்தில் கரும்பு பயிரிட 'பாத்தி'அமைத்திருக்கின்றனர். சிறுசிறு பாத்திகள் நீரினைத் தடுத்து நிலத்துக்குள் இறக்கும். பயிர் பயன்பெறும் (கரும்பு நடுபாத்தியில் கலித்த ஆம்பல் - ஐங்குறு. 65). விவசாயத்தில் 'சாலிடுதல்' என்பது ஒரு முறை. சரிவு நிலங்களில் பயிரிடும் போது பாய்ச்சுகின்ற நீர் சரிவு நோக்கி ஓடி வரப்பை விட்டு வெளியேறி வீணாகும். இதனால் சரிவு நிலத்தைக் குறுக்காக உழுது சாலிட்டு பயிர் செய்வர். நீரை 'சால்'தடுத்து நிறுத்தி நிலத்துக்குள் இறக்கும். நிலத்திற்குத் தக்கபடி நீரை மேலாண்மை செய்யும் நுட்பத்தைத் தொல்தமிழர் நன்கு அறிந்துஇருந்திருக்கின்றனர்.

மழை பெய்யும் பொழுதே அருவி நீரும், அருவியால் உண்டாகின்ற ஆற்றுநீரும் கிடைக்கும் என்பதாலும், குறிஞ்சி, முல்லை நிலப்பகுதி கோடையில் திரியும் என்பதால், அந்நிலப்பகுதியின் பயிர்கள் வறட்சியைத் தாங்குவனவாகவே உள்ளன. ஆணையைக் கொண்ட காவிரி ஆற்றுப்படுகைகளில் தென்னை, வாழை, பாக்கு, மஞ்சள், மா, சேம்பு, இஞ்சி போன்ற நீர்ப்பயிர்கள் பயிரிடப்பட்டு உள்ளன. (பட்டினம். 16-19) வேளாண்மை செய்வதற்கு ஏற்ற பயிரை அந்தந்த நிலங்களில் கிடைக்கும் நீரின் அளவே தீர்மானித்து இருக்கிறது.

குறிஞ்சி, முல்லை, நெய்தல் நிலநீர் நிலைகளுக்கும், மருத நில நீர்நிலைகளுக்கும் வாழ்வியல் பொருண்மை அடிப்படையில் வேறுபாடு உள்ளது. அருவி, சுனை, காட்டாறு, கடல் முதலிய குறிஞ்சி, முல்லை, நெய்தல் சார் நீர்நிலைகள் மனிதனின் வாழ்வெளியை வரையறை செய்வதாய் இருக்கிறது. அவற்றுக்குத் தக்கவாறு மனிதன் தன் புழக்கத்தை அமைத்துக் கொண்டிருகிறான். மருதநிலத்தில் மனிதனின் வாழ்வெளிதான் நீர்நிலையை வரையறை செய்வதாய் இருக்கிறது. மனிதனின் வாழ்வெளி நீர்நிலைகளை மேலாண்மை செய்யத் தொடங்கியதன் விளைவே மருத நிலத்தின் உற்பத்திமுறை அரசு உருவாக்கத்தில் முதன்மைப் பங்காற்றியிருக்கிறது. சங்கச் சமூகத்தில் தினை, வரகு, சாமை, முதிரை பயிர்களைவிட நெல் மதிப்பு வாய்ந்த பொருளாக இருந்திருக்கிறது. வறட்சிப் பயிர்களான குதிரைவள்ளி, தினை, வரகு, சோளம் ஆகியவை பின்னுக்குத் தள்ளப்பட்டு நெல்லே முதன்மை படுத்தப்படுவதும், வறட்சிப்பயிர்களைவிட உணவுக்கு நெல்லே சிறந்தது என்ற கருத்தாக்கமும் மருதநிலத்தின் அதிகாரத் தன்மையை நிலைப்படுத்திக் கொள்வதாகவே அமைந்திருக்கிறது.

நெல்லைத் தின்னுகின்ற கோழியை பொன்னாலாகிய குழையைக் கொண்டு எறிந்து விரட்டுகிற அளவுக்கு நெல்லின் மதிப்பு உயர்வாக இருந்திருக்கிறது.நெல்விளைவிப்பதற்குத் தேவையான நீர்நிலைகளை உருவாக்கிக் கொள்ளும் திறனும், இயற்கையின் ஒத்திசைவும் ஒருங்கே இருந்தமையால் மருத நிலம் செல்வக்குடிகளின் தோற்றுவாயாக இருந்திருக்கிறது. நீரை தன்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து சரியான முறையில் பயன்படுத்தியதை மருதநிலப்பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன. உப்பின் மதிப்பும் நெல்லுக்குச் சமமாக இருந்திருக்கிறது. அதனாலேயே நெல்லுக்கும் உப்புக்கும் பண்டமாற்று நிகழ்ந்திருக்கிறது. (நெல்லின் நேரே ‘வெண்கல் உப்பு’பட்டினப்பாலை உரைக்குறிப்பு மேற்கோள் ப.324, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், வெளியீடு). கடல் வாணிகத்தால் செழித்திருந்த நெய்தல் நிலத்தின் உப்பும், அரசின் தோற்றுவாயான மருதநிலத்தின் நெல்லும் சமமாகக் கருதப்பட்டதற்கான காரண நுண்ணரசியல் தனித்த ஆய்வுக்கு உரியது. நெல்லுக்கு மாற்றாக உப்பு மட்டுமின்றி, மீனும் இருந்திருக்கிறது (ஐங்குறு. 49).

மருத நீர்நிலைப் பெருமை சுட்ட முதலையும், நெய்தல் நீர் நிலைப் பெருமை சுட்ட சுறாவும், குறிக்கப்பட்டு இருக்கிறது (நற்.223) நெல்லும் உப்பும் சமமாகக் கருதப்பட்டதைப் போல், முதலையும் சுறாவும் சமமாகக் கருதப்பட்டு இருக்கிறது. பிற உயிர்களை உண்டு வாழும் இயல்பில் முதலையும் சுறாவும் ஒன்றுபடுவது இங்கு நோக்கத்தக்கது. நீர்ப்பெருமை சுட்ட முதலையும் சுறாவும் கொண்டாடப்படுவது, மருத, நெய்தல் நிலங்களின் நீர்சார் - பொருள், அதிகாரம் ஆகியவற்றின் வலுவான பின்னணியே ஆகும். திணைமயக்க அமைப்புகளிலும் மருதநில மயக்கம் நெய்தலிலும், நெய்தல் நில மயக்கம் மருதத்திலும் காணப்படுவது குறிக்கத்தக்கது (நற். 291). நெய்தல் நிலத்தில் மழைபெய்யும் காலத்து நெல்லும், மழை பெய்யாக் காலத்து உப்பும் விளைந்திருப்பதை நோக்குமிடத்து நெல்லுக்கும் உப்புக்குமான உறவு நெருக்கத்தைஅவதானிக்கலாம் (நற்.311).

வேட்டைக்குச் சென்றவர்கள் யானையின் கொம்பினைக் கொண்டு நீர்வளம் மிக்க பாறையைத் தோண்டி பொன் எடுத்து இருக்கின்றனர் (... யானை வெண்கோடு கொண்டு, நீர்திகழ் சிலம்பின் நன்பொன் அகழ்வோன் - அகம். 282:3-4). மருதத்தின் உயர்ந்த விளைபடு பொருளான நெல்லைப் போல குறிஞ்சியின் உயர்ந்த விளைபடு பொருளாக ‘பொன்’ இருக்கிறது. பொன்குழை கொண்டு நெல்லைத் தின்னவந்த கோழியை எறிந்து விரட்டியது (கோழி - முல்லை நிலம்) குறிஞ்சிச் சமூகமும், முல்லைச் சமூகமும் மருதச் சமூகக் கட்டுப்பாட்டில் இருந்திருக்க வேண்டும் என்ற கருத்தைத் தருவதாக இருக்கிறது. சங்க இலக்கியத்தில் பொன் குறிஞ்சிக் குறியாகவும், கோழி முல்லைக் குறியாகவும், நெல் மருதக் குறியாகவும் இருப்பது சுட்டத்தக்கது.

தொல்தமிழரின் நீர்சார் இருத்தலுக்கு வலிமை வாய்ந்த பல கலிங்குகளை உடையதும், 60 மைல் நீளமுடைய கால்வாயைக் கொண்டதும் முன்காலத்தில் இந்தியாவிலேயே மிகப்பெரிய நீர்த்தேக்கமாகக் கருதப்படுவதாகவும் இருக்கிற தூர்ந்து போன உடையார்பாளையம் ஏரியும் கல்லணையும் எச்சமாக இருக்கின்றன.

கட்டுரையாளர்: தமிழ்ப் பேராசிரியர்

கட்டுரை

நெல்லை சு.முத்து

தமிழ் ஆண்டும்,

திருவள்ளுவர் காலத்திற்கும் முந்திய சிந்துவெளித் திராவிடர்கள் மரபைப் பின்பற்றியே வானவியல் சான்ற சங்கத் தமிழர்கள் சித்திரை மாதத்தினை ஆண்டுத் தொடக்கமாகக் கொண்டு வாழ்ந்தனர். மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் நெடுநல்வாடையில் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடுவதாக நச்சினார்க்கினியர் உரையெழுதுகிறார்.

நெடுநல்வாடையில் குறிப்பிடப்படும் யவனர் ஆகிய மிலேச்சர் பற்றி முல்லைப் பாட்டிலும் (60-66) குறிப்புகள் உள்ளன. ஆதலால் முல்லைப்பாட்டு-நெடுநல்வாடை-மதுரைக்காஞ்சி ஆகிய இந்த மூன்று நூல்களும் கி.பி.2-3 நூற்றாண்டு சார்ந்தவை.

அதிலும் "ஆடு தலையாக விண்ணூர்பு திரிதரு வீங்கு செலன் மண்டிலம்" (நெடுநல்வாடை 160-161) என்கிற சங்கப்பாடல் வரிகளில் பண்டைத்தமிழரின் வானவியல் திறன் விவரிக்கப்படுகிறது. பாண்டியன் நெடுஞ்செழியனின் அரண்மனை விதானத்தில் கோபெருந்தேவியின் கட்டிலுக்கு நேர் மேலாக 'ஆடு தலை'யாகப் பன்னிரெண்டு உடுக்கணங்கள் தோற்றமும் ஓவியமுமாகச் சித்தரிக்கப் பெற்றுள்ளது.

அரசமாதேவி காணும் ராசி வளையக் காட்சி பண்டைத் தமிழர்தம் புத்தாண்டுத் தொடக்கத்தைச் சுட்டுகிறது. அதில் மேடம் (*Aries*) ஆகிய ஆடு உருவம் கொண்ட தலையாய உடுக்கணம் முதலில் சுட்டப் பெறுகிறது.

"திண்ணிலை மருப்பின் ஆடு தலையாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய
உரோகிணி நினைவினள் நோக்கி நெடிது உயிரா"

(160-163)

> சந்திரன் இயக்க அடிப்படையில் ஏறத்தாழ முப்பது நாட்களுக்கு ஒருமுறை பௌர்ணமி தோன்றும். அந்த அளவு ஒரு திங்கள் காலம். முழுநிலா எந்த உடுக்கணத்தின் தோன்றுகிறதோ அந்த உடுக்கணத்தின் பெயரே தமிழர்க்கு அந்த மாதப் பெயர். நம் சந்திரன் (திங்கள்) இயங்கும் காலகட்டத்தையே திங்கள் என்றும் வழங்கினர்.

- என்றவாறு, திண்ணிய கொம்பு உடைய ஆடு (மடம்) முதலான உடுக்கணங்களின் ஊடாகச் சூரியன் இயங்கும் (அது இயங்குவதாகத் தோன்றும்) வான் மண்டலத்தில் சூரியனுக்கு முரணான சந்திரன் (செல்வன்) உரோகிணி (*Aldeberan*) விண்மீன் அருகில் தோன்றுவது கண்டு காதலில் நெகிழ்கிறாள். இந்த வரிகளில் சங்க காலத் தமிழர் சூரிய வீதியின் (ecliptic path) முதலாவதான ஆடு (Aries) உடுக்கணத்தையே முன்னிறுத்துகின்றனர்.

பூமி சூரியனைச் சுற்றி வருவதால் இங்கிருந்து கவனிப்போருக்கு சூரியன் வானில் வெவ்வேறு விலங்குகள் தோற்றமுடைய விண்மீன் கூட்டங்களின் ஊடாகப் பயணம் செல்வது போல் தோன்றும். இவ்விதம் தோன்றும் சூரியவீதியினை 'உயிரினங்கள்& (*Zoo*) என்ற பொருள் அடிப்படையில் 'உயிரின ராசி வளையம்' (*Zodiac*) என்று பெயரிட்டு வழங்குகின்-றோம். 'ஸோதியாக்கோஸ்' (*Zoidiokos*) என்றால் கிரேக்க மொழியில் விலங்குச் சிற்பம் என்க. இலத்தீனில் 'சூதியன்' (*Zoidion*) என்பது ஏனோ சூரியன் என்று ஒலிக்கிறது.

சூரியனைப் பிற கோள்களும் சுற்றிவரும் தளத்தினைப் பிரபஞ்ச நடுக்கோடு (*Celestial Equator*) என்கி'றோம். சூரிய வீதியும் வான்நடுக்கோடும் ஒன்றையொன்று வெட்டிக்கொள்ளும் புள்ளிகள் ஒரு ஆண்டில் இரண்டு முறை நிகழும். அந்த இரண்டு நாட்களிலும் மட்டும் சூரியக்கதிர்கள் பூமியின் நிலநடுக்கோட்டுப் பகுதியில் செங்குத்தாக விழும். அவ்விரு நாட்களிலும் பூமியில் இரவும் பகலும் சமஅளவாக இருக்கும். உத்தராயனத்தின்போது 'வசந்த

தமிழர் ஆண்டும்

(வேனல்) சமநேபாக்கு நாளும் (*Vernal equinox*) தட்சிணாயனத்தில் 'இலையுதிர் சமநோக்கு நாளும் (*Autumnal equinox*) இன்றைக்கு முறையே மார்ச் 21-22, செப்டம்பர் 21-22 ஆகிய நாட்களில் நிகழ்கின்றன.

பூமி சூரியனைச் சுற்றி வர ஆகும் ஒரு 'சுற்று ஆண்டு & (*tropical year*) 365.242 சூரிய நாட்கள் (*solar days*) ஆகும். மிலேச்சர்களான பண்டைய உரோமானியர் அதனைப் பத்து சம பாகங்கள் ஆக்கி மாதங்களாக வகுத்தனர்.

வசந்த சமநோக்கு நாள் ஆண்டுத் தொடக்கம் ஆயிற்று. 'மார்ஸ்' (*Mars*, தமிழில் செவ்வா) எனும் போர்க் கடவுளின் பெயராலான 'மார்ச்' முதல் மாதமும் ஆனது. இலத்தீன் மொழியில் 'துளிர்விடுதல்', வசந்தம் மலர்தல் எனப் பொருள்படும் 'ஏப்ரியோ' ('ஏப்ரலிஸ்') இரண்டாவது மாதம். மெர்க்குரி (*Merculy*, புதன்) எனும் தெவத்தின் தாயாகிய தாவரக் கடவுள் 'மய' (மே), ஜுபிடர் (வியாழன்) எனும் கடவுளின் மனைவியான 'ஜூனோ ' (ஜூன்: இலத்தீன் மொழியில் 'ஜுவனிஸ்' என்றால் இளைஞர்) ஆகிய உரோமானியக் கடவுளரைத் தொடர்ந்து, ஜூலியஸ் சீசர் (ஜூலை: உரோமானியப் பேரரசர், கி.மு.100- கி.மு.44), அகஸ்டஸ் சீசர் (ஆகஸ்டஸ்: ஜூலியஸ் சீசரின் பெயரன், கி.மு.63-கி.பி.14) ஆகிய மன்னர்களின் பெயர்களால் இவ்விதம் மார்ச், ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய முதல் ஆறு மாதங்கள் குறிப்பிடப்பட்டன.

ஆயின், அடுத்தடுத்த மாதங்களின் பெயர்களை- ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது என்ற பொருளில் - ஸெப்டம், அக்ட, நவம், தஸம் ஆகிய கிரேக்க எண் முன்னொட்டுக்களுடன் இணைத்து- ஸெப்டம்பர், அக்-டோபர், நவம்பர், டிஸம்பர் என்று பத்து மாதப்பெயர்கள் வழக்கில் வந்தன. இங்கு 'ஸப்த' (7), 'அஷ்ட' (8), 'நவ' (9), 'தஸ' (10) - ஆகிய வடசொற்களும் இதே எண்களைக் குறிப்பிடுகின்றன. வடமொழியில் எண்பெயர்களும் கிரேக்கப் பெயர்களுடன் ஒலி அமைப்பில் ஒத்துப் போகின்றன என்பது ஆவுக்கு உரியது. காலக்கணக்கினர் பிற்காலத்தில் நொடி, நிமிடம், மணி, கோண அளவீடுகள் ஆகியவற்றில் வட்டத்தின் ஆறு பகுப்புகளாக அறுபதின் அடிப்படை நடைமுறைக்கு வந்தது. இந்தியச் சுழற்சி ஆண்டுகளும் அறுபது என்று கணித்தனர்.

பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரஜோத்பதி, ஆங்கிரஸ, ஸ்ரீமுக, பவ, தாது, ஈஸ்வர, வெகுதான்ய, பிரமாதி, விக்ரம், விஷு, சித்ரபானு, சுபானு, தாரண, பார்திப, விய, சர்வஜித்து, சர்வதாரி, விரோதி, விக்ருதி, கர, நந்தன, விஜய, ஜய, மன்மத, துர்முகி, ஏவிளம்பி, விளம்பி, விகாரி, சாரவரி, பிலவ, சுபகிருது, சோபகிருது, குரோதி, விசுவாவசு, பராபவ, பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதிகிருது, பரிதாபி, பிரமாதீச, ஆனந்த, ராக்ஷஸ, நள, பிங்கள, காளயுக்தி, சித்தார்த்தி, ரௌத்ரி, துன்மதி, துந்துபி, ருத்ரோத்காரி, ரக்தாக்ஷ, குரோதன, அக்ஷய - என்பன அவை.

அந்தப் பெயர்கள் கிருஷ்ணருக்கும் (பெண்ணாக மாறிய) நாரதருக்கும் பிறந்த 60 குழந்தைகளின்

பெயர்களே என்று அபிதான சிந்தமாணி (பக்.1392) தெரிவிப்பதால், ம்மரபின் அடிப்படையில் ‘பிரபவ’, அட்சய’ வரையுள்ள 60 ஆண்டுகள் முறை இன்றும் தமிழகத்தில் மிகப் பெரும்பான்மையாக வழக்கத்தில் உள்ளது. அறுபது ஆண்டுகளின் பெயர்களில் ஒன்று கூடத் தமிழில் இல்லையென்றும், அறுபது ஆண்டுகள் பற்சக்கர முறையில் அமைந்துள்ளதால் அறுபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தைக் கணக்கிட உதவியாக இல்லை என்பதோடு, பிறநாடுகளில் உள்ளவாறு தமிழர்களுக்கு நெடுங்கணக்கு இல்லை என்ற குறையை நீக்க வேண்டும் என்ற நோக்கிலும் தமிழ்ச்சான்றோர் பலர் 1921 ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் கூடி ஆராந்தார்கள்கி (புதுகைத்தென்றல் பிப்ரவரி 2008) என்று புதுகை மு.தருமராசன் பதிவு செகிறார்.

இன்று வசந்த சம நோக்கு நாள் பங்குனி மாதத்தில் மீன ராசியில் (Pisces) நிகழ்கிறது. இதில் அடங்கிய ‘டெல்டா பிஸ்ஸியம்’ (Delta Piscium) என்ற விண்மீனே இராசி வளையத்தின் முதன்மையான இருபத்தேழு விண்மீன்களில் இறுதியான ரேவதி விண்மீன் ஆகும்.

டெல்டா பின்வாரியம் ன்னு வசந்த காமநோக்கு நான் பங்குனி மாதத்தில் சூரியன் உதிக்கும் முன்னதாக கீழைவானில் மறையும் உடுக்கணம் மீனம். சூரியன் மறைந்ததும் மேலைவானில் இதனைக் காணலாம். மீன் போன்ற தோற்றமுடைய விண்மீன்கள் தொகுதி இது. இராசி மண்டலத்தில் இறுதி உடுக்கணம் இது.

சங்க இலக்கியங்களில் மீன ராசி பற்றிய குறிப்பு இல்லை. என்றாலும், சிந்து மக்களிடம் மீன மாத இறுதியில் ‘பொங்கல் விருந்து’ பற்றிய குறியீட்டுக் கோர்வை (வாக்கியம்) பற்றிய ஒரு தகவல் உள்ளது. “நண்டல் (விருந்து)-ஆடு-மீன்-ஆடு-கார்முகில்” என்ற வரிக்கு நேர்ப்பொருள் காண்பது சிரமம். இடமிருந்து வாசியுங்கள். ம்கார்முகில் மீன(மாது)த்திடை விருந்துகி என்ற பொருள் வரும்.

அவ்வாறே, மற்றொரு ஆதாரத்தில் ம்பற- ஓடு-ஏறு (ஆடு)கி என்று உள்ளது. அதனை - இடமிருந்து படித்தால் ம்ஆடு (மேஷம்) ஓடும் வான்வெளிகி என்று தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். இது சூரியவீதி பற்றிய சிந்தனை. விண்மீன் கூட்டங்களின் பின்னணியில் சூரியன் சஞ்சரிப்பதாகத் தோன்றும் பாதை சூரிய வீதியினை சிந்து மக்கள் ‘எல்வழி’ என்ற அருமையான கருத்தோவியமாகச் சுட்டினர். சிந்துவெளி நாகரிகத்தின் பன்னிரண்டு ராசித் தோற்றங்கள் வேதங்களில் இல்லை. வார அளவும், அதில் ஏழு நாட்கணக்கும் வேத முனிவர்கள் அறிந்திருக்கவில்லை. இவை பிற்காலத்திய கணிப்பீடுகள். ஆயின், சூரியனின் இந்த சஞ்சாரத்தினை இரவில் விண்மீன்களிடை காண்பது இயலாது அல்லவா? ஆதலினால் சூரியனுக்குப் பதிலாக நமது திங்களாகிய சந்திரன் பௌர்ணமியாக இயங்குவதைக் கவனித்தனர் நம் முன்னோர்.

அண்மைக்காலம் வரை கேரளத்திலும், புத்தாண்டு என்பது விசு (சித்திரை) முதல் நாளான சித்திரைவிசு நாளில் தொடங்கியது. இன்று சிங்கம் ஆகிய ஆவணி முதல் தேதி என்ற வகையில் மாற்றப்பட்டுவிட்டது.

பண்டைத்தமிழ் தம் மாதக் கணக்கு என்பது பௌர்ணமிகளுக்கு இடைப்பட்ட கால அளவு ஆகும். சூரியன் இயங்கும் உடுக்கணத்திற்கு ஆறாவதாக வரும் உடுக்கணத்தில் அந்த மாத முழுநிலா தங்கும். சந்திரன் இயக்க அடிப்படையில் ஏறத்தாழ முப்பது நாட்களுக்கு ஒருமுறை பௌர்ணமி தோன்றும். அந்த அளவு ஒரு திங்கள் காலம். முழுநிலா எந்த உடுக்கணத்தின் தோன்றுகிறதோ அந்த உடுக்கணத்தின் பெயரே தமிழர்க்கு அந்த மாதப் பெயர். நம் சந்திரன் (திங்கள்) இயங்கும் காலகட்டத்தையே திங்கள் என்றும் வழங்கினர். அதனாலேயே மாதக் கணக்கிற்கு அடிப்ப-டையான ‘திங்கள் போற்றுதும்’ நம் முன்னோர் மரபு. ஆயிற்று. மேனாட்டார்க்கு ‘மூன்’ (Moon) சார்ந்து ‘மூன்த்’ (month) மருவி ஆங்கிலத்தில் Month ஆனது இருக்கட்டும்.

ஒரு திங்கள் என்பது ஏறத்தாழ பதினைந்து நாட்கள் அமாவாசையும், பதினைந்து நாட்கள் பௌர்ணமியும் சேர்ந்தது. அதனை வளர்பிறை அல்லது தேபிறை முதல் பிரதமை, துவிதியை, திரிதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரியோதசி, சதுர்தசி என்று சுட்டுவது பிற்காலத்தில் கிரேக்கமொழி மரபினை ஒட்டியும், வடமொழிச் சொல்லாகவும் வழங்கினர்.

‘ஏறு’ எனப்படும் மேஷ உடுக்கணத்தில் சந்திரன் மறுமுறை தோன்ற பன்னிரெண்டு திங்கள்கள் ஆகும். இந்தக் கால அளவு ம்ஏறுகி என்க. அதுவே நம் முன்னோரால் ‘ஆ(ண்)டு’ என்று குறிக்கப் பெற்றது. ஆங்கிலத்தில் ‘ஏறு’ எனும் இச்சொல்லே ‘இயர்’ (Year) எனுமாறு மருவி ஆண்டினைச் சுட்டுவதாயிற்று. ஆயினும் பின்னாளில் இந்தச் சூரியக்கணக்கு வடமொழிவழக்கில் ‘சௌரமானம்’ (சூரிய அளவீடு) எனப்பட்டது.

ஆயின் அவை முறையே ஆடு, எருது (விடை), இரட்டையர் (ஆடவை), நண்டு (கடகம்), சிங்கம் (மடங்கல்), கன்னி, துலாக்கோல் (துலை), தேள் (நளி), தனுசு (சிலை), கடலாழி (சுறவம்), கும்பம், மீன் ஆகியவற்றின் உருவ அடிப்படையில் பெயர்கள் இலக்கிய வழக்காக இடம்பெற்றன. அவ்வளவுதான். அவற்றில் சில மாற்றங்களுடன் தமிழ்ப் பெயர்களும் (அடைப்புக்குறிக்குள்) அறிமுகம் ஆயின. ஆயினும் மலையாளத்தில் இன்றும் மேஷம் தொடங்கிய பன்னிரண்டு மாதங்களே ஆண்டுக் கணக்காகக் கொள்ளப்பட்டு உள்ளன. முன்னொரு காலத்தில் மலையாளம் தமிழர்தம் ஒரு பிரிவுப் பேச்சுவழக்கில் உதித்தது அல்லவா?

ஆயினும் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டில் கேரளத்தில் வடமொழித் தாக்கமும், வைணவக் கலாச்சார ஆதிக்கமும் கிரந்த எழுத்துக்கள் அறிமுகமும் இணைந்து உருவான ‘கொல்லம்’ ஆண்டு வழக்கில் - ஆவணி மாதப் பிறப்பு அல்லது திருமாலுக்கு உகந்த திருவோண நாளே ஆண்டுப்பிறப்பு ஆயிற்று. அது கார்காலம் என்பதால்

வடநூலார் அதனை 'வர்ஷ ருது' என்று சுட்டினர். அதன் அடிப்படையில் ஆண்டினை 'வருஷம்' என்றே வழங்குவது ஆயிற்று.

ஒரு தகவலுக்காக எடுத்துச் சொல்வதானால் மது, மாதவ, சுக்ர, சூச்சி, நபா, நபஸ்ய, இஷா, ஊர்ஜா, சாஹாஸ், சஹஸ்ய, தபாஸ், தபஸ்ய - ஆகியவையே யஜுர் வேதம் காட்டும் ஒரு ஆண்டின் பன்னிரண்டு மாதங்கள். சைத்ர (சித்திரை), வைசாக (வைகாசி), ஜ்யேஷ்ட (ஆனி), ஆஷாட (ஆடி), ச்ராவண (ஆவணி), பாதரபத (புரட்டாசி), ஆச்விநக (ஐப்பசி), கார்திக (கார்த்திகை), மார்கசீர்ஷ (மார்கழி), பௌஷ (தை), மாக (மாசி), பால்குந (பங்குனி) என்ற பெயர்கள் பிற்காலத்தவை. அவை சிந்துவெளித் திராவிடர்தம் கலப்பில் எழுந்த மாதப்பெயர்கள்.

ஏறத்தாழ 3000 ஆண்டுவாக்கில் பூமியின் துருவ அச்சு டிராக்கோ (Draco) என்கிற இராட்சதப் பாம்பு வடிவ உடுக்கணத்திலுள்ள 'தூபான்' (Duban) எனும் விண்மீனை நோக்கி இருந்தது. ஆயின் இன்று பூமி தள்ளாடும் பம்பரம் போலத் தலையாட்டம் போடுவதனால் இன்றைய துருவ விண்மீன் 'போலாரிஸ்' (Polaris) என்றாகி விட்டது.

கி.மு.3000 ஆண்டுக்கு முற்பட்ட காலகட்டத்தில் சூரியன் ஆண்டுத் தொடக்கத்தில் 'ஓரையான்' (Orion) என்ற வேட்டைக்காரத் தோற்றம் கொண்ட உடுக்கணத்தின் எழுந்தது. அதன் அடிப்படையில் இன்று 'கிழக்கத்திய' என்ற பொருள்பட 'ஓரியன்ட்' (orient), 'ஓரியன்டல்' (oriental) என்றெல்லாம் ஆங்கிலச் சொற்கள் கிளைவிட்டன.

ஓரையான் (Orion) எனும் வேட்டைக்கார உடுக்கணம் வானில் பதினைந்தில் ஒரு பங்காக அமைவதனால் அது வானில் ஒரு புள்ளியைக் கடக்க எடுத்துக் கொள்ளும் கால அளவினை நம் மூதாதையர் 'ஓரை' என வழங்கினர். அதுவே பின்னாளில் 'ஹோரா' (Hora) என்றும், ஆங்கிலத்தில் 'ஹவர்' (Hour) என்றும் மருவி ஒரு மணிநேரக் காலம் காட்டிற்று. அதனையே தொல்காப்பியமும் 'ஓரையும் நாளும்' (பொருள், களவியல்-45) என்று குறிக்கிறது.

ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னர் உத்தராயணத்தின்போது 'வசந்த சமநோக்கு நாளில் சூரியன் ஆடு போன்ற தோற்றம் கொண்ட 'மேடம்' (Aries) உடுக்கணத்தில் சஞ்சரித்தது. அம்மாத இரவு வானில் சந்திரன் 'துலாம்' (Libra) ராசியில் இயங்கியது. அதாவது இரவும் பகலும் சம அளவு என்று நிலைநிறுத்தும் கருவி அதற்கொரு கருதுகோள் தானே. "சமன் செது சீர்தூக்கும் கோல்" பண்டைத் தமிழர் தம் 'வாணிபம்' பற்றிய குறியீடு அல்லவா? வணிகத் துறையினர்க்கு இன்றும் புதுக்கணக்கு ஆரம்பம் இந்த ஏப்ரல் மாதத்தில் தானே.

அதுவே வசந்தத்தின் ஆரம்பம். சித்திரைத் திங்கள். இன்றைய தமிழ் ஆண்டுத் தொடக்கமும் ஆகும். தெலுங்கு வருடப்பிறப்பு யுகாதி இந்த வசந்த சமநோக்கு நாளிலேயே இன்றும் கொண்டாடப்படுகிறது. ஆயின் வடமொழியினர் சூரிய இயக்க அடிப்படையில் இதனை 'மேட மாதம்' என்று வழங்குகின்றனர்.

அண்மைக்காலம் வரை கேரளத்திலும், புத்தாண்டு என்பது விசு (சித்திரை) முதல் நாளான சித்திரைவிசு நாளில் தொடங்கியது. இன்று சிங்கம் ஆகிய ஆவணி முதல் தேதி என்ற வகையில் மாற்றப்பட்டுவிட்டது.

கிரகோரியன் நாட்காட்டியின்படி ஏப்ரல் மத்தியில் 14-15 ஆகிய நாட்களை ஒட்டி அமையும். பகல் பொழுது என்பது காலைச் சூரியோதயம் முதல் மாலை அத்தமனம் வரை. அவ்வாறே மாலை மேற்திசையின் படிஞாயிறு முதல் கீழை விடியலின் வைகறை வரை இரவுப் பொழுது. ஒரு நாளில் இரவும் பகலும் மாறி மாறி வருவது. பகல் அல்லது இரவு ஒவ்வொன்றும் பதினைந்து 'கதிகை'கள் (பகுதிகள்) கொண்டது. ஒரு கதிகை என்பது ஒரு நாழிகை அளவு. இரண்டு நாழிகைகள் ஒரு 'முஹூர்த்' ஆகும். தமிழில் முகூர்த்தம்.

மூழ்த்தம் அல்லது முழுத்தம் என்பது பண்டைய முகூர்த்தம். மூன்றே முக்கால் நாழிகை. இன்றைய கணக்கில் ஒன்றரை மணிநேரம்- அதாவது 90 நிமிடங்கள். எனினும் சமணர்கள் ஒரு முகூர்த்தத்தினை இரண்டு நாழிகை அளவாகக் கொண்டனர். அதாவது-48 நிமிடங்கள். ஏதாயினும் ஒரு நாழிகை 24 நிமிடக் கூறுகளாகும். சுந்தரானந்தர் எனும் சித்தர் பாடிய 'சோதிட முகூர்த்த சிந்தாமணி' மற்றும் சோதிட கிரக சிந்தாமணி போன்ற பிற்கால நூல்களும் முகூர்த்தம் பற்றிக் கூறும். ஒரு நாளுக்கு முப்பது முகூர்த்தங்கள் (யஜுர் வேதப்படி முப்பது கதிகைகள்) என்றால் அறுபது நாழிகை (தண்டம்).

இன்னொரு சுவையான செதி. பண்டைக் காலத்தில் 24 நிமிடங்கள் கொண்ட 60 நாழிகைகள் ஒரு நாள். இன்றோ 24 மணிக்கூறுகள் கொண்ட 60 நிமிடங்கள் ஒரு நாள்.

90 வினாடிகள்	= 1 பிரஸ்தா
15.25 பிரஸ்தா	= 1 நாழிகை
	= 1 தண்டம்
	= 1 கதிகை
2 நாழிகைகள்	= 1 முகூர்த்தம்
30 முகூர்த்தங்கள்	= 1 நாள்

ஒரு நாளில் முப்பது முகூர்த்தங்கள். இது ஒரு தம்பத்தின் நிழல் அளவால் கணிக்கப் பெறும். காலையில் சூரியக் கதிர்கள் சாவாக இருக்கும்போது நிழல் நீண்டிருக்கும். அதனைச் 'சங்கு சாயா' என்றழைப்பர். வெயில் உச்சி ஏறுந்தோறும் 'சங்கு சாயா' (தம்ப நிழல்) அங்குல அளவில் குறைந்துவரும். உச்சி வேளைக்குப் பின்னர் நிழல் மீண்டும் நீளும்.

இவ்வண்ணம் ஒருநாளில் நல்ல நேரம், கெட்ட நேரங்கள் வகுக்கப்பட்டன. என்றாலும், இந்த அளவீடுகளின்படி காலை முதல் மாலை வரை சூரியன் சஞ்சரிக்கும் கோணம் 96 + 96 = 192 பாகைகள். இன்று 180 பாகைக் கணக்கு வைத்து உள்ளோம்.

"விரிகதிர் பரப்பிய வியல் வா மண்டிலம்
இருகோள் குறிநிலை வழுக்காது குடக்கோர்
பொருதிறஞ் சாரா அரைநாள் அமயத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டு

தேளங் கொண்டு தெவம் நோக்கி பெரும்பெயர்
மன்னர்க்கு ஒப்ப மனைவகுத்து”

(நெடுநல்வாடை 73-78)

- என்ற வரிகளில் இரண்டு குச்சிகள் நட்டு சூரியன் உதயம் முதல் மேற்கே மறையும் வரை விழும் நிழல் ஒரே நேர்கோட்டில் அமையம்படி சூரிய வீதி (ecliptic) சார்ந்து கிழக்கு மேற்காக குறித்து மன்னவர்க்கேற்ற அரண்மனகள் கட்டப்படும் செதி இங்கு குறிப்பிடப்படுகிறது. ‘ஒருதிறம் சாரா அரைநாள் அமயம்’ என்பது நடு உச்சிவேளை. உண்மையில் சூரியக் கடிகாரத்தின் மூல அமைப்பு இது.

ஏற்கெனவே சிந்துவெளி ஆதியாரம்பத் தமிழில் இடம்பெற்ற இருபத்தியேழு விண்மீன்களும் முறையே திங்கள் தினந்தோறும் ‘நிலை பெறும் அல்லது தங்கும் இடமாயின. அசுவினி, பரணி, கார்த்திகை, உரோகிணி, மிருகசீருடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகியவை நாள்மீன்கள் என்றே சுட்டப் பெறுகின்றன.

“மாக விசும்பின் வெண் திங்கள் மூவைந்தான் முறை முற்ற” (புறநானூறு.400:1-2) என்ற சங்கப்பாடல் மூன்று ஐந்து பதினைந்து நாள்களுக்கு ஒரு முறை தேந்து வளர்ந்து சுற்றுவதைச் சுட்டுகிறதே.

ஆனாலும் பண்டைத் தமிழர் இந்த வளர்பிறைக்கும், தேபிறைக்கும் இடைப்பட்ட காலக்கூறுகளை நாள்கள் என்றும், அவற்றை ஒன்று, இரண்டு என்ற எண்ணிக்கையாலும் கணக்கிட்டனர்.

பாருங்கள், மன்னர் கோப்பெருஞ்சோழன் தன் தேவியின் கூந்தல் கௌவிய சிறுநெற்றியினை எட்டாம் நாள் வளர்பிறைக்கு ஒப்பிடுகின்றான்.

“மாக்கடல் நடுவண் எண்நாள் பக்கத்து
பசுவெண் திங்கள் தோன்றியாங்கு
கதுப்பு அயல் விளங்கும் சிறுநுதல்”

(குறுந்தொகை 129:3-5)

ஆயினும் சங்கம் மருவிய சிலப்பதிகாரக் காலத்தில் ‘அட்டமி’ என்ற வடசொல் பயில்கிறது.

“ஆடித் திங்கள் பேரிருள் பக்கத்து
அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று
வெள்ளி வாரத்து ஒள் எரி உண்ண
உரைசால் மதுரையொடு அரசு கேடுறும்”

(கட்டுரைக்காதை:133-136)

இங்கு ‘வாரம்’ எனும் சொல் கிழமை. சங்க இலக்கியங்களில் ஏழுநாள்கள் கண்ட வாரம் பற்றிய குறிப்பு ஏதுமில்லை. ஒரு திங்களினை அவர்கள் வாரங்களாக ஏழே நாட்கள் வீதம் வகுத்து வழங்கியதற்கான எந்தவிதத் தடயமும் கிடைக்கவில்லை. உரோமானியர் மார்ஸ் (மார்ச்), மெர்க்குரி (தொடர்பாக மே), ஜுபிடர் (தொர்ப்பாக வியாழன்) ஆகிய வரிசையிலேயே ஞாயிறும் திங்கள் செவ்வா, புதன், வியாழன் என்றும் பின்னாளில் அழகு தேவதையான ‘வீனஸ்’ (தொடர்பாக வெள்ளி), வேளாண் கடவுளான சாட்டர் (தொடர்பாக சனி) போன்றவையும் வரிசைப்படுத்தப்பட்டு இருக்கலாம். வடமொழியிலும் வார நாட்களை ரவிவார், சோமவார், மங்கல்வார், புதவார், குருவார், சுக்ரவார், சனிவார் என்றும், தமிழில் ஞாயிறு, திங்கள், செவ்வா, புதன், வியாழன், வெள்ளி, சனி என்றும் குறிக்கிறோம்.

அதாவது தமிழர்க்கு நாள் என்பது விடியலில் தொடங்குகிறது. முதல் நாள் விடியலுக்கும் அடுத்த விடியலுக்கும் இடைப்பட்ட பொழுதே நாள் அளவு. சூரிய விடியலே தமிழர்தம் நாள் தொடக்கம்.

வேனல் சமநோக்குநாள், இலையுதிர் சமநோக்கு நாள் ஆகியவற்று இடையே வடபாதிக்கோளத்தில் சூரியன் இயங்குவதாகத் தோன்றும் நிலையினை ‘வட அலை’ என்றும், தென்பாதிக் கோளத்தில் இயங்கும் நிலையினைத் ‘தென் அலை’ என்றும் வழங்குகிறோம். மேனாட்டார்க்கு நாள் பொழுது நடு இரவில் (12 மணி) தொடங்குவது மாதிரியே, சூரியனின் தென் அலையின் குளிர்காலத்தின் நடுவில் கூதிர்சந்தியில் (டிசம்பர் இறுதியில்) தொடங்குவது ஆங்கிலப் புத்தாண்டு.

மாறாக, பண்டைத் தமிழர்க்கோ சூரியனின் வட அலைக்கும் தென் அலைக்கும் நடுவிலான ‘சித்திரை விசு’ ஆகிய சமநோக்குநாள்- வசந்த விடியலே ஆண்டுத் தொடக்கம். அந்த மாதத்தில் முழுநிலா கன்னி உடுக்கணத்தில் சித்திரை விண்மீனில் தங்குகிறது என்றோம். சித்திரை, தமிழ் ஆண்டுப் பிறப்பு ஆயிற்று.

வெளிச்ச விடியலில் தொடங்கும் நாள் கணக்கிற்கு ‘ஞாயிறு போற்றுதும்’ என்றும், வசந்த விடியல் ஆகிய மாதக் கணக்கிற்கு ‘திங்கள் போற்றுதும்’ என்றும் நம்முன்னோர் வானவியல் உணர்வுடன் வாழ்ந்தனர்.

பழைய உரோமானிய நாட்காட்டியில் ஆண்டுக்காலத்தின் அளவினை 1582 அக்டோபரில் எட்டாம் போப் கிரகோரி என்பவர் பன்னிரண்டு மாதங்களாகப் பிரித்து வரையறுத்தார். இறுதி இரண்டு மாதங்களுக்குப் புதிதாக ஜனவரி, பெப்ரவரி என்ற தெவப் பெயர்கள் சூட்டப்பெற்றன. கிரேக்கக் காவல் தெவம் மற்றும் இறப்புக் கடவுள்களான ‘ஜேனுஸ்’, ‘ஃபெப்ருவோ’ ஆகியோர் பெயர்களால் ஜனவரி, பிப்ரவரி எனப் புதிய இரண்டு மாதங்கள் ஆண்டிறுதியில் சேர்க்கப்பட்டன. சூரியவீதியைப் பன்னிரண்டு சம பிரிவுகளாகப் பகுத்தாலும் உண்மையில் இந்தப் பன்னிரண்டு ராசிகளினூடே சமகால அளவில் சூரியன் சஞ்சரிப்பதில்லை என்பது வேறு கதை.

நம் முன்னோர்கள் ஆண்டுபிறப்பு தான் அலையாடுகிறது என்றால் சித்திரை தொடங்கி பங்குனி வரை மாதமும் தள்ளாட்டம் தான். சூரிய வீதியில் மேடம் (மேழம்-25 நாட்கள்), இடபம் (விடை-40 நாட்கள்), மிதுனம் (ஆடவை29 நாட்கள்), கடகம் (களவன்-20 நாட்கள்), சிம்மம் (மடங்கல்-37 நாட்கள்), கன்னி (45 நாட்கள்), துலாம் (துலை-23 நாட்கள்), விருச்சிகம் (நளி-வெறும் 6 நாட்கள் கொண்ட மாதம்!), ஒஃபியக்கஸ் (Ophiuchus குறிப்பிடப்படாத இந்த உடுக்கணத்தில் 19 நாட்கள்), தனுசு (சிலை-34 நாட்கள்), மகரம் (சுறவம்-

26 நாட்கள்), கும்பம் (24 நாட்கள்), மீனம் (38 நாட்கள்) போன்ற 13 ராசி மாதங்கள். இதுவும் கோளாறு. பின் என்னவாம், கோள் செல்லும் வழி 'கோள் ஆறு' தானே.

ஒவ்வொரு மாதத்திற்கும் முதலில் சரிசமமாக 30 நாட்கள் வகுக்கப்பட்டன. பின்னர் மிச்சம் இருந்த நாட்களை ஒன்றுவிட்டு ஒன்றாகக் கூட்டி-31, 30, 31, 30, 31, 30 31, 30, 31, 30, 31, 30 என்று வைத்தால் ஒரு ஆண்டிற்கு மொத்தம் 366 நாட்கள் என்று ஆகும். ஆனால் இதையும் மாற்றி, ஜூலையும் ஆகஸ்டும் 31 நாட்கள் என்று வைத்தபோது, இறுதியில் எஞ்சிய 28 நாட்கள் பிப்ரவரி மாதகணக்கில் சேர்க்கப்பட்டது. ஆயினும் வானவியல் அடிப்படையில் மிச்சம் உள்ள 0.242 நாட்களை நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை லீப் ஆண்டு என்று ஆக்கி அதையும் ஆண்டு இறுதியான பிப்ரவரியில் இணைத்தனர். லீப் ஆண்டில் பிப்ரவரிக்கு 29 நாட்கள்.

எனினும், இந்த 'கிரகோரியன் நாட்காட்டி' (Gregorian Calender) 'கூதிர் சந்தி' (Winter Solstice) அடிப்படையில் கிறித்து பிறந்த நாளையொட்டி ஜனவரி முதல் மாதமாயிற்று. தட்சிணாயன-உத்தராயன சந்திப்புப் புள்ளியாகிய கூதிர் சந்தியின் இரவு நடுநிசியினை மேனாட்டவர் வருடத் தொடக்கமாகக் கையாண்டனர். இதனால் தானே இன்றைக்கு இரவெல்லாம் கண்விழித்து ஆங்கிலப் புத்தாண்டு வரவேற்பு, டிசம்பர் 31 நடுராத்திரி ஆரவாரம்.

சூரியன் காலையில் கிழக்கில் உதிக்கும் முன்னதாகக் கீழை வானில் எந்த உடுக்கணம் மறைகிறதோ அந்த உடுக்கணத்தின் தோற்றமே அந்த மாதத்தின் பெயர் ஆயிற்று. அவ்வாறே, அதே நாளில் மேற்கே சூரியன் ம-றைந்த உடன் மேலை வானில் உதிக்கும் உடுக்கணமும் அதுவே. ஆனால் இந்தியாவைப் பொருத்தமட்டில், அந்நாளில் அந்த உடுக்கணங்களுக்கு வடமொழியின் மேஷம் (Aries), ரிஷபம் (Taurus), மிதுனம் (Gemini), கடகம் (Cancer), சிம்மம் (Leo), கன்னி (Virgo), துலாம் (Libra), விருச்சிகம் (Scorpio), தனசு (Sagittarius) மகரம் (Capricornus), கும்பம் (Aquarius), மீனம் (Pisces) என்கிற பெயர்கள் சூட்டப்பெறவில்லை என்பதே உண்மை .

அதாவது தமிழர்க்கு நாள் என்பது விடியலில் தொடங்குகிறது. முதல் நாள் விடியலுக்கும் அடுத்த விடியலுக்கும் இடைப்பட்ட பொழுதே நாள் அளவு. சூரிய விடியலே தமிழர்தம் நாள் தொடக்கம்.

அவ்வாறே, ஒரு தகவலுக்காக எடுத்துச் சொல்வதானால் மது, மாதவ, சுக்ர, சூச்சி, நபா, நபஸ்ய, இஷா, ஊர்ஜா, சாஹாஸ், சஹஸ்ய, தபாஸ், தபஸ்ய - ஆகியவையே யஜுர் வேதம் காட்டும் ஒரு ஆண்டின் பன்னிரண்டு மாதங்கள்.

சைத்ர (சித்திரை), வைசாக (வைகாசி), ஜ்யேஷ்ட (ஆனி), ஆஷாட (ஆடி), ச்ராவண (ஆவணி), பாதரபத (புரட்டாசி), ஆச்விநக (ஐப்பசி), கார்திக (கார்த்திகை), மார்கசீர்ஷ (மார்கழி), பௌஷ (தை), மாக (மாசி), பால்குந (பங்குனி) என்ற பெயர்கள் பிற்காலத்தவை. அவை சிந்துவெளித் திராவிடர்தம் கலப்பில் எழுந்த மாதப்பெயர்கள்.

இவ்விதம் தைமாதத்தில் தொடங்கும் தமிழர்தம் திருவள்ளுவ ஆண்டு என்பது வெறும் பருவங்கள் சார்ந்ததில்லை. அவை முறையே உழவுக்கும், தொழிலுக்கும், வணிகத்திற்கும், கல்விக்கும் முதன்மை அளிக்கும் வாழ்வியல் ஆண்டும் ஆகும். இருப்பினும் இன்று தமிழ் வருடப்பிறப்பு என்பது சித்திரைதான். ஆயின், தமிழர்க்கான திருவள்ளுவர் ஆண்டு தைமாதம் தொடங்கும். இந்த விலங்குகள், பொருள்களின் ம் கொண்ட உடுக்கணங்களையே தனித் தமிழில் சுறவம் (தை), கும்பம் (மாசி), மீனம் (பங்குனி), மேசம் (சித்திரை), விடை (வைகாசி), ஆடவை (ஆனி), கடகம் (ஆடி), மடங்கல் (ஆவணி), கன்னி (புரட்டாசி), துலை (ஐப்பசி), நளி (கார்த்திகை), சிலை (மார்கழி) என்று வரையறுத்து உள்ள னர்.

"இந்நூற்றாண்டின் முற்பகுதியில் திருவள்ளுவரின் அருமை பெருமைகளை நினைவூட்டும் வகையில், 'திருவள்ளுவர் ஆண்டு' எனும் சகாப்தத்தினைத் தமிழறிஞர் சிலர் நடைமுறைக்குக் கொண்டுவந்தனர்" ('சான்றோர் கண்ட திருவள்ளுவர்', பக்)) என்கிறார் 'திருக்குறள் மணி' டாக்டர் க.த.திருநாவுக்கரசு. அவர்களில் தமிழ்க்கடல் மறைமலை அடிகள், தமிழ்த்தென்றல் திரு. வி.க., தமிழ்க்காவலர் சுப்பிரமணிய பிள்ளை , சைவப் பாதிரியார் சச்சிதானந்த பிள்ளை , நாவலர் ந.மு வேங்கடசாமி நாட்டார், நாவலர் சோமசுந்தர பாரதியார், 'முத்தமிழ்க் காவலர்' கி.ஆ.பெ.விசுவநாதம், டாக்டர் சி.இலக்குவனார் போன்றவர்கள் சான்ற தமிழறிஞர்கள் ஆராந்து எடுத்த முடிவு திருவள்ளுவ ஆண்டு தமிழர்க்கு ஒரு தொடர் ஆண்டாக அமையவேண்டும் என்பதுதானே.

ஆதலால் நீண்ட ஆவுக்குப் பிறகு கி.பி. ஆண்டுடன் 31-ஐக் கூட்டி திருவள்ளுவர் ஆண்டு என்று முடிவானது. கி.பி.2021 என்பது திருவள்ளுவர் ஆண்டில் 2021+31-தி.பி.2052. இதே வழக்கம் 1971 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு நாட்குறிப்பிலும், 1972 ஆம் ஆண்டு அரசிதழிலும் 1981 ஆம் ஆண்டு முதல் அனைத்து அலுவல்களிலும் பின்பற்றப்பட்டன. திருவள்ளுவ ஆண்டு தை மாதத்தினை முதல் மாதமாகக் கொண்டுள்ளது. இதில்எந்தஅறிவியல்சிந்தனையும்இடம்பெறவில்லை. ஆயினும் தெளிவான தமிழுணர்வு தூக்கலாவே நிற்கிறது.

மாதமும் தள்ளாட்டம் தான். சூரிய வீதியில் மேடம் (மேழம்-25 நாட்கள்), இடபம் (விடை-40 நாட்கள்), மிதுனம் (ஆடவை29 நாட்கள்), கடகம் (களவன்-20 நாட்கள்), சிம்மம் (மடங்கல்-37 நாட்கள்), கன்னி (45 நாட்கள்), துலாம் (துலை-23 நாட்கள்), விருச்சிகம் (நளி-வெறும் 6 நாட்கள் கொண்ட மாதம்!), ஓஃபியக்கஸ் (Ophiuchus குறிப்பிட்டப்படாத இந்த உடுக்கணத்தில் 19 நாட்கள்), தனுசு (சிலை-34 நாட்கள்), மகரம் (சுறவம்-26 நாட்கள்), கும்பம் (24 நாட்கள்), மீனம் (38 நாட்கள்) போன்ற 13 ராசி மாதங்கள். இதுவும் கோளாறு. பின் என்னவாம், கோள் செல்லும் வழி 'கோள் ஆறு' தானே.

ஒவ்வொரு மாதத்திற்கும் முதலில் சரிசமமாக 30 நாட்கள் வகுக்கப்பட்டன. பின்னர் மிச்சம் இருந்த நாட்களை ஒன்றுவிட்டு ஒன்றாகக் கூட்டி-31, 30, 31, 30, 31, 30 31, 30, 31, 30, 31, 30 என்று வைத்தால் ஒரு ஆண்டிற்கு மொத்தம் 366 நாட்கள் என்று ஆகும். ஆனால் இதையும் மாற்றி, ஜூலையும் ஆகஸ்டும் 31 நாட்கள் என்று வைத்தபோது, இறுதியில் எஞ்சிய 28 நாட்கள் பிப்ரவரி மாதகணக்கில் சேர்க்கப்பட்டது. ஆயினும் வானவியல் அடிப்படையில் மிச்சம் உள்ள 0.242 நாட்களை நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை லீப் ஆண்டு என்று ஆக்கி அதையும் ஆண்டு இறுதியான பிப்ரவரியில் இணைத்தனர். லீப் ஆண்டில் பிப்ரவரிக்கு 29 நாட்கள்.

எனினும், இந்த 'கிரகோரியன் நாட்காட்டி' (Gregorian Calender) 'கூதிர் சந்தி' (Winter Solstice) அடிப்படையில் கிறித்து பிறந்த நாளையொட்டி ஜனவரி முதல் மாதமாயிற்று. தட்சிணாயன-உத்தராயன சந்திப்புப் புள்ளியாகிய கூதிர் சந்தியின் இரவு நடுநிசியினை மேனாட்டவர் வருடத் தொடக்கமாகக் கையாண்டனர். இதனால் தானே இன்றைக்கு இரவெல்லாம் கண்விழித்து ஆங்கிலப் புத்தாண்டு வரவேற்பு, டிசம்பர் 31 நடுராத்திரி ஆரவாரம்.

வெளிச்ச விடியலில் தொடங்கும் நாள் கணக்கிற்கு 'ஞாயிறு போற்றுதும்' என்றும், வசந்த விடியல் ஆகிய மாதக் கணக்கிற்கு 'திங்கள் போற்றுதும்' என்றும் நம்முன்னோர் வானவியல் உணர்வுடன் வாழ்ந்தனர்.

சூரியன் காலையில் கிழக்கில் உதிக்கும் முன்னதாகக் கீழை வானில் எந்த உடுக்கணம் மறைகிறதோ அந்த உடுக்கணத்தின் தோற்றமே அந்த மாதத்தின் பெயர் ஆயிற்று. அவ்வாறே, அதே நாளில் மேற்கே சூரியன் ம-றை றந்த உடன் மேலை வானில் உதிக்கும் உடுக்கணமும் அதுவே. ஆனால் இந்தியாவைப் பொருத்தமட்டில், அந்நாளில் அந்த உடுக்கணங்களுக்கு வடமொழியின் மேஷம் (Aries), ரிஷபம் (Taurus), மிதுனம் (Gemini), கடகம் (Cancer), சிம்மம் (Leo), கன்னி (Virgo), துலாம் (Libra), விருச்சிகம் (Scorpio), தனசு (Sagittarius) மகரம் (Capricornus), கும்பம் (Aquarius), மீனம் (Pisces) என்கிற பெயர்கள் சூட்டப்பெறவில்லை என்பதே உண்மை .

அவ்வாறே, ஒரு தகவலுக்காக எடுத்துச் சொல்வதானால் மது, மாதவ, சுக்ர, சூச்சி, நபா, நபஸ்ய, இஷா, ஊர்ஜா, சாஹாஸ், சஹஸ்ய, தபாஸ், தபஸ்ய - ஆகியவையே யஜூர் வேதம் காட்டும் ஒரு ஆண்டின் பன்னிரண்டு மாதங்கள்.

சைத்ர (சித்திரை), வைசாக (வைகாசி), ஜ்யேஷ்ட (ஆனி), ஆஷாட (ஆடி), ச்ராவண (ஆவணி), பாதரபத (புரட்டாசி), ஆச்விநக (ஐப்பசி), கார்திக (கார்த்திகை), மார்கசீர்ஷ (மார்கழி), பௌஷ (தை), மாக (மாசி), பால்குந (பங்குனி) என்ற பெயர்கள் பிற்காலத்தவை. அவை சிந்துவெளித் திராவிடர்தம் கலப்பில் எழுந்த மாதப்பெயர்கள்.

இவ்விதம் தைமாதத்தில் தொடங்கும் தமிழர்தம் திருவள்ளுவ ஆண்டு என்பது வெறும் பருவங்கள் சார்ந்ததில்லை. அவை முறையே உழவுக்கும், தொழிலுக்கும், வணிகத்திற்கும், கல்விக்கும் முதன்மை அளிக்கும் வாழ்வியல் ஆண்டும் ஆகும். இருப்பினும் இன்று தமிழ் வருடப்பிறப்பு என்பது சித்திரைதான். ஆயின், தமிழர்க்கான திருவள்ளுவர் ஆண்டு தைமாதம் தொடங்கும். இந்த விலங்குகள், பொருள்களின்பம் கொண்ட உடுக்கணங்களையே தனித் தமிழில் சுறவம் (தை), கும்பம் (மாசி), மீனம் (பங்குனி), மேசம் (சித்திரை), விடை (வைகாசி), ஆடவை (ஆனி), கடகம் (ஆடி), மடங்கல் (ஆவணி), கன்னி (புரட்டாசி), துலை (ஐப்பசி), நளி (கார்த்திகை), சிலை (மார்கழி) என்று வரையறுத்து உள்ள னர்.

"இந்நூற்றாண்டின் முற்பகுதியில் திருவள்ளுவரின் அருமை பெருமைகளை நினைவூட்டும் வகையில், 'திருவள்ளுவர் ஆண்டு' எனும் சகாப்தத்தினைத் தமிழறிஞர் சிலர் நடைமுறைக்குக் கொண்டுவந்தனர்" ('சான்றோர் கண்ட திருவள்ளுவர்', பக்)) என்கிறார் 'திருக்குறள் மணி' டாக்டர் க.த.திருநாவுக்கரசு. அவர்களில் தமிழ்க்கடல் மறைமலை அடிகள், தமிழ்த்தென்றல் திரு. வி.க., தமிழ்க்காவலர் சுப்பிரமணிய பிள்ளை , சைவப் பாதிரியார் சச்சிதானந்த பிள்ளை , நாவலர் ந.மு வேங்கடசாமி நாட்டார், நாவலர் சோமசுந்தர பாரதியார், 'முத்தமிழ்க் காவலர்' கி.ஆ.பெ.விசுவநாதம், டாக்டர் சி.இலக்குவனார் போன்றவர்கள் சான்ற தமிழறிஞர்கள் ஆராந்து எடுத்த முடிவு திருவள்ளுவ ஆண்டு தமிழர்க்கு ஒரு தொடர் ஆண்டாக அமையவேண்டும் என்பதுதானே.

ஆதலால் நீண்ட ஆவுக்குப் பிறகு கி.பி. ஆண்டுடன் 31-ஐக் கூட்டி திருவள்ளுவர் ஆண்டு என்று முடிவானது. கி.பி.2021 என்பது திருவள்ளுவர் ஆண்டில் 2021+31- தி.பி.2052. இதே வழக்கம் 1971 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு நாட்குறிப்பிலும், 1972 ஆம் ஆண்டு அரசிதழிலும் 1981 ஆம் ஆண்டு முதல் அனைத்து அலுவல்களிலும் பின்பற்றப்பட்டன. திருவள்ளுவ ஆண்டு தை மாதத்தினை முதல் மாதமாகக்கொண்டுள்ளது. இதில் எந்த அறிவியல் சிந்தனையும் இடம்பெறவில்லை. ஆயினும் தெளிவான தமிழுணர்வு தூக்கலாவே நிற்கிறது.

தமிழர் நாகரிகம் மாதிரியே, உலக நாகரிகங்கள் பலவும் தமக்கென்று ஒரு சகாப்தத்தினை வரையறுத்து வைத்துள்ளன. கி.பி.2000 என்பது ஹீப்ரு கணக்குப்படி 5760 ஆம் ஆண்டு. ஜப்பானிய நாட்காட்டியில் அது 2660 ஆம் ஆண்டு. திருவள்ளுவ ஆண்டு 2031. எனினும் இன்று உலக அளவில் அங்கீகரிக்கப் பெற்றுள்ள 'கிரகோரியன் நாள்காட்டியில் கிறித்தவ ஆண்டு கி.பி.2000. 'கிறித்துவுக்குப் பிறகு' ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகள் என்று பிற்காலத்தில் தோராயமாக மதிப்பிட்டு தீர்மானித்த காலம் இன்று பெரும் பரபரப்புடன் வரவேற்கப்படுகிறது.

உலகெங்கும் அப் உர்பே கண்டிதா, அசிரியன், ஆர்மீனியன், இக்போ , இஸ்லாமியம், ஈரானியன், எத்தியோப்பியன், காப்திக், கொரியன், சீனம், டிஸ்கோஃடியன், தித்பெதியன், பர்மியம், பஹாய, பாலினேய சாகா, பெர்பர், பிரிட்டீஷ், பைசான்டின்,

ம்கனைக்கும் அதிர்குரல் கார்வானம் நீங்க
பனிப்படு பைதல் விதலைப்பருவத்து
ஞாயிறு காயா நளி மாரிப் பின்குளத்து
மா இருந் திங்கள் மறுநிறை ஆதிரை விரிநூல்
அந்தணர் விழவு தொடங்க
புரிநூல் அந்தணர் பொலம் கலம் ஏற்பம்
(பரிபாடல்-11:74-79)

- என்றபடி அறவோர் எனப்படும் அந்தணர் வழி வருணாசிரமங்கள் புகுந்த பின் மாதங்கள் தோறும் சடங்கு, சம்பிரதாயங்கள் நடைமுறையாயின.

இங்கு 'ஞாயிறு காயா நளி' என்ற சொல் வெயில் கொடுமையில்லாத கார்த்திகை மாதத்தினைச் சுட்டும். சங்க காலத்தில் ஐப்பசி, கார்த்திகை அடைமழையால் குளங்கள் நிரம்பியிருக்கும். நளி (கார்த்திகை) மாரிக்குப் பின் அதாவது- 'மாரி கழி' அல்லது 'மாரி குளம்' - மருவி இன்று 'மார்கழி' என்றானது. இப்படியே ஒவ்வொரு தமிழ்மாதப் பெயர்களும் வழக்கில் வந்தன.

தமிழ்ச் சங்க காலம் உருவாகும் முன்னமேயே (கி.மு 2000-1000) சூரியன் தெற்கே 23.5 பாகை தாழ்ச்சியினைத்தொடும் கூதிர் சந்தி (*Winter solstice*) ப் பருவ கட்டத்தில் (தைமாதம்) சூரியன் மகர ராசியில் இருந்தது. ஆழ்கடல் நன்னீரோட்டத்தின் கடவுளாகக் கருதப்படும் பாபிலோனிய 'இயா' (*Ea*) எனும் தெவக் குறியீடு மகரம் (*Capricoinus*) எனும் நீர்ப்பிராணி. செம்மறியாட்டின் உடலும், மீனின் வாலும் கொண்ட அபூர்வத் தோற்றத்துடன் அது சித்தரிக்கப்பட்டது. கடலாழி என்றும் சுறவம் என்றும் சுட்டப்பெறுகிறது.

சங்க காலத்தில் சூரியன் 23.5 பாகை தெற்கே கூதிர் சந்தியின்போது மகரம் கடலாழி ('சுறவம்') வடிவ உடுக்கணத்தில் இயங்கியது. அதுவே தை (ஜனவரி-பிப்ரவரி) மாதம் - மகரப் பொங்கல், உழவர் திருவிழா .

ஆயின், 'ஞாயிறு போற்றும்' பழந்தமிழர் விடிகாலை சூரிய உதயத்தினை 'திருவள்ளுவ ஆண்டு'த் தொடக்கமாகக் குறித்தனர்.

நம் முன்னோர்கள் இறந்தவர்களைப் புதைப்பது இல்லை. சிதைமூட்டி எரித்தனர். தீயாகி வானில் விண்மீன்களாக ஒளிர்பவர்களையே வள்ளுவரும் "வானுறையும் தெவங்களுள் வைக்கப்படும்" என்கிறார். அந்த விண்மீன்களுக்குத் தம்முடன் வாழ்ந்த பெரியவர்களின் பெயர்களை வைத்து வழிபட்டனர். சிவ-சைவ என்றும், விஷ்ணுவைணவ என்றும் உரிச்சொற்கள் உருமாறுவதைப் போலவே 'தீ வழிபாடு' என்பது, 'தைவ வழிபாடு' ஆயிற்று. இன்றைக்கும் மலையாள, சிங்கள மொழிகளில் 'தைவம்' என்ற சொல் தெவத்தைக் குறிக்கிறது. தெவம் எனும் சொல் ஆண்டு, கடவுள் போன்ற பல பொருள் குறிக்கும். 'தெவ'த் திங்கள் அல்லது 'தெ'த் திங்கள் பின்னாளில் 'தை'த் திங்கள் ஆயிற்று எனலாம்.

இதில் இன்னொரு வேடிக்கை. கி.பி. 14000 ஆண்டில், அதாவது இன்றிலிருந்து சுமார் 12000 ஆண்டுகளுக்குப் பிறகு- 'அபிஜத்' (*Vega*) எனும்

பௌத்தம், மிங்குவா, வங்காளம், ரீஜினல், ஹீப்ரு, ஹோலிசீன், ஜாவனயம் ஜூச்சே, ஜூலியன் என்று பல்வேறு நாட்காட்டிமுறைகள் ஆங்காங்கே வழக்கில் உள்ளன.

"மன்னர்கள் ஆட்சி பன்னெடுங்காலமாக நிலை கொண்டிருந்த இந்திய நாட்டில் அம்மன்னர்களின் ஆட்சி ஆண்டு முதல் தொடரெண் ஆண்டுகளாக வழங்கப்பெற்று வந்துள்ளன. அவை கலியுக சகாப்தம் (கி.மு.3101), விக்கிரம சகம் (கி.மு. 57), திருவள்ளுவ ஆண்டு (கி.மு.31), சாலிவாகன சகாப்தம் (கி.பி.78), கேதி ஆண்டு (கி.பி.248), குப்தவல்லம் ஆண்டு (கி.பி.319), கங்கஅப் ஆண்டு (கி.பி496), ஹிஜரி ஆண்டு (கி.பி. 580), பசலி ஆண்டு (கி.பி.590), சுதர்சன் ஆண்டு (கி.பி.599), ஹர்ஷ ஆண்டு (கி.பி.606), கொல்லம் ஆண்டு (கி.பி.824), நேவார் ஆண்டு (கி.பி 879), இலக்ஷ்மணசேன ஆண்டு (கி.பி.1179) போன்றன. இவை தவிர சுழற்சி ஆண்டுகளும் புழக்கத்தில் இருந்துவருகின்றன" என்று தஞ்சை, தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடி ஆவு உதவியாளர் மோ.கோ. கோவைமணி (இந்திய காலக் கணிதம், பாமொழி பதிப்பகம், தஞ்சாவூர்-613 004) ஆராந்து உரைக்கிறார். இவை பெரும்பாலும், வடமொழிப்பெயர்கள் தாங்கிய மாதங்கள் அடங்கியவை.

இன்றைக்குத் 'புதிய' தை மாதத்தின் திருவள்ளுவர் ஆண்டு மாதிரியே கிறிஸ்து பிறந்த நாளையொட்டி ஆங்கில ஆண்டு கொண்டாடப்படுவது பிந்தைய வரலாறு.

ஏறத்தாழ 23.5 பாகை தென்கோடி மகர ராசியிலிருந்து சூரியனின் வடக்கு நோக்கிய ஆறு மாத காலப் பயணம் உத்தராயனம் ஆகும். அது 'கூதிர் சந்தி' (*Winter solstice*) நாளில் (டிசம்பர் 22) தொடங்குகிறது. சூரியன் மகர வடிவ உடுக்கணத்தில் சஞ்சரிக்கும். ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னர் அதுவே தைத்திங்கள் முதல் நாள். 'மகர சங்கிராந்தி' என்றும் வழங்குவர். ஆயின் சிந்துவெளி மக்கள்தம் ஆண்டுத் தொடக்க நாள் இது. பிற்காலத்தில் இதுவே திருவள்ளுவ ஆண்டுப் பிறப்பும் ஆயிற்று.

நாம் குறிப்பிட்ட 'ஒரை' உடுக்கணம் அருகே தோன்றும் 'மிருக சீர்ஷம்' (மான் தலை) என்ற சொல் மருவி - மார்கழி என்றானதாக வடநூலார் கருதுவர். ஆயின் உண்மை அதுவல்ல.

சிந்துவெளி நாகரிக உச்சக் காலகட்டத்திலிருந்தே (கி.மு.4000-கி.மு.2000) குளம் நீராடல் திராவிடத் தமிழர் மரபு. மொகஞ்சோதாரோவில் 39 அடி நீளமும், 23 அடி அகலமும், 8 அடி ஆழமும் கொண்ட நீராழிகள் (*Citadel*) பற்றிய தகவல்கள் அறிவோம்.

விண்மீனே நமது புதிய துருவ விண்மீனாக நிலைபெறும். அன்றைக்கு சூரியனின் வசந்த சம நோக்கு நாள் என்பது ஐப்பசி மாதம் துலாம் ராசியில் இடம்பெறும்.

அதனால் இன்னும் பத்தாயிரம் ஆண்டுகளின் பின் ஐப்பசி விசுவே தமிழ்ப் புத்தாண்டுப் பிறப்பாக மாறும். அன்றைக்கு மகர ராசியில் கோடை உச்சம். அதாவது அன்றைக்கு தை மாதத்தில் கத்திரி வெயில் கடுக்கும். சித்திரை மாதத்தில் இலையுதிர் சம நோக்குநாள் வரும். கூதிர் சந்தியோ ஆடி மாதம் வரும். இப்படித் தான் வானவியல் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு இருக்கிறது.

இத்தகைய பருவ மாற்றங்களுக்கு என்ன காரணம்? இந்தப் பூமி, சூரியனை நிலையான சுற்றுப்பா-தையில் இயங்குவது தெரியும். ஆனால் அந்தப் பூமியின் சுழற்சி அச்சு மெல்ல மெல்லத் தலையாட்டம் போடுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இந்த வானவியல் அடிப்படையில் தான் சிந்துவெளிக் காலம், சங்க காலம், இன்றைய ஆண்டுக் கணக்குகள் வகுக்கப்படவேண்டும். சிந்துவெளியின் திராவிட நாகரிகமும், சங்க காலத்திய பழந்தமிழர் நாகரிகமும் சார்ந்தே நம் பண்பாட்டு ஆதாரங்கள் நிறுவப்பட வேண்டியுள்ளது.

அதே தை மாதம் முழுநிலா நண்டுத் தோற்றங் கொண்ட 'களவன்' (கடகம்) உடுக்கணத்தில் கீழை வானில் தென்படும். கடகத்தில் அடங்கிய 'டெல்டா கான்சரி' (Delta Canceri) விண்மீன் ஒரு நீல (புஷ்ய) விண்மீன் என்பதால் வடமொழியில் 'நீலாம்பல்' என்று அர்த்தத்தில் 'பூசம்' என்றனர். தைப் பூசத் திருவிழா இன்று பிரபலம். ஆம்பல் குளத்தில் தைந்நீராடுகையில் கரைமணலில் ஊர்ந்து விளையாடும் 'களவன்' எனும் நண்டு (கடகம்) கவனிப்புக்கு உரியது.

மொகஞ்சோதாரோ மக்களின் பழம்பெயர் 'நண்டோர்' என்றும் 1953 ஆம் ஆண்டு மும்பையில் வாழ்ந்த 'ஹீராஸ்' (Heras) பாதிரியார் கருதுவார். பின்னாளில் வைணவ மரபில் துர்வாச முனிவரால் சபிக்கப்பட்டு மண்டூகம் (தவளை) ஆகிச் சிலம்பாற்றில் வாழ்ந்த முனிவருக்குச் சாப விமோசனம் தரவே திருமால் கள்ளழகராகி ('களவராகி'?) வைகையில் இறங்கி தரிசனம் தருகிறாரோ? கருத்த 'அளவன்' (அல்லது அழகன்?) ஆற்றில் இறங்குவது மதுரை வைபோகம். திருமாலுக்கு உகந்த ஆவணி மாதத்தின் இந்தப் பண்டிகை, இன்றைக்கு ஆடி மாதத்தில் முன்னேறி வருவது கவனிப்புக்கு உரியது.

இன்று அந்தக் குளிர்கால சந்தியானது - முன் கூட்டியே மார்கழியில் நிகழ்ந்து விடுகிறது. அன்றைய தினம் சூரியன் தனுசு ராசியில் நிலைபெறுகிறது. இன்றைய கூதிர்சந்தி வானவியல் ரீதியாக 25 நாட்கள் முன்னதாக 'மகர சங்கிராந்தி'க்குப் பதில் 'தனுசு சங்கிராந்தி'யின் மார்கழி மாதமே வந்துவிடுகிறது. அதாவது டிசம்பர் மத்தியில் 'புதிய' தை மாதமும் வருவதனால் கதிர் அறுப்பு ஏறத்தாழ அப்போதே முடிந்துவரும். ஆயின் 'தைப்பொங்கல்', மார்கழி மாதத்திலேயே கொண்டாட வேண்டும்.

அவ்வாறானால் திருவள்ளுவர் தினமும் கிறிஸ்துமஸ் பண்டிகையும் சற்றேறக்குறைய ஒரே காலகட்டத்தில் அமைந்துவிடுகிறது அல்லவா? இன்றைக்கு இந்த இரண்டு நிகழ்வுகளும் 20-25 நாட்கள் வேறுபாட்டில் உள்ளன என்று குறிப்பிட்டோம். இதனாலேயே பண்டைய தமிழ்ச்சங்க இலக்கியங்கள் சுட்டும் 'தைந்நீராடல்' இன்று 'மார்கழி நீராட'லாக மருவி விட்டது. அவ்வாறே, திருப்பள்ளி எழுச்சி ஓதும் மார்கழி விஷ்ணுவுக்கு உகந்த மாதம் என்று போற்றப்படுகிறது.

மார்கழி வைகுண்ட ஏகாதசியை ஒட்டியே ஆங்கிலேயர் கணக்குப்படி 'கிறித்துமஸ்' சிறப்பு விழாவும், கிரகோரியன் ஆண்டுப் பிறப்பும் என்க. ரம்ஜான் நோன்புத் தொடக்கமும் ஏறத்தாழ இதே காலகட்டத்தில் தான். எல்லாம் புத்தெழுச்சி, புத்துணர்வு, புத்துணவு, புத்துலகம் என்று புது நம்பிக்கை சார்ந்த பண்டிகைகள்.

இன்று நமக்கு நிலையான வடதுருவ விண்மீனாகத் தோன்றும் 'போலாரிஸ்' (Polaris) கூட நிலையானதன்று. காரணம், பூமிதன் சுழற்சி அச்சு நிலையானதில்லை. ஏறத்தாழ ஒவ்வொரு 400 ஆண்டுகளுக்கும் 3 பாகை வீதம் பூமி பம்பரம் போல் தலையாட்டம் (Precession) போடுகின்றது. இதனால் காலந்தோறும் பருவங்கள் மாறி வருகின்றன.

நம் வரலாற்றில் பண்டைய மாதங்கள் இடம் மாறவில்லை என்றாலும் வானவியல் அடிப்படையிலான வாழ்வியல் நிகழ்ச்சிகள் முன்னேறியே வருகின்றன. பூமியின் சுழற்சி அச்சுத் தள்ளாட்டத்தினால் இன்றைக்கோ வசந்த சமநோக்குநாள் இன்று பங்குனி மாதத்திலேயே முன்னேறி வருகிறது. பண்டைய ஏப்ரல் 14 நிகழ்ச்சிகள் எல்லாம் மார்ச் 21 அன்றே நடந்தேறி விடுகின்றன.

அன்றைய கார்த்திகைத் தீப ஒளித் திருநாள் இன்று ஐப்பசி மாதம் தீபாவளிப் பண்டிகையாகக் கொண்டாடப் பெற்று வருகின்றது. அதாவது புத்தொளி விழாக் கோலம்.

இதன்வழி இன்னொரு உண்மையும் அறியலாம். பண்டைத் தமிழர் வட அலைக்கும் தென் அலைக்கும் நடுவில் இரவும் பகலும் சமமாக அமைகிற சமநோக்கு நாட்களையே ஆண்டுத் தொடக்கமாகக் கொண்டு இருந்தனர். அதனாலேயே பெரும்பாலும் இத்தகைய தினங்கள் 'விசு' என்று குறிக்கப்பெற்றன.

தைத்திங்கள் முதல் நாளில் உழவர் பெருமக்கள் வேளாண்மை முடித்துப் பொங்கல் உண்பதும், வைணவப் பக்தர்கள் மார்கழியில் ஆண்டாள்-சுந்தர்ராஜன் திருக்கல்யாண விருந்து உண்பதும், இசுலாமிய நண்பர்கள் தம் விரதங்கள் முடித்து ரம்ஜான் உணவருந்துவதும் சடங்கு மாறினாலும், சம காலச் சம்பிரதாயங்கள் அல்லவா? ஆனாலும் வசந்த சமநோக்குநாள் அடிப்படையிலான தமிழ் ஆண்டுப் பிறப்பும், தமிழர்தம் தைமாதத் திருவள்ளுவர் ஆண்டுப்பிறப்பும் எதிர்காலத்தில் மாறும்.

கட்டுரையாளர்: விண்வெளி விஞ்ஞானி (ஓய்வு)

யாழன் ஆதி

நீர்மை

1
நீளாற்றின் கரையில் இரண்டு கொக்குகள் தனித்திருந்தன
அலைகளில் விளையாடிய காற்று கலைத்த சிறகுகளின்
அடர்த்தியை அவை தங்கள் அலகுகளால் கோதின
வியர்வையை அலசிய தொழிலாளியின் உடலை
நேசத்துடன் தழுவியது நதி
கால் வைக்கத் தயங்குமவளின் தந்தங்களின் ஒளியில்
மீனின் கண்கள் ஒளிர்ந்தன
எப்படி இருந்தாலும் தூரத்து மலைக்குன்றின் பச்சையத்தின்
வேர்கள் உறிஞ்சிக்கொண்டிருக்கும் ஆற்றின் மறுகரையில்தான்
நான் வசிக்கும் வீடு
இரவுகள் தங்கிய இருளின் தடங்கள் நிறைந்த அதன்
கூரையில் எப்போதும் கிடக்கிறது ஒரு பறவை
மிரண்ட கண்களில் அது எப்போதும் திரண்ட மேகங்களைப்
பார்த்துக்கொண்டேயிருக்கிறது
எந்தப் பொழுதென்றும் தெரியாத அதன் இருப்பில்
இன்னும் கிளறப்படுவது யாதெனில் என் தனிமை.

2
விரல்களுக்கு இடையில் ஒரு ரேகையென
இந்த நதி ஓடிக்கொண்டிருக்கிறது
எப்போதேனும் அதன் பரப்பு நீரால் நிறைவதால்
குளிர்ந்து மனம் நிறைந்திருக்கிறது அதற்கு
நீரற்ற நாட்களில்
அதன் தோலின் சிராய்ப்புகளில்
மருந்திட வக்கற்ற நமக்கு
கொஞ்சமும் வெட்கமில்லை.

நூல் அறிமுகம்

பேராசிரியர் மௌனகுரு

maunasiththan@gmail.com

இலங்கைத் தமிழர் வரலாறு

கிழக்கிலங்கையில் நாகரும் தமிழரும் (கி.மு. 250- கி.பி 300)

இலங்கைத்தமிழர் வரலாறு - கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும். (கி,மு. 250-கி,பி 300) எனும் இந்நூல் இந்து சமய கலசாரத் திணைக்களத்தால் 2016 இல் வெளியிடப்பட்டுள்ளது. 550 பக்கங்களைக்கொண்ட இந்நூலின் விலை2500/= அழகிய முறையில் குமரன் பதிப்பகம் இதனை அச்சிட்டுள்ளது. இதன் தொகுப்பாசிரியர் பேராசிரியர் பத்மநாதன் முப்பத்தி ஐந்து (35) கட்டுரைகளைக் கொண்ட தொகுதி இது. தானும் இதிலே பெரிய பெரிய கட்டுரைகளை எழுதியதுடன் வழிகாட்டியாக நின்று தொகுத்துமிருக்கிறார் பேராசிரியர் சி. பத்மநாதன்.

கிழக்கிலங்கையில் மிகப்பழங் காலத்தில் தமிழ் மொழி பேசுகின்ற அல்லது தமிழ் மொழியை தமது அரச அலுவல் மொழியாகக் கொண்ட நாகர் ராஜ்யங்கள் இருந்ததனை இந்நூல் கல்வெட்டு புதைபொருள் ஆதாரங்களுடன் நிறுவ முயன்றுள்ளது. எனவே இது ஒரு முக்கிய நூலாக தமிழ் ஆர்வலர்களால் வரவேற்கப்படுகிறது.

இந்தியப்பெரும் கண்டத்தில் நாகர்

நாகர் என்போர் பரதகண்டத்தில் பரவிவாழ்ந்த ஓர் பெரும் இனக்குழுமமாகும். தொன்மங்களில் நாகர் பற்றிய கதைகள் அதிகம் உண்டு, மஹா பாரதத்தில் இந்த நாகர் ஓர் முக்கிய இனக்குழுமமாக கூறவும் படுகிறது. நாகர் இனத்தை ஆரியர் வருமுன் இந்தியாவில்வாழ்ந்த இனக்குழுமம் என்பார் அம்பேத்கார். நாகரைப் பற்றி புராதன இலக்கியங்களான இராமாயாணம் மஹா பாரதம் புராணங்கள் போன்றவற்றில் கூறப்பட்டுள்ளன நாக மன்னர்கள் ஆட்சி சில காலங்களில் சில இடங்களில் நிலவியிருக்கிறது, சிசு நாகன் இந்திய வரலாறில் பேசப்படும் ஒரு மன்னன்.



இந்தியாவில் நாகலாந்து என்ற ஒரு மாநிலம் உண்டு. மௌரியர் குப்தர் போன்ற பின்னால் வந்த பேரசுகள் இவர்களை அடக்க மிகுந்த பாடுபட்டன என்ற செய்திகளும் உண்டு.

தமிழ் நாட்டின் வரலாற்று ஆரம்பமான சங்க காலத்தில் நாகர் இனத்தைச் சேர்ந்த பல புலவர்கள் இருந்திருக்கிறார்கள். புறத்திணை நன்னாகனார், மருதன் இளநாகனார், முரஞ்சியூர் முடிநாகராயர், வெள்ளைக்குடி நாகனார், போன்றவர்களைக் குறிப்பிடலாம். முடிநாகர் இனத்தைச் சேர்ந்த முரஞ்சியூர் முடிநாகராயர் சேர மன்னனான உதியஞ்சேரலை பாடியிருக்கிறார். இவர்கள் நாகவுருவைத் தலையில் அணிந்ததால் முடிநாகர் என்றும் சூட்டுநாகர் என்றும் அழைக்கப்பட்டனர். நாக வழிபாட்டில் ஈடுபட்டவர்கள் நாகரென்றும் அவர்கள் இந்தியப் பழங்குடிகளுள் ஒருவர் என்றும் பெரும்பாலான அறிஞர் கொள்வர். நாகர் பற்றி பல ஆய்வுகள் வந்துள்ளன.

இலங்கையில் நாகர்

பேராசிரியர் கணபதிப்பிள்ளை 1956 இல் வெளியிட்ட ‘இலங்கை வாழ் தமிழர் வரலாறு’ எனும் சிறு கைநூலில் புத்தர் மூன்று முறை இலங்கை வந்தபோது இரண்டாம் மூன்றாம் முறையாக நாக தீபத்திற்கும், கலியாணிக்கும் சென்றார் எனவும் அப்பகுதிகளில் நாகரே வசித்தனர் என மஹாவம்சம் கூறுவதாகவும் எழுதியுள்ளார்.

அத்தோடு பண்டைக்காலத்தில் நாகர் இலங்கையில் பரவி இருந்தமையை கி,பி 2 ஆம் நுற்றாண்டில் தோன்றிய மணிமேகலை வலியுறுத்துகிறது



பேராசிரியர் எஸ். பத்மநாதன்

இப்போது கல்வெட்டு அகழ்வாய்வுத் துணைகொண்டு கிழக்கிலங்கையில் கி.மு 250ஆம் ஆண்டளவில் தமிழ் பேசிக்கொண்டு தமிழில் கல்வெட்டுகள் இட்டுக்கொண்டு வேளாண்மை செய்து கொண்டு இரும்பினைப் பாவித்துகொண்டு நாக வழிபாடு செய்துகொண்டு அரசு அமைத்து வாழ்ந்த ஓர் இனக் குழுமம் பற்றிய கல்வெட்டு புதைபொருள் ஆய்வுகள் மூலம் நிறுவப்படுகிறது. கற்பனை எனக் கூறப்பட்ட ஒரு புராதன வரலாறு நிறுவப்படுகிறது.

எனவும் இன்று கந்தரோடை என அழைக்கப்படும் இடம் பண்டைய நாகர் குடியிருப்பின் தலை நகர் எனவும் கூறுவர். விஜயன் பிறப்பதற்கு முன்னரேயே நாகர் கடல் வணிகம் செய்து வளர்ச்சி பெற்றிருந்தனர் எனவும் இந்நாக சாதியினர் தமிழரோடு கலந்து தமிழராயினர் என்பதும் பேரா. கணபதிப்பிள்ளை அன்று கண்டடைந்த முடிவு.

வட இலங்கையில் நாகர்

நாகதீபம் எது எனத் தேடுவோர்க்கு யாழ்ப்பாணமே நாகதீபம் என வல்லிபுரச்செப்பேடு காட்டும் என வலியுறுத்தி நாகரை வட இலங்கையோடு தொடர்பு படுத்தியுள்ளார் பேரா, கணபதிப்பிள்ளை. அவர் காலத்தில் கிழக்கிலங்கையில் நாகர் குலம் இருந்தமைக்கான கல்வெட்டு புதைபொருள் இலக்கியச் சான்றுகள் கிடைக்காமையினால் அவர் கிழக்கிலங்கை நாகர் பற்றிக் கூறாது விட்டார். நாகதீபம் என்பது வடக்கில் மாத்திரமல்ல கிழக்கின் தென் எல்லை வரை பரந்திருந்தது எனும் எண்ணத்தை இந்நூலும் இதில் கண்டு உரைக்கப்பட்ட கல்வெட்டு புதை பொருள் படங்களும் எமக்கு காட்டுகின்றன.

கிழக்கிலங்கையில் நாகர்

கிழக்கிலங்கையிலும் மட்டக்களப்பிலும் நாகர் இருந்தனர் என வாய்மொழிக் கதைகளும் இங்கு வழக்கிலுள்ள நாகதம்பிரான் வணக்கமும் மட்டக்களப்பு மான்மியமும் சிலருக்கு இடப்பட்ட பெயர்களும் உணர்த்துகின்றன, இந்நாகர் கிழக்கிலங்கையில் மட்டக்களப்பிற்கு வடக்கேயும் தெற்கேயும் வாழ்ந்துள்ளனர் எனத் தெரிகிறது.

மட்டக்களப்பில் நாகர்

மட்டக்களப்பின் வழிபாடுகளுள் நாக வழிபாடும் ஒன்று, மட்டக்களப்பு சைவக் கோயில்கள் எனும் நூல் எழுதிய வி.சீ. கந்தையா மட்டக்களப்பில் அன்று இருந்த நாக வழிப்பாட்டுக் கோவில்களாக பதினெட் டுக் கோவில்களைக் கூறியுள்ளார். இக்கோவில்கள் மட்ட்டக்களப்பின் கரையோரப் பகுதிகளிலும் உள்ளே வயல் காட்டுப் பகுதிகளிலும் இருக்கின்றன.

நாக வழிபாடே இங்கு முக்கியம், சில பெண்கள் உரு வந்து நாகமாக நெளிந்து நெளிந்து ஆடும் முறை சில இடங்களில் இன்றும் உண்டு. இதற்கு பண்டாரியாவெளி நாகதம்பிரான் கோவில் வெகு பிரசித்தம். அங்கு அந்நாக வழிபாடு வந்ததற்கான கர்ண பரம்பரைக் கதையும் உண்டு. வனிதை என்னும் பெண்ணுக்குப் பிறந்த 7 பிளைகளில் ஒரு பிள்ளை நாகம் எனவும் அதனையே அவர்கள் பின்னால் வழிபட்டனர் என அக்கதை கூறும். அங்கு பூசை புரிந்தவர் நாக நம்பி என அழைக்கப்பட்டார்.

இது எமக்கு இச்சொல் இன்னுமொரு வரலாறு கூறுகிறது. வழக்கிலுள்ள நாகன், நாகமணி, நாகேஸ்வரி, நாகேஸ்வரன் எனும் பெயர்களும் வரலாற்றைப் புரிய உதவும் பேராகும்.

அன்று மட்டக்களப்பில் இருந்த குடிமகனாகக் கருதப்பட்ட நாகன் எனும் பறை வினைஞரான அப்பெரியாரும் அவரது வெற்றுடம்பும் குழுமிக் கோலமும் அவர் எழுப்பும் திண்ணென்ற பறை ஒலியும் ஞாபகம் வருகிறது. அவரது பெயர் நாகன். அதற்கு முன்னால் அவர் குலப்பெயரை இட்டு அன்று அழைத்தனர், இப்படியான பெயருடன் அன்று பலர் இருந்தனர். நாகன் நாகி என்ற பெயர்கள் பின்னால் நாக தம்பிரான் ஆனது அதன் பின் நாக ஈஸ்வரன் ஆகி ஈஸ்வரன் அந்தஸ்து பெற்றது. பெண் நாகம் நாக ஈஸ்வரி ஆனது. சிவனையே ஈஸ்வரன் என அழைப்பர். சிவனின் ஆபரணமானதால் அது சிவ அந்தஸ்தையும் பெற்றது.

சிவன் குழு நாக குழுவை வென்ற வரலாறும் இதற்குள் புதைந்து கிடக்கலாம் அல்லவா? இப்படி வாய்மொழித் தகவல்கள் கோவில் வழிபாடுகள் என்பன சரித்திர ஆவணமாக மட்டக்களப்பில் மலிந்து கிடக்கின்றன. தோண்டி எடுக்கும் திறனுடையோர்தான் இல்லை. இச்செய்திகள் கல்வெட்டு, புதை பொருள் ஆதாரம் மூலம் நிரூபிக்கப்படாமையினால் அது வரலாற்று ஆய்வாளர்களை ஈர்க்கவில்லை.

இதோ இப்போது நாகர் மட்டக்களப்பில் பரவி வாழ்ந்தமைக்கும் மட்டக்களப்பில் கி,மு 250 வருடங்களுக்கு முன்னரே நாகரிகம் மிகுந்த மக்கள் வாழ்ந்தனர் என்பதற்கும் கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன. கிழக்கிலங்கையில் ஒரு பெரும் நாககுல அரசு இருந்தமைக்கான சான்றுகளை இந்நூல் தருகிறது.

நூலும் நூலின் பகுப்பும்

இந்நூல் ஏழு அதிகாரங்களாகப்பிரிக்கப்பட்டுள் ளது. அதிகாரம் ஒன்றில், பரதகண்டத்தில் நாகர் பற்றியும் இந்தியத் துணைக்கண்டத்தில் அவர்களின் செல்வாக்கு பற்றியும் விபரமாகக் கூறப்படுகிறது. அதிகாரம் இரண்டில் இலங்கையின் பிராகிருத மொழிச் சாசனங்களில் நாகர் பற்றிச் சொல்லப்படும் குறிப்புகள் புதிய கண்ணோட்டத்தில் கூறப்படுகின்றன. அதிகாரம் மூன்றில் பிராகிருத மொழிச் சாசன வழக்கில் ஏற்பட்டுள்ள தமிழ் மொழியின் சொல்லாட்சி கூறப்படுகிறது. அதிகாரம் நான்கில் மட்டக்களப்பு பிராந்தியத்தில் அடையாளம் காணப்பட்ட தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் படங்களோடு விபரிக்கப்படுகின்றன. அதிகாரம் ஐந்தில் திருமலை அம்பாரை மாவட்டங்களில் காணப்படும் பெரும் கற்காலம் பற்றிக் கூறப்படுகின்றது. ஆறாம் அத்தியாயத்தில் மட்டக்களப்பு தேசத்தில் வாழ்ந்த நாக குலத்தவர் உருவாக்கிய வேள்புலங்கள் பற்றிக் கூறப்படுகிறது. ஏழாம் அத்தியாயத்தில் ஆதிகாலத்தில் மட்டக்களப்பு முக்கியமாக கிழக்கிலங்கையில் வாழ்ந்த நாகர் இனத்தவரின் வழிபாட்டு முறைகள் விபரங்கள், விளக்கங்கள் கூறப்படுகின்றன.

இதில் முதல் நான்கு பெரும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார் பேராசிரியர் பத்மநாதன் அவையாவன

1. பரத கண்டத்தில் நாகர்
2. பிராகிருத மொழிக் கல்வெட்டுகளில் நாகர்
3. பிராகிருத மொழிக் கல்வெட்டுகளில் தமிழ் மொழியின் செல்வாக்கு
4. மட்டக்களப்பில் நாகரின் பண்பாட்டுச் சின்னஙகள்

இந்த நான்கு கட்டுரைகளும் இதுவரை நாகர் பற்றி வந்த ஆய்வுகளை உட்செரித்து எழுதப்பட்ட கட்டுரைகளாகும். இவை கிழக்கிலங்கை நாகரை அறிந்துகொள்ளவும் பின்னால் வரும் கிழக்கிலங்கை நாகரின் தடயச் சின்னங்களைப் புரிந்து கொள்ளவும் பேருதவி புரிகின்றன. இலங்கைக்கு விஜயன் வந்த ஆண்டாக கி.மு 600 கூறப்படுகிறது. விஜயன் வருமுன்னர் இங்கு இயக்கர், நாகர் என இரு இனக்குழுக்கள் இருந்தனர் எனப் பல நூல்கள் கூறியுள்ளன.

இப்போது கல்வெட்டு அகழ்வாய்வுத் துணைகொண்டு கிழக்கிலங்கையில் கி, மு 250 ஆம் ஆண்டளவில் தமிழ் பேசிக்கொண்டு தமிழில் கல்வெட்டுகள் இட்டுக்கொண்டு வேளாண்மை செய்து கொண்டு இரும்பினைப் பாவித்துகொண்டு நாக வழிபாடு செய்துகொண்டு அரசு அமைத்து வாழ்ந்த ஓர் இனக் குழுமம் பற்றிய கல்வெட்டு புதைபொருள் ஆய்வுகள் மூலம் நிறுவப்படுகிறது. கற்பனை எனக் கூறப்பட்ட ஒரு புராதன வரலாறு நிறுவப்படுகிறது.

மேற்கிளம்பும் இரண்டு பிரதான விடயங்கள்

1. நாகரின் பேச்சு வழக்கு மொழி தமிழ் என்பது
2. கி.பி முதல் இரு நூற்றாண்டுகளில் கிழக்கிலங்கையில் தமிழர் சமூகம் உருவாகி கோலோச்சி செல்வாக்கினைப் பெற்றுவிட்டதென்பது.

20வருடகாலமாகதமிழ்பிராமிக்கல்வெட்டுகளைப் படித்த அனுபவமும் பயனுமே இந்நூலுக்கு அடிப்படை என்கிறார் பேராசிரியர் சி பத்மநாதன். தான் தேடிப் போகவில்லை கொணர்ந்து தந்தார்கள், மலைகளில் இருந்தவற்றைத் தவிர ஏனைய அனைத்து இடங்களையும் சென்று பார்த்தேன் என்கிறார் பேராசிரியர்.

இந்நூலாக்கத்தில் பேராசிரியர் பத்மநாதனுக்கு உதவியவர்கள்

மட்டக்களப்பிலிருந்து எழில்வாணி, பத்மநாதன், குணபாலசிங்கம், கிரிதரன், எட்வின், Dr.அருள் நிதி, ராகுலதேவி திருகோணமலைப் பகுதியிலிருந்து டாக்டர். சதீஸ், டாக்டர்.ஜீவராஜா இவர்களின் கட்டுரைகளும் அவர்கள் வழங்கிய தகவல்களும் சான்றுகளும் நூலை நிறைத்துள்ளன.

மட்டக்களப்பில் இலவாணை வேரம்,

பிளாக்குழிவேரம், கல்லடிச் சேனை, பாலாமடு, வந்தாறுமூலை, மாவடிவேம்பு, வாகரை, படிவெட்டினமலை, குடும்பி மலை, குசாலன் மலை, நாவற்குடா, களுவான்சிக்குடி, தாந்தாமலை, மகிழடித்தீவு, வெல்லாவெளி, விவேகானந்தாபுரம், தும்பங்கேணி, கழுமுந்தன் வெளி, நெடியமடு அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் உள்ள சங்கமன் கண்டி, கஞ்சிகுடிச்சாறு, காரதீவு, தம்பலகாமம், திருகோணமலை, திருக்கரசை, கோகர்ணம் என கிழக்கிலங்கையின் வடபகுதியிலிருந்து தென் பகுதிவரை 26 இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகள் புராதன பொருட்கள் அகழ்வாய்வுச் சின்னங்கள் இந்நூலில் உண்டு. இலங்கையின் புராதன வரலாற்று எழுத்தியல் எனும் பிரதான நீரோட்டத்துள் கிழக்கு மாகாணம் தனது கல்வெட்டு ஆதாரங்களுடன் இப்போது மிகுந்த வலிமையோடும் அழகோடும் பிரசன்னமாகிறதோ என்ற உணர்வையும் இது வரலாற்று நிர்ப்பந்தமோ என்ற சிந்தனையையும் இந்நூல் தருகிறது.

பேராசிரியர் பத்மநாதன் கருத்துகள்

இதன் முன்னுரையில் பேராசிரியர் பத்மநாதன் பெரும் கற்காலப் பண்பாட்டுச் சின்னங்களைக் குறிப்பிடும் போது அரசர் தலைவர் பற்றிக் குறிப்பிட்டாலும் அரசுக்கு அடித்தளமாக இருந்த உழைப்பாளர் உற்பத்தி நிலை ஆகியவற்றைக் கூறுவது வரவேற்புக்குரியது. அகழ்வாய்வில் அரசரையும் மதங்களையும் இலக்கு வைக்கும் நமது அகழ்வாய்வாளர் பலர் மக்களை மறந்துவிடுதல் இயல்பு. எங்கள் அகழ்வாய்வு இன்னும் சமூக அகழ்வாய்வாக பரிமாணம் பெறவில்லையே என்ற குறை சிலரிடம் உண்டு.

கிழக்கில் கள ஆய்வு

இங்கு பத்மநாதன் பின் வருமாறு கூறுகிறார். தென்னிந்தியாவில் இருந்தும் பரவிய ஆதி இரும்புக் கால மக்களே முதன் முதலாக உற்பத்திமுறை ஒன்றினை இலங்கையில் உருவாக்கினர். பயிர்ச்செய்கை, நீர்ப்பாசனம், உலோக வார்ப்பு, மட்கல உற்பத்தி, கிராம நகர அமைப்புகள், பண்டமாற்று, சந்தைப்படுத்தல், கடற்பிரயாணம் முதலிய யாவும் அவர்களின் நடமாட்டத்தோடு வழமையாகின என்கிறார்.

இங்கு அரச அமைப்புக்கு அடித்தளமாக விளங்கிய உற்பத்தி கூறப்படுகிறது. இதனை ஆதாரமாகவைத்து நாம் அன்றையகிழக்கிலங்கையில் மட்டக்களப்பின் சமூக அமைப்பை தொழில் பிரிவினைகளை கட்டமைத்துக் கொள்ளலாம். அத்தோடு கிழக்கிலங்கை முன்னோர் வாழ்ந்த வாழ்வையும் கற்பனை செய்துகொள்ளலாம்.

விஜயன் வருகையின் முன் இங்கு நாகரும் இயக்கரும் வாழ்ந்தனர் என்ற வாய்மொழிக் கதையும் புராணங்களும் உண்டு. இந்தக் கதையினை மட்டக்களப்பு பூர்வீக சரித்திரமும் பதிவு செய்துள்ளது. நாகர் இயக்கரோடு கலந்து ஒரு சமூகமானார்கள், அவர்கள் எல்லா நகரங்களிலும் ஆட்சி புரிந்தார்கள், உகந்தையில் அவர்கள் கூடி வாழ்ந்தனர், இது புராணக் கதையோ கற்பனைக் கதையோ அல்ல என்கிறார் பத்மநாதன். கணிக்கப்படும் ஒரு வரலாற்று ஆய்வாளரின் முக்கிய கூற்று இது.

இதில் இரு முக்கிய விடயங்கள் அடங்குகின்றன

1. இனக்கலப்பு பற்றியது

2. அரசுகளின் உற்பத்தி பற்றியது

பௌத்த மதம் வருமுன்னர் இலங்கையில் இயக்கரும் நாகரும் வாழ்ந்தனர் என மஹாவம்சம் கூறினும் அது இனக்கலப்பு பற்றிக் கூறவில்லை. ஆனால் இயக்கரும் நாகரும் மட்டக்களப்பு தேசத்தில் வாழ்ந்து கலப்புற்றனர் என்பதை மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. ஆனால் அக்கூற்றை வரலாற்று ஆய்வாளர் எவரும் இதுவரை கணக்கில் எடுக்க வில்லை. ஆனால் அக்கூற்றுகளை இந்த நூலில் வரும் புதைபொருள் கல்வெட்டு ஆதாரங்கள் நிரூபிக்கின்றன.

கறாரான சரித்திய ஆசிரியர்கள் எங்கே கல்வெட்டு, புதைபொருள் சாட்சிகள் என்று கேட்பர். அவர்கள் கேட்ட அந்தச் சரியான கல்வெட்டுச் சாட்சிகள் இப்போது

கிடைத்து விட்டன. இதனை மட்டக்களப்பு இளம் தலைமுறையினருடன் சேர்ந்து வெளிகொணர்ந்து விட்டார் பேராசிரியர் சி பத்மநாதன்.

புத்தளம் மாவட்டத்திலும் பெரும் தொகையான தமிழ்க் கல்வெட்டுகள் உள்ளன. அவை தமிழ்ப் பிராமி வடிவங்களில் உள்ளன. அவற்றுள் சில கடந்த இரு வருடங்களுள் அடையாளம் காணப்பட்டன. அதனால் இலங்கை வரலாறு தொடர்பாக நான்காவது வகையான ஆவணங்கள் இப்போது கிடைக்கின்றன. இவற்றைப் பரிசீலனை செய்வதன் மூலம் ஆதிகால இலங்கை வரலாற்றிலும் இலங்கைத் தமிழரின் உற்பத்தி பற்றிய சிந்தனைகளிலும் பெருமளவிலான மாற்றங்கள்; ஏறபடக்கூடிய நிலை உருவாகிவிட்டது என்பது அவரது கூற்று. இக் கூற்று அவரது சிந்தனைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதையும் காட்டுகின்றது போல எனக்குப்படுகிறது.

கறாரான கல்வெட்டு ஆதரம் தேடும் அவர் வாய்மொழி ஆதாரங்களையும் சரித்திர ஆதாரமாக இப்போது எடுக்க ஆரம்பித்துள்ளார். இது மற்றோர்க்கு ஒரு முன் மாதிரி. மன்னரையும் உயர் சமயத்தையும் தேடிய அவர், இங்கு மக்களையும் மக்கள் சமயத்தையும் முக்கியமாக உற்பத்தி முறையினையும் உழைக்கும் மக்களையும் கவனம் கொள்கிறார். அவரது இத்தகைய சிந்தனை மாற்றம் அவர்மீது நமக்கு அதிக மரியாதையை ஏற்படுத்துகிறது.

நாகருக்கு முன்னர் கிழக்கிலங்கையில் இருந்தோர் யார்?

நாகர் தமிழர் அல்ல என்பதும் அவர்கள் தமிழராகி பின்னர் தமிழ் மொழியினை தமது ஆட்சி மொழியாக்கி அதில் கல்வெட்டுகளும் செய்தனர் என அறிகிறோம். அவர்களே கிழக்கிலங்கையில் இரும்புப் பண்பாட்டையும் உழுதொழிலையும் அறிமுகம் செய்தனர் எனவும் அறிகிறோம். அவர்கள் நாக வழிப்பாட்டினர் என்றும் நாக வழிபாட்டுடன் இங்கு வந்த அவர்கள் பின்னர் சைவராயும் அதன்பின்னர் பௌத்தராகவும் மாறினர் என்றும் பெரும் நாகரிகம் கண்டு வாழ்ந்தனர் என்றும் அறிகிறோம்.

ஆரியர் வருகைக்குப்பின்னர் தான் இலங்கையில் நாகரிகம் புகுந்தது என்ற மரபுக்கதைக்கும் இதற்கும் மிகுந்த வேறுபாடுண்டு. ஆரியர் வருமுன் அதாவது விஜயன் வருகையின் முன் ஒரு வளர்ச்சியடைந்த பண்பாடு இலங்கையில் இருந்தமைக்கு பல சான்றுகள் இன்று கிடைக்கின்றன,

அப்பண்டிற்குரியர் நாகர் என்பது மெல்ல வெளிச்ச மாகின்றது. நாகரோ வந்து குடி ஏறியவர்கள். அப்படியாயின் நாகர் பண்பாடு இலங்கைக்கு வருமுன் இங்கிருந்தோர் யாவர்? அவர்களின் பண்பாடு என்ன? என்ற கேள்விகள் எழுகின்றன. நாகருக்கு முன்னர் இருந்த இயக்கர் எனும் குழு பற்றியும் தகவல் கிடைக்கிறது. இயக்கரும் நாகரும் கலந்தனர் என மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.

வரலாற்றில் இனக்குழுமக் கலப்பு, பண்பாட்டுக் கலப்பு என்பன ஏற்படுவது சகஜம், அக்காலத்தில் இலங்கையில் தமேட. பத, பரத, நாக கபோஜ பமன புலிந்த என்ற இனக்குழுக்கள் வாழ்ந்ததாக அறிகிறோம். இக்குழுக்களில் ஒரு குழுவே கிழக்கு மாகாணத்தில் இன்றும் தனியாகவும் ஏனைய இனக்குழுக்களுடன் கலந்தும் வாழும் வேடர்குலத்தின் மூதாதைக் குழு ஆகும்.

நாகருக்கு முந்திய கிழக்கு மாகாண வரலாறு

நாகர் வருமுன் தமக்கான நாகரிகத்துடனும் பண்பாட்டுடனும் வணக்க முறையுடனும் வாழ்க்கை முறையுடனும் இப்பூர்வீக குடிகள் வாழ்ந்திருக்கலாம், இன்று வேடர் எனவும் வேட வெள்ளாளர் எனவும் அழைக்கப்படும் அப்பூர்வீக குடிகளே கிழக்கிலங்கையின் ஆதிக் குடிகளாகும், இதற்கான கல்வெட்டு ஆதாரங்கள் இல்லாதிருக்கலாம். ஆனால் இன்றுவரை அப்பூர்வீக குடிகள் மத்தியில் நின்று நிலவும் வழிபாட்டு முறைகளும் வழிபடு தெய்வங்களும், வாய்மொழிக் கதைகளும் அவ்வின இருப்புக்குச் சான்று பகருகின்றன.

உத்தியாக்கள் (இறந்த முன்னோர்), குமரா, மாறா. மாநீலி, குடா நீலி, தெவுத்தன், முந்த, முக்காட்டுத் தெய்வம், ஆலாத்தித் தெய்வம், வதனமார் என்கின்ற தெய்வ வணக்கங்கள் இன்றும் கிழக்கிலங்கை பூர்வீக குடிகளிடையே வணங்கப்படும் தெய்வங்களாகும். இவற்றிற்கான வழிபாட்டு முறைகளும் இந்து மத வழிபாடுகளிலிருந்து முற்றிலும் வேறானவை.

கிழக்கிலங்கையின் தெற்கே கதிர்காமக் கந்தசாமி கோவில் தொடக்கம் திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமிக்கூடாக கொக்கட்டிச் சோலை தாந்தோன்றீஸ்வரர் மண்டூர் கந்தசாமி கோவில் ஆகிய கோவில்களை உடறுத்து கிழக்கின் மத்தியிலுள்ள அமிர்தகளி மாமாங்கப் பிள்ளையார் கோவில் சிற்றாண்டிக் கந்தசாமி கோவில் என்று சென்று மட்டக்களப்பின் வடக்கே வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோவில் வரையுள்ள முருகன் ஆலயங்களின் உரித்தாளர் இப்பூர்வ குடிகளான வேடர்களே என்ற ஒரு கர்ண பரம்பரைக் கதையும் உண்டு.

கிழக்கிலங்கை வேடர் பற்றி சலிக்மான் கூறியுள்ளார். எனது மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள் எனும் ஆய்வு ஏட்டில் 1980 களில் நான் கிழக்கிலங்கை வேடரிடையே காணப்படும் வழிபாடு பற்றிக் கொணர்ந் துள்ளேன், சமூகவியலாளர் யுவி

தங்கராஜாவும் இதனை ஆராய்ந்துள்ளார். இதனை மேலும் வளர்த்தெடுத்தவர் எ. விஜயரட்ணம் (விஜய்) ஆவர். அவர் எழுதிய நூல் மட்டக்களப்பு வரலாறு- பூர்வீக குடிகளும் குமாரதெய்வ வழிபாடும் ஆகும். தங்கேஸ்வரி, வெல்லவூர்க் கோபால், ஈழத்துப் பூராடனார் போன்றோரும் இப்பூர்வீக குடிகள் பற்றித் தம் ஆய்வு நூல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

அண்மைக் காலமாக இளம் ஆய்வறிஞரான கமலநாதன் பத்திநாதன் எழுதும் கிழக்கிலங்கையின் பூர்வீக குடிகள் முக்கியமாக வேடர் பற்றிய பண்பாடு சார்ந்த கட்டுரைகள் நமது கவனத்தைப் பெரிதும் ஈர்க்கின்றன. உள்ளிருந்து வரும் அவரது தேடலும் விபரங்களும் மிக மிக முக்கியமானவையாக எனக்குப் படுகின்றன, இவர் ஒரு வரலாற்று ஆய்வாளரல்ல. ஆனால் சிறந்த பண் பாட்டு ஆய்வாளராகக் காட்சி தருகிறார். வேடர் எனும் பூர்வீக குடிகளின் இன்றைய வாழ்வுமுறையை அவர் கட்டுரைகளில் தரிசிக்கிறோம்.

இத்துறையில் பேராசிரியர் இன்பமோகனின் அண்மைக்கால நூலும் முக்கியமான ஒரு நூலே. அந்நூலின் பெயர் இலங்கையில் வேடர் வாழ்வியலும் மாற்றங்களும் என்பதாகும். இவ்வெழுத்துகளை கணக்கில் எடுத்து நம் வரலாற்று ஆய்வாளர்கள் முன் செல்வராயின் நாகருக்கும் முந்திய கிழக்கிலங்கைப் பூர்வீக குடிகளிலிருந்து நாம் கிழக்கிலங்கையின் வரலாற்றை ஆரம்பிக்க முடியும். கிழக்கிலங்கை வரலாறும் மேலும் வெளிச்சம் பெறும்.

வரலாற்றை எழுதுவோர் யார்?

வரலாற்றை எழுத வேண்டியவர்கள் பல்கலைக்கழக வரலாற்று அறிஞர்களே என்ற பொதுக்கருத்துண்டு, ஏனெனில் அவர்களே அங்கு அதனை முறையாகப் பயில்கிறார்கள் - படிப்பிக்கிறார்கள் என்பதாலேதான். இங்கோ இதனைச்செய்ய பல்கலைக்கழகம் முன் வராதபோது ஆர்வம் மிகுந்த மக்களே வரலாற்றுச் சின்னங்கள் தேடி அலைவதையும் வரலாறு உருவாக்க முனைவதையும் காணுகிறோம். இதில் lhக்டர்மாரும் இணைந்தமை கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அறிஞர் செய்யாவிடின் மக்கள் செய்வர் என்பதே உண்மை. அவர்களின் வேகத்தையும் ஆர்வத்தையும் புரிந்துகொண்ட பேராசிரியர் அவர்களை நன்கு வழிப்படுத்தி, செயற்படுத்தி வெற்றியும் கண்டுள்ளார்.

மக்களின் வரலாற்றார்வம் என்பது அண்மைக்காலப் போக்கு ஆகும். இதில் நன்மையும் உண்டு தீமையும் உண்டு, அதனை விவாதிக்க இது சந்தர்ப்பம் அன்று. தளர்ந்துபோன உடல் நிலையிலும் முதுமை வயதிலும் தானும் இயங்கி தன் மாணாக்கரையும் இயக்கும் பேராசிரியர் பத்மநாதனிடம் இன்றைய தலைமுறை கற்பதற்கு நிறைய உண்டு.

பேராதனைப் பலகலைக்கழகத்தில் 1960 களில் வரலாறு பயின்றவன் நான். அவரின் அசாத்திய உழைப்பை அர்ப்பணிப்பை ஆழ்ந்த வாசிப்பை நான் நன்கு அறிவேன். அவரோடு தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சக ஆசிரியனாக இருக்கும் வாய்ப்பையும் இயற்கை எனக்கு அளித்தது.

2003ம் ஆண்டில் கிழக்கிலங்கையில் இந்து சமய மஹாநாடு ஒன்றை வைக்க இந்து சமய கலாசார அமைச்சு விரும்பியபோது அதற்கு ஆலோசகராக இருந்த பேராசிரியர் பதமநாதன் சமயம் பற்றிய என் கருத்தியலை நன்கு அறிந்திருந்தும் அதன் முழுப் பொறுப்பையும் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு அளித்து அதற்குப் பொறுப்பாளராக மௌனகுருவையே போடுங்கள் என ஆலோசனையும் வழங்கினார். நான் மறுத்த போது உரிமையோடு வற்புறுத்தினார், அன்பால் வென்றார், அப்போது நான் நுண்கலைத்துறைத் தலைவராகவும் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத் தலைவராகவும் பணியாற்றிக் கொண்டிருந்தேன். நான் பொறுப்பெடுப்பின் இன்னது இன்னது செய்வேன் என அவருக்கு எடுத்துரைத்தேன். அதனோடு சிற்சில மாறுபாடுகள் அவருக்கு இருப்பினும் அவற்றை ஏற்றுகொண்டவர் அவர்.

மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்து மதம் எனும் தலைப்பில் நாம் ஒரு பெரிய கண்காட்சியும் கருத்தரங்கும் வைத்தோம். மக்கள் பேராதரவு தந்தனர், சிறுதெய்வக் கோவிகளில் வைக்கப்படும் சிலம்பு, அம்மனைகாய், வைரவன், போல்லு முகக்களை தீபம், தூபம், சூல வேல், வாள் வில், அம்பு, கயிறு, நாக தீபங்கள் என அவர்கள் தந்த வழிப்பாட்டுப் பொருட்கள் மிக அதிகம். மாணவர் இரவு பகலாக ஒத்துழைத்தனர். அதில் வெளிவந்த நூல்தான் மட்டக்களப்பு தமிழகத்தில் இந்து மதம் எனும் நூல். அந்நூல் மட்டக்களப்பின் ஆகமம் சார் இந்து மதங்களையும் ஆகமம் சாரா மக்கள் மதங்களையும் அறிமுகம் செய்யும் ஒரு நூல்.

கண்காட்சி இரண்டு மூன்று நாட்கள் நடைபெற்றன, ஆயிரக்கணக்கானோர் வந்து பார்வையிட்டனர். அந்நூலிற்கு விதையிட்டவர் அவர் என்பதே. நான் இங்கு கூறவிரும்புவது, பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்று அறைக்குள் பெரும் பெரும் புத்தகக் கட்டுகளுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும் அவரது அன்றைய இளம் தோற்றம் ஞாபகத்திற்கு வருகிறது, அவர் போல அன்று பல பேராசிரியர்கள் தத்தம் துறைகளில் உழைத்தனர். அவர்கள் யாவரும் எமது வழிகாட்டிகள்.

இந்நூல் பற்றிய எனது விமர்சனக்குறிப்பை பின்னொரு போது வரைவேன்.

இப்போதைக்கு அவரை நான் மனப்பூர்வமாக வணங்குகிறேன். அவர் வழிகாட்டலில் பயணம் செய்து அனுபவம் பெற்ற கட்டுரை ஆசிரியர்களை வாழ்த்தி அவர் பணியை அவர்கள் கையேற்றுத் தொடர வேண்டும் என்று கேட்டும் கொள்கிறேன்.

குறிப்பு:
இங்கு குறிப்பிடப்படும் நூல்களான இலங்கை வாழ் தமிழர் வரலாறு, மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு வரலாறு என்பவற்றை https://noolaham.org/ நூலகம் ஓர்க் இணைய நூலகத் தளத்தில் காணலாம்.

கட்டுரையாளர்: பேராசிரியர் (ஓய்வு)
யாழ்ப் பல்கலைக்கழகம்

ஊர்சுற்றிக் காக்கையார்

தொகுப்பு: க. முகுந்தன்

1 | ஆவணமாக்கப்பட்ட கோலங்கள்

கேள்வி: ஓவியம், சிற்பம் குறித்து பொது மக்களிடம் ரசனை வளரவில்லையே . இது ஏன்?

ஒரு கிராமத்துப் பெண் காலையில் எழுந்தவுடன் என்ன செய்கிறாள் சொல்லுங்கள்? அவளுக்கு எவ்வளவோ கவலைகள் இருந்தாலும் , முதல் வேலையாக வாசல் தெளித்துக் கோலம் போடுகிறாள்.. தினமும் ஒரு கலை வெளிப்பாட்டைச் செய்துவிட்டுத்தான் தன் நாளைத் தொடங்குகிறாள். இதுதான் தமிழனின் ஓவிய மரபு. ஆனால் இந்தக் கோலங்களை ஆவணப்படுத்தி உலக அளவில் கொண்டு செல்வதற்கு ஷந்தால் ஜுமால் எனும் ஒரு பிரெஞ்சுக்காரப் பெண்மணிதான் வரவேண்டி இருக்கிறது. ஒவ்வொரு மார்கழி மாதமும் பிரான்சிலிருந்து தமிழ்நாட்டுக்கு வரும் ஷந்தால் ஜுமால் பல்வேறு கோலங்களைத் தொடர்ந்து ஆவணப் படுத்தி வருகிறார்.

அதே நேரத்தில் தமிழர்களாகிய நாம் என்ன செய்கிறோம் பாருங்கள்? அடுக்கு மாடிகளில் கோலம் போட இடமில்லை என்று கோலம் படம் போட்ட பிளாஸ்டிக் ஸ்டிக்கரை வாங்கி வந்து வாசலில் ஒட்டி விடுவதோடு சரி. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் செல்லும் நாம் அர்ச்சனை செய்வதோடு கோயிலை விட்டு வெளியே வந்து விடுகிறோம். தூண்களில் உள்ள சிற்பங்களின் நுணுக்கங்களை ரசிப்பதற்கு கொஞ்சம் நேரம் ஒதுக்கி இருக்கிறோமா? அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட மதுரை மண்டபத்தை நாம் சந்தைக் கடையாகத்தானே வைத்திருக்கிறோம்? ஒரு கிராமதேவதைகளின் சுடுமண் சிற்பங்களின் கலை நுட்பங்களை நாம் ரசித்து இருக்கிறோமா? ”சிற்பியின் நரகம்” எனும் சிறுகதையில் புதுமைப் பித்தன் இந்த கேள்வியைத்தான் எழுப்புகிறார்.

கிராமத்தில் ஒரு காலைப் பொழுதில் இயல்பாகக் கோலமிடல்

பிரான்ஸ் தமிழர் திருநாள் 2007 ஷந்தால் ஜுமால் புள்ளியிட்ட மாக் கோலம் (Kolam Chantal Jumel).

ஒரு கணிதத்தைச் சொல்லிக்கொடுப்பது போல ஓவியத்தை, சிற்பத்தை ரசிப்பது எப்படி என்று சொல்லிக் கொடுக்க வேண்டியது இன்று அவசியமாகிறது.. எனவேதான் கலையை ரசிப்பது எப்படி என்று நான் பேசும் பல காணொளிகளை சுருதி டிவி கபிலன் தனது யூ டியூப் சானலில் வெளியிட்டு வருகிறார். ஓவியத்தை எப்படி ரசிப்பது என்பதை பள்ளிக்கூடங்களில் ஒரு பாடமாக நாம் வைக்க வேண்டி இருக்கிறது. ஒருமுறை லண்டனில் இருக்கும் விக்டோரியா ஆல்பர்ட் மியூசியத்தில் தொடக்கப்பள்ளிக் குழந்தைகளைக் கொண்டு வந்து மாபெரும் இங்கிலீஷ் ஓவியர்களான டர்னர், கான்ஸ்டேபுள் ஆகியவர்களின் ஓவியங்களின் முன் அமரச்செய்து அந்த ஓவியங்களை ரசிப்பது எப்படி என்று பாடம் நடத்திக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

இந்திரன் (தமிழ்நாடு) டிசம்பர் 2021

எழுத்தோவியக் கலைக் கூடத்தில் சிறார்களுடன் விபி வாசுகன் பிரான்ஸ் 28.10.2021

2 | TAMIL CALLIGRAPHY

தமிழ் எழுத்தோவியப் [எழுத்தணிக்கலை] படைப்பு

பிரான்ஸ் புலம்பெயர்வு வாழ்வின் நீட்சியில் ஓர் இயங்கு நிலை ஓவியராகத் தொடர்பவர் பி பி வாசுகன். சென்ற 2021 ஒக்ரோபர் 28ல் பாரீசின் கிழக்கு நகரான மொந்துரோய்(Montreuil) நகரிலுள்ள கலை அரங்கில் தமிழ் எழுத்தோவிய (எழுத்தணிக்கலை) நிகழ்த்துகை அரங்காக பல்தேசியப் பார்வையாளர்களுக்கு மத்தியில் சுமார் இருபத்தைந்து நிமிட நேரத்தில் நிகழ்த்தினார்.

ஆதி மனிதர்களது சிந்தனைப் பகிர்வுகளின் வரிவடிவ நீட்சியாகவே மொழிகளின் எழுத்துரு உருவானதாக மானிடவியலாளர்கள் கூறுவார்கள். அப்படியாக வந்த உருக்களின் தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சிதான் எழுத்துகளாக தற்போது நாம் பயன்படுத்தி வருபவை.தொன்மமும் தொடர்ச்சியும் நீட்சியுமாகப் பயணிக்கும் தமிழின் உயிர் எழுத்துகளையும் ஆயுத எழுத்தையும் அடிப்படையாகக் கொண்டு ஒரு சுவரோவிக் காட்சி நிகழ்த்துகையாக்கினார் துடிப்பான ஓவியர் வாசுகன். சிறாருடன் இருந்த அரங்கு குண்டூசி வீழ்ந்தால் ஓசை எழும் வகையில் அமைவுடன் உற்று நோக்கியவாறிருந்தது. ஓவியர் அங்குமிங்குமாக விறுவிறுவென நடமாடும் போது மிதிபட்டு நசுங்கிய முட்டைக் கோதுகளின் ஒலி இயற்கையாக இருந்தது. கரி மஞ்சள் கிழங்கு ஃபிறைஸ்(fraise) பழம் ஆகிய இயற்கைப் பொருட்களை மட்டுமே இந்த ஓவிய வரைதலுக்குப்

கீழடி எழுத்தோவியம் தோழர் த சௌந்தர் (இங்கிலாந்து)

ஓவியம் டிராட்ஸ்கி மருது

பயன்படுத்தினார். இந்நிகழ்வை முகநூல் வழியில் தமது திறன்பேசி மூலம் காணொலிப் பகிர்வை வழங்கினார் நண்பர் பார்தீ. *https://www.facebook.com/p.thipan/videos/359129842655972* இது உலகமெங்கும் பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்களைச் சென்றடைந்திருக்கிறது. பார்வையாளர்களில் ஒருவனாக ஓவியரின் மகன் நதியானும் பங்கேற்றிருந்தான். ஓவிய வரைதலில் இருந்து அவ்வப்போது விடுபட்டு விலகி பார்வையாளர் நோக்கிலிருந்து பார்வையிட வந்து செல்வார். அப்படியாக இவர் வரும்போதெல்லாம் இந்த மகன் மலர்ந்த முகத்துடன் தந்தையின் முதுகைத் தடவி உற்சாக மூட்டுவதைக் கண்ணுற்று மெய்சிலிர்த்தேன்.

நிகழ்வு முடிய அரங்கம் எழுந்து நின்று கரகோசமிட்டது. அங்குவந்திருந்த சிறார்களை ஓவியர் சுவரின் பிறிதொரு பாகத்தைக் காட்டி நீங்களும் வரையலாம் என அழைப்பு விடுத்தார். மிகுந்த மகிழ்வோடு துள்ளிச் சென்ற நான்கு சிறார்களும் தமிழின் உயிர் எழுத்துகளை உற்சாகமாக வரையத் தொடங்கினார்கள். இதுவரை தமிழே கற்றிராத சிறுவர்களும் தமிழ் உயிரை தன்னார்வத்தோடு வரைய அரங்கில் கிளர்ந்த மகிழ் உணர்வு அலை அனைவரையும் கௌவிற்று. அங்கிருந்த பல்தேசிய முகங்கள் மனித நேயர்களாக மலர்வுடன் பேசி உரையாடி சங்கமித்தது.

கலை என்பது கற்பனை ஊற்றெனப் பிறந்து அருவியாக வடிந்தெழும் மனவெளி ஆறு என்பார்கள் அறிஞர்கள். இது மன எண்ணங்களின் ஓர் அறிவியல் ஆற்றுகை. இதனை தெட்டத் தெளிவாய்ப் புலப்படுத்துகிறார்கள் சிறார்கள். நிகழ்வில் முதற் தடவையாகப் பங்கேற்றதால் மகிழ்ச்சியில் கிளர்ந்த அரங்க உரிமையாளரின் துணைவியார் இந்தக் காட்சிக்கூடத்தை நான்கு நாட்கள் தொடர வகைசெய்தார்.

அங்கு சமூகமளித்திருந்த பலரும் இக்காட்சி அரங்கு வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாத புத்துணர்வூட்டியதாக நன்றி கூறினர்.

முதற் தடவையாக இத்தகைய நிகழ்வில் பங்கேற்ற பிரான்சில் இடதுசாரிய அரசியல் கட்சி செயற்பாட்டாளரும் ஊடகரும் புலம்பெயர் தமிழருமான லியோன் செழியன் *Leon Chezhiyan* மனநிறைவுடன் ஓவியரின் இரு ஓவியங்களை வாங்கினார். தனது முகநூலில் பின்வருமாறு பதிவுற்றுமிருந்தார். எரிந்த தாள்களில் யாழ் பொது நூலகம் என எழுதப்பட்டிருந்த வாசகம்... ஓவியக்கண்காட்சியின் உச்சமாக இருந்தது.புத்தகங்களை எரிப்பதற்கு அழைப்பு விடுவதும்,மானிட நாகரீகத்தின் தேட்டங்களையும், கலை இலக்கிய பொக்கிசங்களையும் அதன் தொடர்ச்சிகளையும், எச்சங்களையும் எரிப்பதும் அழிப்பதும் முதலாளித்துவ தேசியவாதத்தின் அடிப்படையான ஜனநாயகவிரோதப் பாசிசப் பண்பாகும்.

க. முகுந்தன் (பிரான்ஸ்) டிசம்பர் 2021

3 | “சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை”

எனக்கு மாக்ஸிய அரிச்சுவடியை முதன் முதலில் கற்றுத் தந்த தோழமைக்குரிய ஐயா செ. கணேசலிங்கன் மறைந்து விட்ட செய்தி மிகுந்த கவலையை அளிக்கிறது. முதன் முதலில் அவரை 90இல் சந்தித்தேன். அப்போது வெளிவந்த எனது *“Abbreviation 1000”* என்கிற நூலின் அறிமுக விழாவுக்கு அழைப்பிதழ் அச்சடிப்பதற்காக தோழர் ஜெயராமன் (லெனின் மதிவாணனின் தந்தை) டாம் வீதியில் இருந்த குமரன் அச்சகத்துக்கு என்னை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தியதில் தொடங்கியது எங்கள் உறவு.

அதற்குப் பிறகு தோழர் ஜெயராமனுடன் அடிக்கடி அங்கே சென்றிருக்கிறேன். பின்னர் இம்தியாஸ், பாலகிருஷ்ணன் ஆகியோருடன் விடிவு சஞ்சிகையை அச்சடிப்பதற்காகச் செல்வோம். அங்கே தான் அவர் தனது குமரன் சஞ்சிகையை கொடுத்து அதில் அவர் மாக்சியத்தை எளிமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் எழுதிவரும் சிறு சிறு குறிப்புகளையும், கட்டுரைகளையும் உரையாடலுக்கு எடுப்போம். “குமரனுக்கு கடிதம்”, “மான்விழிக்கு கடிதம்”, “குந்தவிக்கு கடிதம்” என்று அவர் எழுதிய கடிதங்களின் தொகுப்புகள் நூல்களாக அப்போதே வெளியாகிவிட்டன. அவை சிறந்த அரசியல் வழிகாட்டி நூல்கள். அவரின் சகல நூல்களும் அப்படித்தான். அவர் எழுதிய நாவல்கள், சிறுகதைத் தொகுதிகள், இன்னும் பிற நூல்களின் வரிசை நீண்டது. மாக்ஸியக் கலைச் சொற்களுக்குப் பின்னால் இருக்கின்ற ஆழமான விளக்கங்களை அவர் தந்தார். அந்த உரையாடல்கள் தான் மாக்ஸிய இலக்கியங்களையும், மாக்சிய தத்துவம் சார் நூல்களையும் தேடித் தேடி வாசித்தறியவும் உந்தின.



எழுத்தாளர் கணேசலிங்கன்   ஓவியம் மருது

எங்கள் உரையாடல்களின் மத்தியில் பால் தேநீர் கொண்டு வந்து தருவார். அந்தப் பாலின் மணத்தை இப்போதும் உணர முடிகிறது. அந்த வித்தியாசமான தேநீர் சுவை இன்னமும் நினைவில் உள்ளது.

அவர் தமிழ் நாட்டுக்கு நிரந்தரமாக இடம்பெயர்ந்து விட்டார் என்பதை எங்களால் நம்பவே முடியவில்லை. அது சில அரசியல் நெருக்கடிகளால் நேர்ந்தது என்று பலரும் கூறினார்கள். அவரை அதற்குப் பின் நான் காணவே இல்லை. அவரைப் பற்றி அவரின் மகன் குமரனிடம் அடிக்கடி விசாரித்துக்கொண்டேன். குமரனுக்கும் எனக்கும் இடையில் நல்ல நட்புறவு நீண்ட நாட்களாக உள்ளன. எனது நூல்களையெல்லாம் அவர் தான் பிரசுரிக்கிறார்.

சில மாதங்களுக்கு முன்னர் “ஐயா, இப்போது நினைவுகளை இழந்து விட்டார்” அவர் நன்றாக இல்லை என்று குமரன் கூறியபோது மிகவும் கவலையாக இருந்தது. அவரை மீண்டும் சந்தித்து கட்டிப்பிடித்து நன்றி கூறி உரையாட ஒரு வாய்ப்பு இனி இல்லை என்பதை நினைக்கும் போது பெரும் ஏக்கமாகவே இருந்தது. இப்போது இந்த இடி வந்து சேர்ந்திருக்கிறது.

ஈழத்து தமிழ் சஞ்சிகை இலக்கிய வரலாற்றில் குமரனுக்கு நிகரான ஒரு வெகுஜன மார்க்சிய வழிகாட்டல் சஞ்சிகை இருந்ததில்லை என்று என்னால் உறுதியாகக் கூற முடியும். அது இரு பெரும் தொகுதிகளாகவும் வெளியாகியிருக்கின்றன.

உங்கள் எழுத்துக்கள் இன்னும் பல தலைமுறைகளுக்கு வழிகாட்டும். இனி இளைப்பாறுங்கள் தோழர்... செவ்வணக்கம்.

என் சரவணன் (நோர்வே) டிசம்பர் 2021

பேராசிரியர் அப்பாசாமி முருகையன்

1. கல்வி:

அண்ணாமலைப் பல்கலையில் முதுகலை –

பாரிஸ் பல்கலைக்கழகத்தில் (1980) மொழியியலில் முனைவர் பட்டம்

செம்மைத் தத்துவவியல் மற்றும் மொழியியல் சிறப்புப் பயிற்சி.

Ecole Pratique des Hautes Etudes (மேம்பட்ட ஆய்வுகள் பள்ளி).

2. ஆய்வு மற்றும் கற்பித்தல் செயல்பாடு :

தமிழில் அடிப்படை மற்றும் மேம்பட்ட ஆய்வுகளின் வளர்ச்சிப்பணி. பிறமொழி கற்பித்தல் முறைகள், தற்காலத் தமிழ் மற்றும் ஒப்பீட்டு திராவிட மொழியியல், தமிழ் வரலாற்று மொழியியல், தமிழ் கல்வெட்டு மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் ஆய்வுகள் ஆகியவற்றில் நிபுணத்துவம்.

பல பல்கலைக்கழகங்களில் கற்பித்தல் பணி : Ecole Pratique des Hautes Etudes, University of Paris 8, School of Oriental Languages மற்றும் CREOPS - SORBONNE University.

3. ஆய்வு வெளியீடுகள்: பல ஆய்வு நூல்கள் தொகுத்தல் வெளியிடல், பன்னாட்டு இதழ்களில் ஆக்கங்கள், சமகால மற்றும் வரலாற்று தமிழ் மொழியியல், தமிழ் கல்வெட்டு மற்றும் தமிழ்ப் புலம்பெயர்ந்தோர் பற்றிய புத்தகங்கள் வெளியிடல்.

தமிழ் கல்வெட்டு, தமிழ் வரலாற்று மொழியியல் மற்றும் பிரஞ்சு மொழிப் புலத் தீவுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிய ஆராய்ச்சிப் பணி.

பிரித்தானிய நூலகத்தின் அழிந்துவரும் ஆவணக் காப்பகத் திட்டத்தின் நிதியுதவியுடன் யாழ்ப்பாண பிஷப் மாளிகையில் இருந்து கையெழுத்துப் பிரதிகளை (17 - 18 ஆம் நூற்றாண்டுகள்) பாதுகாக்கும் இரண்டு டிஜிட்டல் காப்பகத் திட்டங்கள்.

தமிழ் மெய்நிகர் அகாடமி மற்றும் CNRS-Mondes iranien et indien, Paris இணைந்து ஏற்பாடு செய்த தமிழ் கல்வெட்டுகளின் இலக்கண மற்றும் கலைச்சொல் தரவுத்தளத்தை உருவாக்கல்.

2004 ஆம் ஆண்டு முதல் தமிழ் கல்வெட்டு பற்றிய பன்னாட்டுப் பட்டறை ஏற்பாட்டாளர்.

4. பன்னாட்டு ஒத்துழைப்பு மற்றும் நிர்வாக அனுபவம்

1982-1994. 12 ஆண்டு காலம், AUPELF-UREF எனும் பன்னாட்டு பிரஞ்சு மொழி உயர்க் கல்வி மற்றும் பல்கலைக்கழகக் கல்விக்கான நிறுவனத்தில் (தற்போது பிரஞ்சு மொழிப் பல்கலைக்கழகங்களின் பன்னாட்டு நிறுவனம் -Agence universitaire de la Francophonie - AUF என்றாகியுள்ளது) திட்ட இயக்குனர். பன்னாட்டு பிரஞ்சு மொழிப்புல நிறுவனங்களுக்கான பிரஞ்சு ஆய்வுகள் துறையின் -ஆப்பிரிக்கா, ஆசியா, ஐரோப்பா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகள்: உலகின் பல பகுதிகளின் திட்ட இயக்குனர் மற்றும் பொறுப்பாளர்.

பிரஞ்சுப் புலம் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களிடையே பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு வளர்ச்சிக்கான ஐரோப்பிய ஒருங்கிணைப்பாளர்.

சீனா, இந்தியா, இந்தோனேசியா, தாய்லாந்து, ஜப்பான், சிங்கப்பூர், தாய்லாந்து, கனடா, கியூபா, பல்கேரியா, சுவிட்சர்லாந்து போன்ற பல நாடுகளில் உள்ள தேசிய பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பல்கலைக்கழகங்களின் பிரெஞ்சுப் பேராசிரியர்களுக்குப் பயிற்சி மற்றும் பேராசிரியரை மேம்படுத்தும் திட்ட ஏற்பாடும், பாடத்திட்ட மேம்பாடு மற்றும் மொழி கற்பித்தல் முறைகள் போன்ற திட்ட.ங்களை செயல்படுத்தல்.

"Français à l'Université" செய்திமடல் மற்றும் பாரிஸில் உள்ள ஐரோப்பிய அலுவலகத்தின் பன்னாட்டு பல்கலைக்கழக ஒத்துழைப்புக்கான நிதியத்தின் (FICU) பிரதிநிதி

தாய்மொழிக் கல்வி மற்றும் இருமொழியம் பற்றிய யுனெஸ்கோவின் ஆலோசகர்.

மேலதிக விபரங்களுக்கு பல்கலைக்கழக இணையதளத்தைப் பார்க்கவும் :

http://www.iran-inde.cnrs.fr/members/permanent-members/murugaiyan-appasamy.html

கட்டுரை

பேராசிரியர் அப்பாசாமி முருகையன்



மாரியம்மன் வளர்த்த தமிழ்

பிரஞ்சுத் தீவுகளில் தமிழ் வம்சாவளியினரின் தமிழ்மொழிப் பயன்பாடும் தமிழ் அடையாளக் கட்டமைப்பும்[1]

“கரும்புத் தோட்டத்திலே-அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்துகினறனரே! ஹிந்து
மாதர்தம் நெஞ்சு கொதித்துக் கொதித்துமெய்
சுருங்குகின்றனரே – அவர்
துன்பத்தை நீக்க வழியில்லையே? ஒரு
மருந்திதற்கிலையோ? – செக்கு
மாடுகள் போலஉழைத்தேங்குகின்றார் [...]”

கரும்புத் தோட்டத்திலே, மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியார்.

« Ayant déserté la Terre des Hommes,
il [le tamoul] est devenu le langage des dieux ».
Laurent Faruggia, 1975 : 132. (Guadeloupe & Martinique)

“ (தமிழ்) மனித உலகை விட்டு நீங்கி, தெய்வ மொழியாகிவிட்டது.”

“Mariyemẽ Tayẽ, marè pouriyoum tayé
adi Mariyemẽ tayé
tayé, paruvédiyé tayé,
sundèrèyammã tayé
tayé, veperèyom tayé
kèda vetou tayé [...][2]
Marcel Julina Moutoussamy, 1993

“மாரியம்மன் தாயே மழைபொழியும் தாயே
ஆதி மாரியம்மன் தாயே
தாயே பார்வதியே தாயே
சுந்தரி அம்மா தாயே
தாயே வேப்பிலையும் தாயே
கிடா வெட்டு தாயே [...]”

உலகில் உள்ள தமிழ் வம்சாவளியினரைத் தமிழ் மொழி-பண்பாட்டுத் தொடர்மைக் கோட்டில் (*Tamil Language continuum*) இருத்தி ஒப்பிட்டு நோக்குங்கால், பிரஞ்சுப் பகுதிகளாகிய ரெயுனியன், மர்த்தினிக் மற்றும் குவாதலுப் தீவுகளில் வாழும் தமிழர்கள் இக்கோட்டின் கடைப் பகுதியில் இடம்பெறுவர் எனலாம். இக்கணிப்புக்குப் பல

1 ஆய்வுகளைப் பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளேயே புதைத்துவிடாதீர்கள் எனப் பலமுறை அறிவுறுத்திய, மறைந்த நண்பர் கிரிஸ்தோபர் பிரான்சிஸ் அரவிந்தன்-சுந்தருக்கு (கிபிஅன்) இக்கட்டுரை காணிக்கை. கிபிஅன்-இன் அறிவுறுத்தல் நிறைவடைய உந்து சக்தியாக உள்ள நண்பர் கந்தையா முகுந்தனுக்கு எனது நன்றிகள். இக்கட்டுரையைப் படித்து கருத்து தெரிவித்த பேராசிரியர் வாசு ரெங்கநாதன் (அமெரிக்கா) அவர்களுக்கு உளமார்ந்த நன்றி.

2 மர்த்தினிக் தீவில் வாழும், தமிழ் வம்சாவளியினர், திரு மர்சல் ஜூலினா முத்துசாமி, அகவை 93, அவர்களால் பாடப்பட்ட மாரியம்மன் தாலாட்டுப் பாடலின் சுருக்கம். 1993-இல் கள ஆய்வின்போது பதிவு செய்யப்பட்டது. கள ஆய்வின்போது உதவி நல்கிய மாரக் ரங்கொம் (ரங்கன்) அவர்களுக்கு நன்றி.

வரலாற்று மொழியியல் ஆய்வு ஆதாரங்கள் உள. பிரஞ்சுத் தீவுகளில் வாழும் தமிழ் வம்சாவளியினர் தங்களது மூதாதையர் மொழியான தமிழின் பயன்பாட்டைச் சிறிது சிறிதாக இழந்து தமிழை வழிபாட்டு மொழியாக மட்டும் பயன்படுத்தி வருகின்றனர். வழிபாட்டு மொழியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது வழிபாட்டு மொழியாக ஆக்கப்பட்ட தமிழ் மொழியின் பயன்பாடும் அது எவ்வாறு பின்னால் உள்ள தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்பதும் அந்தத் தமிழ்மொழி வழிபாட்டை எவ்வாறு தமிழ் வம்சாவளியினர் மேம்படுத்திக் கொள்கிறார்கள் என்பதையும் இந்தத் தமிழ்மொழி வழிபாட்டைக் கடைபிடிப்பதில் அவர்கள் என்னென்ன சிக்கல்களை எதிர்க் கொண்டுள்ளனர் என்பதையும் இக் கட்டுரையில் பார்ப்போம்.

வரலாறு

1848ம் ஆண்டில் உலகெங்கும் அடிமைத் தொழில்முறை ஒழிக்கப்பட்டதனால் ஐரோப்பிய முதலாளிகள் தமது காலனித்துவ நாடுகளில் இருந்து விவசாயத் தொழிலாளர்களைத் தெரிவு செய்யத் தொடங்கினார்கள். இம்முறையிலான தொழிலாளர்த் தெரிவும் குடியேற்றமும் எண்பது ஆண்டுகளாக அதாவது 1917ம் ஆண்டுவரையில் நீடித்தது.

இந்தியத் தொழிலாளர்களின் புலம்பெயர்வை வரலாற்று ரீதியாகக் காணும்போது இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன், காலனி ஆட்சிக் காலத்தில், பல நாடுகளுக்கும் ஒப்பந்த தோட்ட தொழிலாளர்களாகச் சென்ற தமிழ்நாடு மற்றும் இந்தியாவைச் சேர்ந்த தொழிலாளர்கள், இரண்டாவது இந்தியா சுதந்திரம் அடைந்த பின் பல நாடுகளுக்குப் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுடைய வரலாறு. இவற்றுள் முதல் வகையை 'பழைய புலம்பெயர்வு' (Old Diaspora) என்றும் இரண்டாவதை 'புதிய புலம்பெயர்வு' (New Diaspora) என்றும் குறிப்பிடுவது வழக்கம். இக்கட்டுரையில் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன் லா ரெயுனியன், குவாதலூப், மர்த்தினிக் ஆகிய மூன்று பிரஞ்சு தீவுகளுக்கு ஒப்பந்த தோட்ட தொழிலாளர்களாகச் சென்ற தமிழ் வம்சாவளியினரைக் குறித்து மட்டுமே பேசப்படுகிறது.

தோட்டத் தொழிலாளர்களைத் தெரிந்தெடுப்பதற்கு இருமுறைகள் கையாளப்பட்டன. ஒன்று கங்காணி முறை: இம்முறைப் பெரும்பாலும் தென் இந்தியாவில் முக்கியமாகத் தமிழ்நாட்டில் நடைமுறையில் இருந்தது. கங்காணி முறை வழியாக, தென்கிழக்காசிய நாடுகளான மலேசியா, சிங்கப்பூர், மியான்மர், மற்றும் இலங்கை (மலையகத் தமிழர்கள்) போன்ற நாடுகளுக்குத் தோட்டத் தொழிலாளர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

அடுத்து, 'ஒப்பந்தக் கூலி முறை' (Indentured Labour System), மொரிஷியஸ் ட்ரினிடாட், மர்தினிக், லா ரெயுனியன், பிஜி போன்ற தொலைதூரப் பகுதிகளுக்கு ஒப்பந்த தொழிலாளர்களாகத் தெரிந்தெடுக்க நடைமுறையில் இருந்தது. கங்காணி முறைக்கும் ஒப்பந்த கூலி முறைக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன.[3] தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் வடஆர்க்காடு, செங்கல்பட்டு, தஞ்சாவூர், திருச்சி ஆகிய பகுதிகளில் இருந்தும் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலிருந்தும் பெருந்தோட்ட பயிர்ச்செய்கைக்கான விவசாயத் தொழிலாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இத்துடன் ஆந்திர மாநிலத்தில் கோதாவாரி மற்றும் விசாகபட்டினம் ஆகிய பகுதிகளில் இருந்தும் தொழிலாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

பிரித்தானிய காலனிகளில் குடியமர்ந்த தொழிலாளர்களுக்கும் பிரஞ்சு காலனித் தீவுகளில் வேலைக்குச் சென்றடைந்த தொழிலாளர்களுக்கும் சமுதாயப் பொருளாதார நிலைகளில் அதிக வேறுபாடு இல்லை, எல்லோருமே ஒரே மாதிரியான சிக்கல்களைத்தான் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இருப்பினும் இந்த இரு பகுதிகளிலும் வெவ்வேறான பண்பாட்டுச் சிக்கல்களை எதிர்க்கொண்டனர். பொதுவாகப் பிரஞ்ச் காலனிகளில் தோட்டத் தொழிலாளர்கள் தங்களுடைய மொழி, பண்பாடு மற்றும் கலாச்சாரம் இவற்றைப் பேணுவதற்கும் இவற்றைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் நிறைய சிக்கல்கள் இருந்தன. தோட்டத் தொழிலாளர்களின் வரலாற்றுச் சூழமைவு மற்றும் பிரான்சின் மொழிக்கொள்கை முதலிய காரணிகள், சிறுபான்மை மொழிகளைத் தக்கவைக்கக்கூடிய சூழ்நிலையை அளிக்கவில்லை. 160 ஆண்டுகளுக்கு முன் ஒப்பந்தத் தொழிலாளர்களாக இத்தீவுகளில் குடியேறிய தமிழ் மற்றும் வேறு பகுதிகளைச்சார்ந்த இந்திய மக்கள் இந்தியாவுடன் எந்தத் தொடர்புமின்றி 75 ஆண்டுகளுக்கும் மேலாகத் தனிமையாக்கப்பட்டனர். மேலும் பிரஞ்சு அரசின் "ஒன்றுபடுத்தும் திட்டம்" (integration / Assimilation policy) மூலம் சிறுபான்மைப் பண்பாட்டு கலாச்சாரங்கள் இப்பகுதிகளில் வேரூன்ற முடியவில்லை. இந்நிலையை "பண்பாட்டுப் பறிமுதல்" எனக் கச்சிதமாக விவரித்துள்ளார் ஓர் ஆய்வாளர் (Jean Benoist).[4]

தமிழ் வம்சாவளியினர் – சிறு குறிப்பு:

பிரெஞ்சுத் தீவுகளான மர்த்தினிக், லா ரெயூனியன், குவாதலூப் ஆகிய இடங்களுக்குத் தோட்டத் தொழிலாளர்களாக அழைத்துச் செல்லப்பட்ட மக்கள் இந்தியாவில் பிரான்சின் காலனித்துவப் பகுதிகளாக இருந்தவற்றில் குறிப்பாகக் காரைக்கால் மற்றும் பாண்டிச்சேரியில் இருந்தே தெரிவு செய்யப்பட்டனர். இந்த மூன்று பிரெஞ் தீவுகளிலும் (மர்த்தினிக், லா ரெயூனியன், குவாதலூப்) குடியேற்றப்பட்ட இந்தியர்களில் தமிழர்களே பெரும்பான்மையினர் (80%) என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தீவுகளுக்குத் தோட்டத்தொழிலாளர்களாக அழைத்துவரப்பட்டோர் தொடர்பான எண்ணிக்கை:

---

3 மேலதிக விபரங்களுக்கு: Arasaratnam (1979:16-20), BehaL (2013), Devadas (2007:53-57).

4 Jean Benoist

முதலில் மலேசியா மற்றும் சிங்கப்பூர்ப் பகுதிகளில் தமிழ் வம்சாவளியினரின் எண்ணிக்கை, மற்றைய பகுதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த இரண்டு பகுதிகளிலும் அதிகம். இரண்டாவது இந்த இரண்டு நாடுகளும் தாய்த் தமிழ்நாட்டில் இருந்து அதிகத் தூரத்தில் இல்லை. எனவே மலேசியாவிற்கும் சிங்கப்பூருக்கும் இந்தியாவுக்கும் இடையில் போக்குவரவு என்றுமே தடைபட்டது இல்லை. மூன்றாவது, புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் மொழியின் அங்கிகரிக்கப்பட்ட நிலை மிக முக்கியமான காரணி. இந்த மூன்றாவது காரணி மற்ற ஐந்து காரணிகளான தமிழ்மொழி இலக்கிய வளர்ச்சி, தமிழ் மொழிப் பயன்பாடு, தமிழ் மொழிக்கல்வி, தமிழ் மொழியில் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் தொலைக்காட்சி பத்திரிகை போன்ற ஊடகங்களிலும் மற்றும் பொது நிகழ்ச்சிகளிலும் தமிழ் வளர்ச்சி அடைவதற்கு வழிவகுக்கிறது. இந்த மூன்றாவது காரணி மிக முக்கியம்.

மார்த்தினிக்: 1854-1889 25,509

லா ரெயூனியன்: 1829-1924 118,000

குவாதலூப்: 1854-1889 43,326

இந்தியாவில் இருந்து இத்தீவுகளுக்கான குடிவரவுகள் 1883ல் லா ரெயூனியன் தீவிலும், 1917ல் மார்த்தினிக்-குவாதலூப் தீவுகளிலும் நிறுத்தப்பட்டன.

இத்தீவுகளில் தற்போதைய தமிழர்களின் எண்ணிக்கையாவன: லா ரெயூனியன் தீவில் 120,000 (25%) தமிழர்கள் 'மலபார்' என்ற அடையாளத்துடன் வகிக்கின்றனர். அதேபோன்று மர்த்தினிக் தீவில் 13,000 (6%)தமிழர்களும், குவாதலூப் தீவில் 41,000 (12%) தமிழர்களும் வாழ்கின்றனர். தோட்டத்தொழிலாளர்களாக அழைத்துவரப்பட்ட இம்மக்கள் தற்போது நில உடமையாளர்களாகவும், தோட்ட செய்கையாளர்களாகவும், கல்விசார் சேவைத்துறையினராகவும் மாற்றம் பெற்றுள்ளனர். உதாரணமாகப் பொது மருத்துவர்களாகவும் பல் மருத்துவர்களாகவும், மருந்தாளர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், மற்றும் அரசாங்கப் பணியாளர்களாகவும் உள்ளனர்.

தற்போது அவர்கள் அரசியலிலும் ஈடுபடுகின்றார்கள். குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினராகவும், மேலவை உறுப்பினராகவும் உள்ளதுடன் பலர் நகரசபைத் தலைவர்களாகவும் உள்ளனர். 150 ஆண்டுகளுக்கும் மேலாகத் தலைமுறைகள் தாண்டி தம் சுய முயற்சியிலேயே தமிழ்ப் பண்பாட்டினையும் மொழியையும் தங்கள் தேவைகளுக்கு ஏற்றவாறு தக்கவைத்துள்ளது பெரும் மகிழ்ச்சியையும் வியப்பையும் அளிக்கிறது.

இந்தியாவிலிருந்து சென்ற ஆண் - பெண்களில் நேர்விகிதம் இல்லை. அதனால், கலப்புத் திருமணங்கள் நடந்தது. ஆனால், பெயரில் ஆல்பர்ட் அய்யாசாமி, பிரான்சிஸ் மாரிமுத்து, ஃப்ராங்க் முத்துசாமி எனத் தமிழர் அடையாளம் இன்றும் காணப்படுகிறது. அவர்களின் தமிழ் இனக்குழு வாழ்க்கைமுறை, சடங்குகள், வழிபாடுகள் எல்லாம் தமிழ்நாட்டு முறைகளோடு ஒத்துள்ளது. மேலும், தமிழ்நாட்டுத் தமிழர்களிடம் இல்லாத சடங்கு முறைகள்கூட புலம்பெயர்த் தமிழர்களிடம் காணப்படுகின்றன.[5] மாரியம்மன் விழா, தைப்பூசம், பொங்கல், தீமிதி இதையெல்லாம் இதே பெயரில் கொண்டாடுகின்றனர். மாரியம்மன், மதுரைவீரன், காத்தவராயன் போன்ற தெய்வங்களை வழிபடுகிறார்கள். ஏழு அல்லது மூன்று நாட்கள் போல் விரதம் இருந்து, தப்பு அடித்துக்கொண்டு 'மாரி மகமாயி மழைபொழியும் தாயே- எனப் பாடி ஆடு, கோழி பலியிட்டுக் காணிக்கை செய்கிறார்கள்.

இந்த நிலையில் நமக்கு இப்பொழுது கிடைத்துள்ள தரவுகளை வைத்துப் பார்க்கும் பொழுது இந்தப் பிரஞ்சுத் தீவுகளில் புலம்பெயர்ந்து 150 ஆண்டுகளாக வாழ்ந்துவரும் தமிழ் வம்சாவளியினர் இந்திய-தமிழ் அடையாளத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கு என்ன மாதிரியான முயற்சிகளில் ஈடுபட்டனர் என்று ஓர் ஒப்பாய்வு மேற்கொண்டோம். இந்த அடையாளங்களை நிர்ணயிப்பதற்கு 12 காரணிகளைத் தேர்ந்தெடுத்து அந்த 12 காரணிகளும் எவ்வாறு பயன்பாட்டில் உள்ளன என்று தமிழர்கள் தோட்டத் தொழிலாளர்களாகச் சென்ற மலேசியா, சிங்கப்பூர், மொரிசியசு, லா ரெயுனியன், குவாதலூப் மற்றும் மர்த்தினிக் ஆகிய ஆறு பகுதிகளிலும் ஒரு ஒப்பாய்வு செய்து அந்த ஆய்வின் முடிவுகள் இங்கு இந்தக் கட்டுரையின் முக்கிய தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அப்பன்னிரண்டு காரணிகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ் அடையாளக் காரணிகள்

1. மொழிகுறித்த உளப்பாங்கு
2. மக்கள் தொகை
3. தமிழ் மொழியின் அங்கீகரிக்கப்பட்ட நிலை
4. பொதுக் கல்வியில் தமிழ் மொழியின் பயன்பாடு
5. நிர்வாக மொழியாகப் பயன்பாடு
6. செய்தி ஒலிபரப்பு மற்றும் தொலைக்காட்சிகளில் தமிழ்
7. அன்றாட உரையாடலில் தமிழ்
8. தமிழ் இலக்கிய உருவாக்கம்
9. திட்டமிடப்பட்ட பண்பாட்டுக் கலாச்சார பரிமாற்றம்
10. திட்டமிடப்பட்ட தமிழ் மொழிக் கற்றல் / கற்பித்தல்
11. சமூகச் சிறப்பு நிகழ்வுளில் தமிழ்
12. மத வழிபாடு மற்றும் குடும்ப விழாக்களில் தமிழ்

---

5 இக்கருத்தை மேலும் உறுதி செய்ய தமிழ் வம்சாவளியினர் வாழும் பகுதிகளில் விரிவான களஆய்வுகள் நடத்தவேண்டும்.



1. மொழிகுறித்த உளப்பாங்கு
2. மக்கள் தொகை
3. தமிழ் மொழியின் அங்கிகரிக்கப் பட்ட நிலை
4. பொதுக் கல்வியில் தமிழ் மொழியின் பயன்பாடு
5. நிர்வாக மொழியாகப் பயன்பாடு
6. செய்தி ஒலிபரப்பு மற்றும் தொலைகாட்சிகளில் தமிழ்
7. அன்றாட உரையாடலில் தமிழ்
8. தமிழ் இலக்கிய உருவாக்கம்
9. திட்டமிடப்பட்ட பண்பாட்டு கலாச்சாரபரிமாற்றம்
10. திட்டமிடப்பட்ட தமிழ் மொழி கற்றல் / கற்பித்தல்
11. சமூக சிறப்பு நிகழ்வுளில் தமிழ்
12. மத வழிபாடு மற்றும் குடும்ப விழாக்களில்தமிழ்

மேலே காணும் தமிழ் மொழி-பண்பாட்டுத் தொடர்மைக் கோட்டில் (*Tamil Language continuum*) கொடுக்கப்பட்டுள்ள 12 காரணிகளை ஒப்பிட்டு நோக்கில், மூன்று கருத்துகளை மட்டும் இங்கு எடுத்துக் கொள்வோம். முதலாவதாக 12 காரணிகளையும் செவ்வனே கடைப்பிடித்து வரும் நாடு சிங்கப்பூர் அடுத்ததாக மலேசியாவில் பதினொருகாரணிகளைச் செவ்வனே கடைப்பிடித்து வருகின்றனர். அடுத்து மொரிசியசும் லா ரெயுனியனும் வருகின்றன மூன்றாவதாகக் குவாதலூப் மற்றும் மார்த்தினிக் இந்தத் தமிழ் மொழி-பண்பாட்டுத் தொடர்மைக் கோட்டில் (*continuum*) வருகின்றன. அடுத்து இந்த 12 காரணிகளுள் இரண்டு காரணிகள் மட்டுமே. அதாவது முதல் காரணியான “மொழிகுறித்த நேர்மறையான உளப்பாங்கு” அடுத்து, 12வது காரணியான “மத வழிபாடு மற்றும் குடும்ப விழாக்களில் தமிழ்மொழியின் பயன்பாடு” எல்லா நாடுகளிலும் பயன்பட்டு வருகின்றன. சுருக்கமாகக் கூறினால், தமிழ் வம்சாவளியினர் சிறு எண்ணிக்கையில் வாழும் பகுதிகளில் தமிழ் மொழித் தெய்வ மொழியாக மட்டுமே பாவிக்கப்பட்டு வருகிறது. பிரஞ்சு தீவுகளில் இந்நிலையைதான் காண்கிறோம்.

புலம்பெயர்வும் வம்சாவளி மொழிப் பயன்பாடும்

பொதுவாகப் புலம்பெயர்ந்த சூழ்நிலையில் ஒவ்வொரு இனத்தவரும் தங்களுடைய இன அடையாளத்தைத் தக்க வைத்துக் கொள்ள என்னென்ன காரணிகளைப் பயன்படுத்துகின்றனர், இக் காரணிகளில் மொழியின் பங்கும் பயன்பாடும் என்ன என்பது முக்கியமானகருத்து. கடந்த இருபத்தைந்து முப்பது ஆண்டுகளாகப் புலம்பெயர்ந்த சூழ்நிலையில் வெவ்வேறு நாடுகளிலும் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களும் அவரவர்கள் 70 ஆண்டுகள் 80 ஆண்டுகளுக்குப் பிறகு எவ்வாறு தங்கள் அடையாளத்தைக் கட்டமைத்து (*Identity construction*) தக்கவைத்துக் கொள்கின்றனர் (*Identity retention*) என்ற கேள்வி எழுகிறது. இந்த மாதிரியான கேள்வி எழும் போது பொதுவாக ஆர்மீனியன் அல்லது, வட ஆப்பிரிக்கா அல்லது ஜெர்மனியைச் சேர்ந்தோர் புலம்பெயர்ந்து வேறு நாடுகளில் வசிக்கும் பொழுது, அவர்கள் ‘தங்கள் மூதாதையர் மொழியைப் பாதுகாத்து வைக்க முடிகிறதா?’ என்று பார்த்தால் பொதுவாக இந்த மாதிரியான சூழ்நிலையில் மூன்று தலைமுறைக்கு மேல் மூதாதையர் மொழியைத் தக்கவைத்துக்கொள்ள முடியாத சூழ்நிலைதான் ஏற்பட்டுள்ளது. இது ஒரு பொதுவான ஆய்வு வழியாகக் கண்டறிந்த நிலை. அதனால் ஒரு இன அடையாளத்திற்கு மொழியினுடைய பங்கு முக்கியமானதாக இருந்தாலும் மொழி இல்லாவிட்டாலும் தங்களுடைய இன அடையாளத்தைக் கட்டமைத்துக் கொள்ளலாம் என்பது ஒரு கோட்பாடு. பெரும்பாலும் எந்த ஒரு புலம்பெயர்ந்த குடியினரும் முதலிரண்டு தலைமுறை வரையில் அவர்களுடைய மூதாதையர்கள் மொழியைப் பேசவும் புரிந்துகொள்ளவும் முடியும் (*Active language use*). மூன்றாவது தலைமுறையினர் தங்களது மூதாதையர் மொழியைச் சிறிது சிறிதாகப் பயன்பாட்டில் குறைத்து, அம்மொழியைப் புரிந்துகொள்ள முடியுமே தவிர அம்மொழியைச் சரளமாகப் படிக்கவோ பேசவோ முடியாத நிலை உருவாகி விடுகிறது (*Passive or receptive language use*).

இக்கணிப்பு மானிட இயல், சமுதாய மொழியியல் இருமொழியநிலைப் போன்ற ஆய்வுகளின் அடிப்படையில் அறியப்பட்ட கோட்பாடு. எனவே ‘மூதாதையர் மொழி இழப்பு’ இந்திய வம்சாவளியினருக்கு மட்டும் ஏற்படும் நிலை எனக் கருத முடியாது. உதாரணமாக, 1980-க்குப் பின் பாரிசில் குடியேற்றம் அடைந்த யாழ்ப்பாணத்

தமிழர்களின் மொழிப் பயன்பாடு குறித்து நான் மேற்கொண்ட கள ஆய்வில் கீழ்க்காணும் விபரங்களைக் காணமுடிந்தது. ஆரம்ப காலத்தில், இலங்கையில் பிறந்து பாரிசில் கல்வி மேற்கொண்ட குழந்தைகள் இரு மொழியும் (தமிழும்-பிரஞ்சும்) நன்றாகப் பேசக்கூடிய இருமொழிய நிலையில் இருந்தார்கள் (*Active bilingualism*). பிறகு சிறிது சிறிதாக அந்தக் குழந்தைகளும், பின்னர் பாரிசில் பிறந்த குழந்தைகளும் பல்கலைக் கழக அளவில் மேற்படிப்பு நிலையில் தமிழ் மொழியின் பயன்பாடு குறைந்து, தமிழ் மொழியை (நன்றாக) புரிந்து கொள்ள முடியுமே தவிரத் தமிழில் நன்றாகப் பேசும் ஆற்றல் குறைந்த நிலை ஏற்பட்டது (*Passive bilingualism*). தமிழ் மொழியில் பெற்றோர்கள் அவர்களிடம் உரையாடும்போது அவர்கள் பிரெஞ்சு மொழியில் தான் பதில் அளிப்பார்கள். சமூகப் பயன்பாடுகள் எல்லாம் நலிவடைந்த நிலையில், மூதாதையர் மொழி ஒருவருடைய இன அடையாளத்தை வெளியிடும் குறியீடாக மட்டுமே பயன்படுகிறது.

முன்பு குறிப்பிட்டது போல் மூன்றாவது தலைமுறையில் மூதாதையர்கள் மொழி சிறிது சிறிதாகப் பயன் குறைந்து நலிவடைந்து மறையும் சூழ்நிலை ஏற்படும் என்பது ஓர் ஆய்வுக் கோட்பாடு. ஆனால் ஒவ்வொரு விதிக்கும் விதிவிலக்கு இருப்பதுபோல் இந்த விதிக்கும் விலக்கு உண்டு. உதாரணமாக மலேசியா, சிங்கப்பூர் இரண்டு நாடுகளையும் நாம் காணும் போது இவ்விரண்டு நாடுகளிலும் பல தலைமுறைகளுக்குப் பின்னும் தமிழ்மொழி மிகச் சிறப்பாகக் கல்வி, தமிழிலக்கியம், செய்தித்துறை, தொலைக்காட்சி மற்றும் கணினித் தமிழ் உட்பட எல்லாத் துறைகளிலும் பயன்பட்டு வருவதுடன், உலகளவில் தமிழின் வளர்ச்சிக்கு, தமிழ்நாட்டுக்கு இணையாகப் பெரிதாகப் பெரும் பங்களித்து வருகின்றன.

இந்தச் சிறந்த விதிவிலக்கான சூழ்நிலைக்குப் பல காரணங்கள் உள்ளன. மூன்று காரணங்களை மட்டும் நாம் பார்ப்போம். முதலில் மலேசியா மற்றும் சிங்கப்பூர்ப் பகுதிகளில் தமிழ் வம்சாவளியினரின் எண்ணிக்கை, மற்றைய பகுதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த இரண்டு பகுதிகளிலும் அதிகம். இரண்டாவது இந்த இரண்டு நாடுகளும் தாய்த் தமிழ்நாட்டில் இருந்து அதிகத் தூரத்தில் இல்லை, எனவே மலேசியாவிற்கும் சிங்கப்பூருக்கும் இந்தியாவுக்கும் இடையில் போக்குவரவு என்றுமே தடைபட்டது இல்லை. மூன்றாவது, புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் மொழியின் அங்கிகரிக்கப்பட்ட நிலை மிக முக்கியமான காரணி. இந்த மூன்றாவது காரணி மற்ற ஐந்து காரணிகளான தமிழ்மொழி இலக்கிய வளர்ச்சி, தமிழ் மொழிப் பயன்பாடு, தமிழ் மொழிக்கல்வி, தமிழ் மொழியில் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் தொலைக்காட்சி பத்திரிகை போன்ற ஊடகங்களிலும் மற்றும் பொது நிகழ்ச்சிகளிலும் தமிழ் வளர்ச்சி அடைவதற்கு வழிவகுக்கிறது. இந்த மூன்றாவது காரணி மிக முக்கியம். இதற்குமேல் இப்பகுதியில் வாழும் தமிழ் வம்சாவளியினரின் அயராத உழைப்பும் திட்டமிட்ட செயல்பாடுகளும் இந்த ஆறு காரணிகளையும் பலப்படுத்த உறுதுணையாக இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

இருமொழிய சூழ்நிலையில் ஒரு சிறுபான்மை மொழியும் அந்த நாட்டில் உள்ள பெரும்பான்மை மொழியும்ஒன்றுக்கொன்று கலந்து பயன்படுத்தப்படும் போது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மொழித் தாவல் அல்லது மொழி மாற்றம் (*language shift*) ஏற்படும் என்பது ஓர் ஆய்வுக்கோட்பாடு. மொழி மாற்றம் எப்படி எப்பொழுது ஏற்படுகிறது என்பதைக் கண்டறிவது மிகவும் சிக்கலான ஆய்வுக்குரிய ஒரு விடயம். மொழிமாற்றம் முடிந்த பிறகுதான் தமிழ் (சிறுபான்மையினர்) மொழியிலிருந்து நாம் வசிக்கும் நாட்டின் (பெரும்பானமையினர்) மொழிக்கு மாறிவிட்டோம் என்று உணரமுடிகிறதே தவிர இந்த மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் போது நம்மால் அதைக் காண முடிவதில்லை.[6] இரு மொழிய சூழ்நிலையில் இரண்டு மொழிகளிலும் தாய் மொழிக்கு நிகரான பயிற்சி இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தாய் மொழியில் இருந்து மற்றொரு மொழிக்குத் தாவ வேண்டிய சூழ்நிலை உருவாகலாம் என்னும் கருத்தை இரு மொழிய ஆய்வுகளும் சமூக மொழியியல் ஆய்வுகளும் முன் வைத்துள்ளன.[7]

சிங்கப்பூரில் மட்டுமே இந்த 12 காரணிகளும் சிறப்பாகக் கடைபிடித்து கடைபிடிக்கப்பட்டு வருகின்றன என்பதை மேலே கூறினோம். இருந்தாலும் சிங்கப்பூரில் கூட இந்த மொழி மாற்றம் சிறிது சிறிதாக நடைபெற்று வருகிறது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.[8]

அடுத்து மொரிசியஸ் நாட்டில் தமிழ் மொழி ஒரு சிறப்பு நிலை பெற்று வளர்ந்து வருகிறது. அங்கு ஐந்து இந்திய மொழிகள் “மூதாதையர்கள் மொழிகள்” என அரசாங்கத்தினால் அங்கிகரிக்கப்பட்டு, அந்த மொழி சார்ந்த இந்திய வம்சாவளியினர் அந்த மொழியை எளிதில் பயிலவும் அந்த மொழி வளர்ச்சி அடைவதற்கு உண்டான திட்டங்களும் மொரிஷியஸ் நாட்டின் அரசாங்கத்தினால் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்தச் சிறப்பான சூழ்நிலையிலும் மொரிஷியஸில் இந்த மொழி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. இதற்குக் காரணமும் நாம் முன்பு கூறியது போல் ஒரு மொழிக்கு எவ்வளவு சிறப்பான அங்கீகாரம் அளிக்கப்பட்டாலும் அம் மொழியின் பயன்பாடு குறைந்து விட்டால் அந்த மொழி வம்சாவளியினர் சிறிது சிறிதாக வேறு மொழிக்குத் தாவிச் செல்ல வேண்டிய சிக்கல் உண்டாகிறது. மொரிஷியஸ் நாட்டில் தமிழ் மொழியின் நிலைக் குறித்து மகாத்மா காந்தி நிறுவனத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய அருணாசலம் புட்பரதம் அவர்கள் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார் “எங்கள் தமிழ் கோயில் மொழியே ஆயினும் அந்தக் கோயில் இல்லாது போயிருந்தால் எங்கள் தமிழும் நாங்களும்

---

6 Biltoo Anil Kumar, 2004; Canagarajah, A. Suresh, 2008; David-Khemlani Maya, 1998; William F.S. Miles 2000.

7 Eberhard, David M. 2018

8 Schiffman Harold, 1995; Vijaya Sankar Lokasundari, 2011

இன்று காட்சிப் பொருளாக மாறி இருப்போம். எந்தத் தமிழையும் கோயிலையும் வைத்து திருஞானசம்பந்தர் தமிழகத்தை மீட்டாரோ அதே கோவிலும் தமிழும்தான் இன்றுவரை எங்களை இந்த நாட்டில் அடையாளம் தந்து பாதுகாத்து வருகின்றன”.[9]

இம்மாதிரியான இக்கட்டான மொழியியல் சூழ்நிலையில் தமிழ் வம்சாவளியினர் தங்களது மூதாதையர்கள் மொழியான தமிழின் பயன்பாட்டைச் சிறிது சிறிதாக இழந்து கடைசியாகத் தமிழை வழிபாட்டு மொழியாக மட்டும் பயன்படுத்தி வருகின்றனர் என்பது ஒரு ஆச்சரியமான செய்தியாக எடுத்துக்கொள்ள முடியாது. இருப்பினும் இந்த வழிபாட்டு மொழியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது வழிபாட்டு மொழியாக ஆக்கப்பட்ட தமிழ் மொழியின் பயன்பாடும் அது எவ்வாறு பின்னால் உள்ள தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்பதும் அந்தத் தமிழ்மொழி வழிபாட்டை எவ்வாறு தமிழ் வம்சாவளியினர் மேம்படுத்திக் கொள்கிறார்கள் என்பதும் இந்தத் தமிழ்மொழி வழிபாட்டைக் கடைபிடிப்பதில் அவர்கள் என்னென்ன சிக்கல்களை எதிர்க்கொண்டுள்ளனர் என்பதையும் இக்கட்டுரையில் இனி பார்ப்போம்.

2

பிரஞ்சுத் தீவுகளில் தமிழ் வம்சாவளியினர்

உலகமயமாக்கப்படும் இன்றைய சூழலில் எப்படி ஒவ்வொரு சிறுபான்மையினரும் தங்கள் மொழி-பண்பாட்டு அடையாளங்களைக் காத்துக் கொள்கிறார்கள் என்பதோடு எப்படி அவர்கள் மற்றவர்களுடன் மொழி, இன, மத வேறுபாடு இல்லாமல் ஒன்றி வாழ்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்வதும் இன்றியமையாதது. என்னுடைய இந்த ஆய்வுக் கட்டுரை லா ரியுனியன், மர்த்தினிக், குவாதலூப் ஆகிய மூன்று பிரஞ்சுத் தீவுகளை மட்டுமே பற்றியது. இக்கட்டுரையில் மொரிசியசில் வாழும் தமிழர்கள் குறித்த செய்திகள் இடம் பெறவில்லை.[10] முக்கியமாக, இந்த மூன்று தீவுகளும் பிரான்சின் கடல்கடந்த மாநிலங்கள். இம்மூன்று தீவுகளிலும் உள்ள இந்திய வம்சாவளியினருள் 80% தமிழ் வம்சாவளியினர் என்பது குறிப்படத் தக்கது. 150 ஆண்டுகளுக்கு முன் புலம்பெயர்ந்த தமிழர்கள் என்ன மாதிரியான சூழலில் வாழ்கிறார்கள், வாழ்க்கை முறை எப்படி உள்ளது, தமிழ் மொழி, கலாச்சாரம் எல்லாம் எந்த அளவு தக்க வைக்கப் பட்டுள்ளது போன்ற செய்திகளை அறிந்து கொள்வதே இந்த ஆய்வின் முக்கியமான நோக்கம்.

தமிழ் அடையாளக் கட்டமைப்பும் பன்மொழி - பன்முகக் கலாச்சாரச் சூழலும்

தமிழ் நாட்டிலேயே வாழ்கின்ற தமிழர்களுக்கு ‘நான் தமிழர்’ எனத் தன் அடையாளத்தை வெளிக் காட்டவோ நிலை நிறுத்தவோ அவசியம் இல்லை. ஆனால், பலமொழிகள் பேசும் பல இன மக்கள் சேர்ந்து வாழும் புலம்பெயர்ச் சூழ் நிலையில் ஒவ்வொரு சிறுபான்மையினரும் தங்களுடைய இனக்குழு அடையாளத்தை மிக அக்கறையுடன் பாதுகாக்க வேண்டிய நிலை உள்ளது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. தவிர, தங்கள் அடையாளத்தைத் தக்க வைத்துக்கொள்வதோடு அவர்கள் எவ்வாறு மற்ற சிறுபான்மையினருடன் மொழிப் பண்பாடு மத இன வேறுபாடின்றித் தாங்கள் வாழும் நாட்டில் ஒரு தேசிய ஒருமைப் பாட்டை உருவாக்குகிறார்கள் என்பதும் மிக முக்கியம். ஒவ்வொரு குழுவும் அவர்களுக்கென்று சில விதிகளையும் வழி முறைகளையும் பின்பற்றுவார்கள். இந்த ஆராய்ச்சியின் நோக்கமே, பிரஞ்சுத் தீவுகளில் வாழும் தமிழ் வம்சாவளியினர் எப்படி அவர்களது மொழிப் பண்பாட்டு அடையாளங்களைப் பாதுகாக்கிறார்கள், எப்படி இந்த அடையாளங்களை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கிறார்கள் என அறிந்துகொள்வதற்குதான்.

தமிழ் வம்சாவளியினரிடையே வழிபாடும் தமிழ்மொழியும்

ஆரம்ப காலத்தில் இங்கு புலம் பெயர்ந்து வந்த தமிழர்கள் ஒரு சிலருக்குத் தமிழ் பேசவும் எழுதவும் படிக்கவும் தெரிந்திருந்தது. இவர்களே இங்கு நடைபெறும் கோயில் விழாக்களிலும் மற்றும் குடும்ப விழாக்களிலும் நீத்தார்க் கடமைகளிலும் தமிழில் பூசைச் செய்து, தமிழில் பாடி அவற்றை மற்றவர்களுக்குக் கற்பித்தனர். குறிப்பாக, இத்தீவுகளிலும் மற்றும் தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலும், கடந்த நூறாண்டுகளுக்குப் பின்னும், இன்றளவும், மாரியம்மன் தாலாட்டு போன்ற வழிபாட்டுப் பாடல்களையும் மேலும் மார்கண்டேயன், மதுரை வீரன், அரிச்சந்திரா, நளதமயந்தி, நல்லதங்காள், ராஜாதேசிங்கு, லவகுசலவன் ஆகிய கதைப் பாடல்களையும் அவர்களால் இயன்றளவும் தக்கவைத்துக் கொண்டு பாடி வருகிறார்கள் என்பது ஒரு சிறப்பான நிலையாகும். சிறிது சிறிதாகத் தமிழ் பேசத் தெரிந்தவர்கள் எழுதத் தெரிந்தவர்கள் எல்லாம் மறைந்த பிறகு அந்த இலக்கியம் முழுவதும் வாய்மொழி இலக்கியமாக மாறி விட்டது. இன்று மூதாதையர்கள் அக்காலத்தில் கொண்டு வந்த தமிழ்ப் புத்தகங்கள் மற்றும் கையேடுகள் எல்லாமே மறைந்து கொண்டிருக்கின்றன. ஆனால் தமிழ் மூதாதையர்கள் தங்களுடன் கொண்டு வந்த தமிழ் மொழி எழுத்திலக்கியம் இன்று ஒரு வாய்மொழி இலக்கியமாக மாறி விட்டது. இந்தப் பன்முக மொழியியல் சூழ்நிலையில், கடந்த அறுபது எழுபது ஆண்டுகளுக்கு மேலாக, இங்கு பயன்படுத்தப்படும் தமிழ்ப் பாடல்கள் இறைவழிபாட்டுப் பாடல்கள் மற்றும் இங்கு நடத்தப்படும் ராஜா தேசிங்கு மதுரைவீரன் போன்ற கதைப் பாடல்கள் எல்லாமே

---

9 அருணாசலம் புட்பரதம், வசந்தம், 1989, பக். 5-6.

10 மொரிசியசு 12 மார்ச் 1968-இல் சுதந்திரம் பெற்ற ஒரு தனி நாடு. இந்த நாட்டின் அரசியல், வரலாற்று மற்றும் சமூகக் காரணிகள் பிரான்சில் காணப்படும் சூழ்நிலையிலிருந்து முற்றிலும் மாறானவை. இருப்பினும் இந்திய வம்சாவளியினரின் பாரம்பரிய மரபுகளை கையாளுவதில் சில ஒற்றுமைகள் உள்ளன. மொரிசியசு பற்றிய எனது ஆய்வுகள் வேறு கட்டுரைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இங்கு உள்ள கிரியோல் மொழியின் தாக்கத்தால் மிகவும் மாறுபட்டு உள்ளது. இவர்கள் பாடும்போது இந்தப் பாடல்களை பயிற்சி இல்லாதவர்களால் புரிந்து கொள்ள முடியாது. இது ஒரு முக்கியமான மொழியியல் சிக்கல். அதாவது எழுத்து வழியாக இங்கு வந்த இலக்கியம் சிறிது சிறிதாக வாய் வழி இலக்கியமாக மாறி விட்டது. இத்தமிழைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் சிறிது பயிற்சி வேண்டும். பயிற்சி இல்லாமல் முதல் முறையாக இப்பாடல்களைக் கேட்பவர்கள் பெரும்பாலும் இது தமிழ் அல்ல என்னும் அவசரமான தவறான ஒரு கருத்துக்கு வந்துவிடுகிறார்கள். ஆனால் இவர்கள் பாடுவதைக் கவனமாகக் கேட்டோம் என்றால் இந்தப் பாடல்கள் எல்லாமே - 1870, 1910 போன்ற காலகட்டங்களில் தமிழ்நாட்டில் அச்சேற்றப்பட்ட புத்தகங்களில் உள்ள பாடல்களே. இவர்கள் பாடும் வாய்வழிப் பாடல்களை நம்மால் அப்புத்தகங்களில் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது.[11] இந்த வாய்மொழி இலக்கியத்தைத் தக்கவைத்துக் கொள்வதும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதும் தான் இன்றைய தமிழ் வம்சாவளியில் இவர்களுடைய பெரிய சவாலாக உள்ளது.

தோட்டத் தொழிலாளர்களாக வந்த சமயத்தில் கோயில் கட்டுவதற்கோ சிலைகள் செய்வதற்கோ இவர்களுக்கு எந்த வசதியும் இல்லை. அவர்களுக்குத் தெரிந்த அளவு சிறு குடிசைகளையும், மரத்தடியையும் கோயில்களாக அமைத்து வழிபட்டனர். பூசை செய்வதற்காகக் காட்டில் கிடைத்த கற்களையே சிலையாகப் பயன்படுத்தினார்கள். இந்தக் கல்லைத் தேர்ந்தெடுப்பதற்கும் சில வழிமுறைகளைப் பின்பற்றினார்கள். ஊர்ப் பூசாரியார் நாற்பது நாள் விரதம் இருந்து மற்றத் தோட்டவாசிகளுடன் காட்டுக்குச் செல்வார். அங்கு அவருக்குச் சாமி வந்து ஒரு குறிப்பிட்ட கல்லை அடையாளம் காண்பிப்பார். அவர் காட்டுகின்ற கல்லைப் பூசைச் செய்து வசிக்கும் இடத்திற்கு எடுத்துச் செல்வார்கள். அந்தக் கல்லை மூன்று நாட்கள் தண்ணியில் வைத்து பூசை எல்லாம் செய்து அதற்குப் பாவாடை கட்டி, மஞ்சள் பூசி உயிர் ஊட்டுவார்கள். இதுதான் அவர்களுடைய தெய்வம்.[12] சாமி வந்த பூசாரியார்க் கல்லை தேர்ந்தெடுக்கும் போதே, அந்தச் சாமி மாரியம்மன், மதுரைவீரன், முனியான்டி என்று பெயர்ச் சொல்லிவிடுவார். தொல்காப்பியம்-பொருளதிகாரம்- புறத்திணையியலில் இறந்த வீரர்களுக்கு நடுகல் எடுப்பதற்குச் சொல்லியுள்ள வழிமுறைபோல் இது இருக்கிறது. செவி வழியாக அறிந்த பழந்தமிழ்ப் பண்பாட்டு விதிகளை இப்பகுதியில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர் இன்றும் பின்பற்றி வருவது மெய்சிலிர்க்க வைக்கிறது. குறி சொல்லும் பழக்கம்கூட அவர்களுக்கு இருக்கிறது. கத்திமேல் நின்று பூசாரி குறி சொல்கிறார்.

பொதுவாக எல்லாப் பிரஞ்சுமொழித் தீவுகளிலும் (மொரிஷியஸ் உட்பட) இந்தத் தீவுகளில் உள்ள பாரம்பரிய தமிழ் வம்சாவளியினரின் தமிழ்க் கோயில்களில் பூசைச் செய்பவர் பூசாரி அல்லது வாத்தியார் என்று அழைக்கப்படுவார். இந்தப் பூசாரி தான் தமிழ்ப் படிக்க எழுதத் தெரிந்தவராக இருப்பார். அதற்கு மேல் அவர்கள் கோவிலில் பூசைச் செய்யும் பொழுது அவர்கள் பாடும் தமிழ்ப் பாடல்கள் மற்றும் அவர்கள் அரங்கேற்றும் நாடகங்கள் இவற்றைப் புரிந்து கொண்டு மற்றவர்களுக்குக் கிரியோல் மொழியில் விளக்கம் அளிப்பார். சுருக்கமாகக் கூறினால். கோவில் பூசாரிதான் தமிழ் ஆசிரியர். தமிழ் ஆசிரியர்தான் கோவில் பூசாரி என்ற நிலை இருந்தது.

நான் 1989லிருந்து பல ஆண்டுகள் மொரீசியசில் களஆய்வு செய்யச் சென்றிருக்கின்றேன். அப்பொழுது அங்கு கோவிலில் பணி புரிந்த ஒரு தமிழ்ப் பூசாரியைக் கண்டு அவரிடம் சில செய்திகள் சேகரித்தேன். அவர் அப்போது எனக்குக் கூறிய விளக்கம் இன்றும் என் மனதில் பசுமரத்தாணி போல் பதிவாகியள்ளது. அவர் கூறியதாவது "எங்கள் பணி தெய்வப்பணி. நாங்கள் இருவழி தெய்வப் பணியாற்றுகிறோம். ஒன்று பகல் நேரங்களில் பள்ளிக்கூடங்களில் தமிழ்ச் சொல்லித் தருகிறோம்.

11 Appasamy Murugaiyan 2012, 2019 இந்த கதை பாடல்களை ஆராய்ந்து தமிழ் மூலங்களை கண்டுபிடித்து, பிரஞ்சில் மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

12 Appasamy Murugaiyan 2012

இரண்டாவது, மாலை நேரங்களில் இங்கு உள்ள பழைய பாரம்பரிய தமிழ்க் கோயில்களில் இறைவனை வேண்டி தமிழில் பூசைச் செய்து வருகிறோம். இந்த இரண்டுமே எங்களுடைய இறைப்பணி" என்று திட்டவட்டமாகக் கூறினார். இந்தக் கூற்று தமிழ் ஒரு தெய்வ மொழியாகப் பயன்பட்டு வருகிறது என்பதற்கு ஒரு முக்கியமான சான்று. மர்த்தினிக், குவாதலூப் தீவுகளில் 'கொழம்பு'தான் தேசிய உணவு. முக்கிய உணவும் அதுதான். அது தமிழர்களின் உணவு பழக்கத்தின் தாக்கம்தான்! மேலும், அவல்கா (அவரைக்காய்), பாவொக்கா (பாகல் காய்) முலுங்கீலே (முருங்கைக் கீரை) போன்ற பல சொற்கள் இன்றும் வழக்கத்தில் உள்ளன. 'ராமர்' என்பதை 'லாமெரு' என்றும், கிடா வெட்டைக் 'காவு' என்றும் சீர் வரிசை கொடுக்கிறதை 'வர்ச' என்றும் உச்சரிக்கிறார்கள். இந்தத் தீவுகளில் பேசுகின்ற கிரியோல் மொழியில் நிறைய தமிழ் வார்த்தைகள் கலந்திருக்கும். வயதில் மூத்தவர்களை 'அணே' என்று அழைப்பார்கள். அது 'அண்ணன்' என்னும் தமிழ்ச் சொல்லின் பிரதிபலிப்பு.

இங்கு வாய் வழி இலக்கியமாக மாறியுள்ள தமிழ்ப் பாடல்கள், கதைப் பாடல்கள், நாடகங்கள், தெய்வ வழிபாட்டுப் பாடல்கள் எல்லாமே கிரியோல் மொழியின் தாக்கத்தால் உச்சரிப்பு மற்றும் இலக்கணக் கூறுகளில் மிகவும் மாற்றம் பெற்றுள்ளது. இத்தமிழைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் சிறிது பயிற்சி வேண்டும் இந்தப் பயிற்சி இல்லாமல் முதல் முறையாக இப்பாடல்களைக் கேட்பவர்கள் பெரும்பாலும் இது தமிழ் அல்ல என எண்ணி விடுவர்.

இங்கு மர்தினிக் மற்றும் குவாதலூப் தீவுகளில் ஒரு அறுபது எழுபது ஆண்டுகளுக்கு முன் பொங்கல் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆனால் அதன் பிறகு பல காரணங்களால் அந்தப் பொங்கல் விழா கொண்டாடுவது நிறுத்தப்பட்டுவிட்டது இருப்பினும் கடந்த 8 ஆண்டுகளாகக் குவாதலூப்பில் உள்ள இந்திய மொழிகள் கழகம் இந்தப் பொங்கல் விழாவை மீண்டும் பழையபடி நன்றாக நடத்தி வருகிறது.

இறைவழிபாடும் மொழிச்சிக்கலும்

தமிழ்மொழியும் கலாச்சாரக் கூறுகளும் சிறிதுசிறிதாக நலிவடைந்து மாரியம்மன் மற்றும் மூதாதையர் வழிபாட்டோடு மட்டுமே தொடர்புடையதாகிவிட்டது எனும் கருத்தை மீண்டும் நினைவு கூரவேண்டும். "சைவம் வளர்த்த தமிழ் வைணவம் வளர்த்த தமிழ்" எனக்கூறுவது தமிழ் நாட்டைப் பொறுத்தவரைப் பொருந்தக் கூடியதாக இருக்கலாம். ஆனால் கடந்த 200 ஆண்டுகளுக்கும் மேலாக உலகின் பல பகுதிகளிலும் வழங்கிவரும் தமிழ்மொழியினைப் பார்க்கும்போது "மாரியம்மன் வளர்த்த தமிழ்" எனக் கூறுவதே சிறந்ததாகப் படுகின்றது.

"வடவேங்கடம் தென் குமரி யாயிடைத் தமிழ்க் கூறு நல்லுலகம்" என நமது மூதாதையர் வகுத்த எல்லையை விரிவுபடுத்தி, உலகமெங்கும் தமிழைக் கொண்டு சென்றதோடு அதனைப் போற்றிக் காத்து வரும் பெருமை புலம் பெயர்ந்த தமிழ் வம்சாவளியினரைத்தான் சாரும்.

தமிழ் வம்சாவளியினரின் பாரம்பரிய வழிபாட்டுமுறைகளை மாற்றும் எந்த முயற்சியும் இந்திய-தமிழர் அடையாளத்திற்குப் பெரும் எதிர் விளைவை ஏற்படுத்தும். முக்கியமாக, வாய்மொழியாகி வழிபாட்டு மொழியாக ஆக்கப்பட்ட தமிழ் சிறிது சிறிதாகத் தனது ஒரே பயன்பாட்டை இழக்கநேரிடும்.

கடந்த 25-30 ஆண்டுகளாகத் தமிழ் வம்சாவளியினரின் பாரம்பரிய வழிபாட்டு முறைகளில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த மாற்றங்கள் இவ் வம்சாவளியினரின் பழக்கவழக்கங்களைப் பெரிதும் பாதிக்கும் - பாதித்துள்ளது. பொதுவாக இந்தப் பாரம்பரியக் கோவில்கள் எல்லாம் மாரியம்மன், மதுரை வீரன், காத்தவராயன் போன்ற பலிகொடுக்கும் தெய்வங்களாகத் தான் உள்ளன இந்தப் பலி கொடுக்கும் பழக்கம் தேவையற்றது என்ற ஒரு கருத்து



இவர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி வருகிறது.[13]

எடுத்துக்காட்டாக இந்த மூன்று தீவுகளிலும் மேலும் மொரிஷியஸ் உட்பட எல்லாத் தீவுகளிலும் கோவில்களில் பூஜை செய்து வந்தவர்கள் இந்த நாட்டிலேயே பிறந்த தமிழ் வம்சாவளியினர். இவர்களைப் பூசாரி என்று அழைப்பர். ஆனால் கடந்த 30 ஆண்டுகளாக இந்தத் தமிழ் வம்சாவளியினரின் பாரம்பரிய வழிபாட்டு முறையினைப் பிராமண மயப்படுத்தும் நோக்கத்துடன் இந்தியாவிலிருந்து ஒப்பந்த பிராமண அர்ச்சகர்கள் வரவழைக்கப்பட்டு அவர்கள் இந்தக் கோயில்களில் பூசை செய்து வருகின்றனர். இதனால் இந்தக் கோவில்கள் இரண்டு பிரிவாக ஆக்கப்பட்டுள்ளன. ஒன்று, ஆடு கோழி முதலியவற்றைப் பலி கொடுக்கும் அசைவ கோயில்கள் என்றும் மற்றொன்று சிவபெருமான் விஷ்ணு போன்ற தெய்வங்களை வணங்கக் கூடிய சைவக் கோவில்கள் ஆகவும் மாறி உள்ளன. இதுவரை தமிழில் மட்டுமே அர்ச்சித்து வந்த இந்த மக்கள் இப்பொழுது சமஸ்கிருதத்திலும் மந்திரங்கள்

13 Benoist Jean 1978, 1998, Ghasarian 1991

சொல்லிப் பூஜிக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர். இதில் முக்கியமான சிக்கல் என்னவென்றால் இதனால் தமிழின் பயன்பாடு பாதிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் இந்த மக்கள் தங்களை இரு பிரிவினராகப் பிரித்துக் கொள்ள வேண்டிய ஒரு கட்டாயச் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இங்கு உள்ள சில கோவில்களில் ஒரே கோவிலில் ஒரு பகுதி தமிழ்ப் பூசாரிகளால் தமிழில் அர்ச்சிக்கப்படும் மற்றொரு பகுதி பிராமண பூசாரிகளால் சமஸ்கிருதத்தில் அர்ச்சிக்கப்படும் நிலையும் உள்ளது. சுருங்கக் கூறினால் வழிபாட்டுத் தலங்களும் வழிபாட்டு முறைகளும் வழிபாட்டு மொழியும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இங்கு உள்ள தமிழ் வம்சாவளியினர் எந்தக் கடவுளைக் கும்பிடுவது எந்த மொழியில் கும்பிடுவது என்னும் புதிய கேள்விக்கு ஆளாகி உள்ளார்கள். இதனால் முக்கியமாக வழிபாட்டில் மட்டுமே பயன்பட்டுவந்த தமிழ் மொழியின் பயன்பாடு இப்பொழுது சமஸ்கிருதத்துடன் போட்டியிட வேண்டிய ஒரு நிலையில் உள்ளது. இந்த நிலை நீடித்தால் தமிழ் மொழியின் ஒரே பயன்பாடான வழிபாடும் குறைந்துவிட வழியுண்டு.

இந்திய-தமிழ் அடையாளம் :
நவீனமயமாக்கலா? குழப்பமா?

எனது கள ஆய்வின் போது, முக்கியமாக மர்த்தினிக் மற்றும் குவாதலுப் ஆகிய இரண்டு தீவுகளிலும் உள்ள தமிழ் வம்சாவளியினரிடம் அவர்கள் தங்களது இந்திய-தமிழ் அடையாளங்களை எப்படி போற்றிப் பாதுகாக்கப் போகிறார்கள் என்னும் கலந்துரையாடலின் போது பின்வரும் கருத்துக்களைக் கூறினர். இக்கருத்துக்கள் மிகவும் முக்கியமானவை.

இந்தத் தீவுகளில் சிதறிக்கிடக்கும் சிறுபான்மையினராகிய எங்களை ஒன்றுபடுத்த இந்திய பண்பாட்டுக் கூறுகளால்தான் முடியும். இந்துமத வழிபாடு முக்கியமானதுதான். ஆனால், இந்த 'புது இந்துமதம்' எங்களைப் பிரித்து வைக்கிறது. உதாரணமாக, இங்கே மாரியம்மனுக்கு விழா எடுக்கும்போது, முதலில் நாகூர் மீரானுக்குதான் பூசை செய்வோம். அவர்தான் எங்கள் மூதாதையர்கள் கப்பலில் பயணம் செய்தபோது அவர்களைப் பத்திரமாகக் கரைசேர்த்தார். எங்களைப் பொறுத்த வரையில் மாரியம்மன், மதுரைவீரன், நாகூர் மீரான் எல்லாமே எங்கள் கடவுள்தான்! ஆனால் இப்போது நாகூர் மீரான் இந்துக் கடவுள் இல்லை என்று சிக்கல். மர்த்தினிக் தீவில் இருக்கிற ஒரு பெரிய மாரியம்மன் கோவிலின் பெயரே "சாயபு கோயில்" (Chapelle Sayafou), தமிழ் முஸ்லிம் ஒருவரால் கட்டப்பட்டது. தவிர, எங்கள் மூதாதையர்கள் காலத்திலிருந்தே பிரஞ்சு குடியுரிமைப் பெறுவதற்கு கிறித்துவ மதத்தைத் தழுவியிருக்க வேண்டும். நாங்கள் இந்து, முஸ்லிம், கிறித்துவர் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் தமிழ்-இந்திய வம்சாவளியினர் எனும் ஒரே அடையாளத்தைதான் பின்பற்றி வருகிறோம். எங்கள் வரலாறு மிகவும் சிக்கலானது. இதுபோல் பல கருத்துக்களை அவர்கள் மடைதிறந்த வெள்ளம்போல் கொட்டி வைக்கின்றனர். இந்த மாதிரியான குழப்பங்களினால்தான், என் கள ஆய்வின்போது நான் சந்தித்த பல இந்திய வம்சாவளியினர் 'எனக்கும் இந்தியாவிற்கும் எந்த உறவும் இல்லை, அது ஒரு பழங்கதை' எனக் கூறியுள்ளனர்.

இயல்பாக, இத்தீவுகளில் வாழும் இந்தியச் சந்ததியினர் அனைவரும் கிறித்துவ மதத்தினர் என்று கூறலாம். சமூக ரீதியாக வேற்றுமை பாராட்டாமல் இருக்கும் பொருட்டு எல்லோரும் தேவாலயங்களுக்கு வழிபாட்டுக்குச் செல்வார்கள், எல்லாக் கிறித்துவப் பண்டிகைகளையும் கொண்டாடுவார்கள். இருப்பினும், அவர்களுக்கென ஒரு குறை அல்லது வேறு நோய் வரும்போது மாரியம்மன், மதுரைவீரன், காத்தவராயன் போன்ற தெய்வங்களையும் குலதெய்வங்களையும்தான் வழிபடுகிறார்கள். மாரியம்மனுக்கு அடிக்கடி விழா நடக்கின்றது. காவு கொடுத்துப் பலியிட்ட ஆடுகளையும் கோழிகளையும் கறி சமைத்து எல்லோரும் பகிர்ந்து உண்பார்கள். இந்த வழிபாடுகளில் தமிழர்கள் மட்டுமல்ல, அந்தந்தத் தீவுகளில் இருக்கிற மற்ற இனக் குடிமக்களும் கலந்துகொண்டு படைத்த உணவை, 'பிரசாதம்' என எடுத்துச் செல்வார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

1952 ஆம் ஆண்டு இங்கு உள்ள கிறிஸ்துவ சபையின் தலைவர் இந்திய வம்சாவளியினருக்கு ஒரு எச்சரிக்கை விடுத்தார். இந்த எச்சரிக்கையில் இந்து மத நம்பிக்கைகளும் இந்து மத சடங்குகளும் கிறித்துவ சடங்குகளுக்கும் கிருத்துவ நம்பிக்கைகளுக்கும் புறம்பானவை ஆகையால் அந்த இந்து மதச்சடங்குகளைக் கடைபிடிக்கக் கூடாது என்று எச்சரிக்கை விடுத்தார். இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் இந்திய வம்சாவளியினர், கிறிஸ்துவ சபைக்கும் அரசாங்கத்திற்கும் பயந்து அவர்களுக்குத் தெரியாமல் மறைமுகமாக மதுரை வீரன் மாரியம்மன் போன்ற தங்கள் பாரம்பரிய தெய்வங்களை வேண்டி வந்தனர். இவ்வாறு மறைத்து வழிபட்டுக் கொண்டிருந்த தமிழர்கள் இப்போது, மாரியம்மனை எந்தப் பயமும் இல்லாமல் வழிபட்டு வருகின்றனர். ஆனால் இந்தியாவில் இருந்து வந்துள்ள 'புது இந்து மத' சக்திகள்தான் அவர்களுக்குச் சிக்கலைத் தருகின்றன..

எங்களுடைய மூதாதையர்கள் எங்களுக்களித்துச் சென்றதில் நாங்கள் தக்கவைத்திருப்பதென்னவோ தெய்வீகம் மற்றும் குடும்பம் சார்ந்த சில வழிபாட்டு முறைகளும் சடங்குகளும்தான். பிரஞ்சு அரசாங்கத்தின் "ஒருங்கிணைப்புத் திட்டத்திற்கும், கிறித்துவ சபைக்கும் தப்பி பல இன்னல்களையும் எதிர்கொண்டு நாங்கள் போற்றி வரும் எங்களுடைய "தமிழ்-இந்திய" அடையாளக் காரணிகளை மாற்றியமைக்க இப் "புதிய இந்துமதம்" முயன்று வருகின்றது! எங்கள் மூதாதையர்கள் எங்களுக்குக் காட்டிய வழியில் செல்வதா? அல்லது இந்தப் புது இந்துமதத்தைப் பின்பற்றுவதா? எனக் குழப்பத்துடன் வினவும் இத் தமிழ் வம்சாவளியினரிடம் என்ன கூறுவது? அந்த மாரியம்மன் தான் அவர்களுக்கு நல்லவழி காட்டவேண்டும்!!!

தற்போது அவர்கள் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள பெரிதும் விரும்புகின்றனர். அவர்களது இந்த முயற்சியில் சில சிறு சிறு பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் பெரும்பாலான முயற்சிகள் நல்ல திட்டமின்மையாலும் ஒருங்கிணைப்பு இல்லாமையாலும் எதிர்மாறான பலன்களைத்தான் அளிக்கின்றன என்பது வருந்தத்தக்க உண்மை.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகைச் செய்தல் வேண்டும்" எனும் பாரதியாரின் பாடல் இங்குள்ள தமிழ் வம்சாவளியினர் எல்லோருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பது என்னவோ உண்மைதான்! ஆனால் 200 ஆண்டுகளுக்கு முன் புலம்பெயர்ந்து சென்று உலகின் பலபகுதிகளிலும் நம் மொழியையும் பண்பாட்டினையும் போற்றிப் பாரதியாரின் கவிதைக்கு உருவமாக, பொருளாக விளங்கிவரும் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டியது நமது கடமை!

"வடவேங்கடம் தென் குமரியாயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என நமது மூதாதையர் வகுத்த எல்லையை விரிவுபடுத்தி, உலகமெங்கும் தமிழைக் கொண்டு சென்றதோடு அதனைப் போற்றிக் காத்து வரும் பெருமை புலம்பெயர்ந்த தமிழ் வம்சாவளியினரைத்தான் சாரும்.

"சைவம் வளர்த்த தமிழ் வைணவம் வளர்த்த தமிழ்" எனக்கூறுவது தமிழ் நாட்டைப் பொறுத்தவரைப் பொருந்தக் கூடியதாக இருக்கலாம். ஆனால் கடந்த 200 ஆண்டுகளுக்கும் மேலாக உலகின் பல பகுதிகளிலும் வழங்கிவரும் தமிழ்மொழியினைப் பார்க்கும்போது "மாரியம்மன் வளர்த்த தமிழ்" எனக் கூறுவதே சிறந்ததாகப் படுகின்றது. இக்கருத்து, எனது கால் நூற்றாண்டுகால ஆய்வில் கண்ட நடைமுறைக் கருத்து. பிரஞ்சுத் தீவுகளில் வாழும் தமிழ் வம்சாவளியினரின் இந்திய-தமிழ் அடையாளக் கட்டுமானத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அவர்களுடைய சில கருத்துக்களைப் பதிவிட வேண்டியது மிக முக்கியமானதாகப் படுகிறது. கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக நாங்கள் எங்கிருக்கின்றோம் எப்படி இருக்கின்றோம் என இந்திய அரசோ மற்றும் புதுச்சேரி -தமிழ்நாடு அரசுகளோ கவனம் செலுத்தவில்லை. மர்த்தினிக், குவாதலுப் தீவுகளில் நாங்கள் வாழ்வது தமிழ் நாட்டில் எத்தனை பேருக்குத் தெரியும்? நாங்களும் யாருடைய உதவியுமின்றி எங்களுடைய "தமிழ்-இந்திய" அடையாளத்தை எங்களால் முடிந்த அளவு கட்டிக் காத்து வருகின்றோம். எங்கள் மூதாதையர் நாடாகிய இந்தியாவுடன் 1985-க்குப் பிறகுதான் மீண்டும் தொடர்பு ஏற்பட்டது எனக் கூறலாம். நாங்கள் போற்றிக் காத்து வரும் எங்கள் தமிழ்-இந்திய வேர்களைத் தேடிச்செல்வதில் மிக்க மகிழ்ச்சியும் பெருமையும்கூட! ஆனால் எங்களைத் தேடிவந்துள்ள இந்தியாவோ ஏதோ ஒரு புதிரான உணர்வாகத் தோன்றுகின்றது, கசப்பானதாகப் போய்விடுமோ எனும் அச்சமும் உள்ளது. இந்தியா என்றால் "சமஸ்கிருதம், இந்தி மற்றும் இந்துமதம்" எனும் குறுகிய கருத்தை எங்களிடையே புகுத்தவும் பரப்பவும் கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக முயன்றுவருகின்றனர்.[14] பற்றாக்குறைக்குச் சில ஆண்டுகளாகப் 'பாலிவுட்'டும் பரவிக் கொண்டிருக்கின்றது!

"மேலும் நாங்கள் பல தலைமுறையாக வழிபட்டு வரும் மாரியம்மன், மதுரை வீரன் போன்ற எங்களது மூதாதையர் எங்களுக்களித்த தெய்வங்களை இவர்களது "புதிய இந்துமதம்" சிறிது சிறிதாக மாற்ற முயற்சிக்கின்றது." "மாரி மகமாயி மழை பொழியும் தாயே" எனக் கிரியோல் மொழிப் பேச்சொலி கலந்த உச்சரிப்புடன் தப்பு ஓசையுடன் மிக இயல்பாக இவர்கள் பாடுவதை மாரியம்மனுக்கு நேர்த்திக் கடன் செலுத்தும் ஒவ்வொரு விழாவிலும் கேட்கலாம். இவ்வாறு வழிபாட்டு மொழியாக வழங்கி வரும் தமிழ் மொழியை மாற்றிச் சமஸ்கிருதமாக்கலும் நடைபெற்று வருகின்றது. தமிழ் ஏதோ இறை வழிபாட்டில் மட்டுமே பயன்பட்டுக் கொண்டிருக்கிறது, அங்கும் சமஸ்கிருதம் புகுத்தப் பட்டால் எங்கள் மூதாதையர் மொழி எந்தவிதப் பயன்பாடும் இல்லாமல் மறைந்து போய்விடுமே!

தமிழ் வம்சாவளியினரின் தற்போதைய நிலை

அவர்களுடைய மூதாதையரின் வேர்களைத்தேடும் படலத்தில் உள்ளனர். 75 ஆண்டுகளுக்குப் பின் இந்தியாவிற்குப் பயணிக்க ஆரம்பித்துவிட்டாரகள். அவர்களுடைய மூதாதையரின் பல்லாயிர ஆண்டுகள் கண்ட வரலாற்றில் பெருமைப்படுகிறார்கள். அந்த மூதாதையரின் பண்பாடு, ஆன்மீகம், மொழி, கலை போன்ற தொட்டுணர முடியாத பாரம்பரியத்தைத் தங்களுடையதாக ஆக்கிக்கொள்ள விரும்புகிறார்கள். இந்தத் தேடலில் அவர்களுடைய உண்மையான தேவைகளை யாரும் காதுகொடுத்துக் கேட்பதில்லை. ஒரு தனிமைப்படுத்தப்பட்ட சூழலில் ரெயுனியன், குவாதலுப், மர்த்தினிக் ஆகிய பிரஞ்சுத் தீவுகளில் வாழும் தமிழ் வம்சாவளியினர், தங்களுடைய மூதாதையரின் மொழியாகிய தமிழை பண்பாட்டு அடையாளச் சின்னமாகவே இறை மொழியாகவே பயில விரும்புகின்றனர்.

தமிழ், இந்தி மொழிகளைக் கற்க ஆர்வம் அதிகரித்து வருகிறது. கடந்த 20 ஆண்டுகளாகத் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்வதிலும் ஆர்வம் பெருகிவருகிறது. லா ரெயுனியன் மற்றும் குவாதலூப் தீவுகளில் பல பண்பாட்டுக் குழுக்கள் தமிழ் மொழியைப் பயிற்றுவிப்பதில் ஈடுபட்டுள்ளன. லா ரெயுனியன் பல்கலைக்கழகத்தில் இந்தியும், தமிழும் பயிற்றுவிக்கப் படுகின்றன. "குவாதலூப் இந்திய மொழிகள் கழகம்" (CGPLI) எனும் அமைப்பின் தலைவர் ஃப்ரெட் நெகிரிட் (Fred Negrit) அவர்களின் அயாராத முயற்சியால் குவாதலூப் தீவில் இந்தியும் தமிழும் பயிற்றுவிக்கப் படுகின்றன. 2012-இலிருந்து முறையான தமிழ் மொழிப் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

14 Jean Benoist 1978, 1998, Christian Ghasarian 1991, Singaravelou 1975

முடிவுரை (தமிழ் வம்சாவளியினரின் குரலில்)

"எங்களுடைய பிரச்சினைகளையும் தேவைகளையும் வரலாற்று அடிப்படையில் புரிந்துகொள்ளாமல் மேற்கோள்ளப்படும் எந்த முயற்சியும் எங்களுக்கு எதிரான பலனைத்தான் அளிக்கும். எங்களுடைய மூதாதையர்கள் எங்களுக்களித்துச் சென்றதில் நாங்கள் தக்கவைத்திருப்பதென்னவோ தெய்வீகம் மற்றும் குடும்பம் சார்ந்த சில வழிபாட்டு முறைகளும் சடங்குகளும்தான். இவ்வடையாளங்களைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைகளுக்கு எடுத்துச்செல்வதுதுதான் எங்கள் நோக்கம்." அந்த மாரியம்மன் தான் அவர்களுக்கு நல்லவழி காட்டடவேண்டும்!!!

துணை நூல்கள்

Arasarathnam Sinnappah, 1979, Indians in Malaysia and Singapore (Revised edition), Oxford University Press, Kuala Lumpur.

அருணாசலம் புட்பரதம், *1989*, 'உள்ளே', வசந்தம், சிறப்பு மலர், ஏழாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, டிசம்பர் *1989*, மகாத்மாகாந்தி நிறுவனம், மோக, மொரீசியசு.

Behal Rana, 2013, Coolies, Recruiters and Planters: Migration of Indian Labour to the Southeast Asian and Assam Plantations during Colonial Rule. In: Crossroads Asia Working Paper series, No. 9.

Benoist Jean, 1978, « Religion hindoue et dynamique de la société réunionnaise ». Annuaire des pays de l'océan indien, Vol. VI, p 127-166.

Benoist Jean, 1998, Hindouismes créoles. Mascareignes. Antilles. Les Editions du C.TH.S (Comité des travaux historiques et scientifiques, Ministère de l'Éducation nationale, de la recherche et de la technologie), Paris.

Biltoo Anil Kumar, 2004, Language Maintenance and Language Shift in Mauritius: A Sociolinguistic Investigation into the Language Practice of Bhojpurias, D Phil Thesis, University of York, Department of Language and Linguistic Science.

Canagarajah, A. Suresh, 2008, "Language shift and the family: Questions from the Sri Lankan Tamil diaspora", Journal of Sociolinguistics 12/2, p143-176.

David-Khemlani Maya, 1998, "Language shift, cultural maintenance, and ethnic identity; a study of a minority community: The Sindhis of Malaysia", International journal of the sociology of language 130, p 67 – 76.

Devadas Vijay, 2007, "The Kangani and Maistry systems", (ed) Lal Brij V, The Encyclopedia of the Indian Diaspora, Oxford University Press, Singapore, p 53-57.

Dhandayudham R., 1973, "The development of Tamil short story in Malaysia", Journal of Tamil Studies, Vol.3, p 7-16

Eberhard, David M. 2018, Forthcoming, "Language shift and identity: Exploring Factors which condition identity when a traditional language is lost", MANUSYA, Journal of Humanities, Vol. 21 No. 2.

Faruggia Laurent (1975), Les Indiens de Martinique et de Guadeloupe. Basse-Terre, Desmarais.

Fishman, Joshua A. 2004, "Language maintenance, language shift, and reversing" In Tej K. Bhatia and William C. Ritchie (eds.), The Handbook of Bilingualism. Oxford, U.K.:

Blackwell. 406–436.

Ghasarian, Christian, 1991, Honneur, chance & destin. La culture indienne à La Réunion, Paris, L'Harmattan.

L'Étang, Gerry, 1989, « Du tamoul de la Martinique : portée symbolique d'une langue cérémonielle,» L'Inde en nous. Des Caraïbes aux Mascareignes (Gerry L'Étang éd.), Carbet n° 9, p 81-100.

Govindin Sully Santa, 1994, Les engagés indiens : île de la Réunion : XIXème siècle, Azalées éditions, Saint-Denis (La Réunion)

Hookoomsing Vinesh, 1997, « Le tamoul à Maurice, langue du sacré», Special Edition on the occasion of the Inauguration of the Tamil Cultural Centre, 30 November 1997, Mauritius Tamil Temple Federation Publication.

Marimuthu. T, [1993] 2008, "The plantation school as an agent of social reproduction", (eds) K.S.Sandhu & A. Mani, Indian communities in Southeast Asia, Institute of Southeast Asian Studies, Singapore, p 465-483

Mesthrie Rajend, 1995, "Language change, survival, decline: Indian languages in South Africa", (ed) Mesthrie Rajend, Language and Social History: Studies in South African Sociolinguistics, p 116-128.

Murugaiyan Appasamy, 2003, « Indian Languages in Mauritius: Religion, Culture and Language Acquisition: An Attempt at defining 'Language of Culture", (eds) Rekha Sharma & E. Annamalai, Indian Diaspora In Search of Identity, CIIL, Mysore, p 188-199.

Murugaiyan Appasamy, 2001, « La presse bilingue tamoule-française à Maurice et la création d'une identité tamoule », (eds) Issur R Kumari et Hookoomsing V.Y. (eds), L'océan Indien dans les littératures francophones : pays réels, pays rêvés, pays révélés, Editions Karthala, Paris et les Presses de l'Université Maurice, p 287-312.

Murugaiyan Appasamy, 2007, Le tamoul, langue classique et langue de diaspora, (eds.) Catherine Servan-Screiber et Vasoodevan Vuddamalai, Diasporas indiennes dans la ville, hommes & migrations n° 1268-1269, p 92-95.

Murugaiyan, Appasamy, 2012, « Chants tamouls aux Antilles : un patrimoine entre écrit et oral », in L'Etang Gerry (éd.), Archipélies n° 3-4, De la créolisation culturelle, p 215-234.

Murugaiyan Appasamy, 2013, «Le tamoul», dans Georg Kremnitz (dir.), Histoire sociale des langues de France, Presses, Universitaires de Rennes, p 881-889.

Murugaiyan Appasamy, 2019, Chants tamouls en diaspora francophone : Corpus, appropriation, transmission et reconstitution, Nicolas Dejene et Claudine Leblanc (eds), Diasporas : Etudes des Singularités Indiennes, L'Inde de leurs texts : Littérature d'Asie du Sud en diaspora, desi Larevue, Presse Universitaires de Bordeaux, N° 4, Mai 2019, p. 33-53.

Oonk Gisbert, 2007, "'We Lost our gift of Expression': Loss of the Mother Tongue among Indians in East Africa, 1880-2000", Gijsbert Oonk (Ed) Global Indian Diasporas Exploring Trajectories of Migration and Theory, Amsterdam University Press, p 67-88.

Paramasivam Muthusamy, Farashaiyan Atieh, 2016, "Language Change and Maintenance of Tamil language in the Multilingual Context of Malaysia", International Journal of Humanities and Social Science Invention, Vol.5 Issue 12, p 55-60.

சு. இராசாராம் *(Rajaram S.)*, *1992*, மொரீசியஸ் தமிழரும் தமிழும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

Schiffman Harold, 1995, "Language Shift in the Tamil Communities of Malaysia and Singapore: the Paradox of Egalitarian Language Policy", Language Loss and Public Policy, I, Garland Bills (ed.), Southwest Journal of Linguistics, Volume 14, Nos. 1-2.

Singaravelou, 1975, Les Indiens de la Guadeloupe. Etude de géographie humaine, Bordeaux, Deniaud.

Vijaya Sankar Lokasundari, 2011, "The Importance of Ethnic Identity when Language Shift Occurs: A Study of the Malaysian Iyers", (eds) Dipika Mukherjee and Maya Khemlani David, National Language Planning & Language Shifts in Malaysian Minority Communities Speaking in Many Tongues, Amsterdam University Press, Amsterdam, p 23-42

▪

கட்டுரை

செந்தலை ந. கவுதமன்

தமிழை நாம் காத்தால் தமிழ் நம்மைக் காக்கும்!

எந்தவூர் இனமும் அதன் மொழியால் மட்டுமே அடையாளம் காணப்பெறுகிறது. மொழிதான் நாட்டை உருவாக்குகின்றது என்பது உலகவரலாறு காட்டுகின்ற உண்மை.

வரன்முறையற்ற மொழிக்கலப்பை ஊக்கப்படுத்துவதற்கென்றே சில கட்சிகளும் அமைப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன! தமிழினத்தைச் சிறுபான்மை இனமாகக் கூறுபோட்டுச் சிதறவைக்கும் கெடுநோக்கத்தோடு இந்த வேலை நடக்கிறது. இன அழிவிற்கு வழிவகுப்பது மொழி அழிவே என்பது எல்லோரும் அறிந்த எளிய உண்மை.

அயற்பகை, அகப்பகை, உட்பகை, என்னும் முப்பகையாலும் முற்றுகையிடப்பட்டுள்ளது தமிழினம் பகைவரை அடையாளம் காண்பதும் கடினமாக்கப்பட்டுள்ளது. அயல்இன வல்லாண்மை, தமிழரின் அடிமைமனம் - இரண்டாலும் அழிவிற்கு ஆளாகி வருகிறது தமிழ்மொழி.

அயன்மொழிச் சொற்களை வலிந்துபுகுத்தும் அழிவு வேலையைத் திரையுலகம், ஊடகத்துறைகள், கல்விக்கூடங்கள் என்னும் மூன்றின் வாயிலாகத் திட்டமிட்டு நிறைவேற்றி வருகின்றனர். தமிழையும் தமிழினத்தையும் சிதைக்கும் முயற்சிகள் வலுவடையாமல் பாதுகாக்கத் தமிழரின் வலிமை திரட்டப்படவேண்டும்.

வல்லமை சேர்க்கும்
வலிமைஉண் டாக்கும்!
வண்டமிழ் நைந்திடில்
எதுநம்மைக் காக்கும்?

பாவேந்தர் பாரதிதாசன் தமது பாடலில் காட்டிய கவலை, தமிழர் ஒவ்வொருவரின் உள்ளத்தையும் தொடவேண்டும்.

பெற்ற குழந்தைக்குத் தமிழில் பெயர்வைக்கும் சூழலைக்கூட, தமிழினம் இழந்து வருகிறது. வடமொழி நாற்றம் தமிழர் இல்லந்தோறும் பெயர்களாய் நெடியேறிக் கிடக்கிறது.

வடமொழி புகழ்ந்திடும் தமிழ்வாய் –
எதிர்
வரக்காணின் காறிநீ உமிழ்வாய்

பாவேந்தர் ஆணையை நிறைவேற்றும் தமிழ்க்கனல் சுடர்விடுவதற்குப் பழைய வரலாறு நினைவூட்டப்படவேண்டும்.

ஆரியத்தை எதிர்ப்பதிலும் சமற்கிருதத்தை விலக்குவதிலுமே தமிழின மேம்பாடும் தமிழ்ப்பாதுகாப்பும் அடங்கியிருக்கின்றன. தமிழர் நெஞ்சங்களில் இந்த உணர்ச்சியை அரும்பவைத்தது தந்தை பெரியாரின் தன்மான இயக்கம்; மலர்ந்து விரியவைத்தது மறைமலை அடிகளாரின தனித்தமிழ் இயக்கம். சமூக, அரசியல், தமிழ்ப்பண்பாட்டு மலர்ச்சிக்கு இந்த ஈரியக்கங்களின் பேருழைப்பு பயன்பட்டது.

தமிழின் தனித்தன்மையும் தமிழரின் சமத்துவ உணர்வும் கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பின் தளரத் தொடங்கின; கி.பி.பத்தாம் நூற்றாண்டிற்குப் பின் சரியத் தொடங்கின; அந்நியர் ஆளத்தொடங்கிய கி.பி.13ஆம் நூற்றாண்டிற்குப் பின் வீழத் தொடங்கின. வீழ்ச்சியடைந்த நிலையிலிருந்து விழிப்படைவதற்கு எண்ணூறு ஆண்டுகளைக் கடக்க நேர்ந்தது தமிழினம்.

அச்சுவருகையும் கல்வி அறிமுகமும் உலகநாடுகள் விழிப்படைந்த வரலாற்றை அறிமுகம் செய்தன. ஆங்கிலேயர் தந்த அறிவுத்துறைகளால் நுகரத் தொடங்கிய புதுவாழ்வின் நறுமணம் தமிழுலகை எழுந்துநடக்க வைத்தது. வள்ளலார், பாம்பன் சாமிகள், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், பரிதிமாற் கலைஞர், சுப்பிரமணிய சிவா, வ.உ.சி., பாரதியார், பெ.சுந்தரனார் முதலிய பலரும் புதிய விழிப்புக்கு வழிகோலும் தொடக்க விதைகளை ஏந்தி நின்றனர்.

கோவை அவிநாசியில் பிறந்து விருதுநகரில் வாழ்ந்துவந்த விருதை சிவஞான யோகி 19.11.1908ஆம் நாள் திருவிடர் கழகம் என்னும் அமைப்பை உருவாக்கினார். தனித்தமிழ் உணர்ச்சிக்கு வித்தூன்றிய முதல் அமைப்பு அதுதான்! அந்தத் திருவிடர் கழகத்தில் உறுப்பினராக இருந்த சுவாமி வேதாசலம், தனித்தமிழ் உணர்ச்சியால் தம் பெயரை

மறைமலை அடிகள் என அமைத்துக்கொண்டு 1916இல் தொடங்கிய தனித்தமிழ் இயக்கம் விரிவாக விழுதுவிட்டுப் படர்ந்தது.

தனித்தமிழ் உணர்ச்சி வேகம் பெறவும் இயக்கமாக விரிவடையவும் வாயில் திறந்துவைத்தது பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் 'தென்மொழி' இதழ்!

இன்பத் தமிழ்மொழிக்கு என்உயிர் மூச்சும்
இனிய தமிழ்நாட்டைப் பற்றிஎன் பேச்சும்
அன்பின் பிணைப்பினுக்(கு) என்றன்கை வீச்சும்
அடங்காமல் என்றும்இத் தரையில்நின்(று) ஓச்சும்!

பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுத்தில் தந்த உணர்வோட்டம், உணர்ச்சியுள்ள பலரின் உள்ளஓட்டமாக உயர்ந்து பெருகியது. 'தென்மொழி' வாயிலாகவே பாவாணர் நூல்களின் விரிவான அறிமுகத்தைத் தமிழுலகம் பெற்றது.

'மாந்த(மனித) வரலாறு போன்றதே, தமிழின் சொல்வரலாறு' - என்னும் புதிய நோக்கில் தமிழ்வாழ்வைப் பார்க்கச் செய்தார் பாவாணர். மொழி வரலாற்றை மாந்த வரலாற்றோடு அவர் இணைத்துக் காட்டியதால், தமிழாய்வுலகம் புதிய முகத்தைப் பெற்றது.

கூட்டமாக இருந்ததையும் குடும்பமாக மலர்ந்ததையும் குடி, குலம், இனம் எனக் கிளைத்துப் பரவியதையும் மாந்த இனத்திற்கும் தமிழ்ச் சொற்களுக்கும் பொருத்திக்காட்டியது பாவாணரின் ஆய்வுநெறி! தமிழ்ஆய்வு, தமிழ்க்காப்பு என்னும் இருநோக்கு உடையவராய் இயங்கியவர் பாவாணர். அதனால் அவருக்கும் அவர் நூல்களுக்குமான தேவை தொடர்ந்தபடியே உள்ளது.

மறைமலையடிகளாரைவிட இருபத்தாறு ஆண்டுகள் இளையவர் தேவநேயப் பாவாணர். இருவரும் தனித்தமிழ் இயக்கத்தைத் தாங்கி நிற்கும் தூண்களாகப் போற்றப்படுகின்றார்கள். அடிகளார் தனித்தமிழ் இயக்கம் தொடங்கியது 1916இல்! பாவாணர் உலகத்தமிழ்க் கழகம் தொடங்கியது 1968இல்!

தமிழ் மலர்ச்சிக்கும் தமிழர் எழுச்சிக்கும் அடித்தளம் அமைத்துச் சுவரெழுப்பிப் பாதுகாத்த அமைப்புகள் பல.

1908 திருவிடர் கழகம்

1916 தனித்தமிழ் இயக்கம்

1934 சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம்

1937 தமிழ்ப்பாதுகாப்புக் கழகம் (சை.சி.நூ.கழகம்)

1959 தமிழ்ப்பேராயம் (தூய வளனார் கல்லூரி)

1962 தமிழ்க்காப்புக் கழகம் (சி.இலக்குவனார்)

1964 தனித்தமிழ்க்கழகம் (திருச்சிராப்பள்ளி)

1968 உலகத் தமிழ்க்கழகம் (ஞா. தேவநேயப்பாவாணர்)

1972 தமிழியக்கம் (தமிழ்க்குடிமகன், இரா.இளவரசு)

1998 தமிழ்ச்சான்றோர் பேரவை (நா.அரணாசலம்)

இப்படி வரிசையாய் எழுந்த அமைப்புகள், வளர்ச்சியூட்டிய இடங்களை வலுப்படுத்தவேண்டும்; சரிந்துசாய்ந்த இடங்களில் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

அவதூறு பேசலும் பழிதூற்றலும் குற்றங்கூறலும் தம்மை வியத்தலும் வழிதவறியோரின் செயல் எழுச்சியிலும் சரிவிலும் பாடங்கற்று முன்னேறுவதே பண்பாடான செயல்.

எந்தஓர் இனமும் அதன் மொழியால் மட்டுமே அடையாளம் காணப்பெறுகிறது. மொழிதான் நாட்டை உருவாக்குகின்றது என்பது உலகவரலாறு காட்டுகின்ற உண்மை.

நாட்டு உருவாக்கத்தில் (State Formation) மொழியின்பங்கு முதன்மையானது. மொழிவழியாகக் கிடைக்கும் முதல் அடையாளம் நமது பெயர். தமிழ் அடையாளத்தைத் தமிழர் பெயர்களிலிருந்து விலக்கிவைக்கும் அழிவு வேலை வேகமாக நடக்கிறது. கணியம்(சோதிடம்), எண்சோதிடம், பெயர்ச் சோதிடம் என விதவிதமான மூடநம்பிக்கைப் போதையூட்டி அந்நியப் பெயர்களைத் தமிழ்க் குழந்தைகளின்மீது திணித்து வருகின்றனர்.

செந்த முகத்தைத் தமிழ்ப்பெயரில் பார்த்துப் புதுப்பித்துக்கொள்ளும் எழுச்சித் தலைமுறையைத் திராவிடர் இயக்கமும் தனித்தமிழ் இயக்கமும் உருவாக்கின. அந்த உணர்ச்சி கரையாமல் காப்பாற்றப்பட்டால்தான் தமிழும் தமிழினமும் காப்பற்றப்படும்.

தாய்மொழியில் பெயர்வைக்காதவர்களைத் தம்நாட்டுக் குடிமக்களாகவே பல நாடுகள் ஏற்பதில்லை. சீனமொழியில் பெயர் வைக்காத எவருக்கும், சீனநாட்டுக் குடிமகனுக்குரிய சலுகைகளைச் சீனஅரசு வழங்குவதில்லை.

ஆங்கிலம் தனக்குரிய இடத்தைத் தனதுநாட்டில் பெறுவதற்கே முந்நூறு ஆண்டுகாலம் போராடிய வரலாறு நாம் அறிந்ததுதான்.

தமிழைக் காக்கத் தமிழர் எடுத்த முயற்சிக்கு நூறாண்டுதான் ஆகிறது! இப்படி ஒப்பிட்டுப் பார்ப்பது ஆறுதல் பெறுவதற்கு மட்டுமே உதவும்.

தமக்கான இடத்தைத் தமிழும் தமிழினமும் பெறுவதற்கான காலம் தொலைவில் இல்லை என நம்பிக்கை பெறுவது எளிது! அதனைத் தீர்மானிக்க வல்லவை செயலும் திட்டமிடலுமே என்பதை உணர்வதும் உணர வைப்பதும் கடினம்!

கட்டுரையாளர்: திராவிட இயக்கச் சிந்தனையாளர்

கட்டுரை

என்.சரவணன்
nsaravanan@gmail.com

நார்வே இலக்கிய வழித்தடம்

ஓர் அறிமுகம்

சர்வதேச சந்தையில் அமெரிக்க ஹோலிவூட் தயாரிப்புகள் மலிவாக வாங்கி வெளியிடும் நிலைமையே தொடர்கிறது. அந்தப் படைப்புகளை தொலைக்காட்சிகளில், தியேட்டர்களில் காட்சிப்படுத்துவது மலிவாக இருக்கிறது. நார்வேயில் அப்படியான படைப்புகளை லாபகரமாக நிச்சயமாக தயாரிக்க முடிவதில்லை. எனவே அவற்றை அழிந்துவிடாமல் தடுப்பதற்காக அப்படியான படைப்புகளுக்கு அரசு மானியம் வழங்குகிறது. பல ஊடகங்கள் கூட மானியத்தில் தான் இயங்குகின்றன. இங்கு இயங்குகிற அரச எதிர்ப்பு பத்திரிகைகள் அரச மானியத்தில் தான் வெளிவருகின்றன என்பதை இங்கு நான் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

நார்வேயின் இலக்கியத்தைப் பற்றி அறிய வேண்டுமென்றால் அதன் அமைவிடம், புவியியல், வளங்கள், பண்பாட்டு வளர்ச்சி, அரசியல் வரலாறு என்பனவற்றை சற்றென்றாலும் பார்த்தாகவேண்டும்.

பேசுகளம், கதைமாந்தர், பேசுபொருள், கதைக்குரிய பண்பாட்டுப் பின்புலம், அனைத்தையும் தீர்மானிப்பவை கொண்டிருக்கிற வளங்கள், அதன் வரலாறு, அதன்பாற்பட்ட பண்பாட்டுத் தொடர்ச்சி, மொழியும்,மொழிவழிச் சிந்தனையின் பன்முகப்பட்ட வழித்தடம் என பலவற்றைக் குறிப்பிட முடியும்.

சமீபகாலமாக இலங்கையின் அரசியல் வரலாறு பற்றி பல அரிய தகவல்களைக் கண்டுபிடித்து தமிழ் மொழியில் மானுடவியல்சார் ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வருகிறேன். தமிழில் அப்பணி மேற்கொள்ளப்படுவதில்லை என்பதால் நான் அதனை அதிகம் செய்ய நேரிட்டிருக்கிறது. அப்படி கடந்த மூன்று நூற்றாண்டுகால ஆவணங்கள் பலவற்றை சேகரிப்பது எனது வாடிக்கையாக இருக்கிறது. அப்படி தேடிக்கொண்டிருக்கும் வேளை காலனித்துவ காலத்தில் இலங்கையில் டானிஷ்காரரர்களின் வகிபாகம் பற்றியெல்லாம் தகவல்கள் ஆங்காங்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள் நோர்வேஜியர்களாக இருந்ததையும் அறிய முடிகிறது. அந்தக் காலப்பகுதியைப் பார்த்தால் அது நார்வே டென்மார்க்கோடு இணைந்திருந்த காலப்பகுதி. அந்த டேனிஷ்காரரர்களின் பாத்திரம் என்பது நார்வேகாரரர்களின் பத்திரமுமாகத் தான் காண வேண்டும். இது ஒரு உதாரணம்.

வட துருவ நாடான நார்வே இந்தியாவின் பரப்பில் பத்தில் ஒரு மடங்கு பரப்பளவைக் கொண்ட நாடு தான். ஆனால் உலகில் கனடாவுக்கு அடுத்ததாக நீண்ட கரையோரத்தைக் கொண்ட நாடு நார்வே. சுமார் 83,281 கிலோ மீட்டர்களைக் கொண்டது. இந்தியாவின் கரையோரப்பகுதி 7000 கிலோ மீட்டர் தான். இந்தத் தீவுகளை அண்டி ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமான தீவுகள் உள்ளன. இதைப் புரிந்துகொண்டால் நார்வே மீன் ஏற்றுமதியில் இரண்டாவது நாடாகவும்,எண்ணெய் ஏற்றுமதியில் முக்கிய நாடுகளில் ஒன்றாகவும் இருப்பதையும் உங்களால் புரிந்துகொள்ள முடியும். 1969 ஆம் ஆண்டு நோர்வேயில் எண்ணெய், எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் அதன் பொருளாதாரம் வேகமான வளர்ச்சி கண்டு பின்னர் இன்று உலகின் நான்காவது பணக்கார நாடாக வளர்ந்து நிற்கின்றது. உலகில் மக்கள் அதிக மகிழ்ச்சியாக வாழும் முதல் நாடாகக் கணிக்கப்படுகிறது.

நார்வேயின் வடதுருவப் பகுதியில் சாமிர் என்கிற பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு என்று தனி மொழி, தனிப் பாராளுமன்றம் உள்ளது. அதுபோல நார்வேயில் பிரதேசத்துக்கு பிரதேசம் வெவ்வேறு பேச்சு வழக்கைக் கொண்ட மக்கள் உள்ளனர். அண்டைய அயல் சகோதர நாடுகளான டென்மார்க், சுவீடன், பின்லாந்து போன்ற நாடுகளின் மொழிகளில் வித்தியாசம் இருந்தாலும் பரஸ்பரம் புரிந்துகொள்ளக் கூடிய அளவுக்கு நெருக்கமானவை. எனவே இங்குள்ள இலக்கியங்கள் மொழியால் மட்டுமல்ல, பண்பாட்டாலும், கலாசாரத்தாலும் மிகவும் நெருக்கமான தொடர்பையும், பரஸ்பர ஊடாட்டங்களைக் கொண்டவை. நார்வே அதிக காலம் பனியையும், குளிரையும், இருளையும் கொண்ட நாடு. ஆக்டிக் கண்டத்துக்கு அருகாமையில் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் நார்வேயின் ஒரு பகுதி ஆக்டிக் கண்டத்தில் தான் இருக்கிறது.

வெறும் ஆண்டுக்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு மட்டுமே தலைகாட்டும் வசந்தகாலத்துக்காக எஞ்சிய ஒன்பது மாதங்களும் ஏங்கிக் காத்திருக்கும் மக்கள். கார்காலம், குளிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனில்காலம், முதுவேனில்காலம் என ஆறுவகை பருவக் காலத்தையும் அனுபவிக்கும் மக்கள். இந்த ஒவ்வொரு பருவக் காலத்திலும் எப்பேர்பட்ட உடைகளை அணிவது, எப்பேர்பட்ட உணவுகளை உண்பது, எப்பேர்பட்ட உணவுகளை சேகரிப்பது, சேமிப்பது, எப்பேர்பட்ட விளையாட்டுக்களை, கலைகளை பயன்படுத்திக்கொள்வது என்பதெல்லாம் தீர்மானிக்கப்படுகின்றன. கீழ் ஐரோப்பிய நாடுகளுடன் நிலத்தொடர்ச்சி இல்லை. வடக்கில் பின்லாந்து, ரஷ்யா, கிழக்கில் சுவீடன் என்பவற்றுடன் தான் அதன் நிலத்தொடர்ச்சி இருக்கிறது. மற்றபடி கடல்வழிப் பயணத்தின் மூலம் தான் ஏனைய நாடுகளுடன் தொடர்பை வைத்திருக்கவேண்டிவரும்.

எனவே நீண்ட காலமாக அவர்கள் உலகத்தில் இத்தனை நாடுகள் உள்ளன, இத்தனை மக்கள் கூட்டமும், பண்பாடுகளும் உள்ளன என்பதை அறியாதிருந்தனர். இங்கிலாந்தைக் கூட அவர்கள் கடற்கொள்ளை காலப்பகுதியில் தான் கி.பி 860 ஆம் ஆண்டளவில் கண்டுபிடித்து அங்கு கொள்ளைகளை அடித்து, அன்றைய சில ஆட்சியாளர்களை அடிபணிய வைத்து வரிகளை கொடுக்கச் செய்து அங்கு குடியேற்றங்களையும் செய்தனர்.

வீக்கிங் என்கிற கடற்கொள்ளைக் காலம்

ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரையான காலகட்டத்தைத் தான் வீக்கிங் காலம் என்கிறோம். கடற்கொள்ளையர்கள் தெய்வங்களாக *Odin, Thor, Freyja, Loki* போன்ற தெய்வங்களை வணங்கினார்கள். இவர்கள் வணங்கிய அந்த மதத்தை *"Nor Norse"* (நூர் நோர்ஸ்) என்றழைத்தார்கள். இவர்கள் பேசிய மொழியையும் *Nor Norse* மொழியென்றே அழைத்தார்கள். அது தான் பின்னர் நொர்ஸ்க் என்கிற நோர்வேஜிய மொழியாக ஆனது. அவர்களின் காவல் தெய்வங்களாக இவர்களைப் பேணுவதற்காக தமக்குள் ஒருவரையோ, பலரையோ பலி கொடுக்கும் வழக்கம் அவர்களிடம் இருந்தது. அப்படி கத்தியால் நெஞ்சில் குத்தி கிழித்து பலிகொடுக்க அப்போது பலர் விரும்பி முன்வந்திருக்கிறார்கள். அதன்மூலம் *Valhalla* என்கிற அவர்களின் சொர்க்கத்துக்கு இலகுவாகச் சென்றுவிடலாம் என்கிற நம்பிக்கை அவர்களிடம் இருந்தது. இந்தக் கடவுளர்களைத் தவிர வேறெந்த தெய்வ நம்பிக்கைகளையும் கொண்டவர்களை அவர்கள் தண்டித்தார்கள். ஆனால் காலப்போக்கில் இங்கிலாந்தைக் கண்டுபிடித்ததன் பின்னர் அங்கிருந்து கத்தோலிக்க மதம் மெதுமெதுவாக நார்வேக்குள் பரவியது. பின்னர் நார்வே ஒரு புட்டஸ்தாந்து செல்வாக்குள்ள மதநாடாக மாறியது. அதுமட்டுமன்றி ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போலவே நார்வேயின் மத நிறுவனங்கள் அதிகாரம் படைத்த நிறுவனங்களாக

வெறும் ஆண்டுக்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு மட்டுமே தலைகாட்டும் வசந்தகாலத்துக்காக எஞ்சிய ஒன்பது மாதங்களும் ஏங்கிக் காத்திருக்கும் மக்கள். கார்காலம், குளிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனில்காலம், முதுவேனில்காலம் என ஆறுவகை பருவக் காலத்தையும் அனுபவிக்கும் மக்கள்.

மாறின. சில பிஷப்மார்கள் போருக்கு கூட தலைமை வகித்துள்ளனர்.

Viking என்கிற ஒரு தொடர் நாடகம் கடந்த சில வருடங்களாக ஒளிபரப்பட்டு வருகின்றன. நெட்பிளிக்ஸ்ஸில் அதைப் பார்க்கலாம். இப்போது ஆறு சீசன்கள் முடிந்துள்ளன. நார்வே மக்களின் கடற்கொள்ளைக் கால வாழ்க்கையையும், ஸ்கண்டிநேவிய நாடுகளின் வளர்ச்சியையும் உணர்ந்துகொள்வதற்கு அந்த நாடகத்தைப் பரிந்துரைக்கிறேன். மிகவும் அருமையாக எடுக்கப்பட்டிருக்கிறது.

நார்வே 1349 இல் ஏற்பட்ட கொள்ளை நோயால் நார்வேயின் சனத்தொகையில் 50%-60% வீதமான மக்கள் அழிந்தார்கள்.1379 இலிருந்து நார்வே, சுவீடன், டென்மார்க் ஆகியவை 1523 வரை கல்மார் ஒப்பந்தத்தின் மூலம் ஐக்கியப்பட்ட நாடுகளாக இயங்கின. ஆனால் 1521 இல் அதில் இருந்து சுவீடன் விலகியது. 1814 வரை டென்மார்க்குடன் நார்வே சேர்ந்து ஒரே நாடாக இயங்கிவந்தது. இந்த இடைக்காலப்பகுதியில் பிரித்தானியாவின் காலனித்துவ ஆக்கிரமிப்புக்கு நார்வே, டென்மார்க் ஆகிய நாடுகளும் இலக்காகின.

ஒரு சமூகம் மொழியின்றியும் கலை இலக்கியங்கள் உருவாகலாம், ஆனால் அது தன் மொழியால் மாத்திரமே அதனை அடுத்த நிலைகளுக்கு வளர்த்துச் செல்லலாம். ஏனைய சமூகங்களின் தரத்துக்கு நிகராக நின்று பிடிக்கலாம். ஐரோப்பாவைப் பொறுத்தளவில் கலை இலக்கியங்களின் வளர்ச்சியில் கிறஸ்தவ மதப் பிரச்சாரமும், பைபிளின் வகிபாகமும் முக்கியமானது. எப்போது பைபிளுக்கூடாக மதம் வளர்ந்ததோ என்னவோ நிச்சயம் அந்தந்த மொழிகள் செழிப்படைந்தன. அம்மொழிகளுக்கூடாக பன்முக கலை இலக்கிய வடிவங்களும் வளர்ந்து விரிந்தன.

நார்வே பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து டென்மாக்கின் கீழ் இருந்த சுமார் மூன்று நூற்றாண்டுகள் ஐரோப்பாவில் மிகப்பெரிய தொழிற்புரட்சி, சமூகப்புரட்சிகள், இலக்கியங்கள் வளர்ந்த காலம். ஆனால் நார்வே தமக்கான சுயத்தை வளர்த்தெடுக்க முடியாமல் போன காலம். ஏனென்றால் டேனிஷ் பண்பாடு நார்வேக்குரிய தனித்துவமான பண்பாட்டை விழுங்கி ஏப்பம் விட்டுக்கொண்டிருந்தது. நார்வேஜிய இலக்கியங்கள் எல்லாமே அந்தக் காலப்பகுதியில் டேனிஷ் மொழியில் தான் எழுதப்பட்டன. அப்படி டேனிஷ் மொழியில் எழுதப்பட்டதால் சில முக்கியமான படைப்புகளை நார்வேஜிய இலக்கியங்களுக்குள் வகைப்படுத்துவதா, அல்லது டேனிஷ் இலக்கியத்துக்குள் வகைப்படுத்துவதா என்கிற சர்ச்சை இன்றும் அவ்வப்போது எழுவதுண்டு. அக்காலத்து அவ்விலக்கியங்களை“டேனிஷ் - நார்வேஜிய பொது இலக்கியம்” (*den dansk-norske fellesslitter-aturen*) என்றும் அழைக்கப்படுகிறது. நார்வேஜிய மொழியில் ஒரு பைபிளைக் கூட உருவாக்கிக்கொள்ள டானிஷ்காரர்கள் அன்று வழிசெய்யவில்லை என்கிற விமர்சனங்களை இன்றும் கூறுவார்கள். குறிப்பாக ஐரோப்பாவில் ஒவ்வொரு நாடும் தமது பரவலான பேச்சுவழக்கு மொழியைக் கூட பொதுமைப்படுத்தி நிலைநிறுத்தியதில் பைபிளுக்கு பெரும் பங்களிப்பு உண்டு. டானிஷ் மொழி பைபிளைத் தான் அதுவரை நார்வேஜியர்கள் பயன்படுத்தி வந்தார்கள். *Old norse* என்கிற பழைய நார்வேஜிய மொழியில் பைபிளின் சில பகுதிகள் அப்போது கிடைத்தபோதும் 1862இல் அது நார்வேஜிய மொழியில் மொழிபெயர்க்கப்படும் வரை பைபிள் இருக்கவில்லை. நினைத்துப் பாருங்கள் இதே காலத்தில் தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் கூட பைபிள் மொழிபெயர்ப்புகள் கிடைக்க ஆரம்பித்துவிட்டன.

வீக்கிங் காலத்தில் காணப்பட்ட *old norse* மொழி பதினைந்தாம் நூற்றாண்டு வரை வழக்கில் இருந்தது. வட ஜேர்மனின் - டச்சு மொழியின் செல்வாக்கால் ஸ்கண்டிநேவிய நாடுகளில் புழக்கத்துக்கு வந்த மொழி இது. அதேவேளை நார்வேயில் வழக்கில் இருந்த எழுத்து வடிவத்தை ரூனஸ் என்பார்கள் (*Runes*). அவ்வெழுத்து வடிவம் கி.பி. 100 ஆம் ஆண்டுகளில் உருவானவை. வீக்கிங் காலம் வரை அதைத் தான் பயன்படுத்தி வந்தார்கள். பழைய கல்வெட்டுக்கள், நாணயங்கள், நகைகள், ஆயுதங்கள் என்பவற்றில் பொறிக்கப்பட்டுள்ள இவ்வெழுத்துக்களைக் காண முடியும். லத்தீன் - ரோமன் எழுத்துக்களின் சாயலில் தான் அவ்வெழுத்துக்கள் இருந்தன. ஆனால் அதற்கென்று வளமான ஒரு இலக்கண யாப்பு இருக்கவில்லை. கி.பி

Dorothe Engelbretsdatter

1000க்குப் பின் தான், இன்னும் சொல்லப்போனால் வீக்கிங் காலத்தில் தான் லத்தீன் எழுத்துக்கள் நார்வேக்கு வந்து சேர்ந்தன. கிறிஸ்தவ மதத்தின் நுழைவோடு தான் அது நிகழ்ந்தது. குறிப்பாக கிறஸ்தவ தேவாலயங்களில் தான் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டன. நார்வேயில் மட்டுமல்ல ஸ்கண்டிநேவிய நாடுகள் முழுவதும் இப்படித்தான் நிகழ்ந்தன. பெரும்பாலான ஐரோப்பிய மொழிகள் லத்தின் எழுத்துக்களைக் கொண்டு தான் ஏறக்குறைய சில வித்தியாசங்களுடன் அம்மொழிகளுக்கான எழுத்துக்கள் நிறுவப்பட்டன. ஆங்கில எழுத்துக்கள் 26 உடன் சேர்த்து மேலதிகமாக

Camilla Collett utga

மூன்று எழுத்துக்கள் நார்வேஜிய மொழியில் இன்று உள்ளன. அம்மொழியில் உள்ள சில விசேட ஒலி உச்சரிப்புகளை வெளிப்படுத்தப் பயன்படுபவை அவை.

தொரதி

நார்வேயின் முதலாவது எழுத்தாளராகவும், முதலாவது பெண்ணியவாதியாகவும் அறியப்படுபவர் தொரதி *(Dorothe Engelbretsdatter). 1634* இல் பிறந்த அவர் பல சிறந்த கவிதைகளுக்கு சொந்தக்காரர். குறிப்பாக அவர் சமயம் சார்ந்தே அதிகம் எழுதியிருக்கிறார். பேர்கன் நகரத்தில் உள்ள பாடசாலையின் அதிபரின் மகள் தான் தொரதி. தந்தை பின்னர் பேர்கன் பெரிய தேவாலயத்தின் டீனாக நியமிக்கப்பட்டார். தனது இளம் வயதிலேயே சிறிது காலம் கொப்பன்ஹேகனில் வசித்து வந்த தொரதி ஒரு பிரபலமான இறையியல் எழுத்தாளரான அம்போரியஸ் என்பவரை திருமணம் முடிக்கிறார்.

1968 இல் தான் தொரதியின் முதலாவது கவிதை நூல் கொப்பன்ஹேகனில் வெளியானது. அதன் பின்னர் அவர் எழுதிய கவிதை நூல்கள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிவந்தன. டென்மார்க் கவிதைப் பாரம்பரியத்தின் தந்தை என்று அறியப்படும் தோமஸ் ஹன்சனுக்கு அறிமுகமாகி அவரின் இலக்கியத் தரமும் செல்வாக்கும் பெருகுகிறது. தொரதியின் கவிதைகளால் கவரப்பட்ட அரசர் ஐந்தாவது கிறிஸ்தியான் வாழ்நாள் முழுவதற்குமான வரிவிலக்கு அளிக்கிறார்.

*1683*இல் அவரின் கணவர் இறந்து விடுகிறார். தொரதிக்கு பிறந்த ஒன்பது பிள்ளைகளில் இரண்டு குழந்தைகள் மட்டுமே தப்புகின்றனர். ஏனையோர் இறந்துவிடுகின்றனர். *1702* பேர்கனில் ஏற்பட்ட பெருந்தீயால் *90* வீதமான நகரம் எரிந்து நாசமாகிறது. தொரதியின் வீடும் அதில் அழிந்துவிடுகிறது. பத்து வருடங்களாகிறது அவருக்கென்று ஒரு வீடு உருவாவதற்கு. அதற்கடுத்த நான்காண்டுகளில் தனது *82* ஆவது வயதில் அவர் இறந்து விடுகிறார். தொரதி தான் நார்வேயின் முதலாவது தொழில்முறை எழுத்தாளராக அறியப்படுகிறார்.

அடுத்த முக்கியமான இலக்கியவாதியாகக் கருதப்படுபவர் பெத்தர் தாஸ் **(Petter Dass).** *1647* இல் பிறந்த பெத்தர் தாஸ் தொரதியைப் போலவே பேர்கன் நகரில் வளர்ந்தவர். பின்னர் கொப்பன்ஹெகன் சென்று தன்னை வளர்த்துக்கொண்டவர். அதன் பின்னர் ஒரு பாதிரியாராக ஆகி பல கவிதை இலக்கியங்களைப் புனைந்தவர். அதுமட்டுமன்றி நிலவியல் உள்ளிட்ட பல புனைவு நூல்களையும் எழுதினார். அந்த நூல்கள் எல்லாம் அவர் உயிரோடு இருக்கும் வரை வெளியாகவில்லை. அவரின் இறப்பின் பின்னர் தான் அவர் கொண்டாடப்பட்டார். இன்றும் அவர் நினைவாக அவரின் பெயரில் ஆண்டு தோறும் இலக்கியப் பரிசு வழங்கப்படுகிறது. அவரின் ***"The Trumpet of Nordland"*** என்கிற நூல் வடதுருவ நார்வேஜிய மக்களின் வாழ்வியலை சித்திரிக்கின்ற படைப்பு. அங்கிருக்கும் காலநிலை, இயற்கை, விலங்குகள், பறவைகள், மரங்கள், சாமீர் இனத்தவர்கள், மீனவ வாழ்க்கைமுறை என பல விபரங்களை உயர் கவித்துவத்தோடு பேசுகின்ற நூல். இன்றும் கொண்டாடப்படுகிற நூல்.

இதன் பின்னர் பல இலக்கியவாதிகள் உருவானார்கள். ஆனாலும் நார்வேக்கு உரிய தனித்துவமான இலக்கியம் இருந்ததா? தமது சொந்த மொழியால் வளர்க்கப்பட்டு பதிவுசெய்ய வாய்ப்பில்லாமல் போன ஒரு சமூகமாக இருந்ததால் அப்படிப்பட்ட இலக்கியங்கள் வாய்மொழியில் தான் இருக்கும் என்பதை உணர்ந்த ***Asbjørnsen and Moe*** என்கிற இரு நண்பர்கள் நாடு முழுவதும் அலைந்து திரிந்து வாய்மொழி இலக்கியங்களைப் பதிவு செய்வதற்கு கிளம்பினார்கள். அவர்கள் பதினைந்து வருடங்களாக தேடித் திரிந்து கண்டடைந்தவற்றை பின்னர் **(Norske folkeeventyr)** "நார்வேஜிய நாட்டுப்புறக் கதைகள்" என்கிற நூலை *1841*இல் வெளிக்கொணர்ந்தார்கள். நினைவிற்கொள்ளுங்கள் டென்மார்க்கிடம் இருந்து விடுதலை பெற்று சுயாதீனமான நாடாக ஆனதன் பின்னர் தான் இது அவர்களுக்கு சாத்தியமானது. இந்த நாட்டுப்புறக் கதைகள் பல தொகுதிகளாக, பல கதைகளாக வெளிவந்தன. ஆதுமட்டுமன்றி பல மொழிகளில் அவை மொழிபெயர்க்கப்பட்டன. அவர்களின் காலத்திலேயே பல பதிப்புகள் கண்டன. அவை அன்றே சித்திரங்களுடன் வெளிவந்தன. இவை பரந்துபட்ட மிகப்பெரிய நாடான நார்வேயின் பல்வேறு பகுதிகளில் உள்ள கதைக்களங்களையும், அந்தப் பண்பாட்டு எண்ணங்களையும், சூழலையும் பிரதிபலித்தன. வடக்கில் சூனியக்காரிகள் பற்றிய கதைகளும் இதில் அடங்கும்.

இலக்கியங்களுக்கும் விவசாயத்துக்கும் இடையில் உள்ள உறவைப் பற்றி நீங்கள் அறிவீர்கள். வரலாறு நெடுகிலும் விவசாயம் வளம்பெற்ற இடங்களில் சிறந்த இலக்கியங்களும் கிடைத்துள்ளன. பதினெட்டாம் நூற்றாண்டில் நார்வேயில் விவசாயம் வளரத்தொடங்கியதன் பின்னர் இந்த மாற்றங்களைக் கவனிக்கலாம்.

18 ஆம் நூற்றாண்டில், அறிவொளி கருத்துக்களை அதிகம் எழுதிய"டேனிஷ்-நார்வே இலக்கியத்தில்" செல்வாக்கு

இலக்கியங்களுக்கும் விவசாயத்துக்கும் இடையில் உள்ள உறவைப் பற்றி நீங்கள் அறிவீர்கள். வரலாறு நெடுகிலும் விவசாயம் வளம்பெற்ற இடங்களில் சிறந்த இலக்கியங்களும் கிடைத்துள்ளன. பதினெட்டாம் நூற்றாண்டில் நார்வேயில் விவசாயம் வளரத்தொடங்கியதன் பின்னர் இந்த மாற்றங்களைக் கவனிக்கலாம்.

செலுத்திய லுட்விக் ஹோல்பெர்க் **(Ludvig Holberg)** நார்வேஜிய தேசிய உணர்வை உந்துவதற்கு வழிகோலிய முக்கிய எழுத்தாளர். அவரும் நார்வே பேர்கன் நகரில் பிறந்தவர். அவர் நாவல், கவிதைகள், நாடகங்கள் (குறிப்பாக நகைச்சுவை கலந்த விழிப்புணர்வு நாடகங்கள்) மட்டுமன்றி பல வரலாற்று நூல்களையும், கட்டுரைகளையும் எழுதினார். ஒரு தத்துவவாதியாகவும், வரலாற்றாசிரியராகவும் கருதப்படுகிறார். அவர் எழுதிய சட்ட நூல்களைத் தான் 1736 – 1936 வரையான சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு டேனிஷ் சட்டக்கல்லூரி மாணவர்கள் பயன்படுத்தினார்கள். இதன் பின்னர் வரிசையாக இலக்கியத்தில் மாற்றம் ஏற்படுத்தியவர்களில் நார்வேயின் முதலாவது தேசிய கீதத்தை எழுதிய யோஹான் நூர்டால் **(Johan Nordahl Brun)**, அதன் பின்னர் ஹென்றிக் வெஜிலன்ட் **(Henrik Wergeland)**, யோஹான் செபஸ்தியான் **(Johan Sebastian Welhaven)**, ஈவார் ஆசன் **(Ivar Aasen)** என வரிசையாகக் கூறிக்கொண்டு செல்ல முடியும்.



Ludvig-Holberg

1850 களின் நடுப்பகுதியில், ஒரு புதிய தலைமுறை கவிஞர்கள் தோன்றினர், அவர்களில் ஹென்றிக் இப்சன், பியோன்சன், மற்றும் கமில்லா **(Camilla Collett utga)**,ஆகியோர் முன்னணி நபர்களாக இருந்தனர். 1854/1855 ஆம் ஆண்டில் நார்வேயின் முதல் சமூக விமர்சன நாவலான அம்ட்மண்ட் கமிலா கோலெட் வெளியிட்டார். அதே நேரத்தில் ஆஸ்மண்ட் ஓலாஃப்சன் வின்ஜே புதிய தேசிய மொழியில் எழுதிய முதல் கவிஞர் – டோலன் 1858 இதழில் மற்றும் 1861 முதல் ஃபெர்டாமின் கட்டுரையின் சிறப்பம்சமாக. ஜார்ன்சன் 1857 முதல் சினேவ் சோல்பாக்கன் மற்றும் பிற விவசாயக் கதைகளுடன் நோர்வேயின் உரைநடைகளைப் புதுப்பித்தார் . சமகால நாடகமான **A Fallit** உடன்1875 முதல் அவர் ஐரோப்பாவில் நார்வே நாடகத்திற்கு வழி வகுத்தார். இப்சன் இறுதியில் 1879 முதல் ஏ டால்ஸ் ஹவுஸ் மற்றும் 1881 முதல் கோஸ்ட்ஸ் போன்ற தலைசிறந்த படைப்புகளுடன் ஒரு இலக்கிய உலக நட்சத்திரமாக ஆனார் .

அதுபோல அன்று கிரிஸ்தானியா என்று அழைக்கப்பட்ட இன்றைய ஒஸ்லோவில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. ஒரு புது தொழிற்படை உருவானது புது தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைநிலை பற்றி பேசுகின்ற படைப்புகள் வளர்ந்தெழுந்தன. இதன் பின்னர் கிறிஸ்தியான் குரோக் (Christian Krohg) என்கிற மாபெரும் படிப்பாளியின் படிப்புகள் முக்கியமானவை. அவர் ஒரு பன்முக கலைஞராக இருந்தார். மிகவும் பிரபலமான ஓவியராகவும், எழுத்தாளராகவும், பத்திரிகையாளராகவும், சிந்தனையாளராகவும் அறியப்படுகிறார். அவர் 1852 – 1925காலப்பகுதியில் வாழ்ந்த அவர் அன்று ஐரோப்பாவில் தோன்றியிருந்த யதார்த்தவாதம் கலை இயக்க சிந்தனைகளைக் கவர்ந்திருந்தார். எனவே அவரின் படைப்புகளில் சமூகயதார்த்தம் தொனித்திருந்தது. குறிப்பாக அவர் அன்றைய காலத்து ஒஸ்லோவில் இருந்த பாலியல் தொழிலை வெறுத்தார். அதைப் பற்றி தனது ஓவியங்களில் வரைந்தார். கட்டுரைகளில் எழுதினார். அவர் வரைந்த **Albertine i politilægens venteværelse (Albertine at the Police Doctor's Waiting Room** என்கிற ஓவியம் மிகவும் புகழ்பெற்றது. இன்றும் ஒஸ்லோ தேசிய மியூசியத்தில் அது வைக்கப்பட்டிருக்கிறது. ஒஸ்லோ பாராளுமன்றத்தின் இடதுபுறமாக இன்றும் பெரிய உருவமாக அவரின் சிலை கம்பீரமாக இருப்பதைக் காணலாம். இந்த வரிசையில் **Bjørnstjerne Bjørnson** பியோன்ஷியான பியோன்சனின் படைப்புகளும் நாடகங்களும் முக்கியமானவை. இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற முதல் நார்வேஜியர் அவர் தான்.

அவர் வரிசையில் இப்சனை நாம் அறிவோம். அவரின் நாடகப் படைப்புகள் நார்வேயில் செல்வாக்கு பெறுமுன்பே இத்தாலியிலும், ஜெர்மனியிலும் புகழ் பெறத் தொடங்கிவிட்டன. அதன் பின்னர் தான் நார்வேஜியர்கள் கண்டுகொள்ள முடிந்தது என்றால் அது மிகையில்லை. அவரை மீண்டும் நார்வேக்கு அழைத்தெடுத்து நார்வேயில் இருந்தபடி படைப்பிலக்கியங்களை உருவாக்கச் செய்தவர் பியோன்ஷியான பியோன்சன் தான். உலகப் புகழ்பெற்ற அவரின் படைப்புகள் மொழிபெயர்க்கப்படாத மொழிகளே இல்லையெனலாம். இப்சன் காலத்தில் 1902, 1903, 1904 ஆகிய ஆண்டுகளில் இலக்கியத்துக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டார். ஆனால் அவருக்கு அது வழங்கப்படவில்லை. இப்சன்

அப்போது வயது முதிர்ந்திருந்தார். நோபல் பரிசுக் கமிட்டியும் ஒரு இளம் எழுத்தாளருக்கு வழங்குவதில் ஆர்வமாக இருந்தது. இறுதிவரை இப்சன் நோபல் பரிசைப் பெறவில்லை. அடுத்த இரண்டாவது ஆண்டு 1906 ஆம் ஆண்டு தனது 78 வது வயதில் அவர் மரணமானார். ஆனால் இன்றும் கொண்டாடப்படுகின்ற மாபெரும் உலக இலக்கிய ஆளுமையாக அவர் கருதப்படுகிறார். ஒவ்வொரு நாளும் அவரின் நாடகங்கள் உலகின் ஏதோ ஓரிடத்தில் அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்த வரிசையில் எட்வர்ட் முங்க் என்கிற உலகப் புகழ்பெற்ற ஓவியரையும் அறிவீர்கள்.

சூனியக்காரிகள்

உலகில் அதிகமான சூனியக்காரிகள் கொல்லப்பட்ட நாடாகவும் நார்வே திகழ்கிறது. குறிப்பாக பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அதிகமான பெண்கள் சூனியைக்காரிகளாக அடையாளம் காணப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்ட Vard என்கிற இடத்துக்குச் சென்று நான் அந்த நினைவிடங்களை ஐந்தாண்டுகளுக்கு முன் நான் பொய் பார்த்தேன். நார்வேயின் சூனியக்காரிகள் பற்றிய ஆய்வுகளின் ஒரேயொரு நிபுணராக கருதப்படும் பிரபல ஆய்வாளர் ட்ரோம்சோ பல்கலைகழக பேராசிரியர் Liv Helene Willumsenயும் எங்களோடு வந்து அவற்றைப் பற்றிய விளக்கங்களைத் தந்தார். சூனியக்காரிகளைக் கொன்றொழித்த நாடுகளின் பட்டியலில் முதல் ஐந்தாறு நாடுகளில் நார்வேயும் இருக்கிறது என்பதை இங்கே சொல்லியாக வேண்டும். பெண்கள் மட்டுமல்ல, 8, 12 வயது சிறுமிகள் பலரும் கூட கொல்லப்பட்டார்கள்.



Schachter Henrik Ibsen

வாய்மொழிக் கதைகளையும், நம்பிக்கைகளையும் மரபாக பல தலைமுறைகளுக்கு கடத்தி வந்த நம்பிக்கைகளைக் கொண்டு சூனியக்காரிகளைக் கண்டுபிடிக்க சில குறியீடுகளை வைத்திருந்தனர். தனியாக இருட்டில் கண்டேன், அவளிடம் மீன் கவிச்சி வாடை வந்தது, அவர் தனியாக பேசிக்கொண்டிருந்ததைக் கண்டேன், இப்படி ஏதோ ஒரு சந்தேகத்தை ஊர்பெரியவர்களிடம் கூறிவிட்டால் உரிய காலத்தில் ஊரைக் கூட்டி அப்பெண்ணை விசாரிப்பார்கள், சாட்சியளிப்பவர் இப்படி ஒரு குற்றச்சாட்டைச் சொன்னதும் பெரிய விசாரணை, ஆராய்ச்சி எல்லாம் தேவைப்படாது, ஊர்க்காரர்களும்சேர்ந்து அவள் சூனியக்காரியேதான் என்று கத்தத் தொடங்குவார்கள். அதன் பின் அவளை நிமிர்த்திவைக்கப்பட்டிருக்கும் ஒரு மரக்கட்டையில் கட்டி வைத்து அதைச் சூழ மரக்கட்டைகளை அடுக்கி எரித்து விடுவார்கள். இவற்றைப் பற்றி பல புனைகதை இலக்கியங்கள் வெளிவந்துள்ளன. அந்த வரிசையில் ஒரு சாத்தானின் கிறிஸ்மஸ் நாள் "*En satans julekveld*" என்கிற நாவல் மிகவும் முக்கியமானது.

குறிப்பாக நார்வேயின் வடக்குப் பகுதிக்குச் செல்ல குளிரும், பனியும், இருளும் அதிகம் எனவே உணவாக அவர்கள் அதிகம் உட்கொள்வது மீனைத்தான். வசந்த காலங்களில் மீனைக் காயவைத்துகருவாடாக்கி சேமித்து வைப்பது வழக்கம். பல விலங்குகள் வாழும் நாடல்ல மான், கரடி போன்ற வெகு சில மிருகங்களே இந்த பனி நாட்டில் வாழ்கின்றன. மான்களில் பல வகையான இராட்சத மான் வகைகள் இங்குள்ளன. அவற்றைத் தான் வேட்டையாடி வெட்டி உலர்த்தி, புகையடித்து, காயவைத்து பனிக்காலத்தில் உணவாக உண்பார்கள். எனவே இவர்களின் ஆயுட்காலம் அத்தனை அதிகமானதல்ல.

நார்வேக்கு கிழங்கு அறிமுகமானது 1750 களில் தான். காலனித்துவ காலத்தில் கிழங்கை லத்தீன் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு கொண்டு வந்து சேர்த்தவர்கள் போர்த்தேக்கேயர் தான். நார்வேக்கு அது அறிமுகமானதன் பின்னர் அவர்களின் உணவுப்பண்பாட்டில் பெரும் மாற்றம் நிகழ்ந்தது. வசந்த காலத்தில் தமக்குத் தேவையான கிழங்குகளை உற்பத்தி செய்தார்கள். மிகவும் வேகமாக கிழங்கை உணவாக நுகர்வது அதிகரிக்கப்பட்டது. சராசரியாக ஓராண்டுக்கு ஒரு ஆள் 88 கிலோ கிழங்கை சமீபகாலம் வரை உண்டார்கள். ஆனால் இப்போது அதிகமாக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற காய்கறிகளையும், பழங்களையும் அதிகம் உண்ணத் தொடங்கியதன் பின்னர் கிழங்குப் பயன்பாடு குறைந்திருக்கிறது. வசந்த காலத்தில் விவசாயம் செய்து மரக்கறிகளையும், பழங்களையும் உற்பத்தி செய்துகொள்கிறபோதும் அது தன்னிறைவுக்கு போதாது. ஆனாலும் இன்றும் அவர்களின் தேசிய கலாச்சார உணவாக கிழங்கு உள்ளது எந்த மாமிச உணவோடும் அவித்த கிழங்குகளையும் சேர்த்து உண்பது உணவுப்பண்பாட்டின் அம்சம். நார்வேஜியர்களை "கிழங்கர்கள்" என்று (Potatos) கேலி செய்வது இன்றும் பேச்சுவழக்கில் உள்ளன.

வீகிங் காலத்தில் பிரித்தானியாவுக்குச் சென்று அங்குள்ள அரசர்களுடன் நாங்கள் போர்புரியாமல் இருக்க வேண்டுமென்றால் எங்களுக்கு விவசாயம் செய்ய நிலங்களைத் தாருங்கள் என்று ஒப்பந்தம் செய்துகொண்டு பல நார்வேஜியர்கள் குடியேறிய வரலாறும் உண்டு. நார்வே தாராளமான நிலப்பகுதியைக் கொண்டிருந்தபோதும்,

விவசாயத்துக்கு உகந்த மண்ணையும், காலநிலையையும், பருவ காலத்தையும், சீதோஸ்ன நிலையையும் கொண்டதல்ல. இன்று இருப்பதை விட மோசமான குளிர்க்காலநிலை அப்போது இருந்தது.

நார்வேஜியர்களின் ஆயுட்காலம் இன்று சராசரி 82 வயதை விட அதிகரித்திருக்கிறது. ஆனால் சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் வரை இவர்களின் ஆயுட்காலம் முப்பத்தைந்தைக் கடந்ததில்லை. அதிலும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கடற்கொள்ளையர் காலத்தில் 25-30 வயதுக்கு மேல் வாழ்ந்ததில்லை. அதற்கு காரணமாக நிதமும் சமர்களை எதிர்கொண்டதாலும் இருக்கலாம். கூடுதலாக சுகாதாரமின்மை (Hygiens) காரணமாக அதிகமாக இறந்தார்கள் என்கிறார்கள். குறிப்பாக ஆண்களை விட அதிகமாக பெண்களே இறந்திருக்கிறார்கள். இலகுவில் நோய்வாய்ப்பட்டிருக்கிறார்கள். எந்த நோயினால் அதிகமாக இறந்தார்கள் என்பதற்கான பதிவுகள் இல்லை.எனவே இந்த இருபது முப்பது வருடத்துக்குள் தான் அவர்களின் மொத்த வாழ்காலமும் அடங்கிவிடுகின்றன. நாற்பது வயதை எட்டியவர் முதியவராக, மூத்தவராக ஆகிவிடுகிறார். காதல் திருமணம், சேர்ந்து வாழ்தல் எல்லாமே மிகவும் இளம் வயதுகளிலேயே நிகழ்ந்து விடுகின்றன.

நார்வேஜிய மொழியானது Bokm□l (புக்மோல்), Nynorsk (நியூ நோர்ஸ்க்)என இரு மொழி வழக்குகள் உள்ளன. இரண்டுக்கும் அதிக பெரிய வித்தியாசங்கள் இல்லை. நார்வேயின் 27 மாநகரங்களில் Nynorsk அரசகரும மொழியாக பயன்படுத்தப்படுகிறது. ஜென்மானிய மொழிக் குடும்பத்தின் செல்வாக்கையொட்டி வளர்ந்தது இது. அதேவேளை அது நார்வேயின் சனத்தொகையில் 12 வீதமானோர் மட்டுமே பயன்படுத்தும் மொழி. அதேவேளை புக்மோல் ஆனது டானிஷ் மொழியின் பாதிப்பைக் கொண்டது. அதுவே நார்வே முழுவதும் அதிகம் பயன்படுத்தப்படுகிற மொழியாக இருக்கிறது. எனவே புக்மோல் வடிவத்திலேயே அதிக இலக்கியங்களும், வெளியீடுகளும், படைப்புகளும் வெளியாவதில் ஆச்சரியம் இருக்காது.

நார்வேஜிய இலக்கியத்தின் தோற்றுவாய் என்பது ஒன்பது பத்தாம் நூற்றாண்டுகளில் தான் தோன்றுகின்றன. Eddaic, Skaldic ஆகியோர் நார்வேஜிய கவிதைஇலக்கியத்தின் முன்னோடிகளாக கொண்டாடப்படுகின்றனர். சோபியாவின் உலகம் (Sofies verden)என்கிற நூல் தத்துவத்தின் வரலாறு பற்றிய நாவல்.அபுனைவின் புனைவு என்றும் கூறலாம். நார்வே நவீன இலக்கியத்தின் ஒரு மைல்கல் என்றே கூறவேண்டும். அது உலகில் அதிக விற்பனையான நூல்களில் ஒன்றாக இருக்கிறது. தமிழ் உட்பட 59 சர்வதேச மொழிகளில் அது மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமன்றி திரைப்படமாகவும், நாடக வடிவத்திலும், தொலைக்காட்சித் தொடர்களாகவும் அது வெளியிடப்பட்டிருக்கிறது.

இன்றைய நிலையில் நார்வேயிடம் ஏராளமான பணம் இருக்கிறது. கலை இலக்கியங்களை கொண்டாடும் தேசமாக வளர்ந்து நிற்கின்றது. வாசிப்பறிவற்றவர்கள் இல்லாத தேசமாக வளர்ந்து நிற்கிறது. ஆனால் உலகமயமாக்களுடனான ஒரு சவால் நார்வேக்கு இருக்கிறது அது இன்னும் பல நாடுகளுக்கும் இருப்பது தான். நார்வே மொழியில் ஒரு திரைப்படத்தை, நாடகத்தை, பாடலை தயாரித்தால் அது நார்வேக்குள் மட்டும் தான் நுகர முடிகிறது. நார்வே செலவு மிகுந்த நாடு. கடையில் ஒரு சாதாரண காப்பியின் விலை இருபது குரோனர்களில் இருந்து தான் தொடங்குகிறது. இந்திய விலையில் இருநூற்றைம்பது ரூபாய் எனலாம்.

அப்படியிருக்கும்போது கலை இலக்கிய படைப்புகளுக்கான தயாரிப்புச் செலவுகள் சாதாரணமானதல்ல. நார்வேயின் இலக்கியச் சந்தை என்பது நார்வேக்குள் தான் இருக்கிறது. எனவே ஒரு புறம் தரத்தையும், மறுபுறம் நட்டமின்றி அதை தயாரித்தெடுத்து மக்களிடம் கொண்டு போய் சேர்த்தல் என்பது நார்வேக்கு மிகவும் சவாலான விடயம். கலை இலக்கியங்களுக்கு நார்வே மக்களின் ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் அதிகரிக்காமல் அதை சந்தையில் வெற்றிபெறச் செய்ய முடியாது என்பதை அறிந்தே வைத்திருக்கிறார்கள்.

சர்வதேச சந்தையில் அமெரிக்க ஹோலிவூட் தயாரிப்புகள் மலிவாக வாங்கி வெளியிடும் நிலைமையே தொடர்கிறது. அந்தப் படைப்புகளை தொலைக்காட்சிகளில், தியேட்டர்களில் காட்சிப்படுத்துவது மலிவாக இருக்கிறது. நார்வேயில் அப்படியான படைப்புகளை லாபகரமாக நிச்சயமாக தயாரிக்க முடிவதில்லை. எனவே அவற்றை அழிந்துவிடாமல் தடுப்பதற்காக அப்படியான படைப்புகளுக்கு அரசு மானியம் வழங்குகிறது. பல ஊடகங்கள் கூட மானியத்தில் தான் இயங்குகின்றன. இங்கு இயங்குகிற அரச எதிர்ப்பு பத்திரிகைகள் அரச மானியத்தில் தான் வெளிவருகின்றன என்பதை இங்கு நான் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

ஆண்டுதோறும் இலாபமில்லாத கலை இலக்கியப் பணிகளுக்காக பில்லியன் கணக்கில் அரசு செலவிடுகிறது. பாரம்பரிய கலைகளையும், இலக்கியங்களையும் மீட்டெடுப்பதற்கு அதிக பங்களிப்பை அரசு செய்து வருகிறது.

ஐரோப்பிய இலக்கியப் பரப்பில் ஸ்கண்டிநேவிய இலக்கியங்கள் தனித்து நிற்பவை. அதன் புவிசார் தனித்துவம் அதன் இலக்கிய உள்ளடக்கத்தை ஏனைய ஐரோப்பிய இலக்கியங்களில் இருந்து தன்னை வேறுபடுத்தியிருக்கிறது என்கிற புரிதலில் இருந்து நார்வேஜிய இலக்கியத்தையும் நாம் ஆராய வேண்டும். அதற்கான ஒரு ஆரம்பப் புரிதலே இது.

கோவை – பாரதியார் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்காக இந்திய பல்கலைக்கழக மானியக் குழுவின் வழிகாட்டுதலில் நடத்தப்பட்டு வரும் தொடர் மறுபுத்தாக்கப் பயிற்சியில் "நார்வேஜிய இலக்கிய செல்நெறி" என்கிற தலைப்பில் 20.09.2021 அன்று ஆற்றிய உரையின் சுருக்கப்பட்ட எழுத்து வடிவம் இது.

கட்டுரையாளர்: மென்பொறியாளர், ஊடகவியலாளர், நார்வே

ஜே. ஜெகத்ரட்சகன்

இவரின் கவிதைகள் ஆண் பெண் உடல் சார்ந்த பட்டவர்த்தனங்களையும் சிலாகிப்புகளையும் துறந்தவை. சூக்குரலும் முறையிடுதலுமற்று, எல்லாவற்றையும் தத்துவார்த்த நிலையிலும், மாறுபட்ட கோணத்திலும் அணுகுவதை வாடிக்கையாகக் கொண்டவை. கவிதைக்கான இலக்கணமென்று பொதுப்புத்தியில் மடிந்துகிடக்கும் கூறுகளில்லாமையால், அபியின் கவிதைகளைச் சுரணை காண்பதில் பெரும் சவால் நீடிப்பதோடு, சமகாலத்தில் அந்தச் சவாலின் அடர்த்தி கூடியுள்ளது.



அபி என்றொரு....

வானம்பாடி இயக்கம் துளிர்த்து, திசையெங்கும் பரவி, கவிதைகளின் வழியே சமூக நீதியை நிலைநாட்ட பேராவலுடன் கிளர்ந்தெழுந்தது. அவ்வியக்கக் கவிஞர்கள் வீச்சுடன் கவிதைகளைப் படைத்து, அதன்வழியே மாற்றத்தை நிகழ்த்திக் காட்ட எத்தனித்தனர். அவர்கள் கவிதைகளைத் தங்களுக்கு ஏற்றாற்போல் வாகாகப் பயன்படுத்தியும் கொண்டனர். கவிதைகளின் மீதிருந்த பிரமிப்பை உடைத்து, அதனை எளிமைப்படுத்துவதிலும் பொதுமைப்படுத்துவதிலும் இறங்கினர்; அதில் குறிக்கத்தக்க வெற்றியை ஈட்டியதோடு, புதுப்புது கவிஞர்கள் முளைப்பதற்கு ஊக்கியாகவும் அமைந்தனர்.

வானம்பாடி உருவேற்படுமுன்னமே தம் எழுத்துப் பயணத்தைத் தொடங்கியவர் அபி. வானம்பாடியில் தீவிரமாக இயங்கிய நா. காமராசன், அப்துல் ரகுமான், சிற்பி போன்றோரின் நெருங்கிய நட்புக்குரியவர் என்பதால் இவரையும் வானம்பாடிகளுள் ஒருவராகவே கருதினர். பெரும் வீச்சுடன் இயங்கிய வானம்பாடி இயக்கத்தின் நிழலில் ஒதுங்காமல், தனக்கான கவிதைப் போக்கினை எதுபோன்றும் இல்லாமல் வார்த்துக் கொண்டவர் கவிஞர் அபி.

அக உலகிற்குள் சொற்களுள் நடக்கும் நாடகத்தை அபியைப் போல் எழுதுவதற்கு ஒருவர் மெய்ம்மையுணர்ந்தோனாக இருத்தல் வேண்டும் என்பார் கவிஞர் தேவதேவன். அவருடைய கவிதைகளின் கனத்தை அறிந்த கவிஞர் மீரா, அவற்றை வெளியிடுவதற்காகவே அன்னம் என்ற பதிப்பகத்தைத் தொடங்கி மௌனத்தின் நாவுகள் என்ற தொகுப்பை வெளியிட்டார். அபிக்கும் அன்னத்திற்கும் தொடக்கம் அதுதான்.

கவிஞர் அபியைப் போன்றே அவருடைய கவிதைகளும் அதிக இரைச்சல் இல்லாமல், அகப் பயணத்தைத் தீவிரப்படுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டவை. மனித சந்தடியில்லாத பாதையில் மிகுந்த ஆர்வமுடன் பயணிப்பவை. அவரின் கவி உள்ளம் கூரிய பேனா முனையின் ஒற்றைப்புள்ளியை எளிதாகத் திறந்து, அப்புள்ளியின் ஒரு மூலையில் கால்கள் இரண்டையும் நீட்டிப் படுத்துக்கொள்ளும் நெகிழ்வுக்குரியது. தன்னை நிரூபிப்பதிலும் தன் இருப்பை அம்பலப்படுத்துவதிலும் விருப்பற்ற துறவு மனநிலையால் அவரைப் போன்றே அவரின் கவிதைகளும் பொதுவோட்டத்தில் கலக்காமல் தனித்திருக்கின்றன.

படிமத்தைக் கச்சிதமாகக் கையாளும் வித்தையை நன்கறிந்தவர் அபி. அதனாலேயே இவருடைய கவிதைகளில் படிமங்கள் துருத்திக் கொண்டிராமல் இயல்பாக அமைந்துள்ளன. படிமத்தை மிக நேர்த்தியாகக் கையாண்ட கவிஞர்களுள் அபிக்கு மிக முக்கிய இடமுண்டு.

நித்திரையை இமைக்
கத்திரி கொண்டு
துண்டித்துக்கொண்டே
மண்டியிருக்கும்,
கண்மட்டும் உள்ள
ரசிகரின் நெரிசல் (மௌனத்தின் நாவுகள்)

ஒன்றையொன்று
குத்திக் கோத்த
இரு பார்வைகள் (அந்தர நடை)

வண்டுகளும் பறவைகளும்
தோப்புகளுக்குள்

இரைச்சலைக் கிளறி
எதையோ தேடிக்கொண்டிருக்கின்றன (மாலை)

வலிக்காமல்
தொற்றிக் கிடந்த துக்கம்,
அறியாமையின் மீது
பதியப் பதிய
ஊர்ந்து திரிந்த பரவசம் (மாலை)

வார்த்தை எவ்வளவு வலுவானதாக இருந்தாலும் சமயத்தில் வார்த்தை ஒரு சாக்கு. வார்த்தைக்கும் இது தெரியும்; கவிஞனுக்கும் இது தெரியும்; இவர்களிடையே இது கபட உடன்பாடு என்று கூறும் கவிஞர் அபி, தம் கவிதைகளில் கையாளும் சொற்கள் தனித்துவமானவை. வலுமிகுந்தவை. தானமிடும் கருமியைப்போல சொற்களைத் தடவி எடுத்து எச்சரிக்கையுடன் பயன்படுத்தினாலும் அந்த சொற்களையும் கடந்தது கவிதை என்கிற திடமான புரிதலைக் கொண்டவர்.

இவருடைய கவிதையின் பொருள் இதுதான் என்ற வரையறையேதுமில்லை. படிப்போருக்கு என்னவாகப் புரிகிறதோ அதுவே அதன் பொருள் என்ற சுதந்தரத்தை அளிக்கிறார் அபி. கவிதையைக் கவிதையாக மட்டுமே பார்ப்பவர். வாசகன் மீது தம்முடைய கருத்தை - உணர்வை - புரிதலை திணிக்கின்ற போக்கை அறவே தவிர்த்தவர்., படைப்பாளிகள் அரசியலை எதிர்நிலையிலும் சார்பு நிலையிலும் நின்று பேசுவது இயல்பு. ஆனால் அபியின் கவிதைகளில் அரசியல் தாக்கம் தென்படவில்லலை.

இவரின் கவிதைகள் ஆண் பெண் உடல் சார்ந்த பட்டவர்த்தனங்களையும் சிலாகிப்புகளையும் துறந்தவை. கூக்குரலும் முறையிடுதலுமற்று, எல்லாவற்றையும் தத்துவார்த்த நிலையிலும், மாறுபட்ட கோணத்திலும் அணுகுவதை வாடிக்கையாகக் கொண்டவை. கவிதைக்கான இலக்கணமென்று பொதுப்புத்தியில் மடிந்துகிடக்கும் கூறுகளில்லாமையால், அபியின் கவிதைகளைச் சுரணை காண்பதில் பெரும் சவால் நீடிப்பதோடு, சமகாலத்தில் அந்தச் சவாலின் அடர்த்தி கூடியுள்ளது.

இப்போது, என் கவிதைகள், பிறந்தநாளில் இருந்ததைவிட அதிக இருண்மை கொண்டிருக்கின்றன. இவற்றை இவற்றின் இருளிலிருந்து விடுவித்து வெளிக்கொணர முடியாது. இவற்றை இவற்றினிடத்தில் இப்படியே பார்ப்பதுதான் பார்ப்பவனின் முயற்சியும் சாதனையும் ஆகும். வாசகனின் தேடல் உளைச்சலை உள்வாங்கி இவைகள் - இந்தக் கவிதைகள்தான் - வளர்ந்து கொண்டே போகும். தேடுகிறவனும் தேடப்படுவதும் வளர்ந்து புதிய பரிமாணங்களை எட்டிவிடலாம். ஏதாவது ஒரு கணத்தில் வாழ்க்கை அனுபவத்தின் புதிய தீண்டலில் கவிதை, கொஞ்சம் வழிவிடலாம் / அதிகம் வழிவிடலாம் / ஒன்றுமில்லையேல், வாசகனுடைய அறிவு அனுபவப் பரப்பிற்கேற்ப அவன், தன் கவிதையை உருவாக்கிக் கொள்ள தகுதியான கச்சாப் பொருளாகவேனும் மிஞ்சலாம்….. என்று நானும் எனது கவிதைகளும் என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார் அபி. கவிதைகளைப் போன்றே கவிதைகளைக் குறித்து அவர் கொண்டிருக்கும் புரிதல்களும் ஆழமானவை.

காலம், மாலை போன்ற பொதுத் தலைப்பிட்டு அதனூடே நுட்பமாக ஆய்ந்து கவிதையைப் படைக்குமிவர், காலத்தை ஏராளமான கோணங்களில் அலசி, அந்த ஆய்வில் முழுமையை / முடிவை எட்டிப்பிடிக்க முடியாத மானுடத்தின் சாட்சியமாய் தன்னை ஒப்புக்கொள்கிறார். காலம் ஆதியந்தம் இல்லாதது. முடிவற்றது. தெளிவற்றது.

குறுக்கும் நெடுக்குமாய்
நீந்தலாம்.

முடிவில்லாதது
ஆழமுமாகாது
அதனால்
திரும்ப வராமல்
ஆழவும் செய்யலாம்.
அப்புறம்
எப்போதாவது
வெள்ளைவயிறு காட்டி
மிதக்கலாம்.

வேறென்ன செய்ய. (அந்தர நடை)

சூஃபி ஞானி ஒருவரிடம் இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றிக் கேட்டதற்கு, இந்தப் பிரபஞ்சம் மிகப் பழைய புத்தகம். அந்தப் புத்தகத்தின் முதல் அத்தியாயமும் இறுதி அத்தியாயமும் கிடைக்கப்பெறவில்லை என்று பதிலளித்தாராம். காலம் பற்றிய மனிதனின் தேடலுக்கும் அதுவே பதிலாகும். நாள் - வாரம் - மாதம் - ஆண்டு பற்றிய பிரிவுகளின் பெயர்கள் எல்லாம் மனித வசதிக்காக உருப்பெற்றவை. உண்மையில் காலம் அவற்றில் இல்லை என்பதையே அபியின் கவிதை உணர்த்துகிறது. எப்படி வரிகளில் கவிதை இல்லையோ அதுபோல.

காலம் - வாசனை என்ற தலைப்பிலமைந்த கவிதையில், வார நாட்கள் வரிசையில் சென்றுகொண்டிருக்கின்றன. ஒருநாளை மட்டும் வரிசையிலிருந்து திட்டமிட்டு விலக்கி வைக்கிறார் கவிஞர். வரிசை நிற்காமல் சென்று கொண்டிருக்க, தான் இல்லாமல் நகர்ந்துகொண்டிருக்கும் வரிசையைப் பார்த்து, தனியே பிடித்து வைக்கப்பட்ட அந்த நாள் எப்படியெல்லாம் தவிக்கும் - குமுறும் - கெஞ்சும் , தன்னுடைய வரிசையில் மீண்டும் சேர்ந்துகொள்ள எத்தகைய பாடுபடும் என்பதை அதியற்புத கற்பனையில் தோய்த்துப் படைத்துள்ளார்.

சுத்தமாய் ஒருநாளை
ஒதுக்கி
நிறுத்தி வைப்போம்
எதற்கென்றுமில்லாமல்

அது,
பரபரப்பதும்
பரிதவிப்பதும்
பார்த்திருப்போம்.

ஜரிகையில் எழுதிய
தன் பெயர்



அழிய அழிய
அது பொருமிப்
பெருமூச்சு விடக்கூடும்
தன் நீள்சதுர உருவம்
மங்க மங்க
நழுவப்
பெரிதும் துடிக்கலாம்.

சிரித்துக் கண்ணீர் சிந்தித்
திமிறி
தப்ப முடியாதெனக் கண்டு
கடைசியில்
அது
வாய்திறந்து
பேசி,
பேச்சின் வாசனையில் கரைந்து
தப்பிவிடக் கூடும். (அந்தர நடை)

கண் கூசுகையில் நெற்றியின்மீது கை வைத்துப் பார்ப்பதைப் போன்று காலத்தை அறிதலில் சூரியனையே மூலதனமாக - ஆதாரமாகக் கொண்டுள்ளோம். சூரிய உதயத்தில் மறைதலில் காலத்தைக் கணிக்கிறோம். உண்மையில் காலத்தின் பேரொளியில் சூரியன் ஒரு ஏற்பாடேயொழிய முழுமையன்று. அதனால் தான் சூரியனை கருப்புச் சூரியன் என்று எழுதியுள்ளார் அபி.

இந்த
ஒளியின் பயங்கரத்தில்
வழிகண்டு போக
கண்மறைத்துப் போக
ஒரு கருப்புச் சூரியன்
உண்டு
ஒவ்வொருவரிடமும் (அந்தர நடை)

படிமத்தைப் போன்றே இடமறிந்து தேவையறிந்து குறியீடுகளைப் பயன்படுத்தியவர் அபி. நீலம் என்ற வண்ணத்தைவிளங்கிக்கொள்ள முடியாதவற்றுக்கான - மனித ஆற்றலுக்கு இசையாமல் தேடலுக்குட்பட்டவற்றை - ஆழமானதை உணர்த்துவதற்குக் குறியீடாகக் கையாண்டுள்ளார். நீலத் தகிப்புடன் /கண்சிமிட்டி /என்மேல் ஊசிகள் எய்தான் (அந்தர நடை)

இன்னும் அவர் / நரைத்த தலைகுனிந்து / நீலம் பீறிடச் சிரித்தார்(அந்தர நடை)

நினைவுகளுடன் வாழ்வது சாத்தியம். நினைவுகளின்றி வாழ்வது? நினைவுகளின்றி வாழ்வதற்கான ஒரு முயற்சியைத் தொடங்குகிறார். அப்படி நினைவுகளைத் துறந்திருக்க வேண்டுமென்று விரும்புகையில் பாடாய்ப்படுத்தும் நினைவுகளின் உக்கிரத்தைப் பேசும் கவிதைகள்தான் நினைவின்மை - 1, நினைவின்மை - 2

நாட்களை
மீட்ட, மீட்டலில்
எழுந்து மொலுமொலுக்கும்
விரியன் குட்டிகள்.

எறிந்தாலும்
இந்த வினாடிவரை
எழுந்து மொலுமொலுத்துக்
கால்சுற்றி என்
தோலாகிவிட்ட
இவைகளை
உதறுவதெப்படி

எப்படி (அந்தர நடை)

என்று நினைவுகளின்றி வாழ முயன்று தோற்றுப்போன மானுடத்திற்கான ஆய்வுமாதிரியாகத் தன்னை ஒப்புக்கொள்கிறார். புற உலகில் வெற்றிகளைப் பதியமிடும் மனிதர்களால் அக உலகை - தம்மைத்தாமே வெற்றியடைய முடிவதில்லை.

அபி அவர்கள் எழுதிய நானும் எனது கவிதைகளும் என்ற கட்டுரையில், கவிதையைக் குறித்து தாம் கொண்டிருக்கும் அறிதலை, தத்துவார்த்த நிலையில் பதிவு செய்கிறார். என்னிடமிருந்து புறப்பட்டு - நான் அப்படி நினைத்துக் கொள்கிறேன் - எங்கெங்கோ பரந்த வெளிகளில் திரிந்து பல்வேறு வாசகரின் பல்வேறு பார்வைகளில் பட்டு இன்று மீண்டும் என்முன் அமர்ந்திருக்கும் என் கவிதைகள் ஒரு உண்மையை எனக்குப் புலப்படுத்துகின்றன. என்னிடமிருந்து எதையும் இவைகள் வாசகனுக்குச் சுமந்து சென்று சேர்த்ததில்லை. மனிதனின் அனுபவம் கடலுக்குமேல் தெரிகிற பனிப்பாறை என்றால் அவனது அனுபவ சாத்தியம் கடலுக்கடியில் உள்ள பனிமலை. வாசகன் அறியாமல் அவனுள் கிடக்கிற அனுபவ சாத்தியக் கூறுகளைக் கவிதைகள் தொட்டுத் தடவுகின்றன. தன்னுள் ஏற்கெனவே இருப்பவற்றையே வாசகன் சுரணை காண்கிறான். தம் கவிதைகளின்முன் ஒரு பார்வையாளனாக நின்று வேடிக்கை பார்ப்பதையே வழக்கமாகக் கொண்டவர் அபி.

ஒரு தொகுப்பிற்கும் அடுத்த தொகுப்பிற்குமான அபியின் காத்திருப்பு சற்றே நீண்டது. ஏனென்றால் இவருடைய தொகுப்பு கவிதைகளின் எண்ணிக்கையைச் சார்ந்ததன்று. மனம் சார்ந்தது.

கட்டுரையாளர்: உதவிப்பேராசிரியர்,
எஸ்ஆர்எம். பல்கலைக்கழகம்

கட்டுரை

மணி செந்தில்

மாநாடு

திரைக்கதைக் கலையின் விசித்திரம்

அரசியல் என்ற சொல்லைப் பயன்படுத்திவிட்டதால் கதாநாயகன் ஒரு இஸ்லாமியனாக உருவாக்கப் பட்டிருப்பதைத் தாண்டி , இஸ்லாமியர்கள் என்பதாலேயே அவர்கள் பயங்கரவாதிகள் அல்ல என்கின்ற செய்தி இந்தத் திரைப்படத்தின் மூலமாக சொல்லப்பட்டிருக்கிறது என்கிற ஆறுதல் நமக்கு இருந்தாலும் அது வலிமையாக சொல்லப்பட்டிருக்கலாம் என்பதும் ஒரு மத பெரும்பான்மையினர் வசிக்கும் நாட்டில் மதச் சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் பல்வேறு சிக்கல்களை பற்றி இத்திரைப்படம் இன்னும் விரிவாகப் பேசி இருக்கலாம் என்பதும் ஒரு குறையே.

திரை உலகை கனவுத் தொழிற்சாலை என வரையறுத்தார் மறைந்த எழுத்தாளர் சுஜாதா . நம் கண்முன்னால் விரிகிற திரை நமக்கும் , நம் கனவிற்கும் இடையில் இருக்கின்ற இடைவெளியை அழிக்க முயன்று கொண்டே இருக்கிறது. இந்த முயற்சியைத் தான் நாம் திரைப்படம் என்கிறோம். ஒரு நல்ல திரைக்கதை “ஹைக்கூ” வடிவம் போன்றது என்கிறார் காட்பாதர் , அபாகலிஸ் நௌ போன்ற கிளாசிக் படங்களை இயக்கிய புகழ்பெற்ற இயக்குனர் பிரான்சிஸ் போர்ட் கொப்பல்லோ. அவரே சொல்கிறார் , “ஒரு கலை வடிவத்தின் உச்சத்தை அடைவதற்காக துணிச்சலான முடிவுகளை எடுங்கள். அது வெல்லலாம், தோற்கலாம்.. ஆனால் துணிச்சலான முடிவுகள் தான் எப்போதும் கலை வடிவத்தின் உச்சங்களை வெளிப்படுத்துகின்றன”.

ஒரு திரைப்படத்தின் ஆன்மாவாக அதன் திரைக்கதை விளங்குகிறது. சிறந்த கதையாக அறியப்பட்டவைகள் திரைக்கதையாக வேதியியல் மாற்றம் அடையும்போது பல சூழ்நிலைகளில் தோல்வி அடைந்திருக்கின்றன. நல்ல கதைகளுக்கு எப்போதுமே நல்ல திரைக்கதைகள் தேவைப்படுகின்றன. ஆனால் நல்ல திரைக்கதைகளுக்கு ஓரளவு போதுமான வழக்கமான கதை இருந்தால் வென்று விடலாம். அவ்வாறாகத்தான் மாநாடு வென்றிருக்கிறது.

ஒரு திரைப்படத்தை அறிவியலாக புரிந்து கொள்வதும், கலை மொழியில் அறிந்து கொள்வதும் வெவ்வேறானது. திரையரங்கில் அமர்ந்திருக்கும் ஒரு எளிய பார்வையாளன் திரையில் விரிகிற காட்சியோடு ஒன்றுபட்டு தானும் அதில் ஒரு பகுதியாக உணரத் தலைப்படும்போதுதான் கலையின் அழகியல் வெளிப்படுகிறது. ஒரு திரைப்படம் தனக்கு முன்னால் அமர்ந்திருக்கும் பார்வையாளனின் சகலவிதமான நினைவுகளிலிருந்து அவனை திசை திருப்பி , தான் விவரிக்கும் கதையில் அவனை ஒன்ற வைத்து , அவனது கால ஓட்டத்தை மெலிதாக அவனை மறக்க வைக்கிற அந்த உணர்வுப் புள்ளியைத் தான் தனது வெற்றியாகக் கருதுகிறது.

அந்த கால ஓட்டத்தைத் தான் ஒரு கதைக் கருவாகக் கொண்டு மாநாடு திரைப்படத்தை உருவாக்கி இருக்கிறார் இயக்குனர் வெங்கட் பிரபு. அவருடைய முந்தைய திரைப்படங்கள் வணிக ரீதியிலான அனைத்து சமரசங்களுக்கும் உட்பட்டு ,வெகு மக்களுக்கான தமிழ்சினிமாவின் சகலவிதமான இலக்கணங்களுக்கும் உட்பட்டவை தான். அவர் இயக்கிய முதல் படமான சென்னை 28 (2007) தெருவில் நடக்கும் கிரிக்கெட் பந்தயத்தை அடிப்படையாகக் கொண்டது. மாபெரும் திறமை உள்ள விளையாட்டு வீரர்களை விதந்தோதும் படங்களுக்கு மாற்றாக தெருவோரம் கிரிக்கெட் விளையாடும் இளைஞர்களைப் பற்றிய அத்திரைப்படத்தின் எளிய வகையிலான திரைக்கதை அனைவரையும் கவர்ந்தது. தெரிந்தோ தெரியாமலோ வெங்கட்பிரபு தான் கட்டமைத்த நண்பர்கள், கேளிக்கைகள், விளையாட்டுகள், காதல், கடத்தல் இவற்றில் எழுகின்ற துரோகங்கள், வழக்கமான கதாநாயகத்தனம் போன்ற குறிப்பிட்ட வகையிலான சட்டகத்துக்குள் சிக்கிக் கொண்டார் என்றே சொல்ல வேண்டும். ஆனால் திரைக்கதையில் சில ரசனை மிகுந்த தந்திரங்களை அவரால் செய்ய முடிந்தது. அவரது உச்சபட்ச வணிக வெற்றியை கொடுத்த மங்காத்தா திரைப்படம் கூட இவ்வாறானதே. வழக்கமான நன்மை/தீமை இடையிலான யுத்தமாக ஒரு திரைப்படத்தை வடிவமைக்காமல், ஒரு திரைப்படத்தில் அனைவரும் கெட்டவர்களாக இருந்து, யார் இதில் அதிகம் கெட்டவர் என்கின்ற போட்டி நடத்தி, அந்தப் போட்டியையும் மக்களை ரசிக்கச் செய்து அதிகம் தீயவர் எவரோ, எவர் அதிகம் வில்லத்தனம் செய்கிறாரோ அவர்தான் கதாநாயகன் என வழமையான கோடுகளில் இருந்து மாற்றி வரைந்தது மங்காத்தாவின் திரைக்கதை அமைப்பு.

முதல் முறையாக “வெங்கட்பிரபு அரசியல்”(*A Venkat Prabu Politics*) என தலைப்பிடப்பட்டு மாநாடு என்கின்ற திரைப்படத்தை அவர் அறிவித்தபோது நிச்சயமாக இது தீவிரமான அரசியல் திரைப்படமாக இருக்காது என அவரது முந்தைய திரைப்படங்களை பார்த்தவர்கள் கண்டிப்பாக கணித்து இருப்பார்கள். அந்தக் கணிப்பு சரியானது தான். மாநாடு அரசியல் படமல்ல. அரசியலைப் பற்றிய படமும் அல்ல.

நழுவி ஓடும் கால ஓட்டத்தின் இடுக்குகளில் சிக்கிக் கொண்ட கதாநாயகன் சிம்பு மற்றும் வில்லன் எஸ் ஜே சூர்யா ஆகிய இருவர் விளையாடும் பரமபத கதையே மாநாடு. எல்லோரையும் விட இந்த திரைப்படம் நடிகர் சிலம்பரசனுக்கு மிக முக்கியமானது. ஏனெனில் சமீப காலத்தில் தன் மீது எழுந்திருந்த எல்லா விமர்சனங்களுக்கும் அவர் பதில் சொல்ல வேண்டிய நெருக்கடியில் இருந்தார். அவருக்கு ஒரு வெற்றி தேவையாக இருந்தது. இந்த இரண்டில் அவர் மீது எழுந்து இருந்த எல்லா விமர்சனங்களுக்கும் இத்திரைப்படத்தின் மூலம் அவர் பதில் சொல்லிவிட்டாரா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் அவரது இரண்டாம் தேவையான படத்தின் வெற்றி அவருக்கு கிடைத்துவிட்டது.

அரசியல் என்ற சொல்லைப் பயன்படுத்திவிட்டதால் கதாநாயகன் ஒரு இஸ்லாமியனாக உருவாக்கப் பட்டிருப்பதைத் தாண்டி , இஸ்லாமியர்கள் என்பதாலேயே அவர்கள் பயங்கரவாதிகள் அல்ல என்கின்ற செய்தி இந்தத் திரைப்படத்தின் மூலமாக சொல்லப்பட்டிருக்கிறது என்கிற ஆறுதல் நமக்கு இருந்தாலும் அது வலிமையாக சொல்லப்பட்டிருக்கலாம் என்பதும் ஒரு மத பெரும்பான்மையினர் வசிக்கும் நாட்டில் மதச் சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் பல்வேறு சிக்கல்களை பற்றி இத்திரைப்படம் இன்னும் விரிவாகப் பேசி இருக்கலாம் என்பதும் ஒரு குறையே.

“*Time Loop*” பற்றி ஏற்கனவே பல ஆங்கிலத் திரைப்படங்கள் வந்திருக்கின்றன. இந்த ஆங்கிலச்சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் என்னவென்று சிந்தித்தால் “காலச்சுழி” என்பது சரியாக இருக்கும் என்றே கருதுகிறேன். இந்தக் கருத்தோடு காலத்தின் முன்னாலும் பின்னாலும் பயணிக்கிற ‘டைம் மிஷின்’ விவாகரங்களை பொருத்திப் பார்த்துக் கொண்டால் இன்னும் இந்த விஷயம் புரியும். புத்திசாலித்தனமாக மாநாடு திரைப்படத்திலேயே” *Time loop*” திரைப்படங்கள் குறித்த அறிமுகங்களை கதாநாயகனே கொடுத்து விடுவதால் அந்தத் திரைப்படங்களின் வரிசையில் இதுவும் ஒன்று என பார்வையாளர்களை இயக்குனர் நம்ப வைத்து விடுகிறார்.

தமிழிலும் ஏற்கனவே இதுபோன்ற முயற்சிகள் நடந்துள்ளன. மறைந்த ஒளிப்பதிவாளரும் இயக்குனருமான ஜீவா இயக்கிய *12 B(2001)* இதுபோன்ற திரைப்பட வகைமைகளுக்கு தமிழில் நமக்கு கிடைக்கின்ற ஒரு முன்னோடி திரைப்படம். அதேபோல் சூர்யா நடித்து விக்ரம் கே குமார் இயக்கிய 24 (2016), அஸ்வின் சரவணன் இயக்கத்தில் வெளிவந்த கேம் ஓவர் (2019) சிம்புதேவன்

இயக்கத்தில் வெளிவந்த ஒரு கன்னியும் 3 களவாணிகளும் (2014) போன்ற சில படங்களும் இதே போன்று கால நழுவலின் கண்ணியில் சிக்கிக்கொண்ட நிகழ் மனிதர்களின் கதைகள் தான். டைம் மெஷின் பற்றிய திரைப்படங்களை தனிப் பட்டியலாகவே கூறலாம்.

படத்தில் எதிர்மறை கதாபாத்திரமாக வருகிற ஒய் ஜி மகேந்திரன் தனது வசனத்தில் போகிற போக்கில் கிறிஸ்டோபர் நோலனின் “டெனட்” (*Tenet*) திரைப்படத்தை குறிப்பிடுவதும் படம் குறித்த புரிதலை பார்வையாளருக்கு ஏற்படுத்தும் முயற்சி தான். இவ்வளவு முன் தயாரிப்புகளைச் சொல்லியும் பார்வையாளர்களுக்கு “*Time Loop*” பற்றி புரிகிறதோ புரியவில்லையோ, ஆனால் திரைக்கதை வடிவமைப்பில் இயக்குனர் வெங்கட் பிரபு செய்திருக்கிற திறமையான “எளிமை” இந்தத் திரைப்படத்தின் மூலக் கருத்தினை புரிந்துகொள்ளாத எளிய பார்வையாளர்களுக்குக்கூட , திரைக்கதையின் சுவாரஸ்யத்தை சென்று சேர்த்துவிடுகிறது.

அதற்காகவே வழக்கமான தமிழ் திரைப்படங்களுக்கு உரிய கதாநாயகன் -வில்லன் மோதலாக இந்த திரைப்படத்தை வடிவமைத்துக் கொண்டது இயக்குனரின் புத்திசாலித்தனம். இந்த வழமையான சட்டகத்திற்குள் *Time Loop* சற்றே குழப்பமான வடிவத்தைப் பொருத்தி , அதற்கு இந்திய திரைப்பட பார்வையாளனுக்கு தேவைப்படும் புராணீக நியாயம் சேர்ப்பதற்காக காலபைரவர் கதையையும் இணைத்து இயக்குனர் வெங்கட்பிரபு விவரிக்க முயன்றிருக்கிறார். இந்த முயற்சிகள் படம் பார்ப்பவர்களை சிந்திக்க வைப்பதற்கு முன் ,எஸ் ஜே சூர்யா வின் அசாத்திய உடல்மொழியோடு கூடிய தவிப்பிலும்,” தலைவரே தலைவரே..” என அவர் புலம்பும் புலம்பலிலும், இத்திரைப்படம் பார்வையாளனுக்கு வெகு சுவாரசியமாக மாறிவிடுகிறது. அந்த வகையில் எஸ் ஜே சூர்யா தான் இந்தப் படத்தின் மாபெரும் வலிமை.

படத்தின் இன்னொரு மிகப்பெரிய பலம் படத்தின் படத்தொகுப்பு. படத்தொகுப்பாளர் பிரவீனுக்கு இது நூறாவது படம் என்பதனால் தன்னுடைய பங்களிப்பு தனித்து தெரிய வேண்டும் என்பதற்காக உழைத்து அதில் வெற்றியும் கண்டிருக்கிறார். காட்பாதர் படத்திற்காக சிறந்த படத்தொகுப்பாளர் என அறிவிக்கப்பட்ட ஆஸ்கார் விருது வாங்கிய “வால்டர் முர்ச்” சிறந்த படத்தொகுப்பிற்கு 1. உணர்ச்சி 2.கதை 3. ரிதம் 4. கண் பார்வையை தொடர்தல் 5. திரையின் இருபரிமாண இடம் 6. முப்பரிமாண வெளி என ஆறு விதிகளை வகுக்கிறார் (மாண்டேஜ் -தமிழில் தீஷா, பேசாமொழி பதிப்பகம் வெளியிடு). இந்த விதிகளில் ஒன்று பிசகினாலும் திரைப்படம் தான் தெரிவிக்க வந்த மூலக் கருத்திற்கு அப்பால் விலகிச் சென்றுவிடும் எனவும் அவர் எச்சரிக்கிறார். இந்த விதிகளை மாநாடு திரைப்படத்தின் படத்தொகுப்பில் பொருத்திப் பார்த்தால் ஏறக்குறைய பொருந்திப் போவது ஆச்சரியம்தான்.

மாநாடு திரைப்படத்தின் படத்தொகுப்பாளர் பிரவீன் தனது கடந்த 99 திரைப்படங்கள் வழங்கிய அனுபவத்தினை வைத்து எது பார்வையாளர்களுக்கு சென்று சேர வேண்டும் என்பதில் வெற்றி கண்டுள்ளார். படத்தின் இன்னொரு பலம் யுவன் சங்கர் ராஜாவின் பின்னணி இசை. மற்றபடி காட்சிக்கு காட்சி வேறுபடும் கதாநாயகன் சிம்புவின் உடல்வாகு படத்தின் போக்கினை பாதிக்கிறது. வேக வேகமாக நகரும் திரைக்கதையில் குறிப்பிட்ட சில காட்சிகளே மீண்டும் மீண்டும் வருவதால் பார்வையாளர்கள் களைப்படைந்து விடக்கூடாது என்பதற்காக ஒவ்வொரு முறையும் சில புதிய விஷயங்களை சேர்த்து இணைத்து வழங்கி இருப்பது படத்திற்கு பலம் என்றாலும், அது ஒவ்வொரு முறையும் நடக்கும் போது கொஞ்சம் அயர்ச்சியாக இருக்கிறது.

ஒரு திரைக்கதையாக இந்தப் படத்தை இயக்குனர் விவரிக்கும்போது அதை புரிந்து கொண்டு தயாரிக்கும் திரை அறிவு கண்டிப்பாக திரைப்படத்தின் தயாரிப்பாளருக்கு அவசியம் தேவை. “மிக மிக அவசரம்”(2019) என்கின்ற மிக முக்கியமான ஒரு திரைப்படத்தை தயாரித்து இயக்கிய சுரேஷ் காமாட்சி இந்தத் திரைக்கதையின் அடிப்படையை மிகத் தெளிவாக புரிந்து கொண்டு தயாரித்திருக்கிறார். நீண்ட காலமாக படம் தயாரிப்பு நிலையிலேயே இருந்தது பல காட்சிகளில் தெரிந்தாலும், படத்தின் திரைக்கதையின் போக்கு அதை முறியடிக்கிறது.

படம் வெளிவருவதற்கு முன்பாக வழக்கம்போல் தடைகள் ஏற்பட்டன. ஒருதிரைப்படத்தயாரிப்பாளர் என்கின்ற முறையில் பணம் போட்டு ஒரு படைப்பை உருவாக்கி வைத்துக்கொண்டு அதை சரியாக மக்களின் பார்வைக்கு கொண்டு போய் சேர்ப்பது என்பது மிகமிகச் சவாலான ஒரு விஷயம். அந்த சவாலில் திரைப்பட தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி வெற்றி பெற்றிருக்கிறார்.

வழமையான கதையில் புதுமையான திருப்பங்களோடு கூடிய, விறுவிறுப்பான திரைக்கதையால் மாநாட்டிற்கு கூட்டம் கூடுகிறது. அந்தவகையில் மாநாடு தன் வழக்கமான திரைக்கதையின் போக்கில் வலிந்து பொருத்திக்கொண்ட “கால விசித்திரத்தால்” தமிழில் கவனிக்கத்தக்க திரைப்படமாக மாறியிருப்பது ஒரு வெற்றிக்காக காத்து நின்ற இயக்குனர் வெங்கட்பிரபுவிற்கும், நடிகர் சிலம்பரசனுக்கும் மகிழ்ச்சியை அளித்து இருக்கக்கூடும்.

●

கட்டுரை

க. பழனித்துரை
gpalanithurai@gmail.com



மாற்றம்
நம்மிடமிருந்து தொடங்கட்டும்

உடல் உழைப்பைவிட மூளை உழைப்பு என்பது எப்படி உயர்ந்தது? உடல் உழைப்பு ஏன் தாழ்ந்ததாகக் கருதப்படுகிறது? மூளை உழைப்பு மேலானது என்று யார் கூறியது? விவசாய வேலையை ஆற்றலற்ற திறனற்ற (Unskilled) செயல் என்று யார் கூறியது? விவசாய வேலைகளை உழுவது, நாற்று விடுவது, நடவு செய்வது, மருந்தடிப்பது, பரம்படிப்பது, கதிர் அறுப்பது இவை அனைத்தும் செய்ய திறன் தேவை இல்லையா? அப்படி என்றால் யார் வேண்டுமானாலும் செய்யலாமல்லவா? அப்படிச் செய்ய முடியுமா?

இன்று நாம் வாழ்வது ஒரு மாய உலகத்தில். கடந்த 30 ஆண்டுகளில் மானுட சமூகத்தில் நடந்துள்ள சிந்தனை மாற்றங்கள் உலகைப் புரட்டிப் போட்டு விட்டன. இந்த மாற்றங்கள் அனைத்துக்கும் காரணம் தகவல் தொடர்பில் ஏற்பட்ட தொழில் நுட்பப் புரட்சி. இந்தப் புரட்சிதான் மனிதனை அதிவேகமாக தூக்கமின்றி செயல்பட வைத்து எல்லையில்லா மாற்றங்களை உலக மக்கள் வாழ்வில் கொண்டுவந்து நிறுத்தியுள்ளது. இதன் விளைவாக நாம் பார்ப்பது விண்ணை முட்டும் அளவு உயர்ந்த கோபுரக் கட்டிடங்களை மட்டுமல்ல, பளபளக்கும் சாலைகளை மட்டுமல்ல, உல்லாசம் தரும் வாகனங்களை மட்டுமல்ல, சாகசங்களை நம் கைகளிலே உருவாக்கிக் கொண்டிருக்கும் அலைபேசிகள் மட்டுமல்ல, விதவிதமான சுவைகளுடன் 24 மணி நேரமும் இயங்கி நம்மை நாவின் சுவைப்பிற்குள் தோயச் செய்த உணவு விடுதிகள் மட்டுமல்ல அளவு கடந்த ஏற்றத்தாழ்வுகளை மானுட சமூகத்தில் ஏற்படுத்தி இருப்பதையும் தான். மாற்றங்களால் மானுடம் மேம்பட்டால் அனைவருக்கும் மகிழ்ச்சியே. ஆனால் இன்று நடந்து கொண்டிருக்கும் மாற்றங்கள் சமூகத்தைப் புறம் தள்ளி பெரும் வாழ்க்கைச் சிக்கலில் ஆளாக்கியுள்ளதுதான் நாம் இன்று பார்க்கும் ஒரு சோக நிகழ்வு. எல்லை இல்லா ஏற்றத்தாழ்வுகள் மனித சமூகத்தில் மேம்பாடு என்ற பெயரில், பொருளாதார வளர்ச்சி என்ற பெயரில் அனைத்து

இயற்கை வளங்களையும் பாழ்படுத்தி சுற்றுச் சூழலை மாசுபடுத்தி உருவாக்கப்பட்டுள்ளன. இதன் விளைவு பருவநிலை மாற்றம், உயிர்ச்சூழலை அழித்தல், பல்லுயிர்ப் பெருக்கம் பாழ்படல், இயற்கைப் பேரிடர் என அனைத்தையும் தொடர் கதையாக்கி விட்டனர். இவை அனைத்தும் மானுடத்திற்கு தேவையால் நடைபெறவில்லை. மாறாக ஆசையால் வந்தவைகள். பொருள் சேர்க்க வந்த ஆசை. மானுடத்தை நுகர்வுக்கு இட்டுச் சென்று பொருள் குவிக்க வைத்தனர்.

எல்லை இல்லா பொருள் குவிப்பு எந்தச் சமூகத்திலும் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும், மானுட அக்கரையையும் கொண்டுவராது மாறாக ஆதிக்கத்தையும், அடிமைத் தனத்தையும் சுரண்டலையும், அறம் இழந்த வாழ்க்கை முறைமையையும் தான் கொண்டு வரும் என்பதற்கு இனிமேல் கோட்பாட்டு விளக்கங்கள் நமக்குத் தேவை இல்லை. இன்று நம் கண் முன்னே பார்க்கும் எதார்த்த சமூகப் பொருளாதார நிகழ்வுகள் இந்த உண்மையை நமக்கு விளக்கிடும். முதல் தொழில் புரட்சியில் ஆரம்பித்து இன்று வந்த தகவல் தொழில் நுட்பப் புரட்சி வரை அனைத்துப் புரட்சிகளும் சமூகத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்துவிட்டன என்பதை யாரும் மறுக்கவில்லை. இந்த மாற்றங்களால் யாருக்கு மேம்பாடு யாருக்கு இழப்பு என்பதை உலக வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் ஒரு சிறுகுழு மக்களின் உல்லாச வாழ்வுக்கு பெரும் சமூகம் உழைக்க வேண்டியிருக்கிறது. அந்த உழைப்பு என்பது யாருக்கு லாபமாக சேர்கிறது என்பதே தெரியாமல் பெரும்பகுதி சமூகத்தை உழைப்பில் ஆழ்படுத்திக் கொண்டே இருக்கின்றது அரசு இயந்திரம். அரசு இயந்திரம் என்பது மக்களாட்சியில் கூட உழைப்பவனுக்கு அரசியல் சமத்துவத்தைக் கொடுத்து சமூகப் பொருளாதார சமத்துவமின்றி வாழ வைத்து பொருள் ஈட்டும் சக்திக்கு சமூகத்தைச் சுரண்டிட வழிவகுத்த செயல்பாடுகளைத்தான் நாம் வாழும் இந்த சமூகத்தில் பார்த்து வருகிறோம்.

இந்தச் சூழலை அப்பட்டமாக தோலுரித்துக்காட்டிய இரண்டு அறிக்கைகள் உலகிற்கு அபாயச்சங்கை ஊதிவிட்டன. ஒன்று உலக ஏற்றத்தாழ்வு அறிக்கை இரண்டு ஐக்கிய நாடுகள் சபையின் “மானுட மேம்பாட்டு அறிக்கை”. உலக ஏற்றத்தாழ்வு அறிக்கை இதுவரை வரலாறு காணாத அளவுக்கு நாடுகளுக்கிடையேயும், சமூகங்களுக்கிடையேயும் உள்ள ஏற்றத்தாழ்வுகளை படம் பிடித்துக் காண்பித்து விட்டது. இந்த அறிக்கையைக் கூர்ந்து கவனித்துப் படித்தால் ஓர் உண்மை நமக்குப் புலப்பட்டுவிடும். அதுதான் சுரண்டல். கடந்த முப்பது ஆண்டுகளில் உலகம் வியக்கும் வண்ணம் பொருள் ஈட்டப்பட்டுள்ளது. இந்தப் பொருள் ஈட்டல் என்பது ஒன்று, எல்லை இல்லா அளவுக்கு இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டுள்ளன. இரண்டு மனித உழைப்பும் பெருமளவில் சுரண்டப்பட்டுள்ளது. இந்தச் சூழலில் இன்னொரு முக்கிய நிகழ்வும் நடந்தது. பெருமளவு மனித மாண்புகளை சமூகம் இழந்துள்ளன. இந்த ஏற்றத் தாழ்வு குறைய வேண்டும் என்றால் பொருளாதார சமத்துவமும் பொருளாதார நீதியும் தாழ்நிலையில் வாழும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

அடுத்து மானுட மேம்பாட்டு அறிக்கை கூறுவது, மனித சமூகத்திற்கும் இயற்கைக்கும் உள்ள உறவு பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் தாங்கள் வணங்கும் தெய்வம் இயற்கைதான் என்பது தெரியாமல் அதை பணம் பண்ணுவதற்காக எந்த விதிமுறையும் இன்றி பாழ்படுத்திக் கொண்டுள்ளார்கள். இயற்கை வளங்கள் சமூகத்திற்கானது; அது எந்தத் தனி மனித உடைமையும் அல்ல. அது தண்ணீராக இருக்கலாம், காற்றாக இருக்கலாம், மலையாக இருக்கலாம், காடாக இருக்கலாம், சூரிய ஒளியாக இருக்கலாம், எதுவானாலும் அது உலகத்திற்கானது, அவைகள் பொதுவானவைகள். அவை அனைத்தும் பொதுப் பயன்பாட்டிற்கானவைகள். ஆனால் அவைகள் அனைத்தும் தனியார் லாபம் பெற அனுமதித்து இயற்கையை அழித்ததின் விளைவு பருவநிலை மாற்றம் என்ற சிக்கலில் வந்து நிற்கிறோம். இந்த இரண்டு அறிக்கைகளும் கூறிய கருத்துக்களை உள்வாங்கி உலக வங்கியிலிருந்து உள்ளூர் சமூகம் வரை செயல்பட வேண்டும். அந்த நெருக்குதலுக்கு மனித சமூகம் ஆளாக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல இந்த அழிவினால் பெருந்துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் ஏழைகள், பெண்கள் மற்றும் காடுகளையும், மலைகளையும், கடலையும் சார்ந்து வாழும் மக்கள் கூட்டம்தான். இந்தச் சூழலை சமாளித்து ஏழைகளைக் காக்க பெரு முயற்சி இன்று அனைத்து மட்டத்திலும் தேவைப்படுகிறது.

பாராளுமன்றம் தொடங்கி சட்டமன்றங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களைத் தாண்டி கிராமசபை வரை அனைவரும் புரிதலுடன் நிபுணத்துவமாக செயல்பட்டாக வேண்டும். இதற்கு ஒவ்வொரு நிலையிலும் ஆழ்ந்த புரிதலுடனும் நிபுணத்துவத்துடனும் செயல்பட வேண்டும். தேசியப் பாராளுமன்றம், மத்திய அரசு, மாநில சட்ட மன்றங்கள், மாநில அரசுகள், உள்ளாட்சி மன்றங்கள், உள்ளாட்சி செயல் அலுவலர்கள், அதிகாரிகள் என அனைத்து மட்டத்திலும் இந்தப் புதிய சூழலை எப்படிக் கையாள்வது என்ற புரிதலில் ஒரு பார்வையையும் (*perspective*) உருவாக்கிக் கொண்டு செயல்பட வேண்டும். இதற்கு சில உதாரணங்களைப் பார்த்தால் நாம் புரிந்து கொள்வதற்கு மிக ஏதுவாக இருக்கும்.

உலகம் வியக்கும் வளர்ச்சியை எட்டியுள்ள வியட்நாம், ஒரு சிறு நாடுதான். அந்தநாடு, பொருளாதாரக் கொள்கை ஒன்றை அறிவிக்கிறது. “நாங்கள் வெளிநாட்டிலிருந்து மூலதனத்தை வரவேற்கிறோம். ஆனால் எங்கள் நாட்டை ஆலைக் கழிவுகளின் கூடமாக மாற்ற அனுமதிக்க மாட்டோம். எங்கள் நாட்டின் சூழல் கேட்டிற்கு அபாயம் இல்லாத செயல்பாடுகளுக்கு மட்டுமே அனுமதியளிப்போம். அடுத்து எங்கள் நாட்டு மக்களில் பெரும்பகுதி விவசாயத்தை நம்பி வாழ்பவர்கள், எனவே விவசாயத்தைப் பாதிக்கும்

எந்த நிறுவனத்தையும் நாங்கள் எங்கள் நாட்டில் அனுமதிக்க மாட்டோம்” என்று கூறுகிறது. அத்துடன் “நாங்கள் எதற்கு முன்னுரிமை கொடுப்போம் என்றால் எந்த நிறுவனம் சூழலைப் பாதிக்காமல் விவசாயத்தைப் பாதிக்காமல், அதிக எண்ணிக்கையில் வேலை வாய்ப்பை எங்கள் நாட்டு மக்களுக்கு உருவாக்கித் தருகிறதோ அந்த நிறுவனத்திற்குத் தான் அனுமதி மற்றும் முன்னுரிமை” என்று பிரகடனம் செய்கிறது.

உலகின் மிகப்பெரிய சனநாயக நாடான சீனா, புதிய பொருளாதாரத்தில் வரும் வாய்ப்பைப் பயன்படுத்தி உற்பத்திப் பொருளாதாரத்தை ஊக்குவித்து தேவையான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பொருள் செய்து உலகச் சந்தையை ஆக்கிரமித்து வணிகம் செய்து, பணக்கார நாடுகளை பின்னுக்குத் தள்ளிய வரலாறு உலகையே ஆச்சரியப்பட வைத்துள்ளது. அந்த நாடு, நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறது. உலகத் தரத்தில் கட்டமைப்புக்களை உருவாக்கி முதலாளித்துவ நாடுகளையே வியக்க வைக்கிறது. அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியில் முதலாளித்துவ நாடுகளுடன் போட்டிபோட அந்த நாட்டுப் பல்கலைக் கழகங்களையும், ஆராய்ச்சி நிறுவனங்களையும் தயாரிப்புச் செய்து விட்டன. அதன் விளைவு உலகத் தரத்தில் கல்வி நிறுவனங்கள், உலகத் தரத்தில் ஆராய்ச்சி நிறுவனங்கள் என நிறுவனங்களை கட்டமைத்து வளர்த்தெடுத்துவிட்டனர். உலகில் முதல் தரத்தில் ஒரு 50 பல்கலைக் கழகங்கள் இருந்தால் அதில் 10 அந்த நாட்டில் இருக்கின்றன. உலகில் முன்னணி வங்கிகள் 10 இருக்கின்றன என்றால் அதில் 5 பெரிய வங்கிகள் அந்த நாட்டில் இருக்கின்றன. அந்த அரசும் மக்களும் நேர் கோட்டில் பயணிக்கின்றார்கள். மக்களுக்கு அரசாங்கத்தின்மேல் நம்பிக்கை இருக்கிறது, அரசாங்கம் மக்கள் மேல் அபரிமிதமான நம்பிக்கையை வைத்திருக்கிறது. அந்த நம்பிக்கை கடின உழைப்பாக மாறுகிறது. குறைந்த விலையில் பொருள்கள் செய்ய முடிகிறது. இதன் மூலம் வளர்ந்த பொருளாதாரம் மக்கள் மேம்பாட்டிற்கு மூலதனம் செய்து மக்கள் நலனைப் பாதுகாத்துச் செயல்படுகிறது. அதன் விளைவு அந்த நாட்டு மக்களுக்கு நாட்டின்மேல் பற்று என்பது எள்ளளவும் குறையவில்லை. அந்த நாட்டிடம் பல நாடுகள் மேம்பாட்டுக்கென கடன் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கும் மேலாக மிகப் பெரிய பணக்கார நாடு முதலாளித்துவ நாடுகளுக்கெல்லாம் தலைமை தாங்கும் நாடு என பிரகடனப்படுத்திய நாடு இந்த நாட்டிடம் கடன் வாங்க ஆரம்பித்து பெருமளவில் கடன் பெற்ற நாடாகிறது. அங்கு மக்களாட்சி இல்லை என்று கூறுவார்கள், ஆனால் அனைவரிடமும் ஒரு ஒழுங்கை, கட்டுப்பாட்டைக் கொண்டு வந்து விட்டனர். அந்த நாடு கூறுகிறது “எங்களுக்குத் தேவையான மக்களாட்சியை நாங்கள் உருவாக்கி வைத்திருக்கிறோம்” என்று.

அதேபோல் இந்தியாவில் உள்ள ஒரு மாநிலம் கேரளா. அது கூறுகிறது: “எங்கள் மாநிலம் இயற்கை விவசாயத்திற்கு மாறிவிட்டது. இயற்கை உரம் தயாரிக்கும் நிறுவனம் மட்டும்தான் இயங்க அனுமதி, பூச்சி மருந்தோ, ரசாயண உரமோ எங்கள் மாநிலத்தில் விற்கவோ உற்பத்தி செய்யவோ அனுமதியில்லை” என்று பிரகடனப்படுத்துகிறது. அதே மாநிலம் “தொழிற்சாலை துவங்குவதாக இருந்தால் கழிவுகளை மேலாண்மை செய்யாமல் தண்ணீரில் கலக்கவோ, பூமிக்குள் செலுத்தவோ கூடாது, தண்ணீரோ, நிலமோ, மின்சாரமோ அனைத்தும் பொதுமக்களுக்கு கிடைக்கும் அதே விலையில்தான் கொடுக்கப்படும். தொழில்கள் துவங்கவும்” என்று அறிவிக்கிறது.

“எங்கள் மாநிலத்தில் தொழிற்சாலை அமைத்தால் எங்கள் மாநில மக்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். எங்கள் மாநிலத்தில் என்ன கூலி வழங்கப்படுகிறதோ அதைத்தான் கம்பெனி ஏற்றுக் கொடுக்க வேண்டும். வெளிமாநிலத்திலிருந்து ஆட்கள் குறைந்த கூலிக்கு வருகின்றார்கள் என்று அவர்களை அழைத்து வரக்கூடாது. அப்படியே வந்தாலும் கூலி எங்கள் மாநிலத்தில் உள்ளதுபோலத்தான் அவர்களுக்கும் கொடுக்க வேண்டும்” என்று கூறுகிறது. “எங்கள் மாநிலத்தில் தொழிற்சாலை இல்லை என்பதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை, எங்கள் இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படல் வேண்டும், சுற்றுச்சூழல் கெட்டுவிடக் கூடாது. எங்கள் மனிதவளம் எங்கள் பொருளாதாரத்தை வலுப்படுத்தும். எனவே சூழலைக் கெடுக்கும் எந்த



இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் தனி ஆளாக ஒரு பிரம்மை பிடித்த சித்தனைப் போல தமிழகம் முழுதும் அலைந்து திரிந்து இன்று ஒரு பெருங்கூட்டத்தையே தயார் செய்து விட்டார், இயற்கை விவசாயத்திற்காக. எந்தப் பல்கலைக் கழகமும் செய்ய முடியாத பணியை ஒரு தனிமனிதராக அவரால் செய்ய முடிந்தது. கடப்பாட்டுடன் ஒரு கருத்தியலை முன்னெடுக்க நமக்கு ஒரு துணிவும், பார்வையும், இருக்க வேண்டும். அது இருந்தால் மாற்றங்கள் இன்று வரவில்லை என்றாலும் என்றாவது ஒரு நாள் வரும். அப்படித்தான் மானுட வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

நிகழ்வுக்கும் எங்கள் மாநிலத்தில் இடமில்லை" என்று பிரகடனப்படுத்துகிறது.

தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டம் முத்துக்காபட்டி ஒரு கிராமப் பஞ்சாயத்து. தங்கள் ஊரில் மலையை உடைத்து சாலைகள் அமைக்கத் தேவையான நீலக் கற்களை உருவாக்கும் குவாரியை மூட வேண்டும் என்று கிராமசபையில் தீர்மானம் போடுகிறது. அடுத்து அந்த ஊரில் ஆழ்குழாய்க் கிணறு உருவாக்கி தண்ணீர் எடுத்து வணிகம் செய்கிற ஒரு வணிக நிறுவனத்துக்கு தண்ணீர் எடுக்க தடை விதிக்கிறது கிராமசபை. கிராமத்தில் உருவாகின்ற குப்பைகளை தரம்பிரித்து மக்கும் குப்பையைப் போட்டு குழிகளை மூடுகிறது அந்தப் பஞ்சாயத்து. பொதுமக்களிடம் கடன் வாங்கி, நூறு நாள் வேலையாட்களையும் வைத்து, மலையடிவாரத்தில் தண்ணீரை தேக்க வழிவகை செய்து அந்தக் கிராமத்தில் உள்ள கிணறுகளையெல்லாம் தண்ணீர் மட்டம் உயர வழி செய்கிறது அந்தப் பஞ்சாயத்து.

மேற்கூறிய உதாரணங்கள் அனைத்தும் மக்களைக் காக்க அந்தந்த நாடுகள், மாநிலங்கள், உள்ளாட்சிகள் மக்களின் மேல் உள்ள நம்பிக்கையால் எடுத்த முடிவுகளை விளக்கினேன். ஆனால் உலகில் நிகழ்ந்து வரும் பல நிகழ்வுகள் பல அடிப்படைக் கேள்விகளை உருவாக்கியிருக்கின்றன.

இன்று உலகில் பொருள் உற்பத்தி செய்வதும், விற்பதும், லாபம் ஈட்டுவதும் தான் நாட்டில் முக்கியச் செயல்பாடான நிலையில் லாபம் எதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது என்பதற்கு இதுவரை எந்த வரையறையும் கிடையாது. அதை எந்த நிறுவனமும் அமைப்பும் ஒழுங்குபடுத்தவில்லை. அதேபோல் மேம்பாட்டுச் செயல்பாடுகளுக்கு இயற்கை வளங்கள் பயன்படுத்தும்போது, மணல், சல்லி, தண்ணீர் போன்ற இயற்கை வளங்களும், தாதுக்களும் எந்த அடிப்படையில் இவைகளுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

பூமிக்கு அடியில் ஆழ்குழாய் கிணறு உருவாக்கி தண்ணீரை எடுக்கும் ஒரு நிறுவனம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு விலை நிர்ணயம் செய்கிறது. அந்த நிறுவனம் தண்ணீரை பூமிக்குள்ளிருந்து எடுப்பதை இலவசமாகக் கொள்கிறது, அது விற்பனை செய்கின்றபோது 80% லாபம் வைத்து விற்கிறது. இந்தக் கம்பெனி எடுத்த தண்ணீர் யாருடையது, அதற்கு ஏன் விலை இல்லை? அந்தக் கம்பெனி விற்கும்போது 80% லாபம் வைத்து விற்கிறது. அதை யார் முறைப்படுத்துவது, எவ்வளவு லாபம் ஈட்டலாம் என்பதற்கு ஏன் உச்ச வரம்பு இல்லை.

அடுத்து ஒரு வணிக நிறுவனத்தில் தலைமை அதிகாரியாக ஒருவர் பணியாற்றுகிறார், அவருக்கு அந்தக் கம்பெனி ஆண்டுக்கு 40 கோடி ரூபாய் சம்பளமாகத் தருகிறது. அந்தச் சம்பளம் எதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது. அதற்கு அளவே கிடையாதா? லாபம் ஈட்டிக் கொடுத்ததற்கு சன்மானமா அல்லது உழைப்பிற்குக் கூலியா? அவர் லாபம் ஈட்ட சிந்தித்து தன் அறிவினை பயன்படுத்தியிருக்கிறார், அதற்கான கூலிதான் 40 கோடி என்றால், மூளை செயல்பாட்டிறகு இவ்வளவு தொகை கொடுக்கப்படும்போது ஏன் உடல் உழைப்பிற்கு எந்த மரியாதையும் இல்லை. உடல் உழைப்பைவிட மூளை உழைப்பு என்பது எப்படி உயர்ந்தது, உடல் உழைப்பு ஏன் தாழ்ந்ததாகக் கருதப்படுகிறது. மூளை உழைப்பு மேலானது என்று யார் கூறியது. விவசாய வேலையை ஆற்றலற்ற திறனற்ற (Unskilled) செயல் என்று யார் கூறியது. விவசாய வேலைகளை உழுவது, நாற்று விடுவது, நடவு செய்வது, மருந்தடிப்பது, பரம்படிப்பது, கதிர் அறுப்பது இவை அனைத்தும் செய்ய திறன் தேவை இல்லையா? அப்படி என்றால் யார் வேண்டுமானாலும் செய்யலாமல்லவா? அப்படிச் செய்ய முடியுமா? இது போன்ற எண்ணற்ற கேள்விகளுக்கு இன்றைய நுகர்வு மயக்க உலகத்தில் பதில் இல்லை. இவை பற்றிய விவாதம் ஒன்று இன்று தேவைப்படுகிறது. உலகில் நடைபெற்ற அவ்வளவு மாற்றங்களுக்கும் எது அடிப்படை என்றால் ஒரு கருத்தியல்தான். அதை விவாதித்து பெரும்பான்மை மக்களின் சிந்தனைக்குள் கொண்டு வந்துவிட்டால் அந்தச் சிந்தனை தீர்வினைக் கொண்டு வந்து விடும்.

பலர் என்னிடம் கேட்பார்கள், எழுதி என்ன ஆகப்போகிறது, உலகம் இங்கு தறிகெட்டு ஓடிக் கொண்டிருக்கிறது. நீங்கள் எங்கோ ஒரு மூலையிலிருந்து எதையோ எழுதுகின்றீர்கள். உங்கள் முழக்கம் யார் காதுகளில் ஏற வேண்டுமோ அவர்கள் காதுகளுக்கு ஏறப்போவது கிடையாது. இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் தனி ஆளாக ஒரு பிரம்மை பிடித்த சித்தனைப் போல தமிழகம் முழுதும் அலைந்து திரிந்து இன்று ஒரு பெருங்கூட்டத்தையே தயார் செய்து விட்டார், இயற்கை விவசாயத்திற்காக. எந்தப் பல்கலைக் கழகமும் செய்ய முடியாத பணியை ஓர் தனிமனிதராக அவரால் செய்ய முடிந்தது. கடப்பாட்டுடன் ஒரு கருத்தியலை முன்னெடுக்க நமக்கு ஒரு துணிவும், பார்வையும், இருக்க வேண்டும். அது இருந்தால் மாற்றங்கள் இன்று வரவில்லை என்றாலும் என்றாவது ஒரு நாள் வரும். அப்படித்தான் மானுட வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது. நான் அடிக்கடி ஒரு உதாரணத்தைக் காட்டுவேன். வால்மார்ட் ஜெர்மெனிக்குச் சென்றது. வால்மார்ட்டை எதிர்த்தவர்கள் மக்களிடம் ஒன்றை வேண்டினர். வால்மார்ட்டை புறக்கணியுங்கள் என்று, விளைவு வால்மார்ட் மூட்டை கட்டிச் சென்றுவிட்டது.

எதையும் மாற்றும் சக்தி மனித சமுதாயத்திற்கு உண்டு. அரசாங்கம் மாற வேண்டும், அரசியல் மாற வேண்டும், அதிகாரிகள் மாற வேண்டும் என்று பேசும் நாம் நம்மை மாற்றிக் கொண்டால், அவர்கள் அனைவரும் மாறுவார்கள். எனவே நாம் மாற முயற்சிப்போம் மாற்றம் நம்மிடமிருந்து தொடங்கட்டும். அதைச் சாதிக்க மாற்றுமுறை வாழ்க்கைக்கு நாம் தயாராக வேண்டும்.

கட்டுரையாளர்: அரசியல் அறிவியல் பேராசிரியர் (பணிநிறைவு)

முனைவர் ம.திருமலை



மதுரைக்காஞ்சி

நகர்மயமாதலின் பனுவல்

மனித இனம் தோன்றி சுமார் பத்து லட்சம் ஆண்டுகள் ஆகின்றன என்று பொதுவாகக் கூறுவர். அண்மைக் காலத்து ஆய்வுகள் 15 லட்சம் ஆண்டுகள் என்கின்றன. இதில் பல நூறாண்டுகள் மனிதன் விலங்குகளுடன் போட்டியிட்டு வாழ்ந்து வந்தான். விலங்குகளுக்கு இருக்கும் உடல் வலிமை, உறுப்புகளின் வலிமை முதலிவற்றுடன் ஒப்பிடும் போது மனிதன் பலவீனமானவன் தான். ஆனால் இயற்கை கொடுத்த வசதிகளின் காரணமாக விலங்குகள் தங்களைப் பாதுகாத்துக் கொண்டன. சில விலங்குகளுக்குரிய கம்பளி போன்ற தோல் பகுதியின் உதவியைக் கொண்டு விலங்குகள் குளிரிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டன. இதேபோல் வலிமை மிகு முன்கால்கள், கால் நகங்கள், கோரைப் பற்கள், தாவிச் செல்வதற்கேற்ற கிடைமட்ட உடல்வாகு போன்றவை விலங்குகளுக்குப் பெரிதும் உதவின ; இவற்றின் உதவியால் விலங்குகள் தங்களின் வாழ்வின் இருப்பை உறுதி செய்து கொண்டன. எனவே விலங்குகள் இயற்கைச் சூழலுடன் தங்களை இணைத்துக் கொண்டு வாழ்வைத் தொடர்ந்தன.

மனிதனுக்கு உடலமைப்பில் விலங்குகளுக்குரிய வசதிகள் இல்லை. எனவே மனிதன் தனது மூளையின் உதவியால் காலத்திற்கேற்றவாறு சுற்றுச்சூழலுடன் தன்னைத் தகவமைத்துக் கொண்டு வாழ்ந்தான். காலப் போக்கில் இயற்கையையும் சுற்றுச் சூழலையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கினான் என்று தேவி பிரசாத் சட்டோபாத்யாயா கூறுகிறார் (2019,ப.23). மனிதனின் கையும் மூளையும் இதனைச் சாத்தியமாக்கின; மனிதன் தனக்குத் தேவையான கருவிகளைக் கண்டுபிடித்து உற்பத்தி செய்து பயன்படுத்தினான். “கையும் மூளையும் இணையான வளர்ச்சியைப் பெற்ற போது கருவிகளைப் பயன்படுத்துவது, பேச்சு ஆகிய மனிதனின் இரண்டு அடிப்படையான பண்புகளுக்கான உடல் கூறியல் மூலத்தைக் கண்டறிய வேண்டியுள்ளது” என்று தேவி பிரசாத் சட்டோபாத்யாயா கூறுகிறார். எங்கல்ஸ், “சுருக்கமாகக் குறிப்பிட்டால் விலங்குகள் வெளியுலகைப் பயன்படுத்த மட்டுமே செய்கின்றன... மனிதன் தனக்குச் சேவை செய்யும் வகையில் அதனை மாற்றியமைக்கிறான். அதன் எஜமானனாகத் திகழ்கிறான்” என்று குறிப்பிடுவதையும் இங்கு ஒப்புநோக்கலாம். ஆதி மனிதன் காலப்போக்கில் இயற்கை வழங்கிய உணவுகளை ஏற்பதை விடுத்துத் தனக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்யும் நிலைக்கு மாறினான்.

உணவுச் சேகரிப்பிலிருந்து உணவுத் தயாரிப்பு அல்லது உற்பத்தி நிலைக்கு மனிதன் மாறியது மிகமிக இன்றியமையாத வளர்ச்சிக் காலகட்டத்தைக் குறிக்கிறது. உணவை உற்பத்தி செய்வதற்குத் தேவையான கருவிகளை மனிதன் உருவாக்கினான். இக்கருவிகளை உருவாக்குபவன் ‘கைவினைஞன்’ என்றழைக்கப்பட்டான். உணவு உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் கருவிகள் தயாரிப்புப் பணியைச் செய்யவியலாது; கருவிகளைஉற்பத்தி செய்யும் கைவினைஞனால் உற்பத்திப் பணியில் ஈடுபடவியலாது. இந்நிலையில் கருவி உற்பத்தி

செய்யும் பிரிவினர் தனியே பகுத்து ஓரிடத்தில் வைக்கப்பட்டனர். கருவி உற்பத்தியாளர்கள், அரசுரிமையில் இணைந்தவர்கள், இவர்களை நெருங்கி வாழும் பிறர் அனைவரும் ஓரிடத்தில் வாழ்ந்தனர். இங்கு உற்பத்தி செய்யப்பட்டு உருவாக்கப்படும் பொருள்கள் பல்வேறிடங்களில் வாழ்பவர்களுக்குப் பகிர்ந்து அனுப்பப்பட்டன. இங்கு வணிகம் தோன்றுகிறது. இவ்வாறு அனைத்து வசதிகளும் கிடைக்கக்கூடிய இடமாக நகரமாக மாறியது. நகரத்தில் வாழ்பவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை அங்கேயே உற்பத்தி செய்யவியலாது; எனவே அவை நகரங்களுக்கு வெளியிலிருந்துதான் கொண்டு வரப்படவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தக் கால கட்டத்திலிருந்துதான் உற்பத்தியும் நுகர்தலும் தனித்தனிப் பிரிவினர்க்கு உரிய பணிகளாக மாறின.

இயற்கை வழங்கியதை உணவாக உட்கொண்டு உணவுச் சேகரிப்பிலிருந்த மனிதன் உணவை உற்பத்தி செய்வதை அறிந்தது ஒரு தற்செயல் நிகழ்வு என்பதாக வரலாற்றிஞர் டி.டி. கோசாம்பி இந்திய வரலாறு என்ற நூலில் குறிப்பிடுகின்றார்; உண்ணும் போது சிதறிக் கீழே விழுந்த தானியங்கள் சில நாட்களில் முளைத்து வளர்ந்ததும் அவற்றில் ஒரு தானியத்திற்குப் பதிலாகப் பலநூறு தானியங்கள் இருந்ததையும் கண்ட மனிதன் விதைகளை விதைக்கவும் அதிக தானியங்களைப் பெறவும் கற்றுக் கொண்டான் என்பது டி.டி.கோசாம்பியின் கருத்து. இவ்வாறு கிடைத்த உபரி விளைச்சல் மற்றவர்களுக்கும் வழங்கப்பட்டன; வழங்கப்பட்ட பின்னரும் மிகுந்திருந்தவை பிற நிலங்களில் வாழ்பவர்களின் பயன்பாட்டிற்கும் பண்டமாற்றமாக வழங்கப்படுகின்றன. இதனால் வணிகம் தோன்றுகிறது. மனித இன வரலாற்றில் இது மிக இன்றியமையாத காலமாகும்.

மனித இனம் வளர்ந்த காலங்கள்

மனித இனத்தின் வளர்ச்சிக் காலகட்டங்களை

- வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (15லட்சம் ஆண்டுகள்)
- பழங்கற்காலம் (*Palaeolithic Age*)
- இடைக்கற்காலம் (*Microlythic / Mesolithic Age*)
- புதிய கற்காலம் (*New lithic Age*)
- பெருங்கற்காலம் (*Megalithic Age*)
- இரும்புக்காலம் (*Iron Age*)

என்று வரலாற்றாசிரியர்கள் பொதுவாக வரையறை செய்து கூறுகின்றனர். இக்கால கட்டங்களின் தனித்த அடையாளக் கூறுகள் சிலவற்றைக் காணலாம்.

பழங்கற்காலமும் இடைக் கற்காலமும்

பழங்கற்கால மனிதன் கற்களைக் கூர்மைப் படுத்தி விலங்குகளை வேட்டையாடி உண்பவனாக இருந்தான். இந்தக் காலத்து மனிதனின் முதன்மைத் தொழில் வேட்டையாடுவதன் மூலம் உணவுச் சேகரிப்பில் ஈடுபடுவது மட்டுமே. கரடு முரடான கற்களைச் சிறிது கூர்மைப்படுத்திக் கைக் கோடாரிகளை இவன் தயார் செய்து பயன்படுத்தி வந்தான்.

பழங்கற்கால மனிதன் மரப்பொந்துகள், குகைகளில் வாழ்ந்து வந்ததைப் போலவே இடைக்கற்கால மனிதனும் வாழ்ந்து வந்தான். இந்தக் காலத்தின் மனிதன் கற்கருவிகளை மிகவும் நுண்மைப்படுத்திக் கையாண்டான். கூர்மையான வடிவமுடைய சிறிய ஆயுதங்களை நீண்ட குச்சிகளில் பொருத்தி அவற்றைக் கொண்டு வேட்டையாடுதல் நடத்தினான்; பழங்கற்கால மனிதனை விடச் சிறிதளவு அறிவாற்றலுடனும் பாதுகாப்புடனும் இவனது வாழ்க்கை அமைந்திருந்தது என்று கூறலாம். பாறைகளில் ஓவியங்கள் வரையும் முறை இடைக் கற்காலத்தில் நடைமுறைக்கு வந்தது; இது ஒருவகையான கருத்துப் புலப்பாட்டு முறை என்று கூறலாம். இவர்கள் கடற்கரைப் பகுதிகள் பரவி வரை சிறிய நேர்த்தியான கருவிகளைக் கொண்டு உணவு சேகரித்தனர் என்று வரலாற்றாசிரியர் வே.தி. செல்லம் குறிப்பிடுகின்றார் (2003,ப.58). இடைக் கற்கால மனிதர்கள் காலத்திலேயே உணவு சேகரித்தலுக்காக உணவு தானியம் உற்பத்தியாகும் இடங்களில் வாழ்ந்தனர்.

புதிய கற்காலம்

இடைக்கற்காலத்தின்ன பின்னர் தோன்றிய புதிய கற்காலத்தில் மனிதனின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது. புதிய கற்கால மனிதன் இயற்கையைக் கட்டுப்படுத்தி தனது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டான். வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, காடுகளை முறைப்படுத்திப் பயன்படுத்துதல் என்றவாறு நாகரீக மேம்பாட்டை நோக்கிப் பயணம் செய்தான் புதிய கற்கால மனிதன். மக்கள் தொகை மிகுதியாக வளரத் தலைப்பட்ட காலத்தில் தேவையான உணவைப் பெறும் முறைகளில் மாற்றம் தேவைப்பட்டது. எனவே வேட்டையாடுதலுடன் உற்பத்தியும் தொடங்கியது. இந்தக் காலக்கட்டத்தினை மனித இனம் அடைந்த போது புதிய கற்காலம் (*Neo Lithic Age*) தொடங்கி விட்டது. இதுவரை நாடோடிகளாக அலைந்து கொண்டிருந்த மனிதர்கள் இப்போது ஓரிடத்தில் நிலைத்துத் தங்குபவர்களாக (*Shelter*) மாறினர்; இவர்களே உணவு உற்பத்தியாளர்களாக மாறினர் (*Food Producer*). வேட்டைக்கும் தொழிலுக்கும் தேவையான கருவிகளைச் செய்தனர். இந்தக் காலக் கட்டத்தில் தான் குடும்பங்கள் இனக்குழுக்களாக மாறின; இவர்களுக்குக் குலக் குறிகள் (*Totemic symbols*) தோன்றின.

பெருங்கற்காலம்

பெருங்கற்காலத்தின் தோற்றத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் நகர நாகரிகம் தோன்றியது. இதற்கு முந்தைய காலத்தில் சிந்து சமவெளி நகர நாகரிகம் தோன்றியது. தமிழகத்தில் வணிகம் செழித்து வளர்ந்தது. பெருங்கற்காலத்தின் இறுதிப் பகுதியில் தொகை நூல்கள் தோற்றம் பெற்றன. இரும்புக் கருவிகளின்

பயன், வேளாண்மை வளர்ச்சி, அதன் தொடர் விளைவான பண்டமாற்று வணிகம், கடல் வணிகம் தொடர்பான குறிப்புக்கள் சங்க இலக்கியங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் இச்செய்திகள் இடம் பெறுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பண்டமாற்றமும் கடல் வணிகமும் செழித்திருந்தன என்பதை ஊகித்தறியலாம். இப்போது நடந்து வருகின்ற பல்வேறு அகழ்வாய்வுகளில் கிடைக்கும் தரவுகள் பண்டைத் தமிழர்கள் நாகரிகத்தில் முன்னேற்றமடைந்திருந்த செய்தியை உறுதிப்படுத்துகின்றன. தொல்லியல் அறிஞர் கா. ராஜன், "இப்பெருங் கற்படைக்காலம் தமிழகத்தில் கி.மு.1000 முதல் கி.பி. முதலாம் நூற்றாண்டு வரை நிலைத்திருந்தது" என்று குறிப்பிடுகின்றார் *(கா. ராஜன், 2004, ப.11)*. சங்க இலக்கியங்கள் கி.மு.500 முதல் கி.பி.200 வரையுள்ள பரந்துபட்ட காலத்தில் தோன்றியவை என்பது பெரும்பாலும் அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட கருத்தாகும். எனவே சங்க இலக்கியங்களில் புதிய கற்காலம், பெருங்கற்காலம், இரும்புக்காலம் முதலான பல்வேறு வரலாற்றுக் கால கட்டங்களின் பண்பாடு, நாகரிகம் தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன.

சங்க இலக்கியங்களுள் ஒன்றான மதுரைக் காஞ்சியின் உள்ளடக்கத்தில் பல்வேறு வரலாற்றுக் காலகட்டங்களின் சமூக வாழ்க்கைக் கூறுகள் பதிவாகி இருக்கின்றன என்பது இனிமேல் வரும் பகுதிகளில் விவரிக்கப்படவுள்ளது. அதற்கு ஒரு அடித்தளமாகவே காலகட்டங்களின் பகுப்பு முறையும் அவற்றின் தனித்தன்மைகளும் இங்குச் சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டன; வரலாற்றுக் காலகட்டங்களின் நிலை குறித்த விரிவான ஆய்வு இப்பகுதியில் மேற்கொள்ளப்படவில்லை.

நகர உருவாக்கம்

புதிய கற்கால மனிதர்களுள் ஒரு பிரிவினர் - கருவிகள் இயற்றுவோர் - இடம் பெயர்ந்து வேறிடத்தில் குழுமினர். இங்கு நகரம் உருவாகிறது. இரும்பு தங்கம் போன்றவற்றை உருக்குதல் நுண்ணிய மணிகளில் துளையிடுதல், வளையல்களைத் தயாரித்தல், படைக்கருவிகள் செய்தல் முதலான பல தொழில்களும் புதிய கற்காலம் பெருங்கற்காலம் ஆகிய காலங்களில் நடைபெற்றன. இவற்றைப் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. தேவி பிரசாத் சட்டோபாத்யாயா அவர்களின் கருத்துப்படி இத்தொழில்கள் நகரங்களிலும் நகரங்களை ஒட்டிய புறநகர்ப்பகுதிகளிலும் நடைபெற்றன. அண்மைக் கால அகழ் வாராய்ச்சி முடிவுகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன. நகரங்களில் வாழ்ந்தவர்களைப் பராமரிப்பதற்கான உணவுப் பொருட்களைக் கிராமப் புறப் பகுதிகளிலிருந்தே பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனை, "முழு நேர நிபுணர்களான கைவினைஞர்கள் தொடக்க நிலையிலுள்ள நகர மையங்களுக்குக் கொண்டு வரப்பட்டுக் குடியமர்த்தப்பட்டது குறித்து நமது உடனடி விவாதம் தான் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும். முன்பு போல அவர்கள் குடிபெயர்ந்து கொண்டிருக்கும் கைவினைஞர்கள் அல்ல. ஓரிடத்தில் நிலைத்து வாழ்ந்த வர்களுக்குத் தேவையான மூலப்பொருள்களை தர வேண்டிய தேவை ஏற்பட்டது . அவர்களைப் பராமரிப்பதற்குத் தேவையான உணவுப் பொருள்களையும் நேரடியாக உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்று அவர்களுக்கு அளிக்க வேண்டியிருந்தது. உணவும் நேரடி உற்பத்தியாளர்களிடமிருந்து தொடக்க நிலையுள்ள வளமும் நகர மையங்களுக்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டியது நகரங்களை உருவாக்குவதற்கான அவசியமான முன்நிபந்தனையாகும்" என்று தேவி பிரசாத் சட்டோபாத்யாயா கூறுகிறார் *(2019, ப.25)*. இதனை நகர் மயப்புரட்சி *(Urban Revolution)* என்று அவர் கார்டன் சைல்ட் என்பாரை மேற்கோள் காட்டிக் குறிப்பிடுகிறார் *(மேலது., ப.35)*

பேரரசு, நகர்மயமாதலின் அடிப்படைகள்

நகர மக்களைப் பராமரிப்பதற்குத் தேவையான மூலப் பொருள்களைப் பின்வரும் மூன்று வழிமுறைகளைப் பின்பற்றியே பெற்றனர் ; அவை வருமாறு:

- நேரடிக் கொள்ளை
- பண்டமாற்று *(Exchange)*
- இசைய வைத்தல் *(Convincing)*

இதில் "இசையவைத்தல்" என்பது கிராமப் புறங்களில் உற்பத்தி செய்பவன் மனமுவந்து, தனது உற்பத்தியின் உபரியை *(Surplus)* நகர்ப்புறத்து மாந்தர்களுக்குத் தருதல்; இதற்குச் சித்தாந்த அடிப்படையிலான மன மாற்றத்தினை உற்பத்தியாளனிடம் ஏற்படுத்தும் பணி நகர்ப்புற மனிதனுக்கு ஏற்பட்டது. இது பற்றிமேலும் விரிவாக எழுத இங்கு இடமில்லை. வேந்தர்களைப் பற்றிய புறப்பாடல்கள், மதுரைக் காஞ்சி போன்ற பல இலக்கியங்களில் மேலே குறிப்பிடப்பட்ட மூன்று கூறுகளுக்கான தரவுகள் கிடைக்கின்றன; அதனால் இம்மூன்று கூறுகள் இங்குக் குறிப்பிடப்பட்டன.

நகர்மயமாதலின் பிறிதொரு இன்றியமையாத கூறு, கடவுள், அரசன், அரசு ஆகியன பற்றிய உயர்ந்த கருத்துப் படிமங்களை *(Image)*, ஏற்படுத்துதல்; இதில் கலைகள், இலக்கியம், மந்திரம், சடங்குகள் போல்வன இன்றியமையாத பங்கினை வகிக்கின்றன. மன்னன் சாமான்ய மனிதர்களுள் ஒருவனாகவும் தலைமை தாங்கியவனாகவும் திணைக்குடிகளின் வாழ்வியலில் இடம் பெற்றிருந்தான்; நகர்மயப் புரட்சி தோன்றிய பின்னர் மன்னன் மீ மனிதனாகச் *(Super man)* சித்திரிக்கப்படுகின்றான்; அவன் மக்களுக்கு உயிர் போன்றவனாக ஆகி விடுகிறான். இக்கருத்தியலுக்கான சான்றுகளும் சங்க இலக்கியங்களில் மிகுதியாகக் காணக்கிடைக்கின்றன. நகர் மயமாதலின் கூறுகளை 'மதுரை காஞ்சி' சித்திரிக்கும் முறை குறித்து இனி விளக்கலாம்.

வளம் மிகுந்த நாடும் பேரரசும்

பெருங்கற்காலப் பகுதியில் பேரரசுகள் தோன்றிய போது, வளமான நில அமைப்பினைக் கொண்டதாக நாடு திகழ்ந்தது. சிலப்பதிகாரம் உள்ளிட்ட

காப்பியங்களிலும் பத்துப் பாட்டில் வேந்தர்களைப் பற்றிய பாடல்களிலும் நாட்டு வளம் குறித்த புனைவு இன்றிமையாத இடத்தினைப் பெற்றது. மதுரைக் காஞ்சியில் பாண்டிய நாட்டின் வளம் முதற்பகுதியிலேயே அமைந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. அப்பகுதி,

"பகற் செய்யும் செஞ் ஞாயிறும்
இரவுச் செய்யும் வெண்திங்களும்
மைதீர்ந்து கிளர்ந்து விளங்க
மழை தொழில் உதவ, மாதிரம் கொழுக்க,
தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய
நிலனும் மரனும் பயன் எதிர்பு நந்த
மதுரைக் காஞ்சி, 7-12

என்றமைகிறது. இதில் மழை, தவறாது பெய்தலால் விளைச்சல் மிகுதியாக இருக்கிறது என்ற செய்தி குறிக்கப்படுகிறது. "தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய" என்ற அடி மிகுதியான விளைச்சலைக் (*Surplus*) குறிக்கிறது. இவ்வாறு மழையானது குறித்த காலத்தில் பெய்து பயிர்களைக் காத்தது எனும் போது மேலாண்மையின் சிறப்பான நிலை உணர்த்தப்பட்டது; வேளாண்மை சிறந்து "உபரி" தானியங்கள் கிடைத்தால் தான் நகரத்திற்குள் வாழ்பவர்கள் நிம்மதியாகத் தங்கள் கடமைகளைச் செய்ய முடியும். பாண்டிய நாட்டில் குறிப்பாக மதுரைப் பகுதியில் இயற்கை வளம் சிறந்து விளங்கி நகர வாழ்க்கைக்கு உறுதுணை புரிந்தது என்பது இங்கு உணர்த்தப்படும் செய்தி. இதே முறையில் இயற்கை வளம் சிறந்திருந்ததைப் பற்றிய குறிப்புக்கள் மதுரைக் காஞ்சியின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன.

நகரமைப்பு

நகர்மயப் புரட்சியில் நகரத்தின் அமைப்பு குறிப்பிடத்தக்கதாகும். ஒரு பேரரசின் தலைநகரமானது நாட்டின் நடுவில் அமைந்திருப்பதே நல்லது; அதனால் தலைநகரத்தின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்ற கருத்தினைச் சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம் குறிப்பிடுகிறது. பாண்டிய நாட்டின் தலைநகரமான மதுரையானது நாட்டின் நடுப்பகுதியில் அமைந்திருந்தது. இதனை,

"பாடல் சான்ற நன்னாட்டு நடுவண்" - மதுரை காஞ்சி, 331.

என்ற அடிகளில் புலவர் குறிப்பிடுகின்றார். மனித நாகரிகத்தின் பயணம் குறித்து விரிவான ஆய்வைச் செய்திருக்கின்ற முனைவர் ஆர்.பால கிருஷ்ணன் "சங்க இலக்கியங்களைத் தன்னிகரற்ற நகர்ப்புற இலக்கியங்கள் என்லாம். இந்தியாவின் வேறு எம்மொழி இலக்கியத்திலும் நகரங்களைக் குறித்த இவ்வளவு நுணுக்கமான, அதே சமயம் மிகுதியான, நம்பத்தகுந்த தரவுகளைக் காணவியலாது" என்று குறிப்பிடுவது இங்கு எண்ணிப் பார்க்கத்தக்கது (*R. Balakrishnan, 2019, p.85*). சங்க இலக்கியங்களுள் மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை, பெரும் பாணாற்றுப்படை போன்றவையும் சங்கம் மருவிய கால இலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவையும் நகர மக்களின் வாழ்வைக் காட்டுவதுடன் மிக இன்றியமையாத சில நகரங்களையும் குறிப்பிடுகின்றன (*Ibid., P.85*).

மதுரைக் காஞ்சியில் குறிப்பிடப்படும் "நற்கொற்கையோர்" (அடி:138) என்ற சொல்லை எடுத்துக்காட்டி, நகரங்கள் மக்களின் பண்புகளை எடுத்துக்காட்டும் ஆவணங்களாகத் திகழ்ந்தன என்றும் முனைவர் பாலகிருஷ்ணன் குறிப்பிடுகின்றார் (*Ibid., P.85*). அந்த அளவிற்கு நகரங்கள் மக்கள் வாழ்வுடன் பின்னிப் பிணைந்து இருந்தன என்று மிக நுட்பமான விளக்கத்தினை தருகிறார்.

பண்டைத் தமிழகத்தில் நகரங்கள் பெற்றிருந்த இன்றியமை யாமையை மேலும் விளக்கும் முனைவர் பாலகிருஷ்ணன், சங்க இலக்கியங்களில் மகளிரின் அழகினை நகரங்களின் அழகுடன் ஒப்பிட்டுக் கூறும் மரபு இருந்ததை,

"தொண்டி அன்ன இவள் நலனே" (அகநானூறு, 10)

என்பதைப் போன்று அமையும் அடிகளைக் குறிப்பிட்டு விளக்குகிறார். நகரங்களை உருவாக்குவது பழந்தமிழர் நாகரிகத்தின் முக்கியமான கூறு என்பதை விளக்குகிறார்.

பண்டைத் தமிழக நகர அமைப்பு, நகர நாகரிகம் ஆகியனவற்றைச் சிந்து சமவெளி நகர நாகரிகத்துடன் இணைத்துக் கூறுகிறார் முனைவர் பாலகிருஷ்ணன். நகர் மயமாதல் புரட்சி தமிழகத்திலும் நிலவியது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக இந்தக் கருத்துக்கள் இங்கு பதிவு செய்யப் பெற்றன.

மதுரை நகரின் அமைப்பு

நகர உருவாக்கத்தில் அதன் அமைப்பு மிக இன்றியமையாததாகும். மதுரை நகரம் தாமரை போன்ற வடிவத்தினைக் கொண்டமைந்திருந்தது என்று பரிபாடல் கூறுகிறது. தாமரை மலரின் இதழ்கள் போல மதுரை நகரத்தின் தெருக்கள் வரிசைமுறையில் அமைந்திருந்தன என்று செய்தி பரிபாடலில் கிடைக்கிறது(பரிபாடல் திரட்டு,7). மதுரை நகரத்தின் தெருக்கள் மிக நீண்டனவாகவும் அகன்றனவாகவும் இருந்தன என்று மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது. "யாறு கிடந்தன்ன அகல் நெருந் தெருவில்" (மதுரைக் காஞ்சி, அடி:359) என்றும் "கண்டு தண்டாக் கட்கு இன்பத்து, உண்டு தண்டா மிகு வளத்தான், உயர்பூரிம விழுத் தெருவில்" (மதுரை காஞ்சி, 16-18) என்றும் தெருக்கள் குறிப்பிடப் படுகின்றன. தெருக்கள், அவற்றின் இருபுறமும் அமைந்த வீடுகள் போன்றன நாட்டின் வளத்தை எடுத்துக் காட்டுவனவாக அமைந்திருந்தன என்பது இவ்வடிகள் உணர்த்தும் உட்பொருள்.

மதுரை நகரத்தில் பல்வேறு தொழில்புரியும் மக்கள் தனித்தனிப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். பாணர்கள் நகரின் ஒரு பகுதியில் பரம்பரையாக வாழ்ந்து வந்தனர் (மதுரைக் காஞ்சி, அடி: 332-342). பல்வேறு தொழில்களைச் செய்யும் தொழிலாளர்கள், விலைமகளிர், சிறு வணிகர், செல்வர்கள் போன்றோர் தனித்தனியாக அவரவர்க்குரிய இடங்களில் வாழ்ந்து வந்தனர்.

அறங்கூறவையத்தின் உறுப்பினர்கள், அமைச்சர்களாகத் திகழ்ந்த காவிதி மாக்கள், நாற்பெருங்குழுவினர் போன்றோர் தனித்தனியாக

அவரவர்க்குரிய இடங்களில் வாழ்ந்தனர் (மதுரைக் காஞ்சி, அடி ; 489-510). இவர்கள் சாதாரண மக்களினின்றும் வேறுபட்டவர்; எனவே இவர்கள் அரசனுக்கு உற்ற துணைவர்களாகக் கோட்டையின் உட்புறத்தில் வாழ்த்திருந்திருப்பார்கள்.

பாதுகாப்பு

பெருங்கற்காலம், இரும்புக் காலம் முதலிய காலங்களில் போர்களும் நாட்டின் பாதுகாப்பும் மிக இன்றியமையாத இடத்தினைப் பெற்றிருந்தன. மதுரைக் காஞ்சியிலும் மதுரை நகரமானது மிகுந்த பாதுகாப்புடன் அகழியால் சூழப்பட்டு, கோட்டை அரணால் பாதுகாக்கப்பட்டு வந்ததைச் சித்திரிக்கிறது. இதனை,

“மண்ணுற ஆழ்ந்த மணிநீர்க் இடங்கின்
விண்ணுற ஓங்கிய பல்படைப் புரிசை
தொல் வலி நிலைஇய அணங்குடை நெடுநிலை”
மதுரைக் காஞ்சி, 351-353

என்ற மதுரைக் காஞ்சிப் பாடலடிகளால் உணரலாம். மிக ஆழமான அகழி, பல்வேறு போர்க்கருவிகள் பொருத்தப்பட்ட கோட்டை மதில், எவராலும் தகர்க்கவியலாத வலிமை மிக்க கதவுகள் கொண்டது மதுரையின் அரண் என்பது இப்பகுதி கூறும் செய்தியாகும்.

தெருக்கள்

நகர அமைப்பில் மிக இன்றியமையாத கூறு அதன் தெருக்களாகும். இன்றைய மதுரையானது மீனாட்சி - சொக்கநாதர் திருக்கோயிலை மையமாக வைத்து, அதனைச் சுற்றியமைந்த தெருக்களைக் கொண்டுள்ளது. கோயிலுக்குள் நான்கு திசைகளிலும் ஆடி வீதிகள், கோவிலின் வெளிப்புறத்தில் சித்திரை வீதிகள், ஆவணி வீதிகள், மாசி வீதிகள், வெளி வீதிகள் என்றவாறு இன்றைய மதுரையின் தெருக்களின் அமைப்புக் காணப்படுகிறது. தொன்மைக் காலத்தில் இவ்வமைப்பு இருந்தது என்பது தெளிவாக இல்லை. இத்தெருக்கள் வெவ்வேறு பெயர்களில் அன்று இருந்திருக்கலாம்.

மதுரை காஞ்சியில் தெருக்கள் மிகவும் அகன்றனவாக இருந்தன என்பதை மாங்குடி மருதனார்.

“சில் காற்று இசைக்கும் பல்புழை நல்கில்
யாறுகிடந்தன்ன அகல் நெடுந்தெருவில்”
மதுரைக் காஞ்சி, 358-359

என்று குறிப்பிடுகின்றார்.

பன்னாட்டு வணிகர்கள், வெளியூர் மக்கள், வேற்று நாட்டு மன்னர்கள் என்று பலரும் வந்து செல்லக்கூடிய இன்றியமையாமை நிறைந்த நகரம் மதுரை. எனவே அந்நகரத்தின் தெருக்கள் விண்ணுற ஓங்கிய பல்புரிசைகள் உடைய தெருக்கள் கொண்டதாக அமைந்திருக்கிறது. கட்டடங்கள் பயன்பாடு கருதிக் கட்டப்படுபவை என்பதால் மதுரை நகரக் கட்டடங்கள் பெரிதாகவும் வீதிகள் அகன்றனவாகவும் இருக்கின்றன. பூம்புகார், மதுரை போன்ற திட்டமிடப்பட்ட நகரங்களில் (Planned cities) இந்த ஏற்பாடு இருந்ததை நூற் சான்றுகளால் நன்கு அறியமுடிகிறது என்று படைப்பாசிரியர் நா.பார்த்தசாரதி குறிப்பிடுவதும் இங்கு உணரத்தக்கது (அரங்க. இராமலிங்கம், 2021, ப.216).

மன்னனைப் பற்றிய கருத்துருவடிவக் கட்டமைப்பு

நகரங்கள் உருவானதன் அடிப்படையே பேரரசின் தோற்றம் தான். பேரரசின் அடித்தளமாக முதுகெலும்பாக அமைபவன் மன்னனேயாவான். மன்னர்கள் தோன்றிய காலத்திற்கு முன்னர் சிற்றூர்த் தலைவர்கள், வேளிர்கள் இருந்தனர். வேளிர்கள் என்றழைக்கப்பட்ட இச்சிற்றூர்த் தலைவர்கள் மக்களுடன் இணைந்து நெருங்கி இருந்தனர். புலவர்களால் இத்தலைவர்கள் புகழ்ந்து பாடப்பட்ட போதும் அப்பாடல்களில் மிகையுணர்ச்சி, மிகைப்புகழ்ச்சிகள் இல்லை. உள்ளது புனைவனவாகவும் சிற்சில சமயங்களில் அறிவுரை பகர்வனவாகவும் மன்னர் - புலவர், மன்னர் - மக்கள் உறவுநிலைகள் திகழ்ந்தன. ஒரு சில சான்றுகளை மட்டுமே இங்குக் காணலாம். பேகன் என்ற குறுநில மன்னனைப் பாடிய கபிலர் பெருமான் அவனுக்கு அறிவுரை கூறும் போக்கிலேயே பல பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்களுள் புலவருக்கும் மன்னனுக்கும் இடையில் நிலவிய நெருங்கிய நட்புணர்வு புலப்படுகிறது.

அதியமான் என்ற மன்னனை நோக்கி ஔவையார் பாடிய பாடலில் மன்னன் என்ற அச்சவுணர்வு இன்றித் தாம் நட்புப் பூண்டதை, யானையுடன் குழந்தைகள் விளையாடும் விளையாட்டுடன் ஒப்பிட்டுப் பாடி மகிழ்கிறார். குழந்தைகள் தனது வெண்ணிறத் தந்தங்களைக் கழுவும் போது அமைதியாக நீரில் படுத்துக் கிடக்கும் யானையைப் போல,அதியமான் புலவர் முதலான கலைஞர்களுடன் நட்புக் கொள்கிறான். இப்பாடலில் குறுநில மன்னர்களுக்கும் மக்களுக்குமிடையே இருந்த நெருக்கமான (Intimacy) நட்புப் புலப்படுகிறது. இதே முறையில் சான்றுகள் பலவற்றைக் காட்டலாம்.

முன்னோர் பெருமைகளை இணைத்தல்

அரசனைப் பற்றிய கருத்துப் படிம உருவாக்கத்தின் இன்றியமையாத கூறுகளுள் அரசனின் முன்னோரின் பெருமைகளைப் புனைதல், கடவுளுக்கு நிகராக மன்னனை உயர்த்திப் பேசுதல், புராணக் கதைகளைப் புனைதல், வெற்றிகளைப் புனைந்து பாடுதல் போன்ற பல செயல்பாடுகள் இடம் பெறுகின்றன. கருத்துக்களை உருவாக்குதல், மக்களின் மனத்தில் அவற்றை நிலைநிறுத்துதல் போன்ற செயல்பாடுகள் பேரரசுக் கட்டமைப்பில் இது மிக இன்றியமையாத பணிகளாக இருந்தன. இப் பணிகளைப் புலவர்களும் கலைஞர்களும் மேற்கொண்டனர்.

மதுரைக் காஞ்சியின் தலைவனான தலையாலங்கனாத்துக் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் பெருமையுடைய முன்னோர்களின் மரபில் தோன்றியவன் என்பதை

“நல்ஊழி அடிபடர
பல்வெள்ளம் மீக்கூற
உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக”
மதுரைக் காஞ்சி. 21-23

என்று மாங்குடி மருதனார் புனைகிறார். ஒரு மனிதன் தொன்மை மிக்க உயர்ந்த குடியில் பிறந்தவன் என்பதே அவனைக் குறித்த சிறந்த மனப்பதிவை மற்றவர்களிடம் ஏற்படுத்தும். அதனால் மன்னனின் குடிப் பெருமை சிறப்பித்துக் கூறப்படும். சங்க இலக்கியங்களில் வேளிர், திணைக் குடிகளின் தலைவர்கள் குறித்த புனைவுகளில் இவ்வாறு முன்னோர் பெருமை பேசும் முறையியலைக் காணவியலாது; வேந்தர்கள் மட்டுமே முன்னோர்களின் பெருமைகளுடன் இணைத்துப் பேசப்படுவார்கள்.

இறைவனுடன் இணைத்தல்: மீமானுடமாக்கல்

வேந்தனை இறைவனுடன் தொடர்புடைய கதைகளுடன் இணைப்பதன் மூலம் அவனுக்கு மிக உயர்ந்த இடத்தை உருவாக்குவதும் மதுரை காஞ்சியில் இடம்பெறுகின்றது. தென்னவனான இராவணன் தமிழகத்து மக்களைத் துன்புறுத்தாமல் தடுத்த முனியான அகத்தியனின் தம்பியாகக் கருதப்பட்டவன் நிலத்தரு திருவின் பாண்டியன்; அவனது கொடிவழியில் தோன்றியவன் என்று தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனை மாங்குடி மருதனார் பாராட்டுகிறார் (மதுரைக் காஞ்சி, 40-42). கடல் எழுந்து வந்த போது அதனையடக்கி நிலத்தைக் காத்தவன் என்ற பெருமைக் குரியவனான வடிம்பலம்ப நின்ற பாண்டியனின் வழித்தோன்றல் என்றவாறு மதுரைக் காஞ்சித் தலைவன் புகழ் பாடுவதையும் “ வேந்தர் கருத்துப் படிம உருவாக்கம்” என்றே புரிந்து கொள்ள வேண்டும். மன்னர்களைச் சந்திரகுலம், சூரியகுலம் என்றவாறு பகுத்துக் கூறுவதும் இந்த முறையியலின் பாற்பட்டதுதான் .

போர் வெற்றிகளும் கருத்துப்படிம உருவாக்கமும்

வேந்தர் கருத்துப் படிம வளர்ச்சியில் பயன்பட்ட பிறிதொரு கூறு அவனது போர் வெற்றிகள் குறித்த புனைவுகளாகும். மதுரைக் காஞ்சியில் தலையாலங் கானத்துச் செரு வென்ற பாண்டிய மன்னன் பல மன்னர்களை வென்று மன்னர்களுக்கெல்லாம் மன்னனாகத் திகழ்ந்தான் என்பதைக் “கொற்றவர் தம் கோன் ஆகுவை” (அடி:74) என்று புலவர் குறிப்பிடுகின்றார். நாட்டின் கடற்கரைப் பகுதிப் பட்டினமான சாலியூர் (அடி:86-82), முதுவெள்ளிலை என்ற நகரம் (அடி:100-119), தலையாலங்கானம் (அடி: 120-130) முதலான ஊர்களை வென்று தனது நாட்டுடன் இணைத்துக் கொண்டவன் என்று தலையாலங் கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் மதுரைக்காஞ்சியில் சிறப்பிக்கப்படுகிறான். இவ்வெற்றிகளின் சிறப்பினை எடுத்துக் கூறுவதன் நோக்கம் நெடுஞ்செழியன் சாதாரண மன்னனல்ல; பிறரால் வெல்ல முடியாத வீரமுடையவன் என்ற கருத்தினை மக்களிடமும் மற்ற மன்னர்களிடமும் ஏற்படுத்தும் முயற்சி என்றே கொள்ளவேண்டும்.

பாண்டிய மன்னன் பேரரசனாக உருப்பெற்று விட்ட பின்னரும் தமிழரின் மரபு வழி அற உணர்வுகளையும் விழுமியங்களையும் அவன் உறுதிபடப் பின்பற்றினான் என்ற அரிய செய்தியும் மதுரைக் காஞ்சியில் பதிவு செய்யப்படுகிறது. அப்பகுதி,

> “உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்
> பொய்சேண் நீங்கிய வாய்நட்பினையே
> முழங்குகடல் ஏணி மலர்தலை உலகமொடு
> உயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும்
> பகைவர்க்கு அஞ்சிப் பணிந்து ஒழுகலையே
> தென்புல மருங்கின் விண்டு நிறைய
> வாணன் வைத்த விழுநிதி பெறினும்
> பழிநமக்கு எழுக என்னாய் விழுநிதி
> ஈதல் உள்ளமொடு இசைவேட்குவையே
> அன்னாய் நின்னொடு முன்னிலை எவனோ?
> கொன் ஒன்று கிளக்குவல் அடுபோர் அண்ணல்
> கேட்டிசின் வாழி! கெடுகநின் அவலம்
> கெடாது நிலைஇயர்நின்சேண்விளங்கு நல்லிசை”
>
> மதுரைக்காஞ்சி, 197-209

என்று அமைகிறது. இப்பகுதியில் கூறப்பட்டுள்ள மேன்மைப் பண்புகளின் *(Elite Qualites)* அருமை கருதிப் பாடலடிகள் முழுமையும் இங்கு மீண்டும் எடுத்துக் காட்டப்பட்டன. இப்பகுதியில் பொய்யாமை, நட்பினைப் பேணுதல், அச்சமின்மை, வீரம், பழியைக் கண்டஞ்சுதல், ஈகை முதலான அரிய பண்புகளை உடையவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் என்பது குறிக்கப் படுகின்றது.

பொதுவாகப் பேரரசுகள் உருவாகின்ற சூழலில் மேலாதிக்கம் பெறும் அரசியல் சூழ்ச்சிகள், பொய்மையொழுக்கம், அன்பின்மை, செல்வத்தின் மீது அளவிறந்த பற்று, பழியைக் குறித்து அஞ்சுதல் முதலிய பண்புகள் இல்லாதவன் பாண்டியன் நெடுஞ்செழியன் என்று புலவர் மாங்குடி மருதனார் சான்றளிப்பது போல் இப்பகுதி அமைந்திருக்கிறது. எளிமையான வாழ்க்கையைக் கைக் கொண்டிருந்த திணைக்குடி மக்கள், அவர்களின் தலைவர்கள் பெற்றிருந்த அரிய நற்பண்புகளைப் பேரரசனான பாண்டியனும் பெற்றிருந்தான் என்று புலவர் கூறுவதன் மூலம் திணைக் குடிகளின் வாழ்வியல் மதிப்புகள் *(Values of life)* பேரரசுக் காலத்திலும் தொடர்ந்து வந்தன என்பதை ஊகித்தறியலாம். எனவே திணைக்குடி வாழ்விலிருந்து தமிழகம் பேரரசு நிலைக்கு மாறத் தொடங்கிய காலத்தில் மதுரைக் காஞ்சி தோன்றியிருக்க வேண்டும் என்று ஊகிக்க இடமிருக்கிறது.

கவிதையியல் நோக்கில், இப்பகுதியானது ஒட்டு மொத்த அடிக்கருத்தான உலக இன்பத்தின் நிலையாமையைப் புலவர் அறிவுறுத்தத் தொடங்குவதற்கு ஏதுவாகக் களம் அமைப்பதாகவும் கொள்ள இடம் தருகிறது. சமூக இயக்கவியல், கவிதையியல் என்ற இரண்டு நோக்குகளில் நின்று அணுகுவதற்கும் இப்பகுதி பொருத்தமாக உள்ளது என்பதும் உணரத்தக்க செய்தி.

கட்டுரையாளர் :
முன்னாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம்

ரூபன் சிவராஜா
svrooban@gmail.com

நோபல் விருதும் ‘வீக்கிலீக்ஸ் அசாஞ்’ கையளிப்பு சமிக்ஞையும்

விக்கிலீக்ஸ் நிறுவனர் அசாஞ் வழக்கில் எதிர்மறையான நிகழ்வு பற்றிய செய்தி அண்மையில் வெளிவந்துள்ளது. அதாவது அமெரிக்காவிடம் அவரைக் கையளிப்பது தொடர்பான சாதகமான சமிக்ஞையைப் பிரித்தானிய நீதித்துறை டிசம்பர் 10, 2021 அன்று வெளிப்படுத்தியுள்ளது. இதன் அர்த்தம், உடனடியாக கையளிப்பு நிகழும் என்பதல்ல. முன்னைய தீர்ப்பிற்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்ட மேன்முறையீடு மீள்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது என்பதே இதிலுள்ள செய்தியாகும். முதற்கட்டமாக முந்தைய தீர்ப்பு வழங்கப்பட்ட (அசாஞ் அமெரிக்காவிடம் கையளிக்கப்பட்டால் அது அவரைத் தற்கொலைக்கு இட்டுச்செல்லக்கூடியது) நீதிமன்றத்தில் அமெரிக்க மேன்முறையீட்டுக்கு அமைய மீள்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். பின்னர் அங்கிருந்து பிரித்தானிய உச்ச நீதிமன்றம் ஒன்றிற்கு நகர்த்தப்படுகின்ற வாய்ப்புள்ளது.

முந்தைய தீர்ப்பு, அடிப்படையில் மிகப் பலவீனமானது. கையளிப்பிற்கு எதிராக மிக நியாயமான பல வாதங்கள் இருந்தபோதிலும், அசாஞ்சின் உள-உடல் நிலையை முன்னிலைப்படுத்தி தற்கொலைக்கான ஆபத்தினை முதன்மைக்காரணமாகக் கூறித் தீர்ப்பு வழங்கியமை பலவீனமானது. கையளிப்பானது, மனிதஉரிமைச் சாசன மீறல் என்றோ, ஊடகச் சுதந்திரத்திற்கு எதிரானது என்றோ, நீதிக்குப் புறம்பானது என்றோ தீர்ப்பு வழங்கப்படவில்லை. அசாஞ் வழக்கினை பிரித்தானிய நீதித்துறை நீதியாகக் கையாளவில்லை.

இரண்டு ஊடகவியலாளர்களுக்கு நோபல் விருது

அமெரிக்காவிற்குச் சாதகமான, வீக்கிலீக்ஸ் ஊடக நிறுவனர் அசாஞ்சிற்கு எதிரான பிரித்தானியச் சமிக்ஞையானது, இரண்டு ஊடகவியலாளர்களுக்கு நோர்வேத்தலைநகர் ஒஸ்லோவில் சமாதானத்திற்கான நோபல் விருது வழங்கப்பட்ட விழா நாளில் வெளிவந்திருக்கின்றது. இது உண்மையில் மிகவும் முரண்நகையான செயல். மட்டுமல்லாது டிசம்பர் 10 என்பது ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான நாளும்கூட. இத்தகைய நாளில் கையளிப்பிற்குச் சாதகமான சமிக்ஞையை வெளியிட்டமை, ஊடகத்துறை மீதான பிரித்தானிய நீதித்துறையின் கரிபூசல் என்ற தொனிப்படவும் கருத்துகள் வெளிப்படுகின்றன. மேற்கு தனது எதிரிகளின் எதிரிகளைக் கொண்டாடுவதை நீண்ட பாரம்பரியமாகக் கொண்டுள்ளது. இந்த ஆண்டின் நோபல் சமாதான விருது அதற்கான எடுத்துக்காட்டு என நோர்வேஜிய இடதுசாரி நாளிதழான Klassekampen (Class Struggle) 11.12.2021 ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல் விருது முறையே ரஸ்யாவைச் சேர்ந்த Dmitrij Muratovமற்றும் பிலிப்பைன் நாட்டைச் சேர்ந்த Maria Ressa ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. தத்தமது நாடுகளின் ஆட்சிபீடங்களின் அதிகார மீறல்களுக்கு எதிரான துணிகரமான ஊடகச் செயற்பாடுகளுக்காக விருது வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் ஊடக செயல்முனைப்புகள் ஜனநாயகத்திற்கும் நிரந்தர சமாதானத்திற்குமான முன்நிபந்தனைகள் என்பதாக தமது தேர்வு நியாயப்படுத்தலில் நோபல் தெரிவுக்குழு குறிப்பிட்டுள்ளது. இந்த அறிவிப்பு அக்டோபர் மாதம் வெளிவந்திருந்தது. விருது விழா ஒஸ்லோ நகர சபை மண்டபத்தில் டிசம்பர் 10ஆம் நாள் பிரமாண்டமாக இடம்பெற்றது.

Maria Ressa - பிலிப்பைன்ஸ்

Maria Ressa தனது ஊடகச் செயற்பாடுகள் மூலம் பிலிப்பைன்ஸ் ஆட்சிபீடத்தின் அதிகாரமீறல்கள், வன்முறை, ஊழல்களுக்கு எதிராக இயங்கிவருபவர். Rappler என்ற இணைய ஊடக மையத்தினை 2012இல் துவங்கி நடாத்திவருபவர். அதற்கு முன்னர் சில காலங்கள் சி.என்.என் தொலைக்காட்சியின் தென் கிழக்காசிய நிருபராகப் பணிபுரிந்தவர். போதைப்பொருள் கடத்தல், விநியோகத்திற்கு எதிரான பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியின் (Rodrigo Duterte) கடும் நடவடிக்கைகளுக்கு எதிராக (போதைப்பொருள் கடத்தல் விநியோகத்துடன் தொடர்புடையவர்களெனக் கருதுவோரைச் சுட்டுக்கொல்வதற்கான முழு அதிகாரம் காவல்துறைக்கு வழங்கப்பட்டதை எதிர்த்து) குரல் எழுப்பி வந்துள்ளார். பல தடவைகள் சிறைக்கும் சென்றுள்ளார். சமூக ஊடகங்கள், குறிப்பாக பேஸ்புக் போலியான செய்திகளைப் பரப்புவதற்கும் கருத்தியல் எதிர்ப்பாளர்கள், விமர்சகர்கள் மீது வெறுப்பினைப் பரப்புவதற்கும், பொது உரையாடல்களைத் திசைதிருப்பவும் பயன்படுகின்றமையைக் கடுமையாக எதிர்த்தும் விமர்சித்தும் வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நோபல் விருது விழாவில் ஆற்றிய உரையிலும் சமூக ஊடகங்கள் மீதான தனது விமர்சனங்களைப் பகிர்ந்திருந்தார். சமூக ஊடகங்கள் அதிகாரம் மற்றும் பொருளீட்டலை மையமாகக் கொண்ட கொடிய விளையாட்டாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன. அவை தகவல்களுக்கு நஞ்சூட்டுகின்றன. எமது உலகளாவிய தகவற்சூழல் அமைப்பினைக் கட்டுப்படுத்தும் அமெரிக்க நிறுவனங்கள் உண்மை தொடர்பான ஒரு சிதைந்த சித்தரிப்பினையே கொடுக்கின்றன. ஊடகவியலாளர்கள் பற்றியும் சிதைந்த பிரதிபலிப்பினையே கொடுக்கின்றன. பிளவுடுத்துவதற்கும் மனங்களுக்குள் அடிப்படைவாதத்தை அதிகரிப்பதற்கும் ஏற்ற வகையில் சமூக ஊடகங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன என்று தனது உரையில் தெரிவித்திருந்தார்.

Dmitrij Muratov- ரஷ்யா

நோபல் விருதினைப் பெற்ற மற்றொருவரான Dmitrij Muratov, 'Novaya Gazeta' (New Gazette') எனும் ரஸ்ய சமூக அரசியல் பத்திரிகையின் பொறுப்பாசிரியர். நாட்டின் சமூக அரசியல் விவகாரங்கள் தொடர்பான விமர்சன மற்றும் விசாரணைச் செய்திகள், கட்டுரைகளால் இப்பத்திரிகை அறியப்பட்டிருக்கின்றது. 1993இல் தொடங்கப்பட்ட இப்பத்திரிகையின் பொறுப்பாசிரியராக செயற்பட்டு வந்திருக்கின்றார். சமகால ரஸ்யாவின் சுயாதீன - கொள்கை அடிப்படையிலான அதிகார எதிர்ப்பு பத்திரிகைகளில் முதன்மையானதாக இது கருதப்படுகின்றது. தொடங்கப்பட்டதிலிருந்து ஊழல், காவல்துறையின் வன்முறை, சட்டத்திற்குப் புறம்பான கைதுகள், தேர்தல் முறைகேடுகள் உட்பட்ட சமூக, அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ விவகாரங்களை அம்பலப்படுத்தி வருகின்றது. அதிகம் பேசப்படாத விவகாரங்களைப்

பேசுபொருளாக்குகின்ற விமர்சன மற்றும் விசாரணைக் கட்டுரைகளை அதிகம் பிரசுரித்து வருகின்றது. பத்திரிகையின் விமர்சனங்களுக்கான ஆளும் தரப்பின் பதிலாக அச்சுறுத்தல், வன்முறை, கொலைகளை எதிர்கொள்ள நேர்ந்திருக்கின்றது. பத்திரிகை தொடங்கப்பட்ட காலத்திலிருந்து இதுவரை 6 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். செச்சேனியா போர் தொடர்பாக ஆட்சிபீடத்திற்கு எதிரான விமர்சனங்களை முன்வைத்து வந்த எழுத்தாளரும் ஊடகவியலாளருமான *Anna Politkovskaja* 2006இல் கொல்லப்பட்டார். இத்தனை படுகொலைகள் நடந்தும் அதன் பொறுப்பாசிரியராக *Muratov*பத்திரிகையின் சுயாதீனத் தன்மையை விட்டுக்கொடுக்கவில்லை.

அசாஞ் பற்றி இவர்கள் இருவரும் தமது உரையில் ஒரு வரிகூடக் குறிப்பிடவில்லை. குறிப்பிட்டிருந்தால், அது நிச்சயம் உலகளாவிய கவனத்தைப் பெற்றிருக்கும். அவரின் கையளிப்பிற்கு எதிரானதும் விடுதலைக்கு ஆதரவானதுமான அரசியல் குறியீட்டு அளவிலான குரலாக அமைந்திருக்கும்.

அசாஞ் அமெரிக்க வல்லரசிற்கு எதிராக அல்லாமல், ரஸ்ய ஆட்சிபீடத்திற்கு எதிரான அம்பலப்படுத்தல்களைச் செய்திருப்பாராயின் நிச்சயம் நோபல் விருது வழங்கிக் கௌரவப்படுத்தப்பட்டிருப்பார் என்பதில் வியப்பில்லை.

விருதுக்கு அசாஞ் பரிந்துரை

அசாஞ்சிற்கு நோபல் விருது வழங்கப்படவேண்டுமென்ற குரல்களும் ஆங்காங்கே ஒலித்திருந்தன. *Oslo Metropolitan University*பத்திரிகை மற்றும் ஊடகவியல் ஆய்வுத்துறைப் பேராசிரியர் *Rune Ottosen*அசாஞ்சை நோபல் விருதுக்குப் பரிந்துரை செய்திருந்தார். பிரித்தானிய நீதிமன்றத் தகவல் மிகுந்த கவலைக்குரியது என்று தெரிவித்துள்ள அவர், ஊடகச் சுதந்திரத்திற்கும் கருத்துச்சுதந்திரத்திற்கும் இது மிகப்பெரிய பின்னடைவு என்றும் கருத்துரைத்துள்ளார். *Muratov* மற்றும் *Ressa* ஆகிய இருவரும் இந்த ஆண்டின் சமாதானத்திற்கான நோபல் விருதுக்குத் தகுதியானவர்கள் என நம்பும் *Ottosen*இந்த ஆண்டு அமைதிக்கான நோபல் தெரிவுக்குழுவின் நியாயப்படுத்தல் குறிப்புகளின் கீழ் அசாஞ்சும் பொருந்தக்கூடியவர் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். மூன்றாவது நபராகவேனும் அசாஞ் தேர்வாகியிருக்கவேண்டுமென்றும் அவர் வாதிடுகின்றார்.

இந்த ஆண்டு அசாஞ் சமாதான நோபல் விருதினைப் பெற்றிருந்தால், மிகவும் கடினமான இன்றைய சூழ்நிலையில் அவருக்குத் தேவையான ஆதரவுத்தளத்தினை விருது விரிவுபடுத்தியிருக்கும். துணிகரமான ஊடகவியலாளர்களுக்கு ஆதரவும், பாதுகாப்பும் உள்ளது என்ற சமிக்ஞையை நோபல் விருதுக்குழு உலகின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்க முடியும் என்கிறார்.

அசாஞ் நோபல் விருதுக்குத் தெரிவாகியிருந்தால் 2010ஆம் ஆண்டின் நிலையை ஒத்ததாக அது அமைந்திருக்கும். அந்த ஆண்டு சீன அரசின் மனித உரிமை மீறல்களை எதிர்த்துச் செயற்பட்டுவந்த மனித உரிமையாளர் *Liu Xiaobo*இற்கு விருது வழங்கப்பட்டது. அவர் அப்போது சீனாவில் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இந்த ஆண்டு அசாஞ்சிற்கு வழங்கப்பட்டிருந்தால் அதனையொத்த சூழல் மீண்டும் ஏற்பட்டிருக்கும். 2010இல் இந்த விருது வழங்கப்பட்டமைக்கு சீனா தனது கடுமையான எதிர்ப்பினை நோர்வேக்குத் தெரிவித்திருந்தது. அசாஞ் அமெரிக்காவிற்கு எதிரானவர் என்ற அடிப்படையில், அவருக்கு வழங்கப்பட்டிருந்தால் அமெரிக்க- நோர்வே உறவு பாதிக்கப்படக்கூடும். அமெரிக்காவின் செல்லப்பிள்ளை என்று விளிக்கப்படுமளவிற்கு நோர்வே அமெரிக்க உறவு உள்ளது. நோபல் விருது என்பது முற்றுமுழுதாக அரசியல், அதிகார நலன்களுக்கு அப்பாற்பட்ட சுயாதீன வெளியினைக் கொண்டிருக்கின்றது எனச் சொல்லிவிட முடியாது.

அசாஞ் நவால்னுஜாக இருந்திருந்தால்…

பிரான்சிலிருந்து வெளிவரும் *Le Monde Diplomatique*சர்வதேசப்பதிப்பின் நவம்பர் இதழில் ஒரு கட்டுரையில், அதன் ஆசிரியர்களான *Serge Halimi* மற்றும் *Pierre Rimbert* ஆகிய இருவரும் ஒரு ஒப்பீட்டினைச் செய்துள்ளனர். 'அசாஞ் நவால்னுஜாக இருந்திருந்தால்…' என்பது அக்கட்டுரையின் தலைப்பு. மேற்கின் ஊடகங்கள் எவ்வாறு ஜூலியன் அசாஞ்சினையும் *Aleksej Navalnyj* இனையும் சித்தரிக்கின்றன, எத்தகையை இடத்தினை அவர்கள் பற்றிய கட்டுரைகள், செய்திகளுக்குக் கொடுக்கின்றன என்பது பற்றிய விரிவான ஒப்பீட்டுக் கட்டுரை அது.

*Aleksej Navalnyj*ரஸ்யாவைச் சேர்ந்த வழக்கறிஞரும் எதிர்ப்பரசியலாளருமாவார். ரஸ்ய ஆட்சிபீடத்திற்கு எதிராக இயங்கி வருபவர். அதற்காக ரஸ்ய அதிகார பீடத்தினால் அச்சுறுத்தல்களுக்கும் துன்புறுத்தல்களுக்கும் சிறைப்படுத்தல்களுக்கும் ஆளாகி வருபவர். அடிப்படையில் அசாஞ்சும் நவால்நுஜ்சும் ஒரே தளத்தில் இயங்கியவர்கள். இருவரும் அதிகார எதிர்ப்பாளர்கள். ஆனால் இங்கு ஊடகக் கவனக்குவிப்பு சார்ந்த பாரபட்சமானது, நவால்நுஜ்சினது 'புதின் எதிர்ப்பு' கூடுதல் மனிதத்தன்மை வாய்ந்ததாகப் பிரதிபலிக்கப்படுவதாகும்.

அதிகார மீறல்கள், ஊழல் நடவடிக்கைகளுக்கெதிராக மக்களை ஒன்றுதிரட்டுகின்ற சக்தியாகப் பார்க்கப்படுபவர். நாடாளுமன்றத்திற்கு வெளியிலான எதிர்ப்பரசியல் தலைவர்களில் முக்கியமானவராகப் பார்க்கப்படுபவர். 2000ஆம் ஆண்டிலிருந்து அரசியல் களத்தில் இயங்கி வருபவர். ஐரோப்பிய சார்பு மைய-இடதுசாரிக் கட்சியில் இணைந்து செயற்பட்டவர். வெளிநாட்டவர்களின் குடிவரவிற்கு எதிரான கடுமையான இனவாதக் கருத்துகளை வெளியிட்டதற்காக 2007இல் அக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்.

ஆயினும் பின்னர் 2013 காலப்பகுதியிலிருந்து, சமூக ஊடகங்களைத் தீவிரமாகப் பயன்படுத்தி எதிர்ப்பரசியல் செயற்பாடுகளைப் பரந்த அளவில் முன்னெடுத்து வந்தவர். ரஸ்ய ஆட்சிபீடத்தின் அதிகார- நிர்வாகத்தவறுகள் மற்றும் ஊழல்களை வலையொளி ஆவணங்கள் (Youtube Documentaries) மூலம் வெளிக்கொணர்ந்தவர். 2015/2016 காலப்பகுதியில் விளாமிடிர் புதினின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் சம்மந்தப்பட்ட ஊழல் ஆவணங்களை வெளிக்கொணர்ந்ததாகக் கூறப்படுகின்றது. முக்கிய அமைச்சர்கள் மற்றும் முன்னாள் பிரதமர் Dmitrij Medvedev உட்பட்டவர்களின் மீதும் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வெளியிடப்பட்ட ஆவணக் காட்சிகள் YouTube வலையொளித் தளத்தில் உலகளவில் 30 மில்லியன் பேரினால் பார்வையிடப்பட்டுள்ளது.

2008 ஜோர்ஜியா ஆயுத முரண்பாட்டில் ரஸ்யாவிற்கு ஆதரவாக நின்றவர். ரஸ்ய – உக்ரைன் முரண்பாட்டில் கிரிமியா (Crimea) மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாக நின்றவர். 2014 இல் இடம்பெற்ற கிரிமியா பொதுவாக்கெடுப்பு ரஸ்யாவிற்குச் சாதகமாகத் தவறாகக் கையாளப்பட்டதான கருத்தினை வெளியிட்டதோடு, உரிய சுயாதீனமான தேர்தல் கண்காணிப்புடன் பொதுவாக்கெடுப்பு புதிதாக மீளவும் நடாத்தப்படவேண்டுமென்ற கருத்தினை முன்வைத்தவர்.

2020 ஒரு பயணத்தின் போது விசமூட்டப்பட்ட நிலையில் ஜேர்மன் அரசின் உத்தரவின் பேரில் பர்லீனுக்கு விமானம் மூலம் கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் ரஷ்ய – ஐரோப்பிய ஒன்றிய உறவில் மேலும் விரிசலைக் கொண்டுவந்துள்ளது. 2021 ஜனவரி சிகிச்சை முடிந்து நாடு திரும்பிய பின்னர் சிறையிலடைக்கப்பட்டார். முன்னரும் பல தடவைகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குசெய்து நடத்தியதற்காகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 2012 – 2014 காலப்பகுதியில் இவர் ஏழு தடவைகள் கைது செய்யப்பட்டமையை, அரசியல் பன்மைத்துவத்தினை ஒடுக்கும் நடவடிக்கை என ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம் கண்டித்திருந்தது.

மேற்கு ஊடக அணுகுமுறையின் அரசியல்

Aleksej Navalnyjஒரு துணிகர அதிகார எதிர்ப்பாளர் எனப் பல ஊடகங்கள் முக்கியப்படுத்தி கட்டுரைகளை எழுதுகின்றன. ஆசிரியர் தலையங்கங்கள் தீட்டப்பட்டுள்ளன. அசாஞ் மீதான அமெரிக்க சி.ஐ.ஏ கடத்தல் மற்றும் படுகொலைத் திட்டங்கள் தொடர்பான அம்பலப்படுத்தல் தகவல்களை உலக ஊடகங்கள் உரிய முறையில் கவனப்படுத்தவில்லை என்ற விமர்சனங்களை அவர்கள் முன்வைக்கின்றனர். அசாஞ் விவகாரத்தில் ஊடகங்கள் அப்படியல்ல. அவருடைய விடுதலை தொடர்பாக ஆதரவு தெரிவித்தும், அவரை அமெரிக்காவிடம் கையளிப்பது தொடர்பாகவும் கொள்கை ரீதியாக எதிர்த்தும் எழுதுகின்ற ஊடகங்களும் தனிப்பட்ட நபராக அவரையும், விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தல் முறைமைகள், அவருடைய அரசியல் கூட்டுகள் தொடர்பாகப் பிரஸ்தாபிப்பது வழக்கமான ஒன்றாகும்.

சமகாலத்தில் இந்த இருவர் பற்றிய பாரபட்சம்மிக்க ஊடகக் கட்டுரைகள், ‘மனித உரிமைகள் மற்றும் ஊடகச்சுதந்திரம்’ ஆகிய சொல்லாடல்கள் எவ்வாறு வசதிக்கேற்ப நெகிழ்வுத்தன்மையுடன் (flexibility) கையாளப்படுகின்றன. அதிலும் குறிப்பாக மேற்கின் மிகப்பெரிய விழுமியங்களாக ஜனநாயகமும் ஊடகச்சுதந்திரமும் பிரஸ்தாபிக்கப்படுகின்ற புறநிலையில் அதன் போலித்தன்மையையே இவ்விருவர் பற்றிய ஊடகச்சித்தரிப்புகள் பிரதிபலிக்கின்றன.

பிரச்சார இயந்திரமும் பாரபட்சமும்

இதனைத்தான், எதிரிநாடுகளால் பாதிக்கப்பட்டவர்களையும், அமெரிக்காவினாலும் அதன் நேச சக்திகளினாலும் பாதிக்கப்பட்டவர்களையும் பிரச்சார இயந்திரம் பாரபட்சமாகக் கையாளுகின்றது என்று Noam Chomskyமற்றும்Edward S.Hermanஇணைந்து எழுதிய‘Manufacuring Consent’ எனும் நூலில் குறிப்பிடுகின்றனர். வெகுஜன ஊடகங்களின் பொருளாதார அரசியல் பற்றிய நூல் அது. அதிகார மற்றும் பொருளாதார நலன்கள் செய்தியை வடிவமைப்பதில் எத்தகைய கணிசமான பங்காற்றுகின்றன, பிரச்சினைகள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன, தலைப்புகள் எவ்வாறு தேர்வுசெய்யப்படுகின்றன என்பதைப் பகுப்பாய்வு செய்கின்றது. உலகைப் புரிந்து கொள்ளத் தேவையான தகவல்களை வழங்குதிலிருந்து அமெரிக்க வெகுஜன ஊடகங்கள் எவ்வாறு தோல்விகண்டன என்பதற்கான காத்திரமான மதிப்பீட்டினை உள்ளடக்கிய ஆய்வு நூல் அது. உண்மையைத் தேடுவது தொடர்பான பத்திரிகைகளின் வழக்கமான பிம்பத்திற்கு மாறாக, ஒரு அடிப்படையான உயரடுக்கு ஒருமித்த கருத்தோடு எவ்வாறு செய்திகளின் அனைத்து அம்சங்களையும் பரவலாகக் கட்டமைக்கிறது என்பதை விபரிக்கின்றனர்.

2010இல் அமெரிக்க Time இதழ் அந்த ஆண்டின் நபராக அசாஞ்சினைத் தெரிவுசெய்திருந்தது. 2016இல் ஜனநாயகக் கட்சியின் மின்னஞ்சல்களை வீக்கிலீக்ஸ் வெளியிட்டதையடுத்து, அமெரிக்க மேற்கின் ஊடகங்கள் அசாஞ் மீதான விமர்சனங்களை முன்வைக்கத் தொடங்கின. குறிப்பாக இந்த மின்னஞ்சல் பிரசுரிப்பிற்குப் பின்னால் ரஷ்யப் புலனாய்வுத்துறை இயங்கியிருந்ததான தகவல்களும் உள்ளன.

அசாஞ் தொடர்பான மனித உரிமை சிறப்பு அறிக்கை

சித்திரவதைகளுக்கெதிரான ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் Nils Melzer அசாஞ்சை பிரித்தானியச் சிறையில் சென்று பார்வையிட்டுள்ளார். அசாஞ் நிரந்தர சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். அசாஞ் விவகாரம் தொடர்பான

தனது விசாரணைகளை மையமாகக் கொண்டு புத்தகம் ஒன்றினையும் அவர் எழுதியுள்ளார். அமெரிக்காவும் பிரித்தானியாவும் கூட்டாக 'உண்மையைக் குற்றவியலாக்கியுள்ளன' என்று அதில் அவர் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை சுவீடன் நீதித்துறை மீதும் அவர் விமர்சனத்தினை முன்வைத்துள்ளார். அசாஞ் மீதான பாலியல் குற்றச்சாட்டு வழக்கு கோரிய காலத்தை விட, அந்த வழக்கு நிலுவையில் வைக்கப்பட்டிருந்தமையானது, அசாஞ் மீது அவதூறு பரப்பும் நோக்கிலானது என்றும் அவர் பதிவுசெய்துள்ளதாக ஊடகத் தகவல் ஒன்றில் அறியக்கிடைக்கிறது.

அமெரிக்காவில் சட்டவிதிகளுக்கு ஏற்ப நீதியான விசாரணைகள், வழக்கு மற்றும் சிறைப்படுத்தல் நிகழும் என்பதற்கான உத்தரவாதம் எதுவும் இல்லை. சி.ஐ.ஏ கடத்தல், படுகொலைத் திட்டம் அதற்கான அண்மைய உதாரணம். அமெரிக்க சிறை உத்தரவாதங்களை விசாரணை செய்து அறிக்கை வெளியிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International), அவை திருப்தியளிக்கும் சூழலில் இல்லை எனத் தெரிவித்துள்ளது. எனவே அசாஞ் நிச்சயம் அமெரிக்கச் சிறைகளில் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

வழக்கு - தீர்ப்பு - பலம் - பலவீனம்

அசாஞ் வழக்கு விவகாரத்தில்,அமெரிக்கா தனது இலக்கில் ஒருபடி முன்னேறியுள்ளது. முந்தைய தீர்ப்பில் அசாஞ்சின் சிறைப்படுத்தல் சூழல் அவரைத் தற்கொலைக்கு இட்டுச்செல்லாத வகையில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுத்தப்படுவதற்கு நீதிமன்றம் இடம் கொடுக்கவில்லை என்ற அடிப்படையில் அமெரிக்காவின் மேன்முறையீடு அமைந்திருந்தது. முந்தைய தீர்ப்பு அடிப்படையில் மிகப் பலவீனமானது. கையளிப்பிற்கு எதிராக மிக நியாயமான பல வாதங்கள் இருந்தபோதிலும், அசாஞ்சின் உள-உடல் நிலையை முன்னிலைப்படுத்தி தற்கொலைக்கான ஆபத்தினை முதன்மைக்காரணமாகக் கூறித் தீர்ப்பு வழங்கியமை பலவீனமான தீர்ப்பு. அத்தீர்ப்பின் மறைமுகமான பொருள், உள-உடல் நிலை சீராக இருந்தால் கையளிக்கப்படலாம் என்பதாகும். இன்னொரு வகையில் அவர் குற்றவாளி என்று ஒப்புக்கொள்ளப்பட்ட தீர்ப்பு அதுவாகும்.

அமெரிக்கமொழியியல் அறிஞரும்விமர்சகருமான Noam Chomskyமுந்தைய தீர்ப்புத் தொடர்பாகத் தெரிவித்த கருத்துகள் முக்கியமானவை. அல்ஜசீரா ஊடகத்திற்கு அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார். அதனை மீள் நினைவூட்டுவது பொருத்தமுடையது.

'அமெரிக்காவின் காட்டுமிராண்டித்தனமான சிறைவாச முறைமைக்குள் அசாஞ் அனுப்பப்படப் போவதில்லை என்ற நிகழ்வு கொண்டாடத்தக்கது. ஆனால் மீதியனைத்தும் ஒரு பேரழிவு. இந்தத் தீர்ப்பு பைடன் நிர்வாகத்திற்குஒருபரிசாக அமைந்திருக்கிறது. சர்வதேச வழக்கு ஒன்றின் பொறுப்பைச் சுமப்பதிலிருந்து அவர்கள் தப்பிக் கொள்கின்றனர்.

ஒரு மனநிலை பாதிக்கப்பட்டவராக அசாஞ் முத்திரை குத்தப்பட்டுள்ளார். இது எத்தகைய வேடிக்கையானது என்பதோடு, அவரது தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர்களால் நிராகரிக்கப்பட்டபோதும், இத்தீர்ப்பு அமெரிக்க குற்றச்சாட்டுகளுக்கு ஒரு சட்டரீதியான அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது. அந்த அங்கீகாரத்தின் விளைவு, எதிர்காலத்தில் அதிகார மையங்கள் மூடிமறைக்க விரும்பும் அரசுகளின் குற்றவியல் நடவடிக்கைகளை பொதுமக்களுக்கு அம்பலப்படுத்த முனையும் ஒருவரை ஒதுங்கவைப்பதற்கான அங்கீகாரத்தையும் வழங்குகின்றது'

கையளிப்பானது, மனிதஉரிமைச் சாசன மீறல் என்றோ, ஊடகச் சுதந்திரத்திற்கு எதிரானது என்றோ, நீதிக்குப் புறம்பானது என்றோ தீர்ப்பு வழங்கப்படவில்லை. அசாஞ் வழக்கினை பிரித்தானிய நீதித்துறை நீதியாகக் கையாளவில்லை என்பதையே Noam Chomskyஇன் கருத்து வலியுறுத்துகின்றது. ஆவணக் கசிவுகள், இரகசியத் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட 'விசாரணை ஊடகவியல் செயற்பாடுகளுக்கு' மிக மோசமான விளைவை ஏற்படுத்துவதாகவும் வரலாற்று இழிவாகவும் இந்தத் தீர்ப்பு கணிக்கப்படுகின்றது. கையளிப்புக்கு சாதகமான சமிக்ஞையை பிரித்தானியா வழங்கியுள்ள இன்றைய சூழலில், அம்முடிவுக்கு எதிரானதும் அசாஞ்சின் விடுதலையை வலியுறுத்தியதுமான கருத்தியல் போராட்டங்கள் பரந்த அளவில் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவையை வலியுறுத்தி மனிதஉரிமைகள் மற்றும் ஊடகக் குரல்கள் ஒலித்துக்கொண்டுதான் உள்ளன.

கட்டுரையாளர்: எழுத்தாளர், நார்வே

கோடுகளின் நடுவில்

டிராட்ஸ்கி மருது
trotskymarudu@gmail.com

கலைஞரும் நானும்

முரசொலி அலுவலகத்துக்கு அருகிலேயே அமைந்திருந்த, பாவைச்சந்திரன் மூலம் அறிமுகமான கடலூர் கிள்ளிவளவன், அவர்தம் துணைவியார் ஆண்டாள் ஆகியோரின் பங்களிப்பில் இயங்கிவந்த தமிழோசை அச்சகம் 1990களில் முற்போக்கு முகங்களின் தொடர்புகளுக்கும் சந்திப்புகளுக்கும் முக்கியச் சந்திப்பு மையமாக அமைந்திருந்தது. குறிப்பாக ஒத்த சிந்தனையுடைய இதழியலாளர்கள், திராவிட இயக்கச் சிந்தனையாளர்கள் திரைப்படம், கவிதை, கதை, கட்டுரை என இலக்கியத்தளத்திலும் படைப்புத்தளத்திலும் இயங்கிவந்த படைப்பூக்கம் மிக்க இளைஞர்களின் கூடுமிடமாகவும் அது மாறிவந்தது. அச்சகத்திலிருந்து ‘அரங்கேற்றம்’ என்ற பெயரில் ஒரு அரசியல் ஏடும் வெளிவந்து கொண்டிருந்ததால் கிள்ளிவளவன் அந்தக் கூடுகைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து ஆதரித்தார். அச்சகத்தின் பொறுப்பாளராய் நின்று பணிசெய்த கவிஞர் பழநிபாரதி, மெதுமெதுவாக பல்வேறு துறைகளில் காலூன்றி வெளிச்சத்திற்கு வந்துகொண்டிருந்த நண்பர்களுடன் கைகோர்த்துப் பயணித்ததும் முக்கியமானது.

1980களில் இலங்கையில் வெடித்த இனக் கலவரத்தில் வெளியேறிவந்த ஈழத்தமிழர்களில் செ.யோகநாதன் அங்குதான் வந்து அவ்வப்போது தங்குவார். காலப்போக்கில் சமசிந்தனையாளர்களும் பெரியாரிய ஈடுபாட்டாளர்களும் மார்க்சியச் சிந்தனையாளர்களுமாய் நிரம்பிவழிந்த ஒரு பெரும் இளைஞர் கூட்டம் சந்தித்து மகிழும் மையமாக அது உருவெடுத்தது. குறிப்பாக, அண்மையில் மறைந்த ஈழத்து எழுத்தாளர் செ.கணேசலிங்கன், கவிதாசரன், ஜனநாதன், இலங்கை நாதன் போன்றோர் தொடர்பும் அப்போதுதான் எனக்குக் கிடைத்தது. அதேபோல, தமிழோசை அச்சகத்துக்கு அருகில் இளம்பிறை நடத்திவந்த அச்சகத்தில்தான் எஸ். பொ.எனக்கு அறிமுகமானார். ஈழத்துச் சொந்தங்கள் பலர் சந்தித்துக் கலந்துரையாடும் களங்களாக அப்போது அச்சகங்களும், இலக்கியமேடைகளும் பெரும்பங்காற்றின.

காக்கைக் குழுமத்தின் மூலம் புதிய பயணத்தைத் தொடங்கிய கவிஞர் கி.பி.அரவிந்தன், முகிலன், வைகறை, வேணுகோபால், நிலவளம் சந்திரசேகர், முத்தையா உள்ளிட்ட தோழமைகளும் எனக்கு நட்பாகக் கிடைத்தது; அந்த 1980களின் காலகட்டம்தான். இப்போது காக்கை குழுமத்தில் காலூன்றி நிற்கிற நண்பர்களில் சிலர் அப்போது, எல்லா நாளிலும் அல்லது எல்லா மேடைகளிலும் தவறாமல் தொடர்புகொள்கிற, அல்லது சந்திப்பு நிகழ்த்துகிற பதிவுசெய்யப்படாத ஒரு இயக்கமாகவே என்னுடன் நட்பில் இருந்தார்கள்; இப்போதும் அப்படியே தொடர்கிறார்கள்.

அந்தக் காலக்கட்டத்தில் எனது கோட்டுச் சித்திரமாக வெளிப்பட்ட பெரியார், அண்ணா, கலைஞர் உள்ளிட்ட ஓவியங்கள் தமிழகத்தின் சிற்றிதழ்களில் மட்டுமின்றி வெகுசன ஏடுகளிலும் வெளிவரத் தொடங்கியிருந்தன. எனினும், அரசியல் சார்ந்த கருத்துப்படங்களை அரங்கேற்றம் தவிர்த்த பிற எந்த இதழுக்கும் நான் கொடுக்கவில்லை. அதில் எனக்கு ஆர்வமும் இல்லை. ஆனால், கிள்ளியுடன் இருந்த பிணைப்பின் காரணமாக அரங்கேற்றத்துக்கு மட்டும் வரைந்து கொடுத்துக் கொண்டிருந்தேன். அதில் ஒரு முக்கியமான படம் பாபர் மசூதி இடிப்பு சம்பந்தப்பட்ட கருத்துப்படம். படத்தின் கருத்து இதுதான்: பாபர் மசூதியை ஒரு சாமியார் கடப்பாறையால் அடித்து உடைத்துக் கொண்டிருப்பார். உலகத்தவர் அதைப் பார்த்து வெட்கித் தலைகுனிவார்கள். ஆனால் அப்போது பிரதமராய் இருந்த நரசிம்மராவும் பாபர் மசூதி இடிப்புக்கு பெருங்கூட்டத்தைச் சேர்த்துக்கொண்டு வந்திருந்த அத்வானியும் வேறொரு பக்கம் திரும்பி வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்கள். அந்தக் கருத்துப் படத்தைப் பார்த்து நெகிழ்ந்த கலைஞர் அவர்கள் அகமகிழ்ந்து பாராட்டியதாக கலைஞருக்கு நெருக்கமான நண்பர்கள் சிலர் எனக்குச் சொன்னார்கள்.

அதேபோல், ஆனந்தவிகடன் இதழில் வெளிவந்த கலைஞரின் படைப்பு ஒன்றுக்கு ஆதிமூலம் வரைந்த கோட்டோவியம் ஒன்று பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்தச் சமயத்தில் ஆதிமூலம் ஓவியத்தைப் பாராட்டிய கலைஞர் அவர்கள் அவரோடு இணைத்து என்னையும் நினைவுகூர்ந்து பாராட்டு வார்த்தைகளைச் சொன்னதாக நண்பர்கள் சொல்லி மகிழ்ந்தார்கள்.

அதையடுத்து ’ஜமதக்னி’ எழுதி நாகநாதன் அவர்கள் வெளியிட்ட மூலதனம் நூல் வெளியீட்டு நிகழ்வு என்னை கலைஞரிடம் நெருங்கி நிற்க வைத்தது. நான் பெரிதும் மதிக்கிற தோழர்கள் நல்லகண்ணு, சங்கரய்யா, கே.டி.கே.தங்கமணி, ஆனைமுத்து ஐயா, தமிழ்க்குடிமகன், நா.

அருணாசலம் உள்ளிட்ட பெருமக்கள் அமர்ந்திருந்த மேடையில் என்னை கௌரவப்படுத்தியது என்னுள் நீங்கா நினைவாக நிலைபெற்றுவிட்டது. அப்போது என்தோளைத் தொட்டு அருகில் நிற்கவைத்துப் படம் எடுக்கச் சொன்னது மறக்கமுடியாத நிகழ்வு. அதன்பிறகு பல்வேறு நிகழ்வுகள் நடந்தன. குறிப்பாக, செம்மொழி மாநாட்டு நிகழ்வின் தொடக்கம் என்னை கலைஞரிடம் இன்னும் நெருங்கிப் பழகவும் பணிசெய்யவுமான அரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது. ஊர்வலத்துக்கான அலங்கார வண்டிகள் தொடங்கி மாநாட்டின் சித்திர வேலைப்பாட்டுக்கான மொத்தப் பணிகளும் எனக்கு வந்துசேர்ந்தது. மொத்தப் பணிகளையும் நானே செய்துமுடிப்பது எனக்கு அழுத்தம் தரக்கூடிய ஒன்றாக இருந்ததால், பொருத்தமான எல்லா ஓவியர்களையும் இணைத்துக்கொண்டு அந்தப் பணிகளைச் செய்துதந்தேன்.

மாநாட்டு நிகழ்வுக்காகத் தயாரிக்கப்பட்ட காட்சிப்பதிவுகளில், ஒரு வண்டியில் சாதி மறுப்பில் முன்னணியில் நின்ற தென்னாட்டுப் புரட்சியாளர்களையும் திப்புசுல்தானுக்குத் துணைநின்ற அவரது போர்ப்படைத்தளபதிகளையும் வரைந்து சித்திரமாக்கித் தந்தேன். மகஇக மேடைகளிலும் நிகழ்வுகளிலும் மட்டுமே காட்சிப்படுத்தப்பட்டுவந்த இப்படியான சித்திரங்களை முதன்முறையாய் அரசு நிகழ்வுகளில் இடம்பெறச் செய்தேன். இந்தச் சித்திரங்களையெல்லாம் பார்த்துவிட்டு, கலைஞர் உடனே என்னை அழைத்துவர ஆள் அனுப்பி விட்டார்.

தலைமைச் செயலகத்தில் உள்ள அவரது அறைக்குள் நுழையும்போதே இரு கைகளையும் கூப்பி கலைஞருக்கு வணக்கம் தெரிவித்துக்கொண்டு உள்ளே போகும்போதே, "பார்த்தேன். எல்லா ஓவியங்களும் நன்றாக வந்திருக்கின்றன. அதிலும் தென்னாட்டுப் புரட்சியை நினைவுகூர்ந்து நீங்கள் வரைந்திருந்த கோட்டுச் சித்திரங்கள் பிரஞ்சுப் புரட்சி ஓவியங்களை எல்லாம் என் நினைவுக்குக் கொண்டுவந்துவிட்டவன" என்றார். அப்போது இரு கரங்களையும் கூப்பி அவரரருகில் போய் வணங்கி நின்றேன். என் கைகளைப் பிடித்துக்கொண்டு வாழ்த்தினார்.

பின்னர், கலைஞருக்கு அருகில்நின்றுகொண்டிருந்த முதல்வரின் உதவியாளர் திரு.சண்முகநாதன் அவர்கள், முதல்வர் அறைக்குப் பக்கத்தில் இருக்கிற ஒரு அறைக்கு அழைத்துச்சென்று, "உங்கள் சித்திரங்களின்மீது தலைவர் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறார். கடந்த இரண்டு, மூன்று நாட்களாக காரில் போகும்போதும் வரும்போதும் உங்களைப் பற்றியும் உங்கள் ஓவியங்களைப் பற்றியும்தான் பேசிக்கொண்டிருக்கிறார். எனவே, இந்தப் பணியை மிகச் சிறப்பாக செய்துதரவேண்டியது உங்கள் கடமை" என்றும் சொன்னார். இதைக் கேட்டவுடன் கலைஞரைப் பற்றியும் அவருடைய கலைரசிப்பு குறித்தும் எனது தந்தையார் பல்வேறு காலகட்டங்களில் சொன்ன தகவல்கள் எல்லாம் நினைவுக்குவர கொஞ்சம் கண்கலங்கிவிட்டேன்தான்.

மாநாட்டுக்கான சித்திரப் பணிகள் நடந்து கொண்டிருந்தபோது இடையிடையே பார்க்க வருவார். எல்லா பத்திரிகையாளர்களையும் கூட்டி முன்னே அமரவைத்துக்கொண்டு, அவர்கள் முன்னிலையில் என்னை மட்டும் தனியே அழைத்து என்னை முன்னிலைப்படுத்தும் முகமாக சித்திரங்களில் உள்ள விவரங்களை விளக்கிச்சொல்லச் சொல்லிக் கேட்பார்.

பத்திரிகைகளிலும் படைப்புகளிலும் மட்டுமே எனது சித்திரங்களைப் பார்த்து என்னைப் பாராட்டி மகிழ்ந்துகொண்டிருந்த கலைஞர் அவர்கள், நாகநாதன் விழா நிகழ்வில் அருகில் அழைத்து நிற்கவைத்துப் படம் எடுத்ததும் செம்மொழி மாநாட்டு நிகழ்வுகளில் என்னை முன்னிறுத்திப் பெருமை செய்ததும் என் வாழ்வின் மறக்கமுடியாத நினைவுகளாக வேரூன்றிவிட்டன. அது கொஞ்சம் கொஞ்சமாய் முளைவிட்டு கிளைவிடவும் செய்தன.

இந் நிகழ்வுகளுக்குப் பிறகு மீண்டும் என்னை அழைத்து சில பணிகளை நான் செய்யவேண்டும் என்று கலைஞர் என்னைப் பணித்தார். அந்தச் சம்பவத்தை அடுத்த பதிவில் சொல்வேன்.

கட்டுரை

வசந்ததீபன்

துருப்பிடித்த வாழ்வுக்குப் போராடும் உயிர்கள்

இவர்கள் கொண்டு வரும் குப்பைகளை வாங்கி மொத்தத்தில் விற்கும் காயலான் கடைக்காரர்கள் வீடு மேல் வீடு கட்டுவதும், மோட்டார் வண்டி.. வேன்.. லாரி என்று வாங்குவதும், வட்டிக்குக் கடன் கொடுத்து வாங்குவதும், உடம்பெல்லாம் நகைகளாக அலங்கரிப்பதுமாக சொகுசு வாழ்க்கை வாழ்கிறார்கள். ஆனால் பாவம்.. இந்த குப்பை பொறுக்குபவர்கள் அடுத்த வேளை உணவுக்கு அல்லாடும் பரிதாப நிலையில் நசிந்து நசிந்து செத்துப் போகிறார்கள்.

காயலான் கடை என்றும் ஆக்கர் கடை என்றும் பழைய இரும்புக்கடை என்றும் அழைக்கப்படும் உலகத்தில்... நாகரீக, கலாச்சார.. வரையறுக்கப்பட்ட விதிமுறைகளுக்கும், வாழ்க்கை முறைகளுக்கும் அப்பாற்பட்டு வாழும் மனித இயந்திரங்களின் துருப்பிடித்த வாழ்க்கையை நம்மில் பெரும்பாலோர் அறிந்தும் அறியாமலும் இருக்கலாம்.

மனித சமூக பேரமைப்பில் பொருந்தாத எத்தனையோ மனிதக் கூட்டப் பிரதிகளில் ஒன்றாக தினந்தோறும் நம்முன் எதிர்பட்டாலும் நமது கவன ஈர்ப்பின் பால் உட்படாத ஒரு வித சமூக வகைமையின் சிறு அலகாய் வெளிப்படும் கைத்துப் போனவர்களின் பிரதி தான் குப்பை பொறுக்குபவர்கள் வாழ்க்கை.

பொருளாதார சுழற்சியில் கிராமங்களும், சிறு நகரங்களும் வீசியெறிந்த மனிதர்கள் தஞ்சமடைய பெரு நகரங்களை நோக்கிப் படையெடுக்கிறார்கள். அப்படி வருபவர்களை ஒருபோதும் அந்நகரங்கள் இருகரம் நீட்டி வரவேற்பதில்லை; ஒதுக்கித் தள்ளுவதில்லை. பிழைப்பின் எதிர் நோக்குதலோடு செல்பவர்களின் முன் இருளான, வெறுமையான அவர்தம் கனவுகளை நிர்மூலமாக்கிடும் பெரும் அபாயகரமான சூழல் எதிர் கொள்கிறபோது விரக்தியின் விளிம்புகளில் துரத்தப்படும் நிலை உருவாகின்றது.

அவர்கள் குற்றவாளிகளாகவோ, பொறுக்கிகளாகவோ, மனப்பிறழ்வு கொண்டவர்களாகவோ, உதிரிகளாகவோ வடிவமைக்கப்படுகின்றனர். ஜாதி, மத அடையாளங்கள் நீர்த்து, நிறம் மாறி முற்றிலும் அழிந்து போன நிலையில் அருவருப்பான தொழில்களான சாக்கடை தூர் வாருதல், பிணம் எரித்தல், ஹோட்டல்களில் எச்சில் இலைகளை அள்ளுதல், மதுக்கடைகளின் பார்களில் எடுபிடியாக வேலை பார்ப்பது, மருத்துவமனைக் கழிவுகள் குறிப்பாக பிறக்கும் சிசுக்களின் கழிவுகளான நீர்க்குடம், தொப்புள் கொடி போன்றவைகளை அப்புறப்படுத்துவது, சாராயம்.. கஞ்சா விற்பது, விபச்சாரத் தொழில்களில்.. தோல் பதனிடும் தொழில்களில்..சாயப் பட்டறைகளில்.. பிளிச்சிங் பட்டறைகளில் ஈடுபடுவது, கூலிக் கொலைகாரர்களாக செயல்படுவது எனவும், அரசியல் கட்சிகளின் எடுபிடிகளாகவும், கடத்தல் தொழில்களில் ஈடுபடுவதுமாக பலர் அலைக்கழிக்கப்பட்டு வயிறு நிரப்பித் திரிகிறார்கள். இவற்றிற்கெல்லாம் வாய்ப்புக் கிடைக்காமலோ அல்லது விருப்பம் கொள்ளாதவர்களோ பிச்சை எடுப்பதிலும், எச்சில் இலைகளைப் பொறுக்குவதிலும் அமிழ்ந்து விடுகிறார்கள். மேற்கண்டவைகளிலிருந்து விலகி நிற்கும் பலர் தங்களுக்கான சுய தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் குப்பைகளைத் தேடி அலைகிறார்கள். பிளாஸ்டிக், கண்ணாடி பாட்டில்கள், பழைய இரும்பு.. தகரம்.. காகிதங்கள்.. மனித.. மிருக எலும்புகள் எனத் தேடித் திரட்டுகிறார்கள்.

பெரு நகரங்களில் உருவான இந்த குப்பை பொறுக்கும் வர்க்கம் மெல்லமெல்ல சிறு நகரங்கள்.. கிராமங்கள் வரை நீண்டுவிட்டது. இவர்களின் வாழ்வு முறைகளில் பெருத்த வேறுபாடுகளும், வித்தியாசங்களும் இருப்பதில்லை.

பழைய நைந்த உரச்சாக்குகளைக் கொண்டும், பழைய கேரி பேக்குகளைக் கொண்டும் குப்பை பொறுக்கும் இவர்களில் வயது வித்தியாசங்களும்.. பால் வேறுபாடுகளும் உண்டு. எல்லோரும் எதையாவது சாக்கடைகளில்..சாலையோர குப்பைகளில்.. வீடுகளுக்கருகில்.. பொது நிறுவன, கடைகளின், மருத்துவமனைகளின் அருகே மற்றும் நகராட்சி, மாநகராட்சி குப்பைக் கிடங்குகளில் குவிந்து கிடக்கும் குப்பைகளை கிண்டி, கிண்டி

ஏதாவது அகப்படுமா என்பதிலே குறியாகக் கொண்டு அலைகிறார்கள்.

சாலைகளில், வழிப்பாதைகளில் நடந்து செல்கையில் இவர்களின் விழிகள் தேடலோடு கீழ் நோக்கி தரை தேடித் திரிகின்றன. தமக்கு முன்னே.. பின்னே வரும், போகும் எவரையும் இவர்கள் பொருட்படுத்துவதில்லை.

குப்பை பொறுக்குபவர்களில் சிலர், சில நேரங்களில் பிச்சையும் எடுக்கிறார்கள்.

இவர்கள் பொறுக்கும் குப்பைகளை வாங்கி மொத்தத்தில் விற்பவர்கள் மிகச் சொற்பமாக அவைகளை வாங்கி பலமடங்கு அதிகமாக விற்கிறார்கள். தங்களுக்கான பொருள் வைப்பறைகளென ஏதுமற்ற இவர்கள் கிடைத்தவைகளை தக்க வைக்க முடியாமல் உடனுக்குடன் விற்றுத் தீர்க்கிறார்கள்.

இவர்களில் ஒரு சிலருக்கு மட்டும் குடியிருப்புகளென சுடுகாடு, ஊருக்கு வெளிப்புற பகுதிகளென இருக்கின்றன. மற்றபடி அதிகபட்சமாக இவர்கள் கிடைக்கும் இடங்களில் தூங்கி.. கடைகளில் வாங்கித் தின்று வாழ்கிறார்கள். இரவுகளில் ஆண்களும், பெண்களும் மது குடிக்காமல் இருப்பதில்லை. இவர்களுக்குக் குழந்தைகளும் இருக்கின்றன. இவர்கள் பெரும்பாலும் குளிப்பதே இல்லை. பழைய துணிகள் விற்கும் கடைகளிலிருந்து தங்களுக்கான ஆடைகளை வாங்கி அணிகிறார்கள்.

குப்பை பொறுக்குபவர்கள் மத்தியில் போட்டியும், பொறாமையும் எழுந்து ஒருவருக்கொருவர் தாக்கிக் கொள்ளக்கூடிய சம்பவங்களும் நடக்கின்றன. இவர்களின் வாழ்வு முழுவதும் அதிகபட்சம் குப்பை மேடுகளின் அருகிலே காக்கிறது. ஒரு போதும் அருவருப்போ, அசூசையோ இவர்கள்அடைவதில்லை. ஒரு முறை குப்பை பொறுக்கும் ஒரு பெண்ணின் சிறு குழந்தை (2வயதுஇருக்கலாம்) ரத்தக் கறை படிந்த நாப்கின்னை எடுத்து வாயில் வைத்திருக்கும் புகைப்படக்காட்சி.. வலைத்தளங்களில் காட்சிபடுத்தப் பட்டதிலிருந்து இவர்களின் வாழ்வு நிலைகளை எளிதில் யூகித்து அறிந்து கொள்ளலாம்.

இவர்கள் கொண்டு வரும் குப்பைகளை வாங்கி மொத்தத்தில் விற்கும் காயலான் கடைக்காரர்கள் வீடு மேல் வீடு கட்டுவதும், மோட்டார் வண்டி.. வேன்.. லாரி என்று வாங்குவதும், வட்டிக்குக் கடன் கொடுத்து வாங்குவதும், உடம்பெல்லாம் நகைகளாக அலங்கரிப்பதுமாக சொகுசு வாழ்க்கை வாழ்கிறார்கள். ஆனால் பாவம்.. இந்த குப்பை பொறுக்குபவர்கள் அடுத்த வேளை உணவுக்கு அல்லாடும் பரிதாப நிலையில் நசிந்து நசிந்து செத்துப் போகிறார்கள்.

காயலான் கடைக்காரர்கள் குப்பை பொறுக்குபவர்களுக்கு முன் பணம் என்று கொடுத்து அவர்களின் உழைப்பை ..குறைந்த விலையில்.. பேரமின்றி உறிஞ்சுகிறார்கள். ஒருவரை விட்டு வேறொருவருக்கு பொருட்களை விற்று விடாமல் கண்காணிக்கப்படுகிறார்கள். அப்படித் தவறி விற்பவர்களை கடுமையாகத் தண்டிப்பதும் உண்டு.

தினம் தினம் வெயிலிலும்,மழையிலும் அலைந்து திரிந்து கழிவுகளுக்குள் உழன்று வாழ்வைத் தேடும் இந்த விளிம்பு நிலை மனிதர்களின் வாழ்வு.. இருள் வெளிக்குள்ளிருந்தும் நாற்றக் குப்பைகளிலிருந்தும் வெளிவரும் நாள் எப்போது.....? •

கட்டுரை

அ. கா. பெருமாள்

சி.பி.ராமசாமி அய்யரும் சிம்சனின் ஜீப்பும்

அகில இந்தியக் காங்கிரஸ்காரர்கள் இந்தியாவின் விடுதலைக்குப் பின் மாநிலங்களை மொழிவாரியாகப் பிரிக்கவேண்டும் என்ற கருத்தில் மாறுபாடு கொள்ளவில்லை. இதன் பிரதிபலிப்பு திருவிதாங்கூரிலும் தெரிந்தது. அப்போது மலையாளப் பிரதேசங்களில் மலபார் மாகாணக் காங்கிரஸ் கொச்சி பிரஜா மண்டில், திருவிதாங்கூர் சமஸ்தானக் காங்கிரஸ் ஆகிய மூன்று அரசியல் ஸ்தாபனங்கள் செயல்பட்டன. இவ்வமைப்பின் பெரிய தலைவர்கள் கன்னியாகுமரி முதல் காசக்கோடு வரையுள்ள பகுதிகளை உள்ளடக்கியதாக கேரளம் இருக்கும் என்று சொல்ல ஆரம்பித்தனர்.

"...அப்போது சூரியன் மறையும் நேரம். சுசீந்திரம் தெற்குத் தெருவில் நாயக்கர் கொட்டாரத்தின் அருகே போலீசார் துப்பாக்கியுடன் நின்றார்கள். மேலத்தெரு மூலையில் துப்பாக்கி சூடு நடந்தது. ஜனங்கள் அலறியடித்துக்கொண்டு ஓடினார்கள். ஒரு கிழவி; ஜம்பர் அணியாதவள்; 80 வயதுகூட இருக்கலாம்; அதிவேகமாக ஓடினாள். தென்மேற்கு மூலையில் இருந்த நாலடி உயரமுள்ள சுவரை தம்பிடித்து ஏறி ஓடினாள். என் போலிஸ் பயிற்சியில்கூட நான் அப்படிச் செய்யவில்லை; உயிரைக் காப்பாற்ற உடலில் சக்தி தானாக வந்துவிடுகிறதா? அந்தக் காட்சியை இன்னும் மறக்க முடியவில்லை."

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் தாணுமாலயன் கோவில் மார்கழித் திருவிழாவில் (1947 ஜனவரி 6) நடந்த கலவரத்தின்போது போலீஸ் துப்பாக்கிச்சூடு நிகழ்ச்சியைப் பற்றிய மலையாளக் கட்டுரையின் ஒருபகுதி இது.

இந்தக் கட்டுரையை தியாகி சிவன்பிள்ளை அவர்கள்தான் எனக்குப் படித்துக் காட்டினார். அவரது 80-ஆவது விழா மலருக்காக அவரை நான் பேட்டி கண்டபோது - இந்தக் கலவரம் பற்றியும் பேசினார். இவரைப் போன்ற தியாகிகள், பழம் காங்கிரஸ்காரர்கள் சிலரும் சொன்னார்கள்.

தியாகி நாகலிங்கம் பெரும்பாலும் பழைய அனுபவத்தைப்பேசும்போது மிகைப்படுத்தல் இல்லாமல் பேசுவார். ஆனால் அவருக்குத் திருவிதாங்கூர் திவானாக இருந்த சேட்பட் பட்டாபிராமன் ராமசாமி அய்யரைப் (1879-1966) பற்றிப் பேசும்போது கொஞ்சம் மிகைப்படுத்தல் ஆரம்பமாகிவிடும்.

அய்யர் மிகப்பிரபலமான வழக்குரைஞர்; சென்னை ராஜதானியில் அட்வகேட் ஜெனரல். இன்னும் எவ்வளவோ பதவியில் இருந்தவர். மிகவும் நுட்பமாக விஷயங்களை அணுகியவர் என்பதை எல்லாம் கொஞ்சமும் கணக்கில் எடுக்காமல் எடுத்த எடுப்பிலேயே துவேசத்துடன் பேச ஆரம்பிக்கும் தியாகிகள் சிலரைச் சந்தித்திருக்கிறேன்.

சி.பி.யிடம் கொண்ட துவேசத்தை அறியுமுன் திருவிதாங்கூரின் சமஸ்தானக் காங்கிரஸ் உருவான வரலாற்றைக் கொஞ்சம் அறியவேண்டிய அவசியம் இருக்கிறது.

1938இல் ஹரிபுராவில் கூடிய காங்கிரஸ் மகாசபை இந்திய சமஸ்தானங்களில் வாழ்கின்ற மக்கள், காங்கிரஸ் தாபனம் வழி தங்களின் ஜனநாயக உரிமையை நிலைநாட்டிக்கொள்ளலாம் என்று தீர்மானம் நிறைவேற்றியது. இந்த நிலையில் திருவிதாங்கூர் காங்கிரஸ்காரர்களும் தங்கள் கோரிக்கையை முன்வைத்தனர். இதன் விளைவு 1938இல் திருவிதாங்கூர் சமஸ்தானக் காங்கிரஸ் தோன்றியது.

திருவிதாங்கூரில் சமஸ்தானக் காங்கிரஸ் ஆரம்பித்த புதிதிலேயே சி.பி.இராமசாமி அய்யரை எதிர்த்தது. கேரளத்தை விட்டுத் திவானை வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கத்தை முன்னிலைப்படுத்தியது. இந்தக் கருத்தை, மகாத்மா எதிர்த்தார். சமஸ்தானக் காங்கிரஸ் தனிமனிதனைக் கீழே தள்ளவேண்டும் என்று விரும்புவதைவிட பொறுப்பாட்சி பெறவேண்டும் என்று போராடுவது நல்லது என்றார்.

சமஸ்தானக் காங்கிரசுக்கும் திவானுக்கும் ஏற்பட்ட போராட்டத்தில் திருவிதாங்கூர் தமிழர்கள் தீவிரம் காட்டவில்லை. தமிழர்கள் திவானை எதிர்க்க சமஸ்தானக் காங்கிரசுக்கு ஆதரவு கொடுக்காதது மலையாளிகளுக்கு எரிச்சலைத் தந்தது. எனவே சமஸ்தானக் காங்கிரஸ் - திவான் போராட்டம் மலையாளி திவான் போராட்டமாக மாறியது.

அகில இந்தியக் காங்கிரஸ்காரர்கள் இந்தியாவின் விடுதலைக்குப் பின் மாநிலங்களை மொழிவாரியாகப்

சி.பி. ராமசாமி அய்யர்

பிரிக்கவேண்டும் என்ற கருத்தில் மாறுபாடு கொள்ளவில்லை. இதன் பிரதிபலிப்பு திருவிதாங்கூரிலும் தெரிந்தது. அப்போது மலையாளப் பிரதேசங்களில் மலபார் மாகாணக் காங்கிரஸ் கொச்சி பிரஜா மண்டில், திருவிதாங்கூர் சமஸ்தானக் காங்கிரஸ் ஆகிய மூன்று அரசியல் ஸ்தாபனங்கள் செயல்பட்டன. இவ்வமைப்பின் பெரிய தலைவர்கள் கன்னியாகுமரி முதல் காசக்கோடு வரையுள்ள பகுதிகளை உள்ளடக்கியதாக கேரளம் இருக்கும் என்று சொல்ல ஆரம்பித்தனர்.

ஐக்கிய கேரளம் என்ற வார்த்தை தென் திருவிதாங்கூரில் ஒலிக்க ஆரம்பித்தபோது காங்கிரஸ் கட்சிக்குள் எதிர்ப்பு வர ஆரம்பித்தது. இதைப்பயன்படுத்தி தென் திருவிதாங்கூர் காங்கிரஸ்காரர்களை பயமுறுத்த ஆரம்பித்தார் சி.பி. இதற்குரிய கருவி சிம்சன்.

இந்த விஷயத்தை எல்லாம் தியாகி நாகலிங்கம் விரிவாகச் சொல்லிவிட்டு சிம்சன் கதைக்கு வந்தார். அது அவர் சொந்த அனுபவம்.

நாகர்கோவில் நாகராஜா கோவில் அருகே உள்ள திலகர்தெருதான் தியாகி நாகலிங்கம் அவர்களின் பூர்வீகம், இந்தத் தெருவில் 'திலகர் வாசிப்பு சாலை' இருந்தது. இதன் பொறுப்பு நாகலிங்கத்தின் கையில் இங்கு காங்கிரஸ் கொடி கட்டப்பட்டிருந்தது.

திலகர் வாசிப்புசாலை தொடர்பான இளைஞர்களில் பெரும்பாலோர் காங்கிரஸ் அனுதாபிகள்; சாதாரணமாகவே சண்டைக்குப் போகும் இயல்பான குணம் இவர்களின் முத்திரை, இந்த இடத்துக்குத்தான் சிம்சன் வந்தார்.

சிம்சன் தென் திருவிதாங்கூரில் தோவாளை வட்டம் மலைத்தோட்ட முதலாளி ஆங்கிலோ-இந்தியன். ஆறடிக்கும் மேல் உயரம். அரசு அதிகாரிகளின் தயவால் தோட்டத்தைப் பெருக்கிக்கொண்டவர். இவருக்கு சி.பி.யின் தயவு அதிகம் இருந்தது; எஸ்டேட்டும் விரிந்தது.

சிம்சன் வந்த நிகழ்ச்சியை நாகலிங்கம் சொன்னார்.

சிம்சன் பார்த்தால் ராட்சசன் மாதிரி இருப்பான். ஆறடி உயரம். சைலன்சர் பைப் இல்லாத திறந்த ஜீப்பில் இரட்டைக்குழல் துப்பாக்கியுடன் வருவான். அவனது ஜீப்பின் பின்னேயும் ஒரு ஜீப். அதற்கும் டாப் இருக்காது. அதில் ஏழெட்டு அடியாட்கள் இருப்பார்கள்.

சிம்சனின் வாகனத்திலிருந்து படபடவென ஒலிக்கும் சப்தம் பயத்தை உருவாக்கும். பெரும்பாலும் பொது மக்கள் ஒதுங்கி விடுவார்கள். சிம்சன் காங்கிரஸ் கொடிக்கம்பத்தை எங்குப் பார்த்தாலும் ஜீப்பை நிறுத்துவான். அவனது அடியாட்கள் கம்பத்தை ஒடிப்பார்கள்; வெட்டுவார்கள். அப்போது கொடிக்கம்பம் மூங்கில்தான்.

உடனே ஜீப் புறப்பட்டுவிடும். அன்று திலகர் வாசகசாலை வழி ஜீப் வந்தது. ஏதோ காரணத்தால் இளைஞர்கள் கூடியிருந்தார்கள். ஜீப்பின் படபட சப்தம் கேட்டு இரண்டு மூன்றுபேர் வாசகசாலையிலிருந்து வெளியே வந்தனர். ஜீப் நின்றது. சிம்சனின் அடியாட்கள் வழக்கம்போல் காங்கிரஸ் கொடி பறந்த கம்பத்தின் அருகே வந்தனர்.

இதற்குள் வாலிபர்களின் கூட்டம் கூடிவிட்டது. வாசகசாலையின் அருகே இருந்த விறகுக்கடையிலிருந்து உருட்டுக்கட்டைகளுடன் வந்தனர் சிலர். இதை சிம்சனின் ஆட்கள் எதிர்பார்க்கவில்லை. இதற்குள் அரிவாள் வெட்டுக்கத்தி என ஆயுதங்களுடன் சிலர் வந்தனர்.

சிம்சனின் வாகனம் மெல்ல நகர்ந்தது. பேச்சு எதுவுமில்லை; தியாகி நாகலிங்கம் சொன்னது போன்ற வேறு நிகழ்ச்சிகளை சிவன்பிள்ளை அவரது தன்வரலாற்று நூலிலும் பி.எஸ்.மணி அவரது இணைப்பா நூலிலும் சண்முகம் சுதந்திர மலர் கட்டுரையிலும் பதிவு செய்துள்ளனர்.

சிம்சனின் இந்தக் காரியங்களுக்கு சி.பி.அய்யரே காரணம். இது சாதாரண ஜனங்களுக்கும் தெரிந்திருந்தது. இந்திய விடுதலைக்குப்பின் திருவிதாங்கூர் சமஸ்தானம், தனியாக இருந்ததால் எப்படி இருக்கும் என்று மக்கள் பேசிக்கொண்டார்கள்.

இப்படியான வெறுப்புதான் சுசீந்திரம் கோவில்தேரில் காங்கிரஸ் கொடியைக் கட்டக் காரணமாயிற்று. தென்திருவிதாங்கூரில் சுசீந்திரம் ஊர்கோவில் மார்கழித் தேர்த்திருவிழா என்பது விழா மட்டுமல்ல; நாஞ்சில் நாட்டு விவசாயிகள் கூடும் இடமும் கூட.

தேர்த்திருவிழாவின் மாலையில் தெற்குத் தெருவில் விவசாயிகள் கூடுவார்கள். கன்னிப்பூ சாகுபடியில் விதைக்க வேண்டிய நெல், நீர்வினியோகம் போன்ற விஷயங்களை விவாதிப்பார்கள். இந்த விவசாயிகளில் மிகப் பெரும்பாலோர் திருவிதாங்கூர் அரசரின் விசுவாசிகள். அதனால் திவான் அவர்களுக்கு துணைத் தெய்வம்.

சி.பி.திவானாக வந்தபோது பெரிய மரியாதையுடன்தான் தமிழ்ப்பகுதி மக்கள் நடந்துகொண்டார்கள். காங்கிரஸ் கொடியை சிம்சன் அவமதிக்க ஆரம்பித்தபோதுதான் சிபியின் மரியாதை சரிய ஆரம்பித்தது. இதன் உச்ச வெளிப்பாடு தேரில் காங்கிரஸ் கொடியைக் கட்டியது.

சி.பி.யை எதிர்க்க வேண்டும், ஐக்கிய கேரளத்திலிருந்து தென்திருவிதாங்கூரைப் பிரிக்கவேண்டும். திருவிதாங்கூர் இந்திய யூனியனுடன் சேரவேண்டும் என்ற காரணங்களுக்காக தேரின் உச்சியில் காங்கிரஸ் கொடியைக் கட்டியது முட்டாள்தனமான காரியம் என்றுதான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. (தியாகி சிவன் பிள்ளை புயலிலே ஒரு பயணம் பகுதி 2) இப்படி ஒரு காரியம் நடப்பதற்கு பின்னால் பேசப்பட்ட வதந்தியும் ஒரு காரணம்.

இந்தியா சுதந்திரம் அடையப் போகிறது: சி.பி.இந்திய அரசியல் நிர்வாகத்தில் உயர்ந்த பதவி பெறப்போகிறார். அதனால் திவான் பதவியை விடப்போகிறார் என்றும் வதந்தி டிசம்பர் ஆரம்பத்தில் (1946) திருவிதாங்கூரில் பரவலாகப் பேசப்பட்டது.

இந்தச் சமயத்தில் சமஸ்தானக் காங்கிரஸ் அரசியல் நிர்ணய சபைக் கூட்டம் (1946 டிசம்பர் 7 முதல் 12 வரை) தில்லியில் நடந்தது. இதற்கு மைசூரிலிருந்து நிஜலிங்கப்பாவும் திருவிதாங்கூரிலிருந்து பட்டம்தாணுபிள்ளை, பி.எஸ்.நடராஜபிள்ளை (மனோன்மணியம் சுந்தரனாரின் மகன்) சிவன்பிள்ளை(நாஞ்சில்நாடு) ஆகியோர் சென்றனர். சி.பி.யும் இதே கூட்டத்திற்குப் போயிருந்தார். சி.பி.நினைத்தது மாதிரி நிர்ணய சபைக் கூட்டத்தில் நடக்கவில்லை. அவருக்குப் பெரிய மரியாதையோ முக்கியத்துவமோ கிடைக்கவில்லை. அதனால் கூட்டம் முடியுமுன்பே திருவனந்தபுரம் கிளம்பிவிட்டார் (சிவன்பிள்ளை ப.230)

திவான் பதவி விலகப்போகிறார் என்ற வதந்தியை அவரேதான் கிளப்பிவிட்டார் என்று காங்கிரஸ்காரர்கள் பேசிக்கொண்டார்கள். கூட்டங்களிலும் கிண்டலாகச் சிலர் பேசினார்கள். இந்தச் சமயத்தில்தான் சிம்சன் சமஸ்தானக் காங்கிரஸ்காரர்களை அடக்குவதில் தீவிரமாகச் செயல்பட்டான்.

சிம்சன் இரட்டைக்குழல் துப்பாக்கியுடன் புலிஉலவும் காட்டுக்குள் போவது மாதிரி சந்தடி அதிகம் நிறைந்த மணிமேலை சந்திப்பில் ஜீப்பில் நிற்பது சகஜமாயிற்று. அங்கே வண்டியில் கட்டப்பட்ட குதிரைகள் கனைத்தன. பயோனியர் பஸ்ஸின் ஹாரன் சப்தம் கேட்டது. இந்தத் தோட்ட முதலாளியை தொட்டி முதலாளி என உரக்கச் சொல்லிவிட்டு ஓடினார்கள் சிறுவர்கள். தொடர்ந்து சிம்சன் ஒழிக என்ற குரலும் கேட்கும். மணிமேடை ஜங்ஷனிலிருந்து எங்கே வேண்டுமானாலும் ஓடித் தப்பலாம். சில சமயம் ஒழிக என்றும் கேட்கும் (கைவிளக்கு சிறப்புமலர் 1975 மார்ச் நாகலிங்கம் கட்டுரை)

சி.பி.யின் மேல் உள்ள இந்த வெறுப்புதான் தேரில் காங்கிரஸ் கொடியைக் கட்ட உத்வேகம் கொடுத்தது. 1947 ஜனவரி 5 மாலை, சுசீந்திரம் தாணுமாலையன் கோவில் சாமித்தேர், அம்மன்தேர், சப்பரத்தேர், பிள்ளையார்தேர் என நான்கு தேர்களும் அலங்கரிக்கப்பட்டு தயாராக இருந்தன. ஒவ்வொரு தேரின் உச்சியிலும் தங்கமுலாம் பூசப்பட்ட கும்பக்கலசத்தையும் கட்டிவிட்டனர். அதன் உச்சியில் காவிக்கொடி பறந்தது.

ஒவ்வொரு தேரிலும் ஏறுவதற்கு படிக்கட்டு அமைப்புகள் உண்டு. படிக்கட்டில் ஏறி மேடையிலிருந்து அதில் போடப்பட்ட பலகை வழியாக தேருக்குச் செல்லலாம். இந்தப் பலகைவழிதான் நாதஸ்வர தவல் கலைஞர்களும் மூலப்படிமங்களை சுமந்துவரும் பூசகர்களும் பிறப் பணியாளர்களும் செல்வார்கள்.

ஜனவரி 6 காலை மணி 7 சுவாமித் தேரில் மூலப்படிமத்தை வைக்க பூசகர்கள் சென்றபோது காங்கிரஸ்கட்சி இளைஞர் சிலரும் கூட்டத்தோடு தேரில் ஏறிவிட்டனர். ஒருவர் மளமளவென தேரின் உச்சியில் ஏறிவிட்டார். காவிக்கொடியை அவிழ்த்துவிட்டு காங்கிரஸ் கொடியைக் கட்டிவிட்டார். எல்லாம் நிமிட நேரத்தில். மலையாள நம்பூதிரிகளுக்கும் துளுபோத்திகளுக்கும் என்ன நடந்தது என்று புரியவில்லை.

தேரின் அருகே படிக்கட்டு மேடையிலிருந்த ஸ்ரீகாரியக்காரர் சிப்பந்திவழி போலிசுக்கு செய்தியைச் சொல்லிவிட்டார். அப்படியே போய் திருவனந்தபுரம் திவான் வரை சென்றது. தேர்வடத்திலும் காங்கிரஸ்காரர்கள் சி.பி.ஒழிக எனக் கூச்சலிட்டனர். தொட்டி முதலாளி சிம்சனைக் கைது செய் என்றனர். இச் செய்திகளைப் பதிவு செய்திருக்கிறார் குலசேகரபுரம் சன்முகம்பிள்ளை (சுதந்தர மலர் 1956).

இதே நிகழ்ச்சியை தியாகி சிவன்பிள்ளை புயலிலே ஒரு பயணம் பகுதி 2 என்ற தன் நூலில் (காந்தி ஆஸ்ரமம் தேரூர் 1998 ப.230) விரிவாகக்

கூறுகிறார். அது பின் வருமாறு.

"சுசீந்திரம் தேர்த்திருவிழா பார்க்க என் குழந்தைகள், மருமக்கள்மாருடன் வந்தேன். கோவிலின் முன்வாசலில் சற்றுத் தள்ளி நின்றுகொண்டிருந்தேன். போலிசார் கூடி நின்றனர். என்னைப் பார்த்த போலிஸ் இன்ஸ்பெக்டர் அப்துல்காதர் என் அருகில் வந்தார். அவர் எனக்கு நெருக்கமானவர். உரிமையுடன் பேசினார்.

"நாகர்கோவில் காந்திவாலிபர் சங்கப் பிள்ளைகளும் வேறுசிலரும் காங்கிரஸ் கொடியைத் தேரில் கட்டப் பார்க்கின்றனர். நீ பேசி அவர்களை சமானதானப்படுத்து" என்றார்.

நான் தேரின் அருகே சென்றேன். கூட்டத்தில் நுழைந்தேன். "திவான் சி.பி.ஒழிக; சிம்சன் துரையைக் கைதுசெய்; தேரில் கொடியைக் கட்டியே தீருவோம்" என்னும் கோஷங்கள் கேட்டன. நான் இளைஞர்களிடம் பேசினேன். கொடியை ஒருவனிடமிருந்து வாங்கிவிட்டேன். பேச்சு வளர்ந்தது; ஒருவன் என் கையிலிருந்து கொடியைப் பறித்துவிட்டு ஓடினான். தேரின் மேல் ஏறினான். கொடியைக் கட்டினான். நானே கொடியைக் கொடுத்தது மாதிரி ஒரு பிரமை உருவாகிவிட்டது.

இதன் பின்னர் இளைஞர் சிலரை அழைத்துக்கொண்டு ஊரின் தென்கிழக்கில் இருந்த ராமன்பிள்ளை வைத்தியரின் வீட்டிற்குப் போனேன். அங்கே வீட்டின் முன் வாசலில் நின்று பேசினோம். என் பேச்சை ஆமோதித்து வக்கீல் சங்கரப்பிள்ளை டி.எம்.சுந்தரம், முத்துக்கருப்ப பிள்ளை போன்றோர் பேசினர். அரசியலையும், கோவில் விழாவையும் இணைக்க வேண்டாம் என்று எல்லோரும் சொன்னோம்.

கூட்டத்திலிருந்த பி.எஸ்.மணி, சி.பி.இளங்கோ, உசரவிளை உமைதாணுபிள்ளை எனச் சிலர் என்னுடன் விவாதித்தனர். வெகுநேரம் பேச்சு நடந்தது. நான் உரக்கக் குரலில் "காந்தி வாலிபர் சங்கத்தினர் தேரின் கொடியை இறக்கிவிட வேண்டும். மாலை 4 மணிக்குத் தேரை இழுப்பதற்கு நாம் எல்லோரும் போகவேண்டும்; தேரை நிலைக்கு நிறுத்துவது நம் பொறுப்பு" என்றேன்.

நான்பேசியதைஎல்லோரும்ஏற்றுக்கொண்டனர். கூட்டம் கலைந்தது. மாலை 4 மணிக்கு நான் சுவாமித் தேரின் அருகே போனேன். காங்கிரஸ்காரர்கள் கூடியிருந்தனர். தேர்வடம் தரையில் கிடந்தது. அதன் மேல் எல்லோரும் உட்கார்ந்திருந்தனர். உசரவிளை உமைதாணுவும் கி.பி.இளங்கோவும் பேசிக்கொண்டிருந்தனர். சிலர் கோஷம்போட்டனர். என்னைப் பழித்துச் சிலர் பேசினர். நான் வந்துவிட்டேன்.

கொஞ்ச நேரத்தில் டி.எஸ்.பி. சிவசங்கர பிள்ளையிடம் பேசினேன். அவர் துப்பாக்கிச்சூடு நடக்கப் போகிறது; போய்விடுங்கள் என்றார். துப்பாக்கிச்சூடு நடந்தது. அடுத்த நாள் உசரவிளை உமைதாணுபிள்ளை கி.பி.இளங்கோ எனச் சிலர் தமிழ்நாட்டிற்குச் சென்றுவிட்டனர். நான் சங்கரப்பிள்ளை எனச் சிலர் கைதுசெய்யப்பட்டு ஜாமீனில் வெளிவந்தோம்" என்கிறார்.

'சுசீந்திரம் தேர்த்திருவிழா கலவரம் பற்றிய செய்தி அன்றைய பத்திரிகைகளில் மிகக் குறைந்த அளவில் வந்தது. கன்னியாகுமரி மாவட்ட கெசட்டில் இதுபற்றிய தகவல் இல்லை. கேரள வரலாற்றாசிரியர்களும் கூறவில்லை.

இந்துபூமி என்னும் மாத இதழில் வந்த (2015 டிசம்பர்) கட்டுரையின் அடிப்படையில் மயிலாடுதுறை கல்லூரி வரலாற்றுப் பேராசிரியை மகேஸ்வரி என்பவர் *Suchindrum Political firing during car festival in 1947 and Ancient of Freedom movement kanyakumari Dist...* என்ற கட்டுரை எழுதியிருக்கிறார்.

இந்துபூமி கட்டுரை, கலவரத்தில் கலந்துகொண்ட ஒருவரின் மகன், வைத்தியநாதபுரம் வசந்தன் என்பவரின் தகவல் அடிப்படையில் எழுதப்பட்டது. இந்தத் தகவல் பெருமளவில் மிகைப்படுத்தப்பட்டதாகத் தோன்றுகிறது.

சண்முகம்பிள்ளை எழுதிய கட்டுரை சுதந்திர மலரில் (நாகர்கோவில் 1956) உள்ளது. இது நேரடியாகப் பார்த்த பதிவு. தியாகி சிவன்பிள்ளை புயலிலே ஒரு பயணம் என்ற தன் நூலின்(பகுதி-2) இக்கலவரம் பற்றிக் கூறுகிறார். நாகர்கோவிலிலிருந்து வெளிவந்த கைவிளக்கு சிறப்பு மலரில் (1978 டிசம்பர்) தியாகி நாகலிங்கத்தின் பேட்டி உள்ளது. இதுவும் நேரடிப்பதிவு.

மகேஸ்வரியின் கட்டுரையில் கூறப்பட்ட தகவல்கள் முழுதும் இந்து பூமியை அடியொற்றியது. அதனால் கலவரத்தில் 1000க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்; பிணங்களை ஒன்றாக குவித்து பெட்ரோல்விட்டு எரித்தனர் என்கிறார். ஆனால் கலவரத்தில் நேரில் கலந்துகொண்டவர்கள் 10க்கும் கீழே கொல்லப்பட்டனர் என்கின்றனர். (சண்முகம்பிள்ளை)சிவன்பிள்ளையின் 80 மலருக்காக நான் அவரை பேட்டிகண்டபோதும் போலீஸ்தரப்பின்படி 4பேர்கள் கொல்லப்பட்டனர். 10 அளவில் இருக்கலாம் என்றார்.

ஜனவரி 7ஆம் தேதி, தேரோட்டம் நடந்தது. பொதுமக்கள் வரவில்லை. போலிசாரும் அரசு பணியாளர்களும் தேரை இழுத்தனர். இரண்டு தேர்களே இழுக்கப்பட்டன. ஒரு மணிக்கு தேர் நிலைக்கு நின்றது.

கலவரத்தில் ஒரு லாபம் தோட்ட முதலாளி சிம்சன் தன் அட்டகாசத்தைக் குறைத்துக் கொண்டான்.

இந்தக் கலவரம் பற்றி எழுதியவர்கள் யாருமே இதைப் போராட்டத்தின் ஒரு பகுதியாகச் சொல்லவில்லை; அறியாமையால் செய்த பிழை என்றே கூறுகின்றனர்.

கட்டுரையாளர்: நாட்டாரியல் ஆய்வாளர்

தொடர்

தராசு ஷ்யாம்

shyamtv@gmail.com

அமணமாகிய சமணம்

2

துவக்கத்தில் நமக்கு அறிமுகமான சமண தீர்த்தங்கரர் அரிஷ்டநேமி (கண்ணன் காலத்திய 22-ஆவது தீர்த்தங்கரர்) பெயரில் தமிழ்நாட்டில் ஒரு பகுதியே இருந்திருக்கிறது என்று கேள்விப்பட்டால் வியப்பாக இருக்கும்.

'அரிட்டநேமி' என்று அழைக்கப்பட்டு இப்போது 'அரிட்டாப்பட்டி' என்று வழங்கப்படும் குன்றுப் பிரதேசம். மதுரை மாவட்டம் மேலூர் அருகில் உள்ளது.

.சுமார் 2300 வருடங்களுக்கு முந்தைய தமிழ்க் கல்வெட்டுகள், குடைவரைக் கோயில், ஏழாம் நூற்றாண்டுப் பாண்டியர் கல்வெட்டுகள், பத்தாம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டுகள், ஜைன புடைப்புச் சிற்பம், பதினாறாம் நூற்றாண்டு தாமிரச் செப்பேடு என்று வரலாற்றில் அனைத்து காலகட்டங்களிலும் அரிட்டாப்பட்டி இடம் பெற்றுள்ளது.

கிரானைட் கொள்ளை குறித்த சகாயம் அறிக்கையிலும் அரிட்டாப்பட்டி இருப்பது தான் கொடுமை! திருச்சியிலிருந்து மேலூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் 100 கி.மீ. தொலைவிலும் மதுரையிலிருந்து 27 கி.மீ. தொலைவிலும் உள்ளது அந்தக் கிராமம்.

யானைமலைக்கு வடக்கே.. திருச்சி நெடுஞ்சாலையிலுள்ள நரசிங்கம்பட்டிக்கு வடமேற்கே.. கிரானைட் கில்லாடிகளின் கைகளுக்குத் தப்பிய அரிட்டாபட்டி மலையின் எஞ்சிய பகுதிகள் காணப்படுகின்றன. சங்ககாலத்திலும் பிற்காலத்திலும் அது சமணத்தலமாகவும், தமிழகத்துச் சமணர்களின் தொன்மைத் திருத்தலமாகவும் இருந்துள்ளது.

நாம் நமது அருமை நண்பர் முசிறி வழக்கறிஞர் மனோகரனுடன் மதுரை சென்று மேலூர் சாலையைப் பிடித்து அரிட்டாப்பட்டி அடைந்தோம். அங்கு இருக்கும் ஒரு பெரிய கண்மாய்க் கரையில் நின்றோம். அதை "யானை கொண்டான் கம்மாய்" என்று மக்கள் அழைக்கிறார்கள்.



பாறைகளின் அடுக்குத் தோற்றம்

எண்பெருங்குன்றம்

"ஆலவாய் நகரான மதுரையைச் சுற்றியுள்ள பரங்குன்றம், சமணர்மலை (திருவுருவகம்), பள்ளி (குரண்டி மலை), யானைமலை, இருங்குன்றம் (அழகர்மலை) முதலிய ஐந்து மலைகள் எண்பெருங்குன்றங்கள் பட்டியலில் உள்ளன என்று ஐயமின்றிக் கூறலாம். நாகமலை (கொங்கர்புளியங்குளம் குன்று), அரிட்டாப்பட்டி மலை (திருப்பிணையன் மலை), கீழவளவுக்குன்று முதலிய மூன்று மலைகளை எண்பெருங்குன்றங்களைச் சார்ந்தவையாகக் கருத வாய்ப்புள்ளது."

தமிழறிஞர் வெ.வேதாச்சலம் ஐயா. (எண்பெருங்குன்றம். பக்கம்.7)

11 ஆம் ஆண்டில் காக்கை

அரிஷ்ட்நேமி புடைப்புச் சிற்பம்

மழையால் நீர் ததும்பிக் காணப்பட்ட அதற்கு அப்பால் இரண்டு பகுதிகளாக குன்றுப் பாறைகளாய் மலை உயர்ந்து நின்றது. மெல்ல ஏறி இறங்கினால் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு குடைவரைக் கோவில் உள்ளது.

சிவலிங்கம், இரண்டு வாயிற்காவலர்களின் சிற்பங்கள், வலப்புறம் இலகுலீசர் புடைச்சிற்பம், இடப்புறம் விநாயகர் புடைச்சிற்பம் ஆகியவை செதுக்கப்பட்டு இருக்கின்றன. அமைதியான இந்த குடைவரைக் கோவில் "இடைச்சி மண்டபம்" என்று அழைக்கப்படுகிறது.

அருமையான நிழல். ஆர்ப்பரிக்கும் காற்று. சுகமான சூழல். நின்றுகொண்டே தூங்கலாம் போன்ற மாய உணர்வு.

குடைவரைக் கோவில் தாண்டி நேரே சென்று வலம் திரும்பினால் பெரிய ஆலமரம்! அதன் கீழ் உள்ள சிறுகோவிலில் வேண்டுதலுக்காக மணிகள் கட்டி உள்ளனர் உள்ளூர் மக்கள்.

அதைத் தாண்டிச் சென்றால் ஒரு சிறுகுடியிருப்பு. அதற்கு மேல் உள்ள குகையில் சமணர் படுக்கை உள்ளது. "பஞ்சபாண்டவர் படுக்கை" என்று தற்போது இதை அழைக்கின்றனர்.

அரிட்டாப்பட்டி சமணச் சிற்பத்தின் அடியில் காணப்படும் பத்தாம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டு "பிறவியைக் கடக்க உதவும் புணையாக (தெப்பமாக) அம்மலை விளங்கியது" என்பதை உணர்த்துகிறது.

கல்வெட்டில் இது "பிணையன்மலை" என்று உள்ளது. "புணையன்மலை" என்பதே "பிணையன்மலை" என வட்டெழுத்துக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

தற்போது "கழிஞ்சமலை" என்றும் அழைக்கின்றனர். "திருப்பிணையன் மலை". என்ற பழம்பெயர் மக்களுக்கு மறந்தே விட்டது.

மலையின் கீழ்ப்புறமுள்ள இயற்கையான குகைத்தளத்தில் கி..மு. முதல் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் பிராமிக்கல்வெட்டு காணப்படுகிறது. "நெல்வேலி சழிவன் அதினன் வெளியன்" என்பவன் இப்பள்ளியை உருவாக்கியதாக அது கூறுகிறது. அங்கு இருந்த பல கற்படுக்கைகளைக் கிரானைட் வேட்டைக்காரர்கள் கவர்ந்து சென்று விட்டனர் என்று மக்கள் வருத்தப்பட்டனர்.

குகைத்தளத்தின் வெளிப்புறம் முக்குடைக்குக் கீழே அர்த்தபரியாங்காசனத்தில் அமர்ந்த தீர்த்தங்கரரின் உருவம் (அரிஷ்டநேமி) பாறையில் புடைப்புச் சிற்பமாகக் காட்சியளிக்கிறது.

கி.பி. பத்தாம் நூற்றாண்டளவில். திருப்பிணையன்மலையில் வாழ்ந்த "பொற்கோட்டுக்கரணத்தார்" பெயரால் செய்யப்பட்ட இத் திருமேனிக்குப் "பாதிரிக்குடி ஊரவையினர்" காவலாக இருந்துள்ளதை அதனடியில் பொறிக்கப்பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

அந்தக் கற்குன்றுகளுக்கு மத்தியில் ஆங்காங்கே சிறிய மணற்திட்டுகள்! அவற்றில் பாறைகளில் வழிந்து வரும் சுனை நீரைக் கொண்டு விவசாயம் செய்யக் கற்றுக் கொடுத்துள்ளனர் சமண முனிவர்கள்.

அதற்காக உருவாக்கப்பட்டிருந்த ஒரு இயற்கைத் தடுப்பு அணையை நாம் பார்த்தோம். பெருமழை பெய்கிற காலங்களில் எல்லாம் தற்போது "தடுப்பணை" பற்றிய விவாதம் எழுந்து மழை முடிந்து போகும்போது மறந்து போகிறது. ஆனால் அன்றைக்கே அந்தத் தொழில் நுட்பத்தில் தெளிந்திருக்கிறார்கள் சமண முனிவர்கள்.

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமையான அந்த அமைப்பைத் தகர்க்க நடந்த முயற்சி கேட்டு நம் நெஞ்சம் கொதித்தது.

சீவகசிந்தாமணி தமிழகக் காப்பியத் தலைவன் சீவகனின் ஆசான் அச்சணந்தி அடிகள். "களிக்கும் அரசு நரகில் மூழ்கும் முயற்சி" என்று இன்றும்.. என்றும் பொருந்தும் அரசியல் தத்துவத்தைத் தந்தவர்.

நூல் நெறி நோக்கி, பால் நெறி கைவிட்டு, கோல்நெறி தழுவிய
அரசனாக விளங்கினால் உயிரினங்களுக்கு எல்லாம் நீ அமிழ்தம்

என்பது சீவகனுக்குத் தரப்பட்ட வழிகாட்டுதல்.

சமண முனிவர்கள் வகுத்தளித்த 'ஊற்றுநீர்ப் பாசனம்' பற்றிய நுணுக்கங்களை மேலும் செம்மைப்படுத்தியவர் அச்சணந்தி அடிகள். மழைக் காலங்களில் மலைக்குன்றுகளில் வழிந்து வரும் நீரைத் தடுப்பணை கட்டி பாசனத்துக்குப் பயன்படுத்திப் பயிர் வளர்க்கும் வேளாண்முறை அது.

இன்றைக்கும் அரிட்டாப்பட்டி மலைச் சுனைகளில் வரும் நீரை அணைகட்டிச் சேமித்து மக்கள் விவசாயத்திற்காகப் பயன்படுத்துகிறார்கள். சுமார் 2300ஆண்டுகளாகத் தொடர்ந்து வரலாற்றில் இடம்பிடித்துக் கொண்டுவரும் மலை அது.

அதை அறுத்துக் கிரானைட் கற்களாய் வெளிநாடுகளுக்கு அனுப்பத் திட்டமிட்டது ஒரு கும்பல். மலையை உடைப்பதற்கு இந்த அணை தடையாக இருந்ததைக்கண்டு அதை அகற்றத் திட்டம் போட்டு இருக்கின்றனர்.

ஒருநாள் இரவில் அணையைச் சிதைத்துள்ளனர். பொங்கியெழுந்த அரிட்டாப்பட்டி மக்கள் ஒன்றிணைந்து இப்பகுதியிலுள்ள மலைகளைப் பாதுகாக்க இயக்கம் ஒன்றைத் தொடங்கி நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றனர்.

மதுரை காமராசர் பல்கலைக் கழக நாட்டுப்புறவியல் துறையினரால் ஒரு களஆய்வும் இப்பகுதியில் நடைபெற்றுள்ளது.

மலையிலிருந்து பெறப்படும் நீர்வளமே அரிட்டாப்பட்டி விவசாயிகளின் சாகுபடி ஆதாரம். நீதிமன்றத் தடை பெற்றதன் மூலம் அரிட்டாபட்டி மக்கள் அருகிலுள்ள மற்ற மலைகளையும் காப்பாற்றியுள்ளனர்.

போகும் வழியில் சில பாறைகளின் அமைப்பைப் பார்க்க வியப்பாக இருந்தது. எப்போது விழுமோ என்று பயத்துடனேயே அதைக்கடந்து சென்றோம். ஒருபாறையை இன்னொரு பாறையின்மீது எடுத்து அடுக்கிவைத்தது போலஇருந்தது.

மலையின் இன்னொரு புறம் மனிதனின் பேராசையைப் பார்த்தோம். வெட்டப்பட்ட மலை அழுத கண்ணீர் அங்கே தேங்கிக் கிடந்தது. மெல்ல சுற்றிப் பார்த்த போது, மதுரையைச் சுற்றியுள்ள பெருமலைகளும்சிறுகுன்றுகளும் தெரிந்தன. நடுவில் கிடைத்த இலகுலீசர் தரிசனம் சமணமும் சைவமும் தென்பாண்டி நாட்டில் செழித்த விதத்திற்குக் கட்டியம் கூறியது.

மலைக் காற்றின் சுகத்தில் நின்ற நிலையிலேயே கண்ணயர்ந்து விட்டோமா என்ன? யார் இந்த இளைஞன்? வடிவோடும் வனப்போடும் காணப்படுகிறானே? மெல்ல அருகில் வந்து தட்டி எழுப்பி அவன் கூறினான்:

"எழுத்தாளாரே.. எழுந்திரும். நான் தான் உத்திரட்டாதி நாளில் பிறந்த சீவகன். அச்சணந்தி அடிகளின் மாணவன். . சீவகசிந்தாமணியின் காப்பியத் தலைவன்" என்றான் அவன்.

அமானுஷ்ய ஒளியில் அவன் கண்கள் ஒளிர்ந்தது நமக்கு மாயச் சொப்பனத்திலும் சோபிதமாகத் தெரிந்தது.

வாழ்க்கை வெறுப்புச் சிந்தனைகளை அறக் கருத்துகளாய்ப் போதித்துப் பயன் இல்லை. எனவே அவற்றைக் கதைகளுடன் இணைத்து மக்களைக் கவரும் வண்ணம் நூல்களைப் படைக்கத் துவங்கிய காலம் அது.

பெரிய நூல்கள் எல்லாம் வெண்பாவில் இயற்றப்பட்டு வந்த காலத்தில் திருத்தக்கத்தேவர் விருத்தம் என்ற செய்யுள் வகையைப் பயன்படுத்திப் பெரும் காப்பியத்தையே பாடி முடித்தார். அதுவே தமிழின் ஐம்பெருங்காப்பியங்களுள் முதன்மையான சீவக சிந்தாமணி. தமிழில் விருத்தப்பாவால் எழுதப்பட்ட நூல். பிற்காலத்தில் கம்பர் (கி.பி. 1180–1250) தமிழில் இராமாயணம் இயற்றும்போது

இலகுலீசர்

சிவபெருமானின் 64 வடிவங்களில் 28வது வடிவமாக இருப்பவர் இலகுலீசர். சைவசமயத்தின் உட்பிரிவுகளான கபாலிகம், காளாமுகம், பாசுபதம், மாவிரதம், பைரவம், வாமம் ஆகிய ஆறு பிரிவுகளில் 'பாசுபதத்தை' சேர்ந்தவர்கள் வணங்கும் தெய்வமாக விளங்குபவர் ''இலகுலீசர்''. அரிதாகவே காணப்படும் இலகுலீசர் சிற்பங்கள் தமிழகத்தில் அரிட்டாபட்டி குடைவரையிலும்,பொன்னமராவதி தேவர்மலை குடைவரையிலும் உள்ளது. கர்நாடகம், குஜராத், சௌராஷ்டிரம் மற்றும் சில கிழக்கிந்தியப் பகுதிகளில் இலகுலீச சிற்பம் கிடைத்துள்ளது. எலிபண்டாக் குகைகளிலும் இலகுலீசர் வடிக்கப் பெற்று இருக்கிறார். கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகம் அருகே வரஞ்சரம் என்ற ஊரில் பசுபதீஸ்வரர் கோவில் உள்ளது 1200 ஆண்டுகளுக்கு முற்பட்ட இலகுலீசர் சிற்பம் அங்கு இருக்கிறது.

விருத்தம் பெரும் புகழ் பெற்றது.

"விருத்தம் என்றால் என்ன?" என்று நாம் கனவில் கேட்டது நம் புலனுக்கு இலேசாகப் புரிந்தது. சீவகன் புன்முறுவல் செய்தான். நமது அறியாமையைக் கண்டோ என்று நாணம் ஏற்பட்டது.

"எழுத்தாளரே, விருத்தத்தில் நான்கே அடிகள் தான். முதல் அடியில் எத்தனை சீர்கள் வருமோ அத்தனை சீர்கள் மற்ற மூன்று அடிகளிலும் வரும். முதல் அடியில் அமைந்த சீர்களின் அமைப்பு அடுத்தடுத்த அடிகளிலும் அதே முறையில் வரும். அதனால் முதல் அடியின் ஓசையே மற்ற மூன்று அடிகளிலும் திரும்பத் திரும்ப ஒலிக்கும்."

நாம் நமது மேதாவிலாசத்தைக் காட்டிக் கொள்ள முயற்சித்தோம். "இரண்டே அடியில் கூறியவர் அல்லவா எங்கள் வள்ளுவப் பெருமான்?" என்று சீவகனை மடக்கினோம்.

"ஆம். அவர் காலம் இன்னும் ஆயிரம் ஆண்டுகள் முந்தையது. அவரும் சமணர் தான் என்பதே என் தெளிவு" என்றான் சீவகன். நாம் முறுவலித்தோம். சீவகன் மேலும் தொடர்ந்தான்.

"ஒரு அடிக்கு இத்தனை சீர்கள் வரவேண்டும், இன்ன அளவான சீர்கள் வரவேண்டும் என்ற வரையறை இல்லை. அதனால் ஒரு விருத்தத்தின் அடிகள் நீண்டு ஒலிக்கலாம். மற்றொரு விருத்தத்தின்



நமது பயணப் பாதை

அடிகள் குறுகி ஒலிக்கலாம். சிறுசிறு சீர்கள் கொண்ட ஒரு விருத்தம் பரபரப்பாகவோ, துடிதுடிப்பாகவோ இருக்கலாம். நீண்ட சீர்கள் கொண்ட மற்றொரு விருத்தம் ஆழம் உடையதாகவோ, அமைதி உடையதாகவோ இருக்கலாம்." என்று அவன் விளக்கினான்.

கேட்டதைத் தரும் இயல்புடையது தேவலோக சிந்தாமணி. 'சீவகனுடைய கதையைக் கூறும் சிந்தாமணி" கேட்டதைத் தருமோ? ஆக்கல், அழித்தல், காத்தல் ஆகிய முத்தொழில்களில் சமணத் தீர்த்தங்கரார்கள் ஈடுபடுவதில்லையே? பிறகு

ஏன் தன் நூலுக்கு "சீவக சிந்தாமணி" எனப் பெயரிட்டார் திருத்தக்கதேவர்?

தெரிந்துகொள்ள சீவகனின் கரம் பற்றி மாயா விநோதச் சொப்பனத் தேரேறி நான்மாடக் கூடல் நகரான மாமதுரை செல்ல வேண்டும்.

(மேலும் வளரும்)

பாசுபதம்

சங்க காலம் முதற்கொண்டு தமிழகத்தில் பாசுபதம் இருந்திருக்கிறது குஜராத் மாநிலம் காயாரோகணம் என்ற இடத்தில் லகுலீசர் அவதரித்து அவரது சீடர்கள் கௌசிகர் கார்க்கி கவுதமன் ஆகியோர் மூலம் இந்தியா முழுக்க அவரது தத்துவம் பரவியதாகக் கூறுகிறார்கள்

தமிழகத்தில் மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டில் இது வேர்விடத் தொடங்கியது

பாசுபதத்தைப் பின்பற்றுபவர்கள் விபூதியில் குளிக்கவேண்டும்.. சாம்பலில் படுத்து உறங்க வேண்டும்.. சாம்பலில் நடனமாட வேண்டும்.. பரமனின் மாலைகளை அணிந்து கொள்ள வேண்டும்.. குறிப்பிட்ட கோவில்களில் தான் தங்க வேண்டும்.

ஒரு காலத்தில் கம்போடியா வரை பாசுபதம் பரவி இருந்தது. தமிழகத்தில் 20க்கும் மேற்பட்ட இலகுலீசர் சிற்பங்கள் தான் இதுவரை கிடைத்துள்ளன. அவற்றில் பத்துக்கும் மேற்பட்டவை ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்டத்தில் இருக்கின்றன.

பார்வை:

"Lord Mahavira and his times"- Kailash Chand Jain (1991) - Motilal Banarsidass Publishers PVT LTD Delhi (India)

சீவகசிந்தாமணி - டாக்டர் உ.வே. சாமிநாதையர், சீவகசிந்தாமணி குறித்த தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகள்

கட்டுரை

முனைவர். சித்தமருத்துவர். அருள்அமுதன்

பெண்நலம் காக்கும் சித்த மருத்துவங்கள்

பெண்களுக்கான நோய்களைப்பற்றியும் அதன் மருத்துவ முறைகளைப் பற்றியும் தமிழகத்தில் உள்ள பிள்ளைப்பேறு மருத்துவர்களுக்கு, ஏன் சித்த மருத்துவர்களுக்கே தெரியுமா என்பது சந்தேகம் தான். இப்படி பல சித்த இரகசியங்கள் கல்லூரிப் பாடத்திட்டத்தில் இன்னும் சேர்க்கப்பட வேண்டும். இந்த சித்த மருத்துவ சுவடிப்புத்தகங்கள் குறித்த விவரங்கள் ஒன்றிய அரசின் Drug and Cosmetic Act வரிசைப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். தமிழரின் சித்த மருத்துவம் நமக்காக எவ்வளவோ கொடைகளைக் கொடுத்திருக்கிறது. இன்றைய தலைமுறையினர், இதைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை, அதை நம்புவதும் இல்லை. இளைய தலைமுறையினர் இவற்றை ஆராய்ச்சிக்கு உட்படுத்தும் நோக்கோடு கையிலெடுத்தால் பல அற்புதங்களை நிகழ்த்தலாம்.

பெண்குழந்தைகள் பருவமடையும் வயதுவரை வாலைப்பருவம் என அழைக்கப்படுகின்றனர். 13 முதல் 16 வயது வரை மங்கை (தருணி பருவம்) என அழைக்கப்படுகிறாள். உடலில் ஏற்படும் மாறுதல்களால், வாழ்க்கையின் புதிய விஷயங்களை உணருகிறாள். 16 முதல் 20 வயதுவரை மடந்தைப் பருவமாகும். இந்த பருவத்தில்தான் ஒரு பெண் முழு வளர்ச்சியை எட்டுகிறாள். அதுமுதல் 25 வயதுவரைக்கும் அரிவைப் பருவத்தில் இருக்கிறாள். உடல் மற்றும் உள்ளத்தால் முழு வளர்ச்சி அடைந்த இந்தப் பருவம்தான் திருமணம் மற்றும் குழந்தைப்பேறுக்கான சரியான பருவமாகும். அதற்கு அடுத்து 30 வயது வரை தெரிவைப் பருவமாகும். இதுவும் குழந்தை பெற்றுக்கொள்ள சரியான பருவமாகும். இனிமேல் தாய்மை அடைய முடியாது என்ற பருவம் வந்தபிறகு, பெண் பேரிளம் பருவத்தை எட்டுகிறாள்.

இவ்வாறு சித்தர்கள் பெண்களின் பருவங்களை பிரித்து வைத்துள்ளனர். ஒவ்வொரு பருவத்திலும் ஏற்படும் பலவகை ஆரோக்கிய சிக்கல்களுக்கு தக்க மருந்துகளையும், உணவுகளையும் சித்தர்கள் கொடுத்துச் சென்றுள்ளனர். சீவோர்ப்பத்தி சிந்தாமணி, கர்ப்பக்கோள் மருத்துவம், மதியுறை நூல், அகத்தீசர் அரிவையர் சிந்தாமணி, யூகிமுனிவர் சூதக நூல் போன்ற பல பெண்களுக்கான சித்த மருத்துவ நூல்கள் உள்ளன. மாதர் மருத்துவம் என்ற சித்த மருத்துவ நூலை வீரமாமுனிவர் ஓலைச்சுவடியில் எழுதியுள்ளார். இத்தனை அறிவுச்சுரங்கத்தைக் கொண்டுள்ள இந்தப் புத்தகங்கள் எவையும் ஒன்றிய அரசின் Drug and Cosmetic Act-ன் கீழ் அங்கீகரிக்கப்படவில்லை என்பது மிகுந்த வேதனைக்குரியது. அதனால் இந்த மருந்துகளை தயாரித்து விற்பனை செய்ய முடியாத சூழ்நிலைக்கு தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

பொதுவாக, மங்கை பருவம் (வயதுக்கு வந்த பெண்பிள்ளைகள், 13-16 வயது), பிறவிடைப் பருவம் (மடந்தை, அரிவை, தெரிவை பருவம், 16-45 வயது), கர்ப்பிணிப் பருவம், பேரிளம் பருவம் (மாதவிடாய் நின்ற பெண்கள்) என்று நான்கு பிரிவுகளாக தற்போது பிரித்துக் கொள்வது எளிதாகும்.

1. மங்கைப்பருவம்: (13-16 வயது)

13 முதல் 16 வயதில் (வயதுக்கு வரும் பெண்பிள்ளைகள்) ஹார்மோன்கள் இயங்க ஆரம்பிப்பதன் விளைவாக, இனப்பெருக்க உறுப்புகளாகிய கருப்பை மற்றும் மார்பகம் வளர்ச்சியடைய ஆரம்பமாகிறது. அதன் விளைவாக பூப்பு (மாதவிடாய்) ஆரம்பம் ஆகிறது. முதல் மாதவிடாயைத்தான் பெண் குழந்தைகள் வயதுக்கு வந்ததாகக் கருதி தமிழ் மரபில் பூப்புனித நீராட்டுவிழா கொண்டாடுகிறோம். இந்த விழாவானது சில நாட்கள் தொடர்ந்து நடக்கிறது. அதில் ஒவ்வொரு ஊரிலும் விதவிதமான உணவுகளை செய்து அந்த பெண்பிள்ளைக்கு கொடுக்கிறார்கள். உதாரணமாக உளுந்து, எள், வெந்தயம், சிறுதானியம், முட்டை, நல்லெண்ணெய் கலந்த உணவுகளை செய்து அந்தப் பெண்ணுக்குக் கொடுப்பார்கள். இவை அத்தனையும் ஹார்மோன்களை சரிவரச் செயல்பட வைக்கவும், இனப்பெருக்க உறுப்புகளை சரிவர வளரச்செய்யவும் உதவி செய்கிறது. குறிப்பிட்ட உணவுகளை இந்த சமயத்தில் தொடர்ந்து தராமல் விட்டால், அது பல நோய்களை பெண்களுக்கு பிற்காலத்தில் உண்டாக்கும். ஆனால், இந்த

உணவுப்பழக்கம் நவீனகால குடும்பங்களிடம் குறைந்து வருகிறது, இதை ஒரு சடங்காக மட்டுமல்லாமல், மருத்துவ ரீதியிலான ஒரு விழாவாக, குறிப்பாக உணவுப்பழக்கங்களை தமிழ்ச் சமூகம் தொடர்ந்து செய்ய வேண்டும். விளையாட்டுகள், யோகாசனம், நீச்சல் பயிற்சி என பல பயிற்சிகளும் நல்ல பலனையே தரும்.

சில பெண்பிள்ளைகள் பூப்பு அடையத் தாமதமாகும். இந்தச் சூழலில் கண்டிப்பாக மருத்துவரை அணுகி, ஹார்மோன்களின் அளவுகளை பரிசோதித்துக்கொள்ள வேண்டும், ஸ்கேன் எடுத்தும் பார்க்க வேண்டும். பூப்பை வரச்செய்யும் சித்த மருந்துகள் நிறைய உள்ளன. சிலருக்கு மரபணு பிரச்சினை அல்லது ஹார்மோன் சுரப்பியின் செயல்பாட்டின்மை போன்ற சில குறிப்பிட்ட காரணிகளில் நவீன மருந்துகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

பூப்பு எய்திய பெண்பிள்ளைகளுக்கு வெள்ளைப்படுதல் (மேகம்), வலியுடன்கூடிய பூப்பு, அதிக உதிரப்போக்கு, குறைந்த உதிரப்போக்கு, பூப்பு தள்ளிப்போதல், உடல் எடை அதிகமாகாமை போன்ற சில குறிப்பிட்ட பிரச்சனைகள் வரலாம். இதற்கு, கண்டிப்பாக சித்த மருந்துவரை அணுக வேண்டும். சோற்றுக்கற்றாழை (குமரி), கல்யாணப் பூசணி, பூந்தாழை விழுது, நாவல்பட்டை, உதியமரப்பட்டை போன்ற மூலிகைகளாலான பல மருந்துகளில், எது தேவையோ அதை தெரிந்தெடுத்துத் தரும்போது சிறப்பாக அமையும். நவீன மருத்துவத்தில், கொடுக்கும் மருந்துகள் ஹார்மோன்களில் நேரடியாக வேலை செய்வதால், கடைசியாகத்தான் நவீன மருந்தை நாடவேண்டும். இந்த வயதில் கொடுக்கும் உணவுகளும் மருந்துகளும் வாழ்வின் பிற்காலத்தில் பல நோய்களை வராமல் செய்யவும், ஆரோக்கியமாக குழந்தைப்பேறடையவும் மிகவும் முக்கியம் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

2. பிறவிடைப் பருவம்: (16-45 வயது)

பூப்பு எய்ததிலிருந்து பூப்பு நிற்கும் காலத்திற்கு இடைப்பட்ட காலத்தில் பெண்கள் பிறவிடைப் பருவத்தினர் என்று அழைக்கப்படுகிறார்கள். இக்காலத்தில், ஆண்களுக்கு வரக்கூடிய அத்தனை நோய்களும் பெண்களுக்கும் வரலாம். அதிகப்படியாக, பெண்கள் சம்பந்தப்பட்ட பல நோய்களும் கூடுதலாக வரலாம். எனவே, பெண்களுக்கு இந்தப் பருவத்தில் அதிகப்படியான கவனம் தேவைப்படுகிறது. இந்தக் காலத்தில் பெண்களுக்கு வாத யோனி, பித்த யோனி, கொதிப்பு யோனி, என்று 18 வகையான இன உறுப்பு நோய்களும் அவற்றின் குறிகுணங்களும், அவற்றிற்கான மருந்துகளும் செம்மையாக சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளன. இவற்றிற்காக நன்னானி மணப்பாகு (நன்னாரி சர்பத்), கல்யாண பூசணி, அயச்செந்தூரம், மண்டூர செந்தூரம், படிகார செந்தூரம், கற்பூராதி மெழுகு, நிலப்பனை கிருதம், குக்கில் கிருதம் என பல மருந்துகள் இருக்கின்றன. இவற்றின் துணையோடு இந்த நோய்களை சரி செய்யாவிட்டால், குழந்தை பெறுவதில் சிக்கல்கள் நீடிக்கும் என்று சொல்லப்படிருக்கிறது.

பெரும்பாடு என்னும் நோய் வருவதற்கு பல காரணங்கள் உண்டு. ஹார்மோன் குறைபாடு முதல்,

கர்ப்பப்பை புற்று நோய் வரை என்ன காரணம் என்று கண்டுபிடித்து, சரியான மருத்துவம் பார்ப்பது நல்லது. வெள்ளைப்படுதலை மேகம் என்றும் கிராமத்தில் அழைப்பர். மழைமேகம் எப்படி தூறிக்கொண்டே இருக்குமோ அப்படியே, இந்த வெள்ளைப்படுதலும் நீண்டுகொண்டே இருக்கும். உடலின் வெப்பம் அதிகமாகி உடலில் ஒருவித உட்சூட்டை உணர்வர். ஆனால், தெர்மாமீட்டரில் இந்த வெப்பம் தெரியாது. கிருமித்தொற்றும் இந்த வெள்ளைப்படுதலை உண்டாக்கலாம். திரிபலா கஷாயத்தை வெளிப்புறமாக பயன்படுத்துவதுடன் உள்மருந்துகள் கண்டிப்பாக உண்ணவேண்டும்.

அதிகமான வலியை உண்டாக்கும் நோயை சூலை என்றழைப்பர். நிதம்ப சூலை, யோனி சூலை, சலச்சூலை, இரத்தசூலை, சூலைவாய்வு, கர்ப்ப சூலை போன்ற நோய்களைப் பற்றியும் அவற்றின் பரிகாரங்களைப் பற்றியும் சித்த மருத்துவ நூல்கள் விரிவாகக் குறிப்பிடுகின்றன. பெரும்பாடு, வெள்ளைப்படுதல், சூதக வாய்வு, சூதக சன்னி, சுரோணித வாய்வு, கிருமி ரோகம் (பாசி படர்தல்), கர்ப்ப திரட்சி, வயிற்றுத் திரட்சை, சூரை குன்மம், கர்ப்ப சுரோணிதம், அக்கினி வாய்வு, அகுவை, யோனிப்புண், கிரந்தி, யோனிப்புற்று இவைகளும் விரிவாகப் பேசப்படுகின்றன. இவற்றை சரிசெய்யாவிட்டல், பெண்களுக்கு துன்பம் தொடரும், கர்ப்பமாவதில் சிக்கல்கள் நீடிக்கும்.

3. கர்ப்பிணிப் பருவம்:

"பாரப்பா பெண்மலடாங் கர்ப்பக் கோளின்
பக்குவத்தைச் சொல்கிறேன் பண்பாய்க் கேளு
ஆரப்பா ஆண்மலடே ஆகு மல்லாமல்
அப்பனே பெண்மலடு ஆரு மில்லை"

பெண்மலடைப்பற்றிய கர்ப்பக்கோள் என்ற நூலில், அகத்தியர், ஆண்களில் மலடுண்டு, பெண்களில் மலடில்லை என்றே கூறுகிறார். கருக்குழியில் பாசி படர்வதாலும், வாய்வு நிறைந்தாலும், தசை வளர்ந்தாலும், புழு சேர்ந்திருந்தாலும், இரத்தம் கட்டியிருந்தாலும், மதத்திருந்தாலும் குழந்தை உருவாவதில் சிக்கல் ஏற்படும் என்று அகத்தியர் ஒவ்வொன்றாக விவரிக்கிறார். சரியான காரணத்தை கண்டறிந்து, சரியான மருத்துவமுறையை செய்தால் பெண்களில் மலடில்லை என்று அகத்தியர் உறுதி கூறுகிறார்.

அக்காலங்களில் பிள்ளை பெறமுடியாத பெண்களை மலடி என்றழைப்பர், இக்காலத்தில் அந்த வார்த்தை கொடூரமாக இருப்பதால் அதைத் தவிர்ப்பது நலம். அக்காலத்தில் உள்ள சித்தர் நூல்களில், அதிமலடு, காகமலடு, கதலிமலடு, வாதமலடு, பித்த மலடு, ஐய்ய மலடு, திமிர் மலடு, அலகை மலடு, சோரை மலடு, பெற்ற மலடு, புழு மலடு, வாய்வு மலடு, வறட்சி மலடு, மாரிகர்ப்பம், அழிகர்ப்பம், சுத்திபிண்ட கர்ப்பம், மும்மாங்க கர்ப்பம், கர்ப்பவாய்வு, சூலைவாய்வு, கர்ப்பவிப்புருதி, விப்புருதி வாய்வு, சூதகவாய்வு, கர்ப்பபுழு என்ற நோய்கள் கர்பமாவதில் சிக்கல்களை உண்டாக்கும்.

உடல் எடை அதிகமாகி இடுப்பு மற்றும் வயிறு பருத்துக் காணும் பெண்ணுக்கு அதிமலடு என்னும் நோய் இருக்கிறபடியால், குழந்தை பெற்றுகொள்ள முடியாது என்று சொல்லப்பட்டுள்ளது. இன்றைய காலத்தில், தைராய்டு, மற்ற ஹார்மோன் பிரச்சனைகள், சினைப்பை கட்டிகள் என பலகாரணங்களால் இந்த அதிமலடு ஏற்படும். இரண்டு குழந்தைகள் பிறந்தபின்னர் அதற்குப்பிறகு குழந்தை பிறக்காவிட்டால் காகமலடு எனப்படும். சிலருக்கு கர்ப்பம் அழிந்து கொண்டே இருக்கும் அல்லது கருச்சிதைவு ஆகும், அல்லது குழந்தை இறந்து பிறக்கும். இதனால் குழந்தை இல்லாமலே போகும், இதற்கு மாரிகர்ப்பம், அழிகர்ப்பம், சுத்தி பிண்ட கர்ப்பம் என்று பெயர்.

வாய்வு அல்லது வாதம் என்ற பதம், அந்த உறுப்பின் தொழில்குறைபாட்டை குறிக்கிறது. உதாரணமாக பக்க வாய்வு, பக்க வாதம் என்பது, உடலின் ஒருபக்க தொழில் குறைபாட்டைக் குறிப்பதாகும். இதைப்போல பெண்களுக்கான வாய்வு நோய்கள் பலவுண்டு. சிலருக்கு இரண்டு பூப்புவுற்கு இடைப்பட்டகாலத்தில், இரத்தப்போக்கு காணும், அல்லது பூப்பு மிகவும் தள்ளிப்போகும் (*Irregular periods*). இதைத்தான் கர்ப்பவாய்வு என்று சித்த மருத்துவத்தில் அழைக்கப்படுகிறது. இந்த நோய் ஹார்மோன் சரிவர இயங்காததால் வருவதாகும், இவருக்கும் கர்ப்பமாவதில் சிக்கல் வரும். சூலை வாய்வு, விப்புருதி வாய்வு, கர்ப்ப விப்புருதி, என்பது *fibroid* போன்றதொரு நோயைக் குறிக்கிறது. இதற்கு வீளிநெய் என்ற மருந்து கொடுக்கப்படுகிறது. *Anti-sperm antibody* என்ற ஒரு காரணி, பெண்ணின் உடலில் புகுந்த விந்தணுவை அழித்துவிடுவதால் கரு உருவாவதில்லை. இதை சித்த மருத்துவத்தில்,

தமிழகத்தில் தற்போது செயற்கை கருத்தரிப்பு மையம் மிகப்பெரும் பணம் சம்பாதிக்கும் தொழிலாகவே மாறிவருகிறது. இந்தச் சூழலில், தமிழில், சித்த மருத்துவத்தில் ஆர்வமுள்ள நவீன மருத்துவர்களும், சித்த மருத்துவர்களை உள்ளடக்கி, ஒருங்கிணைந்த கருத்தரிப்பு மையம், பிள்ளைப்பேறு மருத்துவமனை, பெண்கள் ஆரோக்கிய மையம் என்று பலவற்றை அறம் சார்ந்து செய்யலாம். BSMS பட்டதாரி மருத்துவர்களில் 80% பெண்களே, அவர்கள் இந்த பெண்கள் மருத்துவத்தை பயிற்சி செய்ய ஆரம்பித்தால், உலகுக்கே வழி காட்டலாம்.

கர்ப்பபுழு என்று அழைப்பர்

இவர்களுக்கு, வல்லாரை கிருதம், பிரம்மி நெய், குமட்டிக்காய் கிருதம், கலிங்காதி தைலம், கல்யாண கிருதம், பண்டார குழம்பு, வீழி (விழுதி) எண்ணெய் போன்ற மருந்துகளைக் கொடுக்கவேண்டும். உணவில் பெண்கள், சோற்றுக்கற்றாழை, பூண்டு, எள்ளு, கொள்ளு, பசலைக்கீரை, உளுந்து, வெந்தயம் என பல உணவுகளை சித்த மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் பெண்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். செங்கல்பட்டைச் சேர்ந்த சித்த மருத்துவர் ஷங்கர் அவர்கள் இந்தத் துறையில் தனிக்கவனம் எடுத்து கடந்த 25 ஆண்டுகளாக பலருக்கும் குழந்தைப்பேறு கிடைக்க உதவி செய்கிறார். இவரைப்போல பல சித்த மருத்துவர்கள் இருக்கிறார்கள். மருத்துவ சோதிடத்தை அடிப்படையாக வைத்து, ஒரு தம்பதிக்கு எந்தக் காலத்தில் குழந்தைப்பேறு கிடைக்குமென தெரிந்து அதற்கேற்ப மருந்துகள் கொடுக்கும் பழக்கமும் கடைபிடிக்கப்படுகிறது. இவை ஆராய்ச்சிக்கு உரியது.

கர்ப்பநாடி எப்படி இருக்கும்: கர்ப்பம் ஆகிவிட்டதா என்பதையும், ஆண் அல்லது பெண் சிசுவா என்பதையும் நாடிபார்த்தே அறிந்துகொள்ளும் அளவுக்கு சித்த மருத்துவம் மக்கள் மருத்துவமாக அக்காலத்தில் இருந்து வந்துள்ளது.

> "காரிகை தனக்குப் பிள்ளை கருப்பையைப் பற்றி நின்றால்
> கூறிய வாத நாடி குண்டலப் புழுப்போல் ஊரும்
> வீரிய மூன்றாந் திங்கள் விட்டில் போல பதைத்து நிற்கும்
> பாரிய எட்டாந் திங்கள் பய்யவே புழுப்போல் ஊரும்"

கையில் நாடிபிடித்து பார்க்கும்போது, வாத நாடி குண்டலப்புழுபோல துடித்தால் கர்ப்பம் என்று உறுதிசெய்து கொள்ளலாம், அதுவே விட்டில் பூச்சிபோல துடித்தால் அது மூன்றாம் மாதம் என்றும், புழுபோல ஊர்ந்தால் அது எட்டாம் மாத கர்ப்பம் என்றும் உறுதி செய்து கொள்ளலாம். கைநாடிபார்க்கும் கருவி கண்டுபிடிக்கப்பட்டால், குறைந்த விலையில், கருவின் தன்மையையும், குழந்தையின் ஆரோக்கியத்தையும் தெரிந்து கொள்ள முடியும்.

கர்ப்பிணிப்பெண்ணுக்கான பிரச்சனைகள்: கர்ப்பிணி பெண்ணுக்கு ஏற்படும் பலவகையான இன்னல்களை மூலிகை மருந்துகள் கொண்டே நம்மால் சரிசெய்ய இயலும். கர்ப்பிணிப் பெண்ணுக்கு, குமட்டல், வாந்தி, வாய்வு, சூலை, கர்ப்ப வாயு, மேகம், உடல் வீக்கம், மலச்சிக்கல், சிறுநீர் கட்டு, யோனி நீர், உடல் வலி, வயிற்று வலி, இளைப்பு, சுவாசகாசம், பித்த வாய்வு, செரியாமை, மந்தம், பொருமல், கருச்சிதைவு, சூசிகா வாய்வு போன்ற நோய்கள் வருவதாக சித்த மருத்துவ நூல்கள் குறிப்பிடுகின்றன.

கர்ப்பிணிப் பெண்ணின் வாந்தி, குமட்டலுக்கு சீரகம், வில்வவேர், பனைஓலை, ஏலம், குழவிக் கூடு இவற்றைச் சேர்த்து குடிநீர் செய்து அருந்த வேண்டும். பொதுவாக குழவிக் கூடு கட்டினால், அந்த வீட்டில் குழந்தை பிறக்கப் போகிறது, அதாவது பெண் கர்ப்பமாகிறாள் என்று முதியோர்கள் கூறுவது வழக்கம். அந்த குழவிகூடு தான் கர்ப்பமாகிற பெண்ணின் குமட்டலுக்கு மருந்தாகிறது. குழவிக்கூடு என்பது, குழவி என்ற பூச்சி தன் எச்சிலை பயன்படுதி மண்ணால் அல்லது அரக்கால் கட்டும் கூடாகும். அதன் உமிழ்நீரில் மருத்துவ குணம் இருக்கிறதா என்ற ஆராய்ச்சி தேவை. மாங்காய், பச்சை மிளகாய், புளி, திராட்சை, இஞ்சி, இவை கலந்த மாங்காய்க் குழம்பு அந்த காலத்தில் கர்ப்பிணி பெண்ணின் வாந்தியைத் தணிக்க உணவாகக் கொடுக்கப்பட்டது.

துவாலை என்னும் நோயில், கர்ப்பிணிக்கு இரத்த ஒழுக்கு ஏற்பட்டு கருச்சிதைவு வரும். துவாலையை சரிசெய்ய, செங்கழுநீர்கிழங்கு, மஞ்சிட்டி, அதிமதுரம், காட்டாத்திபூ இவைகளை பசும்பாலில் கலந்து கொடுக்க வேண்டும். கர்ப்பிணிக்கு சுரம் ஏற்பட்டால் அதற்கு தனி மருந்து, அதிக தாகம் ஏற்பட்டால் அதற்கு தனி மருந்து, சிறுநீரில் கல்லடைப்பு வந்தால் அதற்கு தனி மருந்து, என கர்ப்பிணிப்பெண்களுக்கான தனி மருத்துவ முறையையே சித்தர்கள் உருவாக்கி வைத்து இருக்கிறார்கள்.

குங்குமப்பூ, தாமரை மகரந்தம், தாமரைப் பூ, ஏலக்காய், குறுந்தட்டி வேர், நன்னாரி, நீர்முள்ளி, அதிமதுரம், முருங்கை இலை, முருங்கைப் பூ, வல்லாரை, சிறுகண்பீளை, பொன்னாங்கண்ணி, பாசிப்பயறு, கோதுமை மாவு, சாமை அரிசி, ரோசாப்பூவிதழ், இளநீர், போன்ற மூலிகைகளை கொண்டு கஷாயம், நெய், சூரணம், கஞ்சி, பாயாசம், அடை, போன்றவைகளை சித்த மருத்துவர் கொடுக்க முடியும். முடக்கறுத்தான் கொடியை கிராமங்களில் இன்றளவும் தாய்-சேய் ஆரோக்கியமாக இருக்க தாய்க்குகடைசி மூன்று மாதங்களும் கொடுக்கிறார்கள். இதைப்போன்ற ஏட்டில் எழுதப்படாத பல பாரம்பரிய மருத்துவ அறிவு தமிழ் மண்ணிலிருந்து திரட்டி எடுக்கப்படவேண்டும்.

நான் சித்த மருத்துவக் கல்லூரியில் படித்துகொண்டிருந்த போது, ஒருமுறை, பனிக்குடம் (*Amniotic fluid*) குறைந்த கர்ப்பிணிப்பெண் ஒருவர் எனது பேராசிரியர் (காலஞ்சென்ற) மருத்துவர் சொர்னமாரியம்மாள் அவர்களைச் சந்திக்க வந்தார். அவருக்கு பாவன பஞ்சாங்குல தைலம் என்ற தைலம் கொடுக்கப்பட்டது. பின்னர், பனிக்குடம் இயல்பாகி முழுநாள் வளர்ந்தபின்னர் இயல்பான முறையில் பிரசவம் ஆனது. அவர்கள் வாழ்ந்த காலத்தில் குழந்தையில்லாத பல பெண்களுக்கு குறைந்த செலவில் சித்த மருத்துவம் மூலமாக குழந்தை பிறந்துள்ளது. கடந்த காலத்தில் முதலமைச்சராக இருந்த செல்வி ஜெயலலிதா அவர்கள் பல சித்த மருந்துகளை உள்ளடக்கிய 'அம்மா மகப்பேறு சஞ்சீவிப் பெட்டகம்' என்ற பெயரில் கருவுற்ற தாய்மார்களுக்கு கொடுக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார், அதில் கருவுற்ற இரண்டாம் மாதம் முதல், பிரசவமாகி பாலூட்டும் நாள்வரையிலும் ஒவ்வொரு மாதமும் உண்ண வேண்டிய மருந்துகள் அடங்கிருக்கும். இது தற்போதும் அரசு சித்த மருத்துவ நிலையங்களில் கிடைக்கிறது.

ஒவ்வொரு மாதமும் மூலிகை மருந்துகள்: ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு கஷாயம் வீதமாக பத்து மாதமும் என்னென்ன கொடுக்க வேண்டும் என்று நூலில் சொல்லப்பட்ட கஷாயங்களை கர்ப்பிணிப் பெண்கள் அருந்தும் போது, சுகப்பிரசவம் ஆகும்.

"மாதமது நாலிலே மதலைக் கேதான்
நாசி செவியுண்டாகும் போதே தாய்க்கு
சூதகவும் கலங்கி விழும் யோனி தன்னில்
சிறு குத்தலடி வயற்றில் வலியுங்காணும்
காதலுடன் தீர்ப்பதற்கு திராட்சை சந்தம்
கொட்டியென்ற கழஞ்சுவகை கழஞ்சிவீதம்
கோதயரே யாவின்பாலில் தன்னாலாட்டி
கொடுத்துவிடு குணமாகுமைந்தில் சொல்வேன்."

இந்த பாடல், நான்காம் மாதத்தில், கொடுக்க வேண்டிய மூலிகைகளான திராட்சை, சந்தனம், கொட்டிகிழங்குகளை பசும்பாலில் அரைத்து கொடுக்க வேண்டும் என்று சொல்கிறது. இப்படி ஒவ்வொரு மாதமும் கொடுக்கும்போதும், தாய்க்கும், உள்ளே வளரும் சிசுவுக்கும் நன்மை பயக்கும்.

கர்ப்பிணிக்கு வர்ம பரிகாரம்: கர்ப்பிணிக்கு வெளிப்புறம் இருந்தும், உடலின் உள்புறமிருக்கும் குழவியினாலும் (கருவிலிருக்கும் குழந்தை) உடலுக்கு அடிகள் அல்லது காயங்கள் நிகழலாம். இதை சரிசெய்யாவிட்டால் அந்த காயம் நிலைநின்று வர்ம காயங்களாக மாறும், பின்னர் வர்ம நோய்களாக மாறும். இவற்றை சரிசெய்ய வர்ம நூல்களில் சிறப்பான தடவல் (*Massage*) முறைகளும், மூலிகை மருந்துகளும், உணவு முறைகளும் கூறப்பட்டுள்ளன.

கருவிலிருக்கும் குழவிக்கு மருந்து: கருவிலிருக்கும் குழவி தாயின் ஒரு பகுதியாகத்தான் வளர்கிறது. அதற்கான மருந்தை தாய்தான் உட்கொள்ள வேண்டும், எனவே அதற்கான நோய்களையும், மருந்துகளையும் தாய்க்கான நூல்களிலேயே கூறப்பட்டுள்ளது. சூலெண்ணெய், கருவளர்க்கும் நெய், நாராயணி நெய், பாவன பஞ்சாங்குல தைலம் என சில மருந்துகள் குழவிகள் ஆரோக்கியமாக வளர்ந்து வெளியே வருவதற்காக தாய்க்கு கொடுக்கப்படுகிறது. இந்த மருந்தில் ஒன்றை, ஐந்தாம் மாதம் முதலாக ஒன்பதாம் மாதம் வரையிலும், ஒவ்வொரு மாதமும், ஐந்து நாட்கள் மட்டும் அருந்தினால் போதுமானது. கருவை அழிக்கும் கிரந்தி, கருவை அழிக்கும் சூலை போன்ற நோய்கள் தீரும். இந்த மருந்தை தாய் அருந்தினால், பிறக்கும் குழந்தைக்கு பரம்பரையாக வரக்கூடிய கரப்பான் என்ற தோல்நோய் பிற்காலத்தில் வராமலேயே தடுக்கலாம், ஆரோக்கியமான குழந்தை கண்டிப்பாகக் கிடைக்கும் என்று நூல்கள் கூறுகின்றன. கர்ப்பிணி தாய்க்கும் வரும் வாய்வு, சூலை, மேகம், கர்ப்ப கிரந்தி, பிரமேகம் போன்ற நோய்களையும் இந்த மருந்துகள் தடுக்கும். தாய் சேய் நலத்திற்கு உறுதி தரும் இந்த மருந்துகளை தமிழன் மீண்டும் புழக்கத்தில் கொண்டு வர வேண்டும். ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட மூலிகை மருந்துகளை உண்டுவர அது வயிற்றில் வளரும் சிசுவுக்கும் நன்மையைத் தரும், அதன் உறுப்புகளின் வளர்ச்சிக்கும் பயன்படும்.

பிரசவம் (குழந்தைப்பேறு): முழுவளர்ச்சியடைந்த குழந்தையை ஒன்பது மாதங்கள் கழிந்தபின், பத்தாம் மாதம் இயல்பாக தாயின் உடலிலிருந்து பிரித்து தனியாக்கி அதை சுயமாக இயங்க வைக்கும் நிகழ்வே பிரசவம் ஆகும். ஆலயம்/வீடு பிரவேசித்தல் என்றால் புதியதாக கட்டிய ஆலயம்/வீட்டில் முதலாக நுழையும் நிகழ்வாகும். பிர+சவம் என்றால், தாய் சவமாகி (இறந்து), குழந்தையை உலகுக்கு பிரவேசிக்க செய்தல் ஆகும். குழந்தையை ஆரோக்கியமாக வெளித்தள்ள வேண்டும், தாயின் உடல் மறுபடியும் பழைய நிலையை அடைய வேன்டும். இந்த நிகழ்வின்போது, தாயின் உடலில் ஏகப்பட்ட மாற்றங்கள் தொடர்ந்து நிகழும், இதை சரிவரச் செய்ய, மகா நெய் என்ற மருந்தை பத்தாம் மாதத்தில் தினமும் உண்டுவர, பிரசவம் இயல்பாக நிகழும். பிரசவவலி வந்தபின்னர், வேலிப்பருத்தி, கொழுஞ்சி, குமரி வேர், பாவட்டை, பசலை, சிவனார்வேம்பு, வெட்பாலை, துத்தி போன்ற மூலிகைகளைப் பயன்படுத்தி முற்காலத்தில் பிரசவத்தை எளிதாக்கினர்.

"மருந்துகேள் திற்பிலியும் கிராம்பிந்துப்பும்
மகிமையுடன் கியாழமிட்டு மங்கைக்கூட்டு
அருந்துயரை நிமிடத்துள் கொடிச்சுற்றேகி
அகத்தில் நின்று சேயிவெளியே அலறியேங்கி
சரிந்துடல் தரணியில் வந்தே யேகும்"

தொப்புள்கொடி குழந்தையை சுற்றி இருந்தால், இயல்பான பிரசவம் நடக்காது. இந்த நிலையில், திப்பிலி, கிராம்பு, இந்துப்பு இவற்றை குடிநீரிலிட்டுக் கொடுத்தால் கொடிசுற்று சரியாகும் என்று இந்த மருத்துவப் பாடல் சொல்கிறது. இவற்றால் எப்போது சரிசெய்ய இயலவில்லையோ, அப்போதுதான் அறுவைச் சிகிச்சையை நாடுவது சிறந்தது.

குழந்தை வெளிவந்த பிறகு, கர்ப்பப்பைக்குள், தாய்க்கும் சேய்க்குமான தொப்புள்கொடி (*placenta*) இயல்பாக வெளியேற்றப்பட வேண்டும். அப்படி வெளியேறாவிட்டால், அது தாய்க்கு ஆபத்தாக முடியும். எனவேதான் இதற்கு நஞ்சுக்கொடி என்றும் ஒரு பெயருண்டு. இந்தத் தருணத்தில் அதை வெளியேற்ற சித்த மருந்துகள் இருக்கின்றன. ஒருவேளை பிரசவமான பெண்ணுக்குகிருமித்தொற்று ஏற்பட்டு காய்ச்சல் வந்தால், வேலிப்பருத்தி போன்ற மூலிகைகளைக் கொண்டு கஷாயம் கொடுக்கப்பட்டது சிலருக்கு உதிரப்போக்கு நிற்காமல் இருந்தால், அதை தீரை என்று சொல்லப்படுகிறது, சிலருக்கு கழிச்சல், குன்மம், வாய்வு, சுவாசகாசம், போன்ற பல உபாதைகள் வரும். இவற்றிற்காக சிறப்பாக சவுபாக்கிய சுண்டி, குறிஞ்சான் குழம்பு, பேற்று (பேத்து) மசாலா, அயமோதக லேகியம் போன்ற சித்த மருந்துகளை கொடுப்போம். இதில் சவுபாக்கிய சுண்டி என்னும் மருந்து தமிழக அரசு வழங்கும் அம்மா மகப்பேறு சஞ்சீவிப் பெட்டியில் இருக்கிறது.

பிரசவத்திற்கு பின்னர் தாயின் நிலை: பிரசவத்திற்குப் பிறகு, முதல் மூன்று மாதங்களுக்குள் தாய்க்கு நரம்பு சம்பந்தமான நோய் வந்தால் அதுவே, இளம்பிள்ளைவாதம் ஆகும். இளகும் + பிள்ளை + வாதம், குழந்தை பிறக்கும் சமயம் தாயின் உடல்

சித்த மருத்துவத்தால் எந்த எல்லைவரை சென்று நோய்களை தீர்க்க முடியும் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதும், முடியாத நோய்களுக்கு நவீன மருத்துவத்தை தெரிந்தெடுப்பதும் தான் இன்றைய தேவையாகக் கருதுகிறேன். ஒவ்வொரு பெண்ணும் சித்த முறைப்படி கவனிக்கப்பட்டால், ஆரோக்கியமான எதிர்காலத்தைக் கண்டிப்பாக நம்மால் உருவாக்க முடியும்.

இளகி, அதாவது, கூபகப்பகுதி விரிவடைந்து பின்னர் அது பழைய நிலையை அடையவேண்டும். இதில் ஏதாவது சிக்கல்கள் இருந்தால் வரக்கூடிய வாதமே இளம்பிள்ளை வாதமாகும். இன்றைய நாட்களில், மருத்துவர்கள் இது தெரியாமல் பாலவாதம் என்னும் போலியோவை இளம்பிள்ளைவாதம் என்று அழைக்கிறோம். தமிழ் சித்த அறிவியலுக்கும், தமிழருக்கும் இடையே ஏற்பட்ட இடைவெளியை இது காட்டுகிறது. இளம்பிள்ளை வாதத்தை சரிசெய்ய, பல உள் மற்றும் வெளி மருந்துகள் பிரசவித்த தாய்க்குக் கொடுக்கப்படுகின்றன.

சவறுகாயம் என்றொரு நோய் சித்த மருத்துவத்தில் இருக்கிறது. பிள்ளை பெற்ற மங்கைக்கு, சில காரணங்களால் சுரத்துடன் வயிறு பெருமி, மூச்சிளைப்பு மற்றும் மயக்கம் காணும். இந்த நோய்கண்டவுடன் குறிப்பிட்ட நாளுக்குள் சர்வாங்க தைலம் போன்ற சித்த மருந்துகளை கொடுக்காவிட்டால், பெண்ணுக்கு நிரந்தர நோய்கள் குடிகொள்ளும், உயிருக்கும் ஆபத்துண்டாகும்.

4. பேரிளம் பருவம் (மாதவிடாய் நின்ற பெண்கள்):

ஆண்களுக்கு வருவதுபோல அத்தனை முதுமை சம்பந்தமான பொதுவான நோய்களும் பெண்களுக்கும் வருகின்றன. பெண் ஹார்மோன்களின் அளவு குறைந்து விடுவதால், பூப்பு இருப்பதில்லை. ஆனால், இந்த குறைந்த ஹார்மோன்கள் இவர்களுக்கு மேலும் பலசிரமங்களைத் தருகிறது. சிலருக்கு ஹார்மோன்கள் குறையாமல் இருந்தால், அவர்களுக்கு மார்பகப் புற்று, மார்பகக் கட்டிகள், கருப்பைக் கட்டிகள் என பலதொந்தரவுகள் ஏற்படுகின்றன. சித்த மருத்துவத்தின் மங்கையர்களுக்கான மருத்துவ நூல்கள், இவற்றை உள்ளடக்கவில்லை. ஆனால், பொதுவான நோய்களின் வகைப்பாட்டியலில் இவற்றைப் பற்றி விவரிக்கிறது. உதாரணமாக, யோனிப் புற்று, கருப்பைப் புற்று, எலும்பு சூடு (*osteo porosis*), என பல நோய்களை பொதுப்பிரிவில் நாம் பார்க்கலாம். இந்த வயதில் எலும்பை வலுப்படுத்தவும், ஹார்மோன்களை தேவையான அளவில் வைத்திருக்கவும், உளுந்து, எள்ளு, நல்லெண்ணெய், வெந்தயம், பிரண்டை, கருணைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, இறைச்சி, முட்டை, பால், மோர், தயிர், மீன் போன்ற உணவுகள் அவசியம். கால்சியம் தேவைப்படின் சித்த மருத்துவரை அணுகி, சங்கு பற்பம், பலகரை பற்பம், ஆமையோட்டு பற்பம், சிருங்கி பற்பம், நத்தை ஓட்டு பற்பம், முத்துச்சிப்பி பற்பம், கிளிஞ்சல் பற்பம், பவழபற்பம் என்று ஏதாவது ஒன்றை குறிகுணங்களுக்கேற்ப எடுத்துக்கொள்ளலாம்.

மார்பக நோய்கள்: மார்பக நோய்கள் பெண்களின் எந்த வயதிலும் வரலாம். மார்பக மருத்துவம் என்ற ஒரு தனி நூலே சித்த மருத்துவத்தில் அக்காலத்தில் இருந்தது. அதில் 8 வகையான நோய்கள் பற்றி விவரிக்கப்பட்டிருக்கிறது. மார்பகக் கட்டி, கழலை, சிலந்தி, கிரந்தி, புண், முலைவெடிப்பு, மார்பகப்புற்று என ஒவ்வொன்றுக்கும் குறிகுணங்களும், மருந்துகளும் சொல்லப்பட்டுள்ளது.

பெண்களுக்கான நோய்களைப்பற்றியும் அதன் மருத்துவ முறைகளைப் பற்றியும் தமிழகத்தில் உள்ள பிள்ளைப்பேறு மருத்துவர்களுக்கு, ஏன் சித்த மருத்துவர்களுக்கே தெரியுமா என்பது சந்தேகம் தான். இப்படி பல சித்த இரகசியங்கள் கல்லூரிப் பாடத்திட்டத்தில் இன்னும் சேர்க்கப்பட வேண்டும். இந்த சித்த மருத்துவ சுவடிப்புத்தகங்கள் குறித்த விவரங்கள் ஒன்றிய அரசின் *Drug and Cosmetic Act* வரிசைப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். தமிழரின் சித்த மருத்துவம் நமக்காக எவ்வளவோ கொடைகளைக் கொடுத்திருக்கிறது. இன்றைய தலைமுறையினர், இதைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை, அதை நம்புவதும் இல்லை. இளைய தலைமுறையினர் இவற்றை ஆராய்ச்சிக்கு உட்படுத்தும் நோக்கோடு கையிலெடுத்தால் பல அற்புதங்களை நிகழ்த்தலாம்.

தமிழகத்தில் தற்போது செயற்கை கருத்தரிப்பு மையம் மிகப்பெரும் பணம் சம்பாதிக்கும் தொழிலாகவே மாறிவருகிறது. இந்தச் சூழலில், தமிழில், சித்த மருத்துவத்தில் ஆர்வமுள்ள நவீன மருத்துவர்களும், சித்த மருத்துவர்களை உள்ளடக்கி, ஒருங்கிணைந்த கருத்தரிப்பு மையம், பிள்ளைப்பேறு மருத்துவமனை, பெண்கள் ஆரோக்கிய மையம் என்று பலவற்றை அறம் சார்ந்து செய்யலாம். BSMS பட்டதாரி மருத்துவர்களில் 80% பெண்களே, அவர்கள் இந்த பெண்கள் மருத்துவத்தை பயிற்சி செய்ய ஆரம்பித்தால், உலகுக்கே வழி காட்டலாம். சித்த மருத்துவத்தால் எந்த எல்லைவரை சென்று நோய்களை தீர்க்க முடியும் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதும், முடியாத நோய்களுக்கு நவீன மருத்துவத்தை தெரிந்தெடுப்பதும் தான் இன்றைய தேவையாகக் கருதுகிறேன். ஒவ்வொரு பெண்ணும் சித்த முறைப்படி கவனிக்கப்பட்டால், ஆரோக்கியமான எதிர்காலத்தைக் கண்டிப்பாக நம்மால் உருவாக்க முடியும்.

கட்டுரையாளர்: பேராசிரியர்,
மணிப்பால் பல்கலைக்கழகம்

கட்டுரை

கார்த்திகா கணேசர்

மௌனம்

மௌனம் வார்த்தைகளிலும் உயர்ந்தது. பல சமயங்களில் நாம் ஒவ்வொருவரும் இதை உணர்ந்துள்ளோம். திகைப்பு, ஆனந்தம், ஆச்சரியம், மகிழ்ச்சி, கவலை இவ்வாறான உணர்ச்சியை நாம் உணரும் பொழுது நாம் மௌனமாகிவிடுகிறோம். பேசுவதற்கு நா எழுவதில்லை. எமது மௌனமோ அத்தனையையும் உணர்த்தி விடுகிறது. உணர்ச்சிகள் நம்மை ஆட்கொள்ளும்போது வார்த்தைகள் வெளிவருவதில்லை. இதை நாம் பல சமயங்களிலே அனுபவித்தும் உள்ளோம். இதயம் பேசியது ஆனால் நா எழவில்லை. இதனால்தான் போலும் சில யோகிகளும் ஞானிகளும் மௌனத்தில் ஆழ்ந்து விடுகிறார்கள்.

தேனீகள் ரீங்கரித்துக் கொண்டு அலைகிறது ஆனால் தேனுள்ள மலரைக் கண்டதும் மௌனமாகி விடுகிறது. மனிதரான நாமோ மௌனத்தில் ஆழ்ந்தோமானால் எம்முள் புதைந்திருக்கும் ஆழ்ந்த ஞானத்தை, அறிவை உணர முடிகிறது என்கிறார்கள். வாழ்வில் நாம் தீர்வுகாணத் துடிக்கும் பல தொல்லைகளை தீர்க்க மௌனத்தில் ஆழ்ந்தால் மன அமைதி கிட்டி தொல்லைகட்கு தீர்வு காண முடிகிறது. அதனாலேயே தனிமையான இடத்திலே அமைதியாக மௌனமாக சில நாட்களேனும் கழித்தால் மன அமைதியும், தெளிந்த சிந்தனையும் பிறக்கும் என எமது ஞானிகள் கூறியுள்ளனர்.

மௌனத்தின் வலிமையை உணர்த்த வடமொழியில் கதை ஒன்று உண்டு.

அழகே உருவான இளம் சன்னியாசி ஒருவன் காட்டிலே அமைதியான இடத்தில் வாழ்ந்து வந்தான். 16 வயதே நிறைந்தவனான போதும் ஆழ்ந்த அறிவுள்ளவனாக காணப்பட்டான். அவன் ஒரு மரநிழலில் அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருந்தான். அவ்வழியே ஒரு முதிர்ந்த அறிஞர் வந்தார். அவரது மனமோ அமைதி இன்றி சஞ்சலப்பட்டபடி இருந்தது. அவரோ சிறந்த அறிஞர் என பலராலும் அங்கீகரிக்கப்பட்டவர். வாதம் பிரதிவாதத்தில் வல்லவர். தான் அறிந்த அழகிய வடமொழி சுலோகத்தால் இளம் சன்னியாசியை வாழ்த்தினார். அந்த வாழ்த்தே விவாதத்திற்குரிய பல தத்துவங்களை தன்னுள் கொண்டது. பின் இளைஞனைப் பார்த்து சில தத்துவம் சம்மந்தமான கேள்விக் கணையைத் தொடுத்தார், வாதத்திற்கு அவனை இழுக்கும் எண்ணத்துடன்.

இளம் சன்னியாசியோ ஆழ்ந்த மௌனத்தில் ஈடுபட்டிருந்தான். அவனது மௌனமே ஒரு சக்தியாக அவனை ஆட்கொண்டிருந்தது. அந்த இளம் சன்னியாசியின் சிந்தனைகள் முதியவரின் மனதை அடைந்ததாம். அதாவது இளைஞன் பேசாதபோதும், அவனது சிந்தனை முதியவரை போய்ச் சேர்ந்தது படிப்படியாக அந்த முதிய அறிஞரும் அமைதியானார். உண்மை அவரது உள்ளத்தைத் தூய்மையாக்கியது. அவரிடம் இருந்த அடங்காத கர்வம் அவரை விட்டகர்ந்தது. அவரது தசை நார்களும் நாடி நரம்புகளும் விறைப்புத் தன்மை நீங்கி ஓய்வடைந்தது. நெற்றி சுருக்கம் போன இடம் தெரியவில்லை. கண்களோ ஒளிமயமாகி ஆனந்தப் புன்னகை பூத்தார். அவரது தொல்லைகள் மறைந்தன. இறுதியாக மௌனத்தின் ஆளுமையில் ஒளியெனத் தோன்றினார். இது ஆழ்ந்த அமைதியில்

ஏற்படும் ஆனந்தத்தை விளக்கும் கதைதான் இது.

எமது அன்றாட வாழ்கையில் சிறிது மௌனத்தைக் கடைப்பிடித்தால் பல நன்மைகள் அடையலாம். எமது உறவுகளுடனும், வேலை பார்க்கும் இடங்களிலும் நாம் அவசரப்பட்டுப் பேசி பல சிக்கல்களுக்கு ஆளாகிறோம். சிறிது மௌனமாக இருந்து விட்டால் பல தொல்லைகளிலிருந்து தப்பி விடலாம். *Words cut more than Swords* என்பது பழமொழி. எத்தனை நல்ல நண்பர்களை இழந்திருப்போம், அல்லது அவர்களை எமது எதிரிகளாக்கியிருப்போம். மௌனமாக இருந்திருந்தால் இவ்வாறு நடந்திருக்காது எனவும் வருந்தியிருப்போம்.

அதிகமாக பேசுவதால் பல தீமைகள் விளைகின்றன. நரம்புகள் தளர்ச்சி அடைகிறது. மனஅழுத்தம் ஏற்படுகிறது. உடல் வலுவை இழக்கிறது உடலை வலுவடையச் செய்யும் ஊட்டச்சத்து அதிகப்படி பேசுவதால் விரயமாகிறது. நரம்புத் தளர்ச்சியால் மன அழற்சி ஏற்படுகிறது. அதிகப்படியான பேச்சு மனதை ஒருமைப்படுத்தி சிந்திக்கும் ஆற்றலுக்கு ஊறு விளைவிக்கிறது. அதிகம் பேசுவதால் இத்தனை கெடுதிகளையும் உடலுக்கு ஏற்படுத்துகிறோம்.

தினமும் குறிப்பிட்டளவு மௌனமாக இருப்பது எமது குரல்வளைக்கு கேடு வராமல் தடுக்கும் உடலுக்கு ஓய்வு கிடைக்கும். உடலின் பாகங்கள் சீர் அடையும் புத்தி கூர்மையடையும் மனம் அமைதி அடைந்து தெளிவு பிறக்கும். எம்முள் இருக்கும் ஆழமான தொல்லைகள் தானாக விலகிவிடும்.

மகாத்மா காந்தி மௌனத்தின் மூலம் பல காரியங்களை சாதித்தவர். மௌன விரதத்தை அனுட்டிக்கும் வழமை கொண்ட காந்தி தனது பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும், அதேசமயம் அரசியல் குழப்பங்களை கையாளவும் மௌனவிரதம் அனுட்டிப்பார். எமது மத அனுட்டானங்களும் மௌன விரதத்தை கடைப்பிடிப்பதை பற்றிக் கூறியுள்ளன. மன அமைதியுடன் இழந்த சக்தியைப் பெற மௌன விரதம் உதவும் என்கிறது.

மனோதத்துவ வல்லுனர்களோ எமது தன்னம்பிக்கை அற்ற தன்மையே எம்மை அதிகம் பேச வைக்கிறது என்கின்றனர். எம்முள்ளே மறைந்திருக்கும் பயம் தாழ்வு மனப்பான்மையே மௌனம் அதிகம் பேச வைக்கிறது. எமது அறியாமையை பிறர் அறிந்து விடுவாரோ என்ற பயத்தால் எம்மைக் காப்பாற்ற அதிகமாக வேண்டாதவற்றை பேசுகிறோம் என்கின்றனர்.

மதங்கள் யாவும் உண்ணா நோன்பைப் போதிக்கிறது. “லங்கணம் பரம ஔஷதம்” அதாவது பட்டினி சிறந்த மருந்து என்கிறது. ஒருசில நாட்கள் பட்டினி இருப்பதால் எமது உள் உறுப்புகள் ஓய்வு பெறுகிறது. அவ்வாறு அவை ஓய்வு பெறும்போது சீர்பெறவும் முடிகிறது. அதே போன்றதுதான் மௌன விரதமும் எமது மனதில் இருந்து தேவை அற்ற விஷயங்களை அகற்றி தேவையான நல்ல சிந்தனைகளைப் பெற முடியும். மௌனம் மனோ திடத்தை வளர்க்கிறது. கோபத்தை அடக்க இது ஒரு நல்ல பயிற்சியாக அமைகிறது. மௌனம் தன்னடக்கத்தை அளிக்கிறது. மனதை வழிப்படுத்துகிறது.

கட்டுரையாளர்: நாட்டியக் கலாநிதி, ஆஸ்திரேலியா

நாட்டிய கலாநிதி
திருமதி கார்த்திகா கணேசர்

இலங்கையில் பிறந்துவளர்ந்த இவர், தமிழகத்தில் பத்மஸ்ரீ வழுவூர் இராமையாப் பிள்ளையிடம் குருகுல முறையில் சாஸ்திரீய பரதம் பயின்று சிறந்த நடனக்கலை வல்லுநராகவும் தேர்ச்சி மிக்க கலை ஆய்வாளராகவும் திகழ்பவர். பரத நாட்டியத்தின் நுட்பங்களோடும் நுணுக்கங்களோடும் பரந்துபட்ட ஞானம் உடையவர். பரத நாட்டியத்தின் மரபும் பாரம்பரியமும் கெடாமல் காலத்துக்கு ஏற்றபடியும், மாறிவரும் சமூகச்சூழலுக்குப் பொருத்தமாகவும் ஆய்வுநோக்கோடும் ஆழ்ந்த ரசனையோடும் அரங்கேற்றியவர். அளப்பரிய அர்ப்பணிப்பாலும் மாறுபட்ட நடன உத்திகளாலும் மக்களின் மனத்தில் இன்றளவும் இடம்பிடித்திருக்கும் இவருக்கு 1982-ஆம் ஆண்டு இலங்கையின் இந்து கலாச்சார அமைச்சு ‘நாட்டிய கலாநிதி’ என்னும் விருதை வழங்கி சிறப்பித்தது. இவர் பரதம் உள்ளிட்ட தமிழரின் ஆடற்கலைகள் குறித்ததன் ஆய்வுக் கருத்துகளையும் அனுபவ சித்தாந்தங்களையும் தொகுத்து நூல்களாக வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய‘காலந்தோறும் நாட்டியக்கலை’ என்ற நூல் 1982-ஆம் ஆண்டு தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் முதல் பரிசையும், ‘இந்திய நாட்டியத்தில் திராவிட மரபு’ என்ற நூல் 1985-ஆம் ஆண்டு தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் சிறந்த நூலுக்கான பரிசையும் பெற்றுள்ளன.

கவிதை

கோசின்ரா
gcrajendran@gmail.com

கடவுள்களும் பிரார்த்தனைகளும் அகதி முகாம்களுக்கு உகந்ததல்ல



திரும்பவும்
நம் வீடுகளுக்குச் செல்லும் காலம்
எவ்வளவு தொலைவில் இருக்கிறது
தற்காலிகமாக அகதி முகாம்
வீடாக மாற்றப்பட்டிருக்கிறது
அது வீடா அல்லது சிறையா
மனிதனாகப் பிறந்து
எல்லா துயரங்களையும் அனுபவித்து விட்டோம்

ஒவ்வொரு மதத்திற்கும் ஒரு கடவுள் போல்
ஒவ்வொரு தேசத்திற்கும்
ஒரு கடவுள் அல்லது பல கடவுள்கள்
அவர்கள்தான் குண்டுகள் தயாரிக்கிறார்கள்
அவர்கள்தான் துப்பாக்கி பயிற்சி தருகிறார்கள்
அவர்களே மக்கள் நடமாடும் பகுதிகளில்
தயாரிப்புகளை வெடிக்கச்செய்கிறார்கள்
வெடித்து சாவதற்கு மட்டும்
மக்கள் கூட்டம் கூட்டமாக வருகிறார்கள்

ஒரு பறவையாகப் பிறந்திருந்தால்
எத்தனையோ மரங்கள்
எத்தனையோ காடுகள்
ஒவ்வொரு மரமும் ஒரு தேசம் பறவைக்கு
ஒவ்வொரு காடும் மிகப்பெரிய உலகம்
பறவையாக வாழ
ஒரு மரத்தின்
ஒரு விரலின்
சிறு நகமே போதும்
கொடுமை என்னவென்றால்
நாம் மனிதர்கள்
கடவுளால் படைக்கப்பட்டவர்கள்
எந்தக்கடவுளால் என்று தெரியாது
நம்பிக்கொண்டிருந்தோம்
நாம் வணங்கும் கடவுள் படைத்தாரென்று
இன்று கைவிடப்பட்டிருக்கின்றோம்

நாளை பற்றித் தெரியாது
இந்த அகதி முகாமிலிருந்தும்
நாம் துரத்தியடிக்கப்படலாம்
வேறு ஒரு முகாமிற்குச் செல்லும் போது
சிந்தனைகளையும்
உடல்களையும்
பத்திரமாக தூக்கிச் செல்ல வேண்டும்
யாருக்கு வேண்டுமானலும்
நம் உடல்கள் தேவைப்படலாம்
நம் கண் முன்னாலே
நம் உடல்கள் சித்ரவதைக்கு ஆளாகலாம்
பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாகலாம்
இங்கே நீதி மன்றம் கிடையாது
புகாராளிக்க காவல் நிலையம் இல்லை
வாழ்க்கை ஒரு அகதி முகாம்
தேசம் ஒரு அகதி முகாம்
மொழியும் கூட ஒரு அகதி முகாம்
விரும்பும் சுதந்திரமும்
ஒரு அகதி முகாமாகத் தெரிகிறது

மனிதர்கள் ஒருவருக்கொருவர்
உதவுவார்கள் என்பது பொய்யாகி விட்டது
வந்தவர்கள் எல்லாம் பின்வாங்கி விட்டார்கள்
நம்மைக் காப்பாற்ற யார்அவர்கள்
கொஞ்ச காலம்
ஜனநாயகத்தின் காவலர்கள் என்று
சொல்லிக்கொண்டார்கள்
நாம் நம்பினோம்
அவர்களின் படைகள் நம் வீதிகளில்
சென்றுகொண்டிருந்தன

இலவசமான
செயற்கை சுதந்திரத்தின்
வாழ்க்கைக்குள் குடிபெயர்ந்தோம்
இன்று அங்கிருந்து நடந்து செல்கிறோம்
தலைசாய ஒரு இடத்தைத் தேடி
நம் துயரங்களைக் கொட்டி வைக்க
காலத்தின் சிறு இலையைத் தேடி

இந்தப் பயணத்திற்கு
உத்தரவாதமுண்டா தெரியாது
கால்கள் வலுவிழக்கும் வரை
போய்க்கொண்டிருப்போம்
இனி இயற்கையின்றி
நம்மீது யார் கருணை காட்டுவது
யாரை நம்புவது
இயற்கையின் கருணை ஆறுதலைத் தரலாம்
காடும் பாறைக் குகைகளும்
உடல்களை கிடத்த உதவலாம்
பிள்ளைகள் பசியோடு இருக்கிறார்கள்
வழியில் எத்தனை உயிர்கள் கொல்லப்பட்டன
கணக்கெடுக்க வில்லை
அது நம் பயணத்தின் வேகத்தை குறைத்து விடலாம்
ஒரு நாள் நாமும் தொலைந்து போகலாம்
ஒரே ஒரு ஏவுகணைக்கு
நம் மொத்த கூடாரமும் பலியாகி விடலாம்
அது வரை உயிரோடிருப்போம்
பசிக்கு பழங்களை தேடுவோம்

கடவுள்களும் பிரார்த்தனைகளும்
அகதி முகாம்களுக்கு உகந்ததல்ல
குழந்தைகள் மகிழ்ச்சி கொள்ளும் படியாக
அவர்களின் பகல்கள் இருக்கட்டும்
இறைவன் உயிரை கொடுக்கின்றான்
அவன் மட்டுமே உயிரை எடுக்கின்றான்
என்பதை இனி யாருக்கும் போதிக்கப் போவதில்லை
மரணம் வெகு தொலைவில்
இருப்பதாக நினைக்க வில்லை
சுதந்திரம் பற்றிப் பேசுவோம்
பிள்ளைகளுக்கு
போராடுவது பற்றி சொல்லிக்கொடுப்போம்
இனி அதுவே நம் கடவுள்
நம் பிரார்த்தனைகள்
நம் கொண்டாட்டங்கள்
நம் வரலாறு.

‘அமணமாகிய சமணம்’

மறுப்பும் விளக்கமும்

பொதுவாக, வரலாறு சார்ந்த செய்திகளை கீழ்க்காணும் முதன்மையான கூறுகளோடு எழுதுவதே முறையாகும்.

அவை,

1. சரியான காலம், காலவரிசை
2. இலக்கியச் சான்று (பாடலைக் குறிப்பது)
3. கல்வெட்டு, பட்டயம்சார் குறிப்புகள்
4. அயல்நாட்டுக் காசு, செய்திக் குறிப்புகள்
5. நடைமுறையில் சமூகத்தோடு ஒட்டிய பண்பாடு, சடங்கு முறைகளோடு கூடிய நிகழ்வுகள்

ஆகியவற்றை குறிப்பால் உணர்த்தி எழுதுவதே முறையான ஆய்வுக் கட்டுரையாகும்.

1. கட்டுரையில் குறிப்பிட்டுள்ள சமணசமயக் கொள்கையோடு தமிழ், கலை, இலக்கியம் ஆகியவற்றை வளர்த்தெடுத்தோம் என்று குறிப்பிடுவது பிழையானது. தொல்காப்பியத்தில் குறிப்பிடுவதுபோல (950) “முதல் எனப்படுவது நிலம், பொழுது இரண்டின் இயல்பு என மொழிப”இங்கு “மொழிப” என்ற சொல் ஏற்கனவே சமூகத்தில் சொல்லப்படுகிறது என்று பொருள்படும். மேலும் இது ஒரு சமூகத்தின் முதல் பதிவன்று. இக்காலத்திற்கு முற்பட்ட “அகத்தியம்” மக்களது வாழ்வு முறையை எழுத்து, சொல், பொருள் வாழ்வியலோடு கூடிய இலக்கணம் இலக்கியம் குறிப்பிட்டதை உணர்த்தும். எனவே சமணம் செய்தது வெறும் பதிவு, மொழி மாற்றம் மட்டுமேயாகும்.

2. உணவிடும் முறைகளை நன்கறிந்த இல்லறத்தார் தமிழகத்தில் இருந்தனர். அவர்கள் சமண நெறிகளைப் பின்பற்றினார்கள் என்ற செய்தி தவறானது. தமிழகத்தில் விருந்தோம்பல் பண்பு என்பது இயற்கையான உயிர்ச்சூழல் பன்மய விளைவால் வந்தது. நஞ்சை, புஞ்சை, காடு, கரை என்றும் எங்கும் உணவுப் பன்மயம், இங்கு வாழும் குடிகளுக்கு உணவுத் தன்னிறைவு, தற்சார்பு, உணவு மிகுதியை உருவாக்கியது. இதன் பயனாக விருந்தோம்பல் பண்பு வளர்ந்தது. இவற்றிலும் குறிஞ்சியில் - தேனும் தினையும்; முல்லையில் - மோர், நெய், பால்; மருதத்தில் - நெல்சோறும் விறால் மீனும்; நெய்தலில் - சோறும், மீனும் என்று திணைகளுக்கு ஏற்றபடி வேறுபட்டிருந்தது. சமணர்கள் தேன், பால், இறைச்சி இவற்றை ஏற்றனர் அல்லர். குறிப்பாக சமணர்கள் வகைவகையான உணவினை உண்ணாமல் பழங்களை உண்டனர் என்பதே உண்மை. பௌத்தர்கள் பிச்சை ஏற்றனர். சமணர்கள் பல நேரங்களில் உண்ணாநோன்பே இருந்தனர். மணிமேகலை ஒரு பௌத்தத்துறவி. அவர் ஏற்ற அட்சயப் பாத்திரம் என்பது உணவுப் பகிர்வேயாகும்.

3. கம்புச் சாகுபடி தொழில்நுட்பத்தை சமணர்கள்தான் தமிழர்களுக்குக் கற்றுத் தந்தார்கள் என்ற கட்டுரையாளரின் கருத்துக்கு மறுப்பான விவரங்கள் பின்வருவன.

தமிழர்கள், கோதுமையைத் தவிர்த்து நெல், சோளம், கேப்பை, கம்பு, வரகு, திணை, குதிரைவாலி, சாமை, காடைக்கண்ணி ஆகிய ஒன்பதுவகை தானியங்களைப் பயிரிட்டனர். ஓராயிரம் பழமொழிகள் தமிழர்தம் வேளாண்மையின் அறிவை மெய்ப்பிக்கும். தமிழகத்தில் உருவான வெற்றிலை கொடிக்கால் தொழில்நுட்பத்தை லண்டன் ஆய்வாளர் ஆல்பட் ஹோவர்டு *Agricultural Testement* எனும் தமது நூலில் புகழ்ந்துரைத்துள்ளார். எங்கும் இல்லாத கிடை அமர்த்தும் முறை இங்குதான் உள்ளது. மதுரையைக் குறிப்பிடும்போது தள்ளாகுளம், மாடக்குளம், கோசாகுளம் என்ற ஊர்ப் பெயர்கள் “குளம்” என்ற சொல்லை பின் ஒட்டாக உடையது. எல்லா வழிபாட்டுக் கோயில்களிலும் குளம், கோயில் காடு, நந்தவனம், இசை, மருத்துவம், அருளமுதக்கொடை என்று சோழர் காலத்தில் செழித்து வளர்ந்திருந்தது.

4.மூவேந்தர்களைதம்வசம்இழுத்துக்கொண்டனரா சைவர்கள்? பொதுவாக வணிக குலத்தவர் பிற தேசங்களுக்கு பயணிப்பதைத் தொழிலாகக் கொண்டவர்கள். எனவே, இவர்கள் பிற பழக்க வழக்கங்களை மொழியை, பண்பாட்டை ஏற்பது இயல்பு. அவர்கள் நலன் சார்ந்ததும்கூட. ஆனால் வேளாண் குடிகள் அவ்விதம் அல்லர். தாய்மொழி, பண்பாடு என்று பற்றுடையவர்களாக வாழ்ந்தனர். மேலும் அவற்றைக் காத்தும் மேம்படுத்தியும் வாழ்ந்தனர். மூவேந்தர்களின் பண்பு என்பது சிறு குடிகளை, சிற்றரசுகளை வென்று நிலம், கால்நடை போன்றவற்றைக் கவர்வதே தொழிலாக இருந்திருக்கிறது. “திரைகடல் ஓடியும் திரவியம் தேடு” “செடிக்கும் வெள்ளாமைக்கும் சென்மப்பகை” ஆநிரை கவர்தல் புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின் வெட்சிதானே (தொல். 1002) வாளேருழவர்

(புறம் 368) வில்லேருழவர் (குறள் 872) போன்ற சொல்லாடல்கள் மேற்கண்ட செய்திகளை மெய்யாக்கும்.

5. சமணம் வந்த காலத்தே வாழ்ந்த மன்னர்குடி, எங்ஙனம் சாந்தியையும், சமாதானத்தையும், உயிர்க் கொலையையும் தவிர்த்து சமணம் ஏற்கும்? பிற அன்னியக் குடிகளின் ஏற்பு என்பது மன்னர்களைப் பொறுத்தமட்டில் ஐயப்பாடு உடையதேயாகும். சமணர்கள் பிராகிருத, பாலி மொழிகளை மொழிபெயர்த்தும் பரப்பியும் வந்தனர். சமணப் பள்ளிகளும், பௌத்த விகாரங்களும் வணிகர்கள் உதவியோடு நிலங்களைக் குவித்து பெரு நிறுவனங்களாக உருமாற்றம் பெற்றன. இது தமிழகத்தில் வாழ்ந்த சைவ வேளாண் குடிகளுக்கு முரணாக அமைந்தது. இதனால் மூண்ட பகையே சைவ-சமணப் போராகும். நாமகள் என்ற சரஸ்வதியை சைவம் விழுங்கவில்லை. மாறாக இந்து - வைதீக மரபுதான் விழுங்கியது. ஏன் மன்னர்கள் சைவ-வைணவ மதங்களை ஏற்றனர் என்பதற்கு ஐயா கைலாசபதி எழுதிய "தமிழர் வாழ்வும் வழிபாடும்" என்ற நூல் முழுவிளக்கமும் தரும்.

தமிழக வரலாற்றில் பௌத்தம்-சமணம் தவிர ஆசீவகமும் இருந்தது. இது இயற்கை வழி இறைக் கோட்பாட்டை ஆதரித்து வைதீகக்கருத்துமுதல்வாதக் கோட்பாட்டை எதிர்த்து நின்றது. "தீதும் நன்றும் பிறர்தர வாரா" "எல்லா உயிர்களும் இயற்கை சார்ந்தவை" என்ற கோட்பாடுகள் ஆசீவகம் தந்தது ஆகும். பின்னாளில் மலர்ந்த சித்த மருத்துவமும் ஆசீவகத்தையே அடிப்படையாகக் கொண்டது. சமணம் மருத்துவத்தை ஆதரித்தது எனக் கொண்டால் சித்த மருத்துவத்தில் வருகிற நெய், தேன், ஆமை ஓடு, மண்புழு போன்ற பயன்பாட்டை எவ்விதம் சமணம் ஏற்றது? வேள்வி செய்து திருமணம் முடித்த கோவலன் கண்ணகி எப்படி சமணர்கள் ஆயினர். வேள்வியை சமணர்கள் ஆதரித்தனரா?

நேமிநாதர் கண்ணனின் நண்பர் என்றால் மகாபாரதக் கதையின் காலத்தை கட்டுரையாளர் குறிப்பிட வேண்டும். தொல்லியல் சான்றுகளைக் காட்டவேண்டும். நேமிநாதர் சமணர் என்று வைத்துக்கொண்டால் குருசேத்திரப் போரையே கண்ணன் தனது சமண தத்துவ ஆசிரியரின் ஆலோசனைப்படியே நடத்தினாரா? என்ற கேள்வி எழும். ஆதியோகி / பகவான் ரிசப தேவர் சமணர் என்றால் அவர் திராவிடக் கடவுளா? ஆரியக் கடவுளா? என்கிற கேள்வியும் அவரை வணங்கிய மக்கள் எந்த மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்கிற அந்த கேள்வியும் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. மேலும், 24 தீர்த்தங்கரர்களில் ஒருவர் கூட பெண்கள் இல்லையே ஏன்? சமணத்தைப் பெண்கள் ஏற்கவில்லையா? அல்லது சமணம் பெண்களை ஏற்க வில்லையா? என்பதும் இங்கே முக்கியமான வினாவாகும்.

6. திணைக்குடிகளில் வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுபவர்கள் பட்டியில் உள்ள ஆண் இனங்களைக் குறைத்தால்தான் பட்டியைப் பராமரிக்க இயலும். இதனால் உருவானதுதான் கிடா. சேவல் அறுப்பு போன்ற உயிர்க்கொலைப்படையல். இவை முருகன், கொற்றவை போன்ற போர்த் தெய்வங்கள் தொடங்கி முன்னோர்களாகப் பட்டவர், பெண் தெய்வங்கள், நாகர் என்று சொல்லப்படுகின்ற குலதெய்வங்கள் வழிபாட்டில் இன்றுவரை மக்களால் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. மதுரை மாவட்டம் பொதும்பு கிராமத்தில் சூலாட்டுப்பூசை எனும் நிகழ்வு நடந்தேறுகிறது. இதில் முழுமையான சூலுடைய ஆட்டின் வயிறைக் கிழித்து ஆட்டையும், குட்டியையும் ஒருங்கே அறுத்து ரத்தத்தை பொங்கலுடன் கலந்து ராக்காயி, பேச்சி போன்ற பெண் தெய்வங்களுக்கு படையலிடுகின்றனர். இத்தகைய குலதெய்வ வழிபாட்டை அனுமதித்துத்தான் சமணம் ஏற்றுக்கொண்டது.

தென்பாண்டி நாடு மட்டுமல்ல தமிழகம் எங்கும் தெளிவான தொல்லியல் சான்றும் இலக்கியம், செப்பேடு, சமூக மரபு சார்ந்த தெளிவான படிநிலை வரலாற்றுச் சான்றுகளும் உள்ளது. கிட்டத்தட்ட 5000 ஆண்டுகள் தொடர் நிலையாக அரசியல், பொருளியல், சமூக மாறுதல்களுடன் பயணித்த ஒரே மொழியாக உலகளவில் தமிழ் மட்டுமே உள்ளது. சமணம் உள்பட பல்வேறு கருத்துப் பன்மயத்தை தமிழகம் ஏற்கவே செய்கிறது. இந்லையில் இங்கு ரிக் வேதத்தையும், திருக்குறளையும், சமணத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் கருதிப் பார்ப்பது ஆய்வறம் ஆகாது. மெய்யான சான்றுகளுடன் வரலாற்றைக் கூறி காய்தல் உவத்தல் இன்றி ஆய்தல்"நலம் பயக்கும்.

காக்கை வாசகன்

பாண்டி உமாசங்கர்

சோழவந்தான்.

விளக்கம்: வாசகர், ஆய்வுப் பார்வையில் பார்த்திருக்கிறார். அதனால் விளைந்த மறுப்பு இது. அமணம் ஆகிய சமணம் எளிமையான வாசகனுக்கான புனைவு சேர்ந்தது. உயர்த்திப்பிடிப்பது நோக்கமல்ல. சில ஒப்பீடுகள் தமிழகம் மறந்துவிட்ட சமணக் கூறுகளை நினைவுபடுத்தும். இருப்பினும் நன்கு ஆராய்ந்து படித்து எழுதப்பட்ட மறுப்புகளை மதிக்கிறேன். இதுகுறித்து மேலும் ஆராய என்னை ஊக்கப்படுத்துகிறது.

- தராசு ஷ்யாம்

கட்டுரை

கி.நாச்சிமுத்து
nachimuthutamizhkina@gmail.com

தமிழும் மலையாளமும்

வேடிக்கையான மொழிக் களங்கள்

மொழி என்பது நாம் அன்றாடம் புழங்கும் நிகழ்காலப் புதுப்பொருளாயினும் அது நம் முன்னோர்களும் வழங்கிய ஒரு பழங்காலப் பழம் பொருளும் ஆகும்.மொழி முன்னைப் பழமைக்கும் பழமையானது ,பின்னைப் புதுமைக்கும் புதுமையானது மணிவாசகர் கூறும் இறைவனைப் போல.எனவே மொழியில் உள்ள சொற்கள் காலந்தோறும் பல வீழ்ந்தும் புதிதாகத் தோன்றியும் பொருள் மாற்றம் பெற்றும் இடையறாது ஆற்று நீர் போல இயங்குபவை.எனவே சில சொற்களும் பெயர்களும் நிகழ் காலத்தில் விளங்காதபோது அவற்றை விளங்கிக்கொள்ள அறிஞர்கள் முயல்வதைப்போலவே சாதாரண மக்களும் விரும்புவார்கள்.அறிஞர்கள் அறிவியல் முறையில் விளக்கம் கூறினால் அது மொழியியலில் ஒரு துறையாகிய சொற்பொருளியலின் ஒரு பிரிவாக வழங்கும் சொற்பிறப்பியல் ஆராய்ச்சி(*Etymology*) எனப் பெயர் பெறும்.பொதுமக்கள் அதைச் செய்யும்போது அதை நாட்டார் சொற்பொருளாராய்ச்சி (*Folk Etymology*) என்று சொல்வோம்.

திருவலஞ்சுழி என்றால் ஆறு வலமாகச் சுழிகிற இடம் என்று விளக்குவது அறிவியல் முறை.சடைய மங்கலம் என்று பாண்டியன் பெயரில் அமைந்த ஊரைச் சடாயு மங்கலம் என்று இதிகாசப் பாத்திரத்தோடு இணைத்து விளக்கினால் அது நாட்டார் சொற்பொருள் விளக்கம்.மரை மான்கள் உள்ள காடு மறைக்காடாகிப் பின் அதை வேதாரண்யம் என மொழி பெயர்த்தால் அது கற்றோர் செய்யும் நாட்டார் சொற்பொருள் விளக்கம்.

மொழியில் ஆட்பெயர் ஊர்ப்பெயர்களே அன்றிப்பிற இயல்பான பெயர்ச்சொற்கள் ஒவ்வொன்றும் ஒரு சொற்பொருள் விளக்கத்துடன் வேறு வரலாற்று விளக்கங்களும் பெற்றதாக அமையும்.எடுத்துக்காட்டாக வெட்டி என்ற சொல் வீண்,பயனற்றது என்ற பொருளில் இன்று வழங்குகிறோம்.வெட்டி என்பது ஒரு வகை வரிக்குப் பெயராகக் கல்வெட்டுகளில் வழங்குகிறது.மேலும் இலவசமாகச் செய்யும் ஊழியத்திற்கும் அது பெயராக வழங்கியது.இதிலிருந்து வீண் என்ற பொருள் வளர்ந்திருக்கலாம் என்பது சொற்பொருள் ஆராய்ச்சியாளர் கருத்து.

இவ்வாறு சில சொற்களின் சொற்பொருள் விளக்கத்தையும் வரலாற்று மாற்றங்களையும் எடுத்து சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரகராதிப் பதிப்பாசிரியர் ச.வையாபுரிப்பிள்ளை சொற்களின் சரிதம் (1956) என்ற நூலில் எழுதியிருக்கிறார். அதுபோன்று இரா.பி.சேதுப்பிள்ளை அவர்களும் ஊரும் பேரும் என்ற நூலில் ஊர்ப்பெயர்களின் சொற்பொருள் விளக்கத்தைச் சுவைபடப் பேசியிருப்பார்.இன்னும் சொற்கலை விருந்து(1956) - அகராதிநினைவுகள்(1959) போன்ற நூல்களில் வையாபுரிப்பிள்ளை சொல்லாராய்ச்சிகள் நிகழ்த்தியிருப்பார்.ஞானப்பிரகாசருடைய தமிழ்ச் சொற்பிறப்பியல் அகராதி இங்கு குறிப்பிடத்தக்கது. தேவநேயப் பாவாணர் தன் முதல் தாய்மொழி போன்ற நூல்களில் பல சொற்பிறப்பியல் ஆராய்ச்சிகளை வெளியிட்டிருக்கிறார்.எமனோ பர்ரோவின் திராவிட சொற்பிறப்பியல் அகராதி பற்றியும் இங்கு குறிப்பிடவேண்டும்.பிற்காலத்தில் மதிவாணன், அருளி போன்றோர் சொற்பொருள் விளக்கக் கட்டுரைகளும் அகர முதலிகளும் வெளியிட்டுள்ளனர்.அண்மைக் காலத்தில் பா. ராசுப்பிரமணியன் சொல்வலை வேட்டுவன் (2009) என்ற தலைப்பில் காலந்தோறும் சொற்களின் வரலாறுகளை ஆராய்ந்து கூறும் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.இன்னும்இவ்வாறு சொற்களின் தோற்ற வரலாற்றைப் பல தமிழறிஞர்கள் எழுதியுள்ளவற்றைத் தொகுத்துப் படித்தால் வேடிக்கையாகவும் சுவையாகவும் இருக்கும்.மேலும் ஆங்கிலத்திலும் ஹாப்சன் ஜாப்சன் என்ற பெயரில் ஆங்கிலத்திற்கு வந்துள்ள சொற்கள் பற்றிய செய்திகள் காணப்படும் அகராதி ஒன்று பெயர்பெற்றது.

இவை போலன்றி இந்தத்துறையை வேறு தளங்களில் விரிவு செய்துள்ளார் கேரளக் கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர் மா.நயினார்.இவர் ஊர்ப் பெயர் ஆராய்ச்சிகளில் ஈடுபாடு உடையவர். சசீந்திரம் கல்வெட்டிலுள்ள ஊர்ப் பெயர்கள் ஆட்பெயர்கள் பற்றியும் கேரளக் கல்வெட்டுக்களிலுள்ள ஊர்ப் பெயர்கள் பற்றியும் ஆராய்ச்சி செய்து முதுகலை முனைவர் பட்டம்

பெற்றவர்.அவற்றைப் பற்றிய நூல்களையும் வெளியிட்டுள்ளார்.அத்துடன் இலக்கியங்கள் பற்றி நல்ல நூல்களை எழுதியுள்ளார்.மேலும் அவர் நல்ல சிறுகதை ஆசிரியர்,கவிஞர்.நல்ல கட்டுரையாளரும் கூட. தற்போது திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் விளங்கி வருகிறார்.அவர் தமிழோடு மலையாளமும் நன்கு கற்றவர்.தமிழ் மலையாளச் சொற்கள் பற்றி இவர் முகநூல் முதலியவற்றில் அவ்வப்போது ஒப்பிட்டு எழுதிய சுவையான பதிவுகளைதுன்னல் என்ற பெயரில் நூலாகத் தொகுத்து வெளியிடுகிறார்.

நயினார் செய்திருக்கிற புதுமை என்னவென்றால் தமிழ் மலையாளம் என்ற இருமொழிகளில் இருக்கும் சொற்களின் வழக்குகள் ஒற்றுமைப்படுவது அல்லது வேற்றுமைப்படுவதை சொற்பொருள் ஆராய்ச்சி (*Semantics*),சொற்பிறப்பியல் ஆராய்ச்சி (*Etymology*),மொழி ஒப்பீடு (*Comparative Grammar*) ,நாட்டார் வழக்காற்றுச் செய்திகள் (*Folklore*) போன்றவற்றுடன் இணைத்துச் சுவைபடத்துன்னல் என்ற பெயரில் நகைச்சுவையாக எழுதிவெளியிடுவதன் மூலம் இத்துறையின் புதிய களங்களை அவர் தொட்டுள்ளார் என்று நாம் அவரைப் பாராட்டலாம்.இது போன்றே பிற திராவிட மொழிகளுக்கு இடையே உள்ள இத்தகைய சொற்சுவைச் செய்திகளை அவ்வம்மொழிகளை நன்கு அறிந்த பிறரும் எழுதலாம்.

பல சொற்களின் சுவையான செய்திகளைச் சொல்லும் போது அச்சொல் இலக்கியங்களிலும் வழக்கிலும் பயின்று வருவதைச் சுட்டிக் காட்டி வரலாற்று முறையில் எழுதிச் செல்வது அதற்கு ஒரு ஆழத்தைத் தருகிறது.எடுத்துக் காட்டாக அந்தி என்ற சொல் பற்றி மா.நயினார் தொகுத்துத் தரும் செய்திகள் விரிவானவை.அது போன்றே அலை என்ற பொருள்படும் திரை என்ற சொல்.சங்க மொழியில் அலை என்ற சொல் இல்லை என்றே சொல்லலாம்.பொதுவாகத் தமிழ் மலையாள மொழிகளில் உள்ள பல பொருள் ஒரு சொல்லின்(*polysemy*) ஒரு பொருள் தமிழில் நிலை பெற மலையாளத்தில் வேறொரு பொருள் நிலை பெற்றிருக்கும். இது இருமொழியாளர்களிடையே பொருள் குழப்பத்தையும் அதனால் நகைப்பிற்கிடமான சூழல்களையும் ஏற்பட்டுத்திவிடும்.எடுத்துக் காட்டுஅரிப்பு என்ற சொல்.தமிழில் இது சொரி என்ற பொருளுடன் ஒட்டி நிற்க மலையாளத்தில் அரிக்கும் அல்லது வடிகட்டும் பாத்திரம் என்ற பொருளுடன் ஒட்டிக் கொள்கிறது.இவ்வாறு பொருள் சார்ந்த மயக்கங்களும் வேடிக்கைகளும் விளைவதற்குப் பல பொருள் ஒரு சொல்லும் அது போன்ற ஒப்புருச் சொல்லும் (*homonymy*) காரணமாக அமைகின்றன என்று மொழியியலாளார் விளக்குவர். தமிழில் முன்பு சிலேடை (*pun*) என்றும் இன்று கடி (*conundrum*) என்றும் வழங்கும் வழக்குகள் இத்தகைய பலபொருள் ஒரு சொல் வகைகளால் விளைபவை மிகுதி எனலாம்.

பலபொருள் ஒரு சொல்லின் இன்னொரு வகையானஒப்புருச் சொல்.ஒலிமாற்றம் கடன் வாங்கல் மூலம் சொற்கள் வடிவம் மாறி ஒரே வடிவத்தைப் பெற்றுவிடும்.ஆனால் சொற்பொருள் நிலையில் பலபொருள் ஒரு சொல் போலன்றி அவை தொடர்பற்றிருக்கும்.மாலை என்ற சொல் ஆரம் என்ற பொருளிலும் மாலைக் காலம் என்றும் வருவது இதற்கு எடுத்துக்காட்டு.அறி அரி என்ற சொற்களில் ஏற்படும் ஒப்புருச் சொல் மயக்கம் வேடிக்கையான நிகழ்வுகளை ஏற்படுத்திவிடலாம்.அதாவது தமிழில் ர என்ற இடையினமும் ற என்ற வல்லினமும் தம் ஒலிப்பு வேறுபாட்டை இழந்து ஒரே ஒலிப்பைப் பெற்றுவிட்டன.அதனால் அரி என்ற சொல்லும் அறி என்ற சொல்லும் தமிழ் ஒலிப்பில் ஒப்புருச் சொல்லாக ஆகிவிட்டன.ஆனால் எழுதும்போது எழுத்து வேறுபாடு செய்து தமிழர் எழுதுவர்.தமிழை ஒழுங்காக உச்சரிக்கத் தெரியாத வெட்கம் இல்லாத பாவம் தமிழாசிரியர் இதை பெரிய ர சின்ன ற என்று வேறுபடுத்துவர்.மயங்கொலிகள் என்று பொருத்தமில்லாத பெயரிட்டு அதில் சொல்வதெழுதல் பயிற்சி வேறு கொடுப்பார் தமிழைக் கொல்லாக் கொலை செய்யும் இன்றைய தமிழாசிரியர்.இதைக் கேட்டு மலையாளிகள் சிரிப்பாய்ச் சிரிப்பார்கள்.மலையாளத்தில் இவை தெளிவாக வேறுபடுத்தப்படும்.இந்த ஒலி மயக்கத்தால் ஏற்பட்ட நகைச்சுவை ஒன்றை நான் கேட்டிருக்கிறேன்.

ஆங்கிலப் பாதிரியார் ஒருவர் தன் சமையல்காரரிடம் மீன் வாங்கிக் கொடுத்துத்

தனக்குத் தெரிந்த மலையாளத்தில் ‘மீன் வைக்கான் அரியாமோ? (மீன் குழம்புவைக்க அறிவாயா-?)‘என்று கேட்டிருக்கிறார்.பாதிரியார் அறி என்பதை அரி என்று உச்சரித்தபடி பொருள் கொண்டு சமையல்காரர் மீனை அரியாமல் எப்படிக்குழம்பு வைப்பது என்ற பொருளில் ‘அரியாதே எங்ஙனே கறி வைக்கும் அச்சா ?‘ என்று கேட்டாராம்.இது மொழி சார்ந்த ஒரு நாட்டுப்புற நகைச் சுவை.இந்த ர,ற வேறுபாடின்மை தமிழிலும் உண்டு.ஒரு முறை நான் திருவள்ளுவர் பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்தபோது விருதுநகர் பேருந்து நிலையத்தில் அதிகாலை ஒரு பையன் முள்முருக்கு என்று கூவி விற்றுக் கொண்டிருந்தான்.என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த மலையாளி ஒருவர் ‘தமிழம்மார் முள்முருக்கும் கழிக்குமோ?‘ என்று நகைச்சுவையை உதிர்த்துக் கொண்டிருந்தார். பக்கத்தில் இருந்த நான் எனக்கு விளங்கவில்லை என்றேன்.மலையாளத்தில் முள்முருக்கு ஒரு வகை மரம்.மலையாளிகள் முறுக்கே தின்பார்கள் என்று வல்லின றகரத்தை நன்கு உச்சரித்துக் காட்டினார். நானும் சிரித்து விட்டேன்.

ஒரு முறை மலையாளி மாணவர்களுக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்த என் உடன் பணியாற்றும் தமிழாசிரியர் ஒருவர் வாளப்பளம் என்று சொல்வதெழுதல் பயிற்சி கொடுத்தார். மாணவனுக்குக் குழப்பம்.வாழைப்பழம் என்று எழுதுவதா அல்லது ஆசிரியர் சொல்லுவது போல வாளப்பளம் என்று எழுதுவதா என்று.அங்கு மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்த என்னைப் பார்த்து என்ன எழுதுவது என்று கேட்டார். ஆசிரியர் எதிர்பார்ப்பது வாழைப்பழத்தை.ஆனால் அவர் வாளப்பளத்தை விழுங்கமாட்டார். வாழைப்பழம் என்றே எழுதிவிடு என்றேன்.இரண்டு பேரும் சிரித்து விட்டோம்.தமிழாசிரியர் விவரம் தெரியாமல் ஐயோ பாவமாக நின்றிருந்தார். தன்பிழைப் பெருமை தானறியாச் சங்கரனார் அன்றோ அவர்?

பல பொருள் ஒரு சொல் ஒப்புருச் சொல்லால் நேரும் பொருள்குழப்பத்திற்கு இன்னொரு எடுத்துக்காட்டு கழித்தல் என்ற சொல். வேளிகழிஞ்ஞோ என்ற வாக்கியத்தில் அதனுடன் வேளி என்ற பலபொருள் ஒரு சொல்லும் சேர்ந்துகொண்டு ‘கடியாக‘(conundrum) மாறிவிடுகிறது. மலையாளத்தில் வேளி என்றால் திருமணம் என்ற ஒரு பொருள்.இன்னொன்று திருவனந்தபுரத்தைச் சேர்ந்த ஒரு ஊரின் பெயர்.

ஒரு முறை சென்னையிலிருந்து திருவனந்தபுரத்திற்குத் திரும்பிக் கொண்டிந்த மலையாளி முதியவர் ஒருவர் தன்னுடன் பயணம் செய்த இளம் மலையாளி இளைஞர் ஒருவர் -அவர் அப்போதுதான் அப்போதுதான் முதன் முதலாகத் திருவனந்தபுரத்திற்கு வருகிறவர்-அவரிடம் வேளி கழிஞ்ஞோ என்று கேட்கிறார்.அவருக்கு திருவனந்தபுரம் புறநகர்ப் பகுதியில் கடற்கரையை ஒட்டி இருக்கும் வேளி அல்லது கொச்சு வேளி என்ற புகைவண்டி நிலையம் இருப்பது தெரியாது.எனவே அவர் இன்னும் கழிஞ்ஞில்லா .வரன் திரயுந்து (தேடுகிறோம்.) என்று விடையிறுக்க முதியவர் சிரித்து விட்டார்.அவர் கேட்டதோ வேளி என்ற பெயர் தாங்கிய புகைவண்டி நிலையம் தாண்டிவிட்டதா?என்று பொருள் பட ஆனால் இளைஞர் இன்னொரு நிலையில் திருமணம் முடிந்துவிட்டதா என்ற பொருள் தந்து விடையிறுக்கிறார்.இதை நயினார் சுவைபட விளக்கியுள்ளார்.இங்கே தமிழிலும் சுட்ட பழம் சுடாத பழம் கதை நினைவுக்கு வரலாம்.

எனக்கு இங்கு ஒரு மலையாளத் திரைப்படத்தில் வந்த ஒரு சிறு நகைச்சுவை நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. ஒரு பாத்திரம் இன்னொரு பாத்திரத்திடம் தங்கள் பெயர் என்ன என்று கேட்கும். அவர் கொல்ல(ம்/ன்) இராகவன் என்று விடையிறுப்பார். கேள்வி கேட்டவர் நான் உங்கள் சாதியைக் கேட்கவில்லை.பெயரைத் தான் கேட்டேன் என்பார். இரண்டாமவர் மறுபடியும் நானும் அதைத் தான் குறிப்பிட்டேன் என்பார்.அதற்கு முதலாவர் தாங்கள் தங்கள் சாதியையும் சேர்த்து அல்லவா சொல்லுகிறீர்கள் என்பார் வியப்புடன்.அதற்கு அவர் என் ஊர் கொல்லம் அதைத்தான் சேர்த்துச் சொன்னேன்.நீங்கள் கொல்லன் என்று புரிந்து கொண்டீர்கள் போலிருக்கிறது என்பார்.

இங்கே கொல்லம் என்ற இறுதி மகரக் குறுக்கமாக ஒலிக்கும் போது அது மகரத்திற்கும் னகரத்திற்கும் இடைப்பட்டதாக ஒலிக்கிறது.இதனால் மகரம் னகரம் மயங்குகின்றன.இதைத் தமிழ் மரபு இலக்கணம்மகர னகரப் போலி என்று கூறும்.நிலன் நிலம்,அறம் அறன் கலம் கலன் என்றெல்லாம் எடுத்துக் காட்டுகள் கொடுப்பர்.இன்றைய மொழியியலார் ஒலியன் நிலையில் பொருளிலா ஒலியன் திரிபு (*Phonemic Free variation*) என்றும் மொழி இறுதி உயிர் மெல்லினமாதல் (*Nasalisation of vowels*) என்றும் இதைக் கூறுவர்.நான் தொல்காப்பியம் கூறும் மகர னகரப் போலி பற்றிய சூத்திரத்தை (தொல்.எழுத்து.மொழிமரபு 49) நடத்தும்போதும் மொழியியலில் ஒலியன் நிலையில் பொருளிலா ஒலியன் திரிபு (*Phonemic Free variation*), மொழி இறுதி உயிர் மெல்லினமாதல் (*Nasalisation of vowels*) என்பவற்றை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ள இந்த எடுத்துக் காட்டை எடுத்துக் காட்டி விளக்குவேன்.மாணவர்கள் இந்தச் செய்திகளை நகைச் சுவையுடன் எளிதாகப் புரிந்து கொள்ள இந்த எடுத்துக்காட்டுத் துணை செய்யும்.இதை இன்னும் சொல் நிலையில் இன்றைய பேச்சு மொழியில் வந்தா(ள்) என்ற பெண்பால் வினைமுற்றிலும்வந்தா~(ன்) என்ற ஆண்பால் வினைமுற்றிலும் முறையே வரும் -ஆ (ள்)என்ற பெண்பால் விகுதியையும் -ஆ~(ன்) என்ற ஆண்பால் விகுதியையும் வேறுபடுத்தி உணர்த்த இது நல்ல எடுத்துக்காட்டாக அமையும்.

இத்தகைய வேடிக்கையான மொழிவழக்குகளில் ஒளிந்து கொண்டிருக்கும் இலக்கண மொழியியல் உண்மைகளை விளக்கினால் இலக்கணமும் மொழியியலும் இனிக்கும் நெல்லி ஆகும். இலக்கியங்களில் இத்தகைய கடிகள் அல்லது சிலேடைகள் நிறைய உண்டு.சீவக சிந்தாமணியில் சீவகன் காந்தருவதத்தையிடம் கிழவனாக மாறு

வேடத்தில் பேசும்போது 'குமரியாடப் போந்தேன்' என்று இருபொருள்படப் பேசுவான் .இத்தகைய சிலேடைகளுக்குப் பேர் போன காளமேகப் புலவர்,இரட்டைப்புலவர்கள்,ஆண்டான் கவிராயர் போன்றோர் கவிதைகளில் அடங்கியிருக்கும் சிலேடைக் கவிதைகளில் ஒளிந்திருக்கும் இலக்கண மொழியியல் உண்மைகளை மொழி ஆசிரியர்கள் விளங்கிக் கொண்டு கற்பித்தால் நல்ல பயனுண்டு. இது பற்றி நான் எழுதியுள்ள தமிழ்க் கட்டுரைகளையும்(கி. நாச்சிமுத்து' மொழி எனும் விளையாட்டு'ஓம் சக்திஇதழ் தொகுதி 29 பகுதி 11 டிசம்பர் 2011 பக் 74-78,மாணவர்களுக்கு ஏற்ற அர்த்தமுள்ள மொழிவிளையாட்டுகள்-தண்டியலங்காரச் சொல்லணியியல் வழி ,அச்சில் வராத கட்டுரை) ஆங்கிலக்கட்டுரையையும் படித்துப்பாருங்கள்(*Nachimuthu K.'A Linguistic Interpretation of KaTi Jokes in Tamil', IJDL.Vol.Vol xxxiii No.2 June 2004 pp.169-178*).

மேலே காட்டிய பல பொருள் ஒரு சொல்லால் வரும் மயக்கங்கள் வேடிக்கைகள் தமிழ் மலையாளச் சொற்களில் மட்டுமல்ல,நாம் கடன் வாங்கியிருக்கும் வடமொழிச் சொற்களாலும் ஏற்படும் என்பதற்கு அவகாசம் ,அவசரம்,விவசாயம்,சம்சாரம் போன்ற சொற்கள் எடுத்துக் காட்டுகள் ஆகும்.நயினார் இவற்றை எல்லாம் விளக்கியுள்ளார்.அவசரம் என்ற வடசொல்லின் வாய்ப்பு என்ற பொருளை மலையாளம் கடன் வாங்க நாம் விரைவு என்ற பொருளைக் கடன் வாங்கியுள்ளோம்.சம்சாரம் என்ற சொல் பேச்சு, மனைவி என்ற இருபொருள்படுவதால் வரும் வேடிக்கை ஒன்றை கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் தன் திரைப்படம் ஒன்றில் சேர்த்திருப்பார்.விவசாயம் என்றால் வடமொழியில் தொழில் என்று பொருள்.நாம் தமிழில் அதை வேளாண்மை என்ற தொழிலைக் குறிக்கக் கடன் வாங்கியுள்ளோம்.மலையாளம் தெலுங்கு போன்ற மொழிகளில் அது தொழில் என்ற பொருளிலேயே வழங்கும்.எனவே சினிமா விவசாயம் என்று மலையாளி சொல்லும் போது நமக்குச் சிரிப்பு வருகிறது.

நயினாருடைய துன்னல் என்ற தொகுப்பில் சிறப்பிடம் பெறும் பதிவுகளில் குறிப்பிடத்தக்கவை பழந்தமிழ் இலக்கியங்களில் பயின்று இன்றும் மலையாள மொழியில் இயல்பாக வழங்கி வருகிற சொற்கள் பற்றியவை.

'ஆற்றிடைக்குறை என்ற பொருளிலும் கவலை வழங்கிவந்துள்ளது. "செல் ஆற்றுக் கவலைப் பல் இயம் கறங்க' என வரும் குறுந்தொகைப் பாடல்வரியில் (263.2-3)இடம்பெறும் கவலைக்கு ஆற்றிடைக்குறை எனப் பொருள் கூறியுள்ளனர்' என்று நயினார் குறிப்பிடுகிறார்.ஆனால் இது பொருந்தாது செல்லாற்றுக் கவலை என்பதற்குச் ' செல்லும் வழியிலுள்ள நாற்சந்தியில் பல்லியம் கறங்க 'என்று பொருள் உரைக்க வேண்டும்.

உ.வே.சாமிநாதையர் தம் குறுந்தொகை 263 ஆம் பாடல் உரையில் ' ஆற்றுக் கவலை-ஆற்றிடைக் குறையாகிய துருத்தி .புறநானூற்றிலுள்ள உள்ளாற்றுக் கவலை (புறம் 219-1) என்பதன் உரையைப் பார்க்க. வழிப்போவார் செல்லும் வழியிலுள்ள கவர்த்த இடம் என்றலும் ஒன்று 'என்று எழுதிச் செல்வார். புறநானூற்றுப் பழைய உரையில் 'உள்ளாற்றுக் கவலை' (புறம்219.1) என்பதற்கு 'வழிக்குள்ளாகிய நாற்றிசையும் கூடிய இடமென்றுமாம்.கவர்த்த வழிக்குள்ளென்று உரைப்பாரும் உளர்' என்ற விளக்கமும் காணப்படுகிறது.இரண்டாவது விளக்கமே சரி.கவலை என்பதன் பொருள் மலையாளத்தில் வழங்குவது போலக் கவர்த்த வழி என இங்கு உரைப்பதே பொருத்தம்.மலையாள வழக்குகள் பழந் தமிழ்ச் சொற்பொருளை உணர உதவும்என்பதற்கு நான் இந்தப்பாடற்பொருளை விளக்கிப்பல கட்டுரைகளிலும் சொற்பொழிவுகளிலும்எடுத்துரைத்துள்ளேன்.ஆண்டுக் காண்க. (அவற்றில் ஒரு சில. கி.நாச்சிமுத்து சிலப்பதிகாரம் சேரநாட்டுக் காப்பியம்- பண்பாட்டு வரலாற்றுக் கிளைமொழி ஆய்வு, மணற்கேணி,(*ISSN 2249-9164)* ,பிப்ரவரி 2012,பக்.8-26, *K.Nachimuthu,Retention of Sangam Traditions in Malayalam Language and Literature ,Department of Tamil , Key note Address in the Seminar University of Kerala,Kariavattom and CICT,Chennai,March 3-5,2014.Central University of Tamilnadu,Thiruvarur,Language of Literary texts and Historical DialectologyLexicographic Perspectives , The Language of Sangam Poetry :Perspectives from Historical Dialectology Prof.V.I.Subramoniam Memorial Lecture 43nd All India Conference of Dravidian Linguists,Annamalai University,Annamalai Nagar18-20 th June ,2015,Paper presented in the 9th NETamil Workshop,held on6-12th September 2017 on Glosses,Lexicography , Semantics, EEFO,Puducherry, Language of Literary texts and Historical Dialectology ,Lexicographic PerspectivesInternational School of Dravidian Linguistics,Thiruvananthapuram15th March 2018*).

இந்தப்பாடலில் தொடர்ந்து வரும் "செல்ஆற்று க்கவலைப்பல்இயம்கறங்கத் தோற்றம் அல்லது நோய்க்கு மருந்தாகா என்ற பகுதியில் வரும் தோற்றம் என்ற சொல் கேரளத்தில் வழங்கும் தோற்றம் பாட்டைக் குறித்து வந்தது.இதை முதலில் சுட்டிக் காட்டியவர் பி.எல்.சாமி அவர்கள்(கேரளமும் கண்ணகி வழிபாடும்,ஆராய்ச்சி இதழ்).இப்பொருளை அறியாத உ.வே.சா .போன்றோர் தோற்றம் என்பதற்குக் காட்சி என்று பொருள் எழுதிச் செல்வர் என்பதையும் இங்கு குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

நயினார் தொள் ,தொண்டை என்ற சொற்களைக் காட்டி விளக்கியிருப்பது ஒப்பிலக்கண நிலையில் சொற்பொருள் ஆராய்ச்சியை மேற்கொள்ளவேண்டிய இன்றியமையாமையை விளக்குகிறது.பர்ரோ எமனோ திராவிட சொற்பிறப்பியல் அகராதியின் சிறப்பை இது உணர்த்துகிறது.பழந்தமிழில் எள் எண், வேள் வேண் என்பவை உறழ்ந்து வரும் என்பதையும் இங்கு நினைவூட்டலாம்.பழந்தமிழ்ச் சந்திகள் சில மலையாளச் சொற்களில் உண்டு.எண் தலை அப்பன் என்ற பார்சுவநாதர் பெயர் எண்டிலையப்பன் என ண்+த் ட் என்ற சந்தி பெற்றுமலையாளத்தில் வழங்குவதை நயினாரே வேறோரிடத்தில்

எழுதியிருப்பார்.கற்றச்சகோணம் போன்ற கேரளப் பெயர்களில் ல்+த் ற் ஆகும் தொல் தமிழ் சந்தி மலையாள வழக்குகளில் இன்றும் இடம்பெறுவதும் உற்று நோக்கத்தக்கது.

நக்னம் நக்கம் நிர்வாணம் என்ற சொல்லுக்குப் பிறந்த மேனி என்று சொல்வதுண்டு. நயினார் என்ற அடையை தமிழ்ச்சமணர் சூட்டிக் கொள்வர். சமணப் பேரறிஞர் சக்ரவர்த்தி நயினாரை எல்லோருக்கும் தெரியும்.திருவள்ளுவ நயினார் என்று வள்ளுவரைச் சமணர் கும்பிடுவர். மயிலாப்பூரிலிருந்த திருவள்ளுவ நயினார் கோயிலை இன்று சைவக்கோயிலாக மாற்றிவிட்டார்கள்.

மலையாளத்தில் மிண்டு என்பது வீறாகப் பேசுதல் என்ற பொருளில் நின்றுவிட்டது.விறன்மிண்ட நாயனார் மலைநாட்டைச் சேர்ந்த வீறுமொழி அடியார் என்பதை நாம் அறிவோம்.தமிழில் மிண்டு முண்டு என்றும் மாறியுள்ளது போலும்(பார்க்க. தமிழ்ப்பேரகராதி. முண்டு-தல் *muntu-, 5 v. intr.* <மிண்டு-. *1. To be unruly, refractory; to act saucily;* முரண்டுபண்ணுதல். *2. To attack vehemently;* முனைந்துநிற்றல். ஒருமுண்டுமுண்டிப்பார்த்தான்).

ஐம்பூதத்தில் ஒன்றான வாயுவை குறிக்கும் வளி என்ற சொல் பழந்தமிழில் இடர்க்கப்பொருளான மலவாய்க்காற்றையும் குறிக்கும்.இதை'வளி என வரு ஊம் பூ த க் கி ள வி ' என்று தொடங்கும்தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் உயிர்மயங்கியல் 242 ஆம் சூத்திர உரையில் இளம்பூரணர் நச்சினார்க்கினியர் ஆகிய இருவரும் 'வளி என்று சொல்லவருகின்ற இடக்கர் அல்லாத ஐம்பெரும்பூதங்களில் ஒன்றை உணரநின்ற சொல்லும்' என்று பொருள் எழுதிச் செல்வர்.எனவே வளி என்ற சொல் மலவாய்க்காற்றைத் தொல்காப்பியர் காலத்திலேயே உணர்த்திற்று என்பதையும் அது தமிழ் நாட்டுத் தமிழிலும் வழக்கிலிருந்தது என்பதையும் பின் அது மலைநாட்டு வழக்காகிய மலையாளத்தில் மட்டும் எஞ்சி நிற்கிறது என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

வளி மலையாளத்தில் இடர்க்கர்ப் பொருளில் வருவது பற்றிய வேடிக்கையான உரையாடல் ஒன்றை நயினார் விளக்கியிருப்பார். இது நாம் முன்னர் குறிப்பிட்ட வேறு வேறு பொருள் தரும் ஒலியன் என்று மொழியியலாளர் அழைக்கும் ள,ழ என்பவை பல தமிழ் வட்டார வழக்குகளில் ஒலிப்பு வேறுபாட்டை இழந்து ஒன்றாக உச்சரிக்கப்படும். இதனால் ஒப்புருச் சொற்கள் ஏற்பட்டுவிடும்.எனவே தமிழில் வளி என்ற சொல் காற்று என்ற பொருளோடு வழி என்ற சொல்தரும் பாதை என்ற பொருளையும் பெற்றுவிடும்.பாவம் தமிழாசிரியர் தமிழின் சிறப்பெழுத்தை உச்சரிக்கப் படிக்காமலும் தெரியாமலும் ழ தமிழின் சிறப்பெழுத்து என்று சொல்லிக் கொடுத்துவிட்டு மவ்வு ழ, கொம்பு ள அல்லது பொது ள என்று வேறுபாடு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். நயினார் சொல்லிக் காட்டும் நகைச்சுவைத்துணுக்கு போல நானும் ஒன்றைக் கேட்டிருக்கிறேன். இதை நாகர்கோயில் திருவனந்தபுரம் பேருந்துப் பயணத்தில் தமிழகப் பேருந்துகளில் பயணம் செய்வோர் பலரும் கேட்டிருக்கக்கூடும்.

ஒரு முறை பேருந்தில் நாகர்கோயிலிலிருந்து திருவனந்தபுரம் வந்து கொண்டிருந்தபோது வழக்கம்போலத் தமிழ் நடத்துநர் 'வளிவிடுங்கோ வளிவிடுங்கோ' என்று சொல்லிக் கொண்டு பயணிகளை ஊடறுத்துக் கொண்டு போனார். அங்கிருந்த மலையாளிகள் எல்லாம் 'தமிழம்மார் விருத்தி கெட்டவன்மார்.பஸ்ஸில் வளிவிடான் பறயுந்நு(தமிழர்கள் அசிங்கமானவர்கள்.பேருந்தில் குசு விடச் சொல்லுகிறார்கள்.)என்று சொல்லிக் கொல்லென்று சிரித்தனர்.பேருந்தில் இருந்த தமிழ் மட்டுமே அறிந்ததமிழர்கள் பலருக்கும் அது புரிந்திருக்குமா என்பது ஐயமே?தமிழும் மலையாளமும் அறிந்த என்னைப்போன்ற தமிழர்கள் கூனிக் குறுகி ஊட்கார்ந்திருந்தோம்.

இதோடு தொடர்புடைய இன்னொரு செய்தி. அந்தக் காலத் திருவாங்கோட்டு இராச்சியத்திற்கு நுழை வாயில் ஆறல்வாய் மொழி.அங்கே உள்ள சுங்கச் சாவடியில் உள்ளே நுழைபவர் தமிழரா ? மலையாளியா? என்று அறிந்து கொள்ள 'ஏழேழு வாழைப்பழம்' என்ற சொல்லை உச்சரித்துக் காட்டச் சொல்வார்களாம்.இந்த சோதனை மூலம் ஏளேளு வாளப்பளம் சொன்ன தமிழர்களை அடையாளம் கண்டு கொள்வார்களாம்.அப்புறம் திருவாங்கோட்டு ராச்சியத்திற்குள் விட்டார்களா? தடுத்து நிறுத்திவிட்டார்களா? அல்லது தமிழை நன்கு செவ்வையாக உச்சரிக்கப் பழகிக் கொண்டு வா என்று சொன்னார்களா என்று தெரியவில்லை.

இன்னும் மலையாள மொழியிலும் தமிழில் போலக் கடி சிரிப்புகள் உண்டு.இது பற்றி முன்பே விளக்கியிருந்தேன்.

ஒரு திரைப்படத்தில் ஒரு பாத்திரம் ஒருவர் பெயரைக் கேட்க அவர் கொல்லம்(ன்) ராகவன் என்று மெல்லொலிச் சாயல் பெற்ற உயிராக(மகரக் குறுக்கம் அல்லது nasalized vowel) ன் ,ம் வேறுபாடின்றி ஒலிப்பார்.அதைக் கேட்ட பாத்திரம் தான் ஒரு ஆசாரியோ என்று மீண்டும் வினவுவார்.தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டவர் அல்ல நான் கொல்லத்துகாரனாணு என்று விளக்கம் செய்வார். இது மலையாளத்திலேயே ஏற்பட்ட ஒலி மாற்றத்தால் ஏற்பட்ட கடி.இவ்வாறு மலையாளத்தில் உருவாகும் கடிகளையும் யாராவது தொகுத்து ஆராயலாம்.பின் தமிழில் தமிழிலும் உள்ள கடிகளுடன் ஒப்பிட்டும் ஆராயலாம்.

நயினார் துன்னல் என்ற தன் நூலில் குறிப்பிடும் இரண்டு செய்திகளைப் பற்றிக் குறிப்பிட்டுச் சில கருத்துக்களைச் சொல்லவேண்டும்.ஒன்று தமிழ் மலையாளத்தின் தாய் என்பது பற்றிய கருத்து மோதல்கள் பற்றியது.இன்னொன்று மலையாளத்தில் அளவுக்கதிமாகக் கடன் சொற்களை வாங்கும் போக்குப் பற்றியது.

தமிழை மலையாளத்தின் தாய் என்றும் சகோதரி என்றும் சொல்வதோடு மூன்றாவதாக மலையாளம் தமிழின் தாய் என்ற கருத்தை மகாகவி உள்ளூர் பரமேசுவர அய்யர் கூறியுள்ளதாக நயினார் குறிப்பிடுகிறார்.இதில் ஒரு நுட்பம் உள்ளது.ஒரு

வகையில் மலையாளம் வடமொழியிலிருந்து நிறையக் கடன் சொற்களை வாங்கியிருந்தாலும் அதன் ஒலியமைப்பு பழந்தமிழில் உள்ளது போலவே எந்த மாற்றமும் இல்லாமல் வழங்கிவருகிறது.தமிழ் வட்டார வழக்குகளில் மெய்களில் கஙசடண தபமயரலவளன என்ற பதினான்கே வழக்கிலுள்ளன. இன்னும் சில வட்டார வழக்குகளில் கசடதபமயரலன என்ற பத்தே உள்ளன.பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யும் தொல்காப்பியர் சொன்னவாறே அப்படியே மலையாளத்தில் மட்டும்தான் காணமுடியும். இப்படி இருக்கத் தற்காலத் தமிழை எப்படி மலையாளத்தின் தாய் என்ற கூறமுடியும் என்பது நியாயமான கேள்வி. இதனால் உள்ளூர் கூறியபடி மலையாளம் இன்றைய தமிழின் தாயாகும் போலும்.

இன்றைய தொலைக்காட்சி முதலிய ஊடகங்களில் இதை நன்கு காணலாம்.தமிழ் நாட்டுத் தமிழர்கள் உச்சரிக்கும் தமிழில் தமிழ் ஒலிகள் நன்றாக உச்சரிக்கப்படுவதில்லை.தமிழை நன்கு உச்சரித்துக் கொண்டிருந்த தமிழ் பிராமணர் கூட இன்று தமிழை நன்கு உச்சரிப்பதில்லை.இது கரோனா போன்ற பிழைத் தொற்றோ?தெரியவில்லை.அதனால் தமிழர்களை அந்த வேலைக்கு ஊடகங்கள் சேர்ப்பதில்லை.அந்த இடங்களில் தமிழ் நாட்டில் வாழும் மலையாள இளைஞர்கள் இளைஞிகளை வேலைக்கு எடுக்கிறார்கள்.தமிழில் செய்தி வாசிப்பது,பின்னணிக் குரல் கொடுப்பது ,இசைத்துறை முதலியவற்றில் மலையாளிகள் கொடிகட்டிப் பறக்கிறார்கள்.இந்த நிலைக்குக் காரணம் தமிழைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் தமிழாசிரியர்களும் தமிழை நன்கு உச்சரித்து மாணவர்க்குக் கற்பிக்காமையே.இந்த நிலையைக் கண்டு கொதித்துப் போய் நண்பர் தக்கலை பென்னி ‘இவர்கள் எல்லாம் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகவேண்டும்.அல்லது இவர்கள் நாக்கை அறுக்கவேண்டும்‘என்று கவிதை எழுதினார். தமிழைக் கற்பிக்கிறவர்கள் திருந்துவார்களா?

மலையாளத் தாய்மார் ஒவ்வொருவரும் நல்ல பச்சை மலையாள ஆசிரியைகள்.மொழியைச் செவ்வையாக அவர்கள் குழந்தைக்குச் சொல்லிக் கொடுத்துவிடுவார்கள்.தமிழில் தாய்மார்கள் எல்லாம் மழலை அல்லவா பேசுகிறார்கள்.என்ன செய்வது?எனக்குத் தெரிந்த என் உறவுக் காரப் பெண் மழை மேல் மலை பெய்தது என்று பேசுவாள். ஏனம்மா இப்படிப் பேசுகிறாய் என்று கேட்டால் நான் படித்த கான்வெண்டில் எங்க தமிழாசிரியை இப்படித்தான் பேசுவார் என்பாள்.பக்கத்திலிருந்த என் நண்பர் தமிழ் நாட்டில் உள்ள பல பல்கலைக்கழகங்களில் ‘எங்கள் ஊரில் காளையில் பால் கறப்பார்கள்‘ ‘பணமரத்திலிருந்து கல் இரக்குவார்கள்’ என்று பேசுகிற தமிள்ப் பேராசிரியர்கள் நிறைந்து கிடக்கிறார்கள் என்பார். திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி முதல்வராக இருந்த பேரா.சுவாமிராஜ் அவர்கள் ஒரு முறை ‘இன்று சட்டமன்றத்தில் நல்ல தமிழில் பேசுபவர் ஜெயலலிதா அம்மையார் மட்டுமே‘ என்று இந்தத் தமிழ்க் கொலையைப் பற்றிக் குறிப்பிட்டுப்பேசியது நினைவுக்கு வருகிறது.

ஓதுவார் ஒருவர் கைகாள் கூப்பித் தொழீர் என்ற அப்பர் பாடலைக் கோயிலில் கைகால் கூப்பித் தொழீர் என்று பாடிய போது காலால் எப்படிக் கூப்பித் தொழுவது சிவனே என்று மண்டையில் அடித்துக் கொண்டார் தமிழ் நன்கறிந்த சிவனடியார். வேடசந்தூர் பக்கத்துக் காரர்களுக்குக் குலத்திற்கும் குளத்திற்கும் வேறுபாடு தெரியாது .நாங்க பிறந்த குலம் முருகன் பிறந்த குலம் (குளம்) என்று அடை கொடுத்து வேறுபடுத்துவார்கள்.தமிழர்கள் தமிழ் உச்சரிப்பை வைத்து ஆயிரம் கடிகள் உண்டு. இவற்றைத்திரட்டி ஒரு அகராதியே போடலாம்.

அடுத்து மலையாளிகள் பிறமொழிச் சொற்களை வரம்பின்றிக் கடன் வாங்கி அதை கடன்வாங்கும் மொழியாக மாற்றிவிட்டது பற்றிச் சமகாலத் தலைவர்கள் புலம்புவதை நயினார் சுட்டிக் காட்டியிருக்கிறார்.இப்போக்கை மறைந்த மன்னர் சித்திரைத்திருநாள் அரசர்,இ.எம்.எஸ்.நம்பூதிரிபாட் போன்றவர்களும் சுட்டிக் காட்டி வருத்தப் பட்டிருப்பதை நான் முன்பு ஒரு முறை எழுதியிருந்தேன்.இப்போக்கால் மலையாளம் தன் படைப்பாக்கத்திறனை இழந்துகொண்டிருக்கிறது. இது பற்றி மலையாளப் பேராசிரியர் பெஞ்சமின் ஒரு முறை குறிப்பிட்டதை இங்கு நினைவூட்டலாம். மலையாளிகள் மலையாளத்தோடு வடமொழியையும் கற்ற காலத்தில் வடமொழியைக் கடன் வாங்கினார்கள்.மலையாளத்திற்குப் புதுச் சொல் தேவைப்படும்போது வடமொழி மூலத்திலிருந்து புதிய வடிவங்களை அவர்களால் படைக்க முடிந்தது. இப்போது மலையாளிகளுடைய வடமொழிக் கல்வி முன்பு போல இல்லை.புதிய சொல்லாக்கத் தேவை வரும்போது வடமொழிப் பயிற்சி இல்லாததால் வடமொழியை விட்டு எல்லாவற்றிற்கும் இப்போது கற்கும் ஆங்கிலத்திலிருந்து கடன்பெற்று விடுகிறார்கள்.இனி வரும் காலத்தில் நிலைமை மாறும்போது கடன் வாங்கும் முறையும் மொழியும் மாறும்.அதனால் மொழியின் தொடர்ச்சியான போக்கும் தடைப்படும்.புதியன படைக்க வேறொரு மொழியை நாடவேண்டியிருக்கும்.மொழி மலட்டுத் தன்மை அடைந்துவிடும்.ஆனால் தம் மொழிச் செலவத்தையே புதிய ஆக்கங்களுக்குப் பயன்கொள்ளும் தமிழில் இது நேராது.அதன் படைப்பாக்கத் தன்மை உயிர்ப்போடு இருப்பதால் அதன் தொடர்ச்சி அறாது நடக்கும்.இதை மலையாளிகள் உணரும் காலம் எப்போது வருமோ தெரியவில்லை என்பார் பெஞ்சமின்.இதில் பொதிந்துள்ள நல்ல அறிவியல் உண்மை நம்மை எச்சரிக்கிறது.இதைக் காலம்தான் மலையாளிகளுக்கு உணர்த்தவேண்டும்.பச்சை மலையாள மூலத்திற்குப் போனால் அது தமிழாய்விடும் என்ற வறட்டுக் காழ்ப்புணர்ச்சியிலிருந்து அவர்கள் வெளியே வரவேண்டும்.

தமிழ் மலையாள மொழிக்களங்கள் பற்றி நகைச் சுவையாகவும் வேடிக்கையாயும் எழுதப் பெற்ற நயினாரின் துன்னல் சொல் ஆராய்ச்சித் தொகுப்பை ஒட்டி எழுந்த சில சிந்தனைகள் இவை. இவை நம்மைச் சிந்திக்கவும் சீர்திருத்திக் கொள்ளவும் உதவுமாயின் அதுவே இவற்றின் பயன்.

கட்டுரையாளர்: தமிழ்ப் பேராசிரியர் (பணிநிறைவு)

கட்டுரை

நிகழ் அய்க்கண்
ayykan1960@gmail.com

கல்வியும் தகுதியும்

சந்தையும் சமத்துவமின்மையும் இணைபிரியாததாகும். சமத்துவமின்மை அதிகரிப்பின் காரணமாக, ஏழைமக்கள் ஒருபுறம் தங்களது வாழ்வாதாரத்திற்காகவும், மேம்பாட்டிற்காகவும், இன்னொருபக்கம் தாங்கள் இழந்துபோன ஜனநாயக உரிமைகளை மீட்டெடுக்கவும் போராடவேண்டியிருக்கிறது. இவையாவற்றிலிருந்தும் இம்மக்கள் புத்துயிர்ப்பு பெறுவதற்கு கல்வி முக்கியமானதொரு சாதனமாகும்.

ஊடகங்களின் வழியாக, உள்ளூர் அளவிலான தகவல்களை தெரிந்துகொள்ள நீங்கள் ஆர்வமுடையவராக இருப்பீர்களேயானால், பின்வரும் செய்திகளையும் நிச்சயமாகத் தவறவிட்டிருக்க மாட்டீர்கள். அதாவது, பிரபலங்களின் திரைப்படம் திரைக்குவந்த முதல்நாள் வசூல்; பண்டிகைக்காலங்களில் மது விற்பனை; கோயில்களின் உண்டியல் வசூல்; விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிப்பெற்றவர்களுக்கான பரிசுத்தொகை; பங்குச்சந்தை புள்ளி உயர்வு ; தங்கத்தின் விலைஉயர்வு; வங்கி மற்றும் நிதிச்சேவை சார்ந்த பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் லாபம் எவ்வளவு என்பது குறித்த செய்திகளை பார்த்திருக்கலாம். இன்னும் சொல்லப்போனால், உலகளவில் செல்வாக்குமிக்கவர்கள் - பணக்காரர்கள் - செழிப்புமிக்க நாடுகள் - இராணுவ பலமிக்க நாடுகளின் பட்டியல் பற்றிய தகவல்களையும் ஊடகங்கள் தொடர்ந்து வெளியிட்டுக்கொண்டேயிருப்ப தைப்பற்றி அறிந்திருக்கலாம். மேற்சொன்ன செய்திகளை கொஞ்சம் நிதானமாகப்பார்க்கும்போது, வணிகம் மற்றும் முதலீடு செய்து லாபமடைவது பற்றியும், போட்டியின் மூலம் வருவாயை ஈட்டுவதைச்சுற்றியே, பின்னப்பட்டிருப்பது புரியும்.

அதானி குடும்பத்திற்கு ஒருநாள் வருமானம் ரூ 1000/- கோடி எனும்போதும், ரூ 7.18 லட்சம் கோடி சொத்துமதிப்பைக்கொண்டு இந்தியாவின் முதற் பணக்காரராக அம்பானி இருப்பதானது ஊடகங்களில் பேசுபொருளாகிவிடுகிறது. அதேசமயம், ஏழைமக்களின் வாழ்வாதாரத்தோடு தொடர்புடைய செய்திகள் பின்னுக் குத்தள்ளப்பட்டுவிடுகின்றன. இதற்கெல்லாம் காரணம் வணிக யுக்திதான். ஊடகங்கள் மக்களின் நலனுக்காக துணை நிற்கும் போது ஜனநாயகத்தூணாகிவிடுகிறது. அதுவே, உண்மைக்குப்பிறகான காலத்தில், ஜனநாயகத்தையும், ஏழைமக்களையும் காப்பதிலிருந்து விலகி சந்தையின் நலம் விரும்பியாகவும், ஆதிக்கச்சக்திகளுக்கு துணை நிற்கும்போது, பண நாயகத்தூணாகிவிடுகிறது.

இப்படித்தான் இந்தியாவில், கடந்த முப்பது வருடங்களாக, “சந்தையில் போட்டியை வளர்த்தெடுத்தால், நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சிபெறும் என்றும், பொருளாதாரம் வளர்ச்சியடைந்தால் வறுமை ஒழியும் என ஊடகங்களும் ஆட்சியாளர்களும் ஏழைமக்களிடம் ஆசைகாட்டி, இழுத்துவந்துவிட்டனர். ஆனால், 2020 ஆண்டு உருவான கொரோனா வைரஸ் பாதிப்புத்தான், இதுநாள்வரை ஏழைமக்கள் அனுபவித்துவந்த வாழ்வாதாரமற்ற அவலத்தை முதன்முதலாக வெளிச்சம் போட்டுக்காட்டியது. இதனையடுத்து, உலகப்பொருளாதார அறிஞர்கள் பலரால் சேர்ந்து தயாரிக்கப்பட்டு வெளிவந்திருக்கும் உலக சமத்துவமின்மை அறிக்கை 2022 வழியாக மீண்டுமொருமுறை வெளிக்கொணர்ந்திருக்கின்றது.

சமத்துவமின்மையின் கொடூரத்தினால், எளிய மக்களின் வாழ்வானது ”வேரோடு சாய்ந்த மரம் போலஆகிவிட்ட நிலையினை இவ்வறிக்கையானது, உறுதிப்படுத்துவதாக இருக்கிறது. அதாவது,

- உலகளவில் ஏழ்மை நிலையிலிருந்து இந்தியா இன்னும் மீளவில்லை என்பதும், அதுமட்டுமல்லாது, மோசமான சமத்துவமின்மையினை கொண்டுள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்கிறது.
- “இந்தியாவில், மேலடுக்கிலுள்ள பதினொறு சதவீதத்தினரிடம் நாட்டின் மொத்த வருவாயில் 78.8 சதவீதம் குவிகிறது. நடுவில் இருக்கும் 40 சதவீதத்தினரிடம் 29.7 வீதம் செல்கிறது. அதேசமயம், கீழடுக்கிலுள்ள 50 சதவீதத்தினரிடம் வெறும் 13.1 சதவீதம் செல்கிறது.” என்கிறது. இதிலிருந்து மேலடுக்கிலுள்ளவர்களும், கீழடுக்கிலுள்ளவர்களும் யாராக இருப்பர் எனச்சொல்லித்தெரிய வேண்டியதில்லை. இதேபோல, செல்வவளத்தையும் மேலடுக்கில் (97.6 சதவீதம்) நடுவில் (29.5 சதவீதம்), கீழடுக்கில்(5.9 சதவீதம்) கைப்பற்றியுள்ளனர் என்கிறது.

இவ்விதமாக வருவாயும், செல்வமும் மேலடுக்கிலுள்ளவர்களிடம் குவிந்திருப்பதற்குப் பின்னே, அரசானது, மக்கள் நலனை முன்னெடுக்கும் கொள்கையிலிருந்து விலகி, சந்தைப் பொருளாதாரத்தை (தனியார்மயம், கட்டுப்பாடுகள் தளர்வு) ஏற்றுக்கொண்டதை ஒரு காரணமாகக் கூறிடமுடியும்.

சந்தையும் சமத்துவமின்மையும் இணைபிரியாததாகும். சமத்துவமின்மை அதிகரிப்பின் காரணமாக, ஏழைமக்கள் ஒருபுறம் தங்களது வாழ்வாதாரத்திற்காகவும், மேம்பாட்டிற்காகவும், இன்னொருபக்கம் தாங்கள் இழந்துபோன ஜனநாயக உரிமைகளை மீட்டெடுக்கவும் போராடவேண்டியிருக்கிறது. இவையாவற்றிலிருந்தும்



இம்மக்கள் புத்துயிர்ப்பு பெறுவதற்கு கல்வி முக்கியமானதொரு சாதனமாகும். மேலும், தகவலறிந்த மற்றும் தேசத்தின் மீது பற்றுகொண்ட குடிமக்களை உருவாக்குவதற்கு கல்வி அவசியமானதாகும். கல்வியினூடாக ஜனநாயகத்தின் மொழியை இளந்தலைமுறையினரிடம் கொண்டுசேர்க்கும்போது அது மக்கள் நலனுக்காகிறது. அதே கல்வியினூடாக லாபத்திற்கு வித்திடும் வணிகம் மற்றும் பிளவு வாதச்சிந்தனைக்கு வித்திடும் வலதுசாரிக்கருத்தியலை புகுத்தும் போது, அக்கல்வியானது, விமர்சனப்பார்வையை இழந்துவிடுவது மட்டுமின்றி, எதேச்சதிகாரத்திற்கு துணைநிற்பதாகவும் ஆகிவிடுகிறது.

சுதந்திரத்திற்குப்பிறகான மக்கள் நல அரசு காலகட்டத்தில் சமூகத்தில் பின்தங்கிய மக்களுக்கு கல்வியறிவு புகட்ட ஆட்சியாளர்களால் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்கென கல்வி உதவித்தொகை முதல் இட ஒதுக்கீட்டுச்சலுகை வரை உறுதிசெய்தது. வேலைவாய்ப்புக்களுக்கு, இடஒதுக்கீடு மட்டுமல்லாது, கல்வித்தகுதியை அடிப்படையாகக்கொண்டும் பணியமர்த்தப்பட்டனர். இதன்காரணமாக பின்தங்கிய மக்கள் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் பலனடைந்தனர். இதனையொட்டி, சமூக– பொருளாதார அளவிலும் மாற்றம் நிகழ்ந்தது.

1980களுக்குப் பிறகான காலகட்டத்தில் கல்வியானது தனியாருக்கு அனுமதிக்கப்பட்டது. அதன்பின்னர் 1991 களுக்குப்பிறகு இந்தியாவில் சந்தை அல்லது நவதாராளமயம் அமலுக்கு வந்துவிட்டது. தனியாரை ஊக்குவிக்கும் சந்தைமயமானது, மக்கள் நல அரசு காலத்தைப்போலல்லாமல், சந்தையிலும் சரி, சமூகத்திலும் சரி சொத்து மற்றும் செல்வத்தளவில் ஆதிக்கம் பெற்று வருபவர்கள், ஏழைமக்கள் பற்றியெல்லாம் கவலைப்படாது, அனைவரையும் சமநிலையில் வைக்கின்ற போட்டிக்கு முக்கியத்துவம் அளிப்பதாக இருக்கிறது.. சந்தையின் போட்டியில் யார் வெற்றிபெறுகிறார்களோ அவர்களே நிலைத்துநிற்க தகுதிபடைத்தவராகக் கருதப்படுகிறார். வணிகத்திற்கு கடைபிடிக்கும் இத்தகைய அணுகுமுறையைத்தான், கல்வி , மருத்துவம் உள்ளிட்ட வாய்ப்புள்ள அனைத்து மட்டத்திலும் கடைபிடிக்க சந்தையானது, ஆட்சியாளர்களை நிர்பந்திக்கவும் செய்கிறது. கார்ப்பரேட்களின் விருப்பத்திற்கேற்ப, ஒன்றிய ஆட்சியாளர்களும், தங்களது புதியக்கல்விக்கொள்கையின் மூலம் பள்ளிக்கல்வி முதல் உயர் கல்விவரை பல நிலைகளில் தகுதித்தேர்வினை அறிமுகப்படுத்தி சமூக நீதியை மறுத்துள்ளனர்.. இதனால், ஏழை மாணவர்கள் ஒரேசமயத்தில் போட்டியின் மூலம் தகுதியை வளர்த்துக்கொள்ளவும், நிதி நெருக்கடியைச் சமாளிக்கவும் வேண்டியிருக்கிறது.

சந்தையில் காய்கறி, மளிகை, பொழுதுபோக்கு சாதனங்கள், மோட்டார் வாகனங்கள் யாவும் அனைத்துப்பிரிவு மக்களையும் சமமாகப் பாவித்து சமமான விலையில் விற்பனை செய்யப்படுவதுபோல, ஆண்டாண்டு காலமாய், சமூகத்தில் பின்தங்கிய ஏழைமக்களுடன், சமூக அந்தஸ்து, வருமானம், செல்வம், அதிகாரம், மரியாதை ஆகியவற்றின் மூலம் உயரடுக்கில் இருப்பவர்களுடன் சமமாக ஒப்பீட்டு, கல்வி, வேலைவாய்ப்புக்கள் பெற்றிடுவதற்கு போட்டி – தகுதி – திறமை குறித்து பேசப்படுவது எவ்வகையில் நியாயம் எனத்தெரியவில்லை. அப்படிச்செய்யும்போது, ஏற்கனவே தகுதி– திறமைபடைத்தவர்கள் அனைத்தையும் பறித்துவிடுவர். அதுதான் தற்போது நடக்கிறது. இதனால் சமத்துவமின்மை மேலும் அதிகரிக்குமே ஒழிய குறையப்போவதில்லை.

உலகளவில் போட்டியை முதனிலைப்படுத்திய சந்தைமுறை அறிமுகமாகி 40 வருடங்களாகியிருக்கிறது. இக்காலகட்டத்தில், பலமுறை பொருளாதார மந்தநிலை ஏற்பட்டுள்ளது., பணியாளர்களின் சம்பளம் அதிகரிக்காமல் தேக்கமடைந்திருக்கின்றது., வேலைவாய்ப்பின்மை பெருகியிருக்கின்றது. ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. சுற்றுச்சூழல் கேடுகளினால், உணவு உற்பத்திபாதிப்பு – தொற்றுநோய் பரவல்– பட்டினிச்சாவு தொடர்கின்றன. நாடுகளுக்கிடையே போர்கள் – அணுஆயுத உற்பத்தி குறைந்த பாடில்லை. வலதுசாரி பாசிச ஆட்சியாளர்களின் எல்லை விரிவடைந்துகொண்டே வருகிறது. மேற்கூறியவற்றிற்கெல்லாம், காரணமானவர்கள் நிச்சயமாக சமூகஅடித்தட்டில் இருக்கும் 50 சதவீதத்தினர் இல்லை. மாறாக சமூகத்தின் மேலடுக்கிலிருப்பவர்களும், போட்டியின் மூலம் தகுதி யடைந்தவர்களின் செயலாகவே இருக்கின்றது.

உலகளவில், சந்தைமுறையினை ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு நாட்டின் மேலடுக்கிலுள்ளவர்களின் வருமானமும், செல்வமும் பெருக, கீழடுக்கிலுள்ள 50 சதவீதமான ஏழைமக்கள் தங்கள் வாழ்வாதாரத்தையும், ஜனநாயக உரிமைகளையும் பறிகொடுத்து நிற்பது ஒருபுறமிருக்க, உயிர்வாழ்வதற்கென தங்கள் வாழ்நாள் முழுக்க உழைக்கத்தயாராக இருப்பதை எண்ணித்தான் மனது கலக்கமடைகிறது.

கல்வியையும் தகுதியையும் ஜனநாயகத்தை அடிப்படையாகக்கொண்டும், ஜனநாயகமானது மக்கள் நலனோடும் உரிமையோடும் கட்டமைக்கப்படும்போது, வருவாய் மற்றும் செல்வத்தின் வழியாகச்சேரும் சமத்துவமின்மையின் அளவை படிப்படியாகக் குறைத்திடமுடியும். •

மடல் திறப்பு

ஆசிரியப் பணியின் அனுபவத்தைத் தேனாய்ப் பாகாய்த் தித்திக்கும் தெள்ளமுதாய்ப் பிழிந்து தந்த "அசை போட்டுப் பார்த்ததில் என் ஆசிரியப் பணி"- எனும் இனிய கட்டுரையைப் பார்க்க நேர்ந்தது. செய்யும் தொழிலே தெய்வம் என்பதை இதயபூர்வமாக எண்ணி- இத்தனை ஆண்டுகள் ஆசிரியப் பணியாற்றி- அதில் விளைந்த அனுபவ முத்துக்களைக் கோர்த்து- இக்கட்டுரை மூலம் - அதை உலகிற்கு அர்ப்பணித்த பாங்கு- அப்பணியையே வாழ்வியலாக வகுத்துக்கொண்ட உங்களின் மெய்யான மெய்ம்மையை சொல்லாமல் சொல்கிறது.

தந்தை சொல் மிக்க மந்திரமாக-" தேவைக்கு வாழ்; ஆசைக்கு வாழாதே"- எனும் உங்கள் நெஞ்சுக்குள்வந்து விழுந்த வித்து - உங்கள் ஊனில் உயிரில் கலந்து- வாழ்வில் வளம் தரும் நஞ்சை நில விளைச்சல் ஆகி விளைந்ததை எண்ணி இன்புற முடிகிறது.

குடித்துவிட்டு வந்த மாணவன்- அலைபேசி பார்க்கும் மாணவன்- பசியும் பட்டினியுமாக வந்த மாணவி- ஆகியோரைக் கையாண்ட விதம்-"மாணவர்களின் பின்புலத்தை அறிந்து வகுப்பு எடுக்க வேண்டும்"- எனச்சொல்லி உணர்த்திய உங்கள் ஆசிரியரின் பொன்னுரை - பொய்யாய்க் கனவாய்ப் பழங்கதையாய்ப் போய்விடாமல்- மெய்யாய்- ஒளியாய் ஆசிரிய நீதியாய் மாறி மிளிர்கிறது. அனைத்திற்கும் மேலாக இயல்பான நீரோட்டம் போல் நடைபயிலும் இனிய நடை, -சோர்வு தட்டாமல் - மாறாக- உயிர்ப்புடன் ஒளிர்ந்து- வாசகர்களை சினேக பாவத்துடன் கைகோர்த்து அழைத்துச் செல்கிறது.

1955-களில் திண்டுக்கல்லில் காந்தி கிராமத்திற்குத் தொடர்பில்லாத - வேறு துறையில் பணியாற்றியவன் நான்.காந்தி கிராமத்தைத் தொடங்கிய டிவிஎஸ் சவுந்தரம் அம்மாள் அவர்கள்- மற்றும் அவர்களின் கணவர் திரு ராமச்சந்திரன் - மற்றும் நூற்றுக்கணக்கான மாணவர்களை உள்ளடக்கிய 'அன்னபூரணா' கீற்றுக் கொட்டகையில் நிகழும் மாலை வழிபாட்டு நிகழ்வுகளில் பங்கு பெற்று மகிழ்ந்த உன்னத அனுபவமும் உள்ளத்தில் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. அமைதிபட அசைபோட்டுப் பார்ப்பதில் தான்- வாழ்வாங்கு வாழ்ந்ததின் பயன் வெளிப்படுகிறது.

– மு. பழநிச்சாமி, நாகமலை, மதுரை.

வணக்கம். வாழிய நலம். 80 வயதான நான் கொரோனா சிகிச்சை முடிந்து இப்போதுதான் நீண்ட இடைவெளிக்குப் பின் வெளியில் நூலகம் சென்றேன். இதழைப் படித்தேன். மகிழ்ந்தேன். செக்கிழுத்த செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சியின் "150ஆவது சிறப்பிதழ்" மிக மிக அருமை. வ.உ.சி. என்ற மூன்றெழுத்து சிறியதுதான்! ஆனால் அவரது கீர்த்தியோ மிகவும் பெரியது. உயர்ந்தது. தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தியாகம் செய்த அந்த உத்தமர் தியாகச்செம்மலின் தியாகத்திற்கு ஈடு இணையே இல்லை- அந்த தியாகச் செம்மல் இந்திய விடுதலைக்கு மட்டுமல்ல தமிழுக்கும் பல சிறப்பான பணிகள் செய்திருக்கிறார். அவருக்குப் போதுமான முக்கியத்துவம் இப்போதாவது அரசும் ஊடகங்களும் இதழ்களும் கொடுத்து என்னைப்போன்ற தேசீய உணர்வுள்ள ஆசாமிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சிதான். சென்றமாதம் புதுவையில் சிந்தனையாளர் படைப்பாளர் பேரவையினர் நடத்திய வ.உ.சி. சிதம்பரனார் 150 - பற்றிய கட்டுரைப் போட்டியில் எனக்கு முதல் பரிசை புதுவைக் கவிஞர்கள் தமிழ்நெஞ்சனும் ஆறு செல்வனும் வழங்கிய பெருமைப்படுத்தியது என்

வாழ்நாளில் மறக்க முடியாத பேறாகும். இப்படிப்பட்ட தியாகி வ.உ.சியைப் பற்றிக் காந்திஜி தன் சுயசரிதையில் எங்குமே குறிப்பிடவில்லை என்ற செய்தி உண்மையா? உறுதிப்படுத்துங்கள். அறிஞர் அண்ணா சொன்னபடி வடநாட்டுக்காரர்களுக்கு கொடுக்கப்படும் மதிப்பு நம் தென்னாட்டுக்காரத் தியாகிகளுக்குக் கொடுக்கப்படவில்லையே என்ற ஆதங்கம் எனக்கு உண்டு. வாழ்த்துக்கள்.

– கவி.கடல் நாகராசன்,
தலைவர், பாரதிதாசன் இலக்கிய மன்றம், கடலூர் – 607 001

தங்களின் அமணமாகிய சமணம் தொடரை வாசித்தேன். மிக அருமையான கடடுரை. மிகக் குறுகி, பெரும்பான்மை சமூகத்தால் ஒதுக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வரும் தமிழ்ச் சமண வரலாற்றை பறைச்சாற்றும் தங்களுக்கும் காக்கைச் சிறகினிலே இதழுக்கும் மிக்க நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். கையறுநிலையில் உள்ள தமிழ்ச் சமணர்க்கு ஆகச் சிறந்த நம்பிக்கையளித்துள்ளீர்கள். தமிழ்ச் சமணர்கள் அனைவரின் சார்பாக மிக்க நன்றி கடன் பட்டோம்.

– வி. சசிகலாதேவி, சென்னை

வணக்கம். டிசம்பர் இதழில் இரா. மோகன்ராஜன் அவர்களின் “ஜெய்பீமும் அஸ்வினியும்” என்கிற கட்டுரையில் தேவையற்று பள்ளர்களின்(மள்ளர்களின்) பட்டியல் வெளியேற்றக் கோரலை எள்ளி நகையாடுகிறார்.

முதலில் கட்டுரையாளர் கோரிக்கையின் புரிதலற்றுள்ளாரென்பதை அவரது பின் வரும் வரிகளே சொல்கின்றது.

“என்று புலம்பும் சாதி ஆணவம் பெருமை பேசுவோருக்கு அஸ்வினியின் கோரிக்கை மெய்யாவே புரியத்தான் இல்லை”

அஸ்வினியின் கோரல் குறித்து எந்த மள்ளர் அமைப்பாவது குறை கூறியதா? அப்படியல்ல பட்டியல் வெளியேற்றக் கோரிக்கையின் உளவியல் அடிப்படையில் அவ்வாறு குறிக்கிறாராயெனில் அக் கோரிக்கையின் உளவியலை சாதி ஆணவம் என இவரே வரித்துக் கொள்வது காழ்ப்புணர்ச்சி அன்றி வேறல்ல.

நரிக்குறவர் வாழ்வியலும் மள்ளர்களான பள்ளர்கள் வாழ்வியலும் ஒன்றா என்பதை கட்டுரையாளர்தான் விளக்க வேண்டும்.

தமிழிலக்கியத்தில் சங்க காலம் முதல் பள்ளு இலக்கியம் (இது நிலவுடைமை பிடுங்கப்பட்ட பள்ளர்களை ஆற்றுப்படுத்த எழுதப்பட்டவையாக இருந்தபோதும்) தோன்றிய காலம் வரை பள்ளர்களைத் தவிர வேறு எந்த சாதி குறித்தாவது மிகையாக எழுதப்பட்டுள்ளனவா?

கடல் ஆய்வாளர் ஒரிசா பாலு பள்ளர் அல்ல.. அவரது ஆய்வுகள் உரைகளை ஆய்ந்த பின் கட்டுரையாளர் மீண்டும் எழுதட்டும்.

பட்டியலிலிருந்து பள்ளர்கள் மட்டுமல்ல எல்லோரும் வெளியேற வேண்டுமென்பதே மனித மாண்பு.

கட்டுரையில் ஓரிடத்தில் பழங்குடியினர் “விளிம்பிலிருந்து மையத்தை நோக்கி அவர்களது வாழ்வு உறுதிப்படுத்தப்பட வேண்டுமெ”ன்கிறார்.

அடுத்து பின் வருமாறு எழுதுகிறார்” சமூகத்தின் மேல்நிலை நோக்கி நகரும் இனங்களுக்கு... “

கட்டுரையாளரின் மேற்குறிப்பிட்ட இரு கருத்துக்களையும் பள்ளர்களின் பட்டியல் வெளியேற்ற கோரலையும் பொருத்திப் பார்த்தால் சாதி ஆணவம் என்கிற பார்வை எவ்வகையில் பொருத்தமற்றதென்பது புரியும்.

பள்ளர்களின் பட்டியல் வெளியேற்றக் கோரல் என்பது அவர்களது உளவியல் மீதானதல்ல சமூகத்தின் உளவியல் மீதான வெளிப்பாடு என்கிற புரிதல் வேண்டும்.

தோழமையுடன்
நித்திலவாணன், சென்னை.

கட்டுரை

நா. மம்மது

கலைஞர்களும் 'குடி'யும்

குடிசார்ந்த எண்ணங்களும் விழுமியங்களும்



கள் - சொற்களஞ்சியம்

ஒரு மொழியிலுள்ள சொற்களஞ்சியம் அம்மொழி பேசும் மக்களின் பண்பாட்டையும், நடைமுறை வாழ்வையும் அடையாளம் காட்டுகின்றது. அரபியமொழியில் 800க்கும் மேற்பட்ட கொலைக்கருவிகளின் பெயர்கள் உள்ளன. 'கள்' என்பதற்கு 48 சொற்களைச் சூடாமணி நிகண்டு (6:30) குறிப்பிடுகின்றது.

அரியல், பாடலி, தேன், மட்டு, அரிட்டம், சுண்டை, தொண்டி, முருகு, சாயனம், கௌவை, முண்டகம், சாதி, சாலி, பிரசம், மாதவம், மேதை, பிழி, சேறு, தணியல், மாரி, சுரை, மது, சுமாலி, மாலி, சுலோகி, சொல்விளம், நறவு, ஆசவம், தோப்பி, நனை, இக்கு, ஞாளி, குந்தி, வெறி, வெடி, சாறு பானம், விகுணி, சோபம், வேரி, மறவி, தேம், கவிகை, தேறல், மகரந்தம், மதிரை, ஆம்பல், படு முதலியன.

கலைஞரும் கள்ளும்

சங்ககாலத்தில் கள்ளுண்ணல் பரத்தமை புலால்,(மது, மாது, மாமிசம்) பெருவழக்காய் இருந்துள்ளது.

பாடல் கலைஞர்களான பாணர்களுக்கும், ஆடற்கலைஞர்களான விறலியர்களுக்கும் மன்னர்கள் பொற்றாமரையும், பொன்னரி மாலையும் புலவுச் சோறும், குதிரை பூட்டிய தேரும், யானைப்பரிசிலும் மட்டும் தந்து விருந்தோம்பவில்லை,

இழைஅணி வனப்பின் இன்நகை மகளிர்
போக்குஇல் பொலங்கலம் நிறைய பல்கால்
வாக்குபு தரத்தர....................................."
(பொருநர் ஆற்றுப்படை 85-87)

விருந்தோம்பியுள்ளனர். 'பொலங்கலம் நிறைய பல்கால்' - பல்தடவை, நிறையநிறைய எதை வழங்கினார்கள்?

"பூக்கமழ்த் தேரல்வாக்குபு தரத்தர - மேலது 157

எனவே, விருந்தோம்பலில், அதுவும் கலைஞர்களை விருந்தோம்பும்போது 'கள்' பரிமாறல் சங்ககாலத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளது. இன்றும்கூட இந்தநிலை மாறிவிடவில்லை. குடியால் குடைசாய்ந்த கோபுரங்களில் கலைஞர்கள்தாம் முதல்இடம் வகிக்கின்றனர்.

"சிறியகட் பெறினே, எமக்கீயும் மன்னே - புறநானூறு 235 என்று பாடினி ஔவை கள்ளுண்ணும் ஔவையாகவே காட்சி தருகிறார்.

"உலகுபடைத்து...... காதல் அன்பில் இன்பு ஈன் தேறல்" - நம்மாழ்வார் திருவாசிரியம் 19 என்று நம்மாழ்வார் பாசுரம் பாடுகின்றது.

காமக்களியாட்டம்

அரபிய வரலாற்றில் 'இருண்டகாலம்' (Period of Ignorance) பற்றிக் குறிப்புகள் ஏராளம் உண்டு. ஆடலிலும், பாடலிலும் சிறந்த குயினான் (Singing Girls) எனும் அடிமைப்பெண்கள் கோப்பைகளில் மது ஊற்றித்தந்து யாழ் மீட்டிப் பாடி, ஆடி அரபிய உயர்குடி ஆண்களைக் களிப்படையச் செய்தது பற்றி அக்கால வரலாறு நிறையவே பேசுகின்றது.

தமிழகத்தில் மட்டுமல்லாது மது, மங்கை, இசை, ஆடல் சேர்ந்தே உலகின் அனைத்து நாடுகளிலும் வரலாறு நெடுக கோலோச்சி வருவதை நாம் பார்க்க முடிகிறது.

'காமக்களியாட்டம்' என்ற சொல்லாடலில் காமம், களி(கள்குடித்துக் களித்தல்), ஆடல் மூன்றும் சேர்ந்தே உள்ளன.

சேம்பெய்ன் பிரான்ஸ் நாட்டையும், ஒட்கா சோவியத் இரசியாவையும் அடையாளப்படுத்துவது போல,'கள்' தமிழகத்தை அடையாளப்படுத்துகின்றது.

பூசையில் கள்

சங்க காலத்தில் வேலன் என்ற வெறியாட்டாளன் கள் உண்டு தெய்வ அருள் வந்து பாட்டுப்பாடி, ஆட்டம் ஆடி அருள்வாக்கு சொன்ன செய்தியைப் பார்க்கின்றோம். இங்கே வேலன் சாமியாடி மட்டுமல்ல; ஒரு கலைஞனாகவே தோற்றம் தருகிறான்.

இதை, "தேனும், தினைமாவும், கள்ளும், இறைச்சியும் முருகனுக்கு தொண்டகப்பறை அறைந்து படைக்கப்பட்டன. அவர்கள் 'கள்' உண்டு ஆடிய ஆட்டு வெறியாட்டு எனப்பட்டது" என்பார் தேவநேயப் பாவாணர். (தேவநேயம் பக்.54-55/V)

தாந்ரீக முறையிலுள்ள சக்கர பூசையில் தேவிக்குப் படைக்கப்பட்ட ஐந்து உணவு (பஞ்சம ஆகாரம் (மது மாமிசம், மாது, மாவு ஆடல்) வழிபாட்டில் சக்திக்கு படையல் செய்யப்பட்டுள்ளது. கௌள மார்க்கத்தில் 5 உணவாகப் படைக்கப்பட்டவை... மது, மாமிசம், மாது, மந்திரம், மைதுனம் ஆகியவை.

இராமன் வனவாசத்தில் சரயு நதியைக் கடந்தபோது தீங்குகள் ஏதும் வாராமல் இருக்கும்பொருட்டு மதுவும், மாமிசமும் படைத்து சீதை துர்க்கையை வணங்கியதாக இராமாயணம் கூறுகின்றது.

கேரளப் பாணர் இயல்பாய் இறந்தவர்க்கு ஆடிமாதத்திலும், கொலையுண்டு இறந்தவர்க்கு ஆவணி மாதத்திலும் மதுவும், கள்ளும் படைப்பர்; இது வெள்ளக்குளி எனப்படும் - தேவநேயம். (பக்.129 / X)

இவ்வாறு இறைவழிபாட்டில் கள் முக்கிய இடம்பெற்றுள்ளதை நாம் அறியமுடிகிறது.

சில சொல்லாடல்கள்

கள் - களித்தல் - கள் உண்டு வெறித்தல், மயங்குதல் - தேவநேயம் (பக்.150/XI)

கள் = சோறு, பதம்

மாரி = கடவுள், பெண்தெய்வம், கள்

மதக்கம் = பேருண்டி, குடி, கஞ்சா இவற்றால் உண்டாகும் மயக்கம்.

மதத்தல் = மதமதத்தல் - கள் குடித்தல்; காமம் மிகுதல் ; உணர்வு இழத்தல்

மத்தம் = மதம் = குடிவெறி, கோட்டி

'மதம் = மது - மதி

மத்து = மட்டு = கள், தேன்

'வெப்புடைய மட்டு உண்டு - புறநானூறு 24

மட்டு - பெண்கள் குடிக்கும் கள்

மட்டுண் வாழ்க்கை வேண்டு விராயின் - சிலம்பு, 12:19

மட்டலர் கோதையர் - சிலம்பு.பதிகம் 82

(மது ஒழுக மலர்ந்த கோதை - அடியார்க்கு உரை)

மட்டுவார் குழலம்மை - மலைமகள், உமையவளின் பெயர்

மதம் - மதன்- மன்மதன்

மதன் - மதனி - மதினி - மைத்துனி - மைத்துனம்

"மதுபருகிப் பருவாலை நின்று மதர்க்கு மருங்கெல்லாம்
- கம்பராமா, நாட்டுப்.24

மதனம் - காமம்; இளவேனில்

வெறி - வெறியாட்டு; வெறிஅயர்தல், கள், பேய், அச்சம், ஆடு, வாசனை, வட்டம், நோய், கலக்கம்

இளவேனில் - வசந்தம், மது - (பிங்கலம், 298)

காதல்(காமம்)கடவுளான காமவேள் (மன்மதன்) ஆட்சிக்காலம், இளவேனில் - அந்த இளவேனிலுக்கு கள் என்று பொருள் உண்டு.

ஆம்பல் = பண், இன்னிசைக்குழல், கள்

முருகு = கள், இளமை, வாசனை, அழகு, குமரன், விழா, - (பிங்கலம், 3977)

எனவே இளமை, இசை, இளவேனில், விழா, ஆடல், கள், எல்லாம் ஒருங்கே கைகோத்து நடமிட்டுள்ளதை இச்சொல்லாடல்கள் குறிப்பாகத் தெரிவிக்கின்றன.

கலைஞனும் பரவசநிலையும்

நபிகள் நாயகத்திற்கு ஒருவித பரவசநிலையில்(Trance Mood) 'வஹி' என்ற இறைச்செய்தி வந்தது என்பது இசுலாமிய நம்பிக்கை.

புனிதர்கள் மத்தேயி, மார்க், லூக்கா, யோவான் ஆகியோர் இறை அருளால் (Inspired by God) நற்செய்திகளைத் தந்தனர் என்பது கிறித்துவ நம்பிக்கை.

பண்டைய வெறியாட்டில் கள் உண்ட போதையில் இறையருள் பெற்று வேலன் குறிசொல்கிறான்.

கல்விக்கும், கவிதைக்கும் இசைக்கும் வாணி என்றும் MUSE என்றும் தெய்வங்களைப் படைத்து அத்தெய்வங்களை கவிஞர்களின் நாவிலிருந்து கவிதைகள் பாடியதான மரபு உலகெங்கிலும் உண்டு.

சாமி வருவதிலும், சாமி ஆடுவதிலும் இசை பெரும்பங்கு ஆற்றுவதை இன்றளவும் பார்க்க முடிகின்றது.

புனிதங்களும், படைப்பிலக்கியங்களும், கலை வடிவங்களும், கவிதைகளும், இசையும், ஆடலும் மடைதிறந்த வெள்ளம்போல் பெருக்கெடுக்க ஒருவித பரவசநிலையை படைப்பாளர்கள் அடையவேண்டியுள்ளதை நாம் பார்க்க முடிகின்றது.

கவிஞர்களும் கலைஞர்களும் காலங்காலமாக ஒருவித மயக்கநிலை (State of Trance)க்காக கள்ளும் கஞ்சாவும் அபினும் உண்டதை வரலாறு நெடுகவே பார்க்க முடிகின்றது.

கலசத்தையும், கோப்பையையும் தன் கவிதைகளில் ஒரு படிமமாகவே சூஃபியக்கலைஞன் உமர்கய்யாம் ரூபயாத்தில் பாடுகின்றான். இதையே

வெயிலுக்கேற்ற நிழல் உண்டு; வீசும் தென்றல்
காற்றுண்டு;..............
கையில் கம்பன் கவியுண்டு;கலசம் நிறைய
மதுஉண்டு"

என்று மேல்மொழிந்தார் நம் கவிஞர்.

"ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு;
ஒரு கோலமயில் என்துணையிருப்பு;
இசைப்பாடலிலே என் உயிர்த்துடிப்பு;
நான் பார்ப்பதெல்லாம் அழகின் சிரிப்பு"

என்று கவிப்பேரரசு கண்ணதாசன் பாடுகின்றார். மேலும், "ஓர்கையில் மங்கையும், ஓர்கையில் மதுவும்" என்பார் மீண்டும்.

இவ்வாறு மதுவும், மங்கையும், இசையும், ஆடலும் காலமெல்லாம் கவிஞர்களின் படைப்பாளர்களின் இயற்கைத் தேவையாகி விடுகின்றன.

கட்டுரையாளர் : பண்ணிசை ஆய்வாளர்

புனைவு

தஞ்சாவூர் வி.அ.இளவழகன்
elaval1948@gmail.com

சிந்தனைச் சிற்பி 2022

BRAIN CHISLER 2022

கணிப்பொறி வரைகலை (Computer Graphics) ஆராய்ச்சியாளர் ஆதவன், அழகான ஒரு பெட்டியைப் பிரித்தார். அதிலிருந்து கவர்ச்சியான கையடக்கமான மின்னியல் நூதனக் கருவியை வெளியில் எடுத்தார். ஆதவனின் நண்பர், மாதவனின் கண்கள் விரிந்தன. கருவியின் பொத்தானை அழுத்தினார். அதிலிருந்து விசுக்கென்று 'ஆண்ட்டெனா' நீண்டது. கண்களைப் பறிக்கும் பச்சை ஒளிக்கீற்றுகள் மாறி மாறிப் பளிச்சிட்டன. காதலன் மடியில் சிணுங்கும் காதலியைப் போலக் 'கிலுகிலுவென' ஒலி எழுப்பியது,

மாதவன்: இதுக்குப் பேரு என்னப்பா?

ஆதவன்: இதுக்குப் பேருதான் சிந்தனைச் சிற்பி 2022, சுருக்கமா 'சிசி 2022' ன்னு சொல்லலாம்.

மாதவன்: அப்ப? கோபால், வோர்ட்ஸ்டார், சிபிளஸ், பிளஸ், ஆரக்கில், ஃபாக்ஸ்புரோ, ஜவா, பைத்தான், இவை போன்ற கணினிமொழிகளைப் படிக்க உதவும் கருவியா இது? லாப் டாப்-ன்னு (Lap Top) இருக்கே. அதைப் போல இது பாம் டாப்-பா (Palm Top)?

ஆதவன்: ஏன் இப்படி கணினி கணினி-ன்னு அலையறிங்க! மாகாணி, வீசம், கால், அரை, முக்கால் – அப்படின்னு அரிச்சுவடி எண்சுவடி வாய்ப்பாட்டை மனப்பாடம் செஞ்சோம். மனக்கணக்காகவே எல்லாக் கணக்குகளையும் போட்டோம். காலம் இப்ப ரொம்பவே மாறித்தான் போச்சு.

கணிணி ஒண்ணை மட்டும் வச்சிகிட்டு மானிடச் சிக்கல் எல்லாத்தையும் தீர்க்கலாம்னு கனவு காணாதீங்க, மாதவன்! புத்தம் புதுசா வர்ற கணினி ஒண்ணை வீட்டுக்குக் கொண்டு போய், நிறுவும் முன், புதுப்புது கணினி மொழிகள் (Computer language) புற்றீசல் போலக் குவிஞ்சிடுது. எல்லாத்தையும் படிச்சு புரிஞ்சு செயல்படும் போது 'கணிப்பொறி நச்சுயிரி' (Computer Virus)-ன்னு தாறுமாறா கிளம்பிடுது; தலைசுத்திப் போகுது. அதற்கேற்ப மின்னம்பலக் குற்றங்கள் (Cyber Crimes) பல்கிப் பெருகிவிட்டன.

மாதவன்: அதை விட்டுத் தள்ளுங்க ஆதவன். பேஜர், பேக்ஸ், ஆண்ட்ராய்ட் – போல ஏதேனும் மின்னியல் சாதனமா? இல்லே மல்ட்டிமீடியா இன்ட்டர்நெட் – இதைப்போல அறிவியல் நூதனமா?

ஆதவன்: மின்னியல் சாதன அறிவியல் நூதனங்களை விட மிகமிக அற்புதமான கருவி இது. எங்கே போனாலும், இதைக் கையிலே எடுத்துக்கிட்டு போகலாம். எவ்வளவு தொலைவாக இருந்தாலும், மத்தவங்களோடு மிகத் தெளிவாகப் பேசலாம். இதன் ஆங்கிலப் பெயர் Brain Chisler-2022 ஆகும். BC-2022-ன்னும் சொல்லலாம்.

மாதவன்: ப்பூ! இவ்வளவுதானா? இப்பத்தான் பேசறது, பேசறதைப் பதிவு பண்ணி வைக்கிறது, ஒட்டுக் கேட்கிறது – இதுக்கெல்லாம் நிறைய கருவிகள் வந்திருச்சே. இன்ட்டர்நெட் இடைச்செருகல் (Internet Intrusions)கூட கண்டுபிடிச்சு தடை செய்யலாம்.

தொலைபேசியிலே தாறுமாறா அல்லது தரக்குறைவா பேசினாக்கூட எந்தத் தொலைபேசி, யார், எங்கிருந்து பேசினாங்கங்கிறதை கண்டுபிடிச்சு சொல்லலாம். அந்த அளவுக்கு மின்னியல் தொலைத்தொடர்புச் சாதனங்கள் பெருகிப் போச்சு. அந்த மாதிரி கருவிகளுக்கும் நீங்க கண்டுபிடிச்சிருக்கிற சி.சி.2022க்கும் என்னாங்க பெரிய வேறுபாடு?

ஆதவன்: அவ்வளவு சல்லிசா எடை போடாதே. சிந்தனைச் சிற்பி 2022க்கும் மற்ற கருவிகளுக்கும் மிகப் பெரிய வேறுபாடு ஒண்ணு இருக்கு. இதன் மூலம் பேசும் போது மறுமுனையில் பேசுபவர்கள் குரல் மட்டுமல்ல, அவர்கள் மனதில் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் எனும் மனதின் குரல் நம் செவிகளில் மிகத் துல்லியமாகக் கேட்கும்.

இன்னுஞ் சொல்லப்போனா, ஒவ்வொருத்தரும் நம்மைப் பற்றி என்ன மாதிரி எடைபோட்டு வச்சிருக்காங்க என்பதை முன்கூட்டியே தெரிஞ்சுக்கிட்டு, அதுக்குத் தகுந்த மாதிரி நாம நடந்துக்கலாம், நடையுடை அறிவியல் (Behavioural Science) ரொம்பவும் எளிதாப் போயிடும். சிக்கல் இல்லாத வாழ்க்கையாப் போகும். ஒவ்வொருத்தர்கிட்டே முட்டி, மோத வேண்டாம். காயம்பட்ட கசப்பான அனுபவங்களைத் தவிர்க்கலாம். ஆறாத வடுக்களோட அல்லாட வேண்டாம். எல்லாவற்றையும் எதிர்பார்த்து அளவோடு பழகலாம், ஒதுங்கி வாழலாம்.

மாதவன்: அடேங்கப்பா! இவ்வளவு பெரிய நுணுக்கம் இதுல இருக்கா? ரொம்ப சாதாரண மின்னியல் சாதனமுன்னு நினைத்தேன். கோவிச்சுக்காதீங்க! ஆதவன்.

ஆதவன்: எடுத்துக்காட்டாக, இரவு 12 மணிக்கு இந்த சிந்தனைச் சிற்பி மூலம் என்னைக் கூப்பிட்டேன்னு வச்சுக்க. "இவனெல்லாம் எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.ன்னு எதுக்குப் படிச்சான்? எப்படிப்படிச்சான்? ம்ம் . . . படிப்பாளியெல்லாம் அறிவாளியா? இங்கிதமே தெரியலையே! நட்டநடு ராத்திரியிலே எதுக்கு இப்படி கூப்பிடறான்? அப்படின்னு மனசுக்குள்ளே நான் நினைக்கிறது உனக்குத் துல்லியமா கேட்கும். அதுக்குப் பிறகுதான், நான் பேசறது உன் காதிலே விழும்.



இன்னும் உனக்கு புரியற மாதிரி சொல்றேன் கேளு, மாதவன்! நளமாமன்னன் ஒரு தடவை தேரோட்டியா, தேரை ஓட்டிக்கிட்டு போனான். தேர்ல உட்கார்ந்து இருந்த அரசனோட பட்டுத் துண்டு பறந்து கீழே விழுந்திடுச்சு, ‘துண்டை எடுக்கணும். தேரை நிறுத்துப்பா-ன்னாரு. அதற்கு தேர்க்குதிரைகளை ஓட்டிய நளன், பத்துக்காதம் (100 மைல்) தாண்டி வந்துட்டோம். தேரை நிறுத்தட்டுமா, போகட்டுமா?’ அப்படின்னாராம்.

குதிரை வேகத்தைவிட, காற்று வேகம்; காற்று வேகத்தை விட மனம் வேகம்; அந்த மனவேகத்தையே அறியக்கூடிய கருவிதான் சிந்தனைச் சிற்பி 2022 இந்த மாதிரி கருவியை இதுவரை உலகத்திலேயே வேற யாரும் கண்டுபிடிக்கல்லே, என்னதவிர. இந்த வகையில் மைக்ரோசாப்ட் மாமன்னர் பில்கேட்ஸ், விப்ரோ பிரேம்ஜி, கூகுள் சுந்தர் பிச்சை இவர்கள் எல்லோரும் என்கிட்டே மண்டி போடணும்! ஆமா!

மாதவன்:ஐயய்யோ! மிகப் பயங்கரமான கருவியா இருக்கே? பொதுவா நாம நினைக்கிறது எல்லாத்தையுமே பேசறதில்லே. சிந்தனை ஒண்ணு, பேச்சு ஒண்ணு செயல் ஒண்ணுன்னு இல்லாத மனிதர்கள் யாரையாவது பார்க்க முடியுமா? உபதேசம் என்பது ஊருக்குத் தான். மேலும் மனதில் நினைப்பது எல்லாவற்றையும், வெளியில் பேசத் தான் முடியுமா?

‘உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்’-ன்னு வடலூர் அருட்பிரகாச இராமலிங்க வள்ளலார் பாடிவிட்டுப் போனார். ரொம்பத் துருவிப் பார்த்தா மனைவி, மக்கள், சுற்றம் நட்பு யாரோடும் உறவு கொள்ள முடியாதே! இது என்ன. தொலைபேசியா? இல்லே தொல்லை பேசியா? . . . சிந்தனைச் சிற்பியா? இல்லே சீரழிவுக் குப்பியா? எனக்கு ரொம்ப குழப்பமாயிருக்கு.

ஆதவன்: அதனாலே என்ன? இவ்வளவு பெரிசா பரந்து விரிந்த உலகத்திலே யாராவது, ஒருத்தர்கூட உன்னைப்பத்தி மனசிலே உயர்வா நினைச்சிருக்க மாட்டாங்களா? யாருக்காவது எப்போதாவது ஏதாவது ஒரு சின்ன உதவி செஞ்சிருக்க மாட்டியா? . . . ம்ம் முயற்சி பண்ணிப் பாரேன்.

இந்த சிந்தனைச் சிற்பி 2022யை வச்சு யாரையாவது கூப்பிடு, எவ்வளவு தொலைவானாலும் சரி, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா, அன்டார்ட்டிகா, ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர் இப்படி எங்கே உன் நண்பர்கள், உறவினர்கள் இருந்தாலும், அவங்களோட நீ தாராளமாப் பேசலாம். கருவியின் திறமையை சோதிச்சுக்கலாம். அத்தோட, உன் தன்மையையும் குணத்தையும் பண்பையும் தெரிஞ்சுக்கலாம்.

பொதுவா, நாம ஒவ்வொருத்தரும் நம்மைப்பத்தி மிக உயர்வா நினைச்சுக்கிட்டு இருப்போம். அடுத்தவங்க நம்மைப் பத்தியும் நம்முடைய செயல்பாடுகள் பத்தியும் வேறு மாதிரியான மதிப்பீடு வச்சிருப்பாங்க. இல்லையா? அதைத் தெரிந்து கொள்ள இதுதான் சரியான நேரம். சிந்தனைச் சிற்பி 2022ஐ கையிலே வைத்துக் கொள், என்றார்.

ஆதவனிடமிருந்து சிந்தனைச் சிற்பி 2022ஐ மாதவன் வாங்கி யாருடன் பேசுவது எனச் சிந்திக்கும் போது, தான் வேலை செய்யும் நிறுவனத்தின் தலைவர். நினைவில் வந்தார்.

மாதவன்: பத்தாண்டுகளுக்கு முன் நிறுவன நிதியில் கையாடல் செய்தால் விசாரணையில் மாட்டி இறுதியில் மன்னித்தும் விட்டார்கள். நிறுவனத் தலைவருடன் எப்படிப் பேசுவது? மிகவும் கூச்சமாக இருக்கிறதே.

ஆதவன்: உன்னுடன் பணிபுரிபவர்களுடன் பேசலாமே மாதவன்? அதற்கு ஏன் தயக்கம்?

மாதவன்: என்னை யாரும் எதிர்க்கேள்வி கேட்டு விடக்கூடாது என்பதற்காக என்னுடன் பணிபுரியும் இருபது பேர்களுக்குள்ளும் சண்டை மூட்டி விட்டிருக்கிறேன். இந்திர கோபனைத் தட்டிவிட்டு எல்லோர் மீதும் புகார் செய்தேன். வசமாக சிக்கவைத்து வேடிக்கை பார்த்தேன். விடுதலைப் போராளி எனப் புரளி கிளப்பிவிட்டேன். புரட்சியாளன் என்ற புகை மூட்டத்தை ஊதி விட்டேன். நன்றாகவே காட்டுத் தீயாகப் பற்றி

எரிந்தது. அதனால் பாலசுந்தரம் போலீசில் 'க்யூ' பிரிவிலே மாட்டிக் கொண்டு படாதபாடு பட்டார்.

நிருவாகக் கணக்கை எப்போதும் சரியாக வைத்திருக்கும் நாதரங்கன், நிறுவனப் பணத்தைச் சுருட்டி விட்டார், எனக் கதை கட்டி விட்டேன். விசாரணையிலே மாட்டி கந்தலாகி நொந்து நூலாகிப் போனார் நாதரங்கன்.

என்னைவிட நன்றாகப் பணி செய்யும் திறமையான, நம்பிக்கை மிக்க பாலசுந்தரம், குமார நந்தன், நாதரங்கன், மீதெல்லாம் புரளி கிளப்பி விட்டு, நிறுவனத் தலைவரிடம் வெறுப்பை வளர்த்து விட்டேன். இவர்கள் எல்லோரும் என் மீது நல்ல எண்ணமா வைத்திருப்பார்கள்?

ஆதவன்: கடந்த முப்பது ஆண்டுகளில் நிறையப் பேர் உன்னிடம் படித்து விட்டுச் சென்றிருப்பார்களே. அந்த மாணவர்களில் யாரும் உன் நினைவுக்கு வரவில்லையா? முயற்சி செய்து பாரேன்? யாராவது ஒரு மாணவன்கூட கிடைக்க மாட்டானா?

மாதவன்: ஐய்யோ! மாணவர்களிடமா? ஒரு முறையாவது, ஒரு வருடமாவது ஒரு பருவத்திலாவது பாடங்களை முறையாக நடத்தியது கிடையாது. காலா காலத்தில் முடித்ததும் இல்லை. மாறாக, பாடத்தில் சந்தேகம் கேட்ட மாணவர்களை, செய்முறைத் தேர்வு, அ மதிப்பீடு, உள்தேர்வு என மிரட்டியிருக்கிறேன். எந்த மாணவன் என்னை மதிப்பான்? ஒரு மாணவனைக்கூட என்னால் தெரிவு செய்ய முடியவில்லையே! நான் என்ன செய்வேன்.

ஆதவன்: உன்னுடன் பணிபுரியும் ஆசிரியர்கள் யாரிடமாவது பேசிப் பார்க்கலாமோ? யாரேனும் ஒரு ஆசிரியர்கூட உன் கண்களில் படவில்லையா?

மாதவன்: இளவயது ஆசிரியர்களை, உன்னுடைய பாடம் நடத்தும் முறை சரியில்லை. நீ மாற்றலாகிப் போய் விடுவாய்; நீ வேலையிலிருந்து தூக்கியெறியப்படுவாய்; உன்னைப் பற்றி மேலிடத்தில் நல்ல எண்ணம் இல்லை; என்றெல்லாம் பயமுறுத்தியிருக்கிறேன். இவர்களில் யாருடன் பேசுவது? என்னைப் பற்றி அவர்களெல்லாம் என்ன மதிப்பு வைத்துள்ளார்களோ? தெரியவில்லையே.

ஆதவன்: வாரத்திலே மூணு நாள், தேங்காய் மூடி பாகவதரா மேடைப் பேச்சுக்குக் கிளம்புவியே. அதுக்கெல்லாம் ஏற்பாடு செய்யும் பெருமாள் சாமியோட பேசலாமே? . . .

மாதவன்: ஒரே பேச்சு, ஒரே கதை, அதே கவிதை. என் கையிலே இருக்கிற குறிப்பு ஏட்டை யாராவது பிடுங்கிட்டா பேச்சே ஓடாது. 'தமிழைப் படிங்க. தமிழை மட்டும் படிங்க-ன்னு சொல்லிவிட்டு என் மகனை மட்டும் ஆங்கிலம், இந்தி, கம்பியூட்டர் படிக்கச் சொல்லி மும்பைக்கு அனுப்பி விட்டது, பெருமாள் சாமிக்குத் தெரியும். அதன் பிறகு மும்பை-லேந்து ஜப்பான் போனதும் எல்லோருக்கும் தெரியும். ஊருக்கு உபதேசி; இரட்டை வாழ்க்கை நடத்தும் இரண்டுங்கெட்டான், என்றல்லவா பெருமாள்சாமி என்னை நினைப்பார்.'

ஆதவன்: உடம்புக்கு ஏதாவது சரியில்லேன்னா. நாதராமம், டாக்டர்கிட்டே போவியே. சிந்தனைச் சிற்பி 2022லே அவரோட பேசிப்பாரேன். உன் குடும்ப மருத்துவர் ஆச்சே. உன்னை நல்லா எடை போட்டு மதிப்போட பழகுவார். இல்லையா? உன் உடல் நலம், மனவளம் எல்லாம் அவருக்குத் தெரியுமே!

மாதவன்: அதையேன் கேக்கிற. ஒரு தடவை எலுமிச்சம் பழத்திலே என்ன சத்து-ன்னு கேட்டேன். விட்டமின் சி-ன்னார். ஆரஞ்சுப் பழத்திலே என்ன இருக்கு-ன்னு கேட்டதுக்கு, விட்டமின் சி-ன்னார். அப்போ ஆரஞ்சுக்குப் பதிலா, விலை மலிவாயிருக்கிறதாலே எலுமிச்சம் பழத்தையே சாப்பிட்டா என்ன – அப்படின்னு கேட்டேன். நான் அப்படிக் கேட்டதிலே என்ன தப்பு? தெரியாத கேள்விக்கு சரியான விளக்கத்தைத் தானே மருத்துவர் நாதராமம் சொல்லணும்?

அதுக்கு அந்த டாக்டர் நாதராமம் என்ன சொன்னார் தெரியுமா? உன்னைப் போல ஆளுங்களுக்கு எலுமிச்சையைத் தலையிலே தேச்சு விடனும்-னார், என்ன கொழுப்பு இருந்தா என்னை அப்படிக் கேவலப்படுத்துவாரு!!

அப்படி என்ன, அறிவியல் ஞானத்திலே குறைஞ்சு போயிட்டேன். ஆரஞ்சுப் பழத்துக்கும் எலுமிச்சம் பழத்துக்கும் வித்தியாசம் தெரியாத மரமண்டையா நான்? நினைச்சுப்பார்த்தா ஆத்திரமும் கோபமும் கொப்பளிக்குது. இந்த மாதிரி மருத்துவரெல்லாம், டேவிட் வர்னர் (David Werner) எழுதிய, 'டாக்டர் இல்லாத இடத்தில்', (Where there is no doctor) என்ற புத்தகத்தைக் கண்டிப்பாய் படிக்கணும், நோயாளிகள் உடல்நலத்தைப் பார்க்கும் முன்னாடி அவர்களின் மனநலத்தைச் சிதைக்கக் கூடாது? இல்லையா? மருத்துவத் தொழில் அறம் என்பதை அவர் மறந்து விட்டார்.

ஆதவன்: பாத்தியா! உன்னோட நடையுடை பாவனைகளைப் பத்தி அடுத்தவங்க சொன்னதுமே உனக்கு எவ்வளவு கோபம் வருது? இவங்க எல்லோரையும் ஒதுக்கித் தள்ளு. உன்னோட ஒரே மகன், ஓம் குமாரோட பேசிப்பாரேன். உன்னோட செல்லப்பிள்ளை இல்லையா?

மாதவன்: ஊகூம் முடியாது, பட்டப்படிப்புக்கு மேலே அவனைப் படிக்கவிடலை. நான் தப்பு செய்யறப்போ நேரிடையா தட்டிக் கேப்பான்; எனக்கே அறிவுரை சொல்லுவான். நான் செய்யறது எதுவுமே சரியில்லே-ன்னு அடிச்சுப் பேசுவான். நான் எதைக் கூறினாலும் அதை மறுத்துச் சொல்லிக் கொண்டேயிருப்பான்.

ஆதவன்: பரவாயில்லை. உன் மகள் காயத்ரியிடம் டயல் பண்ணிப் பாரேன். உன் மகனைவிட அதிகமாக நேசிப்பாயே!

மாதவன்: பேசலாம். முப்பத்தைந்து வயதுவரை அவளுக்குத் திருமணம் செய்யாமல் இருந்துவிட்டேன். ஆனால், இருந்து இருந்து பார்த்துவிட்டு, காதல் கல்யாணம் செய்து கொண்டாள். நகையெல்லாம் போடுவது போல போட்டு, நானே வைத்துக் கொண்டேன். மகளுடன் எதைப் பேசுவது. அதனால் மகளும், மாப்பிள்ளையும் என்னுடன் பேசுவதே இல்லை.

ஆதவன்: 'ஈருடல் ஓருயிர்' – அப்படீன்னு அடிக்கடி சொல்லுவியே வங்கியிலே வேலை பார்க்கிற உன் மனைவியோட பேசலாமே? ஒவ்வொரு ஆணின் உயர்வுக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பதாகச் சொல்கிறார்களே? உன்னோட உயர்வுக்கும் உன் மனைவிதானே காரணம்? நான் சொல்வது சரிதானே?

மாதவன்: என் மனைவி என்ன நினைக்கிறாளோ! எக்கச்சக்கமா நகை நட்டு, சீர் வரிசை எல்லாத்தையும் வாங்கிக்கிட்டு, 'டாட்டா சுமோ', தந்தாலே ஆயிற்று என அடம்பிடித்திருக்கிறேன். போதாக் குறைக்கு, வீட்டு வேலைக்காரியைச் சீண்டியதும் மனைவிக்குத் தெரியும்.

அயோத்தி இராமனாக இல்லாமல் கோகுலக் கண்ணனாக இருப்பது எனக்குப் பிடிக்கும். என் மனைவிக்கு அறவே பிடிக்காது.

ஆதவன்: உம் பக்கத்து வீட்டில் குடியிருக்கிற அழகர்சாமியோட பேசலாமே! ஏன் கூச்சப்படறே?

மாதவன்: ம்ம். எப்படி முடியும்? அழகர்சாமி வீட்டை பூட்டி விட்டு ஊருக்குப் போனப்ப என்னோட கடைசி மகன் சசிகுமார் வேலி தாண்டி, அவர் வீட்டு கண்ணாடி சன்னலை உடைச்சுட்டான். மாங்காய்களை குலையோட பறிச்சுக்கிட்டு வந்துட்டான். அவர் தோட்டத்திலிருந்து பூச்செடி குரோட்டன்சை வேரோட பிடுங்கிக்கிட்டு வந்துட்டான். புள்ளையே இப்படி-ன்னா அப்பன் எப்படி-ன்னு அழகர்சாமி எண்ணமாட்டாரா? அதனால்தான் கூச்சப்படறேன்.

ஆதவன்: அப்போ ... யார் கூடப் பேசப்போற சிந்தனைச் சிற்பி 2022 ஐ எப்படி சோதிக்கப் போற? உன்னோட நிறுவனத் தலைவர், உடன் பணியாற்றும் நண்பர்கள், மகன், மகள், மனைவி, அக்கம்பக்கத்தார், உற்றார், உறவினர் - இப்படி எல்லார்கிட்டேயும் நல்ல உறவும் எண்ணமும் கிடையாதா? ஒரே திகைப்பா இருக்கு அப்போ யார் கூட பேசப் போற?

மாதவன்: ம் இருங்க, வாரேன். என்னுடன் வேலை பார்க்கிற, என் ஊழல்களைக் கண்டுக்காத, ஊழல்களில் பங்கு வாங்கிக்கிட்ட சுந்தரசாமிகிட்ட பேசறேன். அவர்தான் சரியான ஆள்! ... என்னைப் பற்றி அவருக்கு நல்லாத் தெரியும்

அவசர அவசரமாகச் சுந்தரசாமிக்கு டயல் செய்தார் மாதவன்.

‘சிந்தனைச் சிற்பி 2022 - பச்சைக் கீற்றுக்களைப் பளிச்சிட்டது. கவிஞர் புலமைப்பித்தனின். ‘இந்தப் பச்சைக் கிளிக்கு ஒரு செவ்வந்திப் பூவைத் தொட்டிலில் இட்டு வைத்தேன்” என்ற பாடலை வரலட்சுமி பாடி சொக்க வைப்பது போல சிந்தனைச் சிற்பி 2022 சிணுங்கியது.

மறுமுனையில் சுந்தரசாமி பேசினார். மாதவனும் பேசினார். பேசினார்கள். இருவரும் பேசி முடித்து விட்டார்கள். இருவரின் குரல் மட்டுமே மாறி மாறி ஒலித்தது. கணிப்பொறி ஆராய்ச்சியாளர் ஆதவன் குறிப்பிட்டது போல, எதிர்முனையில் பேசிய சுந்தரசாமியின் ‘மனதின் ஒலி எதுவுமே கேட்கவில்லை’. அலுத்துப் போனார். மாதவன் ஆத்திரம் கொண்டார். கண்கள் சிவந்தன.

மாதவன்: என்னப்பா? ஆதவன் நீ சொன்ன மாதிரி சிந்தனைச் சிற்பி 2022-லே எந்தவிதமான மனதின் குரலும் ஒலிக்கவில்லையே. சுந்தரசாமியை விட நெருக்கமான நண்பன் வேறு யாரும் எனக்குக் கிடையாது. கிட்டத்தட்ட ஒரு மணி நேரமா நீ கொடுத்த சிந்தனைச் சிற்பி 2022 மூலம் சுந்தரசாமியோட பேசியிருக்கேன். ஆனா சுந்தரசாமி என்னைப் பற்றி என்ன எடைபோட்டு வச்சிருக்கார்-னு தெரிஞ்சுக்க முடியலே. அவரோட, மனதின் குரலும் கேட்கவே இல்லையே.

போப்போ! நீயும் உன்னோட நூதனக் கண்டு பிடிப்பும்! நீ கண்டுபிடிச்ச சிந்தனைச் சிற்பி 2022 ஐ எங்கேயாவது உடைப்பிலேத் தூக்கிப் போடு. பிறர் போற்றுவதால் நான் உயர்ந்து விடப் போகிறேனா? இல்லை தூற்றுவதால் தாழ்ந்து விடப் போகிறேனா? தேவையில்லாத மனக் குடைச்சல், உளைச்சல். உன்னோட சிந்தனைச் சிற்பியை, நீயே சோதனை பண்ணிக்க! சிந்தனைச் சிற்பியாம்! சிந்தனைச் சிற்பி!! இதுக்கு Brain Chisler-ன்னு ஆங்கிலப் பேரு. போய்யா... போ... எனச் சீறினார் மாதவன்.

கடகடவெனச் சிரித்தார் ஆதவன்.

ஆதவன்: கேட்காது. மாதவன் கேட்காது. சாதாரணக் கைப்பேசிதான், இந்த சிந்தனைச் சிற்பி 2022. இதனால் சிந்தனையின் அளவை அறியமுடியாது. சிந்தனை வேகத்தை உணர முடியாது. யார் மனதையும் படிக்க இயலாது. பிடிக்கவும் இயலாது. சிந்தனையின் ஆழத்தை, வேகத்தை எந்தக் கருவியாலும் அளக்க முடியாது. அளக்கவே இயலாது.

கணினி, இன்ட்டர்நெட், மல்ட்டிமீடியா, ஃபேக்ஸ், பேஜர் டெலக்ஸ், கைபேசி இவை எல்லாவற்றையும் விட, இயற்கை படைத்த உச்சமான, மிகச்சிறந்த படைப்பு ஒன்று உண்டு, மாதவன்! அதுதான் “மனித மூளை.” உன்னை நல்லவன் வல்லவன் என்று மனதாரச் சொல்வதற்கு யாரேனும் ஒருவராவது உள்ளார்களா? என்பதை உனக்கு உணர்த்தவே இப்படிச் செய்தேன். புரிந்து கொள்.

“குறைகளே இல்லாத மனிதர்களைக் காண்பது அரிது. எங்கேயும், எல்லோர்க்கும், எப்போதும் நல்லவராக இருக்கும் மனிதர்களைப் பார்ப்பது அரிதினும் அரிது.”

எதிரில் உள்ள யாவரையும் சந்தேகக் கண்கொண்டு நோக்காதே. குற்றவாளி என உன் ஆள்காட்டி விரலால் சுட்டாதே! அப்படிச் சுட்டினால் மற்ற மூன்று விரல்களும் உன்னை நோக்கியிருப்பதை என்றைக்காவது நீ சிந்தனை செய்ததுண்டா?

பிறரிடம் உள்ள குணத்தை நாடு. உன்னிடம் உள்ள குறைகளைத் தேடு. அடுத்தவரிடம் ஏதாவது குற்றங்கள் இருக்குமா, என சல்லடையால் சலித்துப் பார்க்காதே. எந்த மனிதனைச் சந்தித்தாலும் அம்மனிதனின் நற்பண்புகளில் ஏதேனும் ஒன்றை நீ கற்றுக்கொள்ள முடியுமா? என எண்ணிப்பார். மனிதநேயம் சிறக்கச் செய்.

‘நீர்மட்டம் எந்த அளவுக்கு உயர்ந்துள்ளதோ அந்த அளவுக்குத்தான் தாமரை, அல்லியின் தண்டுகள் நீண்டிருக்கும். உன்னுடைய உள்ளம் எந்த அளவுக்கு உயர்வான சிந்தனைகளைப் பெற்றுள்ளதோ அந்த அளவுக்கு உன் வாழ்வு உயரும்.’

“வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு.”

அடுத்தவர்களின் குற்றங்களைத் துருவித்துருவிப் பார்ப்பதைவிட உன் குறைகள் என்ன என்பதைப் பட்டியல் போட்டுப் பார். ஒரு தீமையும் வராது.

“ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு”

எனும் பொதுமுறையை நீ மட்டுமல்ல, எல்லோரும் உணர்ந்தால் வாழ்வில் உயரலாம்.

“தீதும் நன்றும் பிறர் தர வாரா!” என்பதைப் புரிந்து கொள்.

சிந்தனைச் சிற்பி - சி.சி.2022, அல்லது Brain Chisler - B.C. 2022 என்பதெல்லாம் அறிவியல் கற்பனையே. புரிந்ததா! போய் வா. மாதவன். சந்திப்போம்.

●

கட்டுரை

ஆ.சிவசுப்பிரமணியன்

sivasubramanian@sivasubramanian.in

ஓர் உள்ளூர் வணிகவழி

ஒரு நாட்டின் சமூக வளர்ச்சியில் குறிப்பாக அதன் பொருளியல் பண்பாட்டு வளரச்சியில் வாணிபத்தின் பங்களிப்பு அளப்பரியது. வாணிபத்தின் வளர்ச்சியானது வேளாண்மை உற்பத்திப் பொருட்களுக்கும், கைவினைப் பொருடகளுக்கும் இடையிலான பரிவரத்தனை முறையை. நெருக்கமாக்கி உழுகுடிகள், கைவினைஞர்கள், நுகர்வோர் என்ற முத்திறத்தாரையும் ஒருங்கிணைக்கும் தன்மைகொண்டது.

இதன் வளர்ச்சி நிலையே ஒரு நாட்டில் நகரங்களின் எண்ணிக்கையை மிகுதிப்படுத்தும். வணிகர் களைத் தனி மனிதர்கள் என்ற அடையாளத்தில் இருந்து விடுவித்து வணிகக் குழுக்களாக மாற்றி அமைக்கும் . அத்துடன் நகர நாகரிகம் என்ற அடைமொழியை உருவாக்கித் தரும்.

நகரங்கள் என்பன உள்நாட்டு நிலப்பகுதியில் மட்டுமின்றி கடற்கரைகளிலும் உருவாகி கடல்கடந்த நாடுகளுடனும் வாணிப இணைப்பை உருவாக்கும். இம்முயற்சியில் நிகழும் வாணிபமானது ஏற்றுமதி வாணிபம் இறக்குமதி வாணிபம் என இருதரத்தது. இவை இரண்டும் வளர்ச்சியுற கடற்கரை நகரங்களும், உள்நாட்டு நகரங்களும், பரந்துபட்ட உள்நாட்டுப் பகுதிகளைக் கொண்டிருத்தல் அவசியமான ஒன்று. ஏன் எனில் வாணிபத்திற்கான உற்பத்திப் பொருளையும், கைவினைப் பொருட்களுக்கான மூலப் பொருட்களையும் வழங்க உள்நாட்டுப் பகுதியின் பங்களிப்பு மிகவும் தேவை. இதுபோல் பொருட்களை வாங்கிப் பயன்படுத்தும் நுகர்வோர்கள் வாழும் தளமாகவும் உள்நாட்டுப் பகுதி விளங்கியது.

இவ்வாறு நகரம், உள்நாட்டுப்பகுதி என்ற இரண்டின் இணைப்பு தமிழர்தம் வரலாற்றில் தொன்மையான ஒன்றாக விளங்கியுள்ளது. 'மதுரைக்காஞ்சி' 'பட்டினப்பாலை' என்ற இரு சங்க இலக்கியங்களும், சிலப்பதிகாரம் மதுரைக் காண்டத்தில் இடம்பெற்றுள்ள 'ஊர்காண் காதை'யும் பண்டைத் தமிழரின் வாணிபச் சிறப்பிற்குச் சான்று பகர்கின்றன.

வாணிபமும் சாலையும் :

வாணிபச் செயல்பாட்டில் மிக முக்கியமான ஒன்றாக அமைவது பொருட்களை ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்வதாகும். தொடக்கத்தில் விலங்குகளும் பின்னர் விலங்குகளால் இழுக்கப்படும் வண்டிகளும் சுமைகளைக் கொண்டு செல்லப் பயன்பட்டுள்ளன. எருதுகள் பூட்டப்பட்ட வண்டிகள் வாணிபப்பொருட்களைச் சுமந்து செல்லப் பயன்படுத்தப்பட்டதை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம்.

இவை கடந்து செல்லப் பாதைகள் புதிதாக உருவாக்கப்பட்டன. வாணிபத்திற்காக மட்டுமின்றி, மன்னரகள் நிகழ்த்திய படையெடுப்புகள், கலைஞர்களின் கலைப்பயணம், பண்ணியத் தலயாத்திரை என்பனவற்றிற்கும் இவை பயன்பட்டன என்றாலும், வாணிபப் பயன்பாடே இவற்றின் அடிப்படை நோக்கமாக இருந்தது. இதன் அடிப்படையிலேயே வாணிபப் பெருவழி (*Trade Route*) என்று இவை அழைக்கப்பட்டன. சாலைகளின் வளர்ச்சி ஏற்படுத்திய விளைவுகள் குறித்து மோதிசந்திரர்(1970:73)' நாட்டில் சாலையமைப்புகளின் வளரச்சி, அந்நாட்டின் நாகரிக வளர்ச்சியின் அளவுகோலாகும். நெடுஞ்சாலைகளில் இருந்து கிளைச்சாலைகள் பெருகப் பெருக நாகரிகமும் நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லம் பரவத் தொடங்கியது.' என்று கூறியுள்ளார்.

தமிழ்க் கல்வெட்டுக்களில் இத்தகைய வணிகப் பெருவழிகள் குறித்த பதிவுகள் உள்ளன. இவை குறித்த, புதிய கண்டு பிடிப்புகளைத் தொல்லியல் அறிஞர்கள் செ.இராசு, ர. பூங்குன்றன், ந.அதியமான், கா. இராஜன், வெ.வேதாச்சலம் ஆகியோர் வெளிப்படுத்தி உள்ளனர். பாவெல் பாரதி வைகைப் பெருவழி தொடர்பான செய்திகளைத் தமது இரு கட்டுரைகளின் வாயிலாக வெளிப்படுத்தி உள்ளார்.

இவர்களது ஆய்வின் அடிப்படை ஆதாரங்களாகக் கல்வெட்டுக்கள் அமைந்துள்ளன. ஆனால் இக்கட்டுரை கல்வெட்டுச் சான்றுகள் இன்றி வாய்மொழிச் சான்றுகளின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் நிகழ்ந்த பண்டமாற்று வாணிபம் குறித்த வாய்மொழி வழக்காறுகளை அடிப்படைச் சான்றுகளாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு வகையில் உள்ளூர் வரலாறு(*local history*) என்ற வரலாற்று வகைமைக்குள் அடங்கும் தன்மைத்தது.

உள்ளூர் வரலாறு:

உள்ளூர் வரலாறு என்பது ஒரு கிராமத்தையோ அல்லது சில கிராமங்களையோ மையமாகக் கொண்டது. துறைமுக நகரம், தலைநகரம்

எனபனவற்றில் இருந்து தொலைவில் உள்ள சிறிய அல்லது நடுத்தர நகரமும் பொதுவான புவியியல் அமைப்பை விடச் சிறிய நிலஅமைப்பைக் கொண்ட நிர்வாகப் பகுதியும் உள்ளூர் வரலாற்று வரைவுக்கான களமாகும் என்பது பியர் கூபர்(1915- 2012) என்ற பிரஞ்ச் வரலாற்றுப் பேராசிரியரின் கருத்தாகும்.

இவரது இவ் வரையரையை மையமாகக் கொண்டு கருப்புக்கட்டி என்றழைக்கப்படும் பனைவெல்லம் உற்பத்தி செய்வோர் நிகழத்திய பண்டமாற்று வாணிபம், பயன்படுத்திய பாதை, சுமைகளைக் கொண்டு செல்ல உதவிய வாகனம் விலங்கு என்பன குறித்த செய்திகளை வாய்மொழித் தரவுகளாகத் திரட்டி இக்கட்டுரை எழுதப்பட்டுள்து. இதன் அடிப்படையில் வாய்மொழி வரலாறு (Oral History) என்ற வகைமைக்குள்ளும் இக்கட்டுரை அடங்குகிறது.

வாய்மொழி வரலாறு:

வாய்மொழி வரலாறு என்ற வராற்றியல் கலைச்சொல் 1948 ஆவது ஆண்டில் ஆலம் நீவின் என்ற கொலம்பியாப் பல்கலைக் கழகப் பேராசிரியரால் உருவாக்கப்பட்டதாகும். வாய்மொழி வரலாறு என்பது குறித்துப் பல்வேறு வரையறைகள் வரலாற்றியலர்களிடம் உள்ளன. வாய்மொழியாக வழங்கப்படும் வழக்காறுகளின் தொகுப்பே வாய்மொழி வரலாறு என்று எளிதாக, வரையரை செய்வது இதை மலினப்படுத்தும் செயலாகும்.

ஒரு குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வில் பங்கு கொண்டோரின் வாய்மொழிச் சான்றுகளைப் பயன்படுத்துதலே வாய்மொழி வரலாறு என்று சுகோவ் எனபவர் குறிப்பிடுகிறார். ஜான் வான்சினா என்பவரோ ஒரு குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வை நேரில் கண்டவர்களின் கூற்றை வாய்மொழி மரபாக ஏற்றுக் கொள்ளவில்லை. அவரது கருத்துப்படி அதைக் கண்டறியாத ஒருவர் செவிவழியாகக் கேட்டறிந்ததைக் கூறுவதுதான் வாய்மொழி மரபாகும். இதன்படி வாய்மொழிப் பரவல் (Oral Transmission) முக்கியத்துவம் பெறுகிறது. லுமிஸ் என்பவர் வரலாற்றின் ஒரு வகைமையாக வாய்மொழி வரலாறைக் கருதவில்லை. அவரது கருத்துப்படி இது ஒரு வரலாற்று முறையியல்(Methodology) ஆகும்.

இக்கட்டுரை வாய்மொழி வரலாறு தொடர்பான இவ் விவாதங்களுக்குள் நுழையாது ஜான்வான்சினாவின் வரையரையை அடியொற்றி எழுதப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் ஊரில் ஓடும் பொருநை ஆற்றின் தென்கரைப் பகுதியில் உள்ள தேரிக்காடு என்றழைக்கப்படும் பனைமரக்காடுளில் வாழ்ந்தோர் ஆங்கில ஆட்சியின்போது நிகழ்த்திய பண்டமாற்று வாணிபம் இக்கட்டுரையின் மையப் பொருளாகும். இவ்வகையில் வாய்மொழிச் செய்திகளின் துணையுடன் எழுதப்பட்ட உள்ளூர் வணிக வரலாறு எனலாம்.

தேரிக்காடு:

இன்றையத் தூத்துக்குடி மாவட்டத்தின் தென்பகுதியில் உள்ள திருச்செந்தூர், சாத்தான்குளம் வட்டங்களும் திருநெல்வேலி மாவட்டத்தின் தென்பகுதியில் உள்ள நாங்குனேரி, இராதாபுரம் வட்டங்களும் செம்மண் மேடுகளையும் சிறிய பள்ளத்தாக்குகளையும் கொண்டவை. இந்நிலப்பகுதி தேரி என்று குறிப்பிடப்படுகிறது. மேடான நிலப்பகுதியைக் குறிக்க, தெற்றி என்ற சொல்லட்சி கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. ஒருவேளை தேரி என்ற சொல் தெற்றிஎன்ற சொல்லின் திரிபாக இருக்கலாம். இதன் ஆங்கில ஒலிமொழி பெயர்ப்பாகவே Teri என்ற சொல்லாட்சி உருவாகியுள்ளது. தேரி நிலப்பகுதியில் நெருக்கமாக வளர்ந்து நிற்கும் பனைமரங்களை அடிப்படையாகக்கொண்டு பனைமரக்காடு என்ற பொருளைத்தரும் ஆங்கிலச் சொல்லை ஆங்கில அதிகாரிகளும், கிறித்தவ மறைப்பணியாளர்களும் பயன்படுத்தியுள்ளனர். ஆங்கில ஆட்சியின்போது திருச்செந்தூர் வட்டம் ‘பனைமரத் தாலுகா’ என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது.

தேரியின் பொருளாதாரம்:

தமிழ்நாட்டின் பெருவாரியான கிராமங்களைப் போன்றே தேரிநிலப் பகுதியும் காலனிய ஆட்சியின்போது வேளாண் பொருளாதாரத்தையே மையமாகக் கொண்டிருந்தது. இப்பகுதியின் பொருளாதாரத்தில் பனைமரத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாய் இருந்தது. பனைமரத்தில் இருந்து நேரடியாகப் பெறும் நொங்கு, கள், பதநீர், ஓலை என்ற நேரடியான பொருள்கள் மட்டுமின்றி அவற்றின் துணைத் தயாரிப்பான, பலவகைக் கருப்புக்கட்டிகள் (பனை வெல்லம்), கற்கண்டு, பனங்கிழங்கு என்பன முக்கிய விற்பனைப் பொருட்களாயின. இவற்றுள் கருப்புக்கட்டி, கற்கண்டு, பனங்கிழங்கு என்பன தவிர ஏனையவை இருப்பு வைத்து விற்கமுடியாத பொருட்களாகும். இவை தவிர கட்டிடங்களுக்குத் தேவையான பனைச் சட்டங்கள், ஓலைகள், பனை நார், ஈர்க்கு, கருக்கு மட்டை என்பனவும் விற்பனைப் பொருட்களாயின. இவை அனைத்தும் இன்றுவரை விற்பனைப் பொருள்களாகத் தொடர்கின்றன.

ஆனால் இவை தவிர வேறுவகையான வேளாண் பொருள்களும் தேரிக்காட்டுப் பொருளாதாரத்தில் இடம்பெற்றிருந்தன. தேரிக்காட்டு மக்களின் கடந்தகாலப் பண்டமாற்று வாணிபத்தில் இவை முக்கிய பங்களிப்பைச் செய்துள்ளன.

இது குறித்து அடுத்த இதழில் விரிவாகக் காண்போம்.

கட்டுரையாளர்: மூத்தப் பேராசிரியர்,
நாட்டாரியல் ஆய்வாளர்

திறனாய்வு

டாக்டர் புதேரி தானப்பன்

கல்விப் புலத்தைச் சீரழிக்கும் கயமைகள்

‘துணைவேந்தர்கள்’ புதினத்தை முன்வைத்து...

வசந்தன் என்பவர் ஒரு பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணி புரிகிறார். இவரைச் சுற்றி நடப்பதுதான் “துணை வேந்தர்கள்” என்னும் இப் புதினம். இந்த வசந்தன்,

1. நேர்மையானவர்.
2. நியாயத்தைப் பேசுபவர்.
3. தாய் நாட்டுக்கே உழைக்கும் நோக்கம் உடையவர்.
4. கடமைக்கு முதலிடம் தருபவர்.
5. கண்ணியத்தைப் போற்றுபவர்.
6. பிறர் நலம் பேணுபவர்
7. நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை விரும்பாதவர்.
8. மனதில் பட்டதை மறைக்காமல் சொல்லுபவர்.
9. தனது பணிகள் தொடர்பான சட்ட திட்டங்களை நன்கு அறிந்தவர்.
10. தான் பணிபுரியும் பல்கலைக்கழகத்துக்கும், மாணவர்களுக்கும் நாட்டிற்கும் பெருமை தேடித் தரவேண்டும் என்பதில் பெரும் அக்கறை உள்ளவர்.
11. கூர்மையான அறிவு உடையவர்.
12. சுயநலம் இல்லாதவர்

இவை போன்ற நல்ல இயல்புகளைத் தன் மூச்சாகக் கொண்டவர்.

இத்தகைய நல்ல இயல்புகளை உடைய இவர், அவற்றுக்கு மாறான இயல்புடையோரால் பெரும் துன்பங்களுக்கும் ஏமாற்றங்களுக்கும் உள்ளாகிறார். அவர் பணிபுரியும் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தர்களும் இணை வேந்தர்களும் நியமிக்கப் படுவதில் ஏற்படும் தில்லுமுல்லுகள் தெரிய வருகின்றன.

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் கூட்டத்தினர், ஒருவருக்கு அதிகாரம் கிடைத்தவுடன் அந்த அதிகாரத்திற்கு ஏற்றார்போல் அவர்கள் எப்படித் தங்களை மாற்றிக் கொள்ளுகின்றனர் என்பது தெரியவருகிறது.

தகுதியற்றவர்கள், தாங்கள் முன்னுரிமை பெறுவதற்காவும் அனைத்துச் சலுகைகளையும் பெற்றுவிட வேண்டும் என்பதற்காகவும் அதிகாரத்துக்கு எதிராக மற்றவர்களை எப்படித் தூண்டிவிடுகிறார்கள் என்பது தெரியவருகிறது.

எல்லாத் திறமைகள் இருந்தும் வசந்தன் பிறரைக் ‘காக்கா’ பிடிக்க விரும்பாததனால் அவர் எப்படிப் பின்னுக்குத் தள்ளப்படுகிறார் என்பதும் தெரியவருகிறது. இப்படி நிறையச் செய்திகள் இப் புதினம் மூலம் நமக்குத் தெரியவருகின்றன.

இதனை ஒரு புதினம் என்று சொல்வதைவிட சமுதாய நலனுக்கு இதன் ஆசிரியர் விடுக்கும் ஓர் அறைகூவல் என்பதே சாலப் பொருந்தும். இதனைப் படிக்கத் துவங்கும் எவர் ஒருவரும் பொழுது போக்கைத் தரக்கூடிய ஒரு விறுவிறுப்பான நாவலாக இல்லையே என்னும் எண்ணத்திற்கு ஆட்பட்டு, “மேற்கொண்டும் இதனைப் படிக்க வேண்டாம்” என்னும் முடிவுக்கு வருவார்களேயானால் அதில் வியப்படைவதற்கு ஒன்றும் இல்லை.

காரணம், புதினம் என்றாலே அது வெறும் பொழுதுபோக்கு நூல்தான் என்ற எண்ணத்தை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் கடந்த காலத்தில் தமிழர்களின் சிந்தனையைச் சில எழுத்தாளர்கள் கட்டிப் போட்டு விட்டார்கள். ஒன்றுக்கும் உதவாத துப்பறியும் நாவல்கள், காமச் சிந்தனைகளைக் கொண்டாடும் நாவல்கள், பருவ வயதினர்க்கு ஒருவித கிளுகிளுப்பை ஏற்படுத்தும் நாவல்கள் என வெளியிட்டு காசு பணம் தேடுவதையே நோக்கமாகக் கொண்டு சில எழுத்தாளர்கள் சமுதாயத்தைச் சீரழித்து, தமிழ் இளைஞர்கள் அறிவார்ந்த நூல்களைப் படிக்கும் பழக்கத்தைக் கெடுத்துக் குட்டிச் சுவர் ஆக்கி விட்டார்கள். இவற்றிலிருந்து இப் புதினம் முற்றிலும் வேறுபட்டது. டாக்டர் மு. வ. வின் கரித்துண்டு, அகல் விளக்கு போன்ற நாவல்களுக்கு நிகராக, இச் சமுதாயத்தைச் சீராக்கும் கருத்துக்களை வாரி இறைப்பதாக இது உள்ளது.‘

இது படிப்பதற்கு நாவல் போலத் தோன்றவில்லை. பெரும்பாலான கதை மாந்தர்களின் பெயர்கள் வேற்று மொழியில் இருப்பதால் அவற்றைக் கதை ஓட்டத்தில் நினைவு வைத்துக் கொள்வது எளிதாக இருக்கவில்லை. அதனால் துவக்கத்தில் கதை விரைவாக நகரவில்லை. போகப்போகத்தான் சூடு பிடிக்கிறது.

கதை மாந்தர்களின் உரையாடல்கள் வறட்சியாக உள்ளன. கல்வி நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் துணிவேந்தர் முதல் கடைநிலை ஊழியர் வரை உள்ள ஒவ்வொருவரின் மன இயல்புகளை, இந்த நாவல் அலசுகிறது.

ஐந்தறிவு விலங்குகளான, கடுமையாக உழைத்தும் நற்பெயரை வாங்க முடியாத கழுதை போன்றவர்களும் எவ்வித உழைப்பும் இன்றி, ஏமாற்றியே பிழைத்து உயிர் வாழும் குள்ளநரிக் கூட்டமும் தனக்குள்ள உடல் வலிமையைத் தனது திறமையாகக் காட்டி ஈவு இரக்கம்

இல்லாமல் அடுத்தவரை அநியாயம் செய்தே ஆட்சி நடத்தும் சிறுத்தைக் கூட்டங்களும் தம்மை விரட்டுவதற்கு யாருமே இல்லாத நிலையிலும் கிடைத்த உணவை முழுமையாக உண்ணாமல் ஒரு வாய் இரண்டு வாய் எடுத்துக் கொண்டு ஓடிவிடும் "ஒரு கல்லெடுக்க ஓடும் அந்தக் காக்கைக் கூட்டமும்" தன்னிடம் அளவிடற்கரிய வலிமையும் அறிவும் இருந்தும் அடங்கியே பழக்கப்பட்ட யானைக் கூட்டமும் எவ்வளவுதான் இகழ்ந்தாலும் வாலை ஆட்டிக் கொண்டு நன்றியோடு காலைச் சுற்றிச் சுற்றி வரும் நாய்க் குட்டிகளும் இவை போன்ற இன்னும் பல விலங்குகளும் இந்தச் சமுதாயத்தில் பல்வேறு மனிதர்களின் உருவங்களில் உலவிக் கொண்டு இருக்கின்றன என்பதை அழகாக வெளிப்படுத்தும் விதமாக இந்த நாவல் நடைபோடுகிறது.

அதேநேரம் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துத் தனது கணவன், குழந்தைகள், குடும்பம் என்று தன்னைச் சார்ந்தோருக்கு எவ்வித ஏமாற்றத்தையும் தராமல் எல்லாச் சுமைகளையும் ஏற்று, எல்லாவிதமான ஏமாற்றங்களையும் சகித்துக்கொண்டு பம்பரமாய்ச் சுழன்றாடும் மனைவி என்னும் மல்லிகைப் பூக்களும் இருக்கத்தான் செய்கின்றன.

நாவல் இலக்கியம் டாக்டர் மு. வ. வின் காலத்தில் கொடிகட்டப் பறந்தது. ஆனால் கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதைதான் இன்றைய நிலை. எனினும் இது தவறு என்று சொல்ல முடியாது. இந்த மாற்றத்தைத்தான் 13 ஆம் நூற்றாண்டிலேயே, "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்று பவணந்தி முனிவர் சொல்லிப் போந்தார். நாவல், நெடுங்கதை, நவீனம், புதினம் என்பவை ஒரு பொருட் பன்மொழி. தமிழ் நாவல் இலக்கியம் மேல்நாட்டிலிருந்து இறக்குமதியான ஒன்று. மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களால் 1876 ஆம் ஆண்டு எழுதப்பட்ட "பிரதாப முதலியார் சரித்திரம்" என்பதுதான் தமிழில் தோன்றிய முதல் புதினம்.

ஒரு சிறிய செடியாக நடப்பட்ட இப் புதினம், பின்நாட்களில் நன்றாக வேரூன்றி, வளர்ந்து, மரமாகி, விழுதுகள் விட்டுப் படர்ந்து, மிகப் பெரிய ஆலமரமாக விரிந்து நின்றது. புதினம் என்னும் அந்த ஆலமரத்தின் கிளைகளிலும் நிழலிலும் இளைப்பாறிய எழுத்தாளர்கள் என்னும் பறவைகளும் ஆடுமாடுகளும் கணக்கில் அடங்கா. அந்த மரத்தின் இலைகள் உதிர்ந்து, கிளைகள் ஒவ்வொன்றாக ஒடிந்து கொண்டு வரும்போது அதன் விழுதுகளில் ஒன்றாகத் தாங்கி நின்று, "இதோ நானும் மரத்தைத் தாங்கி உயிரப்பிக்கிறேன்" என்று சொல்லும் நாவலாக இந்தத் "துணை வேந்தர்கள்" என்னும் நாவல் விளங்குகிறது.

இது ஒரு சமுதாய நாவல் ஆகும். சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கும் அழுக்குகளை இது தெளிவாகக் காட்டுகிறது. சுயநலம் மிக்கவர்களும் 'நமக்கென்ன' ஆசாமிகளும் நிறைந்திருந்தால் ஒரு பல்கலைக் கழகம் எப்படிச் சீரழியும்; மாணவர் உலகம் எவ்வாறு பாதிக்கப்படும்; உண்மையான அக்கறை உள்ளவர்கள் எவ்வாறு மனம் நொந்து போவார்கள்; நலத் திட்டங்கள் எவ்வாறு முடங்கிப் போகின்றன என்பனவற்றை விளக்கிச் சொல்லி, ஒரு பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் புதினமாகவும் இது திகழ்கிறது.

துணை வேந்தர் ஆறுமுகம் என்னும் பாத்திரம் வெகு சிறப்பாக உள்ளது. அவருடைய பெருந்தன்மை, சகிப்புத்தன்மை, யார் ஒருவரையும் கோபித்துக் கொள்ளாமை, எல்லோரையும் புரிந்து கொண்டாலும் அதனை வெளியே காட்டிக் கொள்ளாமை, கடமையில் கண்ணியத்தைக் கடைபிடித்தல், அனுபவங்களைப் படிப்பினையாக்கிக் கொள்ளுதல் இப்படித் தலைமைப் பண்புகள் நிறைந்தவராக அவர் திகழ்கிறார். எனினும் கடைசி நாட்களிலும் ஓய்வு பெற்ற பிறகும் அவரும் சாக்கடையில் கலந்து விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். சமுதாயத்தின் யதார்த்தமான நிலையை எடுத்துச் சொல்லும் பாத்திரமாக ஆறுமுகம் என்னும் பாத்திரம் விளங்குகிறது எனில் அது மிகையன்று.

ஆனால் கடைசி வரை தனது கொள்கைகளை விட்டுக் கொடுக்காமலும் பல்கலைக் கழகத்தின் மீது உண்மையான அக்கறையோடும் இருப்பவர் வசந்தன் மட்டுமே! இவர் சுயநலக்காரர்கள், கடமையைத் தட்டிக் கழிப்பவர்கள், பத்தோடு பதினொன்றாக கோவிந்தா போடுபவர்கள், "நரி வலம் போனால் என்ன; இடம் போனால் என்ன? நம் மீது விழுந்து பிரண்டாமல் இருந்தால் சரி" என்னும் மனப்பான்மை கொண்டவர்கள், பொறாமையும் பொச்சரிப்பும் உள்ளவர்கள், ஜால்ரா போடுபவர்கள்,

விஷமிகள், சதிகாரர்கள் ஆகியோருக்கு நடுவில் மாட்டிக் கொண்டு தனி ஒருவராக அல்லாடுகிறார் என்பதையும் மற்றவர்கள் எவ்விதக் கவலையும் இல்லாமல் நடமாடுகிறார்கள் என்னும் யதார்த்தமான போக்கினை எடுத்துச் சொல்வதையும் காண முடிகிறது.

ஆசிரியர் என்பவர் மாணவர்களுக்கு வெறும் மதிப்பெண் பெற்றுத் தருபவராக மட்டும் அல்லாமல் அதற்குமேலும் சென்று ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை இந்தச் சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்பவராக அவர் வாழ்ந்து காட்ட வேண்டும். மாறாக ஒரு சுயநல வாதியாகவும் குறுக்கு வழியில் பதவி உயர்வு பெற்றுக் கொண்டு ஊழலில் திளைப்பவராகவும் இருந்தால் அந்த ஆசிரியர்களைப் பின்பற்றும் மாணவர்களின் எதிர்கால வாழ்வில் எப்படி மாண்பினை எதிர் பார்க்க இயலும் என்று நம்மைச் சிந்திக்க வைக்கிறது. கல்லூரி மாணவர்களுக்குப் பாடமாக வைப்பதற்கு ஏற்றதொரு புதினமாக இது அமைந்துள்ளது, இதன் சிறப்பு.

இந்த நாவலின் பெயர்: **"துணை வேந்தர்கள்"**
நூலாசிரியர்: **பேராசிரியர் சி. ஆர். இராமானுஜம்**.
பக்கங்கள்: 168. விலை: 150/-
தொடர்பு எண்: 9818613518
மின்னஞ்சல் : ramanujampr@yahoo.com

திறனாய்வாளர் : தலைவர்: திருக்குறள் பாராயணம்.
தலைவர் : தில்லித் தமிழ் வளர்ச்சிக் கழகம்.

நூல் விமர்சனம்

கௌரி பரா



A PASSAGE NORTH

வடக்குக்கு ஒரு பாதை

அனுக் அருட்பிரகாசம்

பல பழமையான சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் இன்றைய வாழ்வியல் சூழலில் பொருத்திப் பார்க்கிற போது அவை அர்த்தம் அற்றவையாக உள்ளன என்பது உண்மை என்றாலும், இன்றும் கூட்டாக வாழும் பழமையைப் பேணும் சமூகங்கள் மரணச் சடங்குகளை தொடர்ந்து முப்பது நாட்கள் கொண்டாடுகின்றன. இழப்புக்களை கடந்து செல்லக் கூட்டு அழுகை அவர்களை எதிர்காலத்தில் இழப்பு தரும் மனநோயில் இருந்து காக்க உதவுகிறது என்றால் அது மிகையாகாது. மனிதர்கள் மட்டுமல்ல யானைகள் மற்றும் காகங்கள்கூட மரணத்தைக் கடக்க, இழப்பின் வலியை குறைக்க மரணத்தை கூட்டு சடங்காகக் கொண்டாடுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வடக்குக்கு ஒரு பாதை என்கிற இந்த நாவல் உலகெங்கிலும் இருந்து *Booker Prize 2021*ற்கு தேர்வாகிய ஆறு ஆங்கில நாவல்களில் ஒன்றாக இருந்தது.

ஈழ விடுதலைப்போரில் நேரடியாகப் பங்கு கொண்ட, அந்த போர்ச் சூழலில் தொடர்ந்து வாழ்ந்த மற்றும் இறுதிப்போரில் பாதிக்கப்பட்ட மனிதர்களினால் ஈழவிடுதலைப்போர் சார்ந்த பல்வேறு பிரச்சனைகளைப் பேசிய பல நூறு காத்திரமான நாவல்கள், சிறுகதைத் தொகுப்புக்கள் மற்றும் கவிதைத் தொகுப்புக்கள் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் தமிழில் வெளிவந்திருக்கின்றன, இன்னும் எழுதப்பட்டுக்கொண்டும் வருகிறது.

அவைகளில் சில ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டும் இருக்கின்றன. ஆனால் அந்த நாவல்கள் எதுவும் உலக வாசிப்பரங்கத்தை சென்றடைந்ததாகத் தெரியவில்லை. அதற்கான உலக அரசியல் தேவைகள் மேற்கின் ஆளும் அதிகாரங்களிடம் இதுவரையிலும் இல்லாமல் இருந்திருக்கலாம் என்றே தோன்றுகிறது. போரில் நேரடியாக பங்கு கொள்ளாத ஈழப்போர் பற்றி எந்த நேரடி அனுபவங்களும் இல்லாமல் போருக்குப் பிந்திய எச்சங்களையும் செய்திகளையும் தகவல்களையும் திரட்டி அதிலிருந்து எழுதப்பட்ட நாவல்கள் சில வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் வந்த இரண்டு நாவல்களாக அனுக் அருட்பிரகாசத்தின் *Story of A Brief Marriage* (2016) மற்றும் *Booker Prize 2021* ற்கு தேர்வான *Passage North* (2021) ஆகிய நாவல்கள் இருக்கின்றன.

Passage North ஐ கதாசிரியர் பின்வரும் உப தலைப்புக்களில் மூன்று பாகங்களாகப் பிரித்து எழுதியிருக்கிறார்.

1. *Message* - தகவல்
2. *Journey* - பயணம்
3. *Burning* - எரியூட்டல்

“தினமும் காலையில் படுக்கைளை விட்டு எழுந்து, பரிட்சயமான வட்டத்திற்குள் நின்று, பரிட்சயமான விடயங்களை கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்று செய்து விட்டு மீண்டும் வந்து படுக்கையில் விழுகிறோம். இப்படியே நாட்கள் வாரங்களாக, வாரங்கள் மாதங்களாக, மாதங்கள் வருடங்களாக ஒரே நேர் கோட்டில் பயணித்துக்

கொண்டிருக்கிறபோது இந்த பகல் கனவின் அல்லது நேர் கோட்டு வாழ்க்கையின் நூல் சடுதியாக அறுந்து விடும்படியாக ஏதோ ஒரு நிகழ்வு நம்மை உலுக்கி எடுத்து விடுகிறது. அது ஒரு மரணமாகவோ அல்லது வீரியம் மிக்கதோர் ஆசை உணர்வாகவோ இருக்கலாம். இதுவரை நம் வாழ்க்கைப் பாதையில் நாம் செவ்வனே பயணிக்க உதவிய சுருதியை / தாளலயத்தை அது சின்னாபின்னமாக்கி கலைத்து சில நொடிகளில் சிதறடித்து விடுகிறது. இந்த இடத்தில் நின்று எங்களைச் சுற்றி நாம் சுற்றும் முற்றும் பார்க்கிறபோது மௌனமாக அதிர்ச்சியுறுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடிவதில்லை. திடீரென்று நாங்கள் நினைத்தது போல அல்லாது இந்த உலகம் மிகப் பெரியதாகத்

தோன்றுகிறது , அதில் இதுவரை நாம் வாழ்ந்த வாழ்வை திரும்பிப் பார்க்கிறபோது, காலம் நம்மை சதி வலையில் வீழ்த்தி அர்த்தம் அற்றதான ஒரு வாழ்க்கையை வாழ நம்மை நிர்பந்தித்து இருக்கிறது என்பதும் மாற்றங்கள் ஏதுமற்ற,பொருளற்ற வாழ்வை வாழ்ந்த நம் பொழுதுகளை காலம் வெறுமனே தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது என்பதாக உணரவைக்கிறது."

"Waking up each morning we follow by circuitous routes the thread of habit, out of our homes, into the world , and back to our beds at night, move unseeingly through familiar paths, one day giving way to another and one week to the next, so that when in the midst of this daydream something happens and the thread is finally cut, when, in a moment of strong desire or unexpected loss, the rhythms of life are interrupted, we look around and are quietly surprised to see that the world is vaster than we thought, as if we'd been tricked or cheated out of all that time, time that in retrospect appears to have contained nothing of substance, no change and no duration, time that has come and gone but left us somewhat untouched.

மேற்குறிப்பிட்ட இந்தப் பத்தியை இந்த நாவலின் மைய இழை என்று கூற முடியும். இந்த நாவலில் வாழும் பிரதான கதாபாத்திரங்களான கிரிஷானின் அப்பம்மா மற்றும் ராணி என்பிற பெண்களின் வாழ்வுப் பயணம் இப்படித்தான் இருக்கிறது. இந்த நாவலில் ராணி, அப்பம்மா மற்றும் அஞ்சும் என்ற மூன்று பெண் கதாபாத்திரங்களின் கதைகளை நாவலின் மூன்று பாகங்களான *Message, Journey, Burning* என்ற தலைப்புகளினூடாக நகர்த்திச் செல்கிறார் கிரிஷான் என்கிற கதை சொல்லி.

கிரிஷான் செல்லும் வழித்தடங்கள் மூலமும் அவர் மூளையில் எழும் சிந்தனைகள் மற்றும் நினைவலைகள், தத்துவ கருத்துக்கள் மூலமும் ராணி, அப்பம்மா மற்றும் கிரிஷானின் காதலி அஞ்சும் போன்றவர்களின் கதை சொல்லப்படுகிறது அல்லது அவர்கள் வாழ்வு அர்த்தம் கொள்ளப்படுகிறது எனலாம். சுதந்திரமான காதல் சோடிகளாக சதா டெல்லி வீதிகளில் கை கோர்த்து நடந்தும் தனியறைகளில் காதல் மழையில் கொஞ்சிக் குலாவியும் வாழ்ந்த அஞ்சுவினதும் கிரிஷானினதும் காதல் மனதை சிலிர்க்க வைக்கவோ அல்லது குறைந்த பட்சம் வருடி விடவோ இல்லை.

வாசகர்களுக்கு கதாபாத்திரங்களை அறிமுகம் செய்த கையோடு கிரிஷான் என்ற கதாபாத்திரத்தின் எண்ண ஓட்டம் மூலம் அனுக் அவர்களைப்பற்றி கூறத் தொடங்குகிறார். இதை கிட்டத்தட்ட ஓர் ஆவியிடம் கதை கேட்பது போலவே நான் உணர்ந்தேன். வாசகர்களும் கதாபாத்திரங்களும் உறவாடுவதற்கான எந்தவொரு வெளியையும் எழுத்தாளர் விடவில்லை. இந்த நாவலின் 250க்கும் மேற்பட்ட பக்கங்களில் கதாபாத்திரங்கள் ஒன்றும் வாயே திறக்கவில்லை, கதாபாத்திரங்களுக்கிடையில் உரையாடல்கள் என்று ஒன்றும் கிடையாது.

ஆகவே கதாபாத்திரங்களின் உணர்வுகளின் வெளிப்பாட்டை கதாசிரியர் அவ்வளவாக அனுமதிக்கவில்லை, அவர்களின் முகபாவம், உடல் மொழி மற்றும் அசைவுகள் என்று பெரிதாக விவரிக்கவுமில்லை. இதனால் கதாபாத்திரங்கள் ரத்தமும் சதையுமாக வாசகர் முன் வந்து நிற்கவில்லை, ஒட்டி உறவாடவில்லை என்பது இந்த நாவலின் பெரிய குறை.

கிரிஷான் அரசுசாரா அமைப்பு ஒன்றில் வேலை பார்க்கும் சமூக சேவகர். அவர் டெல்லி மற்றும் கொழும்பில் மாறி மாறி வாழ்வை நகர்த்திய வண்ணம் இருப்பவர். அதனால் ஈழப்போர் பற்றிய நேரடி அனுபவம் அற்றவராக இருக்கிறார். இந்தியாவில் அவர் படித்துக் கொண்டிருக்கும்போது இறுதிக்கட்ட ஈழப்போர் நடந்து கொண்டிருக்கிறது. அப்போது சக தமிழ் மக்களின் அழிவு கண்டு மிக

மனவேதனை அடைந்து இறுதிக்கட்ட போர் பற்றிய தகவல்களைத் தேடித்தேடி இணையத்தில் அறிகிறார். தான் எந்த உதவியையும் தன் மக்களுக்கு வழங்காவிட்டாலும் பெரியபுராணத்து பூசலநாயனார் மனக்கோவிலுக்கு சிவபெருமான் வருகை தந்ததைப் போல தான் தன் மக்கள் படும் துயர் கண்டு படும் கரிசனையினால் தன் மக்களுக்கு ஏதாவது உதவி கிடைக்காதா என்று ஏங்குகிறார். தொடர்ந்து வந்த ஆண்டுகளில் வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை செய்யும் ஓர் அரசுசாரா நிறுவத்தில் சமூக சேவகராக வேலை பார்க்கிறபோது போரினால் மனநிலை பாதிக்கப்பட்ட ராணி என்கிற பெண்ணைச் சந்திக்கிறார்.

ராணியின் மூத்த மகன் போராளியாக 2007இல் இறந்த பின்னர், இறுதிப்போரில் பன்னிரெண்டு வயதான ராணியின் இளைய மகன் ஷெல்லடி பட்டு இறக்கின்றார். மகனின் உயிர் பிரியும் தருணத்தில் ராணி மகனை ஒரு கணம் அவசரமாக மடியில் தாங்கி விட்டு மகனின் சடலத்தை தெருவில் அநாதரவாக விட்டு விட்டு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓட வேண்டிய நிலை ராணிக்கு ஏற்பட்டது. போரினால் ஏற்பட்ட இழப்புக்கள் அதனால் ஏற்பட்ட தாக்கம், அதிர்ச்சி என்பன ராணியின் மனதை புற்றுநோய் போல பாதிக்கிறது. அதன் பின்னர் ராணிக்கு வாழ்க்கையில் இருக்கும் ஒரே பிடிமானம் ராணியின் மகளும் இரண்டு பேத்திகளும் தான். அவர்கள் கிளிநொச்சியில் ஒரு சின்னக் கிராமத்தில் வாழ்கிறார்கள்.

இதற்கிடையில் கொழும்பில் வாழும் கிரிஷானின் குடும்பத்தில் தினமும் வேலைக்கு போகும் அவர் தாயும் எண்பது வயது தாண்டிய அப்பம்மாவும் இருக்கிறார்கள். சுறுசுறுப்பாக வாழ்ந்து கொண்டிருந்த எண்பது வயது கடந்த அப்பம்மாவுக்கு இருதய அறுவைச் சிகிச்சை நடக்கிறது. மெல்ல மெல்ல உடல் இயக்கம் குறைந்து, அப்பம்மா வீட்டில் மேல்மாடியில் முடங்கிப் போகிற நிலைமை ஏற்படுகிறது. கைத்தடி ஊன்றி அடுத்தவர் தயவில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட அந்தக் கால கட்டத்தில் , 'இரண்டு மகன்களை போரில் இழந்து புத்திர சோகத்தில் வாடி இலக்கின்றி வாழ்க்கையை வெறுமையுடன் நகர்த்திக் கொண்டிருக்கும் ராணிக்கு தனது அப்பம்மாவை கூட இருந்து பராமரிக்கும் வேலையை வழங்கினால் அவர் மனமும் உடலும் சுறுசுறுப்பு அடையக்கூடும், அதனால் ஈட்டும் பணம் ராணிக்கு தன்நம்பிக்கையை அளிக்கக்கூடும் மற்றும் இடமாற்றம் அவர் மனதை லேசாக்க உதவக்கூடும்' என்று கிரிஷான் எண்ணுகிறார். ராணியின் சம்மதத்தோடும் தன் தாயின் சம்மதத்தோடும் அவரை கொழும்பில் தன் வீட்டில் வேலைக்கு அமர்த்துகிறார்.

ராணி புத்திர சோகத்தால் அடைந்த அதீத மனவுளைச்சலுக்கு சிகிச்சையாக வவுனியா ஆஸ்பத்திரியில் மின்சார அதிர்ச்சி வைத்தியம் வழங்கப்படுகிறது. இதனால் ராணிக்கு உணர்வுகள் மரத்துப் போனதாக சில வேளைகளில் கிரிஷானுக்குத் தோன்றியது.

மனத்தளவில் ஓர் இளம் வயது நபரின் துடிப்போடும் உடலளவில் கொஞ்சம் கொஞ்சமாக இயக்கம் இழந்து கொண்டிருக்கிற அப்பம்மா கிரிஷானிடமும் ராணியிடமும் இருந்து பெறும் தகவல்களை வைத்து மெய்நிகர் உலகொன்றை தனக்குள் உருவகப்படுத்தத் தொடங்குகிறார், கதாசிரியர் அப்பம்மாவின் இந்தப்போக்கை கிட்டத்தட்ட காயப்பட்டு பின் போர் ஒன்றிலும் நேரடியாக கலந்துகொள்ள முடியாத கொமாண்டர் ஜெனரல் தான் ஈடுபடமுடியாமல் போன போர் பற்றிய செய்திகளை வெளியார் தகவல்கள் மூலம் பெற்று அதில் பங்கேற்கும் திருப்தியைப் பெறுவதைப் போன்று வாழ்வை அப்பம்மா அர்த்தபூர்வமாக்கிக் கொண்டிருப்பதாக உணர்கிறார்.

ஒருவர் வாழும் சூழல் தான் அவர்கள் சிந்தனையை தீர்மானிக்கும் எனபதற்கு இணங்க, நவீன காலத்தில் பாட்டியான அப்பம்மா எப்போதும் தன் உடல் நலம் பற்றியும் மருந்து மாத்திரை பற்றியும் தன் வாழ்வை எப்படி நீடிப்பது என்பது பற்றியும் பேசுகிறவராக இருக்கிறார். இன்றிருக்கும் முக்கால்வாசி வயோதிபர்களின் பேச்சு அவர்கள் உடல் நலம் பற்றியும் சிகிச்சை பற்றியும் அவர்கள் உட்கொள்ளும் மருந்துகள் பற்றியும் தான் இருக்கிறது. இவர்கள் பிழைப்பே முதுமையை வெல்வதிலும் சாவைக் கொல்வதிலும் நிலை கொள்கிறது. அந்த வகையில் அனுக் சமகாலத்தில் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் சுய புராணம் பாடும் பாட்டிகளை கண்முன் நிறுத்தியிருக்கிறார்.

முப்பது வருடங்களுக்கு முன் எங்களைச் சுற்றி வாழ்ந்த பாட்டிகள் " முதுமை தந்த இயலாமையினால் "ஐயோ என்னை இந்தக் கடவுள் அள்ளிக்கொண்டு போகிதில்லையே" என்று புலம்பினார்கள். அன்றைய நம் பாட்டிகள் வயதான காலத்தில் மரணத்தை இயற்கையானதாகவும் இயல்பான ஒன்றாகவும் வாழ்தலின் பரிணாம அசைவாகவும் பார்க்கிறார்கள் என்பது தான் அவர்களின் இந்தப் புலம்பலுக்குக் காரணம் மாறாக இன்று மருந்து நிறுவனங்கள் (pharmaceutical company) வாழ்வை நீடிக்க வைக்கின்றன. இதனால் நடமாட்டம் குறைந்து, வாழ்வின் தரம் குன்றி, உடல் சிறைக்குள் சதா சாவை கொன்று கொன்று மனிதர்கள் வாழும் வாழ்க்கையை வரம் என்று நம்ப வைத்திருக்கிறது நம்மைச் சுற்றி இருக்கும் இன்றைய மருத்துவ விஞ்ஞானம்.

ஓர் இயலாக் கட்டத்தில் முதுமை காரணமாக தனது உடல் தனது மூளையின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லை என்று அப்பம்மாவின் உள் மனம் உணர்கிற நேரம், இதுவரையில் அவர் தன் வாழ்வை நேர்த்தியாக ஒரு நேர்கோட்டில் நடத்திச் செல்ல ஏதுவாக இருந்த நூல் அறுகிறது, அப்பம்மாவின் உள் மனம் தன் இயலாமையை மற்றவர்கள் முன் மறைக்க மறதியை ஆயுதமாக்குகின்றது. மரணத்தை இதுவரையில் தள்ளிப்போட்ட அப்பம்மாவை மரணம் மெல்ல மெல்ல நெருங்குகிறது. அந்தத் தருணத்தில் அப்பம்மாவின் ஆழ்மனத்தில் இதுவரை பிரகாசமாக எரிந்த உயிர்ச் சுவாலையைக் குறைத்து விட்டதாக கிரிஷானுக்குத் தோன்றுகிறது. மரணம் என்பது சடுதியாக வரும் ஒன்றல்ல என்றும் அது

மனிதர்கள் இருதயம் நிற்க முதல் பல ஆண்டுகளுக்கு முன்னமே மெல்ல மெல்ல மனிதர்களுக்குள் ஊடுருவுகிறது என்பதையும் கிரிஷான் சொல்கிறார்.

Message - தகவல்

மகன்களுக்கு பிதிர்க் கடன் செய்ய ஊருக்குச் சென்ற ராணி தான் இனி கொழும்பிற்கு வரப்போவதில்லை என்ற தகவலை அனுப்புகிறார். பின்னர் சில நாட்கள் கழித்து ராணியின் மகள், ராணி கிணற்றில் தண்ணி எடுக்கும் போது தவறி விழுந்து இறந்து விட்டதாக கிரிஷானுக்கு தகவல் சொல்கிறார். ராணியின் மரணம் தற்செயலாக நடந்ததாக கிரிஷானுக்குத் தென்படவில்லை மாறாக அது தற்கொலை அல்லது அவரின் உளவியல் பிரச்சனைக்கு அளிக்கப்பட்ட மின் அதிர்ச்சிச் சிகிச்சை அவர் நரம்புகளை தளர்ச்சியுறச் செய்திருக்க வேண்டும். அதனால் கிணற்றில் தவறி விழுந்திருக்கலாம் என்றும் எண்ணத்தோன்றியது. அதை நிரூபிப்பதற்கான ராணியின் செய்கைகள் சிலவற்றை சான்றுகளாக கிரிஷான் கொழும்பில் கவனித்தும் இருக்கிறார்.

கடைசியில், ராணி எப்படி இறந்தார் என்று கிரிஷான் கண்டுபிடிக்கவில்லை. போரினால் மனமுடைந்து, அது நாட்பட்ட உளவியல் வியாதியாக இருக்கிற ஒரு நடுத்தர வயதுப் பெண்ணிற்கு வவுனியாவில் மின் அதிர்ச்சிச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இது மனிதத்திற்கு மதிப்பளிக்கும் நவீன நாகரீக உலகில் மனிதமற்ற சிகிச்சை முறை என்பது கிரிஷானுக்குத் தெரிகிறது.

மனம் உடைந்த ராணி ஒன்று தற்கொலை செய்து இறந்திருக்க வேண்டும் இல்லையேல் மின் அதிர்ச்சி சிகிச்சையின் பக்க விளைவால் இறந்திருக்க வேண்டும் என்று முடிவில் எண்ணுகிறார். கடைசியில் இந்த விடயத்தில் கிரிஷானின் போக்கு “ ஏதோ நடந்தது நடந்து விட்டது, எது எப்படி என்றாலும் இறந்தவர்கள் மீண்டு வரவா போகிறார்கள்!” என்ற தொனியில் இருக்கிறது.

Journey - பயணம்

ராணியின் மரணச் செய்தி அறிந்த கிரிஷான் ராணியின் கிராமம் நோக்கி ரயிலில் செல்லும் போது அவர் மனத்தில் உள்ள பல விடயங்களை கால்நடைகள் இரையை மீட்டு அசைபோட்டுக் கொண்டு இருப்பது போல அசைபோடுவதனூடாக *journey* என்ற பாகத்தின் பக்கங்கள் எழுதப்பட்டுருக்கின்றன.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிய இந்த புகையிரதப் பயணத்தில் கிரிஷானின் எண்ண ஓட்டம் ஒரு நேர்க்கோட்டில் பயணிக்காமல் இருந்தது வாசகர்களுக்கு வாசிப்பில் இருந்த கவனத்தை சிதறடித்தது. இது ஒரு சில பக்கங்களுக்கு மேல் மனதை ஒருநிலைப்படுத்தி வாசிப்பில் ஒன்றிப்போக முடியாத நிலையை உருவாக்குகிறது.

அதனால் இந்த பக்கங்களை வாசித்து தீர்ப்பது மிகவும் சலிப்பையும், அயர்ச்சியையும் தரக்கூடிய ஒன்றாக இருந்தது. இந்த பக்கங்களில் இன்று தமிழ் மக்களின் போராட்ட வாழ்வின் சுவடுகளை திட்டமிட்டு நினைவழிப்பு செய்கிற இலங்கை அரசின் நோக்கம், தமிழ் மக்களின் முப்பது வருட போராட்ட வாழ்வு, பல்வேறு இயக்கங்களின் தோற்றமும் அறிமுகமும் என்று அங்கொன்றும் இங்கொன்றுமாக உதிரிச் செய்திகளில் எழுத்து நகர்கிறது, மேலும் ஆங்காங்கே ஓர் உல்லாசப் பயணிகளின் வழிகாட்டிபோல *A9* பாதை திறப்பு பற்றியும் சமாதான காலத்தின் நிலைமைகள் பற்றியும் கூறுகிறார். தான் படித்து அறிந்த முப்பது வருட இயக்க வரலாறுகளைக் கூறுகிறார். குட்டிமணி மற்றும் தங்கதுரைக்கு சிறையில் நடந்த அநியாங்கள் பற்றி எடுத்துரைக்கிறார்.

Burning - எரியூட்டல்

கொழும்புவாசியான கிரிஷான் பாத்திரத்தினூடாக ராணியின் மரண வீட்டு சடங்குகளை ஒரு கண்காட்சி போல *burning* என்ற பகுதியில் எழுதுகிறார் நூலாசிரியர். இந்த மரணச் சடங்கில் ராணிக்கோ அவர் குடும்பத்திற்கோ எந்த வகையிலும் சம்பந்தம் அற்ற பெண்கள் பலர் கூடி நெஞ்சிலும் தலையிலும் அடித்துக் கொண்டு கூடி அழும் ஒப்பாரி, புலம்பல்கள் எதுவும் கிரிஷானுக்கு வியப்பைத் தரவில்லை. ஏனெனில் அந்த சடங்குகள் பற்றி கிரிஷானின் தாய் ஒரு முறை அவரோடு சொல்லியது ஞாபகம் வந்தது. இந்த சடங்குகளை எப்படி புரிந்து கொள்வது என்பதில் கிரிஷானுக்கு குழப்பமாக இருக்கிறது.

பல பழமையான சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் இன்றைய வாழ்வியல் சூழலில் பொருத்திப் பார்க்கிற போது அவை அர்த்தம் அற்றவையாக உள்ளன என்பது உண்மை என்றாலும், இன்றும் கூட்டாக வாழும் பழமையைப் பேணும் சமூகங்கள் மரணச் சடங்குகளை தொடர்ந்து முப்பது நாட்கள் கொண்டாடுகின்றன. இழப்புக்களை கடந்து செல்லக் கூட்டு அழுகை அவர்களை எதிர்காலத்தில் இழப்பு தரும் மனநோயில் இருந்து காக்க உதவுகிறது என்றால் அது மிகையாகாது. மனிதர்கள் மட்டுமல்ல யானைகள் மற்றும் காகங்கள்கூட மரணத்தைக் கடக்க, இழப்பின் வலியை குறைக்க மரணத்தை கூட்டு சடங்காகக் கொண்டாடுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ராணி போன்றவர்களுக்கு நவீன உரையாடல் சிகிச்சை (*talking therapy*), மின் அதிர்ச்சி, மூளையில் இரசாயன மாற்றங்களை செயற்கையாக உருவாக்கும் மாத்திரைகளை விழுங்குவதை விடவும் அவர் சார்ந்த சமூகத்தினரோடு வாழ்ந்து கூட்டாக வாழ்தலே மனத்தை சாந்தப்படுத்த உதவியிருக்கும். மனிதன் சமூக விலங்கு என்பது படித்தவர்களுக்கும் பாமரருக்கும் தெரிந்த ஒன்றுதான். இருந்தாலும் இன்றுவரை பெண்களும் சமூக விலங்கு என்பதை படித்தவர்கள் மற்றும் பாமரர்களும் உணர்வதாக இல்லை. இதற்கு பெண்களின் கதையைச் சொல்ல விளைந்த கதை சொல்லியான கிரிஷானும் விதிவிலக்கல்ல.

இந்தக் கதையில் வரும் ராணிக்கு ஒட்டி உறவாடத் தேவையான சமூகம் என்ற ஒன்று கொழும்பில்

இல்லவே இல்லை. வர்த்தக நோக்கங்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட பெருநகரங்களில் வாழ்தல் என்பதே கடினம். அதிலும் இந்த நகரங்கள் ஆண்களுக்காக ஆண்களினால் வடிவமைக்கப்பட்டவையாகவே இருக்கின்றன. கொழும்பில் ராணிக்கு நாலு சுவர்களுக்குள் ஒரு வேலை, ராணியையோ அப்பம்மாவையோ அந்த வீட்டில் உள்ள யாரும் வாரம் ஒருமுறைகூட வெளியில் கூட்டிப் போனதில்லை. 'வெளியில் போக அவர்களுக்கு விருப்பம் இல்லை' என்பது அவர்கள் எண்ணம்.

ராணி பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த வீடென்பது இயற்கையினால் சூழப்பட்ட ஒரு நந்தவனமாக கொழும்பில் இருந்து வந்த கிரிஷானின் கண்களில் தென்பட்டது. ராணிக்கு சொந்த பந்தங்கள் மற்றும் துக்கத்தை வாய்விட்டு சொல்லிப் பேசக்கூடிய மனிதர்கள், அவருடன் சேர்ந்து போரில் பாதிக்கப்பட்ட சமூகம் கிளிநொச்சியில் இருந்தது. கூட்டு வலியை கூட்டாக அழுது தீர்த்துப் பழகியவர்கள் அவர்கள். சடங்குகள் மூலம் வேண்டாத சோகச் சுமைகளுக்கு முற்றுப்புள்ளி இடும் வழிகள் அவர்கள் கலாச்சாரத்திற்குள் இருந்தது. நாகரீக உலகில் இருந்து பார்ப்பவர்களுக்கு அது கோமாளித்தனமாகவும் சடங்காகவும் தென்படக்கூடும். ஆனால் தோளோடு தோள் நிற்கவும் மனம் விட்டுப் பேசவும் தோள் சாய்ந்து அழுது தீர்க்கவும் என் இனம், என் சனம் என்ற மனோபலத்தை அது அவர்களுக்குக் கொடுத்தது. ராணியின் இறுதிக் கிரிகை முடித்து மயானத்தில் இருந்து திரும்பும் போது, ஒரு குளக்கரையை பார்த்து தானும் காதலி அஞ்சுவும் சேர்ந்து பார்த்த கரும்புலிப் பெண்கள் பற்றிய ஆவணப் படத்தை பார்த்த ஞாபகம் கிரிஷானுக்கு தட்டுகிறது.

அஞ்சுவும் தற்கொலைப்படைக் கரும்புலிப் பெண்கள் இருவரின் குணாதிசயங்கள் பற்றி அவர்கள் ஓரினச்சேர்க்கையாளர்கள் என்றும் கருத்து சொல்கிறார். இதில் குறுப்பிடத்தக்க விடயம் என்னவெனில் அவர் பால் பேதங்கள் அற்று ஆண் மற்றும் பெண்களோடும் உறவை வைத்துக்கொள்ளும் ஒருவர். ஆதனால் அவர் கணிப்பு சரியாக இருக்க கூடும் என்பதாக கிரிஷான் நினைக்கிறார். மேலும் பெண்களை அடிமைப்படுத்தி வைத்த தமிழ்ச் சமூகத்தில் குடும்பம், திருமணம் என்ற கட்டுப்பாடான பந்தங்களுக்குள் பெண்கள் அகப்படாமல் இருக்க தங்களைப் புலிப்படையில் இணைத்திருக்கலாம் என்பதும் அஞ்சுவின் கணிப்பு. இதை நிறுவ மூன்றாம் நூற்றாண்டில் இருந்து ஆறாம் நூற்றாண்டு பகுதிகளில் இப்படித்தான் பெண்களுக்காக ஆண்வர்க்கம் நியமித்த அடக்குமுறைகளில் இருந்த சமூக ஒழுங்குகளில் இருந்து தப்ப பல்லாயிரம் பெண்கள் புத்த சமய துறவிகள் ஆனார்கள் என்பதும் அஞ்சுவின் கருத்தாக இருந்தது என்கிறார் கிரிஷான். உலகத்தில் பெண்கள் சம்பந்தமான எல்லாப் பிரச்சனைகளையும் தனியே பெண்ணியப் பார்வையினூடாக மட்டும் பார்த்து கருத்துரை சொல்ல முடியாது. ஒருவகையில் பார்த்தால் 'வெறுமனே ஈழ விடுதலைப்போராட்டத்தில் சேர்ந்து போராடிய பெண்கள் கொதிக்கிற எண்ணெயில் இருந்து எரிகிற அடுப்பில் விழுந்தவர்கள். அப்பாவிப்பெண்கள், அநியாயமாக செத்துப் போனார்கள்!' என்கிற தொனியில் அமைந்திருக்கிறது போர் பற்றிய எந்த அறிவும் அற்ற அஞ்சுவின் விளக்கம்.

மனிதர்கள் தாம் உண்டு தம் வாழ்வு உண்டு என்று வாழும் போது திடீர் திடீர் என்று அதி நவீன கொலைக் கருவிகளுடனும் போர் விமானங்களோடும் அந்நிய ஆண்கள் வகைதொகையின்றி ஊருக்குள் ஊடுருவி அதிகாலைகளில் அரைத் தூக்கத்தில் இருக்கும் அப்பாவி மக்களை சாகடித்தால், பிடித்து சித்திரவதை செய்தால், ஆண் பெண் என்ற பேதமின்றி அவர்கள் மேல் போர் தொடுக்கும் ஓர்மம் குழந்தைகளில் இருந்து முதியவர்கள் வரை எல்லாருக்கும் பிறக்கும். போர்ச் சூழலில் ஒரு சிறுமியாகவாழாத அஞ்சுவின் கதாபாத்திரத்திரத்திற்கு இதை உணர்ந்திருக்க வாய்ப்பில்லை. அதே போல பெண் புலிகள் பற்றி அஞ்சு கூறிய கருத்தை ஆமோதித்த கொழும்பில் பிறந்து வளர்ந்த போருக்குள் வாழாத கிரிஷானுக்கும் போருக்குள் வாழ்ந்த சிறுமிகளின் கோவத்தை உணர வாய்ப்பில்லை.

இந்த இலக்கியப் பிரதியின் இலக்கு என்வென்பது நாவலை வாசித்து முடித்த பின்னரும் எனக்குப் புரியவில்லை, பல விடயங்களை தத்துவக் கண்கொண்டும் பெரிய பெரிய விடயங்களை பாமர மனிதர்களின் கருத்துரை போலவும் உரைக்கிறது. எது எப்படி இருப்பினும் *Booker Prize* ற்குத் தேர்வாகிய இந்நாவல் ஏதோ ஒரு விதத்தில் அதற்கு தகுதி வாய்ந்த இலக்கியத் தரத்தை எட்டியிருக்க வேண்டும் என்பது மறுக்க முடியாத ஒன்று. ஒரு நாவல் *Booker Prize* ற்கு தேர்வாக எந்த அளவுகோல்களினால் அளக்கப்படுகிறது என்பதும் என்னைப் போன்ற சாதாரண வாசகர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை.

பல இடங்களில் மனித மனங்களின் ஆழங்களுக்குள் சென்று உளவியல் தத்துவங்களை அழகாகச் சொன்ன அனுக், நாவலின் வடிவத்தில் கவனம் செலுத்திச் சொன்ன தகவல்களில் செறிவைக்கூட்டி சில மாற்றங்களை செய்திருப்பின் வாசகர்கள் புத்தகத்தை கையில் தூக்கிய தருணத்தில் இருந்து வாசித்து முடிக்கும் வரையிலும் வாசிப்பின் ஆர்வம் அவர்களிடம் நிலைக்க உதவி இருக்கும்.

குறிப்பு:

A Passage North 2021Sri Lanka novel written by Anuk Arudpragasam published on 13 July 2021 by Hogarth Press in the United States[2]and by Hamish Hamilton in India.[3] It was also published by Granta Books in the United Kingdom on 15 July 2021

நன்றி : இணையவெளி தந்த படங்கள்

கட்டுரையாளர்: எழுத்தாளர், இங்கிலாந்து

Printed by D. Vasanthkumar and Owned, published by V. Muthaiah and Printed at Sekar Offset Printers, New No. 50 (Old No. 168/1) Big Street, Chepauk, Chennai - 600 005 and Published at 22MJB street.Triplicane.Chennai 600005. Editor: V. Muthaiah

Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 / 43921
Postal Registration No. TN / CCN / 588 / 2022-2024 WPP No. TN/PMG (CCR) / WPP-354/2019-2021.
ISSN 2348 - 4160 Date of Publication, 25th of Every Month Posted at patrika channel,Egmore. between 29th-4th of every month

பரிசுகள்

தேர்ந்தெடுக்கப்படும் இரண்டு நூல்களுக்கு தலா

சான்றிதழ் மற்றும் 10,000 இந்திய ரூபாய்கள்

ஒரு ஊக்கப்பரிசு

சான்றிதழ் மற்றும் 5000 இந்திய ரூபாய்கள்

சிறப்புப் பரிசு

வாசகர்களுக்கானது ஓராண்டு காக்கை சந்தா

நன்றி :
இப்போட்டிக்கான பணப்பரிசினை வழங்கும் கவிஞர் கி.பி.அரவிந்தன் குடும்பம் சார்பாக அவர்தம் துணைவியார் திருமதி சுமதி மற்றும் லண்டன் துளிர் நண்பர்கள் வாழ்த்துக்களுடன் காக்கைச் சிறகினிலே இதழ்க் குழுமம்

போட்டியின் விதிமுறைகள்

1. போட்டியாளர்கள் (நூலாசிரியர்கள்) தமது தன்விவரக் குறிப்புகளை இயற்பெயர், புனைபெயர், முகவரி, செல்பேசி உள்ளிட்ட விவரங்களுடன் kipian2022kaakkaicirakinile@gmail.com என்கிற மின்னஞ்சல் ஊடாக மட்டுமே அனுப்பவேண்டும்.
2. பிற மொழிகளிலிருந்து தமிழில் வெளிவந்த நூல்களின் இரண்டு படிகளை அனுப்பவேண்டும். இந்நூல் பற்றி ஊடகங்களில் வெளிவந்த விமர்சனங்கள் மற்றும் கருத்துரைகள் பற்றிய விபரங்களை மின்னஞ்சல் வாயிலாக அனுப்ப வேண்டும்.
3. நூல்களை காக்கைச் சிறகினிலே செயலக முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலம் மட்டுமே அனுப்ப வேண்டும்.
4. பதிவு அஞ்சல் உறை மற்றும் மின்னஞ்சலில் “கவிஞர் கி.பி.அரவிந்தன் ஏழாவது ஆண்டு நினைவு இலக்கியப் பரிசுப்போட்டி - 2022” என்று குறிப்பிடப்படவேண்டும்.
5. போட்டிக்கு அனுப்பப்படும் நூல்கள் மூலமொழியிலிருந்து தமிழில் பெயர்க்கப்பட்டதாகவோ மூலமொழியுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டதாகவோ இருந்து, அது பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் தேர்வு செய்யப்பட்ட நூலை வெளியிட்ட வெளியீட்டாளருக்கு சான்றிதழும் 5000 இந்திய ரூபாய்கள் பரிசுத் தொகையாகவும் வழங்கப்படும்.
6. மொழிபெயர்ப்பு இலக்கிய வளர்ச்சிக்கு தனித்துவப் பங்களிப்புச் செய்யும் தமிழ்ச் சிற்றிதழ் ஒன்றுக்கு சான்றிதழும் 5000 இந்திய ரூபாய்கள் ஊக்கப் பரிசாகவும் அளிக்கப்படும்.
7. போட்டிக்குரிய நூல்கள் மற்றும் சிற்றிதழ்கள் பற்றிய விபரங்களை அவை தொடர்பாக ஊடகங்களில் வெளிவந்த விமர்சனங்கள் மற்றும் கருத்துரைகளுடன் பட்டியலிட்டுக் காக்கைச் சிறகினிலே அலுவலகத்துக்கு அனுப்பலாம். வாசகர்கள் அனுப்பிவைத்த பட்டியலிலிருந்து நடுவர்களால் பரிசுக்குரிய நூல் / சிற்றிதழ் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் பரிந்துரை செய்த ஒவ்வொரு வாசகருக்கும் ஓராண்டு காக்கை சந்தா சிறப்புப் பரிசாக அனுப்பிவைக்கப்படும்.
8. பரிசுக்குரிய நூல்களை நடுவர்குழு பரிசீலித்து அளித்த தேர்வின் அடிப்படையில் நெறியாளர் வழங்கும் தீர்ப்பே இறுதியானது.
9. பங்கேற்கும் போட்டியாளர்களுடன் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை அஞ்சல், செல்பேசி, தொலைபேசி, மின்னஞ்சல் உள்ளிட்ட எந்தத் தொடர்பாடலும் நடத்தப்படமாட்டாது.
10. போட்டியின் முடிவு 2022 ஏப்பிரல் மாத காக்கை இதழில் காக்கை குழுமத்தினரால் முறைப்படி வெளியிடப்படும்.
11. பரிசுக்குத் தெரிவாகும் நூலுக்குரிய சான்றிதழும் பரிசுத் தொகையும் உரிய முறையில் அனுப்பி வைக்கப்படும்.

‘சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்’ என்கிற மாகவி பாரதியின் கனவை நனவாக்கும் முயற்சியில் இதுவும் ஒன்று.

காக்கைச் சிறகினிலே இதழ் முன்னெடுக்கும்

கவிஞர் கி.பி.அரவிந்தன்
ஏழாவது ஆண்டு நினைவு
இலக்கியப்
பரிசுப் போட்டி

மொழிபெயர்ப்பியல்

சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கான பரிசுப்போட்டி - 2022

(திருவள்ளுவராண்டு - 2053)

நூல்களை அனுப்ப வேண்டிய முகவரி:
காக்கைச் சிறகினிலே, 288, டாக்டர் நடேசன் சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005 இந்தியா
மின்னஞ்சல் : kipian2022kaakkaicirakinile@gmail.com

தெரிவுக்குரிய தகுதி: இந்த நூற்றாண்டில் 2000 ஜனவரி முதல் 2020 டிசம்பர் வரை பிறமொழியிலிருந்து முதற் பதிப்பாக தமிழில் வெளிவந்த மொழிபெயர்ப்பு நூல்கள்

நூல்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: **31.01.2022**

போட்டி முடிவு: மார்ச் 2022

நெறியாளர்:
- மதிப்பிற்குரிய இ. பத்மநாப ஐயர் (இங்கிலாந்து)

நடுவர் குழு:
- பேராசிரியர் க. பஞ்சாங்கம் (இந்தியா)
- முனைவர் கே.எம். வேணுகோபால் (இந்தியா)
- எழுத்தாளர் என் சரவணன் (நோர்வே)
- எழுத்தாளர் அமரந்த்தா (இந்தியா)

‘காக்கைச் சிறகினிலே’ இதழின் தொடக்க கால நெறியாளர் **கவிஞர் கி.பி.அரவிந்தன்** கனவின் மீதியில் எழும் புதிய தடமாக இப்போட்டி அமையும்.